
# அருள்மிகு குருவின் பொருள்மிகு நாமங்கள்



சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

# அருள்மிகு குருவின் பொருள்மிகு நாமங்கள்

(சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளைப் போற்றிடும் அஷ்டோத்தர சத நாமாவளியும் விளக்கங்களும்)

கி. சுரேஷ் சந்தர்

Centre for Brahmavidya
Chennai 600 032

**Book Title:**
*Arulmigu Guruvin Porulmigu Naamangal*

**Published by:**
Centre for Brahmavidya
SVK Towers, 8th Floor
A25, Industrial Estate, Guindy
Chennai 600032
**Email**: contact@centreforbrahmavidya.org
**Website**: www.centreforbrahmavidya.org

© **Centre for Brahmavidya**
All rights reserved

**Ebook** - First Edition : 2020

For free distribution only



(ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்)

"மனத்தினில் எழும் அருள் உணர்வும்
அவர் திருவருளாலே"



சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தை 36வது பீடாதிபதியாகத் தற்போது
அலங்கரித்துவரும் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளும் அவரது
ஸன்னிதியில் ஜகத்குரு ஸ்ரீ  விதுசேகரபாரதீ ஸ்வாமிகளும்

# பதிப்புரை

சாஸ்திரங்களில் கரைகண்டவரும், ஆகாசத்தினைப் போல் தூய்மை-யானவரும், பரமஹம்ஸ யதியாகியவரும், ஜீவன்முக்தரும், பக்தர்கள் வேண்டுவனவற்றை அருள்வதில் கற்பகத் தருவானவரும், கருணைக் கடலாகியவரும் மற்றும் நம் அனைவரின் வந்தனங்களுக்கும் என்றும் உரியவராகிய ஆசார்யாள் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ சங்கர பகவத்பாதரால் சிருங்கேரியில் ஸ்தாபிக்கப்பெற்ற ஸ்ரீ சாரதா பீட ஆசார்ய பரம்பரையில் 35வது ஜகத்குருவாய் 35 வருடங்கள் (1954-1989) அருளாட்சி செய்தார்கள். 21-09-1989 அன்று விதேஹ கைவல்யத்தினை அடைந்த அந்த ஒப்பற்ற மஹானுபாவரது அருளொளி இன்றளவும் அவரது லட்சோப லட்ச பக்தர்களின் இதயக் கமலங்களை பிரகாசித்துக் கொண்-டுள்ளது.

ஆசார்யாளின் அத்யந்தப்ரிய சீடரும், தற்போது ஸ்ரீ சாரதா பீடத்தின் 36வது ஜகத்குருவாக வீற்றிருப்பவருமான ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தமது குருநாதரைப் போற்றி "ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த அஷ்டோத்தர சத நாமாவளி" எனும் தலைப்பினில், மிக அழகான, பொருள்செறிந்த 108 திருநாமங்களை இயற்றி அருளி இருக்கின்றார்கள். இந்த பக்தி மணம் கமழும் திருநாம மாலையின் பாராயணம் ஆயிரக்கணக்கான பக்தர்களின் இல்லங்களில் தினமும் முழங்கிக் கொண்டிருக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

அத்தகைய பக்தர்களின் பக்தி சிரத்தையுடன் கூடிய உற்சாகத்தினைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு இவ்விஷயத்தில் பெரிதும் பயன் தரத்தக்க வகையில் ஒரு நற்காரியத்தினைச் செய்திடும் நோக்கில் "அருள்மிகு குருவின் பொருள்மிகு நாமங்கள்" எனும் இப்புத்தகத்தினை வெளியிடுவதில் ப்ரஹ்மவித்யா மையம் (Centre for Brahmavidya) பெருமகிழ்ச்சி அடைகின்றது. இப்புத்தகத்தின் விஷயமே ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த அஷ்டோத்தர சத நாமாவளிகள்தான். பக்தி கமழும் இந்தத் தெய்வீகத் திருநாமங்களில்

ஆசார்யாள் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் அப்பழுக்கற்ற நடத்தை, தெய்வீக குணங்கள், அபார வைராக்யம், பாண்டித்யம், ஆழ்ந்த இறைபக்தி மற்றும் குருபக்தி, பிரம்ம ஞானம், ஜீவன்முக்தி, போன்ற பற்பல அற்புதமான விஷயாம்சங்கள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதனை எளிமையானதொரு முறையினில், எடுத்துக்காட்டுவதே இந்த புத்தகத்தின் நோக்கம். இது விஷயத்தில், ஆசார்யாளின் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள், அவர் அருளிய உபதேசங்கள் மற்றும் ஆசார்யாளுடன் பக்தர்கள் அடைந்த அனுபவங்கள் ஆகியவை பெருமளவில் பயன்படுத்தப்பட்டிருப்பது இந்நூலின் முக்கிய அம்சமாகும்.

ப்ரஹ்மவித்யா மையத்தின் இரண்டாவது வெளியீடாகவரும் "அருள்மிகு குருவின் பொருள்மிகு நாமங்கள்" எனும் இப்புத்தகத்தின் அச்சு மற்றும் பதிப்புச் செலவுகள் முழுவதையும் சிறந்த குருபக்தராகிய திரு. சுரேஷ் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மிகுந்த பக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்களது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆழ்ந்த குருபக்தி கொண்ட திரு.இ.ஆர்.இரவிக்குமார் அவர்கள் இப்புத்தகத்திலுள்ள அச்சுப் பிழைகளைத் திருத்தம் செய்து உதவினார்கள். அவருக்கு எங்களது நன்றிகள். இப்புத்தகத்தையும் அதன் அட்டையையும் அழகுற வடிவமைக்க உதவிய திரு.கோ.பார்த்தசாரதி மற்றும் திரு.ல.ஸ்ரீனிவாஸன் ஆகியோருக்கும், மற்றும் புத்தகத்தை மிகவும் குறுகிய காலத்தில் நேர்த்தியாக அச்சிட்ட சுதர்ஷன் கிராஃபிக்ஸ் திரு.சுப்ரமணியன் அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

இவண்,

Vidyashankar Krishnan
K. Suresh Chandar
Dr. H. N. Shankar
Dr. Meenakshi Lakshmanan

Trustees
**Centre for Brahmavidya**

# பொருளடக்கம்


1. அத்வைத–வித்யா–ரஸிக:......1
2. அனுகம்பா–ஸரித்பதி:...... 5
3. அதிமானுஷ–சாரித்ர:......10
4. அம்ருதோபம–பாஷண: ......14
5. அநேகமட–நிர்மாதா ......18
6. அநேக–தர்சன–மர்மவித்...... 20
7. அன்னபூர்ணா–ப்ரதிஷ்டாதா ...... 22
8. ஸன்னுதேச–பதாம்புஜ: ...... 24
9. அஹந்தா–மமதா–ஹீன:...... 27
10. அகஜாபதி–பக்திமான்......31
11. ஆகமார்த்த–பரிக்ஞாதா ...... 35
12. ஆச்ரிதாகில–ரக்ஷக:...... 39
13. ஆசா–பாச–ஸமுச்சேத்தா ...... 43
14. ஆபந்நார்த்தி–விநாசக:...... 46
15. ஈஹா–விரஹித–ஸ்வாந்த: ...... 50
16. இபவக்த்ர–ஸுபூஜக:...... 53
17. இந்துமௌலி–பதத்யாயீ...... 55
18. இஹாமுத்ரார்த்த–நிஸ்ப்ருஹ:...... 58
19. கர்ம–அகர்ம–விபாகக்ஞ: ...... 60
20. கீர்த்தனீய–குணோஜ்ஜ்வல: ...... 62
21. காமிதாசேஷ–பலத:...... 67
22. கோமள–ஸ்வாந்த–ஸம்யுத: ......71
23. காலட்யாதி–பரிஷ்கர்த்தா...... 74
24. காமக்ரோத–விவர்ஜித:...... 76
25. கராப்ஜ–விலஸத்–தண்ட: ...... 78
26. காஷாயாம்பர–ஸம்வ்ருத: ...... 78
27. குரு–பாதாம்புஜ–த்யாயீ...... 82
28. கணநீய–குணோஜ்ஜ்வல:...... 86
29. சித்த–நைர்மல்ய–ஸந்தாயீ...... 89
30. சிந்தாலேச–விவர்ஜித:...... 90

31. தீர்த்தராஜ–க்ருத–ஸ்நான: ........ 93
32. தீர்த்தீக்ருத–தராதல: ........ 95
33. துஷாராசல–ஸஞ்சாரீ ........ 96
34. துங்கா–ஸ்நான–ஸமுத்ஸுக: ........ 98
35. தக்ஷிணாஸ்ய–பத–த்யாயீ ........ 100
36. தக்ஷிணாம்நாய–பீடப: ........ 102
37. தாக்ஷிண்ய–நிலய–ஸ்வாந்த: ........ 104
38. தாந்த்யாதி–பரிசோபித: ........ 107
39. தர்மாதர்ம–விபாகக்ஞ: ........ 109
40. தியான–நிர்தூத–கல்மஷ: ........ 112
41. தர்மபிரசார–நிரத: ........ 113
42. திக்க்ருதாகில–துர்மத: ........ 116
43. நதலோக–ஸமுத்தர்த்தா ........ 119
44. நியமாசரணோத்ஸுக: ........ 121
45. ந்யாயமார்கானுஸாரீ ........ 125
46. ந்யாயாதி–நயகோவித: ........ 127
47. நிகமாகம–தத்த்வக்ஞ: ........ 129
48. நித்ய–ஸந்துஷ்ட–மானஸ: ........ 132
49. நிஷ்கலங்க ஸுசாரித்ர: ........ 133
50. நீதி–தத்த்வ–ஸுபோதக: ........ 135
51. பாராவாராதி–கம்பீர: ........ 138
52. ப்ராணாயாம–பராயண: ........ 139
53. புர்யாதி–க்ஷேத்ர–யாத்ராக்ருத் ........ 143
54. புராணாகம–தத்த்வ–வித் ........ 144
55. பாலிதாசேஷ–பக்தௌக: ........ 150
56. பிங்களாப்த–ஸமுத்பவ: ........ 152
57. பஹுசிஷ்ய–ஸமாயுக்த: ........ 153
58. பஹுபாஷா–விசாரத: ........ 155
59. ப்ரஹ்ம–தத்த்வானுஸந்தாதா ........ 157
60. ப்ரஹ்மவித்யோபதேசக: ........ 161
61. பக்தஹார்த–தமோபேத்தா ........ 164
62. பிக்ஷுகோத்தம–ரூபத்ருத் ........ 167
63. பேதவாதீப–பஞ்சாஸ்ய: ........ 169

64. புக்தி–முக்தி–ப்ரதாயக: ........ 171
65. பய–சோகாதி–ரஹித: ........ 175
66. பவபீதி–நிவாரண: ........ 177
67. மஹாவாக்ய–விவேகக்ஞ: ........ 181
68. மஹா–மஹிம–ஸம்யுத: ........ 191
69. மஹாப்ரக்ஞா–ஸமாயுக்த: ........ 195
70. மாத்ஸர்யாதி–விவர்ஜித: ........ 199
71. மதுராலாபசதுர: ........ 200
72. மதிநிர்ஜித–கீஷ்பதி: ........ 202
73. மோதிதாகில–பக்தாலி: ........ 207
74. மர்யாதா–பரிபாலக: ........ 210
75. யோகிவந்த்ய–பதாம்போஜ: ........ 213
76. யோகமார்க–விசாரத: ........ 216
77. ராஜாதிராஜ–ஸம்பூஜ்ய: ........ 219
78. ராகத்வேஷ–விவர்ஜித: ........ 221
79. ருத்ராக்ஷ–பூஷித–க்ரீவ: ........ 223
80. ருத்ராராதன–தத்பர: ........ 225
81. வசீக்ருதேந்த்ரியக்ராம: ........ 227
82. வாக்தேவீ–ஸமுபாஸக: ........ 230
83. வித்யாரண்ய–ஸமப்ரக்ஞ: ........ 232
84. வித்யா–விநய–சோபித: ........ 234
85. வேத–சாஸ்த்ர–பரித்ராதா ........ 237
86. வாதிமத்தேப–கேசரீ ........ 239
87. விதிதாகில–சாஸ்த்ரார்த்த: ........ 241
88. வீதராக–ஜனஸ்துத: ........ 246
89. வ்யாக்யா–ஸிம்மாஸனாதீச: ........ 247
90. வ்யாஸ–ஸூத்ரார்த்த–தத்த்வவித் ........ 249
91. சாரதா–பூஜனாசக்த: ........ 254
92. சாரதேந்து–ஸமத்யுதி: ........ 256
93. சாஸ்த்ர–தாத்பர்ய–ஸம்வேதீ ........ 257
94. சாரதா–பீட–நாயக: ........ 260
95. சங்கராசார்ய–ஸம்ஸேவீ ........ 264
96. சங்காத்ரி–பிதுரோபம: ........ 267

97. சமிதாகில–சந்தாப: .......... 270
98. சமாதி–ஸுகுணாலய: .......... 273
99. ஶ்ரீவித்யாஜப–நிஷ்ணாத: .......... 275
100. ஶ்ரீசக்ரார்ச்சன–தத்பர: .......... 277
101. ஶ்ரீசேச–பேத–ரஹித: .......... 279
102. ஶ்ரீந்ருஸிம்ஹ–பதார்ச்சக: .......... 280
103. ஸஞ்சார–பூத–தரணி: .......... 282
104. ஸம்ஸாரார்ணவ–நாவிக: .......... 283
105. ஸத்யாதி–தர்ம–நிரத: .......... 285
106. ஸர்வபூத–தயாபர: .......... 288
107. அக்ஞான–த்வாந்த–மார்த்தண்ட: .......... 291
108. வித்யாதீர்த்த–ஜகத்குரு: .......... 294

## ॥ अद्वैतविद्यारसिकः ॥

# 1. அத்வைத-வித்யா-ரஸிக:

(அத்வைத (இருமையற்ற) ஞானத்தினில் ஆனந்தம் அடைபவர்)

எவ்வாறு பகவத்கீதையின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அத்தியாயங்களில் பகவான் கூறிய உபதேசங்கள் எல்லாம் பின் வரும் பதினைந்து அத்தியாயங்களில் வரப்போகும் உபதேசங்களை உள்ளடக்கியதாக விளங்குகின்றனவோ, அதேபோல், எவ்வாறு பிரம்ம சூத்திரங்களின் முதல் நான்கு சூத்திரங்களிலும் அவற்றிற்கான பாஷ்யத்திலும் அத்வைத வேதாந்தக் கருத்துக்கள் அனைத்தும் பொதிந்து கிடக்கின்றனவோ, அதேபோல, ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தமது ஆசார்யாளாகிய ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் மஹிமைகளைப் போற்றி இயற்றியருளியுள்ள ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த அஷ்டோத்தர சத நாமாவளியின் முதல் மூன்று திருநாமங்களிலேயே ஆசார்யாளின் குண நலன்கள் யாவும் சிறப்பாகத் தெரிவிக்கப்பட்டு, மற்ற நாமங்களில் வரக்கூடிய அனைத்து அம்சங்களும் இங்கேயே அற்புதமாக அடங்கி விடுகின்றன என்ற ஓர் ஆச்சரியத்தை நாம் உணர முடிகிறது.

தத்துவத்தை அறிய விரும்பும் சிஷ்யன் எத்தகைய ஸத்குருவை நாட வேண்டும் என்பதற்கு "ச்ரோத்திரியராகவும் (வேதசாஸ்திரங்களைக் கற்றறிந்தவராகவும்) பிரம்ம நிஷ்டராகவும் (பரம் பொருளில் ஒன்றியவராகவும்) இருப்பவரை" என்று வேதம் உரைக்கின்றது.[1] முதல் நாமமான "அத்வைத வித்யா ரஸிக:" என்பதில் ஆசார்யாள் அத்வைத வேதாந்த சாஸ்திரத்தில் இன்புற்றுத் திளைப்பவர் என்று தெரிவிக்கப்படுகிறது. இது குருநாதரை அவர் ஒரு ச்ரோத்திரியர் என்று உணர்த்துகிறது. வேதாந்த சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து இருந்தால்தானே அவற்றில் ஒருவர் இன்புற்றுத் திளைக்க முடியும்?

---

[1] முண்டக உபநிஷத் 1.2.12

இதே நாமத்திற்கு இன்னொரு பொருளையும் பார்க்க முடிகிறது. அத்வைதம் என்றால் பரம்பொருள் அல்லது பிரம்மம் என்று மாண்டூக்ய உபநிஷத் சொல்கிறது.[2] வித்யா என்றால் ஞானம். அத்வைதமே ஞானம். அதாவது பிரம்மமே ஞானஸ்வரூபம். ‘‘ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம’’[3] என்று உபநிஷத் உரைக்கிறது அல்லவா? எனவே ‘‘அத்வைத வித்யா ரஸிக:’’ என்றால் பிரம்மத்தில் இன்புற்றுத் திளைப்பவர் என்ற ஆழமான பொருளும் கிடைக்கிறது. பிரம்மம் ஞான ஸ்வரூபம் மட்டுமின்றி ஆனந்த ஸ்வரூபமும் கூட. ‘‘விக்ஞானம் ஆனந்தம் ப்ரஹ்ம’’[4] என்பது வேதத்தின் கூற்று. ஸமாதியில் பிரம்மானந்தத்தில் திளைப்பதை பகவத்பாதர், ‘‘இடைவிடாது அப்யாஸம் செய்து பக்குவமான மனம் எப்போது பிரம்மத்திலேயே ஒடுங்கிவிடுகிறதோ அது நிர்விகல்ப ஸமாதி என்றும், முயற்சி ஏதும் தேவைப்படாமலேயே பிரம்மத்தின் அத்வைத ஆனந்த ரஸத்தை (சுவையை) அது ஊட்டுவதாக விளங்குகிறது’’[5] என்றும் பொருள்பட விவேகசூடாமணியில் சுலோகம் ஒன்றைக் கூறுகிறார். ஶ்ரீசந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் இச்சுலோகத்திற்கான தமது விளக்கவுரையில் ‘‘ரஸோ வை ஸ:’’[6] என்று பிரம்மம் கூறப்பட்டிருப்பதால், உன்னதமான ஆனந்தத்திற்கு இருப்பிடமாக இருப்பதால் அதற்கு ரஸம் அல்லது சுவை என்னும் தன்மை’’ என்று கூறுகிறார். நிர்விகல்ப ஸமாதியில் பரம்பொருளின் ரஸத்தில் திளைக்கும் ரஸிகராக, பிரம்மநிஷ்டராக, குருநாதர் விளங்குகிறார் என்று இந்த நாமம் நமக்கு உபதேசிக்கிறது.

அத்வைத வித்யா அல்லது பிரம்ம வித்யா என்பதற்கு பரம்பொருளைப் பற்றிய அறியாமையை நீக்கும் புத்தி விருத்தி என்று பொருள்கொண்டாலும், ‘‘அதில் இன்புற்றுத் திளைப்பவர் குருநாதர்’’ என்று வருகிறது. நிர்விகல்ப ஸமாதியில் அத்தகைய விருத்தி ஏற்படுகிறது. அது ஜீவ-பிரம்ம ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்டது. சித் வடிவமான இத்தகைய வித்யை அல்லது ஞான

---

[2] மாண்டூக்ய உபநிஷத் 7

[3] தைத்திரீய உபநிஷத் 2.1.1

[4] ப்ருஹதாரண்யக உபநிஷத் 3.9.28.7

[5] விவேகசூடாமணி 364

[6] தைத்திரீய உபநிஷத் 2.7.1

விருத்தி யாருக்கு எப்போதும் இருக்குமோ அவர் ஜீவன்முக்தர் என்று அழைக்கப்படுகிறார் என்று விவேகசூடாமணியில் பகவத்பாதர் கூறுகிறார்.[7] ஆக, குருநாதர் பிரம்ம வித்யையில் இன்புற்றுத் திளைக்கும் ஜீவன்முக்தர் என்று இத்திரு நாமம் உரைக்கிறது என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

ச்ரோத்திரியராகவும் பிரம்மநிஷ்டராகவும் குரு ஒருவர் இருந்தாலும் அவருக்கு அளப்பரிய கருணை இருந்தால் தானே சிஷ்யர்களுக்கு அவரது கிருபை மூலம் இந்த ஸம்ஸாரக் கடலைத் தாண்ட முடியும்? எனவேதான் குருவினது இலட்சணத்தைக் கூறும் பகவத்பாதர், "அவர் பிரம்மதத்துவத்தை உணர்ந்தவராகவும், சிஷ்யர்களுடைய நலனுக்-காக எப்போதும் முயற்சிப்பவராகவும் இருப்பார்"[8] என்று கூறுகிறார். ஆசார்யாளுக்கு இக்குணநலனும் அற்புதமாகப் பொருந்துகிறது என்று காட்டுகிறது, "அனுகம்பா-ஸரித்பதி:" என்ற இரண்டாவது திருநாமம்.

குருநாதருடைய இலட்சணம் முதலிரண்டு நாமங்களில் சொல்லப்-பட்டுவிட்டது. அவர் ஜீவன்முக்தராக விளங்கிய ஒரு ஸத்குரு என்பது மட்டுமல்ல, தோற்றத்தில் அவர் மனிதராக இருந்தாலும் அவர் இறைவனின் ஒரு திரு அவதாரம் என்று குறிப்பிடுவது போல, "அதிமானுஷ-சாரித்ர:" என்று மூன்றாவது திரு நாமம் அமைந்-திருக்கிறது. அது மிகவும் பொருத்தம் தானே. அவரது ஆன்மிக சாதனைகள் என்ற லீலைகளை எடுத்துக் கொண்டாலும் சரி, சிஷ்யர்களுக்கு ஆச்சரியமான முறையில் பல வகைகளில் அவர் அனுக்கிரகம் செய்ததையும், அவருடைய மற்றச் செயல்களையும் நாம் எடுத்துக் கொண்டாலும் சரி, அவருடைய சரிதம் அதிமானுஷ்யமான ஒன்று என்பதை நாம் உணருகிறோம் அல்லவா? குருநாதர் இவ்வுலகில் அவதரித்து, நம்மிடையே வாழ்ந்து, தெய்வீகமாக நமக்கு அருள் புரிந்தது யாவற்றையுமே இத்திரு நாமம் நமக்கு எடுத்துக்காட்டி விடுகிறது. இவ்வகையில் அஷ்டோத்தரத்தின் முதல் மூன்று நாமங்களுக்குள்ளேயே, சொல்லப்படவேண்டியது எல்லாமே ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களால்

---

[7] விவேகசூடாமணி 428

[8] பிரஶ்னோத்தர ரத்ன மாலிகா 2

அற்புதமாகச் சொல்லப்பட்டு விட்டது என்று கூறினால் அது மிகையாகாது.

எந்த ஒரு நூலையும் குரு மற்றும் இறைவனைக் குறித்த பிரார்த்தனையுடன் அல்லது ஒரு மங்களச் சொல்லுடனாவது ஆரம்பிப்பது முன்னோர்களின் வழக்கம். இந்த அஷ்டோத்தரத்தில் “அத்வைத” என்ற சொல் முதற்சொல்லாக அமைந்திருக்கிறது. அத்வைதம் என்பதை பிரம்மத்தை குறிக்கும் சொல்லாக வேதமே உரைக்கின்றது அல்லவா? மாண்டூக்ய உபநிஷத்தின் அதே ஏழாவது மந்திரத்தில் அத்வைதமே “சிவம்” அதாவது “மங்களம்” என்றும் உணர்த்தப்படுகிறது. ஆக, மங்களத்திற்கெல்லாம் மங்களமான பிரம்மத்தைக் குறிக்கும் சொல்லுடன் இந்நூல் ஆரம்பிக்கப் பெறுவது மிகச் சிறப்பாக உள்ளது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் ஸதா ஸர்வ காலமும் பரமானந்தத்தில் திளைத்திட்ட மஹானாவார். தமது உடல் இந்த உலகில் வாழ்ந்திட்ட வரையினில் உலக இன்பங்களைத் துச்சமாகக் கருதி, வேத நெறிகளுக்குட்பட்டு வாழ்ந்து, அத்வைத ஞானத்தினை அனைவரும் அடைந்திடும் மார்க்கத்தினை உபதேசித்து வந்தவர் அவர். “அத்வைதமான பரபிரம்மத்தின் அனுபவமே நம்முடைய அனைத்து பயங்களையும் போக்கக்கூடியது; பரமானந்தத்தினை அருள்வது; பிறவிப் பெரும்பிணியிலிருந்து நம்மை முற்றிலும் விடுவிப்பது. இயல்பிலேயே எதையும் பகுத்து அறியும் ஆற்றல் பெற்ற நாம், நமக்குக் கிடைத்துள்ள இந்த அரிய மானிடப் பிறவியை வீணாக்கிவிடாது, உலக விஷயங்களில் தீவிர வைராக்கியத்தினை அடைந்து, நம்முடைய ஸ்வரூபம் எது என்னும் ஆத்ம விசாரத்தினில் ஈடுபட்டு, நம் ஸ்வரூபத்தில் நிலைத்திட முயன்றிட வேண்டும்” என்பதே ஆசார்ய ஸ்வாமிகளின் முக்கிய உபதேசமாகும்.

## ॥ अनुकम्पासरित्पतिः ॥

# 2. அனுகம்பா-ஸரித்பதி:

(கருணைக் கடலாக விளங்குபவர்)

‘அனுகம்பா’ என்றால் ‘கருணை’ என்று பொருள். ‘ஸரித்’ என்பது நதிகளைக் குறிக்கின்றது; ‘பதி’ என்றால் நாயகன் எனப் பொருள். ‘ஸரித்பதி’ என்பது நதிகளின் நாயகனாக விளங்கும் கடலைக் குறிக்கின்றது. ஆக, ‘அனுகம்பா ஸரித்பதி’ என்பது ‘கருணைக் கடல்’ எனப் பொருள்படுகின்றது.

‘ஸரித்பதி’ எனும் இந்த சொல் ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் கருணை குணநலத்தினை மிக அழகாக வெளிக்கொணர்கின்றது. ‘ஸரித்’ (நதி) என்பது மனித மனத்தினைக் குறிப்பதாகக் கொள்ளலாம். நதிகளின் தன்மை ‘சலனம்’ ஆகும் (அவை நில்லாமல் ஓடிக் கொண்டிருப்பதால்). மனித மனதின் தன்மையும் இதுவே. நதியானது எப்படி காடு, மேடு, பள்ளம் எனப் பல வகையான இடங்களிலும் ஓடிக் கொண்டேயிருக்கின்றதோ அப்படியே அஞ்ஞான இருளில் சிக்கிய மனித மனதும் உயர்ந்த மற்றும் தாழ்ந்த விஷயங்களில் சிக்கி, சுகம், துக்கம் எனப் பற்பல அனுபவங்களைச் சந்தித்தபடி ஓடிக் கொண்டேயிருக்கிறது. ஆனால் இறுதியில் கடலில் சென்று கலக்கும் போது நதியானது தனது சலனங்கள் அனைத்தையும் துறந்து அமைதியாகி விடுகின்றது. கடலானது தன்னிடம் வந்து சேர்ந்த நதி கங்கையானாலும் சரி, கழிவு நீரைக் கொண்டதானாலும் சரி, மறுக்காமல் ஏற்று, தனதாக்கிக் கொள்கிறது. கருணைக் கடலான ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளும் அப்படியே. தம்மை நாடி வந்த அனைவரையும் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அருள்பவராகவே திகழ்ந்து வந்தார். கடலுக்குக் கூட ஓர் அளவு உண்டு. ஆயினும், ஜகத்குருவின் கருணையோ அளவு கடந்ததாகவே திகழ்ந்தது; எவ்வித பாரபட்சமுமின்றி அனைவருக்கும் அருளப்பட்டது. அவரது இந்தத் தனிப் பெருங்கருணைக்குச் சான்று கூறும் எண்ணற்ற சம்பவங்களிலிருந்து சிலவற்றினை இங்கே காணலாம்.

ஆசார்யாளின் பால பருவத்தில் ஒரு சமயம் அவரது நண்பன் ஒருவன் பரீட்சையில் மிகக் குறைந்த மதிப்பெண்களை எடுத்துவிட்டான் என்ற காரணத்தினால் அவனது தகப்பனார் அச்சிறுவனைக் குனியச் சொல்லி அவனது முதுகில் ஒரு பெரிய கல்லை வைத்து அதே நிலையில் அவன் நீண்ட நேரம் நிற்க வேண்டும் என ஒரு தண்டனையை அளித்துவிட்டார். வலியைத் தாங்க முடியாத அப்பாலகன் அழுது புலம்பத் துவங்கிவிட்டிருந்தான். அங்கே அச்சமயம் வந்த ஸ்ரீ ஸ்ரீநிவாசன் (ஸன்யாஸம் பெறுவதற்கு முன்னால் ஆசார்யாளுக்கு இருந்த பெயர்) தமது நண்பனின் நிலை கண்டு துடித்துப்போய், அவனது தகப்பனாரிடம், "வயதில் தாங்கள் மிகப் பெரியவர்; அறிவிலும் உயர்ந்தவர். தங்களது பையன் வலியால் துடிக்கிறான். தயவு செய்து அவனுக்கு சிறிது நேரமாவது ஓய்வு கொடுங்கள். அந்த நேரத்திற்கு நான் அந்த கல்லை சுமக்கிறேன்" எனக் கேட்டுக்கொள்ள, ஒரு சிறுவனது நாவிலிருந்து ஆழ்ந்த கருணை ததும்பும் வார்த்தைகள் வருவதைக் கண்ட அம்மனிதர் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார். தனது மகனையும் அத்தண்டனையிலிருந்து உடனே விடுவித்து விட்டார். பிறரது துன்பத்தைப் போக்கிடும் விஷயத்தில் தாமே அவர்களது துன்பத்தை ஏற்று அனுபவிக்க வேண்டிவந்தாலும், அதற்கும் முழுமனதுடன் தயாராகிவிடும் குணம் ஆசார்யாளுக்கு இருந்து வந்ததையே இச்சம்பவம் காட்டுகின்றது.

சென்னையைச் சேர்ந்த மருத்துவர் கர்னல் ஸ்ரீ கிருஷ்ணன் அவர்கள் நினைவுகூர்ந்த ஒரு சம்பவம் இங்கே குறிப்பிடத்தக்கது. "ஒரு முறை ஆசார்யாளுக்கு வயிற்று வலி அதிகமாகிவிட, அதிக விலையுள்ள விரைவில் குணமளிக்கக்கூடிய மாத்திரைகளை வாங்கி அவரது உபயோகத்திற்கென சிருங்கேரிக்கு அனுப்பியிருந்தேன். பிற்பாடு, ஒரு நாள், நான் சிருங்கேரிக்கு அவருடைய தரிசனத்திற்காக சென்றிருந்த சமயம், அந்த மாத்திரைகள் உபயோகப்படுத்தப்படாமல் அப்படியே இருப்பதைக் கண்டேன். அது பற்றி ஆசார்யாளிடம் கேட்டேன். அவர், 'இது மிக விலை உயர்ந்த, சக்தி வாய்ந்த மாத்திரை எனக் கேள்விப்பட்டேன். இத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டு, அதைக் குணப்படுத்திக்கொள்ள வசதி இல்லாது

கஷ்டப்படும் ஏழை ஜனங்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். பாவம், அவர்களில் எவருக்காவது இந்த மாத்திரைகள் கிடைத்தால் பெரிய உதவியாக இருக்கும் அல்லவா? என்னைப் பொறுத்தவரை, இந்த மாத்திரைகள் எதுவும் இல்லாமலேயே இந்த நோயை நான் சமாளித்து விடுவேன். இவற்றை நீ பண வசதி இல்லாத நோயாளி ஒருவருக்குக் கொடுத்து விடு' என்று என்னிடம் கூறினார். அவருக்கு இருந்த ஆழம் காணவியலாத அந்த கருணை என்னை பிரமிக்கச் செய்தது!'' ஆசார்யாளுக்கு இருந்துவந்த குடற்புண் நோயானது தீவிரமான ஒன்று என்பதை மருத்துவர்கள் கணித்திருந்தனர்; மருத்துவ சிகிச்சை அவசியம் என்பதையும் கூறியிருந்தனர். கர்னல் ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களால் தரப்பட்டிருந்த அந்த மாத்திரைகளும் சக்தி வாய்ந்தவையே. ஆயினும், அச்சமயத்தில்கூட ஆசார்யாள் தாம் அவற்றை உட்கொண்டு தமது வேதனையைப் போக்கிக்கொள்ள எண்ணாது, பிறரது நலத்தினைப் பற்றியே நினைத்தவராக இருந்தார்.

ஆசார்யாளின் சேவையில் ஈடுபட்டுவந்த ஸ்ரீ ராஜகோபால சர்மா எனும் பக்தர் ஒரு முறை தமது வயிற்றில் ஏற்பட்ட வலியைப் பரிசோதித்துக் கொள்ளும்பொருட்டு மருத்துவர் ஒருவரை அணுகிட, அவரைப் பரிசோதித்த மருத்துவரும் அவருக்கு வயிற்றில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனக் கூறியிருந்தார். இது பற்றி ஆசார்யாளிடம் தெரிவித்த ஸ்ரீ சர்மா, சிகிச்சைக்காகத் தாம் சென்னைக்கு செல்ல இருப்பதாகக் கூறினார். ஆசார்யாளோ, ''அறுவை சிகிச்சைக்கு அவசியமில்லை. இதனை மருந்துகள் மூலமாகவே குணப்படுத்திக் கொள்ளலாம்'' என ஸ்ரீ சர்மாவிடம் கூற, அதில் நம்பிக்கை வராத ஸ்ரீ சர்மா, பிடிவாதமாக சென்னைக்குக் கிளம்பிவிட்டார். சென்னைக்கு வந்து மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு அறுவை சிகிச்சையும் நடைபெற்றது. சிகிச்சை முடிந்து தையல் போட்ட இடங்களில் எதிர்பாராத விதமாக சீழ் கட்டி ரணம் அதிகமாகி ஸ்ரீ சர்மாவின் உடல்நிலை மிக மோசமாகிவிட்டது. அவரும் மருத்துவமனையில் கூடுதல் நாட்களுக்கு தங்கவேண்டிய நிலை உண்டாகியது. 'ஆசார்யாள் சொன்னதை நான் கேட்காமலே விட்டுவிட்டேனே' என்று அவர் மிகவும் வருந்தத் தொடங்கினார். இந்த நிலையில் ஆசார்யாள் சென்னைக்கு விஜயம் செய்தார்.

அதையொட்டி அச்சமயம் அங்கு அதிருத்ர மஹா யாகம் ஒன்றும் ஏற்பாடாகியிருந்தது. ஸ்ரீ சர்மாவின் உடல்நிலை பற்றிக் கேட்டறிந்த ஆசார்யாள், மிகவும் பரிதாபப்பட்டார். அதிருத்ர யாகத்தின் இறுதி நாளன்று, பூர்ணாஹுதி சமயத்தில் எப்படியாவது ஸ்ரீ சர்மாவை அங்கு அழைத்துவர வேண்டும் என நிகழ்ச்சி அமைப்பாளர்களுக்கு உத்தரவிட்டார் ஜகத்குரு. ஸ்ரீ சர்மா எழுந்து நடக்கமுடியாத நிலையில் இருந்ததால், அவரை ஒரு ஸ்ட்ரெட்சரில் படுக்க வைத்து, பூர்ணாஹுதியினைக் காண அழைத்து வந்தனர். எந்தக் கோணத்தில் அவரது ஸ்ட்ரெட்சரை வைத்தால் அவரால் அந்த புனிதமான நிகழ்ச்சியை எவ்விதத் தடையும் இன்றிக் காண முடியுமோ அந்த முறையில் வைத்திடவும் ஜகத்குரு ஏற்பாடுகளைச் செய்தார். ஆசார்யாளின் கருணையினால் மிகவும் நெகிழ்ந்து போன ஸ்ரீ சர்மா, படுத்தவாறே பூர்ணாஹுதியினைத் தரிசித்துப் பிறகு ஆசார்யாளிடம் பூஜை பிரசாதத்தினையும் பெற்றுக் கொண்டார். அவருக்கு விரைவில் குணமாகிடவும் ஆசார்யாள் ஆசீர்வதித்தார். அதன்படியே, விரைவில் குணமடைந்த ஸ்ரீ சர்மாவும், ஆசார்யாளிடம் திரும்பி, மீண்டும் தனது பணியினைத் தொடர ஆரம்பித்தார். தமது வார்த்தைகளை அவர் மதிக்காது செயல்பட்டிருந்த போதிலும்கூட, ஆசார்யாள் அவரது விஷயத்தில் சிறிதும் மனம் கோணாது, அவருக்கு பரிபூரணமாக அருளியது ஆசார்யாளின் தனிப்பெருங்கருணையைக் காட்டி நின்றது.

ஆசார்யாளின் கருணையானது, ‘தாம், தமது பக்தர்கள், தமது மடம்’ என்ற ஒரு குறுகிய வட்டத்திற்குள் மட்டும் செயல்பட்டதில்லை. அது விசாலமான ஒன்றாகவே இருந்து வந்தது. நில-இயல் விஷயங்களில் நிபுணரான ஆசார்யாள், சிருங்கேரிக்கு வட பகுதியில் உள்ள சிவமொக்கா நகரிலிருந்து தென் பகுதியிலுள்ள கடற்கரை நகரான மங்களூர் நகரத்திற்கு ஆகும்பே வழியாக சாலை ஒன்று இருந்த போதிலும், அதில் பேருந்துகள் போன்ற நீளமான கனரக வாஹனங்கள் பயணிக்க முடியாதிருந்ததைக் கவனித்தார். இந்த இரண்டு நகரங்களையும் புதிதான ஒரு சாலையின் மூலம் இணைத்து, அதில் பேருந்துகளும் இலகுவாகப் பயணிக்க வழி செய்தால் அது கர்நாடக மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு பயன்படும் என ஆசார்யாள் கணித்தார். சிவமொக்காவிலிருந்து

கொப்பா வழியாக சிருங்கேரிக்கும் மற்றும் கர்களாவிலிருந்து மங்களூருக்கும் ஏற்கெனவே நல்ல சாலை வசதிகள் உள்ளதையும் அறிந்திருந்த அவர், சிருங்கேரியை நெம்மூரு, கெரகெட்டே வழியாக கர்களாவுடன் நல்ல சாலை ஒன்றினால் இணைத்துவிட்டால், ஜனங்களால் சிவமொக்காவிலிருந்து மங்களூருக்கு பேருந்துகளில் மிக வசதியாகப் போய் வர முடியும் என்பதையும் கணித்தார் ஜகத்குரு. அத்துடன் அதை அவர் நிறுத்திக் கொள்ளாது, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவும் முயற்சிகளை எடுக்கத் துவங்கினார். தம்மை தரிசிக்க வரும் மாநில மந்திரிகள் மற்றும் அரசாங்க உயர் அலுவலர்கள் ஆகியோரிடம் இந்தத் திட்டத்தைப் பற்றி எடுத்துக் கூறி இதனால் மாநிலத்திற்கு எவ்வளவு நன்மைகள் உண்டாகும் என்பதையும் விளக்கினார். அவரது அந்த விடாமுயற்சிகளின் பயனாக அரசாங்கம் அந்த சாலையை உருவாக்கும் பணிகளை நிறைவேற்றத் துவங்கியது. அத்துடன் தமது பணி முடிந்துவிட்டது என்று இருந்துவிடாமல், ஆசார்யாள் அவ்வப்போது அச்சாலையில் பயணித்து, அதன் பணிகளைப் பார்வையிட்டும் வந்தார். தற்போது அந்த சாலை தேசிய நெடுஞ்சாலை எண்-169 எனும் பெயருடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. நாள்தோறும் அதில் பெருமளவு வாஹனங்கள் பயணித்து வருகின்றன. இப்படி ஒரு சாலை வருவதால் தமக்குத் தனிப்பட்ட எந்த விதமான பயனும் இல்லையென்ற போதிலும், அதனை ஒதுக்கித் தள்ளிவிட்டு, கருணை மேலீட்டால், ஜனங்களின் நன்மையையும் மாநிலத்தின் முன்னேற்றத்-தினையும் மனதில் கொண்டு இந்த முயற்சியில் ஈடுபட்டு, அதனை நிறைவேற்றிடவும் செய்தார் ஆசார்யாள்!

## ॥ अतिमानुषचारित्रः ॥

## 3. அதிமானுஷ-சாரித்ர:

(மனித அறிவிற்கு அப்பாற்பட்ட மேலான செய்கைகளை உடையவர்)

இராமாயணத்தில் ஸ்ரீ ராமர் தாம் ஒரு அவதாரப் பிறவி என்பதைக் காட்டிக்கொள்ளாது ஒரு சாதாரண மனிதனைப் போலவே தமது வாழ்க்கையினை நடத்திவந்தார். ஆயினும், சில சமயங்களில், தமது மஹிமையினை அவர் வெளிக்காட்டிடவும் செய்தார். அதே போல், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் தம்மை சாதாரண மனிதனாகவே காட்டிக்கொண்டவராய் தமது காரியங்களைச் செய்து வந்தார். ஆயினும், பல தருணங்களில் தமது அவதார மஹிமையினை அவர் வெளிக்காட்டிடவும் செய்தார். இந்த ரீதியில், தமது குருநாதர் சாதாரண மானுடரைப் போல் ரூபம் தரித்து வாழ்ந்தவரானாலும், உண்மையில் அவர் இறைவனுக்கொப்பான சக்திகளைப் பெற்றிருந்தவராகத் திகழ்ந்தார் என்பதை ஸ்ரீ பாரதீதீர்த்த மஹா-ஸ்வாமிகள் இந்நாமத்தின் மூலம் குறிப்பிடுகின்றார். ஆசார்யாளின் அதிமானுஷ லீலைகளை சீடர்கள் பலரும் கண்டு அனுபவித்-திருக்கின்றனர்.

கல்கத்தா சிருங்கேரி மடத்து தர்மாதிகாரியாயிருந்த ஸ்ரீ சுப்ரமணியன் அவர்கள் 1974ம் ஆண்டில் ஆசார்யாளைத் தரிசிப்பதற்காக கல்கத்தாவாசிகள் பலரை அழைத்துக் கொண்டு சிருங்கேரிக்குக் கிளம்பினார். பெங்களூரை அடைந்த அவர்களுக்கு அங்கிருந்த சிருங்கேரி மடத்தில் இரவினைக் கழிக்க வசதிகள் செய்யப்-பட்டிருந்தன. அவர்கள் அனைவரும் மறுநாள் காலையில் கிளம்பி சிருங்கேரிக்குச் சென்று ஆசார்யாளைத் தரிசிப்பதாக முடிவாகி-யிருந்தது. அன்று நள்ளிரவில், அனைவரும் நன்கு உறங்கிக் கொண்டிருந்த சமயத்தில் ஸ்ரீ சுப்ரமணியனும் அவரது துணைவி-யாரும் ஏதோ விழித்துக் கொள்ள நேரிட்டது. விழித்தவர்களுக்கு பேராச்சரியம் ஒன்று காத்துக் கொண்டிருந்தது. அவர்கள் அருகில் ஆசார்யாள் நின்று கொண்டிருந்தார். உடனே இவர்கள் இருவரும் அவரை நமஸ்கரிக்க, கருணை ததும்பும் புன்னகையுடன் ஆசார்யாள்

இவர்களை ஆசீர்வதித்துவிட்டு, அங்கிருந்து மறைந்துவிட்டார். "ஆசார்யாள் சிருங்கேரியில் அல்லவா இருக்கின்றார்; இங்கே எப்போது எப்படி வந்தார்?" என இவர்கள் இருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை. மறுநாள் அனைவரும் சிருங்கேரியை அடைந்து, ஆசார்யாளைத் தரிசித்த சமயம், ஸ்ரீ சுப்ரமணியன் அவர்கள் ஆசார்யாளிடம், "நேற்று நாங்கள் இருவரும் தங்களை பெங்களூரில் பார்த்தோமே..." எனக் கூற, சிரித்துக் கொண்ட ஆசார்யாளும், "சுப்ரமணியன் பலரையும் அழைத்துக் கொண்டு கல்கத்தாவிலிருந்து இங்கு வந்துகொண்டிருக்கின்றாரே; அவர்களுக்கெல்லாம் தேவையான வசதிகள் கிடைத்திருக்கின்றதா என்பதைப் பார்க்க வேண்டுமே' என யோசித்துக் கொண்டிருந்தேன்..." என்று கூறினார். இதைக் கேட்ட ஸ்ரீ சுப்ரமணியனுக்கு முந்தைய இரவில் ஆசார்யாள் பெங்களூரிலும் காட்சி அளித்ததன் காரணம் புரிந்துவிட்டது. தமது குருநாதரின் அதிமானுஷ சக்தியில் அவருக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லாதிருந்த போதிலும் அதன் மஹத்துவத்தினை நேரில் காணக்கூடிய பாக்கியத்தை ஆசார்யாள் தங்களுக்கு அருளியதை எண்ணி மெய்சிலிர்த்துப் போயினர் அந்த பாக்கியசாலிகளான தம்பதிகள்.

மனித சக்திக்கு அப்பாற்பட்ட இயற்கையின் பெரும் சக்திகளும் ஆசார்யாளின் சொல்லுக்குக் கட்டுப்பட்டதினையும் பக்தர்கள் பலர் கண்டிருக்கின்றனர். ஒரு சமயம், சீடர் ஒருவர் ஆசார்யாளின் உரை ஒன்றினை டேப் ரெகார்டரில் பதிவு செய்வதற்காக வந்திருந்தார். ஆசார்யாளின் அறையுள் சென்று, அவரது அனுமதியினைப் பெற்று, பதிவினை துவக்க அவர் எத்தணித்த சமயம், பெரும் சப்தத்துடன் மழை பெய்யத் துவங்கிவிட்டது. அந்த இரைச்சலில் ஆசார்யாளின் உரையினைத் தெளிவாகப் பதிவு செய்யவும் இயலாது; 'மழை நிற்கும் வரை பொறுத்திருங்கள்' என ஆசார்யாளைக் கேட்டுக் கொள்வதும் மரியாதையற்ற செயலாகிவிடும் என்பதால் சீடருக்கு தர்மசங்கடம் ஏற்பட்டது. அவரது மன நிலையினைப் புரிந்துகொண்ட ஆசார்யாள், திறந்திருந்த அறையின் வாயிற்புறம் பார்த்தவாறே, (மழையுடன் பேசுவது போல்) "இப்போது அவசியமா?" எனக் கேட்டார். உடனே மழை நின்றுவிட்டது. பிறகு, சீடரை நோக்கிய

ஜகத்குரு, "இப்போது பதிவினைத் துவங்கலாம்" எனக் கூற, பதிவும் துவங்கி எவ்வித இடையூறுகளுமின்றி நல்லபடியாக முடிந்தது. பிறகு ஆசார்யாள் முன்னர் போலவே வெளியில் நோக்கிட, மறுபடியும் மழை பெய்யத் துவங்கியது!

புலியூரைச் சேர்ந்த ஸ்ரீ காமேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் தான் கண்ணுற்ற பின்வரும் அதிசய சம்பவத்தைப் பகிர்ந்து கொண்டார். "ஒருமுறை, நெரூரில் உள்ள ஸ்ரீ ஸதாசிவப்ரம்மேந்திரரின் அதிஷ்டான ஆலயத்திற்கு ஆசார்யாள் பயணித்த சமயம், அவருடன் செல்லும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து நடந்தே ஆலயத்திற்குச் செல்லுவது என முடிவாகியது. அந்தப் பாதை இருந்த நிலையினைப் பார்த்த எனக்கு பயமாகிவிட்டது. இரு பக்கங்களிலும் முற்புதர்கள் மண்டிக்கிடக்க, கண்ணுக்குத் தெரிந்த வரை அந்தப் பாதை முழுதும் பெரிய அளவு முற்கள் நிரம்பிக் கிடந்தன. எனக்கும் மற்றும் அங்கு இருந்த மடத்து ஊழியர்களுக்கும், பக்தர்களுக்கும் இந்த பாதையில் நடந்து போவதா என ஐயப்பாடு தோன்றியது. எனது கருத்தினை ஆசார்யாளுக்குத் தெரிவித்தேன். அவரோ, 'அதெல்லாம் வேண்டாம். இந்த வழியிலேயே நடந்து செல்லுவோம். பகவான் நமக்கு வழி விடுவான்' எனக் கூறி, நடக்கவும் ஆரம்பித்துவிட்டார். வேறு வழி இல்லாமல், நாங்களும் அவரது பின்னாலேயே நடக்கத் துவங்கினோம். அடுத்த கணம், சூரைக் காற்று ஒன்று திடீரென அங்கு அடிக்கத் துவங்கியது. எங்கும் புழுதி படர்ந்ததால், முன்னால் சென்றுகொண்டிருந்த ஆசார்யாள், தமது கையினை உயர்த்தி, அனைவரையும் நிற்குமாறு சைகை செய்தார். நாங்களும் நடப்பதை நிறுத்திவிட்டு அங்கேயே நின்றோம். சிறிது நேரத்தில் அந்தக் காற்று ஓய்ந்து விட, புழுதியும் அடங்கியது. பிறகு அந்தப் பாதையைக் கண்ட எனக்கு மிகுந்த அதிர்ச்சியாகிவிட்டது. ஏனென்றால், ஒரு முள்கூட இல்லாமல் அந்தப் பாதை மிகவும் சுத்தமாக மாறியிருந்தது. பின்பு, ஆசார்யாள் தமது நடையைத் தொடர, நாங்களும் பின் தொடர்ந்தோம். ஆலயத்தினையடைந்தவுடன் என்னைப் பார்த்த ஆசார்யாள், 'என்ன, பகவான் நமக்கு வழிவிட்டான்தானே?' என்று கேட்டார். பதிலெதுவும் கூறிட எனக்கு நாவே எழவில்லை."

சில தருணங்களில் ஆசார்யாள் செய்திடும் விஷயங்கள் அவரைச் சுற்றி இருப்பவர்களுக்கு ஆரம்பத்தில் ஒன்றும் புரிபடாது. ஆயினும், பிற்பாடு நடந்திடும் விஷயங்களைக் கண்டிடும்போது, அவர்கள் அனைவருக்கும், “எப்படி இப்படி ஒன்று நடக்கப் போகின்றது என்பதை ஆசார்யாள் முன்கூட்டியே கணித்தார்?” என்று பெரும் ஆச்சரியமாக இருக்கும்! பின்வரும் சம்பவம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. ஒருமுறை ஆசார்யாள் ராஜபாளையத்தில் முகாமிட்டிருந்தார். ஒரு நாள் அவர் அந்த ஊரில் இருந்த பள்ளி ஒன்றிற்கு விஜயம் செய்வதாக இருந்தது. காரில் அமர்ந்துவிட்ட ஆசார்யாள் திடீரெனத் தமது உதவியாளரை அழைத்து தமது அறைக்குச் சென்று அங்கு உள்ள குறிப்பிட்டதொரு சிறு பெட்டியை எடுத்துவரும்படிக் கூறினார். ‘அந்த குறிப்பிட்ட பெட்டிக்கும் இப்போது செல்லவிருக்கும் நிகழ்ச்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லையே, பிறகு ஏன் ஆசார்யாள் அந்த பெட்டியைக் கொண்டுவரச் சொல்கின்றார்’ என்பது அந்த உதவியாளருக்குத் தெரியவில்லை. எனினும், தனக்கிடப்பட்ட உத்திரவினை நிறைவேற்றினார் அவர். ஆசார்யாளின் கார் பள்ளிக்கு வந்து சேர்ந்தது. காரிலிருந்து இறங்கிய ஆசார்யாள் உள்ளே செல்லத்துவங்கியபோது, அந்தப் பள்ளியின் ஆசிரியை ஒருவர் தனது கண்களில் நீர்மல்க, ஆசார்யாளிடம் வந்து, தனது திருமாங்கல்யம் அன்று காலையில் எங்கோ தொலைந்துவிட்டதைக் கூறி, அதனால் என்னென்ன மோசமான விளைவுகளெல்லாம் தனக்கு உண்டாகப்போகின்றதோ என தான் மிகவும் பயந்து வேதனையில் உள்ளதையும் கூறி, ஆசார்யாளின் அருளினை வேண்டினார். அந்த பெண்மணிக்கு ஆறுதல் கூறித் தேற்றிய ஆசார்யாள், தமது உதவியாளரை அழைத்து, தமது அறையிலிருந்து எடுத்துவரப்பட்ட பெட்டியில் உள்ள ஒரு சிறு பையினைக் கொண்டுவரும்படிக் கூறினார். பையும் வந்தது. அதனைத் திறந்த ஆசார்யாள், அதனுள் இருந்த ஒரு புது திருமாங்கல்யத்தினை வெளியில் எடுத்து, அந்த ஆசிரியைக்குக் கொடுத்து அவரை ஆசீர்வதித்தார். அந்த ஆசிரியைக்கு ஆனந்தம் கரைபுரண்டோடியது. திருமாங்கல்யம் தொலைந்துபோய் விடுவது என்பது அமங்களமான ஒன்றாகவே கருதப்படுகின்றது என்பதால் அந்த ஆசிரியை மிகவும் குழம்பிப் போய் இருந்தார். ஆனால், ஸ்ரீ சாரதாம்பாளின் பரமானுக்கிரஹத்துடன் புதிதாக ஒரு திருமாங்கல்யம்

அவருக்கு அருளப்பட்டது அனைத்து அமங்களங்களையும் போக்கி, ஸர்வ மங்களங்களையும் அடைந்துவிடும் பாக்கியத்தினை அவருக்கு வழங்கிவிட்டது! உதவியாளருக்கோ, இப்படி ஒன்று நடக்கப்போகின்றது என்பது ஆசார்யாளுக்கு அப்போதே எப்படித் தெரிந்தது என்று பேராச்சரியமாகிவிட்டது. ஆசார்யாளோ, "இன்று அந்த பெட்டியானது இங்கு நடக்கப்போகும் நிகழ்ச்சிக்கு எவ்விதத்திலும் தேவையற்றதுதான். ஆயினும், ஒரு மன உந்துதலின்பேரில்தான் அந்த பெட்டியை எடுத்துவரச்சொன்னேன்" என மிகச் சாதாரணமாகக் கூறி அந்த விஷயத்தினை அதோடு முடித்துவிட்டார்.

## ॥ अमृतोपमभाषणः ॥

## 4. அம்ருதோபம-பாஷண:

(அமுதத்திற்கொப்பான பேச்சினை உடையவர்)

"அம்ருதோபம பாஷண:" என்னும் இந்தத் திருநாமத்தின் சொல்லமைப்பில் தனித்ததொரு சிறப்பு இருக்கின்றது. ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் இந்தத் திருநாமத்தில் அம்ருதபாஷண: (அமுதமான பேச்சினையுடையவர்) எனக் கூறாது அம்ருதோபம பாஷண: (அமுதம் போன்ற பேச்சினையுடையவர்) என்று கூறியுள்ளார். அம்ருதபாஷண: என்று சொன்னாலும் அதற்கும் "அமுதத்தைப் போன்ற பேச்சுடையவர்" என்ற பொருளேதான் கிடைக்கும். அப்படியிருப்பினும் "அம்ருத-உபம-பாஷண:" அல்லது "அமுதத்திற்கு ஒப்பான பேச்சினையுடையவர்" என்று குறிப்பாக 'உபம' (போன்ற) என்ற சொல்லை நுழைத்துத் திருநாமத்தை அவர் அமைத்திருப்பதற்கு என்ன சிறப்பு என்று இப்போது ஆராய்வோம்.

முதலில் ஓர் உதாரணத்தினைப் பார்ப்போம். "ஆகாசவத் ஸர்வகதச்ச நித்ய:" என்று வரும் வேத வாக்கியத்தில் பரம்பொருளை நாம் புரிந்து கொள்வதற்காக ஆகாசம் உவமையாகக் கூறப்படுகிறது. ஆகாசம் எவ்வாறு ஸர்வ வியாபியாகவும் நிலையாகவும் உள்ளதோ

அதே போல், ஆகாசத்திற்குச் சமானமான வகையில் பரம்பொருள் ஸர்வ வியாபியாகவும் நிலையாகவும் உள்ளது என்று இந்த வாக்கியத்திற்குப் பொருளல்ல. பரம்பொருள் ஆகாசத்தைப் போன்று மட்டுமல்லாமல் ஆகாசத்தை விட மஹிமை வாய்ந்தது என்று "ஆகாசவத்" (ஆகாசத்தைப் போல) என்ற சொல் நமக்குக் குறிப்புத் தருகிறது. பரம்பொருளானது ஆகாசத்தைக் காட்டிலும் ஸர்வ வியாபியானது. ஏனென்றால், அது ஆகாசத்தையும் வியாபிக்கிறதல்லவா? அதே போல் "ஆகாசம் நிலையானது" என்று சொன்னால் அது மற்றவைகளைக் காட்டிலும் பல காலம் அழியாமல் இருக்கும் என்றுதான் பொருள். ஏனெனில், பிரளயத்தின் போது மற்ற எல்லாம் அழிந்தபின்னரும்கூட கடைசி வரை இருந்து இறுதியில்தான் ஆகாசம் அழிவுறுகிறது. ஆகவே, ஆகாசம் என்றுமே அழியாதது என்று ஆகாது. அதே சமயம் பிரம்மத்தின் நிலைத்தத் தன்மை எத்தகையது என்றால் அது என்றுமே அழியாதது. அதைக் கூடஸ்த நித்தியம் என்று சொல்வோம். ஆகாசம் அத்தகைய நித்தியமல்ல. இவ்வாறாகப் பிரம்மத்திற்கு ஸர்வ வியாபியாக இருப்பதிலும், நிலையாக இருப்பதிலும் ஆகாசம் உவமையாகக் கூறப்பட்டாலும் பிரம்மத்தினுடைய ஸர்வ வியாபகத் தன்மை மற்றும் நிலைத் தன்மை ஆகாசத்தினுடைய அத்தகைய தன்மைகளைக் காட்டிலும் சாலச் சிறந்தது என்றே நம்மால் புரிந்து கொள்ளப்படுகிறது. அதாவது ஆகாசம் பிரம்மத்திற்கு இணையாகக் கூறப்படவில்லை; பிரம்மம் ஆகாசத்தைப் "போல்" உள்ளது என்பதுதான் தாத்பர்யம்.

அதேபோல் இத்திருநாமத்திலும், குருநாதரின் அருள்மொழிக்கு ஓர் உவமையாக அமுதம் கூறப்பட்டாலும், அது அமுதத்தை விடச் சாலச் சிறந்தது என்றே பொருள். எவ்வாறு? "அம்ருத-உபம-பாஷண:" என்பதிலிருந்து அவரது பேச்சு அமுத்திற்கு ஒப்பாக மட்டுமின்றி அமுதத்தைக் காட்டிலும் மிகுத்து மஹிமை வாய்ந்ததாக இருக்கிறது என்று பொருள் வருமாறு இத்திருநாமம் அமைந்திருக்கிறது. சாமானியமான அமுதமானது சுவையையும், இன்பத்தையும் அளித்து, தேவர்களுக்கு அவர்களது மரணத்தைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கிறது. ஆனால் குருநாதருடைய பேச்சு எனும் அமுதமானது, சாமானிய அமுதத்தைப் போல் சுவையாகவும் இன்பம் தருவதாகவும்

மட்டுமின்றி சீடர்களுக்கு ஞானத்தையே அருளி, பிறப்பு-இறப்புச் சக்கரத்தையழித்து, மோட்சத்தையளித்து, அழிவிலா பேரின்பத்தையே அருளவல்லதாக இருக்கிறது. அதாவது அமுதமானது குருநாதரின் அருள்வார்த்தைகளுக்கு இணையாகக் கூறப்படவில்லை; மாறாக, அவரது அருள்மொழி அமுதத்தைப் “போல்” உள்ளது என்பது தான் தாத்பர்யம். இவற்றுக்கிடையில்தான் எவ்வளவு வேறுபாடு!

இவ்வாறாக, ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் இந்தத் திருநாமத்தில் ‘அம்ருதபாஷண:’ (அமுதமானப் பேச்சினையுடையவர்) எனக் கூறாது ‘அம்ருதோபம பாஷண:’ (அமுதம் போன்ற பேச்சினையுடையவர்) என்று வருணித்துள்ளது மிகச் சிறப்பாகவே அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

ஆசார்யாளின் அம்ருதோபம பாஷணமானது ஜனங்களுக்கு ஆன்மிக மேன்மையினை ஏற்படுத்திவந்தது. அதற்கு சில எடுத்துக்காட்டுக்களை இங்கே காணலாம்.

“எனது புலன்கள் அலைவதைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை; என்ன செய்வது?” என ஒருவர் ஆசார்யாளிடம் கேட்டார். அதற்கு ஆசார்யாள் அருளிய உபாயமானது: “ஒரு பொருள் நமக்கு சுகம் தரக்கூடியது என்ற எண்ணம் இருக்கின்ற வரையினில்தான் அதன்-மேல் நமக்கு ஆசை இருந்துவரும். மாறாக, அப்பொருளின் தன்மையை நமது பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தோ-மானால், அடிப்படையில் அந்தப் பொருளில் சுகத்திற்கான காரணம் எதுவுமே கிடையாது என்பது தெளிவாகிவிடும். அதனால், அந்தப் பொருளின் மீது நமக்கு உள்ள இச்சையும் மற்றும் அதனால் உண்டாகும் மனக்கிளர்ச்சியும் தாமாகவே நீங்கி விடுகின்றன. ஆகவே, விஷயங்களில் உள்ள தோஷங்களை (குறைகளைத்) திரும்பத் திரும்ப எண்ணிப் பார்ப்பதே ஆசையை அகற்றும் வழி. ஏதேனும் ஒரு பொருளை, ‘இது என்னுடைய துக்கத்திற்குக் காரணமானது’ என ஒருவன் கருதுவானானால், அதன் மீது அவனுக்கு என்றுமே ஆசை உண்டாவதில்லை. ஆகவே, எந்த ஒரு பொருளாக இருந்தாலும் சரி, ஒருவன் அதில் தனக்கு அனுகூலமான அம்சங்கள் இருப்பதாகக் கருதி, அந்தப் பொருள் தனக்கு சுகத்தைத்

தருமென எண்ணுவதுதான் அது விஷயத்தில் வரும் ஆசைக்குக் காரணம்.”

*1982*ம் வருடம் ஆசார்யாள் சென்னைக்கு விஜயம் செய்தார். அச்சமயம், தாம் அருளிய உபன்யாஸம் ஒன்றில், அனைவரும் தியானத்தினை மேற்கொள்ள உதவிடும் சுலபமான ஒரு உபாயத்தினைக் கூறி அனுக்கிரஹித்தார். “தியானத்திற்காக அமர்ந்-திருக்கும் ஒருவன் தன் எதிரிலே, தன் மனதிற்குப் பிடித்த இறைவனின் படம் ஒன்றினை வைத்துக்கொண்டு, இமைகளை மூடாமல் இரண்டு, மூன்று நிமிடங்கள் அப்படியே அந்த படத்தினைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அச்சமயம், இந்த உலகத்தினைப் பற்றிய விஷயங்களைச் சற்றே மறந்தால், நமக்குள்ளே அந்த படத்தின் பிரதிபிம்பம் தெரியும். இரண்டு, மூன்று நிமிடங்கள் சென்ற பிறகு, பகவான் இதயத்தில் இருக்கின்றான் எனும் பாவனை ஏற்படும். பகவான் இதயத்தில் நாபிக்கு மேல் தாமரையில் வீற்று இருக்கின்றான் என்று சிந்தனம் செய்தால், அப்படியே சிறிது நேரம் நிற்கும். பிறகு உடனே மனது ஸஞ்சலமாகி விடலாம். ஆனால், கண்ணை மூடிக்கொள்ளும் காலத்தில், கண்ணும் உட்புறம் திரும்பிவிட்டது என்று சிந்தனை பண்ணினால், ஒரு பிரகாசம் தோன்றும். இவ்வாறு அப்யாஸம் செய்யச் செய்ய, மனது தூய்மையாகிவிடும்...”

மற்றொரு சமயம், எடுத்துக்கொண்ட காரியத்தில் மனதினை ஒருமுகப்படுத்துதல் குறித்த ஆலோசனை ஒன்றினை சீடர் ஒருவருக்கு ஆசார்யாள் அருளினார். “ஒருவன் தான் ஏற்றுக்-கொண்டிருக்கும் அனைத்துக் காரியங்களிலும் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட வேண்டும். தான் ஏற்றுக்கொண்டுள்ளது சிறு காரியமாக இருந்தாலும்கூட, அதைச் செய்யும் விஷயத்தில் ஒரு சிறிதும் கவனக்குறைவு இருந்திடக் கூடாது. அந்தக் காரியத்தினைச் செய்து-முடிக்க ஒதுக்கப்பட்ட நேரம் குறைவாக இருந்தாலும் சரி, அல்லது, அதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்த இதர காரியங்கள் அக்கணத்தில் வந்து சேர்ந்தாலும் சரி, அந்தக் காரியத்தில்

இறங்கிவிட்டால் அதைத்தான் முக்கியமானது என்று அவன் கருதி செயல்பட வேண்டும்.''

''ஒரு சிறிதும் துன்பமே இல்லாத நிலை ஒருவருக்கு கிட்டுவது என்பது ஸாத்தியமா?'' எனும் கேள்வி ஆசார்யாளிடம் கேட்கப்பட்ட சமயம், அதற்கு விடையாக ஆசார்யாள் கூறியருளியது: ''அணு-வளவிற்குக்கூட துன்பம் நம்மை அண்டக் கூடாது என்றே நாம் விரும்புகிறோம். எப்போது நாம் பகவானிடம் ஒன்றிவிடுகிறோமோ, அப்போதுதான் நம் துன்பம் முழுவதுமாக விலகும். அதுவரையில் துன்பம் இருந்து கொண்டுதானிருக்கும்... ஆசைகளை விடவேண்டும். மனதை அடக்க வேண்டும். வெளிப்பொருள் விஷயத்தில் அதிகமாகக் கவனம் செலுத்தக் கூடாது. ஏனெனில், இவை நம் மனதை இழுத்து விடுகின்றன. நம்மைக் காட்டிலும் துன்பப்படுபவன் யாரிருந்தாலும் அவன் விஷயத்தில் நாம் தயை காட்ட வேண்டும். இவற்றை-யெல்லாம் செய்துகொண்டு வந்தால் பகவானின் அனுக்ரஹத்தைப் பெற்று ஸம்ஸாரத்தைத் தாண்டலாம். பரம்பொருளை அடைந்து வாழ்க்கையை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளலாம்.''

## ॥ अनेकमठनिर्माता ॥

# 5. அநேகமட-நிர்மாதா

(பற்பல (ஸ்ரீ சாரதா பீட கிளை) மடங்களை நிர்மாணித்தவர்)

தமது குருநாதரான ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் ஸனாதன தர்ம பிரச்சாரத்திற்காக ஆற்றிய மகத்தான பணிகளில் இந்த பாரதத் திருநாட்டின் பல்வேறு இடங்களில் அவரால் நிர்மாணிக்கப்பட்ட கிளை மடங்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றன என்பதைக் காட்டும் விதமாக ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் தமது குருநாதரை ''அநேக மட நிர்மாத்ரே நம:'' எனப் போற்றியுரைக்கின்றார்.

*1954ல் தாம் ஸ்ரீ சாரதா பீடத்து அதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டது முதல் 1989ல் தமது உடலை துறக்கும் வரை ஸத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் பாரதத் திருநாட்டின் பல்வேறு இடங்களில் ஸ்ரீ சாரதா பீடத்திற்கென புதிய கிளை மடங்களை ஏற்படுத்தியதுடன், ஏற்கெனவே பூர்வ ஆசார்யர்களால் துவக்கப்பட்டு இயங்கி வந்துகொண்டிருந்த கிளை மடங்கள் பலவற்றைப் புதுப்பித்து விரிவாக்கமும் செய்தருளினார். சேலம், கரூர், கோயம்புத்தூர், ஹைதராபாத், குண்டூர், விஜயவாடா, சென்னை (தி.நகர், இராஜா அண்ணாமலைபுரம், மேற்கு மாம்பலம்), சிக்மகளூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருவனந்தபுரம், ஹரித்வார், சிவகங்கை, தென்கரை, புது டில்லி, ஸ்ரீசைலம், ஷிமோகா, இராயதுர்கா, கோகர்ணா, சுந்தரபாண்டியபுரம், கார்வார், பெங்களூர் (மல்லேஸ்வரம்), ஜெட்டா நகர், மங்களூர், வாரணாசி (மெஹ்பூப் கஞ்ச்), கொல்லூர், கல்லிடைக்குறிச்சி மற்றும் கொப்பா ஆகிய இடங்கள் புதிய கிளை மடங்களைப் பெற்றன. வாரணாசி, பெங்களூர், மதுரை, காலடி, நாசிக் போன்ற நகரங்களில் நீண்ட காலமாக இயங்கி வந்த கிளை மடங்கள் புதுப்பிக்கப்பட்டு விரிவாக்கப்பட்டன.*

*மடங்களை ஆரம்பித்து வைத்த ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவை ஒவ்வொன்றையும் கண்ணும் கருத்துமாய் கவனித்துவரவும் செய்தார். அந்தக் கிளை மடங்களின் மூலமாக ஸனாதன தர்ம கொள்கைகள் பரவிட வழிவகைகளைச் செய்தார். உதாரணமாக, காலடியில் ஸ்ரீ சங்கரா ஹால் எனப்படும் ஆன்மீகக் கூடத்தையும் அதனுடன் வேத சாஸ்திர நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்றையும் ஏற்படுத்தினார்; புது டில்லியில் வசந்த விஹார் பகுதியில் ஸ்ரீ சங்கர வித்யா கேந்திரா எனும் பெயரில் உருவான கிளை மடத்தில் சாஸ்திர மற்றும் புராண பிரவசனங்கள் வாராவாரம் நடைபெற வழி வகுத்தார். ஹரித்வார் மடத்தில் யாத்திரீகர்கள் தங்கிட உதவும் வகையில் தங்கும் அறைகள் கொண்ட விடுதி ஒன்றினை ஏற்படுத்தினார்.*

அனைத்து மடங்களும் ஆன்மிக விஷயங்களுக்கான தகவல் மையங்களாகச் செயல்படும்படிச் செய்தார் அந்த மஹா மூர்த்தி. இதன் காரணமாக, ஆஸ்திக மற்றும் ஹிந்து சமய கோட்பாடுகளில் ஈடுபாடுடைய அன்பர்கள் சிருங்கேரி கிளை மடங்களுக்கு பெருமளவில் விஜயம் செய்து ஸ்ரீ சாரதா பீடத்தினைப் பற்றியும், சங்கர பகவத்பாதரது போதனைகளையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு உண்டானதுடன், ஸம்ஸ்க்ருதம் பயிலவும், வேதம் பயிலவும், சுலோகங்களைக் கற்றுக்கொள்ளவும், அமாவாஸ்யை, சிராத்தம், உபநயனம் மற்றும் தத்தம் நித்திய மற்றும் நைமித்திக கர்மாக்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தகுதியுள்ள புரோகிதர்களைக் கலந்தாலோசிக்கவும் முடிந்தது. இவை தவிர, அந்தந்த பகுதிகளில் சஞ்சாரம் செய்யும் ஸன்யாஸிகள் இம்மடங்களில் தங்கிடவும் வசதி உண்டாயிற்று. இதன் மூலம் அந்த பகுதிகளில் வாழும் ஆஸ்திக ஜனங்களும் இந்தத் துறவிகளைத் தரிசிக்கவும், பிக்ஷா வந்தனம் செய்து அவர்களை ஆராதித்து ஆசி பெறவும் வாய்ப்பு உண்டாயிற்று.

## ॥ अनेकदर्शनमर्मवित् ॥

## 6. அநேக-தர்சன-மர்மவித்

(ஆன்மிக மார்க்கங்கள் பலவற்றின் உட்பொருளை அறிந்தவர்)

வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட ‘ஸாங்க்யம்’, ‘பூர்வ மீமாம்ஸை’, ‘யோகம்’, ‘(தர்க்கம் எனப்படும்) ந்யாயம்’, ‘வையாஸேஷிகம்’ மற்றும் (உத்தர மீமாம்ஸை, வேதாந்தம் என்றெல்லாம் அழைக்கப்படும்) ‘அத்வைதம்’ ஆகிய ஆறினையே ‘தர்சனங்கள்’ என ஸ்ரீ சங்கர பகவத்பாதர் நிர்ணயம் செய்தார். தர்சனங்கள் பலவற்றின் மர்மத்தை (அடிப்படை உண்மையை) தமது குருநாதர் அறிந்திருந்தார் என்பதை ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் ‘அனேக தர்சன மர்மவித்’ எனும் இந்த நாமத்தின் மூலம் அறிவிக்கின்றார்.

ஜீவ-பிரம்ம ஐக்கியத்தைப் போதிக்கும் அத்வைத மதம் ஒன்றே மோக்ஷத்திற்கு சிறந்த மார்க்கம் என்பதை அனுபவ பூர்வமாகவே அறிந்தவர் ஜீவன்முக்தரான ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். பற்பலத் தருணங்களில் தர்சனங்கள் பலவற்றின் உட்பொருளினை ஒரு பாமரனுக்கும் புரியும் விதத்தில் விளக்கிக் காட்டியுள்ளார் அவர். அந்த மார்க்கங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் குறைபாடுகளை விளக்கி, எப்படி அத்வைத தர்சனம் ஒன்றே பூரணமானது, மோக்ஷத்தைக் கொடுக்கவல்லது என்பதை ஆசார்யாள் நிரூபித்திருக்கின்றார். இதற்குச் சான்றாக ஆசார்ய ஸ்வாமிகளால் அருளப்பட்ட கட்டுரை மற்றும் உபன்யாசங்களிலிருந்து தொகுக்கப்பட்ட விஷயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

********

“தார்க்கீகர்கள் ஆத்மாவிற்கு சுகம் துக்கம் எல்லாம் உண்டு என்பர். எது உண்டானதோ அதற்கு முடிவும் உண்டு. சுகமோ துக்கமோ உண்டானது என்றால், இரண்டும் போக வேண்டியவைதான். இரண்டு நிலைகளும் போய் விட்டால், ஆத்மா என்ன ஆகும்? ஒரு கல்லைப் போன்று ஜடமாக ஆகி விடுமா? ‘கல்லினைவிட உயர்ந்த நிலையில் இப்போது இருக்கும் நாங்கள் அதிலிருந்து இறங்கி ஒரு கல்லாக முயற்சி செய்ய வேண்டுமா?’ என்று தார்கீகர்களைக் கேட்டோமானால், அவர்களால் பதில் சொல்ல முடியாது.”

********

“ஸாங்க்ய மதத்தைப் பின்பற்றுபவர்களோ ‘ஆத்மா ஸுகஸ்வரூபி (இன்ப வடிவானவன்), ஞான ஸ்வரூபி (அறிவு வடிவானவன்)’ என்பர். மேலும் அவர்களுடைய மதத்தின்படி, முக்தர்களாக இருக்கும் தனித்தனி ஆத்மாக்கள் பல உள்ளன. பலர் முக்தர்களாக இருந்தால் ஒரு முக்தருக்கு இவ்வளவு முக்தர்களில் யார் உயர்ந்தவர், யார் தாழ்ந்தவர் என்ற எண்ணம் ஏற்படலாம். எது வரை பேத த்ருஷ்டி (வித்தியாஸ நோக்கு) உள்ளதோ அதுவரை மோக்ஷம் கிடையாது.”

“யோக மதத்தைப் பின்பற்றுபவர்களும் (ஜீவன், ஈச்வரன் எனும்) இருமையைப் போதிப்பவர்களே. ஆத்மாவினின்று வேறுபட்டதும், ஸத்யமானதுமான பிரபஞ்சம் இருக்கிறது என்பது அவர்களது

கொள்கை.'' (எது வரை த்வைதம் (இருமை) பார்க்கப்படுகிறதோ, அதுவரை மோக்ஷம் என்பது கிடையாது.)

********

"இவ்வுலகத்தின் நிர்வாகியான பரமேஸ்வரன் யார் என்று தெரியாமல் போனாலும்கூட நிர்வாகியானவன் ஒருவன் இருக்கின்றான் என்பது நாஸ்திகனுக்கும் தெரிந்திருக்கும். அதனை ஸாங்க்யன் 'ப்ரக்ருதி' என்றான். வைஸேஷிகன் 'பரமாணு' என்றான். அத்வைதிகளான நாமோ, 'இது ப்ரக்ருதியாக இருக்கட்டும், பரமாணுவாக இருக்கட்டும். சைதன்யம் (consciousness) இல்லாத எந்தப் பொருளும் எந்தப் படைப்பையும் செய்ய முடியாது. இவற்றிற்கெல்லாம் தூண்டுகோலாக ஒரு சைதன்யம் உண்டு. அந்த சைதன்யத்தைச் சரணடைய வேண்டும்' என்று சொல்கிறோம்.''

********

"'த்விதீயாத்வை பயம் பவதி (இரண்டாவது பொருள் என்று ஒன்று இருந்தால் அதனால் பயம்தான் உண்டாகும்)' என்ற இடத்தில் ஒன்று கவனிக்கப்பட வேண்டும். நாமே ஒரு பிசாசை உண்டாக்கி நம் எதிரில் வைத்துக் கொண்டால் பயப்படுவோமா என்ன? புதிதாக ஏதாவது பிசாசு வந்தால் பயப்பட நேரிடலாம். அத்வைத மதத்தின்படி, இவ்வளவு பெரிய பிரபஞ்சம் பிசாசு மாதிரி இருந்தாலும் அது நம் ஸ்வரூபமே என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, (நம்மைக் கண்டே) நாம் ஏன் பயப்பட வேண்டும்? ஆகவே அத்விதீயமான (இரண்டற்ற) பிரம்மத்தில் இருக்கப்பட்ட ரசம் வேறு எந்த மதத்திலும் கிடையாது.''

॥ अन्नपूर्णाप्रतिष्ठाता ॥

## 7. அன்னபூர்ணா-ப்ரதிஷ்டாதா

((காசீ க்ஷேத்திரத்தில்) அன்னபூரணியை ப்ரதிஷ்டை செய்தவர்)

தமது குருநாதரின் தாமரை மலர்க் கரங்களால் 24-01-1977 அன்று காசீ க்ஷேத்திரத்தில் ஸ்ரீ அன்னபூரணேஸ்வரி தேவியின் விக்ரஹ

ப்ரதிஷ்டை நடைபெற்ற வைபவத்தை ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் இத்திருநாமத்தின் மூலமாகக் குறிப்பிடுகின்றார்.

காசீ க்ஷேத்திரத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து வரும் ஸ்ரீ அன்னபூரணேஸ்வரி ஆஸ்தீகர்களிடையே மிகவும் பிரசித்தி பெற்ற தெய்வமாவாள். ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் 1967ம் வருடம் முதன்முதலாக காசீ க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்த போது அம்பாளை தரிசனம் செய்தார்.

பிற்காலத்தில், அம்பாளுக்கு புதிய விக்ரஹம் ஒன்றினை ப்ரதிஷ்டை செய்து, ஆலயக் கும்பாபிஷேகத்தினையும் நிகழ்த்துவது என அன்ன-பூரணேஸ்வரி ஆலய மஹந்த் அவர்களால் முடிவு எடுக்கப்பட்டது. பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. சிருங்கேரிக்கு விஜயம் செய்த மஹந்த் அவர்கள், புதிய விக்ரஹ ப்ரதிஷ்டையும், ஆலயக் கும்பாபிஷேகமும் ஆசார்யாளின் திருக்கரங்களாலேயே நடைபெற்றிட வேண்டும் எனும் தமது வேண்டுகோளையும் ஜகத்குருவிடம் சமர்ப்-பித்துக் கொண்டார். அதனை ஏற்றுக் கொண்ட ஜகத்குரு, 1977ம் வருடம் ஜனவரி மாதத்தில் காசி க்ஷேத்திரத்திற்குத் தாம் விஜயம் செய்தபொழுது தமது திருக்கரங்களால் அம்பாள் ஸ்ரீ அன்னபூரணியின் நூதன விக்ரஹ ப்ரதிஷ்டையைச் செய்து வைத்தார். பாரத தேசத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பக்த ஜனங்கள் பேரளவில் இவ்வைபவத்தைக் கண்டிட காசிக்கு வந்திருந்தனர். இந்து மதத்தின் பற்பலப் பிரிவுகளைச் சேர்ந்த தலைவர்களும் வருகை புரிந்திருந்தனர். ஆசார்யாளுக்கு அரசாங்க மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

தங்கக் கவசத்துடன் மிக நேர்த்தியாக வடிக்கப்பட்டிருந்த அன்னபூரணியின் விக்ரஹம் காசி நகரின் சிருங்கேரி கிளை மடத்திலிருந்து ஊர்வலமாக கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வைக்கப்பட்டது. மஹந்த் அவர்களின் விருப்பப்படியே 24-01-1977 அன்று ஆசார்யாளின் திருக்கரங்களால் அம்பாளின் விக்ரஹ ப்ரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. பூஜையின் ஒரு நிகழ்ச்சியாக ஆசார்யாள் தேங்காய் ஒன்றை உடைத்த சமயம், அதன் ஒரு மூடியினுள்ளே நன்கு விரிந்த நிலையில் தேங்காய் பூ ஒன்று

மலர்ந்திருப்பதை ஆசார்யாள் கண்டார். அம்முடியை அனைவருக்கும் காண்பித்ததுடன், நடைபெற்றுவரும் வைபவத்திற்கு இறைவனது பூரண ஆசிகள் இருப்பதையும் இதன் மூலம் அனைவருக்கும் ஆசார்யாள் சூசகமாக உணர்த்தினார்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்த இந்த நிகழ்ச்சிக்குக் காரணகர்த்தாவாகவும் மற்றும் பூரணகர்த்தாவாகவும் தமது குருநாதர் திகழ்ந்த உண்மையைக் குறிக்கும் வண்ணம் "அன்ன பூர்ணா ப்ரதிஷ்டாத்ரே நம:" எனும் இந்நாமத்தை ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் புனைந்திருக்கின்றார் போலும்!

தவிரவும், ஸ்ரீ சீதாராமாஞ்சனேயுலு எனும் திருநாமத்துடன் குரு சேவையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஒரு பிரம்மசாரியாகத் தமது குருநாதருடன் பயணித்து, 1967ல் காசீ க்ஷேத்திரத்தில் தமது குருவின் முன்னிலையில் ஸ்ரீ அன்னபூரணேஸ்வரியைத் தரிசித்து, பின்பு 1977ல் ஸ்ரீ சாரதா பீடத்தின் 36வது ஜகத்குருவாகத் தமது குருநாதருடன் அதே காசீ க்ஷேத்திரத்தில் அம்பாளின் நூதன விக்ரஹ பிரதிஷ்டை வைபவத்திலும் பங்கு பெறும் பாக்கியம் தமக்குக் கிட்டியதை ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் நினைவுகூரும் விதமாகவும் இந்நாமம் திகழ்கின்றது.

॥ सन्नुतेशपदाम्बुजः ॥

## 8. ஸன்னுதேச-பதாம்புஜ:

(இறைவனின் திருவடித் தாமரைகளை நன்கு போற்றியவர்)

"ஈசனடி போற்றி, எந்தையடி போற்றி, தேசனடி போற்றி, சிவன் சேவடி போற்றி..." என்று உருகுகின்றார் மாணிக்கவாசக ஸ்வாமிகள். இறைவனின் அடியைப் போற்றுவது என்பது பக்தி லக்ஷணங்களில் முக்கியமான ஒன்று. உண்மையான பக்தர்களுக்கு அது இயல்பாகவே ஏற்படுகின்றது. பரம பக்தரான தமது குருநாதர் ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களும் ஈசனின்

தாமரைத் திருவடிகளைப் போற்றி அவற்றில் என்றும் மனம் நிலைத்தவராகத் திகழ்ந்தவர் என்பதைப் பறைசாற்றும் விதமாக "ஸன்னுதேச பதாம்புஜ:" எனும் திருநாமத்தினால் அவரைப் போற்றி மகிழ்கின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.

ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் தமது பால வயதிலேயே இறைபக்தி மிக்கவராக விளங்கி வந்தார். ஒரு முறை அவர் தமது தோழர்களுடன் பேசிக் கொண்டிருந்த சமயம், அவர்கள் ஒரு குறிப்பிட்ட குளத்தில் பேய் நடமாட்டம் இருப்பதாகக் கூறி அங்கு அவர் தனியாகப் போய்வர முடியுமா எனக் கேட்க உடனடியாக அந்த சவாலை ஏற்று அதன்படியே ஓர் அமாவாசை இரவில் அங்கு போனதுடன், குளத்து நீரில் வாய் கொப்பளித்து, முகம் கை கால்களை அலம்பிக்கொண்டு திரும்பி வந்தார். பெரிதும் திகைப்படைந்த அவரது நண்பர்கள் அவரிடம், "உனக்குப் பயமாக இருக்கவில்லையா?" எனக் கேட்ட போது, "நான்தான் இறைவனின் நாமத்தைக் கூறிக் கொண்டிருந்தேனே, எப்படிப் பயம் உண்டாக முடியும்?" எனப் பதிலளித்து இறைபக்திக்கு உள்ள சக்தியைப் பற்றி அவர்களையும் சிந்திக்க வைத்தார்.

பிற்பாடு, தாம் ஸன்யாஸ ஆசிரமத்தினை ஏற்றுக்கொண்டதும், மடத்து சம்பிரதாயங்களையொட்டி தமது குருநாதர் தமக்கருளிய மந்திரங்களான 'சிவ பஞ்சாக்ஷரீ', 'சக்தி பஞ்சாக்ஷரீ', 'பாலகணபதி', 'பாலா த்ரிபுரஸுந்தரி', 'ஸ்ரீ வித்யா' முதலான பல மந்திரங்களை ஜபம் செய்துவந்தார். இவை தவிர, அர்த்தநாரீஸ்வர ஸ்தோத்திரம் போன்ற பல ஸ்தோத்திரங்களையும் ஆசார்யாள் பக்தியுடன் பாராயணம் செய்துவந்தார்.

பீடாதிபதியாகிய பிறகு, ஆசார்யாள் ஜனங்களிடையே உபன்யாஸம் செய்தருளி வந்தார். உபன்யாஸத்தைத் துவக்கும் முன்னர் இறைவனைப் போற்றிடும் மங்கள சுலோகங்களை அவர் கூறுவார். மிகவும் அர்த்தம் பொதிந்த, பக்தி மணம் கமழும் அந்த அழகிய சுலோகங்களை ஆசார்யாள் கூறக் கேட்பதில் பக்தர்கள் பெரு மகிழ்ச்சி அடைந்து வந்தனர். இதற்குச் சில உதாரணங்களாக பின்வரும் சுலோகங்களைக் கூறலாம்.

விசுத்த ஞான தேஹாய த்ரிவேதீ திவ்ய சக்ஷுஷே |
ச்ரேய: ப்ராப்தி நிமித்தாய நமஸ்ஸோமார்த தாரிணே ||

{தூய அறிவினையே உடலாகக் கொண்டவரும், வேதங்களின் ஸாரத்தினை அறிந்தவரும், விசேஷமான (மூன்றாவது) கண்ணை உடையவரும், முக்திக்குக் காரணமானவரும் சந்திரனைத் தரித்த-வருமான சிவனுக்கு நமஸ்காரம்.}

நமாமி யாமினீ நாதலேகாலங்க்ருதகுந்தலாம் |
பவானீம் பவ ஸந்தாப நிர்வாபணஸுதாநதீம் ||

{பிறைச் சந்திரனைச் சூடிய கூந்தலை உடையவளும், ஸம்ஸார தாபத்தினைத் தீர்க்கும் அமுத நதியானவளும், சிவனின் பத்தினியும் ஆன பவானியை வணங்குகிறேன்.}

பிறகு உபன்யாசத்தினை முடித்ததும் "ஹர நம: பார்வதீபதயே | ஹர ஹர மஹாதேவ || ஜானகீகாந்தஸ்மரணம் | ஜய ஜய ராம ராம ||" என்று கூறிடுவார். அங்கு திரண்டிருக்கும் ஜனங்களும் அதில் கலந்து கொள்வர். சில நேரங்களில், தம்முடைய உபன்யாஸத்தின் போதே ஆசார்யாள் கலிஸந்தரண உபநிஷத்து மந்திரமான "ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே | ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண, க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ||" எனும் இறைவனின் நாமங்களைத் தாம் உச்சரித்து, அங்கு கூடியுள்ளோரையும் தம்மைத் தொடர்ந்து சொல்லச் சொல்வார்.

இறைவனின் திருவடித் தாமரைகளில் மனம் நிலைக்கப் பெற்ற ஜகத்குருநாதர், தமது வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் தம்மை வழிநடத்திச் செல்லும் இறைவன், தமது பிரார்த்தனைகளை ஏற்று அவற்றை நிறைவேற்றி வைக்கிறான் என்னும் அசைக்கவியலா நம்பிக்கையுடனேயேதான் செயல்பட்டுக் கொண்டிருந்தார். பின்வரும் சம்பவமே இதற்கு சான்று.

ஒருமுறை ஆசார்யாள் சென்னையிலிருந்து திருப்பதிக்கு காரில் சென்று கொண்டிருந்தார். ஸ்ரீ (பின்னி) சுப்பாராவ் மற்றும் ஸ்ரீ நஞ்சுண்டராவ் ஆகியோரும் அவருடன் பயணித்தனர். ஓர் இடத்தில், சாலையின் ஒருபுறம் நிறைந்து கிடந்த சேற்றினில் காரின் சக்கரங்கள் சிக்கிவிட, கார் நின்றுவிட்டது. ஆசார்யாளை காரினுள்ளேயே

இருக்குமாறு வேண்டிக்கொண்டு, மற்றவர்கள் இறங்கி காரினைத் தள்ளி சேற்றிலிருந்து வெளியே கொண்டுவர முயற்சித்தார்கள். ஆயினும், கார் நகரவேயில்லை. இறுதியில், தங்களது முயற்சி-களைக் கைவிட்ட அவர்கள் ஆசார்யாளிடம் வந்து, "எங்களால் முடிந்த அளவு முயற்சி செய்து பார்த்துவிட்டோம்; ஒன்றும் நடக்க-வில்லை. ஆகவே, ஆசார்யாள்தான் இது விஷயத்தில் எங்களுக்கு அருளிட வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டனர். அதைக் கேட்டுக்-கொண்ட ஆசார்யாள் தமது கண்களை மூடி சிறிது நேரம் தியானித்து விட்டு, பிறகு அவர்களைப் பார்த்து, "இப்போது சென்று முயற்சி செய்து பாருங்கள்" என்றார். அவர்களும் சென்று, காரினைத் தள்ள, மிகச் சுலபமாக கார் சேற்றினில் இருந்து வெளியே வந்துவிட்டது. அனைவருக்கும் பெரும் ஆச்சரியம் ஏற்பட்டது. இது எப்படி நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ள அனைவருக்குமே ஆவல் அதிகமாக இருந்ததால், ஸ்ரீ சுப்பாராவ் அவர்கள் ஆசார்யாளிடம் சென்று, மிகப் பணிவாக, அதைப் பற்றிக் கேட்டுக்கொண்டார். ஆசார்யாள் கூறியதாவது: "நான் ஹனுமத் பஞ்சரத்ன சுலோகங்களைக் கூறி, ஸ்ரீ ஆஞ்சநேயரிடம், உங்களுக்கு உதவிட வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். அவரும் அதை ஏற்றுக் கொண்டு அனுக்கிரஹித்தார்."

## ॥ अहन्ताममताहीनः ॥

## 9. அஹந்தா-மமதா-ஹீன:

(‘நான்’ எனும் அஹந்தையும் ‘எனது’ என்ற மமதையும் அற்றவர்)

பல வருடங்களுக்கு முன், ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹா-ஸ்வாமிகள் தமது விஜய யாத்திரையின் ஓர் அங்கமாக மேல்-மங்கலம் கிராமத்திற்கு விஜயம் செய்தார். அங்கு அவர் அருளிய உபன்யாசத்தில் தமது குருநாதரான ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் எங்ஙனம் ஒரு சிறிதும் அஹங்காரமோ மமகாரமோ அற்றவராகத் திகழ்ந்தார் என்பதற்குத்

தாமே கண்கூடாகக் கண்ட இரு சம்பவங்களை குருபக்தி மேலிடக் குறிப்பிட்டார். அவை:

“எனது குருநாதர் ஒரு சமயம் என்னிடம் கூறினார்: ‘ஸ்வாமிகளே, நாம் எந்த ஸ்தாபனத்தைச் சார்ந்திருக்கின்றோமோ அந்த ஸ்தாபனத்தின் முன்னேற்றத்திற்காகத்தான் பாடுபட வேண்டுமே தவிர, அதனால் நமக்கு மற்றவர்களிடமிருந்து மதிப்பும் மரியாதைகளும் கிடைக்கின்றனவா என்பதைப் பார்க்கக் கூடாது. அப்படியே கிடைத்தாலும், நாம் அவற்றை நமக்குக் கிடைத்ததாக எடுத்துக் கொள்ளாமல் நமது ஸ்தாபனத்திற்குக் கிடைத்தவையாகத்தான் அவற்றைக் கருதிட வேண்டும். நாம் இங்கே (ஸ்ரீ சாரதா பீடத்திற்கு) வந்திருப்பது சாரதா பரமேஸ்வரிக்கு சேவை செய்வதற்காகவே. அதனால், சாரதா பரமேஸ்வரிக்கு நம்மால் எவ்வளவு சேவை ஆகியிருக்கின்றது என்றுதான் கேட்டுக்கொள்ள வேண்டுமே தவிர, நமக்கு எவ்வளவு ஸ்வாகத பத்திரிகைகள் (வரவேற்பு மடல்கள்) கிடைத்துள்ளன என்று கேட்டுக்கொள்ளக் கூடாது.’ எனது குருநாதர் என்றுமே ‘வ்யக்தி கௌரவ’த்திற்கு (தனி நபர் பெருமைக்கு) இடம் கொடுத்ததில்லை.

“சில வருடங்களுக்கு முன்னால் ஆசார்யாளின் கட்டளைக்கிணங்க நான் ஆந்திர பிரதேச மாநிலத்தில் விஜய யாத்திரை செய்தேன். இம்மாநிலத்தில் எந்த ஓர் இடத்திலும் சிருங்கேரி மடத்தினால் நடத்தப்படும் சாஸ்திர பாட சாலை ஒன்றுகூட இல்லையே எனும் வருத்தம் எனக்கு இருந்து வந்தது. ஆகையால், இந்த விஜய யாத்திரையின் போது ஹைதராபாத் நகரில் தர்க்கம் மற்றும் வேதாந்தம் ஆகிய சாஸ்திரங்களைக் கற்பிக்கும் பாடசாலை ஒன்றினைத் துவக்கி வைத்தேன். அதற்கு ‘ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த சாஸ்திர ஸம்வர்தினி பாடசாலை’ என்றும் பெயர் வைத்தேன். விஜய யாத்திரை முடிந்து சிருங்கேரிக்குத் திரும்பியதும் ஆசார்யாளிடம் அந்த சாஸ்திர பாடசாலையைப் பற்றியும் அதற்கு ஆசார்யாளின் பெயரை வைத்திருப்பது பற்றியும் நான் குறிப்பிட்டேன். உடனே ஆசார்யாள், ‘அந்தப் பெயரில் அப்படி என்ன இருக்கிறது ஸ்வாமிகளே?’ என்று கேட்டார். நானும், ‘அங்கு வருபவர்களுக்கு ஆசார்யாளின் ஸ்மரணை (நினைவு) உண்டாகிட வேண்டும் என்பதற்காக வைத்தேன்’ என்று கூறினேன். ஆசார்யாளோ, ‘பாடசாலைக்கு

அப்பெயரை வைக்க வேண்டும் என்பதில் எனக்கு எவ்வித தாத்பர்யமும் இல்லை ஸ்வாமிகளே' என்று கூறிவிட்டார்!''

முதல் சம்பவத்தின் மூலம் எப்படித் தமது குருநாதருக்கு அஹங்காரமே ('தான்' எனும் எண்ணமே) இல்லாதிருந்தது என்பதை மிக அழகாக எடுத்துரைக்கின்ற ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹா-ஸ்வாமிகள், இரண்டாவது சம்பவத்தின் மூலம் தமது குருநாதருக்கு எப்படி தம்முடைய பெயரில்கூட என்னுடையது எனும் உணர்வு இல்லாதிருந்தது என்பதைத் தெளிவாக்குகின்றார்.

சென்னையில் 03-12-2000 அன்று நடைபெற்ற ஆசார்யாளின் ஜெயந்தி விழாவின் போது உரையாற்றிய ஸ்ரீ விஸ்வேஸ்வரா அவர்கள் ஒரு சம்பவத்தை நினைவுகூர்ந்தார்: ''மங்களூரில் நான் ஆசார்யாளை தரிசித்த ஒரு சமயம் அவரிடம் கேட்டேன்: 'ஸ்வாமிகளே, தங்களை நாடி வருபவர்களின் சந்தேகங்களைத் தாங்கள் தீர்த்துவைத்திடும் விதமே அலாதிதான்! உடனுக்குடன் மிகச் சரியான விளக்கங்களைக் கொடுத்துவிடுகின்றீர்கள். சில நேரங்களில், அவர்கள் கேட்பதற்கு முன்னறே அவர்களது சந்தேகங்களுக்கு விடையினை அளித்து-விடுகின்றீர்களே. இது தங்களுக்கு எப்படி இயல்கின்றது?' என்னுடைய கேள்வியினைக் கேட்டு புன்னகைத்த ஆசார்யாள் கூறினார்: 'இதில் என்னுடைய திறமை என்னப்பா இருக்கின்றது? எனது குருநாதர் (ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) அவரது தவ வலிமையனைத்தையும் என் மேல் பொழிந்திருக்கின்றார். இங்கு வருகின்ற பக்தர்களுக்கு கிடைத்திடும் அனைத்தும் அவரது அருளினால்தானே தவிர, என்னாலல்ல. இங்கு தரிசனம் செய்ய வருபவர்களுக்கு நான் அளித்திடும் பிரஸாதத்தினையும் என்னுடைய குருவின் அருட்பிரஸாதமாகக் கருதியே நான் கொடுத்துவருகிறேன்.''' இறைவனுக்கொப்பான சக்திகளனைத்தையும் பெற்றிருந்த போதும், எவருக்கும் எதனையும் வழங்கிடும் தவ வலிமையினைத் தாமே பெற்றிருந்தும், அதனைப் பற்றிச் சிறிதும் அஹந்தையற்றவராய், நடப்பது அனைத்தும் தமது குருவின் அருளால்தான் எனும் பக்தி பாவனையுடன் ஆசார்யாள் திகழ்ந்து வந்ததை இந்த சம்பவம் நமக்கு விளக்குகின்றது.

தாம் ஒரு பிரசித்தி பெற்ற பீடத்தின் அதிபதி; தமக்கு சேவை செய்திட ஆயிரக்கணக்கில் ஜனங்கள் இருக்கின்றார்கள் என்ற மாதிரியான அஹந்தை, மமதைக்கெல்லாம் ஆசார்யாள் ஒருபோதும் இடம் கொடுத்ததில்லை. மிகச் சாதாரணமான ஒரு மனிதராகவே தமது வாழ்க்கையினை நடத்திக்கொண்டுவந்தார். ஒரு முறை, தர்மாத்மா ஸ்ரீ வைத்தியசுப்பிரமணிய அய்யர் அவர்களின் புதல்வரான ஸ்ரீ வி.வி. ஜெயராமன் பின்வரும் சம்பவத்தினைக் குறிப்பிட்டார்: "1977ம் வருடம் ஆசார்யாளின் ஷஷ்டியப்தபூர்த்தி விழா சென்னையில் நடைபெற்றது. அச்சமயம் சென்னைக்கு வருகை தந்திருந்த ஆசார்யாள் எங்கள் இல்லத்தின் மாடியில் தங்கியிருந்தார். ஒரு நாள் இரவு, சுமார் 11 மணி அளவில், மாடியில் பல இடங்களில் எரிந்துகொண்டிருந்த மின்விளக்குகளை அணைப்பதற்காக நான் மாடிக்குச் சென்றேன். அங்கு இடுப்பில் வெறும் துண்டு ஒன்றை மட்டும் கட்டிக்கொண்டிருந்த யாரோ ஒருவர் ஏற்கெனவே அங்கு விளக்குகளை அணைத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். அவரது அருகில் சென்ற போது, அது ஆசார்யாள்தான் என்று அறிந்து விக்கித்துப்போன நான், 'இதைப் போய் ஆசார்யாள் செய்வதா' என்று பதறியவாறே, 'நான் அணைத்துவிடுகிறேன்' என்று அவரிடம் கூறினேன். ஆசார்யாளோ, 'இதில் என்னப்பா சிரமம் இருக்கிறது? பரவாயில்லை. நானே செய்துவிடுகிறேன். எதற்காக இத்தனை விளக்குகளும் தேவையே இல்லாமல் எரிந்து, வீணாக மின்சாரமும், பணமும் செலவாக வேண்டும்? அதனால் இவற்றையெல்லாம் அணைத்து விடலாமே என்று இங்கு வந்தேன்' என்று கூறியவாறே, வெளிப்புறத்தில் உள்ள வராந்தாவிற்குச் சென்று, அங்கு எரிந்து-கொண்டிருந்த விளக்குக்களையும் அணைக்கத் துவங்கினார்."

## ॥ अगजापतिभक्तिमान् ॥

# 10. அகஜாபதி-பக்திமான்

(பார்வதியின் பதியிடம் பக்தி கொண்டவர்)

அகஜா என்பது பார்வதி தேவியின் மற்றொரு பெயர். அவரது பதி (நாயகர்) பரமசிவன். ஆக, அகஜாபதி என்பது பார்வதியின் நாயகனான பரமசிவனைக் குறிக்கின்றது. தமது குருநாதருக்கு இருந்த சிவபக்தியின் மேன்மையை இந்த நாமத்தின் மூலமாக ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் வெளிக்காட்டுகின்றார்.

ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளுக்கு அவருடைய குருநாதர் 1931ல் ஸன்யாஸம் வழங்கிய அன்றைய இரவே அவருடைய கனவில் பார்வதியின் நாயகனான பரமேஸ்வரன் தரிசனம் அளித்ததுமல்லாது அன்றைய இரவு தொடங்கி தொடர்ச்சியாக ஏழு இரவுகளிலும் தரிசனம் அளித்து ஆசார்யாளுக்கு யோக பாடங்களைக் கற்பித்த அற்புதமான விஷயங்களை ‘‘யோகமும் ஞானமும் ஜீவன்முக்தியும்’’ எனும் புத்தகம் விவரிக்கின்றது. பகவானே தோன்றி யோக பாடங்களைக் கற்றுக்கொடுப்பதென்றால் ஆசார்யாளின் பக்தி எந்த அளவிற்கு உயர்ந்திருந்தது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

ஆசார்யாளுக்கு 18 வயது முடிந்திருந்த சமயம். ஒரு நாள் (05-12-1935) மாலையில் தமது தியானப் பயிற்சிக்கென வழக்கமாக தாம் போய் வந்து கொண்டிருந்த குன்றிற்கு ஆசார்யாள் கிளம்பினார். என்றுமில்லாத வழக்கமாக அன்றைய தினம் அவருடைய குருநாதர் அவரை அழைத்தார். குருவின் முன் நமஸ்கரித்த ஆசார்யாளின் தலையில் தமது கரங்களை வைத்தபடியே மும்முறை பஞ்சாக்ஷரீ மந்திரத்தினை உச்சரித்த குருநாதர், பிறகு ஆசார்யாளை ஆசீர்வதித்து, குன்றிற்கு அனுப்பிவைத்தார். அன்றைய தினம் ஆசார்யாளது மனது சிவபெருமானைக் குறித்த தியானத்தில் மிக ஆழ்ந்து ஈடுபட்டது. ஒரு கட்டத்தில் நேரடியாகவே ஆசார்யாளுக்குக் காட்சி கொடுத்தார் சிவபெருமான். அந்த மெய்சிலிர்க்க வைத்த தருணத்தினை பிற்காலத்தில் தமது சீடர் ஒருவரிடம் ஆசார்யாள்

விவரித்ததாவது: ‘‘எனது ஹ்ருதய கமலத்தில், இறைவன் அம்பாள் சமேதராக வீற்றிருப்பது தெளிவாகத் தெரிந்தது. பிறகு இறைவன் உள்ளேயிருந்து வெளிவந்து, தனது தோற்றத்தினைப் பெரிதாக்கிக் கொள்வதுபோல் தெரிந்தது. நீண்டதாகவும், ஆழ்ந்ததாகவும் ‘ஓம்’ எனும் உச்சாடணம் செவிகளில் ஒலித்தது. பிறகு நான் சிவபெருமானை மிகத் தெளிவாக, எனக்கு முன்னால் நின்று என்னை நோக்கிக் கொண்டிருப்பதாகக் கண்டேன். ஓ, எத்தகைய அற்புதமான தரிசனம் அது! எனது கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பொழிந்தது; மயிர்க்கூச்சல் ஏற்பட்டது. பகவானின் உதடுகள் அசைந்தன. அவரது மிக இனிமையான குரலை நான் கேட்டேன்: ‘குழந்தாய், நாளையிலிருந்து இவ்விடத்தில் உனது மனதை வடிவமற்ற பரம்பொருளில் இருத்துவாயாக. சீக்கிரமே நீ பிரம்மத்தில் நிலைபெற்று விடுவாய்.’ இதுவே பகவானின் சொற்கள். பிறகு சிவபெருமான் எனது தலையின் மீது தமது கரத்தினை வைத்து என்னை ஆசீர்வதித்தருளிவிட்டு மறைந்தார். மிகக் கடையேனும், பக்தியற்றவனுமான எனக்குக்கூட அளவு கடந்து அருள்புரிந்த இறைவன்தான் எவ்வளவு கருணைசாலி.’’

பரமேஸ்வரனால் தூண்டப்பட்டவராக, தமது குருநாதருடைய பரிபூரண ஆசிகளுடன் ஜீவ-பிரம்ம ஐக்கிய விசாரத்தினில் மனதைச் செலுத்தத் துவங்கிய ஆசார்யாள், அதற்கு வழிகாட்டியாக தைத்திரீய உபநிஷத்தின் வாக்கியங்கள் சிலவற்றின் தாத்பர்யத்தினை எடுத்துக்கொண்டார். இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், அதற்கு முன் தைத்திரீய உபநிஷத்தின் பாஷ்ய பாடங்கள் எதனையும் அவர் படித்ததில்லை. ஆயினும், எதனால் தமக்கு தைத்திரீய உபநிஷத்தின் மந்திரங்களை மட்டும் ஆதாரமாக வைத்து விசாரத்தினை துவக்கிட வேண்டும் எனத் தோன்றியது என்பதற்கு அவரே பிற்காலத்தில் விளக்கமும் அளித்தார்: ‘‘அது போல் தூண்டுதல் ஏற்பட்டதை உணர்ந்த நான் பிறகு அதன்படியே வழி நடத்தப்பட்டேன். ஸம்ஸ்க்ருதத்தில் எனக்கு நன்கு பரிச்சயம் இருந்த போதிலும், அச்சமயத்தில் உபநிஷத்தின் போதனைகளின் அர்த்தங்களையும், உட்கருத்துக்களையும் இறைவனின் அருளால்தான் சரியாகப் புரிந்துகொண்டேன்.’’ அதன்

பிறகு, ஒரு வார காலத்தில் ஆசார்யாள் பிரம்ம ஞானத்தினை அடைந்து ஜீவன்முக்தரானார். எதையும் எதிர்பாராது பரமேஸ்வரனிடம் பக்தி செலுத்துபவருக்குக் கைவல்ய சித்தி உண்டாகின்றது என்பதற்கு ஆசார்யாளின் சிவபக்தி அனுபவங்களே சிறந்த எடுத்துக்காட்டு அல்லவா!

ஒரு கட்டத்தில், பிரம்ம சாக்ஷாத்காரத்தை அடைந்த ஆசார்யாளின் மனதோ நிர்விகல்ப ஸமாதியில் ஆழ்ந்து விட, இப்போது எழுப்பப்படாவிட்டால் இனி யாராலுமே அவரை எழுப்ப முடியாது போய்விடும் என்றதொரு நிலையே ஏற்பட்டுவிட்டது. ஆசார்யாளின் இருப்பு உலகிற்கு மிகவும் அவசியம் என்பதை அறிந்திருந்த சிவபெருமான் உடனடியாக ஆசார்யாளின் குருநாதரான ஸ்ரீ சந்திர-சேகர பாரதீ மஹாஸ்வாமிகளுக்கு பிரேரணை மூலமாக விஷயத்தை உணர்த்தியருளினார். ஆசார்யாள் இருக்கும் அறைக்கு விரைந்த குருநாதர், தமது தெய்வீகச் சீடரின் திருச்செவியில் ப்ரணவத்தை உச்சரித்து அவரை ஆழ்ந்த தியான நிலையினின்று இறங்கிடச் செய்தார். விழித்திட்ட ஆசார்யாளிடம் அவரது குருநாதர், ''மீண்டும் ஸமாதிக்குச் செல்வதை கவனத்துடன் தவிர்த்துவிட்டு, ஸ்னானம் செய்து, ஆஹ்னீகத்தை முடித்துக் கொண்டு என்னிடம் வாருங்கள்'' எனக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். குருவின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்ட ஆசார்யாள், அவர் சொன்னதைச் செய்துவிட்டு அவரிடம் சென்ற சமயம், அவர் ஆசார்யாளிடம், ''உங்களுடைய ஸமாதியின் நிலையானது நீங்களாகவே அதிலிருந்து எழ முடியாத அளவிற்கு ஆழமாகப் போய்விட்டது என்பதை நேற்று இரவு பகவான் எனக்குத் தெளிவாகத் தெரியப்படுத்தினார். எழுப்பப்பட்டாலொழிய, இவ்வுடல் மறையும் வரை நீங்கள் ஸமாதியில்தான் இருந்திருப்பீர்கள். பகவானின் பிரேரணையின் உந்துதலால் இரவு முடிவதற்குள் நான் உங்களது அறைக்கு வந்தேன்.... உடலில் அசைவேதும் இல்லாது, நீங்கள் ஸமாதியில் ஆழ்ந்தவாறு அமர்ந்திருந்தீர்கள். மிகவும் சிரமப்பட்டுத்தான் உங்களை எழுப்புவதில் வெற்றியடைந்தேன்'' எனக் கூறினார். ஆக, சிவமயமாகவே ஆகி, உடலைத் துறக்கவிருந்த ஆசார்ய ஸ்வாமிகளின் மஹிமைகளும், வழிகாட்டுதலும் உலகினர்க்குக் கிட்டிட

வேண்டும் என்பதால் அகஜாபதியான பரமேஸ்வரன் அதற்கும் அருள் புரிந்திருப்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

ஆசார்யாளது சிவ பக்தியின் மஹிமை பற்பலத் தருணங்களில் நன்கு வெளிப்பட்டமையை பக்தர்கள் பலர் கண்டு அனுபவித்திருக்கின்றனர். ஒருமுறை, ஆசார்யாள் தமது யாத்திரையின் ஓர் அங்கமாக, வத்திராயிருப்பு எனும் ஊரினில் தங்கியிருந்தார். ஊருக்கு வெளியே மலை ஒன்று இருந்தது. மலையின் மேல் ஒரு குகை இருப்பதாகவும், அதனுள் சிவலிங்கம் ஒன்று உண்டு என்றும், ஆயினும், அங்கு எவரும் செல்லுவதில்லை என்றும், ஏனென்றால் சென்றவர் எவரும் உயிருடன் திரும்பி வந்ததில்லை என்றும் ஒரு விஷயம் உலவி வருவதை ஆசார்யாள் அவ்வூரைச் சேர்ந்த சிலர் கூறக் கேட்டார். உடனே, அவர், "பகவான் பரமசிவனைப் பற்றி எதற்காக இப்படிப் பேசிட வேண்டும்? அவர் ஒன்றும் கொலையாளி அல்ல. அவர் கருணையே வடிவானவர்" என்று கூறியதுடன், "நான் அந்த குகைக்குச் செல்லப் போகிறேன்" என்றும் கூறிவிட்டார். மறு நாள் காலையில், தாம் கூறியபடியே, மலையின் மேல் இருந்த அந்த குகைக்குச் சென்று, லிங்கத்தினை வழிபட்டுவிட்டுத் திரும்பினார்."

தமது முதலாம் அகில இந்திய யாத்திரையின் போது ஆசார்யாள் கேதார்நாத்திற்கு சென்றார். கௌரிகுண்டத்திலிருந்து மலைப் பாதையினில் ஆசார்யாள் வேகமாக ஏறிச் செல்லத் துவங்க, அவரைத் தொடர்ந்து பக்தர்கள் பலரும் சென்றுகொண்டிருந்தனர். அவர்களுள் சிலருக்கு, அது மிகக் கடினமான பாதையென்பதால், மற்றவர்களைத் தொடர்ந்து விரைவாக ஏறிட இயலவில்லை. இதற்குள் இருட்டியும் விட்டதால் அவர்களுக்கு இன்னும் சிரமமாகப் போய்விட்டது. இச்சமயம், முன்பாகப் போய்க்கொண்டிருந்த ஆசார்யாள், தம்முடன் வந்துகொண்டிருந்த மற்றவர்களிடம் சற்று பின் தங்கி வந்து கொண்டிருந்தவர்கள் தொடர்ந்து வந்து-கொண்டிருக்கின்றார்களா எனக் கேட்டார். "இல்லை, அவர்களைக் காணவில்லை, பாதை தெரியவில்லை போலிருக்கின்றது" என அவர்கள் பதிலளித்தனர். ஆசார்யாள் அவர்களிடம், "அவர்களுடன் துணைக்கு யாரேனும் வந்து கொண்டிருக்கிறார்களா?" எனக் கேட்டார். அப்போது, கூட்டத்திலிருந்த எவரோ ஒருவர், "அவர்களுக்கு இப்போது

பகவான்தான் துணை'' எனப் பதிலளித்தார். அதைக் கேட்ட ஆசார்யாள், தமது குரலில் ஓர் உறுதி தொணிக்க, உரத்துக் கூறினார்: ''ஆமாம், அவர்களுக்கு இப்போது பகவானேதான் துணை.'' அவர் அதைக் கூறி முடித்ததுதான் தாமதம், வானத்தில் மிகவும் பிரகாசமான மின்னல் கீற்றுக்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றத் துவங்கின. அவற்றின் ஒளியில், இருண்டு கிடந்த அந்த மலைப் பகுதி முழுவதும் வெளிச்சம் ஏற்பட, வழி தெரியாது திகைத்து நின்றிட்ட மற்றவர்கள் அந்த வெளிச்சத்தின் உதவியுடன், இப்போது சரியான வழியில் ஏறி முன்னால் சென்று கொண்டிருந்த குழுவினை அடைந்து விட்டார்கள். பக்தியில் பூரணத்துவத்தினை அடைந்திட்டவரது வார்த்தைகளை பகவான் உடனடியாக நிறைவேற்றி வைப்பான் என்பதற்கு இதுவே சான்று!

ஆசார்யாளின் ஆழ்ந்த சிவ பக்தியானது அனைவருக்கும் தலை சிறந்ததொரு எடுத்துக்காட்டாக இருந்ததுடன், அனைவருள்ளும் இறைவனின் விஷயத்தில் தனித்ததொரு ஈடுபாட்டினையும் வளரச்-செய்வதாகவே விளங்கி வந்தது.

## ॥ आगमार्थपरिज्ञाता ॥

# 11. ஆகமார்த்த-பரிக்ஞாதா

(ஆகமத்தின் பொருளை நன்கு அறிந்தவர்)

சிவபெருமானால் பார்வதிக்கு உரைக்கப்பட்டு, மஹாவிஷ்ணுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஷயங்களின் தொகுப்பு ஆகமம் என அழைக்-கப்படுகின்றது. வேதங்களே இதன் அடிப்படை.

பரமசிவனால் பார்வதி தேவிக்குக் கூறியருளப்பட்ட ஆகம விஷயங்கள் ஏழு வகையான அம்சங்களைக் கொண்டவை என சான்றோர்கள் கூறுவதாக வாராஹி தந்த்ரம் போன்ற தந்த்ர சாஸ்திர நூட்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. உற்பத்தி, ஸம்ஹாரம், தெய்வங்களின் வழிபாடுகள், வேண்டிடும் அனைத்தையும்

அடைவதற்கான வழிமுறைகள், (யாகங்களின் போது, உரிய திரவியங்களை அக்னியில் அர்ப்பணம் செய்யும் முன்னர்) மீண்டும் மீண்டும் உச்சரிக்கப்பட வேண்டிய மந்திரங்கள், ஆறு வகை கர்ம ஸாதனங்கள் மற்றும் நான்கு வகை தியான ஸாதனங்கள் ஆகிய இந்த ஏழும் ஆகமத்தின் அம்சங்களாகும். சாந்தி, வசீகரணம், ஸ்தம்பனம், வித்வேஷணம், உச்சாடனம், மாரணம் ஆகிய இவையே ஆறுவகையான கர்ம ஸாதனங்கள் எனப்படுகின்றன. இதே போல், குண்டலினி யோகம், சகுண தியானம் (இறை வடிவங்களில் மற்றும் நாத வடிவங்களில்), நிர்குண தியானம் மற்றும் ஸமாதி ஆகிய இவையே நால்வகை தியான ஸாதனங்கள் எனப்படுகின்றன.

ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் இந்த ஆகம சாஸ்திர விஷயங்களின் அர்த்தம் மற்றும் தாத்பர்யம் இவற்றினை நன்கு அறிந்தவர் என்பதை "ஆகமார்த்த பரிக்ஞாதா" எனும் இந்த திருநாமம் அறிவிக்கின்றது. ஆலய நிர்மாணம், யாகசாலை விதிகள், ஆலய பூஜை விதிகள் போன்ற பல ஆகம சாஸ்திர விதிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஆசார்யாளின் ஆலோசனைகளை வேண்டி பற்பல ஆலயங்களிலிருந்து நிர்வாகிகளும் பக்தர்களும் அவ்வப்போது ஆசார்யாளிடம் வருவதுண்டு. ஆசார்யாளும் அவர்களுக்கு உரிய விதங்களில் ஆலோசனைகளை அளித்தருள்வார்.

சிவமொக்காவைச் சேர்ந்த பக்தரான அமரர் வெங்கடராம சாஸ்திரி அவர்கள் ஒரு முறை சிருங்கேரிக்கு வந்து, ஆசார்யாளை தரிசித்து, சிவமொக்காவில் முதல் முறையாக லக்ஷ மோதக யாகம் ஒன்றினை நடத்திட இருப்பது பற்றி ஆசார்யாளிடம் தெரிவித்து அவரது ஆசீர்வாதத்தினை வேண்டிக் கொண்டார். உடனே ஆசார்யாள் வேடிக்கையாக, தமது குரலில் ஆட்சேபணைத் தொணியினைக் காட்டியவராய், "ஓஹோ, முதன் முதலாக இவ்வளவு பெரிய யாகத்தை செய்யப்போகின்றீர்கள். ஆசீர்வாதம் மட்டும் வேண்டும் உங்களுக்கு. ஆனால், அதில் கலந்துகொள்ள வரும்படி என்னைக் கூப்பிடமாட்டீர்கள். அப்படித்தானே? ஆனாலும் நான் வரத்தான் போகிறேன்" என்று சொல்ல, அந்தப் பக்தருக்கு அளவுகடந்த சந்தோஷம் உண்டாகிவிட்டது. முன்னதாகவே சிவமொக்காவிற்கு விஜயம் செய்த ஆசார்யாள், யாகசாலை அமைப்பினையும் ஹோம

குண்டங்கள் மற்றும் இதர விஷயங்களையும் மிகுந்த ஆர்வத்துடனும் கவனத்துடனும் பார்வையிட்டு, அவற்றின் விஷயத்தில் அந்த விழாவின் குழுவினருக்கு பற்பல திருத்தங்களையும் மற்றும் அரிய ஆலோசனைகளையும் கூறியருளினார். விளைவு? யாகம் மிக நல்ல முறையில் நடந்து முடிந்தது.

ஒரு சமயம், ஆலயம் ஒன்றினில் நடைபெறும் வழிபாடுகள் அனைத்தும் ஆகம விதிகளின்படி சரியாக நடந்து வருகின்றனவா என்பதில் அந்த ஆலய நிர்வாகிகள் சிலருக்கு சந்தேகம் வந்துவிட்டது. ஏனென்றால், அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையினில் ஏற்பட்ட சில துயரச் சம்பவங்களை அவர்கள் அந்த ஆலயத்தில் நடைபெறும் பூஜை முறைகளில் ஏதோ தவறுதல் நடக்கின்றது என்றும், அவற்றை அந்த ஆலயத்தின் நிர்வாகிகள் என்ற முறையில் தாங்கள் கண்டறிந்து சரி செய்யாததே அந்த துயர சம்பவங்களுக்குக் காரணம் என்றும் எண்ணிக் கொண்டிருந்தனர். இந்த விஷயம் ஆசார்யாளுக்குச் சென்றது. ஆசார்யாள் அவர்களைப் பார்த்து ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்டார்: “இந்த ஆலயத்தைக் கட்டி, கும்பாபிஷேகம் செய்து, அங்கு வழிபாட்டினை ஆரம்பித்த பின்னர் இந்த ஆலயம் அமைந்துள்ள பகுதியில் வசித்து வரும் ஜனங்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கின்றதா அல்லது தாழ்ந்து விட்டதா?” அதற்கு, நிர்வாகிகள், “வாழ்க்கைத் தரம் மிக உயர்ந்ததாக மாறியிருக்கின்றது. அனைத்து மக்களும் செல்வச் செழிப்புடன் வாழ்கின்றனர்” என்று பதில் கூறினார்கள். “அப்படியானால், ஆலய வழிபாட்டு முறைகள் அனைத்தும் ஆகம விதிகளுக்கு உட்பட்டு மிகச் சரியாகவே நடந்துவருகின்றன என்றுதான் அர்த்தம். தனிப்பட்ட சிலரின் சொந்த வாழ்க்கையில் உண்டாகும் துயரச் சம்பவங்களை ஆலய விஷயத்துடன் போட்டுக் குழப்பிக் கொள்ளவேண்டிய அவசியமே இல்லை” என்று கூறி அவர்களது குழப்பத்தினைத் தீர்த்து வைத்தார் ஆசார்யாள்.

பரம ஆஞ்சநேய பக்தரான ஸ்ரீ ரமணி அவர்கள் பின்வரும் சம்பவத்தினைக் குறிப்பிட்டார். சென்னை நங்கநல்லூரில் ஓர் ஆலயத்தினில் பிரதிஷ்டை செய்வதற்கென உயரமான அளவில் ஆஞ்சநேய ஸ்வாமியின் விக்கிரஹம் ஒன்றினை வடிவமைத்தோம்.

கும்பாபிஷேகத்திற்கும் தேதி குறித்துவிட்டு, நிகழ்ச்சிகள் அனைத்தும் இனிதே நடக்க ஆசார்யாளின் ஆசீர்வாதத்தினை வேண்டுவதற்காக, சிருங்கேரிக்குச் சென்றோம். விஷயத்தினைக் கேட்டு, சந்தோஷப்பட்ட ஜகத்குரு எங்களிடம், "இந்த விக்கிரஹத்தினை ஆலயத்தின் எப்பகுதியில் பிரதிஷ்டை செய்யப் போகின்றீர்கள்?" என்று கேட்டார். அதற்கு நாங்கள், "ஸ்ரீ ராமரின் சன்னிதிக்கு முன்னால் பகவான் ஸ்ரீ ராமரை நோக்கி வணங்கியவாறு அவர் இருப்பது போல பிரதிஷ்டை செய்யப்போகிறோம்" எனக் கூறினோம். "பகவான் ராமருக்கு முன்னாலா? ஆஞ்சநேயரின் கைகள் அவருடைய பயபக்தியைக் காட்டிடும் வண்ணம் கூப்பியவாறு இருக்கின்றன. ஆனால், அவரது வாலோ அவரது தலைக்கு மேலாக உயர்ந்திருக்கின்றதே? ராமருக்கு முன்னால் நிற்கும் போது தனது வாலை ஓரளவிற்குத் தாழ்த்தி வைத்தவாறுதானே ஆஞ்சநேயர் நின்றிருந்திருப்பார்? இப்படி வாலின் நுனி தலைக்கு மேலாகத் தெரிகின்றபடியே விக்கிரஹத்தை பிரதிஷ்டை செய்யவேண்டுமானால், நீங்கள் ஏன் அவரை பகவான் ராமருக்கு (முன்னால் இருப்பது போல் வைக்காமல்) அருகில் இருப்பது போல் வைத்துப் பிரதிஷ்டை செய்யக் கூடாது?" என்று கேட்டார் ஆசார்யாள். அதற்கு நான், "பகவான் ஆஞ்சநேயரின் விக்கிரஹத்தினை ஸ்ரீ ராமரின் சன்னிதிக்குள் வைத்திட இட வசதி பற்றாது" எனப் பதிலளித்தேன். அதற்கு ஆசார்யாள் பதில் ஏதும் கூறவில்லை. பிறகு ஊர் திரும்பிய நாங்கள், 'இட வசதி பற்றாது என்று நாம் கூறிய பின் ஆசார்யாள் ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, நாம் ஏற்கெனவே திட்டமிட்டபடியே பிரதிஷ்டை செய்துவிடுவோம். கும்பாபிஷேகத்திற்கும் தேதி குறித்துவிட்டதால், இப்போது இந்த விஷயத்தினில் மாற்றம் எதுவும் செய்திடவும் கால அவகாசம் இல்லை' என முடிவு செய்தோம். பிற்பாடு, விக்கிரஹத்தினை சிற்பியின் இடத்திலிருந்து கோயிலுக்கு லாரியில் வைத்து எடுத்து வரும் சமயத்தில், ஓரிடத்தில், திடீரென்று குரங்கு ஒன்று லாரியின் முன்னால் குதித்தது. குரங்கின் மேல் மோதிவிடாமல் இருப்பதற்காக லாரியின் டிரைவர் பிரேக்கினை அழுத்திட, அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் அந்த ஆஞ்சநேயர் விக்கிரஹத்தின் வாலானது அது கிளம்பும் இடத்திலிருந்து சற்று தள்ளி அப்படியே உடைந்து விட்டது. இதைக் கண்ட எங்களுக்குப் பெரும் குழப்பம்

உண்டாகிவிட்டது. சிற்பியை அழைத்து, மீதமுள்ள வால் பகுதியில் சில மாற்றங்களை உடனடியாகச் செய்யவைத்து, கும்பாபி-ஷேகத்தினை முடித்தோம். மாற்றம் செய்யப்பட்ட வாலின் அளவோ இப்போது ஆஞ்சநேயரின் தலைக்கு மேல் இல்லாது, தாழ்ந்தே அமைந்துவிட்டது. அந்த வால் எப்படி இருந்திட வேண்டும் என ஆசார்யாள் நினைத்தாரோ, அது தானாகவே, நாங்கள் யாரும் எதிர்பாராத வகையினில் பலித்துவிட்டது!"

## ॥ आश्रिताखिलरक्षकः ॥

# 12. ஆச்ரிதாகில-ரக்ஷக:

(தஞ்சம் அடைந்தோர் அனைவரையும் காப்பாற்றுபவர்)

தம்மைச் சரணடைந்தோரைக் காப்பது இறைவனின் குண நலம். இறைவனுக்கொப்பான தமது குருநாதரிடமும் இதே குண நலம் அமைந்து காணப்பட்டதை இந்நாமத்தின் மூலம் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் உணர்த்துகின்றார்.

இதற்குத் தம்மையே ஓர் உதாரணமாக ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் குறிப்பிட்டிருக்கின்றார்: "ஆசார்யாளின் பாதார விந்தங்களில் தஞ்சம் அடைந்த என்னை அவர் பெரும் கருணையுடன் தமது சீடனாக ஏற்றுக் கொண்டு ரக்ஷித்ததையே என் வாழ்க்கையில் நான் அடைந்த மிகப் பெரிய நன்மை எனக் கருதுகின்றேன். ஆசார்யாளிடம் சேர்ந்த பிறகு அடையப்பட வேண்டியது என எனக்கு வேறு எதுவுமே இருக்கவில்லை; எனக்கு என்னென்ன தேவைப்-பட்டதோ அனைத்தையும் ஆசார்யாளே அருளிவிட்டார்."

தம்மை நம்பி வந்த எவரையும் ஆசார்யாள் கைவிடாது ஏற்றுக்கொண்டு, அவர்களது குறைகளைத் தீர்த்தருளி வந்தார். பின்வரும் சம்பவங்கள் இதற்கு சான்று கூறுகின்றன.

மதுரை நகரில் ஆசார்யாள் முகாமிட்டிருந்த ஒரு தருணத்தில், ஆசார்யாளின் தரிசனத்திற்கு வந்த ஒரு பெண்மணி தனது மகளிற்கு வந்திருக்கும் விசித்திரமானதொரு மன நோய் பற்றி ஆசார்யாளிடம்

தெரிவித்து அழுதார். ஆசார்யாள் அந்த மாதுவிடம், ‘‘நீங்கள் தினமும் விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் செய்யத் துவங்குங்கள்’’ எனக் கூறினார். அந்தப் பெண்மணியும், ‘‘நான் தினமும் அதைச் செய்துகொண்டுதான் இருந்தேன். ஆனால் பலன்தான் ஒன்றும் இல்லை’’ என்றார். ‘‘இப்போது நான் உங்களுக்கு சொல்லியிருக்கிறேன். அதனைப் பாராயணம் செய்யத் துவங்குங்கள்’’ என்றார் ஆசார்யாள் ஆணித்தரமாக. மிகுந்த பக்தி சிரத்தையுடன் அதை அந்த மாது செயல்படுத்தத் துவங்கிய சில நாட்களிலேயே அவருடைய பெண்ணிற்குக் குணம் ஏற்படத் துவங்கிவிட்டது.

கணவரை இழந்து, சிறு வயது குழந்தைகளுடன் தவித்துக் கொண்டிருந்த பெண்மணி ஒருவர், இறந்த தமது கணவருக்கு காசி மற்றும் கயை ஆகிய இரு இடங்களில் பிண்டம் வைத்து காரியங்களைச் செய்யும்படி ஜோசியர்கள் கூறியதால் அங்கு செல்ல விரும்பினார். ஆனால், அந்த இடங்கள் தமக்குப் புதியவை என்பதாலும், தமக்குத் தெரிந்த எவரும் அவ்விடங்களில் இல்லாததாலும், செய்வதறியாது தவித்த அந்தப் பெண்மணி, ஆசார்யாளுக்கு கடிதம் எழுதித் தன் நிலைமையை விளக்கி ஆசார்யாள்தான் தனக்கு உதவிட வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். கடிதத்தைப் படித்து மனுமுருகிய ஜகத்குருநாதர், தமது உதவியாளரை அழைத்து, இப்பெண்மணி காசிக்கு வரப்போவதைக் காசியிலுள்ள சிருங்கேரி மடத்து மேலாளருக்குக் கடிதம் மூலம் தெரிவித்து, அவரே இரயில் நிலையத்திற்குச் சென்று அப்பெண்மணி மற்றும் அவரது குழந்தைகளை அழைத்து வரவேண்டும் என்றும், அவர்கள் அனைவரும் சிருங்கேரி மடத்திலேயே தங்குவதற்கு அனைத்து வசதிகளையும் இலவசமாகவே செய்து கொடுக்க வேண்டுமென்பதையும் தெரிவிக்கச் செய்தார். மேலும், காசி மற்றும் கயையில் அந்தப் பெண்மணி என்னென்ன கர்மாக்களைச் செய்ய வேண்டுமென்ற விவரங்களையும் அந்தக் கடிதத்தின் மூலமாகவே தெரியப்படுத்திய ஆசார்யாள், மடத்து மேலாளரே அவற்றிற்கும் ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார். முன்பின் தெரியாத இடங்களுக்குச் செல்கின்றோமே என்று பயந்துகொண்டே சென்ற அந்தப் பெண்மணியை ஆசார்யாளின்

அபயக் கரங்கள் காத்து நின்றன! சென்ற இடத்தில் கிடைத்த வரவேற்பையும், வசதிகளையும், எவ்வித சிரமமும் இன்றி நடைபெற்று முடிந்த அனைத்து கர்மாக்களையும் கண்டு திக்குமுக்காடிப் போனார் அந்தப் பெண்மணி.

பின்வரும் சம்பவம் ஒரு சமயம் ஆசார்யாள் மங்களூரின் அருகிலுள்ள கோட்டேகர் கிளை மடத்தில் தங்கியிருந்த போது நடைபெற்ற ஒன்று. ஒரு நாள் மதியம், தமது தனி அறையில் சீடர் ஒருவரிடம் ஒரு விஷயத்தினைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்த ஆசார்யாள் திடீரென எழுந்து சென்று அறையின் கதவைத் திறந்தார். சில கணங்களில், மிகப் பதட்டத்துடன் ஒருவர் உள்ளே வந்தார். யார் அவர் மற்றும் அவருக்கு என்ன வேண்டும் என ஆசார்யாள் அவரிடம் விசாரித்தார். "தயவுசெய்து காப்பாற்றுங்கள்" என்று குரல் நடுங்க கூறத் துவங்கிய அவர், மேற்கொண்டு பேச முடியாமல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார். உடனே ஆசார்யாள் அவரிடம், "உங்கள் மகன் விரைவில் குணமாகிவிடுவான். கவலைப்பட வேண்டாம்" எனக் கூறி, அவரைச் சற்று காத்திருக்கும்படிச் சைகையால் காண்பித்துவிட்டு, உள்ளே சென்று இரண்டு பெரிய முந்திரிப் பருப்பு பாக்கெட்டுகளையும், ஒரு பெரிய பாதாம் பருப்பு பாக்கெட்டையும் எடுத்துக் கொண்டுவந்து, அந்த மனிதரிடம் கொடுத்து, அவரிடம், "சில நாட்களுக்குப் பிறகு, இவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக தினமும் உங்களது பையனுக்கு சாப்பிடக் கொடுங்கள்" என்று கூறினார். மிகவும் பணிவுடன் அவற்றை பெற்றுக்கொண்ட அம்மனிதர், ஆசார்யாளிடம், "எனது மகன் இப்போது ஆஸ்பத்திரியில் இருக்கிறான். அவனுக்கு புற்று நோய் வந்திருப்பதாக மருத்துவர்கள் இன்று சொன்னார்கள்..." என்று தெரிவித்தார். "இல்லை, அவனுக்கு புற்றுநோயெல்லாம் ஒன்றும் இல்லை. ஆஸ்பத்திரியிலிருந்து விரைவில் வீட்டிற்குத் திரும்பப்போகும் அவன் அதன்பின் நலமுடன் இருப்பான்" என ஆசார்யாள் தீர்மானமாக அம்மனிதரிடம் தெரிவித்தார். கரங்களைக் கூப்பி ஆசார்யாளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொண்ட அம்மனிதர் அங்கிருந்து கிளம்பினார். மறுநாள் மாலையில், தமது மாலை நேர நடைப் பயிற்சினை முடித்து அறைக்குத் திரும்பும்

சமயம், ஆசார்யாள், முன் தினம் வந்திருந்த அந்நபர் மீண்டும் அங்கு வந்திருந்து, கூப்பிய கரங்களுடன் நிற்பதைக் கண்டு அவரை நோக்கி புன்னகைத்துவிட்டு, தமது அறைக்குச் சென்றார். சில நிமிடங்களில், முன் தினம் ஆசார்யாளுடன் அறையில் இருந்த சீடர் வெளியில் வர, அவரிடம் சென்ற அந்நபர் அவரிடம் கூறினார்: "நேற்று மாலை, இங்கிருந்து நான் ஆஸ்பத்திரிக்குச் சென்ற போது, மருத்துவர்கள் என்னிடம் வந்து 'ஒரு தவறு நடந்து விட்டது. மருத்துவ அறிக்கைகள் மாறி விட்டன. உங்கள் மகனுக்கு புற்றுநோய் இல்லை. இன்னும் இரண்டு நாட்களில் அவன் வீட்டிற்குத் திரும்பிவிடலாம். அதன் பின், அவனுக்கு சத்தான உணவினைக் கொடுத்து வாருங்கள்' எனத் தெரிவித்தனர். தயவுசெய்து இவ்விஷயத்தினை ஸ்வாமிகளுக்குத் தெரிவித்துவிடுங்கள். அவருக்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அருகில் சென்று, விஷயத்தைக் கூறி அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என எண்ணியதால்தான் நான் இன்று சற்றுத் தொலைவிலேயே நின்று அவரைத் தரிசித்தேன்." அதை ஆசார்யாளிடம் தெரிவித்துவிடுவதாக அவரிடம் கூறிய அந்த சீடர் அங்கிருந்து கிளம்பிய சமயம், அந்நபர் அவரிடம் மேலும் ஒரு விஷயத்தினைத் தெரிவித்துக் கொண்டார். "நான் ஒரு கிறிஸ்துவன். எனது மகனுக்கு புற்றுநோய் வந்திருக்கின்றது எனக் கேட்டு அதிர்ச்சியால் உறைந்து நின்ற என்னிடம், ஸ்வாமிகளைச் சென்று தரிசித்து, விஷயத்தினைத் தெரிவித்து அவரிடம் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ளும்படி ஒரு ஹிந்து நண்பர் கூறினார். அதனால்தான் நேற்று இங்கு ஓடோடி வந்தேன். அப்படி வந்து சென்றது பற்றி இப்போது நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்."

இவ்வாறு, தம்மையே தஞ்சம் என நாடி வந்தவர் எவராயினும் ஆசார்யாள் அவர்களைக் காப்பாற்றி வந்தார்.

## ॥ आशापाशसमुच्छेत्ता ॥

# 13. ஆசா-பாச-ஸமுச்சேத்தா

(ஆசை எனும் பாசக்கயிற்றினை அறுத்தருள்பவர்)

'ஆசைவாய்ப்பட்ட மனது அமைதியை இழக்கிறது'; 'ஆசைகளே உண்மையான பந்தங்கள் என்பதால், ஆசைகளை ஒழிப்பவன் பந்தத்தை ஒழித்தவன் ஆகிறான்'; 'ஆசைகளே யமனின் பாசக்கயிறு' என்றெல்லாம் உரைக்கும் பற்பல உபநிஷத்துக்களும், வேதாந்த மற்றும் யோக சாஸ்திர நூல்களும், ஆசைகளை அறவே நீக்கிக் கொள்ளவேண்டிய அவசியத்தை நமக்கு உணர்த்துகின்றன. அனுகம்பா ஸரித்பதியான தமது ஸத்குருநாதர் அப்பேற்பட்ட ஆசை எனும் பாசக்கயிற்றினை அறுத்தருள வல்லவர் எனும் உண்மையை இந்நாமத்தின் மூலம் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் எடுத்துரைக்கிறார்.

ஆசைகளால் அவதிப்படுவோர் அதிலிருந்து விடுபட ஆசார்யாள் இரு விதங்களில் அருளியிருக்கின்றார். ஒன்று, செயல்படுத்துவதற்கு மிகவும் சுலபமான உபாயங்களைத் தமது எளிய உபதேசங்களின் மூலம் கூறியருளியிருக்கின்றார். இரண்டு, தமது செயல்பாட்டின் மூலமாகவே ஆசைகள் விஷயத்தில் ஒருவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைச் செயல்முறை விளக்கமாகவும் காட்டி-யருளியிருக்கின்றார்.

ஆசைகளை ஒழிக்கவல்ல உபாயங்களைப் பற்றி ஆசார்யாள் தம்முடைய உபன்யாசங்கள் மற்றும் உபதேசங்களின் போது கூறியிருக்கின்றார். அவற்றுள் சிலவற்றின் சாராம்சமாவது:

விஷயங்களைப் பற்றித் திரும்பத் திரும்ப நினைப்பதால் அவற்றின்-மேல் மனதிற்கு பற்று உண்டாகிவிடுகின்றது. இந்த பற்றேப் பின்பு பெரும் ஆசையாக மாறிவிடுகின்றது. ஆக, ஒரு பொருளைப் பற்றிய ஸங்கல்பமே (எண்ணமே) ஆசைகளைத் தோற்றுவிப்பதில் பெரும் பங்காற்றுகின்றது. விஷயங்களைப் பற்றி எண்ணுவதைக் குறைத்துக் கொண்டுவந்தால் ஆசைகளை ஒழித்திட இயலும்.

விஷயங்களில் உள்ள குறைகளைப் பற்றித் திரும்பத் திரும்ப சிந்திப்பதால் அவற்றின் மீது உள்ள ஈடுபாடு விலகிடும். உதாரணமாக, உடலின் மேல் ஆசை உள்ளவர்கள் பின்வருமாறு சிந்திக்கலாம். “சதை, எலும்பு, மஜ்ஜை, ரத்தம் போன்றவற்றால் ஆகியிருக்கும் இந்த உடலில் என்ன இன்பம் உண்டாகிவிட முடியும்? இந்த உடலின் ஏதேனும் ஒரு பகுதியை ஓர் ஊசியால் குத்தினால், அந்த இடத்திலிருந்து ரத்தம்தான் வரும். அப்படியே விட்டுவிட்டால் அதுவே சில நாட்களில் ரணமாகி சீழ் பிடித்து பார்க்கவே அருவருப்பாய் தோன்றிவிடும். இந்த உடலின் தன்மை இவ்வளவே.” செல்வத்தினைச் சேர்ப்பதில் உள்ள ஆசையை குறைப்பதற்கு பின்வரும் வகையில் சிந்திக்கலாம். “செல்வத்தினைச் சம்பாதிப்பதில் கஷ்டங்கள் உண்டாகின்றன. சம்பாதித்த செல்வத்தினைப் பாதுகாத்து வைப்பதும் கஷ்டமான ஒன்றே. சேர்த்திட்ட செல்வம் பறிபோய்விட்டால் துயரம் வந்து சேர்கின்றது. ஆகவே செல்வமானது துன்பம் தருவதாகவே இருக்கின்றது.” இம்மாதிரியான புலன்கள் சம்பந்தப்பட்ட பொருட்களில் மட்டுமல்லாது, சொர்க்கம் போன்ற மேலுலக விஷயங்களிலும் ஆசைகளை நாம் நீக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு, “சொர்க்கம் போன்ற சுகங்களை அடைய ஹோமங்கள், யாகங்கள் போன்ற பல்வேறு கர்மங்களை நாம் சிரமப்பட்டு செய்துவர வேண்டியிருக்கின்றது. இவற்றால் சம்பாதிக்கப்பட்ட புண்ணியங்களின் பலனாக சொர்க்க வாசம் கிடைத்தாலும், அது நிரந்தரமாக இருப்பதில்லை. புண்ணியம் காலியானதும் அங்கிருந்து திரும்பி இங்கேயே வந்துசேர வேண்டும்” என்றபடி சிந்திக்கலாம். ஸத்ஸங்கம் (மஹான்களின் தொடர்பு) ஆசைகளை வேரறுப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. மஹாங்களின் சன்னிதியில் மனது தானாகவே அமைதியடைந்துவிடுகின்றது. “ஆத்ம ஞானத்தால் உண்டாகிடும் பேரானந்தத்துடன் ஒப்பிடுகையில் இவ்வுலக சுகங்களோ, மேலுலக சுகங்களோ ஒன்றுமேயில்லை. ஆகையால், வெளிப் பொருட்களில் பற்றுதலை விட்டுவிட்டு, ஆத்ம ஞானத்தையடைய முயற்சிக்க வேண்டும்” என ஒருவன் தீர்மானிக்க வேண்டும்.

ஆசார்யாளின் திருவாழ்வினில் நடைபெற்ற பின்வரும் சம்பவமானது, ஆசையினை அதன் வேரிலேயே நாம் அறுத்தெறிவது எப்படி என்பதற்குச் சிறந்ததொரு செயல்முறைப் பாடமாக அமைந்துள்ளது. ஒரு சமயம் ஹைதராபாத் நகரில் ஆசார்யாள் தங்கியிருந்த போது அவருக்கென ஆஸ்திரேலிய நாட்டுத் திராக்ஷை பழங்களைப் பிரமுகர் ஒருவர் வரவழைத்திருந்தார். ஆயினும், மிகவும் வாடிப்போயிருந்த ஒரு வாழைப் பழத்தையே ஆசார்யாள் உட்கொண்டாரே தவிர, அந்தத் திராக்ஷைப் பழங்களைத் தொடவுமில்லை. இதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்த பக்தர் ஒருவர், “ஆசார்யாளுக்காக என்றுதானே அந்த இனிய திராக்ஷைப் பழங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன? ஆயினும், ஆசார்யாள் ஏன் இப்படிக் காய்ந்து போன வாழைப்-பழத்தை உட்கொள்ள வேண்டும்?” எனக் கேட்டார். ஆசார்யாள் அவரிடம் கூறினார்: “எனக்கு வயிற்றுப் புண் உள்ளதால் அவ்வப்போது சிறிது உணவை உட்கொள்ள வேண்டுமென வைத்தியர்கள் கூறியுள்ளனர். அதற்கு இந்த வாழைப்பழமே போதுமே என்று இதையே எடுத்துக்கொண்டேன். இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் இந்த திராக்ஷைப் பழங்களை விரும்பினேன் என்றால், அதுவே ஒரு ஸம்ஸ்காரமாக (அடிமனதில் பொதிந்த எண்ணமாக) மாறி, ஏதாவது ஒரு சமயத்தில் என் மனதை இந்த திராக்ஷைப் பழங்களை நாட வைத்துவிடும். அதுவே பின்பு அடக்க முடியாத ஆசையாகவும் உருவெடுத்து விடும். அதில் எனக்குச் சம்மதமில்லை. ‘இது எனக்கு வேண்டும்’ எனும் எண்ணத்தைக் கூட வைத்துக் கொள்ளாமல் இருப்பதே உண்மையான மனக் கட்டுப்பாடு.” ஆசார்யாள் அளித்தருளிய இந்த விளக்கத்தின் மூலம் ஆசையெனும் பாசக் கயிற்றிலிருந்து தப்பிக்க உதவும் அரியதொரு பாடத்தை அன்றைய தினம் அந்தப் பக்தர் கற்றுக்கொண்டார்.

## ॥ आपन्नार्तिविनाशकः ॥

# 14. ஆபந்நார்த்தி-விநாசக:

(அல்லற்படுவோரின் அல்லலை அழித்தருள்பவர்)

“எவரேனும் கஷ்டப்படுவதைக் கண்டால் எங்கள் குருநாதரால் பொறுத்துக்கொள்ள முடியாது. அவர்களது கஷ்டத்தை நீக்கிட உடனே முயல்வார்” என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் பற்பலத் தருணங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். உதாரணமாக, அன்பர் ஒருவருக்கு துஷ்ட சக்தி ஒன்றினால் இன்னல் ஏற்பட்ட போது கருணாமூர்த்தியான தமது குருநாதர் அதனைத் தீர்த்து வைத்தார் எனும் ஒரு விஷயத்தைத் தமது உபன்யாஸம் ஒன்றின் போது ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் குறிப்பிட்டார். அதன் விவரம் பின்வருமாறு:

மதுரையைச் சேர்ந்த ஸ்ரீ இராஜகோபாலன் எனும் அன்பருக்கு 1974ம் வருடம் ஆடி அமாவாசை தினத்திலிருந்து மிகவும் விநோதமான-தொரு வகையில் இன்னல் உண்டாகத் துவங்கியது. உலர வைக்கப்-பட்டிருந்த துணிகள் தாமாகவே கிழிந்து போகத் துவங்கின; வீட்டின் பூட்டு சாவிகள் மறைந்து போயின; சமைத்த உணவு ரத்தம் கலந்ததாக மாறத் துவங்கியது; பூஜை அறையில் வைக்கப்பட்டிருந்த சுலோக புத்தகங்கள் கிழிந்து போயின. மிகவும் மிரண்டு போன அக்குடும்பத்தினருக்கு உதவிட முன் வந்த பல்வேறு மதங்களைச் சேர்ந்த பெரியவர்களாலும் எதுவும் செய்ய இயலவில்லை. இவருடன் பணிபுரியும் அலுவலர்களும், காவல்துறை மற்றும் நீதித்துறையைச் சார்ந்த அதிகாரிகளும், இவரது வீட்டைப் பார்வையிட்ட போதிலும் எவராலும் இவருக்கு உதவிட முடியவில்லை. தேவி உபாஸகர் ஒருவர் இவரது இன்னல்கள் ஏவல், பில்லி, சூனியம் சம்பந்தப்பட்டது என்பதையும் துர்சக்தி வாய்ந்த பூதம் ஒன்றினால் இழைக்கப்-படுகின்றது என்பதையும் கண்டறிந்து கூறினாலும் அவராலும் இதற்குத் தீர்வினைக் கூற முடியவில்லை. இச்சமயத்தில்தான் ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் மதுரை நகருக்கு விஜயம் செய்தார். மிகவும் துவண்டு போயிருந்த ஸ்ரீ

இராஜகோபாலனை அவரது நண்பர்கள் குருநாதரிடம் அழைத்து வந்தனர். நடந்து கொண்டிருந்த விஷயங்களை முழுவதுமாகக் கேட்டுக்கொண்ட ஆசார்யாள் அவரை ஆசீர்வதித்து அவருக்கு மந்திரோபதேசம் தருவதாகக் கூறி அனுக்கிரஹித்தார். இல்லம் திரும்பிய ஸ்ரீ இராஜகோபாலனுக்கு இன்ப அதிர்ச்சி காத்துக்-கொண்டிருந்தது! அனைத்து இன்னல்களும் அறவே ஒழிந்து விட்டிருந்தன. “இனிமேல் உங்களைத் துன்புறுத்த மாட்டேன்; இனி நான் உங்களது அடிமை” என எழுதப்பட்டிருந்த கடிதம் ஒன்றும் தமது இல்லத்தின் முன் கிடக்கக் கண்ட ஸ்ரீ இராஜகோபாலனும் அவரது குடும்பத்தினரும் ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளாசிகளுக்கிருந்த சக்தியைக் கண்ணுற்று அனுபவிக்கும் பாக்கியத்தை அடைந்தவராயினர்.

மற்றொரு சமயம், ஆசார்யாள் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் தம் பயணத்தைத் தொடங்கி அரை மணி நேரம்தான் ஆகியிருக்கும். அப்பொழுது ஒரு கார் பாதி கவிழ்ந்த நிலையில் சாலையிலிருந்து சற்றுத் தள்ளி விழுந்திருந்ததை ஆசார்யாள் வெகு தூரத்திலிருந்து கவனித்தார். அவ்வழியே வாகனங்களை ஓட்டிச் சென்றவர்கள், அவ்விபத்தைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல், அதைக் கடந்து வேகமாகச் சென்று கொண்டிருந்தார்கள். ஆசார்யாள் தமது காரை விபத்து நடந்த இடத்தின் அருகே நிறுத்திவிட்டு, மிக மோசமாக சேதமடைந்திருந்த அவ்வண்டியை நோக்கி வேகமாகச் சென்றார். அங்க அசைவு ஏதுமின்றி, இரத்த வெள்ளத்தில் ஒருவன் காருக்குள் சிக்கிக் கொண்டிருந்ததை ஆசார்யாள் பார்த்தார். அவ்விபத்து சில நிமிடங்களுக்கு முன்னர்தான் நடந்திருக்கக்கூடும் என்பதையும், அம்மனிதன் மயக்கத்தில்தான் இருக்கிறான் என்பதையும் ஆசார்யாள் ஒரு நொடியில் ஊகித்துக் கொண்டார். உடனே ஒரு மடத்து அதிகாரியை அவர் கூப்பிட்டு, மடத்து வாகனத்திலேயே வேகமாகச் சென்று ஓர் ஆம்புலன்ஸ் வாகனத்தை ஏற்பாடு செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார். கவிழ்ந்திருந்த காரைத் தூக்கி நிறுத்தினாலொழிய விபத்தில் சிக்குண்டவனை வெளியில் கொணர முடியாது என்பதை ஆசார்யாள் நிச்சயித்துக் கொண்டதும், தம்முடன் இருந்தவர்களோடு

சேர்ந்து அதற்கான முயற்சிகளில் அவர் மும்முரமாக ஈடுபட்டார். அப்பொழுது அவர் நாற்பது வயதிலிருந்ததால், நன்கு உடற்பயிற்சி செய்து முறுக்கேறிய அவருடைய தசைகள், உறுதியோடும் வலிமையோடும் திகழ்ந்தன. இருப்பினும், அவ்வாகனம் மிக்க கனமாயிருந்ததால், அதைத் தூக்கி சக்கரங்களில் நிறுத்துவதற்கு ஆசார்யாள் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. பிறகு, அவர் அவனைக் கூர்ந்து பரிசோதித்துப் பார்த்ததில், ஆம்புலன்ஸ் வரும் வரையில் காத்திருக்காமல், உடனே சிகிச்சைக்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. கையில் கிடைத்த சில சாதாரண பொருட்களைக் கொண்டு படுக்கைப் போன்ற ஓர் அமைப்பைத் தயார் செய்து, அதன் உதவியால் ஆசார்யாள் அவனை விசாலமான ஒரு மடத்துக் காருக்கு மாற்றினார். பிறகு அவ்வாகனத்தின் ஓட்டுநருக்கு ஆம்புலன்ஸ் வண்டி வரும் திசையை நோக்கி அதிகம் குலுங்காமல் சீராக ஓட்டிச் செல்லுமாறு கட்டளையிட்டார். அவர் கூறிய ஆலோசனைகள் விபத்துக்குள்ளாவனுக்கு விரைவில் மருத்துவ சிகிச்சைக் கிடைப்பதற்கு பெரிதும் வழிகோலின. அவன் உயிர் பிழைத்ததோடு வெகு விரைவில் முற்றிலும் குணமடைந்தான். தக்க நேரத்தில் உதவிய ஆசார்யாளுக்கு அவன் தன் வாழ்நாள் முழுவதும் மிக்க கடமைப்பட்டவனாவான்.

சென்னையைச் சேர்ந்த ஸ்ரீமதி ராமலக்ஷ்மி விஸ்வநாதன் அவர்கள் பின்வரும் சம்பவத்தினைப் பகிர்ந்தார். ஒரு சமயம், அரிசிகெரேயில் வசித்துவந்த எனது சகோதரியின் குழந்தைக்கு ஒரு வார காலமாக மிகக் கடுமையான தலைவலியும் ஜுரமும் ஏற்பட்டு வந்தன. ஒரு நாள் ஜுரம் மிகவும் அதிகமாகி, நகங்களில் நீலம் பாய்ந்து அவள் மயக்கமாகிவிட்டாள். அச்சமயம் சிருங்கேரிக்குச் சென்றிருந்த எனது பெற்றோரை தொலைபேசி மூலம் அழைத்த நாங்கள், குழந்தைக்கு உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டதால், பெங்களூரிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சேர்க்க வேண்டுமென்பதைத் தெரிவித்து, இந்த விஷயத்தை ஆசார்யாளுக்குச் சமர்ப்பித்து, அவரிடமிருந்து பிரசாதத்தினைப் பெற்று, அதனை அச்சமயம் அவர்களுடன் சிருங்கேரிக்குச் சென்றிருந்த எங்களது கடைசி தங்கையின் மூலமாக

உடனடியாக எங்களுக்கு அனுப்பிடும்படிக் கேட்டுக்கொண்டோம். அவர்களும், இரவு பூஜையினை முடித்துவிட்டு ஆசார்யாள் வரும் போது அவரிடம் விஷயத்தினைக் கூறுவதற்காகக் காத்திருந்தனர். பூஜை முடிந்து, வெளியில் வந்த ஆசார்யாள், இவர்கள் எதுவும் சொல்வதற்குள்ளாகவே இவர்களிடம் பிரசாதத்தினைக் கொடுத்து, "இதை அனுப்புங்கள். குழந்தைக்கு ஒன்றும் ஆகாது" எனக் கூறி ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார். பிரசாதம் வந்து சேர்ந்தவுடன், அதைக் குழந்தைக்கு இட்டுவிட்டு, குழந்தையை பெங்களூர் மருத்துவ-மனைக்கு எடுத்துச் சென்றோம். அங்கங்கள் அசைவற்றுப்போய் கோமாவில் இருந்த குழந்தையினைப் பார்த்த மருத்துவர், நம்பிக்கை இழந்தவராய், எங்களிடம், "மிகவும் தாமதமாகக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். குழந்தைக்கு வந்திருப்பது மூளைக் காய்ச்சல் போலத் தெரிகின்றது. எதுவும் நாளை காலையில்தான் சொல்ல முடியும்" என்று சொல்லிவிட்டார். மறுநாள் அதிகாலை 4 மணி அளவில், குழந்தை திடீரென விழித்துக் கொண்டதுடன், எழுந்து உட்கார்ந்து கொண்டு, எங்களிடம், "ஆசார்யாள் என் அருகில் உட்கார்ந்து என்னைத் தடவிக்கொடுத்து, என்னிடம், 'பயப்படாதே, உனக்கு ஒன்றும் ஆகாது' என்று கூறினார்" என்று சொல்ல, எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியாகிவிட்டது. அதே நேரத்தில், மற்றொரு மருத்துவரை அழைத்துக்கொண்டு அங்கே வந்த முந்தைய நாள் மருத்துவர், குழந்தையின் தற்போதைய நிலையினைப் பார்த்து பிரமித்துப்போனவராய், எங்களிடம், "நீங்கள் வழிபடும் தெய்வம்தான் இந்தக் குழந்தையைக் காப்பாற்றியிருக்கிறது. நேற்று இந்தக் குழந்தை இருந்த நிலையினைப் பார்த்த நான், குழந்தை உயிர் பிழைக்காது என்றுதான் நினைத்தேன். இவ்வளவு தாமதமாகக் கொண்டுவந்திருக்கின்றீர்களே என்று உங்கள் மேல் எனக்கு கோபமாகவும் இருந்தது. நான் எனது இல்லத்திற்குச் சென்ற பிறகு, இந்தக் குழந்தையின் நினைவாகவே இருந்தேன். அதனால்தான் இன்னொரு மருத்துவரையும் அழைத்துக்கொண்டு குழந்தையைப் பரிசோதிப்பதற்காக அதிகாலையிலேயே இங்கு வந்தேன். ஆனால், இப்போதோ குழந்தையின் கால்களும் சரியாகி, அவள் எழுந்து உட்கார்ந்திருப்பதைப் பார்க்கும் போது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது" என்று கூறினார். லேசான தலைவலி மட்டும்

தொடர்ந்து இருக்க மற்றபடி பூரண குணம் அடைந்த குழந்தையை அழைத்துக்கொண்டு சிருங்கேரிக்குச் சென்ற நாங்கள் நடந்த விஷயங்களை எல்லாம் ஆசார்யாளிடம் விவரித்தோம். கருணையுடன் குழந்தையை தொட்டு ஆசீர்வதித்த ஆசார்யாள், அவளுக்கு ஒரு சுலோகத்தையும் உபதேசித்தார். தொடர்ந்துகொண்டிருந்த அந்த தலைவலியும் நீங்கிவிட்டது.

ஒரு சமயம் சிருங்கேரியில் பெய்யத் துவங்கிய கனமழையானது நிற்காமல் தொடர்ந்து பல நாட்களுக்குப் பெய்யவே, ஜனங்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். இந்த சமயத்தில் ஒரு நாள் ஆசார்யாள் தமது இருப்பிடத்திலிருந்து திடீரெனக் கிளம்பி "மழையை நிறுத்துவதற்காகப் போகிறேன்" என்று சொல்லி வெளியில் இறங்கி, கொட்டும் மழையில் சென்றுவிட்டார். தமக்குப் பின்னே ஒருவரும் வர வேண்டாமென்றும் கூறிவிட்டார். அவர் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் குறையத் துவங்கிவிட்ட அந்த கனமழையானது, அவர் திரும்பிய போது முற்றிலும் நின்றுவிட்டிருந்தது!

சிருங்கேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் ஜனங்கள் தகுந்த மருத்துவ வசதிகளின்றிப் பெரும் அல்லல் படுவதைக் கண்ணுற்ற ஆசார்யாள் மிகவும் மனம் வருந்தியதுடன், விரைந்து அவர்களது கஷ்டத்தை நீக்கிடவும் முனைந்தார். அதன் விளைவாக, சிருங்கேரியில் ஸ்ரீ சாரதா பீடத்தினாலேயே நிர்வகிக்கப்படுவதான 'ஸ்ரீ சாரதா தன்வந்திரி மருத்துவமனை' உருவாகியது! அனைவருக்கும் இலவச மருத்துவ சேவை கிட்டிட இதன் மூலம் ஆசார்யாள் வகை செய்தார்.

## ॥ ईहाविरहितस्वान्तः ॥

## 15. ஈஹா-விரஹித-ஸ்வாந்த:

(ஆசைகளற்ற மனதினர்)

முன்பு, 'ஆசாபாச ஸமுச்சேதா' (ஆசை எனும் பாசக் கயிற்றினை அறுத்தருள்பவர்) எனத் தமது குருநாதரைப் போற்றிய ஜகத்குரு ஸ்ரீ

பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் ‘ஈஹா விரஹித ஸ்வாந்த:’ எனும் இந்நாமத்தின் மூலம் தமது குருநாதரின் மனமானது ஆசைகளேயற்ற நிலையில் விளங்கி ஒளிர்ந்தது என்பதைக் குறிப்பிடுகின்றார்.

ஸ்ரீ சாரதா பீடத்தின் அதிபதியாக, அதன் சொத்துக்களுக்கு முழு உரிமையாளராக, எண்ணியிருந்தால் எவ்வளவோ வசதிகளுக்கிடையில் வாழ்ந்திருக்கவும் முடியும் எனும் நிலையில் இருந்து வந்தபோதிலும், ஜகத்குரு அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள், தமது மனத்தில் எவ்வித ஆசைகளுக்கும் இடம் கொடாதவராக மிக மிக எளிமையானதொரு வாழ்க்கையையே வாழ்ந்து வந்தார். பசிக்கென, எவ்வித சுவையும் அற்ற, மிகவும் சொற்ப அளவேயான உணவை மட்டும் உட்கொண்டு வாழ்ந்த ஆசார்ய ஸ்வாமிகள், ருசிக்கென ஒரு சொட்டு நீரைக்கூட விரும்பாதவராகவேத் திகழ்ந்தார்.

தாம் ஸன்யாசம் பெற்ற சமயத்தில் தமது மனம் வசதிகளுக்கு ஆசைப்படுகின்றதா என்பதைப் பரிசோதிக்கும் வகையில், நடுங்கச் செய்யும் குளிர் கால சமயத்தில், தமது உடலில் ஈர வஸ்திரத்தைச் சுற்றிக் கொண்டு, வெறும் தரையில் படுக்கத் துவங்கினார் ஆசார்யாள். அதனையறிந்த அவரது குருநாதர், அந்த தீவிரத்துவம் அவசியமற்றது என்று கூறிட, பிறகு அப்படிப் படுக்கும் வழக்கத்தை நிறுத்திக் கொண்டார்.

யோகாப்பியாஸத்தைச் செய்யும் சாதகர்கள் பெரிதும் விரும்புவதான குண்டலினி மற்றும் லம்பிகா யோக சித்திகள் ஆசார்யாளுக்கு மிக எளிதில் கூடப்பெற்ற சமயத்திலும்கூட அவற்றில் எவ்வித ஆசையையும் வைத்துக் கொள்ளவில்லை இந்தத் துறவுச் செம்மல்! அவற்றைத் தமது சாதனையாகக்கூட அவர் கருதவில்லை! தேவர்கட்கும் எளிதில் கிட்டாததான இறை வடிவங்களின் தரிசனமே கிட்டப்பெற்று, தாம் வேண்டும் எவ்வித வரங்களையும் கேட்டுப் பெறும் வாய்ப்பும் உண்டாகிய போதும், தமக்கென எதையுமே யாசிக்காதிருந்தவர் அவர். பலனை எதிர்பார்த்துச் செய்யும் பக்தி அவரிடம் ஒரு சிறிதும் காணப்படவில்லை.

1954ல் சாரதா பீடத்தின் 35ம் பீடாதிபதியாக பொறுப்பேற்ற பின்பு, தாம் மேற்கொண்ட விஜய யாத்திரை சமயங்களில், தங்குவதற்கான

அடிப்படை வசதிகள் மிகக் குறைவாக இருக்கும் பல இடங்களுக்கும்கூட ஆசார்யாள் விஜயம் செய்து ஜனங்களுக்கு அருள் புரிந்தார். அவ்விடங்களில், தமக்கென ஏற்படுத்தித் தரப்படும் வசதிகளைக்கூடத் தமக்குச் சேவை புரிந்துவரும் மடத்து ஊழியர்களுக்கே விட்டுக் கொடுத்துவிட்டு, தமது உறக்கம் பாதிக்கப்படுவதையும் பொருட்படுத்தாது, தாம் காரில் அமர்ந்தபடியே இரவைக் கழித்த கருணாமூர்த்தி அவர்.

இரவில் தாம் உறங்கச் செல்கையில், தமது கைத்துணியை ஒரு பந்து போலச் சுருட்டி அதையே தமது தலையணையாகவும், தமது மேல்வஸ்திரத்தைத் தரை விரிப்பாகவும், தமது கீழ் வஸ்திரத்தைப் போர்வையாகவும் உபயோகித்து, கௌபீனத்துடன் உறங்கும் வழக்கத்தை வைத்திருந்தவர் நமது ஆசார்ய பெருமான். ஒரு சமயம், தாம் தங்கியிருந்த ஓர் இடத்தில், மைசூர் மஹாராஜா தமக்கெனவேப் பிரத்தியேகமாக அனுப்பி வைத்திருந்த மிக விலையுயர்ந்த வசதியான மெத்தையையும் புறக்கணித்துத் தமது வழக்கமான படுக்கையையே நாடியவர் இந்த வைராக்கியச் சிகரம்!

மடத்து சம்பிரதாயத்திற்காக, ஜரிகை வைத்த வஸ்திரத்தை உடுத்தி வந்த ஆசார்யாள், தமக்கு அடுத்துப் பீடத்தை அலங்கரிப்பதற்காக ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளை நியமித்தவுடனேயே, ஜரிகை வைத்த வஸ்திரத்தையும் துறந்து, சாதாரண வஸ்திரத்தையே உடுத்தத் துவங்கிவிட்டார். அதன் பிறகு, தமது தேவைகளை மேலும் குறைத்துக் கொண்டுவிட்டார்.

ஆன்மிக வாழ்வில் நாட்டம் மிகுந்த ஜனங்களுக்கு ஆசார்ய ஸ்வாமிகளின் ஆசையற்ற வாழ்வானது அரியதொரு பாடமாகும் என்பதில் ஐயமேதும் இருக்க முடியுமோ?

॥ इभवक्त्रसुपूजकः ॥

# 16. இபவக்த்ர-ஸுபூஜக:

(யானை முகத்தோனான கணபதியை நன்கு பூஜிப்பவர்)

தமது குருநாதரான ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளுக்கும் பகவான் ஸ்ரீ மஹா கணபதிக்கும் இடையே இருந்து வந்த பக்திப் பிணைப்பினை ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் இந்நாமத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

தமது சிறு வயதிலேயே ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தம்மிடம் ஒரு சிறிய ஸ்படிகத்தாலான மஹாகணபதியின் விக்ரஹம் ஒன்றினை வைத்துப் பூஜித்து வந்தார். இல்லத்தில் வறுமை தாண்டவமாடிய போதிலும், முன்கோபியான தமது தகப்பனாரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பிடும் வாய்ப்பு நிலவிய போதிலும், தம்மால் இயன்ற அளவில் பகவான் கணபதிக்குத் தினமும் பூஜை செய்து, சில சமயத்தில் வெறும் தண்ணீரையேகூட முழு பக்தியுடன் அவருக்கு உணவாக அளித்தும் சிரத்தையுடன் பகவானை ஆசார்யாள் வழிபட்டு வந்தார்!

பின்பு, சிருங்கேரியில் தமது உபநயனம் நடத்தப்பெற்று, அங்கேயே தங்கிவிட்ட ஆசார்யாளால், சிருங்கேரியில் இரத்தின கர்ப கணபதி, சக்தி கணபதி, வித்யா கணபதி, தோரண கணபதி மற்றும் ஸ்தம்ப கணபதி எனும் திருநாமங்களுடன் வீற்றிருக்கும் பகவான் ஸ்ரீ மஹாகணபதியின் ஆலயங்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் வழிபட முடிந்தது! அதுவுமின்றி, தமது தியானப் பயிற்சிகளின் பூரண நிலையில் அவரால் தரிசிக்கப்பட்ட பல்வேறு இறை வடிவங்களில் ஸ்ரீ மஹாகணபதியின் வடிவமும் முக்கியமானதாயிற்று. ஒவ்வொரு வருடமும் வரும் விநாயக சதுர்த்தி விழாவினை மடத்தின் அதிபதி என்ற முறையில் ஆசார்யாள் மிக விமரிசையாகக் கொண்டாடி வந்தார்.

ஒரு சமயம், ஆசார்யாள் பயணித்த கார் தெற்கு கனரா மாவட்ட எல்லையில் நுழைந்தது. அங்கு, குறிப்பிட்ட ஓரிடத்தில் காரை நிறுத்-

துமாறு ஓட்டுனரிடம் கூறிய ஆசார்யாள், ஓட்டுனரையும் அழைத்துக் கொண்டு சாலையின் ஓர் ஓரத்தில் இருந்த கணபதி சன்னிதிக்குச் சென்று வழிபட்டார். பிறகு ஓட்டுனரிடம் குறிப்பிட்டார்: ‘‘நீண்ட காலத்திற்கு முன் இவ்வழியாக நான் பயணித்துக் கொண்டிருந்த சமயம், ‘நான் ஒருவன் இங்கே கவனிப்பார் யாருமின்றி தனியாக இருந்து கொண்டிருக்கிறேன்’ என ஒரு குரல் கேட்டது. காரை நிறுத்தி, யார் எனப் பார்த்த போது, இவர் (பகவான் ஸ்ரீ மஹாகணபதி) இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரது இருப்பிடத்தின் இரு புறமும் வேற்று மதத்தினரின் குடியிருப்புக்களே இருந்தன என்பதால் இவரைக் கவனிக்க ஒருவருமில்லை. ஆகவே, இவருக்கு என ஒரு சிறிய சன்னிதியை ஏற்படுத்திப் பூஜைக்கும் வழி செய்தேன். அதன் பிறகு, இவ்வழியே செல்லும்போதெல்லாம் இவரைப் பார்த்துவிட்டுப் போவது வழக்கம்.’’ இறைவனுடன் ஆசார்யாளுக்கு இருந்த ஸஹஜ பாவனையைக் கண்டு அந்த ஓட்டுனருக்கு மிகவும் ஆச்சரியம் உண்டாயிற்று.

பக்தர் ஒருவர் தமது மகளுக்குத் திருமணம் தள்ளிப் போவதைக் கூறி ஆசார்யாளின் அருளை வேண்டினார். ஆசார்யாளும், ‘‘ஒவ்வொரு சுக்ல சதுர்த்தி தினத்தன்றும் ஸ்ரீ மஹாகணபதிக்கு அபிஷேகம் செய்வித்து வழிபட்டு வாருங்கள்’’ என உபதேசித்தார்! அதைச் சிரத்தையுடன் செய்யத் துவங்கிய அந்தப் பக்தருடைய மகளுக்கு விரைவிலேயே மிக நல்லதொரு கணவன் கிடைத்தார்.

மற்றொரு பக்தர் தமது மகனுக்கு ஆண் குழந்தை பிறக்க ஆசார்யாள் அனுக்கிரஹிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார். ஆசார்யாள் அவரிடம், ‘‘தோரண கணபதி சன்னிதிக்குச் சென்று வேண்டிக் கொள்ளுங்கள். உங்களுக்கு பேரன் பிறப்பான். அவனுக்கு கணபதி என்றே பெயர் வைத்துவிடுங்கள்’’ என அனுக்கிரஹித்தார். குருவின் வார்த்தைகளைத் தட்டாது தோரண கணபதியின் சன்னிதியில் சென்று அந்தப் பக்தர் பிரார்த்தனை செய்து முடித்தார். மாதங்கள் சென்றன. ஆசார்யாள் அனுக்கிரஹித்தபடியே அவருக்குப் பேரன் பிறக்க, அக்குழந்தைக்கு கணபதி என்றே பெயர் வைக்கப்பட்டது!

## ॥ इन्दुमौलिपदध्यायी ॥

# 17. இந்துமௌலி-பதத்யாயீ

(சந்திரமௌலீசுவரரின் பாதங்களைத் தியானிப்பவர்)

ஸ்ரீ சந்திரமௌலீசுவரர் சிருங்கேரி சாரதா பீடத்து ஜகத்குருக்களின் ஆராத்ய தெய்வமாவார். ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரால் கயிலை-யிலிருந்து எடுத்து வரப்பட்ட ஸ்ரீ சந்திரமௌலீசுவரரின் அழகிய ஸ்படிக லிங்கமானது இன்றும் ஜகத்குருக்களின் பூஜையில் உள்ளதை ஸ்ரீ சாரதா பீடத்துடன் சம்பந்தமுள்ள அனைவரும் அறிவர். பரமேஸ்வரனைத் தியானிக்கும் யோகிக்கு ஏற்படும் பலன் என்ன? கைவல்ய உபநிஷத்து இதை விவரிக்கின்றது: ‘‘சக்தி வாய்ந்தவனும், மூன்று கண்களை உடையவனும், நீல நிறக் கழுத்துடையவனும், பார்வதியின் துணையிருப்பவனுமான பரமேஸ்வரனைத் தியானித்து, முனிவனானவன் எல்லாவற்றிற்கும் மூலமான, எல்லாவற்றிற்கும் சாக்ஷியான, அவித்யைக்கு அப்பாற்பட்டு விளங்கும் பரம்பொருளை அடைகிறான்.’’ ஸ்ரீ சந்திரமௌலீசுவரரின் அருளால், யோகாப்-பியாசத்தில் வெகு விரைவாக முன்னேறிய ஆசார்யாள், சிவனின் பல்வேறு வடிவங்களைத் தியானித்து அவற்றில் ஸவிகல்ப ஸமாதி நிலையினையடைந்து, பிற்பாடு ஜீவன்முக்தியையும் அடைந்தமையை, முன்பே ‘‘அகஜாபதி பக்திமான்’’ எனும் திருநாம விளக்கத்தினில் கண்டோம்.

தம்மை அண்டி அருள் வேண்டும் அனைவரின் பொருட்டும் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள், சாரதா பீடத்து ஆராத்ய தெய்வமான ஸ்ரீ சந்திரமௌலீசுவரரைத் தியானித்து, அவ்வனைவரின் விஷயத்திலும் பகவானின் கிருபையை வேண்டிக்-கொள்வது வழக்கம். தமது குருநாதரின் இந்த உத்தமமான வழக்கத்தினை உலகுக்கு அறிவிக்கும் வண்ணம் ‘இந்துமௌலி பதத்யாயி’ எனும் இந்த அழகிய நாமத்தை ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் புனைந்திருப்பதாகவே தோன்றுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

சுப்புராய சாஸ்திரி என்பவர் தமது ஜீவனத்திற்குக் கஷ்டம் ஏற்பட்ட நிலையில் ஆசார்யாளைத் தரிசித்து அவரது அருளை வேண்டிக்-

கொண்டார். ஆசார்யாளும் அவரிடம், ‘‘நீ ஸ்ரீ சுப்ரமணியருக்குக் கோயில் ஒன்றினைக் கட்டி, அங்கு பூஜை செய்து வா’’ எனக் கூறி-யருளினார். ‘‘நானோ பரம ஏழை; அவ்வளவு பணத்திற்கு நான் எங்கே போவேன்’’ என சாஸ்திரி திகைத்து நிற்க, ஆசார்யாளும் அவரிடம், ‘‘நீ கவலைப்படாதே. உனக்காக நான் சந்திரமௌலீ-சுவரரிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன்’’ எனக் கூறி அவரை ஆசீர்வதித்து அனுப்பினார். வெகுக் குறைந்த காலத்திலேயே எங்கெங்கிருந்தோ அவருக்கு பொருளுதவி வந்து குவிய, கோயிலும் பூரணமாகக் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது!

பெங்களூரைச் சேர்ந்த வழக்கறிஞர் ஸ்ரீ சிவஸ்வாமி அவர்கள் ஒரு சமயம் பின்வரும் நிகழ்ச்சியினை நினைவுகூர்ந்தார். ‘‘இந்த சம்பவத்தை ஆசார்யாளின் உதவியாளராக இருந்த ஸ்ரீ பத்மநாப உபாத்யாயா அவர்கள் என்னிடம் பகிர்ந்து கொண்டார். இமய மலைப் பகுதியில் உள்ள பத்ரிநாத் ஸ்தலத்திற்கு ஆசார்யாள் சென்று கொண்டிருந்த போது, எதிர்பாராத காரணங்களினால் நடு வழியிலேயே தங்கிட வேண்டி வந்துவிட்டது. ஆளரவமற்ற காடு சூழ்ந்த மலைப் பகுதியாக அது இருந்தது. இரவும் வந்துவிட்டது. அங்கேயே தங்கி சந்திரமௌலீஸ்வர பூஜையை நிகழ்த்திவிடலாமென ஆசார்யாள் கூறிவிட்டார். ஆயினும், உபாத்யாயாவிற்கோ, ‘சந்திர-மௌலீசுவரரின் அபிஷேகத்திற்குத் தேவையான பசும்பாலை அந்த நடுக்காட்டினில் எப்படி ஏற்பாடு செய்வது?’ எனக் குழப்பம் ஏற்பட்டதால், ஆசார்யாளிடமே சென்று விஷயத்தைத் தெரிவித்துக் கொண்டார். ஆசார்யாளோ, ‘அது ஒன்றும் தீர்க்க முடியாத பெரிய பிரச்சினை ஒன்றும் அல்ல; நீ போய் பூஜைக்கு ஏற்பாடு செய்’ எனக் கூறிவிட்டுத் தமது ஸ்நானத்திற்காக அருகிலிருந்த ஆற்றிற்குச் சென்றுவிட்டார். ஆசார்யாளின் வார்த்தைகளுக்கு இருந்த மஹிமை சற்று நேரத்திற்குள்ளாகவே ஸ்ரீ உபாத்யாயாவிற்குப் புரியத் தொடங்கிவிட்டது. ஆசார்யாள் அப்படிக் கூறிவிட்டுச் சென்ற சில கணங்களில் காட்டிற்குள்ளிருந்து ஒரு பசு வெளிப்பட்டது மட்டு-மில்லாமல், ஆசார்யாளின் முகாமிற்கு அருகேயே அது வந்து நின்றும் கொண்டது. அதைக் கண்ட கார்யதரிசியும் மற்றவர்களும், ‘‘காட்டிற்குள்ளிருந்து ஒரு பசு வருவதா? எப்படி இது சாத்தியம்?’’ என ஒன்றும் புரியாமல் அதிசயித்து நின்றனர். சற்று நேரத்திற்-

கெல்லாம் ஸ்நானத்தை முடித்துவிட்டு அங்கு வந்த ஆசார்யாள் அந்த பசுவைக் கண்டதும் புன்னகைத்தவாறே ஸ்ரீ உபாத்யாயாவிடம், ‘‘சந்திரமௌளீசுவரரின் பூஜைக்கு பசுவின் பால் இல்லையே என்று யோசித்துக் கொண்டிருந்தாய் அல்லவா? இதோ இந்த பசுவிடமிருந்து பாலைப் பெற்றுக்கொண்டு பூஜைக்குப் பயன்படுத்திக்கொள்’’ என்று கூறிவிட்டுச் சென்றார். தேவையான பாலை அவர்கள் கறந்து கொள்ளும்வரை அங்கேயே இருந்த அந்த பசுவானது, பிறகு அங்கிருந்து கிளம்பி மீண்டும் காட்டிற்குள்ளேயே சென்று மறைந்தது! ஆசார்யாளின் வார்த்தைகளை நிறைவேற்றிட ஸ்ரீ சந்திரமௌளீசுவரரே அந்த தேவலோகக் காமதேனுவை அனுப்பி வைத்தார் போலும்!

வயதில் முதிர்ந்தவரும் ஆசார்யாளின் பக்தருமான ஒருவருக்கு அவரது காலில் செய்யப்பட்ட அறுவை சிகிச்சையின் பின், உடல்நிலை திடீரென மோசமாகி நாடித்துடிப்பும் குறையத் தொடங்கிவிட்டது. அவரது மனைவி ஆசார்யாளைத் தியானம் செய்து தமது கணவரைக் காக்குமாறு வேண்டிக்கொண்டார். சிறிது சிறிதாக நல்ல நிலைக்குத் திரும்பிய அவரது கணவரின் உடல்நிலை மறு நாள் காலையில் பூரண குணமாகி விட்டது. அன்றைய தினம் அவரது மனைவி ஆசார்யாளைத் தரிசித்து விஷயத்தைக் கூறிய சமயம், ஆசார்யாள் அந்தப் பெண்மணியிடம், ‘‘உங்கள் கணவர் எழுந்து பழையபடியே நடக்க வேண்டும்; என்னை நம்பி வந்தவர்கள் கைவிடப்பட்டனர் எனும் நிலை உண்டாகக் கூடாது என சந்திரமௌளீசுவரரிடம் நான் வேண்டிக் கொண்டேன். பகவானும் அதை ஏற்றுக் கொண்டார்’’ எனக் கூறினார்! சில நாட்களிலேயே அந்தப் பக்தர் எழுந்து பழையபடியே நடக்கத் துவங்கிவிட்டார்.

கல்லிடைக்குறிச்சியில் ஆசார்யாள் முகாமிட்டிருந்த சமயம், பக்தர்களாக சேர்ந்து அதிருத்ர யாகம் ஒன்றை ஏற்பாடு செய்தனர். ஆயினும், அவர்களைத் துயரப்படுத்தும் விதத்தில் விடாத கனமழை பெய்யத் துவங்கிவிட்டது. யாகத்தை ஏற்பாடு செய்தவர்களோ ஆசார்யாளிடம் சென்று முறையிட்டனர். ஆசார்யாளும், ‘‘உலக நன்மைக்காக இம்மாபெரும் யாகத்தைச் செய்கிறீர்கள். இதற்கு எவ்விதத்திலும் சந்திரமௌளீசுவரர் சோதனைகளை ஏற்படுத்த மாட்டார்’’ என உறுதியளித்தருளினார். அந்த கணம் முதல்

நின்றுவிட்ட மழையானது, அந்த யாகம் இனிதே நிறைவுறும் வரை காத்திருந்துவிட்டுப் பிறகுதான் பெய்தது!

ஐஐ❀ஐஐ

## ॥ इहामुत्रार्थनिःस्पृहः ॥

# 18. இஹாமுத்ரார்த்த-நிஸ்ப்ருஹ:

(இஹபர சுகங்களில் நாட்டமில்லாதவர்)

இஹசுகம் என்பது இந்த பூவுலகில் நமக்குக் கிடைக்கும் சுகங்களைக் குறிக்கின்றது. பரசுகம் என்பது இவ்வுலக வாழ்க்கை முடிந்து மேல் உலகத்திற்குச் சென்ற பின் அங்கு நமக்குக் கிடைக்கும் சுகங்களைக் குறிக்கின்றது. தமது குருநாதர் இஹபர சுகங்களைத் துச்சமென மதித்து வாழ்ந்தவர் என்பதை 'இஹாऽமுத்ரார்த்த நிஸ்ப்ருஹ:' எனும் இத்திருநாமத்தின் மூலம் விளக்குகின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.

தமது பால பருவத்திலிருந்தே சுக நாட்டமெதுவுமில்லாத மனத்தினராக விளங்கியவர் ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். எடுத்துக்காட்டாக, தமது நடுநிலைப் பள்ளிப் பருவத்தில், ஒரு நாள் அவர் தமது நண்பர்களுடன் மேற்கொண்ட உரையாடலைக் குறிப்பிடலாம். துறவறம் வாங்குவதில்தான் தமக்கு விருப்பம் என்று அடிக்கடி ஸ்ரீ ஸ்ரீனிவாச சாஸ்திரி (ஆசார்யாளின் பூர்வாசிரம பெயர்) கூறிவருவதைக் கண்ட அவரது நண்பர்களில் ஒருவன் அவரிடம், "ஒரு ஸன்யாஸியாக ஆவதில் என்ன பயன் இருக்கின்றது? ஒரு ராஜாவாக ஆனாலாவது உயர்ந்த அந்தஸ்தினை அடையலாமே" என்று கேட்டான். அதற்கு ஸ்ரீ ஸ்ரீனிவாச சாஸ்திரி, "அப்படி நினைக்காதே. ஒரு ராஜாவாக ஆவதில் அப்படி என்ன நிரந்தரமான சுகம் இருக்கப்போகிறது? அரசனாக இருக்கின்ற ஒருவன் அப்பதவியில் இருக்கும் வரையில்தான் சுகங்களை அனுபவிக்க முடியும். அந்த நிலைமையும் ஒரு நாள் முடிவுக்கு வந்துவிடும். ஆனால், நான் ஒரு ஸன்யாஸியானால்

தொடர்ந்து தியானம் செய்து, கவலைகள் ஏதுமின்றி இருக்கலாம். இறைவனை தரிசனம் செய்வதற்கும் அங்கு அரியதொரு வாய்ப்பு இருப்பதுடன், எப்போதும் இறைவனது பாதுகாப்பில் வாழ்ந்து வரவும் முடியும்.''

1930ம் ஆண்டு சிருங்கேரியில் ஆசார்யாளது உபநயனம் முடிந்து, அவர் அங்கேயே தங்கிவிட்ட பின்பு அவரது மனம் இஹபர விஷயங்களில் மேலும் மேலும் விரக்தியைத்தான் அடைந்ததே தவிர, அவற்றில் ஒரு சிறிதும் விருப்பத்தை அடையவேயில்லை. இதற்கு உதாரணமாகப் பின்வரும் சம்பவத்தைக் காட்டலாம். பதின்மூன்று வயதே ஆகியிருந்த ஸ்ரீ ஸ்ரீநிவாசன் (ஆசார்யாளின் பிரம்மசர்ய பருவத்துப் பெயர்) தமது குருநாதரின் பணியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரி அவர்களிடம் ஒரு நாள், ''என்னைப் போன்ற சிறுவன் ஸன்யாசம் பெற்றுக் கொள்ள விரும்பினால் பெற்றுக்-கொள்ளலாமா? பெற்றோர் இதற்கு அனுமதிக்காவிட்டாலும், அவர்கள் அனுமதி இல்லாமலே ஸன்யாசம் பெற்றுக் கொள்ள வாய்ப்புண்டா?'' என்று ஒரு கேள்வியை எழுப்பினார். அந்த வயதிலேயே அவரது மனமானது எந்த அளவிற்கு இஹபர சுகங்களில் விரக்தியை அடைந்து துறவையே நாடியது என்பதை அவரது இக்கேள்வியே விளக்குகின்றது அல்லவா!

தமது குருநாதரின் திருவருளால் 1931ல் ஸன்யாசம் பெற்று, 1954 வரை குருவின் சேவையில் ஈடுபட்டுப் பின்பு குருநாதர் மஹா-ஸமாதியடைந்த பின் ஸ்ரீ சாரதா பீடத்தின் 35ம் பீடாதிபதியாகப் பொறுப்பேற்று, தமக்கென்று எவ்வித சுகத்தினையும் நாடாமல், ஜனங்களின் நன்மைக்காக ஸனாதன தர்ம பிரச்சாரத்தில் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபட்டு வந்தார் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். அவர் ஜனங்களுக்கு இஹபர சுகங்களின் நிலையற்ற தன்மையை சாஸ்திர பூர்வமாகவும் தமது அனுபவ பூர்வமாகவும் எடுத்துரைத்து, பிறப்பு-இறப்பு எனும் ஸம்ஸார சக்கரத்திலிருந்து விடுபடும் முயற்சியில் அனைவரும் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தார். மிக எளிய நடையில், அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில், சுவைபட அவரால் அருளப்பட்ட உபதேசங்களில் சிலவற்றைக் கீழே காணலாம்:

"இந்த உலகத்தில் எதை எடுத்துக் கொண்டாலும், அதில் பெரிதாக ஒன்றும் இல்லை. சூரியன் உதித்தான். நாம் எழுந்தோம். பிறகு குளித்தோம். அதன் பின், சிற்றுண்டியைச் சாப்பிட்டுவிட்டு அலுவலகத்திற்குப் புறப்பட்டோம். அங்கே, வேலையைச் செய்துவிட்டு வீட்டிற்கு வந்து, இரவு உணவை உண்டு தூங்கச் சென்றோம். அடுத்த நாள் இதே கிரமம் மீண்டும் செய்யப்படுகிறது. வேறொன்றுமில்லை. ஒருவன் அமர்ந்து, ஆழ்ந்து சிந்தித்து, 'உலகத்தின் நடவடிக்கை இப்படித்தான் இருக்கும்' என அறிய வேண்டும். ஒருவன் (புண்ணியத்தின் பலனாக) ஸ்வர்கத்திற்கே சென்றாலும், (புண்ணியத்தின் அளவு முடிந்தவுடன்) மீண்டும் இங்கே வந்து பிறக்கத்தான் வேண்டும். மீண்டும் கர்மாக்களைச் செய்யத் துவங்க வேண்டிய நிலை வரும்."

********

"நாம் பிரம்மத்திலிருந்து பிரிந்தவர்கள். நம்முடைய லக்ஷியம் பிரம்மத்தை அடைவதேயாகும். அப்போதுதான் அமைதி கிட்டும். ஆனால் பலர், இதை விட்டுவிட்டு, 'நாம் பரமசிவனுடைய லோகத்திற்கோ, விஷ்ணுவின் லோகத்திற்கோ போய் இருந்தால் அது மோக்ஷம்' என்பர். ஆனால், 'த்விதீயாத்வை பயம் பவதி' (இரண்டாவது பொருள் என்று ஒன்று இருந்தால் அதனால் பயம்தான் உண்டாகும்) என்பதினால், வைகுண்டம் போன்ற லோகங்களில் சேர்ந்தாலும்கூட (அங்கும்) இரண்டாவது பொருளைப் பற்றிய அறிவு இருப்பதால், அங்கும் பயம் இருக்கவே இருக்கும். (ஆகவே, பிரம்மத்தை அடைவதே பயம் விலகும் வழியாகும்.)"

## ॥ कर्माकर्मविभागज्ञः ॥

# 19. கர்ம-அகர்ம-விபாகக்ஞ:

(கர்மம், அகர்மம் இவற்றின் வேறுபாட்டினை அறிந்தவர்)

"எது கர்மம்; எது அகர்மம் எனும் விஷயத்தில் புத்திமான்களே தடுமாற்றத்தினை அடைகின்றனர்" என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

கீதையின் நான்காவது அத்தியாயத்தினில் கூறியிருக்கின்றார். அப்படிப்பட்ட, பொதுவாக எவருக்கும் புரிந்துகொள்ள அதி சூக்ஷ்மமான கர்ம-அகர்ம வேறுபாட்டினை எங்கள் குருநாதராகிய ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தமது அனுபவத்திலேயே அறிந்துகொண்டவராகத் திகழ்ந்தார்கள் என்று ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் உரைக்கின்றார்.

நான் அத்வைதமான ஆத்மாவேயன்றி இந்த தேஹம்-இந்த்ரியங்கள்-மனது-புத்தி ஆகியவற்றின் சேர்க்கை அல்ல என்பதைத் தமது அனுபவமாகவே அடைந்த ஒரு பிரம்ம ஞானிக்கு இங்கு செய்ய வேண்டியது எனவும் ஒன்றும் இல்லை; விட வேண்டியது எனவும் ஒன்றும் இல்லை. நான் கர்த்தாவும் (கர்மங்களைப் புரிகின்றவனும்) அல்ல; போக்தாவும் (விஷயங்களை அனுபவிப்பவனும்) அல்ல என்பதை அவர் தெளிவாக உணர்ந்து கொள்கின்றார். வெளி உலகிற்கு அவர் கர்மம் புரிபவரைப் போலக் காட்சியளித்தாலும், அவரைப் பொறுத்தமட்டில் அந்த கர்மங்கள் அனைத்தும் தேஹம்-இந்த்ரியங்கள்-மனது-புத்தி ஆகியவற்றைச் சேர்ந்தவையே தவிர, தனக்கல்ல என்பதை அவர் தெளிவாக அறிகின்றார். ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களும் இத்தகைய ஜீவன்முக்தராக திகழ்ந்தவராவார்.

எதை அடைவதினால் இனியும் அடையப்படுவதற்கு என்று வேறு ஒன்றுமே இருப்பதில்லையோ, எதையடைந்தவுடன் இனியும் செய்வதற்கும் ஒன்றுமே இருப்பதில்லையோ அத்தகைய ஜீவன்முக்த நிலையினை ஆசார்யாள் அடைந்துவிட்ட சமயம் அவரது நிலையினைப் பற்றி அவரது குருநாதர் குறிப்பிட்ட வார்த்தைகளாவன: “சாந்தமும் சந்தோஷமுமே உங்கள் முகத்தில் தெரிகின்றன. உங்களை யாரும் எவ்வளவு தூண்டினாலும் உங்களிடம் சிறிதளவு கோபத்தையும் பார்க்க முடியாது. உலகின் எந்த விஷயமும் உங்களை இப்போது ஈர்க்காது. ஆகையால், நீங்கள் பரம்பொருளில் வழுவாமல் நிலை பெற்றிருந்தாலும், நீங்கள் நன்கு படித்து சாஸ்திரங்களில் புலமை பெற வேண்டும். சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு, பக்தர்களிடமும், மடத்துச் சிப்பந்திகளிடமும், மற்றவர்களிடமும் விருப்பம், பாராட்டு, வருத்தம், கோபம், ஆர்வம் போன்ற உணர்ச்சிகளை நீங்கள்

வெளிக்காட்ட கற்றுக்கொள்ளவேண்டும். மற்றவர்களுக்கு நீங்கள் ஒரு வழிகாட்டியாக விளங்கவேண்டும். மற்றவர்களின் நிலைகளைப் புரிந்துகொண்டு உங்களை அதற்கேற்ப நடத்திக்கொண்டு அவர்களுக்கு நன்மை புரியுங்கள்.'' இதிலிருந்தே, எவ்வாறு ஆசார்யாள் கர்மங்களைச் செய்யவல்ல 'கர்த்தா' மற்றும் பலன்களை அனுபவிக்கவல்ல 'போக்தா' ஆகிய நிலைகளுக்கு அப்பாற்பட்டு விட்டார் என்பது நமக்குப் புரிகின்றது.

இது பற்றி, பிற்காலத்தில், தமது சீடர் ஒருவரிடம் நினைவுகூர்ந்திட்ட ஆசார்யாள் பிறகு கூறியதாவது: ''இம்மாதிரி மனோவிருத்திகள் எந்த விதமான பந்தத்தையும் ஏற்படுத்துவதற்கு சக்தியற்றவை. ஏனெனில், ஆத்மாவுடன் மனதைச் சம்பந்தப்படுத்திய தவறான கருத்து முற்றிலும் நீங்கிவிட்டது. மேலும் மனதின் பொய்த்தன்மையும் மறந்துவிடப்-படவில்லையே. இவ்வாறாக, ஆசார்யாளின் கட்டளைகளின் உட்-கருத்தையும் அவற்றை மேற்கொள்வதற்கான வழிமுறைகளையும் புரிந்துகொள்வதில் எனக்கு சிரமமேதும் இருக்கவில்லை.'' இதில் இருந்தே, ஒரு மடத்தின் அதிபதி என்ற நிலையிலும், ஒரு குரு எனும் நிலையிலும், தமது தேஹம்-இந்த்ரியங்கள்-மனது-புத்தி ஆகிய கலவையே அனைத்து காரியங்களையும் செய்து வருகின்றது என்றும், ஆத்ம ஸ்வரூபியாகிய தாம் என்றுமே அவையனைத்திற்கும் ஸாக்ஷியாக மட்டும் இருந்து வருவதையும் ஆசார்யாள் நிச்சயப்-படுத்துவதை நாம் புரிந்து கொள்ளலாம்.

## ॥ कीर्तनीयगुणोज्ज्वलः ॥

## 20. கீர்த்தனீய-குணோஜ்ஜ்வல:

(துதிக்கத்தக்க குணங்களைப் பெற்று ஒளிர்பவர்)

ஜீவன்முக்தர்களான மஹான்களிடத்தில் குடிகொண்டு ஒளிர்ந்திடும் குணவிசேஷங்கள் எண்ணற்றவை. அவையனைத்துமே ஏனையோரால் போற்றி வணங்கத்தக்கவையே. அவற்றுள் சில குணங்கள்

அபூர்வமானவையாகவும், பொதுவாக எளிதில் மற்றவர்களிடம் காணப்படாதவையாகவும் இருந்திடும். அப்படிப்பட்ட பல பார்த்து, வியந்து, துதிக்கத்தக்க குணாதிசயங்கள் ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளிடம் இருந்துவந்தமையை, ''கீர்த்தனீய குணோஜ்ஜ்வல:'' (துதிக்கத்தக்க குணங்களைப் பெற்றவர்) எனும் இந்தத் திருநாமத்தின் மூலம் தெரியப்படுத்துகின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள். ஆசார்யாளிடம் ஒளிர்ந்து நின்ற அக்குணங்களில் சிலவற்றினை இங்கே காணலாம்.

''மனம் நம் மேல் ஆதிக்கம் செலுத்தக் கூடாது. நாம்தான் அதன் மேல் ஆதிக்கம் செலுத்திடவேண்டும். அது சொல்வதை நாம் கேட்கக் கூடாது. நாம் என்ன சொல்கிறோமோ அதைத்தான் நமது மனது கேட்கவேண்டும்'' என்றெல்லாம் நாம் பற்பல உபன்யாசங்களிலும், பயிற்சி வகுப்புக்களிலும் கேட்டு வருகின்றோம். ஆயினும்,, நம்மில் எத்தனை பேருக்கு அது சாத்தியமாகியிருக்கின்றது என்று கேட்டால், மௌனம்தான் பதிலாக இருக்கும்! ஆனால், ஆசார்யாளிடம் காணப்பட்ட, ஏனையோரை பிரமிக்கவைத்திடுவதான ஒரு குணமானது அவரது மனக்கட்டுப்பாடாகும். இதற்குச் சரியானதோர் உதாரணமாகப் பின்வரும் சம்பவத்தினைக் கூறலாம். பதின்மூன்றாம் வயதில் அவருக்கு உபநயனம் செய்யப்பட்டதும் காயத்ரி மந்திரத்தை ஜபிப்பதில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. முடியும் சமயங்களிலெல்லாம் மனத்தினுள் காயத்ரியை ஜபித்திடும் வழக்கத்தை அவர் துவங்கினார். நாளடைவில், அவர் மற்ற பணிகளில் ஈடுபடும் சமயங்களிலும் மற்றும் அவரது கனவிலுமேகூட, காயத்ரி ஜபத்தினைத் தானாக செய்துக் கொண்டிருக்கின்ற அளவிற்கு அவரது மனமானது ஒரு நிலைப்பட்டிருந்தது. இச்சமயத்தில், அவருக்கு ஸன்யாஸ ஆசிரமத்தினை வழங்குவது என அவரது குருநாதர் முடிவுசெய்து அதற்கான நாளும் நிச்சயிக்கப்பட்டது. ஸன்யாஸ தீக்ஷையினைப் பெற்றுக்கொள்வதற்கு இரு நாட்களுக்கு முன்பாக ஆசார்யாளுக்கு ஓர் எண்ணம் வந்தது. அதாவது, ஸன்யாஸம் பெற்றுக் கொண்ட பிறகு, காவி வஸ்திரத்தினைத்தான் உடுத்திக்கொள்ள வேண்டும்; மேலும், பரமஹம்ஸ ஸன்யாஸிகளுக்கு காயத்ரி மந்திர ஜபமானது தடை செய்யப்பட்டிருக்கின்றபடியால் அதையும் ஜபித்திடக் கூடாது. இவை

இரண்டினையும், விழிப்பு நிலையினில் உள்ள போது தம்மால் நிறைவேற்றிட முடியும். ஆனால், தூங்கிய பிறகு, தமக்கு தினமும் தோன்றி வந்த 'வெள்ளை வஸ்திரத்தினை உடுத்திக்கொண்டு, காயத்ரி மந்திரத்தினை ஜபிப்பதான' கனவுகளை என்ன செய்வது? கனவு என்பது ஒருவரது கட்டுப்பாட்டில் இல்லையாதலால், அவற்றில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டாலும் அவை பாவத்தை ஏற்படுத்து-வதில்லை. இதனால், ஸன்யாஸத்திற்குப் பிறகும் ஒருவருக்கு வெள்ளை வஸ்திரத்தில் இருந்து காயத்ரியை ஜபிப்பது போல கனவு வந்தாலும் அதனால் ஒரு பாவமும் வந்துவிடப்போவதில்லைதான். ஆனாலும், ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுக்கோ (ஆசார்யாளின் பூர்வ ஆசிரமப் பெயர்) "எனது ஸன்யாஸமானது எப்படிப்பட்டதொரு சிரத்தையுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும் என்றால், எனது ஸன்யாஸத்திற்குப் பிறகு எந்த ஒரு கனவிலும் நான் என்னை இப்போதுள்ளது போல் வெள்ளை வஸ்திரம் அணிந்துகொண்டு பார்க்கவே கூடாது. காயத்ரி மந்திரத்தை ஜபித்திடுவது எனக்கு மிகவும் விருப்பமானதே. ஆனாலும் பரமஹம்ஸ ஸன்யாஸிகளுக்கு காயத்ரி மந்திர ஜபம் தடை செய்யப்பட்டிருப்பதால், நான் நாளை மறுநாளிலிருந்து, எனது கனவுகளில்கூட, காயத்ரி மந்திர ஜபம் செய்வதில் ஈடுபட்டிடக் கூடாது" எனும் தீர்மானமான எண்ணம் தோன்றியது. அந்தத் தீர்மானத்தின் சக்தி அவர் ஸன்யாஸம் பெற்றுக்கொண்ட அன்றைய இரவே வெளிப்பட்டது. அன்றைய இரவிலேயே அவருக்கு வந்த கனவில் தம்மை அவர் காவியுடை தரித்தவராகவே கண்டாரே தவிர, முன்பு இருந்ததைப் போல் வெள்ளை ஆடையில் அல்ல! அன்றைய தினத்திலிருந்தே கனவிலும்கூட காயத்ரி ஜபம் நடைபெறவேயில்லை! அந்த அளவிற்கு அவரது மனம் அவருக்கு அடங்கி நடந்தது!

தாம் முன்கூட்டியே தீர்மானித்த கால அளவிற்கு ஸர்வ சஹஜமாக நிர்விகல்ப ஸமாதியில் இருந்து விட்டு எழுந்திடும் குணாதிசய வல்லமை ஆசார்யாளிடம் இருந்துவந்தது. 10-12-1935 அன்று நிர்விகல்ப ஸமாதி அனுபவத்தினை அடைந்த ஆசார்யாள் அடுத்த சில நாட்களில் பேரானந்தக் கடலான அதிலேயே நிலைத்து அதிலிருந்து பிறர் எழுப்பினாலன்றி தாமாக எழ முடியாத பிரம்மவித்வரீயான் எனும் நிலையினை அடைந்துவிட்டார். ஆயினும்,

அந்த நிலையிலிருந்து தமது குருநாதரால் எழுப்பப்பட்டு, “ஸமாதியையும் மனம் அந்தர்முகமாகச் செல்வதையும் இனிமேல் முறைப்படுத்திக் கொள்ளுங்கள்” என குருநாதர் கூறியதும், ஆசார்யாளின் மனம் அப்படியே மறு பேச்சு பேசாது கீழ்ப் படிந்தது. அது பற்றி தமது சீடர் ஒருவரிடம் பிற்காலத்தில் உரையாடிக் கொண்டிருந்த போது, “குருநாதரின் வார்த்தைகள்தான் எனக்கு எல்லாமே. ஸமாதிக்குச் செல்ல வேண்டும் எனும் வாஸனை எவ்வளவுதான் சக்தி வாய்ந்ததாக இருந்தாலும், குருநாதரின் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிதல் என்ற வாஸனைக்கு முன் அது ஒருபோதும் எடுபடாது” என்று கூறினார் ஆசார்யாள். அன்றிலிருந்து, தமது உடலை நீத்த 1989ம் வருடம் வரை, தாம் முன்கூட்டியே தீர்மானித்த கால அளவிற்கு நிர்விகல்ப ஸமாதியில் அமர்ந்து எழுவதினை வழக்கத்தில் வைத்திருந்தார் அவர். நிர்விகல்ப ஸமாதி நிலையினை அடைவது என்பதே அனைவருக்கும் ஸாத்தியம் என்று கூறிட முடியாது. அப்படியே அதனை அடைந்துவிட்டாலும், அதில் மனது அனுபவித்திடும் இணையற்ற பேரானந்தத்திலிருந்து எழுந்து கற்பனையான இந்த உலகில் விவகாரங்களைச் செய்திட அந்த யோகிக்கு விருப்பம் இருப்பது என்பது மிக மிக அரிதே. இந்த இரண்டையும் ஸாதித்துக் காட்டியவர் ஆசார்யாள்.

ஒருவரது உள்ளக்கிடக்கை அவர் கூறாமலே தெரிந்துகொண்டு அதன்படியே அவருக்கு அருளும் பாங்கு ஆசார்யாளிடம் காணப்பட்டது.

ஒரு சமயம், பெங்களூருவிற்கு விஜயம் செய்திருந்த ஆசார்யாள், குறிப்பிட்ட ஒரு நாள் ஶ்ரீ சுப்பராமய்யா எனும் பக்தரின் இல்லத்திற்கு வருகை தருவதாக இருந்தது. ஆசார்யாளின் புனிதப் பாதுகைகளை தமது பூஜை அறையில் வைத்து பூஜிக்க வேண்டும் எனும் அவா ஶ்ரீ சுப்பராமய்யாவுக்கு வந்தது. ஆயினும், “நானாக ஆசார்யாளிடம் ‘எனக்கு தங்களது பாதுகைகளை அருளுங்கள்’ எனக் கேட்க மாட்டேன். ஆசார்யாள் என்னுடைய இல்லத்திற்கு வரும் போது அவராகவே அவற்றை இங்கே விட்டுவிட்டுச் செல்ல வேண்டும்” எனும் எண்ணமும் அவருக்கு இருந்தது. குறிப்பிட்ட நாளன்று ஆசார்யாளும் ஶ்ரீ சுப்பராமய்யாவின் இல்லத்திற்கு வந்துவிட்டுச்

சென்ற பிறகு, ஆசார்யாள் தமது பாதுகைகளை தமது இல்லத்திலேயே விட்டுச் சென்றிருப்பதைக் கண்டு வியப்படைந்தார் ஸ்ரீ சுப்பராமய்யா. அவற்றை எடுத்துச் சென்று தமது பூஜை அறையில் வைத்து பூஜிக்க வேண்டும் எனத் தோன்றினாலும், அவற்றினைத் தனக்காகத்தான் விட்டுச் செல்வதாக ஆசார்யாள் கூறாததால், அவற்றை பத்திரமாக எடுத்துச் சென்று, ஆசார்யாளிடமே ஒப்படைக்க வேண்டும் எனத் தீர்மானித்தார் அவர். அதன்படியே அவற்றினை எடுத்துக்கொண்டுபோய் ஆசார்யாளிடம் ஸமர்ப்பித்த போது, ஆசார்யாள் அவரிடம், "அவற்றை உனக்காகத்தான் அங்கே விட்டுவிட்டு வந்தேன். நீயே வைத்துக்கொள்" என்று கூற, அகமகிழ்ந்து போனார் ஸ்ரீ சுப்பராமய்யா.

அஹிம்சையே உருவானவர் ஆசார்யாள். அவர் விலங்குகளிடம் பேசுவதையும், அவையும் அவர் சொல்வதைக் கேட்டு நடப்பதினையும் கண்கூடாகக் கண்டு வியந்திருக்கின்றனர் பலர். தெரு நாய் ஒன்று மடத்து வளாகத்தினுள் உலவி வந்தது. அதற்கு கரியா என்றும் பெயர் சூட்டியிருந்தனர் மடத்து ஊழியர்கள். ஆசார்யாள் வெளியில் வரும் போது, கரியா எங்கிருந்தாலும் ஓடி வந்து, அவரது பின்னாலேயே நடந்து செல்லும். அவர் தமது குரு மற்றும் பரம குருவின் சமாதி ஆலயங்களுக்குள் செல்லும் சமயம் அது வெளியிலேயே நின்றுகொள்ளும். ஆசார்யாள் வெளியில் வந்த பிறகு, மீண்டும் அவர் பின்னால் செல்லத் துவங்கும். இறுதியாக, ஆசார்யாள் தமது அறைக்குத் திரும்பியதும், கரியா அங்கிருந்து கிளம்பிவிடும். ஒரு சமயம், சாரதாம்பாளின் ஆபரணங்களை மெருகூட்டும் பணியானது மேற்கொள்ளப்படவிருந்தது. அதனை மேற்பார்வையிடும் பணியினை ஸ்ரீமதி ராஜம் என்ற ஒரு பக்தையிடம் ஆசார்யாள் ஒப்படைத்திருந்தார். மிக அரிதானவையும், விலைமதிக்க முடியாதவையுமான அந்த ஆபரணங்களைப் பத்திரமாக, அப்பணி முடியும் வரை பாதுகாத்திட வேண்டிய பொறுப்பு தனக்குக் கொடுக்கப்பட்டிருந்ததால், அந்த பக்தைக்கு பயநடுக்கம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு நாள், தமது குருநாதரின் ஸமாதி ஆலயத்திற்கு விஜயம் செய்து விட்டு வெளியே வந்தார் ஆசார்யாள். கரியாவும் சற்றுத் தொலைவில் அவரைப் பின்தொடர்ந்து வந்து

கொண்டிருந்தது. ஒரு தருணத்தில், ஆசார்யாள் நின்று, திரும்பி, நாயைப் பார்த்து, "கரியா, இங்கே வா" என்று கூப்பிட்டார். அதுவும் உடனே ஓடி வந்து, அவரருகில் நின்றது. அங்கே நின்று கொண்டிருந்த ஸ்ரீமதி ராஜம் அவர்களை அதனிடம் சுட்டிக்காட்டிய ஆசார்யாள், "இதோ பார், மடத்து சம்பந்தப்பட்ட முக்கியமானதொரு பணி இந்த மாமிக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அது விஷயத்தினில் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு தேவை. ஆகவே, அது முடியும் வரை, நீ இவர்களுடன் தங்கி, இவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து வா" எனக் கூறினார். அவ்வளவுதான், அந்த சமயத்திலிருந்தே கரியா ஸ்ரீமதி ராஜம் அவர்களது இல்லத்திலேயே தங்க ஆரம்பித்துவிட்டது! அவர்கள் என்ன உணவினைக் கொடுக்கின்றார்களோ, அதனையே சாப்பிடும் அது. அவர்கள் தமது இல்லத்தில் இருக்கும் வரையில், அது அந்த இடத்தைவிட்டு நகர்வதே இல்லை. ஸ்ரீமதி ராஜம் வேறு எங்காவது கிளம்பினால், அவருடனேயே அவரது நிழல் போன்று அது பின்தொடர்ந்து செல்லும். அந்த நாள் முதல், வழக்கமாக, ஆசார்யாளைத் தொடர்ந்து செல்வதினையும் அது நிறுத்திக்கொண்டுவிட்டது. அந்த மெருகூட்டும் பணி முடிந்ததும், மீண்டும், தனது முந்தைய வழக்கத்தினை அது தொடரத் துவங்கிவிட்டது! எந்தவித பயிற்சியையும் அடைந்திராத ஒரு சாதாரணத் தெரு நாய் அவ்விதம் நடந்துகொண்டது ஆசார்யாளால் விலங்குகளுடனும் பேசிட இயலும் என்பதை உணர்த்துகின்றது அல்லவா!

## ॥ कामिताशेषफलदः ॥

## 21. காமிதாசேஷ-பலத:

(விரும்பிய அனைத்து பலன்களையும் அருளுபவர்)

அஹேது கருணாசாலியான (காரணம் எதுவுமின்றி கருணையைப் பொழிபவர்) ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமி-

களைத் தரிசித்து, தத்தம் குறைகளை அவரிடம் சமர்ப்பித்து, அவரருளை வேண்டிடும் நபர்களுக்கும் சரி, மேலும் தத்தம் விருப்பங்களை மனதில் வைத்து, ஆசார்யாளை தரிசிக்கும் சமயம் அவற்றை வெளிப்படுத்தாது இருந்திடும் நபர்களுக்கும் சரி, அவரவர் விருப்பங்களை ஆசார்யாள் அருளிய நிகழ்ச்சிகள் எண்ணற்றவையாகும். அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

ஆசார்யாளின் பரமானுக்ரஹத்தினால் யோக மார்க்கத்தில் விரைந்து முன்னேறும் பாக்கியத்தை அடைந்த சீடர் ஒருவருக்கு நீண்ட நாள் விருப்பம் ஒன்று இருந்தது. ஆசார்யாள் நிர்விகல்ப ஸமாதியில் இருந்திடும் சமயம் அவரைத் தரிசிக்க வேண்டும் என்பதே அது! ஆயினும், தமது இந்த விருப்பத்தை அவர் ஆசார்யாளிடம் தெரியப்படுத்திக்கொள்ளவில்லை. ஒரு நாள் ஆசார்யாள் அவரை ஸ்ரீ கால பைரவரின் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு உள்ளே சென்று அமர்ந்த ஆசார்யாள் இவரையும் அமருமாறு கூற, இவரும் அமர்ந்து கொண்டார். அடுத்த கணம் ஆசார்யாள் இவரிடம், "சரி, இப்போது நாம் இருவரும் தியானம் செய்வோம்" எனக் கூறி, தமது கண்களை மூடி தியான நிஷ்டையில் ஆழ்ந்து விட்டார். அந்தத் திவ்ய காட்சியானது இந்த சீடரை மெய்சிலிர்க்க வைத்தது. சில கணங்களில் இவருமே ஆழ்நிலைத் தியானத்துள் இழுக்கப்பட்டுவிட்டார். சுமார் அரை மணி நேரம் அந்நிலையிலிருந்த சீடர் பிறகு கண் விழித்த சமயம், ஆசார்யாளும் தமது தியானத்திலிருந்து மீள்வதைக் காணும் பாக்கியத்தை அடைந்தார். பிறகு ஆசார்யாள் இவரிடம், "நிர்விகல்ப ஸமாதி நன்றாக இருந்ததல்லவா!" எனக் கேட்டுப் புன்னகைத்தார். அப்போதுதான் இந்த சீடருக்குத் தமது ஸத்குருநாதர் தமது மனதுள் இருந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைத்ததோடு, தமக்கும் அந்த ஸமாதி அனுபவத்தை அருளியிருக்கின்றார் என்பது புரிந்தது!

ஆசார்யாளைத் தரிசித்த பக்தை ஒருவர், "ஆசார்யாளின் பாத தூளிகள் தன்னுடைய இல்லத்தில் பட வேண்டும்" எனும் தனது விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். பிறகு ஒரு சமயம் அந்தப் பெண்மணியின் இல்லம் இருந்த ஊரின் வழியாக ஆசார்யாள் பயணித்த போது, அவரது இல்லத்திற்கு விஜயம் செய்தார். சமீபத்தில்தான் அவ்வீடு கட்டி முடிக்கப்பட்டிருந்த காரணத்தினால், சாலையிலிருந்து

வீட்டின் முன் கதவு வரை உள்ள பாதையானது சமன்படுத்தப்படாது ஒரே கல்லும் மண்ணுமாக இருந்தது. காரிலிருந்து கீழே இறங்கிய ஜகத்குரு, தமது பாதுகைகளை அணியாமலேயே அப்பகுதியில் நடந்து வீட்டினை அடைந்தார். அதைக் கண்ட அந்தப் பெண்மணி மிகவும் பரிதவித்துப் போய், ''ஆசார்யாள் இப்படிக் கரடு முரடான பாதையில் நடந்து வரும்படி நேர்ந்து விட்டதே'' எனும் தனது கவலையை ஸத்குருவிடம் தெரியப்படுத்தினார். அதற்கு ஆசார்யாள், ''அதைக் குறித்து நீ கவலைப்படத் தேவையில்லையம்மா. இம்மாதிரியான நிலப்பரப்புகளில் நிறைய நடந்திருக்கின்றேன். எனக்கு இது பழக்கமான ஒன்றுதான்'' எனப் பதிலளித்ததுடன், ''உன் அபிலாஷையும் இதன் மூலமாகப் பூர்த்தி ஆகிவிட்டதுதானே'' என்றும் கூறிப் புன்னகைத்தார். அதன் பொருளை உடனடியாகப் புரிந்து கொள்ள இயலாது குழம்பிய அந்தப் பக்தைக்கு, தமது இல்லத்துள் ஆசார்யாளின் திருப்பாதங்களிலிருந்து தரையெங்கும் சிந்தியிருந்த மணலைக் கண்டதும், விஷயம் விளங்கிவிட்டது. ஆசார்யாளின் பாத தூளிகள் தனது இல்லத்தில் பட வேண்டும் எனும் தனது வேண்டுகோளைப் பூர்த்தி செய்வதற்காகவே ஆசார்யாள் பாதுகைகளை அணியாது நடந்து வந்திருப்பது அந்த பக்தைக்குப் புரிந்தது!

சென்னை அடையார் ஸ்ரீ அனந்தபத்மநாப ஸ்வாமி கோயிலின் அறங்காவலராகிய ஸ்ரீ ஸ்ரீனிவாச ராவ் அவர்கள் ஆசார்யாளின் கருணையானது தமது பிரச்சினைகளை எவ்விதம் தீர்த்துவைத்தது என்பதை பக்தி மேலிட நினைவு கூர்ந்ததாவது: ''குறிப்பிட்ட சில பிரச்சினைகளால் நான் பெரிதும் பாதிக்கப்பட்டு மனவமைதியை இழந்திருந்தேன். ஆசார்யாளின் அருளைப்பெற வேண்டி, எனது மனைவியையும் அழைத்துக்கொண்டு சிருங்கேரிக்குச் சென்றேன். காலை தரிசனத்தின் சமயம் என்னைப் பார்த்து புன்னகைத்த ஜகத்குரு என்னிடம், ''என்ன விஷயம்?'' என்று கேட்டார். சில பிரச்சினைகள் இருக்கின்றன; ஆசார்யாளிடம் தெரிவிப்பதற்காக வந்திருக்கிறேன்'' என்றேன். சிரித்துக்கொண்ட அவர், ''போய் எல்லா சன்னிதிகளிலும் தரிசனம் பண்ணிவிட்டு இங்கு வாருங்கள்; நாம் பேசலாம்'' என்றார். ஆசார்யாளுக்கு பிக்ஷாவந்தனத்தைச்

செய்துவிட்டு, அவரது கட்டளைப்படியே அனைத்து சன்னிதிகளுக்கும் சென்று தரிசித்துவிட்டு மதியம் 2 மணி அளவில் ஆசார்யாளைத் தரிசிப்பதற்காகச் சென்றோம். எங்களுக்கு பிக்ஷா வந்தன பிரஸாதத்தை தந்தருளிய ஆசார்யாள், எங்களிடம், “நீங்கள் இன்று மங்களூர் செல்ல வேண்டுமில்லையா? இப்போதே கிளம்பினால்தான் இருட்டுவதற்குள் மங்களூருக்குப் போய்ச் சேர முடியும். இல்லை என்றால், மலைப் பாதையில் காட்டு யானைகளிடம் மாட்டிக்கொள்ள நேரிடலாம். அதனால் நீங்கள் இப்போது புறப்படலாம்” என்றபடியே தாமும் தமது அறைக்குள் செல்லத் துவங்கினார். நான் உடனே, “மஹாஸ்வாமி, என்னுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காமல் நான் இங்கிருந்து கிளம்புவதில்லை எனும் தீர்மானத்துடன்தான் வந்திருக்கிறேன்” என்றேன். திரும்பி என்னைப் பார்த்து சிரித்த ஆசார்யாள், “என்ன உன் பிரச்சினை?” என்று கேட்டார்.

**நான்:** என்னுடைய முதல் பெண்ணிற்கு சரியான வரன் அமையாததால் இன்னும் திருமணம் ஆகவில்லை.

**ஆசார்யாள்:** இன்னும் ஒரு வாரத்தில் இந்த பிரச்சினை தீர்ந்துவிடும். கவலை வேண்டாம். அடுத்த பிரச்சினை என்ன?

**நான்:** நான் நடத்தி வரும் தொழிற்சாலை முழுவதும் தீக்கு இரையாகிவிட்டது. இதனால் உற்பத்தியும் நின்றுபோய் பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

**ஆசார்யாள்:** அது பற்றிக் கவலைப்பட வேண்டாம். நஷ்டம் ஈடுகட்டப்படும். உற்பத்தி மீண்டும் துவங்கும். தொழிற்சாலையின் ஆண்டு விற்பனை 100 கோடியைத் தொடும்.

ஆசார்யாளின் வார்த்தைகள் எனக்கு மிகுந்த மனவமைதியைக் கொடுத்தன. திருப்தியுடன் அங்கிருந்து கிளம்பினோம். சரியாக ஒரே வாரத்திற்குள் எனது பெண்ணிற்கு நாங்கள் விரும்பிய வகையிலேயே வரன் கிடைத்துவிட்டது. தொழிற்சாலையில் ஏற்பட்ட நஷ்டத்திற்கு இன்ஷூரன்ஸ் நிறுவனத்தில் இருந்து நஷ்ட ஈட்டுத் தொகையும் முழுவதுமாக வந்துவிட்டது! உற்பத்தியும் மீண்டும் துவங்கி, ஆசார்யாள் அருளியது போலவே தொழிற்சாலையின் வருமானமும் 100 கோடியைத் தொட்டது!

மலேசிய நாட்டைச் சேர்ந்த மாணவன் ஒருவன் சுற்றுப் பயணமாக சிருங்கேரிக்கு வந்திருந்தான். ஸ்ரீ சாரதாம்பாள் உருவம் பதித்த டாலர் ஒன்றினை வாங்கி அணிந்துகொள்ள ஆசைப்பட்டவனாய் அனைத்து இடங்களிலும் அலைந்து அதைத் தேடினான். அவனுக்கு அது எங்கும் கிடைக்கவில்லை. பக்தர்களிடம் விசாரித்துப் பார்த்தான். அவர்களாலும் அவனுக்கு உதவிட இயலவில்லை. அன்றைய தினம் மாலையில் ஆசார்யாளைத் தரிசிப்பதற்காக குழுமியிருந்தோரிடையே அவனும் நின்றிருந்தான். சிறிது நேரத்தில் அங்கு வந்து அமர்ந்த ஆசார்யாள் அனைவரையும் பார்வையிட்ட சமயம், அவரது பார்வை இந்த மாணவனின் மீதும் பட்டது. அவனை தமதருகினில் வருமாறு அழைத்த ஆசார்யாள் அவனிடம், "நீ யாரப்பா, எந்த நாட்டைச் சேர்ந்தவன்? என்ன விஷயமாக சிருங்கேரிக்கு வந்திருக்கிறாய்?" என்று விசாரித்தார். அவனும் பதிலளித்தான். சில நிமிடங்கள் அவனுடன் பேசிய ஆசார்யாள், அவனுக்கு ஒரு வெள்ளி டாலரை அளித்து அவனை ஆசீர்வதித்தார். தான் ஆசையுடன் தேடிக் கொண்டிருந்த ஸ்ரீ சாரதாம்பாளின் உருவம் பதித்த அதை ஆசார்யாளே தனக்கு அளித்தருளியதைக் கண்டு அவனுக்கு மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. பாத பூஜை செய்பவர்களுக்குத்தான் அந்த டாலர் வழங்கப்படுவது வழக்கம். சிருங்கேரி மற்றும் மடத்திற்குப் புதியவனாகிய அந்த மாணவனுக்கு இந்த விவரங்கள் தெரியாது. மேலும், ஆசார்யாளிடம் இந்த டாலரைக் கேட்டிட வேண்டும் என்பதையும் அவன் எண்ணவேயில்லை. ஆயினும், அவனது உள்ளக்கிடக்கை புரிந்துகொண்டவராக, ஆசார்யாளே அவனது விருப்பத்தைப் பூர்த்திசெய்து வைத்தார்.

## ॥ कोमलस्वान्तसंयुतः ॥

## 22. கோமள-ஸ்வாந்த-ஸம்யுத:

(மிருதுவான இதயம் கொண்டவர்)

ஆசார்யாளின் இதயம் மிருதுவானது. எவருக்கும் எவ்விதத் துன்பத்தினையும் தருவதற்கு எண்ணாதது. அவரது பக்தர்களுள்

அவரது கனிவான இதயத்தினைப் பற்றி அறியாதவர்கள் என எவருமே இருக்கமுடியாது.

அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கும் இல்லம் ஒன்றிற்கு ஆசார்யாள் ஒரு சமயம் விஜயம் செய்தார். அந்த இல்லத்தின் நிர்வாகியானவர் அங்கு வசித்து வரும் ஒவ்வொரு குழந்தையும் எவ்விதமான பரிதாபச் சூழ்நிலையில் கண்டெடுக்கப்பட்டது எனும் விவரத்தை ஆசார்யாளுக்குக் கூறத் துவங்கினார். அவற்றைக் கேட்ட போது ஆசார்யாளின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்கத் துவங்கிவிட்டது.

மற்றொரு சமயம், ஆசார்யாளின் தெய்வீக சன்னிதியில் பக்தர் ஒருவர் பாத பூஜையினைச் செய்து கொண்டிருக்க, தனது மடியில் குழந்தையை வைத்துக் கொண்டு அவரது அருகில் இருந்த அவரது மனைவியோ குழந்தையையும் கவனித்துக்கொண்டு, பூஜையிலும் ஈடுபட முயற்சித்துக் கொண்டு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அந்தப் பெண்மணியின் நிலையைக் கண்டு ஆசார்யாளுக்கு பரிதாபம் தோன்றிவிட்டது. உடனே அவர் அந்தப் பெண்ணிடம், “குழந்தையை என்னிடம் கொடம்மா” எனக் கூறி, குழந்தையை வாங்கித் தமது மடியிலேயே வைத்துக் கொண்டு, “இப்போது நீ நிம்மதியாக பூஜையைச் செய்யம்மா. அது வரை நான் குழந்தையை வைத்துக் கொள்கிறேன்” என்று சொல்லிவிட்டார், ஆசார்யாளின் கருணைப் பிரவாகத்தினைக் கண்ட அந்தத் தம்பதிகள் விக்கித்துப் போய்விட்டனர்!

ஒரு நாள், சச்சிதானந்த விலாஸத்தில் பக்தர்களுக்கு ஆசார்யாள் தீர்த்தப் பிரசாதத்தினை வழங்கிக் கொண்டிருந்த சமயம், ஆசார்யாளிடம் தீர்த்தப் பிரசாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனும் ஆசையுடன் வந்த, கால்கள் முடமான ஒருவர் அங்கிருந்த படிகளில் ஏற முடியாது சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அதைக் கவனித்து விட்ட ஆசார்யாளுக்கு இதயம் நெகிழ்ந்து விட்டது. உடனடியாகத் தமது ஆசனத்திலிருந்து எழுந்த ஆசார்யாள், தமது உதவியாளரை அழைத்து, தீர்த்தப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு தம்மைப் பின் தொடருமாறு அவரிடம் கூறி, தாமே அந்த நபர் இருந்த இடத்திற்குச்

சென்று அவருக்கு தீர்த்தப் பிரசாதத்தை வழங்கி அவரை ஆசீர்வதித்து விட்டுத் திரும்ப தமது ஆசனத்திற்கு வந்து, வரிசையில் நின்றுகொண்டிருந்தவர்களுக்கு தீர்த்தப் பிரசாதத்தை வழங்கத் துவங்கினார்.

ஒரு தருணம், ஆசார்யாளின் தரிசனத்திற்காக, பக்தர்களுக்கான வரிசையில் வந்திருந்த வைதீகர் ஒருவர் ஆசார்யாளிடம் தன்னுடைய ஏழ்மை நிலையினை எடுத்துக் கூறி, தன்னுடைய பெண்ணிற்கு திருமணம் செய்துவைக்கக்கூட தன்னிடம் பொருள் வசதி இல்லை என்பதை மிகுந்த மன வேதனையுடன் தெரிவித்தார். அவரது நிலையினைக் கண்டு வருந்திய ஆசார்யாள், தமக்கு முன் வைக்கப்பட்டிருந்த காணிக்கைத் தட்டில் அன்று சேர்ந்திருந்த பணம் அத்தனையையும் அந்த வைதீகருக்கே அளித்துவிட்டார். பணத்தை எண்ணிப் பார்த்த வைதீகர், தமக்குத் தேவைப்படுவதை விட மிக அதிகமாகவே இருப்பதைக் கண்டு, மிகவும் மகிழ்ச்சி அடைந்து-விட்டார்.

ஒரு சமயம், ஆசார்யாள் பக்தர்களின் முன்னிலையில் அமர்ந்து தரிசனம் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது, அங்கே அமர்ந்திருந்த வயதான ஒரு பெண்மணி எழுந்து ஆசார்யாளிடம் சென்று தனது கஷ்டங்களைப் பற்றிக் கூறி ஆசார்யாளின் அனுக்கிரஹத்தை வேண்டிக் கொண்டார். ஆசார்யாளும் அவருக்கு ஆறுதல் கூறி பிரசாதம் கொடுத்து ஆசீர்வதித்தார். அதனைப் பெற்றுக்கொண்டு, தான் அமர்ந்திருந்த இடத்திற்கே திரும்பிய அந்தப் பெண்மணி, சிறிது நேரம் சென்று மீண்டும் எழுந்து, ஆசார்யாளிடம் வந்து தனது கஷ்டங்களைப் பற்றிக் கூறி ஆசார்யாளின் அனுக்கிரஹத்தை வேண்டிக் கொண்டார். மீண்டும், ஆசார்யாளும் அவருக்கு ஆறுதல் கூறி பிரசாதம் கொடுத்து ஆசீர்வதித்தார். தமது இடத்திற்குத் திரும்பிய அந்தப் பெண்மணி, சிறிது நேரம் சென்று மீண்டும் எழுந்து வந்து, ஆசார்யாளிடம் அதே கோரிக்கையை வைத்தார். ஆசார்யாளும் அவருக்கு ஆறுதல் கூறி பிரசாதம் கொடுத்து ஆசீர்வதித்தார். இந்தப் பெண்மணி தமது அந்த செய்கையினை பல முறைகள் செய்தும், ஒவ்வொரு முறையும், ஆசார்யாள் தமது பொறுமையை இழக்காது, அந்தப் பெண்மணியின்

விஷயத்தில் மிகவும் கருணை கொண்டு, அவருக்கு ஆசி கூறி வந்தார்! கூடியிருந்த அனைவரும் இதனைப் பார்த்து மலைத்துப் போயினர். அந்தப் பெண் ஏதோ விவரிக்கவியலாத துன்பத்தினாலும் பயத்தினாலும் மிகுந்த மன அழுத்தத்திற்கு உட்பட்டு அங்கு வந்திருப்பதை ஆசார்யாளும் புரிந்து கொண்டிருந்தார். ஆசார்யாள் ஒரு முறை செய்யும் ஆசீர்வாதமே போதுமானது என்ற போதிலும், பயத்தில் சோர்ந்து போயிருந்த அந்தப் பெண், தான் செய்வதை அறியாமல், திரும்பத் திரும்ப ஆசார்யாளை அணுகிக் கொண்டிருந்தார். எவருக்கும் இம்மாதிரித் தருணங்களில் பொறுமை மிக விரைவில் போய்விடும். ஆயினும், ஆசார்யாளின் மிருதுவான இதயமானது அந்த வயோதிக மாதுவின் விஷயத்தில் கனிவு-கொண்டு, அலுக்காது ஒவ்வொரு முறையும் அந்தப் பெண்மணிக்கு ஆறுதல் அளித்தது!

॥ कालट्यादिपरिष्कर्ता ॥

## 23. காலட்யாதி-பரிஷ்கர்த்தா

(காலடி முதலிய புண்ணியஸ்தலங்களை மேம்படுத்தியவர்)

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35ம் ஆசார்யராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்பு, ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் பற்பல விஜய யாத்திரைகளை மேற்கொண்டு, அதன் போது பல புண்ணிய ஸ்தலங்களுக்கும் விஜயம் செய்து அவற்றின் புனிதத்துவம் மேலும் பெருகிட வகை செய்தமையை ‘காலட்யாதி பரிஷ்கர்த்தா’ எனும் இந்த நாமத்தின் மூலம் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் வெளிப்படுத்துகின்றார்.

ஆதிசங்கர பகவத்பாதரின் அவதார ஸ்தலமான காலடியானது தமது குருநாதருக்கு மிகவும் பிடித்தமானது என்று ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் பல தருணங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். இதற்கு ஓர் உதாரணமாக, தமது உபன்யாஸம் ஒன்றின் போது ஸ்ரீ

பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் கூறியருளிய பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடலாம். "நமது குருநாதர் அவர்கள் காலடி க்ஷேத்திரத்தில் இரு முறை தமது சாதுர்மாஸ்ய விரதத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள். இதன் காரணம் என்னவென்பதை அவர்களே என்னிடம் ஒரு சமயம் கூறினார்கள்: 'எனக்கு இங்கேயே நீண்ட காலம் தங்கி இங்கு நடைபெறும் பல்வேறு கட்டிடப் பணிகளை மேற்பார்வை செய்ய விருப்பம் இருந்தது. சாதாரண நாட்களில் நான் இங்கு வந்தால், நீண்ட காலம் என்னால் தங்க முடியாது. ஏனென்றால் மற்ற ஊர்களில் வசிக்கும் நமது பக்தர்கள் என்னை அவர்களது ஊர்களுக்கும் வர வேண்டும் என வேண்டி மன்றாடத் துவங்கிவிடுவார்கள். நானும் கிளம்ப வேண்டி வந்துவிடும். ஆகவே-தான் நான் சாதுர்மாஸ்ய விரத காலங்களில் இங்கு வந்துவிடுவது என வைத்துக் கொண்டேன். ஏனென்றால், அச்சமயத்தில் மற்றவர்களது அழைப்புக்கள் வந்தாலும், அவர்களுக்கெல்லாம் சாதுர்மாஸ்ய காலத்தில் ஸன்யாசிகள் ஒரே இடத்தில் நீண்ட காலம் தங்கவேண்டிய விதியினைக் காரணம் காட்டிவிடும் சௌகர்யம் கிடைத்து விடுகின்றதே!' பகவத்பாதரின் அவதார ஸ்தலமான காலடியின் அபிவிருத்தியில் நமது குருநாதருக்கு இருந்த ஈடுபாடு அப்பேற்பட்டது!"

ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் பல்வேறு ஸ்தலங்களைத் தமது விஜயத்தால் மேன்மையுறச் செய்திருக்கின்றார். உதாரணமாக, தென்னிந்தியாவில் ஸ்ரீசைலம், திருப்பதி, சிதம்பரம், இராமேஸ்வரம், திருச்செந்தூர், மதுரை, பழனி, ஸ்ரீரங்கம், திருத்தணி எனப் பற்பல ஸ்தலங்களுக்கு ஆசார்யாள் விஜயம் செய்தருளியிருக்கின்றார். வட இந்தியாவில், நாசிக், த்வாரகா, உஜ்ஜயினி, ஹரித்வார், கேதார்நாத், பத்ரிநாத், வாரணாசி, கயா போன்ற ஸ்தலங்கள் ஆசார்யாளது விஜயத்தினால் மேலும் மெருகூட்டப்பட்டன. இம்மாதிரியான ஸ்தலங்களுக்கு விஜயம் செய்யும் போது அங்கு வரும் பக்தர்களுக்கு ஆசார்யாளின் தரிசனம் கிட்டுவதோடு, ஆசார்யாளின் உபதேச மொழிகளைக் கேட்டிடும் பாக்கியமும் உண்டாகியது. தவிரவும், அந்தந்த ஸ்தலங்களில் ஆலயங்களையும் தர்ம கார்ய ஸ்தாபனங்களையும் நிர்வகித்து வருவோருக்கும் ஆசார்யாளின் வழிகாட்டுதல் கிட்டிடும் வாய்ப்பும் உண்டாகியது.

॥ कामक्रोधविवर्जितः ॥

# 24. காமக்ரோத-விவர்ஜித:

(ஆசை மற்றும் கோபம் அற்றவர்)

பகவத் கீதையில் பகவான் ஶ்ரீ கிருஷ்ணர் காமத்தையும் கோபத்-தையும் நரகத்தின் வாயில்களெனவே குறிப்பிடுகின்றார். தமது குருநாதர் இவை இரண்டும் அற்றவராக விளங்கி வந்தார் என்பதை "காமக்ரோத விவர்ஜித:" எனும் இந்நாமத்தின் மூலமாக ஜகத்குரு ஶ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் குறிப்பிடுகின்றார். தமது உபன்யாஸம் ஒன்றின் போது ஜகத்குரு ஶ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் கூறிய-தாவது: "நமது குருநாதருக்குத் தெரிந்ததெல்லாம் மோக்ஷம் மட்டுமே. காமம் (ஆசை) என்பது அறவே அற்றவர் அவர்."

தமது விஜய யாத்திரையின் போது, வட இந்திய ஊர் ஒன்றில் இருந்த மடத்தில் ஆசார்யாள் தங்கியிருந்தார். அந்த மடத்தின் தலைவருக்கு 'ஆசார்யாளின் புலன் கட்டுப்பாடு எந்த அளவிற்கு இருக்கின்றது என்பதைப் பரீட்சை செய்து பார்க்கும் எண்ணம் வந்து விட்டது. கமகமக்கும் நெய்யில் செய்த பர்ஃபிகள் நிறைந்த தட்டு ஒன்றினைத் தமது சிப்பந்தி ஒருவரிடம் கொடுத்து ஆசார்யாள் தங்கியிருந்த அறைக்கு எடுத்துச் சென்று அவர் முன் வைத்து விட்டு, பிறகு மறைவாக நின்று ஆசார்யாள் என்ன செய்கின்றார் என்பதைப் பார்க்கும்படி உத்தரவிட்டார். ஆசார்யாளோ அந்த பதார்த்தங்களை இலட்சியமே செய்யவில்லை. இதையறிந்த அந்த மடத்துத் தலைவர், சிப்பந்தியை மீண்டும் அனுப்பி ஆசார்யாளிடம், "அந்த பண்டங்கள் ஆசார்யாளுக்கெனவே பிரத்தியேகமாக செய்து அனுப்பப்பட்டவை" என்று அறிவிக்கச் செய்தார். அதைக் கேட்டு சிரித்துக் கொண்ட ஆசார்யாள், "இம்மாதிரியான பதார்த்தங்களிலெல்லாம் எனக்கு ஆசை கிடையாதேப்பா. மேலும் நானோ ஒரு ஸன்யாஸி. எனக்கு இதெல்லாம் மறுக்கப்பட்ட ஒன்றும்கூட. ஆகவே, இதை எடுத்துக் கொண்டு போய் பக்தர்களுக்கு விநியோகம் செய்யலாமே" எனக் கூறிவிட்டார். பிறகு, அந்த மடத்தின் தலைவரே ஆசார்யாளிடம்

வந்து, விஷயத்தைக் கூறி, தமது செயலுக்கு வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டு ஆசார்யாளின் புலனடக்கத்தை மிகவும் மெச்சினார்.

‘ஆசைப்பட்ட விஷயம் மறுக்கப்படும் போது கோபம் உண்டாகின்றது’ என்பதே பொதுவாக கோபம் உண்டாவதற்கு காரணமாக விளக்கப்படுகின்றது. ஆசைகள் அறவே அற்றவரான ஆசார்யாளுக்கு கோபமும் அறவே இல்லாதிருந்தது. ஆயினும், தவறு செய்யும் ஒருவரைத் திருத்தும் நோக்கில், தமக்குக் கோபம் உண்டாவது போல் காட்டிக் கொள்வார் ஆசார்யாள். அந்தக் கோபத்தையும் உதட்டளவில்தான் வைத்துக் கொள்வாரே தவிர, மன அமைதியை இழக்கும் வகையில் செய்வதில்லை அவர்! ஒரு முறை, ஒரு நிறுவனத்தின் பெரிய பதவியில் இருந்த ஒருவர் தனக்குக் கீழ் பணி புரியும் தன்னைவிட வயதில் மிக மூத்த ஒருவரைப் பெரிதும் கடிந்து கொள்ள நேரிட்டது. இது அவருக்கு மிகவும் மன வேதனையை அளித்தது. இம்மன நிலையில் இருந்த அவர் ஒரு நாள் சிருங்கேரிக்குச் சென்று ஆசார்யாளைத் தரிசித்தார். அச்சமயம் ஆசார்யாள் தமது ஆசனத்தினின்று எழுந்து, தம்மைப் பின் தொடரும்படி இந்நபருக்கு சைகை காட்டி, நடக்கத் துவங்கினார். இவரும் ஆசார்யாளைப் பின் தொடர்ந்தார். ஆற்றினைக் கடந்து அக்கரைக்குச் சென்ற ஆசார்யாள் அங்கு சாரதாம்பாள் ஆலய மேற்கூரை கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்தை அடைந்தார். அங்கு, பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்க வேண்டிய தொழிலாளிகள் தங்கள் பணியைச் செய்யாமல், வீணாக அளவளாவிக் கொண்டிருந்தனர். அடுத்த கணம் அவர்களைக் கோபமாகச் சாடத் துவங்கினார் ஆசார்யாள். மேலும், அவரது முகத்தில் வீசிய கோபக் கனலைக் கண்ட இந்நபரோ விக்கித்துப் போய்விட்டார். இதனைச் சற்றும் எதிர்பாராத அத்தொழிலாளர்களும் நடுநடுங்கிப் போனவர்களாய், எழுந்து ஓடி தத்தம் பணிகளைச் செய்யத் துவங்கிவிட்டனர். பிறகு அங்கிருந்து கிளம்பிய ஆசார்யாள் ஆற்றங்கரையை அடைந்தவுடன், தம்மைப் பின்தொடரும் இந்நபரைத் திரும்பிப் பார்த்தார். ஆசார்யாளின் முகத்தைத் தரிசித்த இந்நபருக்கு அங்கு தெரிந்த அற்புதமான சாந்தத்தைக் கண்டு பேராச்சரியமாகப்

போய் விட்டது. சற்று முன் உக்கிர நரசிம்ம மூர்த்தியாகக் காட்சியளித்த ஆசார்யாள் ஒரு சில கணங்களுக்குள் சாந்த மூர்த்தியாக மாறிவிட்டிருந்தார். 'கோபம் என்பதை நமது கட்டுப்பாட்டினில் வைத்து, மற்றவர்களின் தவறினைத் திருத்தும் நோக்கில் குரலிலும், முக பாவனைகள் மூலமும் கோபப்படுவது போல் காட்டிக் கொள்ள வேண்டுமே தவிர, நாம் கோபத்திற்கு அடிமையாகி, நம் மன அமைதியினை இழந்து வேதனைக்கு உள்ளாகி விடுவதைத் தவிர்க்க வேண்டும்' எனும் அற்புதமானதொரு செயல்முறைப் பாடத்தை ஆசார்யாள் தனக்குக் கற்பித்திருப்பதை அந்நபர் உணர்ந்து கொண்டார்.

**॥ कराब्जविलसद्दण्डः ॥ & ॥ काषायाम्बरसंवृतः ॥**

## *25. கராப்ஜ-விலஸத்-தண்ட:*

(தமது தாமரைக் கரத்தில் தண்டத்தை ஏந்தியவர்)

&

## *26. காஷாயாம்பர-ஸம்வ்ருத:*

(காவி ஆடையைத் தரித்தவர்)

மேற்கண்ட இரண்டு திருநாமங்களுமே ஆசார்யாளின் ஸன்யாஸ ஆசிரம சிறப்பினைக் குறிக்கின்றன.

குடீசக, பஹூதக, ஹம்ஸ, பரமஹம்ஸ எனும் நான்கு வகையினரான ஸன்யாஸிகளில், ஆசார்யாள் பரமஹம்ஸ வகை ஸன்யாஸியாவார். சாஸ்திர விதிகளுக்கேற்பத் துறவை மேற்கொள்ளும் ஒருவர், தமது உடலில் காவி ஆடையை அணிந்து, கரத்தில் மூங்கிலாலான தண்டம் ஒன்றினையும் ஏந்தி வாழ்வது தொன்று தொட்டு இருந்து வரும் ஒரு சம்பிரதாயமாகும்.

பரமஹம்ஸ ஸன்யாசியானவர் தமது கரத்தில் ஒற்றைத் தண்டத்தை ஏந்தியிருப்பார். இந்தப் புனிதமான தண்டமானது மூங்கிலால் ஆனது; அதன் ஊடே செல்லும் துளையெதுவுமற்றது. இதனது நீளமும் குறிப்பிட்டதொரு வரையறைக்குட்பட்டது. அதாவது, கால் கட்டை விரலின் மேல் அதனை நிறுத்தும் பட்சத்தில் தண்டத்தின் மறு நுனியானது மூக்கின் நுனி வரையிலோ அல்லது புருவங்களின் மட்டத்திற்கோ அல்லது தலைமட்ட வரையிலோ இருந்திட வேண்டும் என்பதே அந்த வரையறை. தண்டத்தின் மேற்பகுதியில் ஒரு சிறு கொடியைப் போன்று தோற்றமளிக்கும் 'பரசு முத்திரை'யானது கட்டப்பட்டிருக்கும். அதற்குச் சற்றுக் கீழே, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விசேஷ முடிச்சுக்கள் சிலவற்றைக் கொண்ட நூல் ஒன்றும் சுற்றப்பட்டிருக்கும். ஸன்யாஸியின் தண்டமானது அவரது ஆசிரம தர்ம பரிபாலனத்தைக் குறிக்கின்றது.

ஸன்யாஸியின் உடலை அலங்கரிக்கும் காவி ஆடையானது அவரது விரக்திபாவனையைக் (உலக விஷயங்கள் அனைத்திலும் பற்றினைத் துறந்த நிலையை) குறிக்கின்றது.

ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் கடைப்பிடித்துவந்த ஸன்யாஸ தர்மபரிபாலனமும், அவரிடத்தே காணப்பட்ட விரக்தி பாவனையும் நிகரற்றவையாகவே விளங்கிவந்தன. பின்வரும் சம்பவங்களே இதற்கு எடுத்துக்காட்டு.

ஒரு முறை அவரது பூர்வாசிரம தாயாரான ஸ்ரீமதி வேங்கடலக்ஷ்மி அம்மாள் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த செய்தியை அவரிடம் தெரிவிப்பதற்காக வந்த மடத்தின் அதிகாரி அதனைக் கேட்டு ஆசார்யாள் மிகவும் துக்கப்படுவாரே என எண்ணி, பீடிகையுடன் துவங்கினார்.

**அதிகாரி**: தங்களிடம் ஒரு விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும். ஆயினும், சற்றுத் தயக்கமாக இருக்கின்றது.

**ஆசார்யாள்**: அது எதுவாக இருந்தாலும் நீங்கள் தயக்கப்படாமல் என்னிடம் கூறலாம்.

**அதிகாரி**: தங்களது தாயார் மரணப் படுக்கையில் இருப்பதாகத் தகவல் வந்துள்ளது. தாங்கள் சென்று அவரைப் பார்த்து வர விரும்பினால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்.

**ஆசார்யாள்**: நான் எதற்காக சென்று வர விரும்ப வேண்டும்? குடும்ப பந்தங்களைத் துறந்த ஸன்யாஸி அல்லவா நான்?

அந்த அதிகாரிக்கு மேற்கொண்டு பேச்சே எழவில்லை!

மற்றொரு சமயம், ஆசார்யாள் காலையில் உணவு எதுவும் எடுத்துக்கொள்வதில்லை என்பதையும், அவரது பணிகள் காரணமாக அவரது மதிய உணவும் கால தாமதமாகிவிடுவதையும் கண்டு அவருக்குச் சேவை செய்துவந்த ஊழியர் ஒருவர் மிகவும் மனம் வருந்தினார். ஆகவே, தினமும் காலையில் ஆசார்யாளுக்கு பழச் சாறினை அளிப்பது என அவர் தீர்மானித்துக்கொண்டார். முதல் நாள் அவர் ஆசார்யாளுக்கென தூய்மையாகத் தயாரிக்கப்பட்ட பழச் சாறு நிரம்பிய ஒரு தம்ளரை ஆசார்யாள் முன் வைத்து, "தயவு செய்து இதைத் தாங்கள் அருந்த வேண்டும்" என வேண்டிக் கேட்டுக் கொண்டார். அவரை நோக்கிய ஜகத்குருவோ, "என்ன இது? நான் இதைக் கேட்கவில்லையே?" என்றார். அந்த ஊழியரும், "தாங்கள் காலையிலிருந்து எதையுமே சாப்பிடாமல் இருக்கின்றீர்கள். பல நேரங்களில் மதிய உணவினை எடுத்துக்கொள்ளவும் தாமதமாகி-விடுகின்றது. அதனால், இனிமேல், காலை வேளைகளில், ஆசார்யாள் இந்த பழச் சாற்றினை அருந்தி வரலாமே என்பதனால் எடுத்து வந்திருக்கிறேன். அவர் கூறியதைக் கேட்ட ஆசார்யாள், "எதற்காக இந்த புது வழக்கம்? நானோ ஒரு ஸன்யாஸி. புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டியது எனக்கு விதிக்கப்பட்டிருக்கும் தர்மமாகும். ஆகவே, இந்த பழச்சாறு எனக்கு அவசியமில்லை; எடுத்துச் சென்று விடு. இனியும் இது போன்ற விஷயங்களை நீ செய்ய வேண்டாம்." என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

ஸன்யாஸிக்கென சாஸ்திரங்களால் விதிக்கப்பட்டுள்ள அனைத்து ஆஹ்னீக விதிகளையும் சரிவரக் கடைப்பிடித்து வந்தார் ஆசார்யாள். துறவு என்பதன் புனிதத்தினையும் மற்றும் அதற்கான விதிகளையும்

துறவியானவன் சரிவர புரிந்துகொண்டு அவற்றைக் கவனத்துடன் கடைப்பிடித்து வர வேண்டும் என்று ஆசார்யாள் கூறுவதுண்டு. இதற்கு உதாரணமாக பின்வரும் சம்பவத்தைக் கூறலாம்.

ஒருவர் தான் ஸன்யாஸம் பெற்றுக்கொள்வதற்காக ஆசார்யாளின் அனுமதியினை வேண்டி, அவரிடம் பல முறை பிரார்த்தித்தார். ஆயினும், ஆசார்யாள் அவருக்கு அனுமதி அளிக்கவில்லை. அந்த நபருக்கு இது ஒரு பெரும் குறையாக இருந்தது. ஆசார்யாளின் காரியதரிசியாகப் பணிபுரிந்து வந்த ஸ்ரீ கே.எம். பாலசுப்ரமணியன் ஒரு சமயம் ஆசார்யாளிடம் அந்நபரின் மனக்குறையினைப் பற்றித் தெரிவித்தார். அதற்கு ஆசார்யாள் அளித்த பதில்: ''தனக்கு ஸன்யாஸம் வேண்டும் என்பது போல அவருக்கு இப்போது தோன்றி, அதற்கு அனுமதியினை அவர் கேட்கலாம். ஆனால், (இங்கு அது பற்றிக் கேட்டுவிட்டு) பிறகு வீட்டிற்குத் திரும்பியதும், அவருக்கு ஸன்யாஸத்தில் ஈடுபாடு இன்னும் இருக்கின்றதா என்பதைத்தான் பார்க்கவேண்டும்! ஸன்யாஸத்தினை ஏற்றுக்கொண்ட பிறகு, அதற்கான ஆசிரம விதிகளை இவர் கடைப்பிடித்திட வேண்டும். தனக்கான உணவிற்காக இவர் பிச்சை எடுத்திட வேண்டும். அவருக்கு உணவளிப்பவர் தரும் உணவு சுவையற்று இருக்கும் பட்சத்தில் இவர் வருத்தப்படாதிருக்க வேண்டும். ஸன்யாஸிகள் பிறரால் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்ற போதிலும், எல்லோருமே ஸன்யாஸிகளை மதித்திடுவார்கள் எனக் கூறிவிட முடியாது. யாராவது ஒருவர் இவருக்கு நமஸ்காரம் செய்திடவில்லை என்றால் இவர் அதனால் பாதிக்கப்படக் கூடாது. துறவு என்பது (இம்மாதிரியாக) பின்பற்றுவதற்குக் கடினமான பற்பல விதிகளை உடையது. ஆகையினால், இவர், வெளிப்படையாக (உடல் ரீதியாக) ஸன்யாஸத்தினை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, மனத்தால் அனைத்தையும் துறந்து, கடுமையானதொரு தவ வாழ்க்கையினை வாழ்ந்து, ஒரு ஸன்யாஸிக்குரிய நியமங்களை அனுசரித்து வருவாரேயானால், அது அவருக்கு நலம் பயக்கும்.''

ஆசார்யாளின் துறவு வாழ்க்கையானது இதர துறவியர்க்கு ஒரு முன்மாதிரியாக அமைந்து இருந்தது எனக் கூறுவது மிகையாகாது.

## ॥ गुरुपादाम्बुजध्यायी ॥

# 27. குரு-பாதாம்புஜ-த்யாயீ

(குருவின் தாமரைப் பாதங்களைத் தியானிப்பவர்)

குரு பக்திக்கு இலக்கணமாக விளங்கியவர் ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். தமது பதின்மூன்றாம் வயதில் (1931) தமது உபநயனம் சிருங்கேரியில் நிகழ்த்தப் பெற்ற சமயத்தில்தான் அவர் தமது குருநாதரை (ஜகத்குரு ஸ்ரீமத் சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) முதன்முதலில் தரிசனம் செய்தார். அந்த முதல் தரிசனத்திலேயே தமது இதயத்தில் குருநாதரின் பாதத் தாமரைகளை ஆழப் பதித்துக் கொண்டுவிட்டார். அது எந்த அளவிற்கு இருந்தது என்றால், உபநயனம் முடிந்துவிட்டதால் ஊர் திரும்பவேண்டும் எனத் தமது பெற்றோர் முனைந்தபோது, "நீங்கள் செல்லுங்கள், நான் இங்கேயே (மடத்திலேயே) தங்கிவிடப் போகிறேன்" என உறுதியுடன் கூறும் அளவிற்கு இருந்தது!

எப்பொழுதும் தமது குருநாதரின் பாதமலர்களை மனதில் இருத்தி தியானித்து வந்தமையால், நடைபெறும் அனைத்தும் குருநாதரின் அருளே என்றதொரு அசைக்க முடியாத பாவனை ஆசார்யாளின் மனதில் இருந்துவந்தது. ஒரு சமயம், வேத பாடசாலையில் பயிலும் மாணவர்களிடம் குருநாதர் பேசிக்கொண்டிருந்தபோது, "உங்களுக்குத் தரப்படும் உணவு எப்படி இருக்கின்றது?" எனக் கேட்டார். ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு குறையைக் கூற, அப்போது (ஸ்ரீநிவாசன் எனும் பெயருடன்) வேத பாடசாலையின் ஒரு மாணவராக விளங்கிய ஆசார்யாளோ, "இங்கு எங்களுக்கு எது கிடைக்கின்றதோ அது குருநாதரின் பிரஸாதம். ஆகையால் அது எப்போதுமே சுவையாகத்தானிருக்கும்." எனப் பதிலளித்தார்.

மற்றொரு சமயம் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுக்கு கடும் ஜுரம் ஏற்பட்டு ஜன்னி கண்டு விட்டது. அச்சமயத்தில்கூட அவரதுத் திருநாவிலிருந்து

“ஸத்குரோ சரணம், ஸத்குரோ சரணம்” என்றுதான் வார்த்தைகள் வந்துகொண்டிருந்தன! பிற்பாடு, ஸன்யாசம் பெற்றுக் கொண்ட பின்பு குருவின் அருகாமையில் இருந்து அவருக்குப் பணிவிடைகளைச் செய்துவரும் பாக்கியம் ஆசார்யாளுக்குக் கிட்டியது. தமது அனைத்து விதமான ஆன்மீகச் சாதனைகளையும் தமது குருவின் அனுக்கிரஹ பிரஸாதமாகக் கருதியே செய்துவரத் துவங்கி ஆசார்யாள், குருநாதரின் அனுக்கிரஹத்தினால், இறை தரிசனத்தினை அடைந்து, இறைவனது தூண்டுதலின்பேரில் தீவிர ஆத்ம விசாரத்தினை மேற்கொண்டு ஜீவன்முக்தி நிலையினையும் அடைந்தார்.

தமது குருநாதரின் திருப்பாத கமலங்களில் மனம் நிலைத்தவராக வாழ்ந்து வந்த ஆசார்யாள் தமது குருநாதரைப் போற்றி இயற்றியுள்ள சுலோகங்களில் தமது குருவின் பாத கமலங்களைத் தியானித்து வழிபடுவோர்க்கு உண்டாகும் நன்மைகளை விளக்குகின்றார். எடுத்துக்காட்டுகளாக பின்வரும் சுலோகங்களைக் கூறலாம்.

குருவரசரணௌ பக்த்யா நித்யம் ப்ரணமாமி பக்த கருணாலூ |
யத்பானுலேசபாதோ ஹ்ருதயத்வாந்தானி ஸந்ததம் ஹந்தி ||

மேற்கண்ட சுலோகத்தின் மூலமாக ஆசார்யாள், தமது குருநாதரின் திருவடிகள் பக்தர்களின் விஷயத்தில் பெரும் கருணையுடன் விளங்குபவை என்றும், அவரது அந்த திருவடிகளிலிருந்து எழும் ஞான பிரகாசத்தின் மிகச் சொற்பமான அளவும்கூட நமது மனத்தின் அறியாமையாகின்ற இருளினை அடியோடு அழித்துவிடும் சக்தியை உடையது எனவும் நமக்கு அறிவிப்பதுடன், அப்பேற்பட்ட பெரும் மகிமை வாய்ந்த குருவின் பாதங்களை பக்தியுடன் தாம் தினமும் வணங்கி வருவதனையும் நமக்குத் தெரிவிக்கின்றார்.

ஸ்ரீமதாம் தேசிகேந்த்ராணாம் பாதபத்மே நமாம்யஹம் |
மந்தோऽபி வந்தனாத்யேஷாம் விந்தேத குருதுல்யதாம் ||

எனும் மற்றொரு சுலோகத்தில், தமது குருநாதரின் பாத கமலங்களுக்கு வந்தனம் செய்வதன் மூலம், மந்த புத்தியை உடையவனும்கூட குருவிற்கு சமமான மகிமையுள்ளவனாகிவிடுவான் எனப் பெருமையுடன் கூறுகின்றார்.

வேறொரு சுலோகமான,

அவித்யாத்வாந்தானாம் தினமணிரனந்தாந்தரகதோ
விஷீதத் வித்வத் த்ருத் குமுத வன ராகா ஹிமகர: |
பராத்வா மித்ராணாம் விஷய கஹனானாம் ஹுத வஹோ
குருஸ்தேஜோ ரூபோ ஜயதி ஜனதானந்ததுரயம் ||

என்பதனில், ஆசார்யாள், "அறியாமையாகிய இருளில் உள்ளோர்க்கு, எல்லையற்றதாகவும் மற்றும் அவரவரது இதயக் குகைக்குள்ளேயே இருந்து பிரகாசித்திடும் சூரியனாக விளங்குபவர்; வாடியுள்ள பண்டிதர்களின் இதயமாகிய குமுத மலர்களுக்கு சந்திரனாகியவர்; இந்திரிய விஷயங்களாம் அடர்ந்த காட்டினுள் சிக்கி, பரம்பொருளை நோக்கிச் செல்லும் பாதையில் நட்புத் துணையின்றித் தவிப்போர்க்கு வழியை ஒளிரச் செய்யும் தீப்பந்தமாக விளங்குபவர்; எல்லா ஜனங்களுக்கும் இன்பத்தையளிக்கும் ஒளி பொருந்திய குருநாதர் வெற்றியுடன் திகழ்கின்றார்" என்று தமது குருவின் மகிமையினை மிக அழகாகப் போற்றிக் கூறியிருக்கின்றார்.

1954ம் வருடம் செப்டம்பர் மாதம் 26ம் தேதியன்று ஆசார்யாளின் குருநாதர் மஹாஸமாதியை அடைந்தார். அன்றிலிருந்து சில நாட்களுக்குள், வடநாட்டிலிருந்து ஒரு பெண்மணி சிருங்கேரிக்கு வந்திருந்தார். சமய நெறிகளைப் பற்றிய தனது சில சந்தேகங்களை ஆசார்யாளிடம் தெரிவித்த அவர், மேலும், தான் சந்திக்க நேர்ந்த பல துறவிகளிடமும் பண்டிதர்களிடமும் இச்சந்தேகங்களைக் கேட்ட போதிலும், தனக்குத் திருப்தியான பதில் கிடைக்கவில்லையென்றும் கூறி, ஆசார்யாளிடம் அவற்றிற்கான விளக்கங்களை வேண்டிக் கொண்டார். ஆசார்யாள் தமக்கே உரித்தான பாணியில் அச்சந்தேகங்களுக்கு உடனடியாக பதிலளித்தார். அதைக் கேட்ட அப்பெண்மணி, மிக்க மகிழ்ச்சியடைந்து தனது சந்தேகங்கள் யாவும் விலகி தனக்கு மிகவும் திருப்தியாகிவிட்டது என்று ஆசார்யாளிடம் கூறி தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். அந்த பெண்மணியிடம் ஆசார்யாள் கூறினார்: "அம்மா நீங்கள் மட்டும் சில நாட்களுக்கு முன்பு இங்கு வந்திருந்தால், எனது குருநாதரின்

திவ்விய தரிசனத்தை அடைந்திருப்பீர்கள். என்னிடமோ நீங்கள் உங்களுடைய சந்தேகங்களை வாய்விட்டுக் கூறி அவற்றிற்கான விளக்கங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், இதுவே என்னுடைய குருவின் சன்னிதியாக இருந்திருந்தால், அவரை நீங்கள் தரிசனம் செய்திருந்தாலே போதும்; உங்களுடைய சந்தேகங்களுக்கான பதில்கள் அந்த கணத்திலேயே உங்கள் மனதில் தாமாகவே தோன்றியிருந்திருக்கும். என்னுடைய குருநாதரின் மகிமை அப்பேற்பட்டது'' என்று கூறிட, அவரது குருபக்தியினைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனார் அந்தப் பெண்மணி.

1989ல் தமது உடலை துறக்கும் வரையிலும் தமது குருநாதரின் பாதாரவிந்தங்களைச் சிந்தித்தவண்ணம் இருந்துவந்தவர் ஆசார்யாள். உதாரணத்திற்கு, 1989ம் வருடம் ஆகஸ்ட் மாதம் (ஆசார்யாள் மஹா ஸமாதியடைவதற்கு சில வாரங்களுக்கு முன்பு) தமது சீடர் ஒருவரிடம் ஆசார்யாள் தமது குருநாதரைப் பற்றிக் கூறியதை இங்கே குறிப்பிடலாம்: "எனது குருவாகவும், சாஸ்திரங்களில் புலமை பெற்றவர்களாகவும், பரம்பொருளில் நிலைத்தவர்களாகவும் இருந்த அவர்களுக்கு எனது ஸாதனையின் துவக்கம், அது செய்யப்பட வேண்டிய விதம், அது எவ்வாறு முன்னேற வேண்டும் மற்றும் அது எவ்விதம் முடிய வேண்டும் என்பதையெல்லாம் நிச்சயிக்க அதிகாரமும் தகுதியும் இருந்தன... மற்றவரிடத்தில் எந்த ஒரு நல்ல விஷயத்தைக் கண்டாலும் அதைப் புகழ்ந்து பாராட்டும் மேன்மையான குணத்தைப் பெற்றவர்கள் அவர்கள். அவர்களது கட்டளைகள், ஆசிகள் மற்றும் அனுக்கிரஹம் ஆகியவையே எனது ஆன்மிக சாதனைகளுக்கும் மற்றும் நான் அடைந்த அனைத்து முன்னேற்றங்களுக்கும் காரணம். ஆயினும், தம்மால்தான் இவையனைத்தும் நடந்தன என்று எனது குருநாதர் கருதவே இல்லை. அத்தகைய அளவிற்கு அவர்கள் சிறிதும் அஹங்காரம் இல்லாதவர்கள். அம்மஹானைப் போன்றவர்களை இப்பொழுது நாம் எங்குதான் காண முடியும்?''

## ॥ गणनीयगुणोज्ज्वलः ॥

# 28. கணநீய-குணோஜ்ஜ்வல:

(போற்றத்தக்க குணங்களுடன் விளங்குபவர்)

முன்பு "கீர்த்தனீய குணோஜ்ஜ்வல:" (துதிக்கத் தக்க குணங்களுடன் ஒளிர்பவர்) என்று தமது குருநாதரை வணங்கிய ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள், 'ஏதோ புகழத்தக்க வகையிலான சில குணங்கள் மட்டும் எங்களது குருநாதருக்கு இருக்கின்றது என்று யாரும் எண்ணிவிட வேண்டாம், போற்றி வணங்கத்தக்க அநேக குணங்கள் அவருக்கு உண்டு' என்பதையும் பறைசாற்றும் வகையில் இப்போது தமது குருநாதரை "கணநீய குணோஜ்ஜ்வலாய நம:" எனத் தொழுது நிற்கின்றார்.

ஸத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் குணக் குன்றென விளங்கியவராவார். அவரது அமுதமயமான சொற்களும் சரி, அன்பான அணுகு முறைகளும் சரி, அவையனைத்துமே அவருக்கு இருந்து வந்த தெய்வீக குணங்களை வெளிப்படுத்துபவையாகவே விளங்கி வந்தன. அவற்றுள் சிலவற்றினை இங்கே காண்போம்.

1954ம் வருடம் ஆசார்யாள், ஸ்ரீ சாரதா பீடத்து 35வது ஆசார்யராகப் பொறுப்பேற்றுக் கொண்டபின் ஒருநாள் ஸ்ரீ ராமனாத சாஸ்திரியை அழைத்து, சென்னகேசவா என்பவரைத் தாம் சந்திக்க விரும்புவதாக அவரிடம் தெரிவித்தார். சென்னகேசவா என்பவர் 1931ல் ஆசார்யாள் ஸன்யாஸம் பெற்றுக்கொள்வதற்கு முன்னால் சில காலமும், அதன் பிறகு சில காலமும் ஆசார்யாளுக்கு உணவு தயாரித்து பரிமாறி வந்தவர். பிறகு தமது பணியிலிருந்து ஓய்வு பெற்று, தக்ஷிண கன்னடத்தில் உள்ள கோடா எனும் கிராமத்தில் தங்கி தனது வாழ்க்கையை நடத்தி வந்தார். ராமனாத சாஸ்திரியும் கோடாவிற்குச் சென்று, சென்னகேசவாவின் இல்லத்தைக் கண்டறிந்து, அவரையும் சந்தித்து ஆசார்யாள் அவரைப் பார்க்க விரும்புவதாகக் கூறினார். சென்னகேசவாவிற்கோ அதைக் கேட்டதும் பயமாகிவிட்டது. அதற்கு ஒரு காரணமும் இருந்தது. அவர் மடத்தில் பணியாற்றிக்

கொண்டிருந்த சமயம், ஆசார்யாளுக்கென வைக்கப்பட்டிருந்த பால் மற்றும் தயிரினில் பெரும் பகுதியை எடுத்து ரகசியமாக தமது குடும்பத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தார்! மடத்துப் பணியினின்று அவர் ஓய்வு பெறும்வரை இந்த தவறான காரியத்தினை அவர் செய்து வந்து கொண்டிருந்தார். இதனை சாஸ்திரியிடம் தெரிவித்த அவர், மேலும், அதன் பின், தமக்கு விநோதமான நோய் ஒன்று ஏற்பட்டு, அது தமது கைகளை முடமாக்கிவிட்டது என்பதையும், தான் முன் செய்த தவறினால் வந்த விளைவு அது என்றும் கூறினார். தன்னுடைய இந்த காரியத்தினால் ஆசார்யாள் தன் மீது மிகுந்த கோபத்துடன் இருப்பார் என்றும், தன்னை மன்னிக்கவே மாட்டார் என்றும், அதனால் தான் சிருங்கேரியில் இனி அடியெடுத்து வைக்கவே போவதில்லை என்பதையும் தெரிவித்தார். அவரைச் சமாதானப்படுத்திய ராமனாத சாஸ்திரி, அவரிடம் தான் ஆசார்யாள் சொல்லித்தான் அங்கு வந்திருப்பதாகவும், அவரைக் கையோடு அழைத்துகொண்டு செல்லவிருப்பதாயும் கூறினார். இதைக் கேட்ட சென்னகேசவாவிற்கோ பயம் மிகவும் அதிகமாகிவிட, தான் சிருங்கேரிக்கு வரவே முடியாது என்று சாஸ்திரியிடம் உறுதிபடக் கூறிவிட்டார். வேறு வழியறியாது சாஸ்திரியும் சிருங்கேரிக்குத் திரும்பவந்து ஆசார்யாளிடம் விஷயத்தைத் தெரிவித்தார். அதைக் கேட்ட ஆசார்யாளோ, மடத்து கார் ஒன்றினை எடுத்துக்கொண்டு போய் சென்னகேசவாவை எப்படியாவது அழைத்துக்கொண்டு வர வேண்டும் என்றும், அவர் வர மறுத்தால் தாமே அவரைப் பார்க்க கோடாவிற்கு வரவேண்டி வரும் என்றும் கூறி, சாஸ்திரியை மீண்டும் கோடாவிற்கே அனுப்பினார். விஷயத்தைக் கேட்டு மிரண்டு போன சென்னகேசவா வேறு வழியில்லாமல் சாஸ்திரியுடன் கிளம்பி சிருங்கேரிக்கு வந்து சேர்ந்தார்.

கதறியவாறே ஆசார்யாளின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிய அவர், தான் ஆசார்யாளுக்கு தவறிழைத்துவிட்டதைக் கூறி ஆசார்யாளின் மன்னிப்பையும் வேண்டிக் கொண்டார். அவரை உடனடியாக சமாதானப்படுத்திய ஆசார்யாள், தமது பால பருவத்தில் தமக்கு உணவளித்துத் தம்மை கவனித்துக் கொண்ட சென்னகேசவா தமக்கு தந்தையைப் போன்றவர் என்று அன்புடன் கூறியதுடன், அவருக்குத்

தாம் வெகுமதி ஒன்றினை அளிக்க விரும்புவதைத் தெரிவித்து, அன்றைய காலக்கட்டத்தில் பெரிய தொகையெனக் கருதப்பட்ட ஒரு குறிப்பிட்ட தொகையினை சென்னகேசவாவிடம் கொடுத்தருளினார். ஆசார்யாளுக்கென வைக்கப்பட்டிருந்த உணவு பதார்த்தங்களை கையாடல் செய்த தான் அந்த வெகுமதியினைப் பெற்றுக்கொள்ள அருகதையற்றவன் என சென்னகேசவா மீண்டும் ஆசார்யாளிடம் தெரிவித்துக் கொண்டார். ஆசார்யாளோ அவரை மீண்டும் சமாதானப்படுத்த, சென்னகேசவா அந்த வெகுமதியினையும், ஆசார்யாளின் பரிபூரண ஆசிகளையும் பெற்றுக் கொண்டார். இவ்வாறு தனது மனப் பிரச்சினைகளும் பணப் பிரச்சினைகளும் தீர்ந்துபோக, சென்னகேசவா நிம்மதியுடன் கோடாவிற்குத் திரும்பினார்.

ஒரு சமயம் ஆசார்யாள் தமது காரில் பயணித்துக் கொண்டிருந்த போது, சாலையின் குறுக்கே மரம் ஒன்று விழுந்து கிடப்பதையும், அதனால் அனைத்து வாஹனங்களும் சிரமப்பட்டு ஒரு சிறிய மாற்றுப் பாதையில் சென்று கொண்டிருப்பதையும் கண்டார். தமது காரை நிறுத்தும்படிக் கூறிய அவர், காரிலிருந்து இறங்கி, தம்மைத் தொடர்ந்து பயணித்துவந்த மடத்து ஊழியர்களின் உதவியுடன், தமக்கு உடல் நலக் குறைவு இருந்ததையும் பொருட்படுத்தாமல், அந்த மரத்தைத் தூக்கிச் சாலையின் வெளிப்புறம் ஓர் ஓரமாகக் கிடத்திவிட்டு, “இனி எல்லோரும் சிரமமில்லாமல் பயணிக்கலாம்” எனக் கூறி, தமது காருக்குத் திரும்பி, தமது பயணத்தைத் தொடர்ந்தார். தான், தனது என ஒரு குறுகிய கண்ணோட்டம் இல்லாது, அனைவருக்கும் நல்லது பயக்கும் எச்செயலையும் எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது செய்து முடிக்கும் உத்தமமான குணம் ஆசார்யாளுக்கு இருந்து வந்தது இதன் மூலம் வெளிப்படுகின்றதன்றோ?

மடத்துச் சிப்பந்தி ஒருவர் மடத்து சமையலறையிலிருந்து மளிகைச் சாமான்களைத் திருடி விட்டார். கையும் களவுமாகப் பிடிபட்ட அவரை உடனடியாக பணி நீக்கம் செய்துவிட வேண்டுமென அனைவரும் கூறினர். ஆனால் ஆசார்யாளோ அந்நபரை வேறு ஒரு பொறுப்பில் அமர்த்தினாரே தவிர பணி நீக்கம் செய்யவில்லை. அதற்கு அவர்

அளித்த விளக்கமாவது: “அவனை நம்பி அவனது குடும்பம் இருக்கின்றது. அவனை முற்றிலுமாக நீக்கி விட்டோமென்றால் அவன் மட்டுமன்றி அவனது குடும்பத்தினரும் பெரும் அவதிக்குள்ளாவார்கள். இது நியாயமில்லை. ஆகவேதான் அவனை வேறு ஒரு பொறுப்பில் அமர்த்தினேன்.” தண்டனைக்குரிய தவறு எனத் தெரிந்தே ஒருவர் செய்திருந்தாலும், அவரைத் தண்டிக்கும் விஷயத்தில் அனைத்து சூழ்நிலைகளையும் ஆராய்ந்து பார்த்து எவருக்கும் இன்னல் நேராது செயல்படும் அபாரமான குணம் ஆசார்யாளிடம் நிறைந்து காணப்பட்டது.

## ॥ चित्तनैर्मल्यसन्दायी ॥

## 29. சித்த-நைர்மல்ய-ஸந்தாயீ

(மனதிற்கு பரிசுத்தத்தைக் கொடுப்பவர்)

ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய குணங்களின் சேர்க்கையால், மனமானது காமம், கோபம், லோபம், மோஹம், மதம், மாச்சர்யம், சோம்பல், மந்தம் ஆகிய மலங்களால் (அசுத்தங்களால்) பாதிக்கப்பட்டு தனது பரிசுத்தத்தை இழந்து, பலவித இன்னல்களை அனுபவிக்கின்றது. பரிசுத்தியை அடைந்த மனதோ பரம்பொருளையறியும் தகுதியைப் பெறுகின்றது. மனதின் பரிசுத்திக்கு உரிய உபாயத்தை அவரவர்க்கு ஏற்றதான வகையில் அருளுவதில் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் இணையற்று விளங்கியவராவார். இது காரணத்தால் அவரை “சித்த நைர்மல்ய ஸந்தாயி” என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் போற்றுகின்றார்.

அனைவருக்கும் சித்த நிர்மலம் வாய்க்கப் பெற்று பரம்பொருள் ஞானம் உண்டாகிட வேண்டும் என்பதில் ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் பெருவிருப்பத்துடன் இருந்தார். அவரது உபன்யாஸங்களிலும் சரி, அவருடன் நேரடியாக உரையாடிடும் பாக்கியம் கிட்டிடும் தருணங்களிலும் சரி, சித்த சுத்திக்கான உபாயங்களாக, ‘அவரவர்க்குரிய தர்மங்களைப் பின்பற்றுதல்’,

'இறை வழிபாடு', 'குரு சேவை', 'விவேகம் மற்றும் வைராக்கியத்தை வளர்த்துக் கொள்வது', 'ஆத்ம குணங்களை வளர்த்துக் கொள்வது' எனப் பற்பல வழிகளை அனைவருக்கும் ஆசார்யாள் உபதேசித்து வந்தார். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், 'இது எளிதாகத்தான் இருக்கின்றது, நம்மால் இதைச் செய்து வர முடியும்' என ஒரு நம்பிக்கையினை சம்பந்தப்பட்டவருக்குக் கொடுக்கும் வகையினில் ஆசார்யாளின் உபதேசம் இருந்து வந்ததுதான்!

ஆசார்யாள் சிலருக்கு மந்திர உபதேசத்தை அருளுவார்; சிலருக்கு குறிப்பிட்ட சில சுலோகங்களைக் கொடுத்து அவற்றை தினமும் கூறிவரும்படி உபதேசிப்பார். சிலரை முறைப்படி யோகாசனம் மற்றும் பிராணாயாமத்தைக் கற்றுக்கொண்டு சிரத்தையுடன் செய்துவரும்படி கூறியருளுவார். சிலருக்கு விவேகசூடாமணி, பஞ்சதசி போன்ற பிரகரணங்களைப் படித்து வருமாறு உபதேசிப்பார். சிலருக்கு கிளை மட நிர்வாகம், ஆலயப் பராமரிப்பு, பொது ஜன சேவைக்கான இலவச மருத்துவ மையம் மற்றும் தர்ம ஸ்தாபனங்களை நிர்வகித்தல் போன்றவற்றை அளிப்பார். இது போன்று எவருக்கு எதில் ஈடுபாடு இயற்கையாகவே இருக்குமோ அதை அறிந்து அதன்படி சித்த சுத்திக்கான ஒரு மார்க்கத்தை அவருக்கு அருளுவதில் ஆசார்யாளுக்கு இணை அவரேதான்! இவையனைத்திலுமே, "இதனை ஆசார்யாள் எனக்குக் கூறியிருக்கின்றார். ஆகவே, இதனை நான் குரு சேவையாகக் கருதி சிரத்தையாகச் செய்து வருவேன்" எனும் தீர்மானத்துடன் செயல்படுவோருக்கு, இறுதிப் பலனாக மனத் தூய்மை கிட்டிடும் அரிய வாய்ப்பு உண்டாகியது.

## ॥ चिन्तालेशविवर्जितः ॥

# 30. சிந்தாலேச-விவர்ஜித:

(ஒரு சிறிதும் கவலையே இன்றி விளங்குபவர்)

எவருக்கு பந்தங்கள் என்பது உண்டோ அவருக்கு தேவைகள் என்பவை உருவாகிவிடுகின்றன. எவருக்குத் தேவைகள் என்பவை

உண்டோ அவருக்கு கவலைகள் என்பவையும் தாமாகவே உருவாகி விடுகின்றன. பந்தங்களை அறவே எரித்து ஒரு ஜீவன்முக்தராக விளங்கிய தமது ஸத்குருநாதரான ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளுக்குக் கவலைகள் என ஒரு சிறிதும் இருந்ததில்லை என்பதை இந்த நாமத்தின் மூலமாக பிரகடனம் செய்கின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்.

20 வயதுகூட நிரம்பியிராத நிலையில், வாஸனைகளை எரித்து, மனதை மரித்து, ஆத்ம ஞானத்தை அடைந்து ஜீவன்முக்தராகி ஒளிர்ந்த ஆசார்யாளை நோக்கி அவரது குருநாதர் கூறிய வார்த்தைகள் இங்கு நினைவு கூறத் தகுந்தவை: "சாந்தமும் சந்தோஷமும்தான் உங்கள் முகத்தில் தெரிகின்றன. நான் எனது உடலை இந்த க்ஷணம் துறக்க நேரிட்டாலும், என் மீது ஆழ்ந்த பக்தி வைத்திருக்கும் உங்களது முகத்தில் எந்தவித மாறுதலையும் பார்க்க முடியாது..." தமது அப்போதைய நிலையைப் பற்றி பிற்பாடு ஒரு சமயம், தமது சீடர் ஒருவரிடம் ஆசார்யாள் குறிப்பிட்டதாவது: "உணர்ச்சிகளை வெளிக் காட்டுவது எனக்குக் கஷ்டமாக இருந்தது. மனம் வெறும் அமைதியையும் ஆனந்தத்தையும் மட்டுமே உணர்ந்து கொண்டிருந்தது. முன்பு எளிதில் ஏற்பட்டுக் கொண்டிருந்த உணர்ச்சிகள் ஏதோ ஒரு தெளிவற்ற பழைய கனவைப் போல் தோன்றின. கோபத்தையோ கவலையையோ வெளிக்காட்டுவதற்குப் புதிதாகத்தான் நான் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது."

தமது குருநாதரின் மஹாஸமாதிக்கு பின்பு, ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது ஆசார்யராகப் பொறுப்பேற்று, மடத்து நிர்வாக விஷயங்களில் மிகப் பெரும் சவால்களைச் சந்திக்கவேண்டி வந்தபோதும்கூட ஆசார்யாள் எந்த கவலைக்கும் இடம் கொடுக்கவில்லை. அனைத்தையும் அமைதியான மனத்துடனேதான் எதிர்கொண்டார். சுமார் 1200 வருடங்களாக இருந்து வரும் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தினை, அவ்வப்போதைய காலங்களில் ஆட்சிபீடத்தில் இருந்துவந்த மன்னர்கள் தங்களது காணிக்கைகளின் மூலம் ஆதரித்து வந்தனர். சிருங்கேரி ஜகத்குரு பரம்பரையின் 12வது ஆசார்யரான ஸ்ரீ வித்யாரண்ய மஹாஸ்வாமிகள் அவர்களுடைய காலத்தில் ஸ்ரீ சாரதா பீடம் ஒரு ஸம்ஸ்தானமாகவே அங்கீகரிக்கப்பட்டது. ஹரிஹர புக்க

மன்னர்களும், அவர்களது வாரிசுகளும் மற்றும் இதர மன்னர்களும் ஸ்ரீ சாரதா பீடத்திற்கென பல ஜாகீர்களையும் இனாம் நிலங்களையும் சாஸனம் செய்து வைத்தனர். இவற்றினின்று பெறப்பட்ட வருவாயானது பீடத்தின் நிர்வாகம் மற்றும் தர்ம பரிபாலன பணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வந்தது. ஆயினும், இருபதாம் நூற்றாண்டின் மத்தியில், ஆசார்யாள் பீடாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட சமயத்தில் ஜாகீர்களை அரசாங்கமே எடுத்துக் கொண்டுவிட்டது. இது பீடத்தின் வருவாயைப் பெருமளவு பாதித்துவிடும் என்பதால் மடத்து அதிகாரிகள் பெரும் கவலையடைந்தனர். விஷயத்தினை ஆசார்யாளிடம் கொண்டு சென்றனர். ஆசார்யாளும் இதைக் கேட்டு அதிர்ச்சியடைவார் என எண்ணிய அவர்களுக்கு ஏமாற்றம்தான் ஏற்பட்டது! விஷயத்தினைக் கேட்ட ஆசார்யாள் அதுபற்றி எவ்வித சோகமும் அற்றவராய், அவர்களைப் பார்த்துக் கூறினார்: ‘‘பகவத்பாதர் காலத்தில் ஜாகீர்கள் இல்லை. இந்த நிலங்கள் பீடத்திற்கு அளிக்கப்படுவதற்கு முன்னும்கூட பீடத்து விஷயங்கள் அனைத்தும் நன்றாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதனால், இப்போது இது விஷயத்தில் கவலைப்படுவதற்கு அவசியம் ஒன்றுமில்லை.’’ அவரது வார்த்தைகளின் உட்பொருள் அவர்களுக்கு அச்சமயம் விளங்கவில்லை. பின்னர்தான் விளங்கியது. ஒரு காலத்தில் மன்னர்களால் தரப்பட்டு வந்த ஆதரவை இப்போது பக்த ஜனங்களே மிகுந்த உற்சாகத்துடன் தரத் துவங்கிவிட, பீடத்து வருவாய் குறித்து அதிகாரிகள் கொண்ட கவலை அர்த்தமற்றதாகிவிட்டது!

மற்றொரு சமயம், மடங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வருமான வரி விலக்கை இரத்து செய்து ஒரு சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது. தர்ம காரியங்களுக்கென செலவிடப்படும் பணத்தில் ஒரு பகுதியை வரியாக போக்கிவிட்டால், தர்ம காரியங்கள் குறைந்து போக நேரிடுமே எனக் கவலை கொண்ட சில பக்தர்கள் இது குறித்து நீதிமன்றத்தில் முறையிடலாம் என ஆசார்யாளிடம் தெரிவித்தனர். ஆசார்யாளோ, ‘‘எதற்காக இது விஷயத்தில் கவலைப்பட வேண்டும்? நாம் யாருக்கு இந்த வரியைக் கொடுக்கப் போகிறோம், நமது அரசாங்கத்திற்குத்தானே? அவர்களும் அதை

ஜனங்களின் நன்மைக்காகத்தானே செலவிடப் போகின்றனர். தாராளமாகக் கொடுக்கலாமே!" என்று கூறிவிட்டார். கவலை தரவல்ல விஷயத்திலும்கூட எவ்விதமான அணுகுமுறையைக் கையாள வேண்டும் என்பதற்கான ஒரு பாடமாகவே இது அவர்களுக்கு அமைந்து விட்டது!

## ॥ तीर्थराजकृतस्नानः ॥

## 31. தீர்த்தராஜ-க்ருத-ஸ்நான:

(தீர்த்தங்களின் இராஜாவான பிரயாகையில் ஸ்நானம் செய்தவர்)

வட இந்தியாவில், உத்திரபிரதேச மாநிலத்தில், பிரயாக்ராஜ் நகரினில் புண்ணிய நதிகளாம் கங்கை, யமுனை, ஸரஸ்வதி ஆகிய மூன்றும் ஒன்றுகூடிடும் இடமே 'திரிவேணிசங்கமம்' என்றும் 'பிரயாகை' என்றும் 'தீர்த்தராஜா' என்றும் அழைக்கப்படுகின்றது. தமது வட இந்திய யாத்திரைகளின் சமயம் ஆசார்யாள் இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்னானம் செய்ததைக் குறிக்கும் வகையில் இந்தத் திருநாமம் புனையப்பட்டுள்ளது.

ஆசார்யாளின் முதல் பிரயாகை விஜயம் 03-05-1967 அன்று அந்நகரைச் சேர்ந்த பிரமுகர்களின் விமரிசையான வரவேற்புடன் நடைபெற்றது. 4ம் தேதி காலையில் ஆசார்யாள் திரிவேணி சங்கமத்தில் சாஸ்திர முறைப்படி நீராடினார். பிறகு அவர் அத்தலத்தில் உள்ள அக்ஷய்ய-வட-விருக்ஷம் என அழைக்கப்படும் புனிதமான ஆலமரத்தினை வழிபட்டார். பின்பு, அங்கு கூடியிருந்த அந்தணர்களுக்கு வெகுமானங்களை வழங்கியருளினார். 5ம் தேதி காலையிலும் ஆசார்யாள் திரிவேணி சங்கமத்தில் ஸ்னானம் செய்தார். மாலையில் ஆசார்யாள் அந்த தலத்திலிருந்து புறப்பட்டார்.

ஆசார்யாளின் அடுத்த விஜயம் 1977ம் வருடம் ஜனவரி மாதம் 18 மற்றும் 19 தேதிகளில் நடைபெற்றது. இம்முறை இரு முக்கிய அம்சங்களுடன் இவ்விஜயம் அமைந்தது. ஒன்று, மௌனி

அமாவாசை மற்றும் அதன்போது கொண்டாடப்படும் மாபெரும் திருவிழாவான கும்பமேளா நிகழ்ச்சி. மற்றொன்று, நான்கு ஆம்னாய பீடாதிபதிகளும் பிரயாகையில் கூடியது. சுமார் ஒன்றரை கோடி பக்த ஜனங்கள் கூடிய பிரயாகையில் எவ்வளவோ சிரமங்கள் இருந்திட்ட போதும், மாநில ஆளுனரான ஸ்ரீ சன்னா ரெட்டி அவர்களது உத்திரவின்பேரில் ஆசார்யாளுக்கும் அவருடன் விஜயம் செய்த ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளுக்கும் மற்றும் மடத்து அலுவலர்கட்கும் தேவையான வசதிகள் ஏற்பாடாகியிருந்தன. 19ம் தேதி அதிகாலை 5 மணி அளவில் ஆசார்யாள் மற்றும் ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் ஏனையோர் திரிவேணி சங்கமத்தில் நீராடினார்கள். ஆளுனர் ஸ்ரீ சன்னா ரெட்டியும் நீராடி விட்டு, ஜகத்குருக்களை தரிசனம் செய்து அவர்களது ஆசிகளைப் பெற்றுக் கொண்டார். ஏராளமான பக்த ஜனங்கள் ஆசார்யாளைத் தரிசித்து மகிழ்ந்தனர். இந்த விஜயத்தின் சமயம் நடந்த ஒரு விஷயம் ஆசார்யாளை மிகவும் கவர்ந்தது. தனது தாயாரின் விருப்பத்தினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மிகவும் ஏழ்மை நிலையிலிருந்த மனிதர் ஒருவர், தனது வயதான தாயாரையும், வழியில் சமைத்து சாப்பிட உதவியாக பாத்திரங்கள் மற்றும் மளிகைப் பொருட்களையும் சுமந்து தூக்கிக் கொண்டே, மிகத் தொலைவிலிருந்து கால்நடையாக பிரயாகைக்கு வந்திருந்தார். அவரைக் கண்ணுற்ற ஆசார்யாள் அவரை அழைத்து விவரங்களைக் கேட்டார். அம்மனிதரும் விஷயத்தினைக் கூற, அம்மனிதரின் மாத்ரு பக்தியினைக் கண்டு அகமகிழ்ந்துவிட்டது ஆசார்யாளின் இதயம். அம்மனிதரை பரிபூரணமாக ஆசீர்வதித்தார் ஆசார்யாள்.

## ॥ तीर्थीकृतधरातलः ॥

## 32. தீர்த்தீக்ருத-தராதல:

(இந்த (பாரத) பூமியின் தீர்த்தங்களை புனிதப்படுத்தியவர்)

‘வித்யா’ என்றால் ‘ஞானம்’ என்பதை முதலாம் திருநாமத்திலேயே கண்டோம். ஆசார்யாளை ‘அத்வைத ஞானத்தினில் ஆனந்தித்திடும் ஒரு ஜீவன்முக்தர்’ என்று முதலாம் திருநாமத்தில் போற்றிய ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள், இந்த 32வது திருநாமத்தினில் வித்யாதீர்த்தம் எனும் ஞான தீர்த்தமானது இந்த தேசத்தின் பற்பல புண்ணிய தீர்த்தங்களை மேலும் புனிதப்படுத்தியது என்று அறிவித்து மகிழ்கின்றார்.

தமது விஜய யாத்திரைகளின் போது ஆசார்யாள் பற்பல புண்ணிய தீர்த்தங்களுக்கும் விஜயம் செய்து அவற்றில் நீராடியிருக்கின்றார். ஒவ்வொரு தீர்த்தத்திலும் ஸ்னானம் செய்யும் சமயம், சம்பிரதாய விதிப்படி அவற்றிற்குச் செய்ய வேண்டிய பூஜைகளை முறைப்படிச் செய்து, அவற்றை ஆராதிப்பார். புண்ணிய நதிகளாம் மந்தாகினி, அலக்நந்தா, கங்கை, யமுனை, சரயு, கோதாவரி, கிருஷ்ணா, நர்மதை, சிப்ரா, பூர்ணா, பம்பை, காவேரி, வைகை, தாமிரபரணி ஆகியவை ஆசார்யாளின் தெய்வீக தேஹத்தினைத் தழுவிடும் பாக்கியத்தை அடைந்துள்ளன. நதிகளைத் தவிர, ஒரே இடத்தில் நிலைத்திருக்கும் தீர்த்தங்கள் பலவற்றிற்கும் ஆசார்யாள் விஜயம் செய்திருக்கின்றார். இவற்றுள் இராமேஸ்வரத்திலுள்ள 24 தீர்த்தங்கள், ஸ்ரீசைலத்திலுள்ள பஞ்ச தாரைகள், த்ரயம்பகேஷ்வரரில் உள்ள குஷவர்த குண்டம், குருக்ஷேத்திரத்தில் உள்ள சூர்ய குண்டம், ஹரித்வாரிலுள்ள ப்ரம்மகுண்டம், கௌரிகுண்டத்திலுள்ள தப்த குண்டம், பத்ரிநாத்திலுள்ள பஞ்ச தீர்த்தங்கள் மற்றும் வஸுதர தீர்த்தம் ஆகியவையும் அடங்கும்.

## ॥ तुषाराचलसञ्चारी ॥

# 33. துஷாராசல-ஸஞ்சாரீ

(பனிபடர்ந்த மலைப் பகுதிகளில் ஸஞ்சரித்தவர்)

'துஷார' என்றால் பனி. 'அசல' என்பது மலையைக் குறிக்கின்றது. 'துஷாராசல' என்பது பனிபடர்ந்த மலைப் பகுதிகளைக் குறிக்கின்றது. தமது குருநாதரால் மேற்கொள்ளப்பட்ட விஜய யாத்திரைகளின் ஓர் அங்கமாக பனிமூடிய சிகரங்களைக் கொண்ட இமயமலைப் பகுதிகளில் அவர் செய்த யாத்திரையைக் குறிப்பிடும் வண்ணம் அவரை "துஷாராசல ஸஞ்சாரி" எனப் பக்தியுடன் போற்றுகின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.

1967ம் வருடம் ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் இமாலயப் பகுதிகளில் யாத்திரை செய்தார். முதலில் நேபாள நாட்டிற்கு விஜயம் செய்த அவர் ஸ்ரீ ஆதிசங்கரருக்குப் பின்பு நேபாள நாட்டிற்கு விஜயம் செய்த முதல் ஜகத்குரு எனப் போற்றப்பட்டார். மார்ச் மாதம் 3 – 11 தேதிகளில் நேபாளத்தில் தங்கி அதன் அரச குடும்பத்தினரையும் ஆஸ்திக ஜனங்களையும் ஆசீர்வதித்தார் ஆசார்யாள். தங்களது ராஜகுருவான ஆசார்யாள் தங்களது நாட்டிற்கே வருகை புரிந்து சிறப்பித்ததை நினைவுகூரும் வண்ணம், நேபாள மன்னரின் ஆணையின் பேரில் பசுபதிநாதர் கோயிலின் முகப்பில், ஆசார்யாளின் நேபாள வருகை விவரங்களைத் தாங்கிய பெரிய உலோக பட்டயம் ஒன்றும் நிறுவப்பட்டது. காத்மண்டுவில் சிவராத்திரி பூஜைகளை நிகழ்த்திய ஆசார்யாள், அதையொட்டி நிகழ்த்தப்பட்ட மஹா ருத்ர யாகம் முதலான ஸத்கார்யங்களையும் பூர்த்தி செய்து, அனைவரையும் ஆசீர்வதித்து பின்பு அங்கிருந்து புறப்பட்டார்.

மீண்டும், 1967ம் வருடம் மே மாதம் 21ம் தேதியன்று ரிஷிகேஷ் நகரை அடைந்த ஆசார்யாள், 22ம் தேதியன்று அங்கிருந்து தமது இரண்டாம் இமாலய யாத்திரையைத் துவக்கினார். ருத்ரபிரயாகை, குப்த காசி, கௌரிகுண்டம் போன்ற பற்பல இடங்களுக்கு விஜயம் செய்த அவர், குப்தகாசியிலிருந்து மலைப் பாதையில் நடந்து

கேதார்நாத் சென்று கேதாரீஸ்வரரை வழிபட்டார். ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர் தமது புவி வாழ்வை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் கேதார்நாத் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து, உடன் வந்த அனைவரையும் ஆசீர்வதித்து விட்டு, அங்கிருந்து தனியாகக் கிளம்பி பனிபடர்ந்த மலைகளூடே சென்று மறைந்துவிட்ட நிகழ்ச்சியை மாதவீய சங்கர விஜயம் எனும் நூல் தெரிவிக்கின்றது. அவரது பரம்பரையில் 35ம் ஆசார்யராக பொறுப்பேற்றுக் கொண்ட ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் கேதார்நாத்தில் இருந்த அன்றைய தினம் தமது மூல குருவான ஸ்ரீ ஆதிசங்கரருக்கு தியான அஞ்சலி செலுத்தினார்.

பிறகு அங்கிருந்து ஜோஷி மடம் சென்று ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட உத்தராம்னாய (வடக்கு திசைக்கான பீடம்) பத்ரிகாசிரமத்திற்கு விஜயம் செய்தார். அதன் அப்போதைய ஆசார்யராக விளங்கிய ஸ்ரீ சாந்தானந்த மஹாஸ்வாமிகளைச் சந்தித்து உரையாடினார். பின்பு பத்ரிநாத் சென்றடைந்தார். பத்ரி நாராயணரை வழிபட்ட அவர் அப்புண்ணிய க்ஷேத்திரத்தைச் சுற்றியுள்ள பல புனித ஆலயங்களுக்கும் விஜயம் செய்தார். வியாஸ குஹைக்கு விஜயம் செய்த அவர், அங்கு நீண்ட நேரம் ஸமாதியில் அமர்ந்திருந்ததைக் கண்ட அனைவரும் பரவசம் அடைந்தனர். ஜூன் 1ம் தேதி அன்று தமது இமாலய யாத்திரையை முடித்து, அங்கிருந்து திரும்ப ரிஷிகேஷுக்குப் புறப்பட்டார் ஆசார்யாள். ஆசார்யாளின் இந்த யாத்திரையின் போது மலைப் பிராந்தியங்களில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான ஆஸ்திக ஜனங்கள் ஆசார்யாளைத் தரிசித்து ஆசி பெற்றனர்.

இமாலயப் பகுதிகளில் ஆசார்யாளின் சஞ்சாரம் எவ்வளவு விமரி-சையாக நடைபெற்றது என்பதை அச்சமயம் ஆசார்யாளுடன் பயணித்தவரும், ஸ்ரீ சீதாராமாஞ்சனேயலு எனும் பெயருடன் ஒரு பிரம்மசாரியாக ஜகத்குருவிற்குப் பணிவிடைகளைச் செய்து வந்த-வருமான ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் கண்கூடாகக் கண்டு வியந்தார். மீண்டும், 1982ம் வருடம் ஜூன் மாத பிற்பகுதியில், ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளும் உடன் வர, இமாலய யாத்திரையை மேற்கொண்டு கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி போன்ற புனிதத்

தலங்களுக்கும் விஜயம் செய்தார் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள். பனி படர்ந்த மலைப் பகுதிகளில் கரை புரண்டோடும் ஆற்றினில் சிறிதும் பயமுமின்றி ஸ்நானம் செய்வதிலும் சரி, குப்த காசியிலிருந்து கேதார்நாத்திற்கு மிகக் கடினமான பாதையில் மலையேறிப் போவதிலும் சரி, ஆசார்யாள் எப்படி உற்சாகத்துடனும் லாவகமாகவும் ஈடுபட்டார் என்பது ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளைப் பொறுத்தவரையில் நினைவில் நீங்காத கண்கொள்ளா காட்சியாகவே இருந்தது. அதன் நினைவாகவே "துஷாராசல ஸஞ்சாரி" எனும் இத்திருநாமத்தின் மூலமாக அவர் தமது குருநாதரைப் போற்றியிருக்கின்றார்!

ஜைஜைஜை

## ॥ तुङ्गास्नानसमुत्सुकः ॥

## 34. துங்கா-ஸ்நான-ஸமுத்ஸுக:

(துங்கா நதியில் ஸ்நானம் செய்வதில் உற்சாகம் அடைபவர்)

சிருங்கேரித் திருத்தலத்திற்கு வருவோர் அதனூடே தவழ்ந்து ஓடும் துங்கை நதியின் அழகில் மெய்மறந்து நின்றிடாமல் செல்வதில்லை. அப்புனித நதியில் நீராடுவதைப் பெரும் பாக்கியமாகவே கருதுவோர் ஏராளமானோர். தமது குருநாதருக்கு துங்கையில் ஸ்நானம் செய்வதில் மிகுந்த ஆர்வம் உண்டு என்பதை "துங்கா ஸ்நான ஸமுத்ஸுக:" எனும் இத்திருநாமத்தின் மூலமாக அறிவிக்கின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.

நீச்சலில் தலைசிறந்து விளங்கிய ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளுக்கோ துங்கையைக் கண்டதுமே அதில் குதித்து நீந்தி மகிழத் தோன்றிவிடும். மேலும் அவரைப் பொறுத்தவரையில் துங்கைக்கென்று தனித்ததொரு சிறப்பும் உண்டு. தமது ஆருயிர் குருநாதர் துங்கையைப் போற்றி "துங்கா ஸ்தவம்" எனும் சுலோகங்களைப் புனைந்திருப்பதே அது! தமது குருநாதரால்

போற்றப்பட்டிருக்கும் ஆற்றினில் ஸ்நானம் செய்வதென்பதில் உண்மையான ஒரு சீடருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதானே!

துங்கையின் வெள்ளப் பெருக்கெடுப்பு என்பது மிகப் பிரஸித்தமான ஒன்று. அச்சமயங்களில் துங்கைக் கரைகளில் வளர்ந்திருக்கும் உயரமான மரங்களில் ஏறி அங்கிருந்து துங்கையுள் குதித்து நீச்சல் புரிவது ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமி-களுக்கு மிகவும் உற்சாகம் அளிக்கக்கூடிய ஒரு விஷயமாக இருந்தது. தமது சீடரின் மேல் மிகவும் வாஞ்சையுடன் இருந்த ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளுக்கோ தமது சீடருக்கு ஆபத்து எதுவும் வந்துவிடக்கூடாதே எனும் கவனம் இருப்பினும், தமது சீடரின் உற்சாகமிக்க உள்ளக்கிடக்கை அறிந்து அவரை துங்கையில் ஸ்நானம் செய்ய அனுமதித்து விடுவார். ஆயினும், தாமும் கரையில் நின்றபடியே தமது சீடரின் மேல் கவனம் செலுத்துவார்!

பிற்காலத்தில், ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளும் தமது குருநாதருக்குத் துங்கையில் ஸ்நானம் செய்வது என்பது எவ்வளவு மிகவும் பிடித்த விஷயம் என்பதைப் புரிந்து கொண்டார். துங்கையில் ஆசார்யாள் இறங்கிவிட்டாலே, கரையில் இருக்கும் அனைவருக்கும் கூட உற்சாகம் கரை புரண்டு ஓடும். ஏனென்றால், ஆசார்யாள் செய்து காண்பிக்கும் நீச்சல் வகைகள் அவர்களுக்கு மிகவும் பரவசமூட்டுபவையாக இருக்கும். துங்கையைப் பார்த்தாலே தமது குருநாதரின் நினைவு வருமளவிற்கு ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் தமது குருநாதருக்கும் துங்கா நதிக்கும் இடையே காணப்பட்ட பிணைப்பைக் கண்டு அனுபவித்திருக்கின்றார். அதன் விளைவே “துங்கா ஸ்நான ஸமுத்ஸுக:” எனும் இத்திருநாமம்!

## ॥ दक्षिणास्यपदध्यायी ॥

# 35. தக்ஷிணாஸ்ய-பத-த்யாயீ

(ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் பாதங்களை தியானிப்பவர்)

ஒருவர் ஸ்ரீ சாரதா பீட ஜகத்குருவாக நியமிக்கப்படும் போது அவரது குருவானவர் அவருக்குப் பற்பல மந்திரங்களை உபதேசிப்பது சம்பிரதாயமாக வந்து கொண்டிருக்கும் முறையாகும். அம்மந்திரங்களில் ஒன்றே ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தியின் மந்திரம். தமது குருநாதரிடமிருந்து இம்மந்திரத்தைப் பெற்ற ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் தமது தியான யோகப் பயிற்சிகளின் ஓர் அங்கமாக அம்மந்திரத்தின் தியான சுலோகத்தில் வருணிக்கப்படும் வகையில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் திவ்ய ரூபத்தையும் தியானித்து வந்தார்.

ஒரு கட்டத்தில் பரமசிவன் அவருக்கு தரிசனம் கொடுத்து அவரை மறுநாளிலிருந்து நிர்குண தியானத்தில் ஈடுபடுமாறு உபதேசித்து மறைந்தார். அதன் பிறகு தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை அவரே பிற்காலத்தில் தமது சீடர் ஒருவரிடம் பகிர்ந்து கொண்டிருக்கின்றார். மெய்சிலிர்க்க வைக்கும் அவ்வனுபவமாவது:

“இறைவனே எனக்குக் குரு வடிவில் வந்து உபதேசித்துச் சென்ற காரணத்தினால், நான் இறைவனை, முதல் குருவாம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வடிவில் தியானிக்க எண்ணினேன். மேதா தக்ஷிணாமூர்த்தி மந்திரத்தை மானஸிகமாக உச்சரித்தவாறே, நான் அவரை எனது இதயத் தாமரையில் தியானித்தேன். சுற்றுப்புறம் மற்றும் தேஹம் பற்றிய உணர்வு நீங்கியது. பிறகு மானஸிகமாக உச்சரித்துக் கொண்டிருந்த மந்திரம் தானாகவே நின்றுவிட்டது. எனது கவனம் ரூபத்தில் மட்டுமே நிலைத்திருந்தது. மனதை ஓடச் செய்யும் வேறு எந்த எண்ணமும் இல்லை. தியானம் மிக ஆழமாக இருந்தது. ரூபமோ தெள்ளத் தெளிவாக இருந்தது. உடல் பற்றிய உணர்வு ஏற்பட்டு நான் என் கண்களைத் திறந்த போது, சூரிய ஒளி சிறிதும் இல்லை. சந்திரனின் ஒளியால் அப்பிரதேசம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் தென்பட்டன. சில கணங்கள் கழித்துத்தான்

*கழுத்தில் ஏதோ ஒன்று இருப்பதை நான் உணர்ந்தேன். பெரிய நாகப் பாம்பு ஒன்று நெகிழ்ந்த வளையம் போன்று தனது உடம்பை, எனது கழுத்தைச் சுற்றி அமைத்திருந்தது. அதன் படமானது எனது வலது தோளின் அருகே, எனக்கு எதிர்த் திசையை நோக்கியவாறு இருந்தது. நான் புஜங்கபூஷணன் (பாம்பை ஆபரணமாக அணிந்திருப்பவன்) மீது தியானம் செய்தேன் அல்லவா? நாகமே என் மீது ஓர் ஆபரணமாக வந்து விட்டது! இதை இறைவனின் அருளிற்கு ஓர் அறிகுறியாகக் கருதி மகிழ்வுற்றேன். நாகத்தை மெதுவாகத் தட்டிக் கொடுத்தேன். அதற்கு அது பிடித்திருந்தது போலும்! அது என்னுடைய வலது கன்னத்தின் மீது தன் தலையைச் சாய்த்துக் கொண்டது. சற்று நேரத்திற்குப் பிறகு – ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு இருக்கலாம் – எனது கழுத்தைச் சுற்றியிருந்த பாம்பு தனது உடலைத் தானாகவே விடுவித்துக் கொண்டு, இறங்கிச் சென்றுவிட்டது...''*

*1954ல் பீடத்தில் அமர்ந்த பின்பு, ஆசார்யாள் பல தருணங்களில் சீடர்களுக்கு சாஸ்திர பாடங்களை நடத்தியருள்வார். அச்சமயங்களில் மங்கள சுலோகங்களாக ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரங்களை அவர் படித்து முழுமுதற் குருவின் ஆசிகளை வேண்டிக் கொள்வார். தமது இருப்பிடத்திலிருந்து சாரதாம்பாளின் ஆலயத்திற்குச் செல்லும் வழியில் துங்கை ஆற்றினைக் கடக்கும் சமயம் இரு புறமும் மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் தெரியும் ரம்மியமான இயற்கைக் காட்சிகளைக் காணும்போதும் அவற்றில் ஈர்க்கப்பட்டவராக ஆசார்யாள் ஸ்ரீ பகவத்பாதரால் இயற்றப்பட்ட ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திர சுலோகங்களை உச்சரிப்பார்.*

*ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் பதங்களைத் தியானித்து வந்தவராக ஆசார்யாள் தம்மைக் காட்டிக் கொண்டாலும் அவரே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம்தான் என்பதே ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளின் தீர்மானம். ''ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த அக்ஷர மாலா'' எனும் தமது ஸ்தோத்திரத்தில் அவரே கூறியிருப்பது இது:*

வடமூலம் பரித்யஜ்ய ஸ்ருங்காத்ரௌ நிவ ஸன்ஹிய: |
தத்த்வம் போதயதே பக்தான் தக்ஷிணாஸ்யம் தமாச்ரயே ||

{ஆலமரத்தடியை புறக்கணித்து, மலை சூழ்ந்த சிருங்கேரி பிரதேசத்தில் வஸிப்பவரும், பக்தர்களுக்குத் தத்துவத்தை உபதேசிப்பவருமான (ஶ்ரீ வித்யாதீர்த்தர் எனும்) ஶ்ரீ தக்ஷிணாமூர்த்தியை வணங்குகின்றேன்.}

## ॥ दक्षिणाम्नायपीठपः ॥

## 36. தக்ஷிணாம்நாய-பீடப:

(தக்ஷிணாம்நாய பீடத்தின் அதிபதி )

‘ஆம்நாய’ என்றால் வேதத்தின் இருப்பிடம் என்று பொருள். ‘தக்ஷிணாம்நாய பீடம்’ என்பது தென் திசையில், யஜுர் வேதத்தின் இருப்பிடமாக ஶ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரால் தோற்றுவிக்கப்பட்ட தக்ஷிணாம்நாய சிருங்கேரி ஶ்ரீ சாரதா பீடத்தினைக் குறிக்கின்றது. இந்தப் பீடத்தை ஸ்தாபித்த ஶ்ரீ சங்கரர் தமது சீடரான ஶ்ரீ ஸுரேச்வரரை இதன் முதல் குருவாக நியமித்து அவரில் தொடங்கி அங்கு வாழையடி வாழையாக குரு பரம்பரை ஒன்று தொடர்ந்திட வகை செய்தார். அந்த தெய்வீக குரு பரம்பரையில் 35வது ஜகத்குருவாக ஆகிய தமது குருநாதர் 1954 முதல் 1989 வரை தக்ஷிணாம்நாய பீடாதிபதியாக வீற்றிருந்ததைக் குறிக்கும் விதமாகத் தமது குருவை “தக்ஷிணாம்நாய பீடப:” எனும் திருநாமத்தின் மூலமாக ஜகத்குரு ஶ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் துதிக்கின்றார்.

மடத்துச் சொத்துக்களை நிர்வகித்தல், மடத்து ஊழியர்களது நலனில் அக்கறை, கிளை மடங்களின் நிர்வாக மேற்பார்வை, மடத்து சீடர்களின் கோரிக்கைகளை கவனித்தல், உலக நன்மைக்கென நிகழ்த்தப்பெறும் யாகங்கள், ஹோமங்கள், பூஜைகள் போன்றவற்றை மேற்பார்வையிடல், நாடெங்கிலும் விஜய யாத்திரைகளை மேற்கொண்டு தர்ம பிரசாரம் செய்தல், எனப் பற்பல கடமைகள் ஶ்ரீ சாரதா பீடத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளவருக்கு உண்டு. ஒரு

பீடாதிபதிக்குள்ள கடமைகளை மிகக் கவனத்துடன் ஆற்றி வந்தார் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்.

தாம் பீடாதிபதியாக இருந்த அந்த 35 வருடங்களில் தமது அயராத உழைப்பினால் தக்ஷிணாம்நாய பீடத்தை மிகப் பிரஸித்தமான ஒன்றாக ஆக்கியருளிய ஆசார்யாள் எண்ணற்ற ஜனங்களுக்கு ஆன்மீக, கலாசார, வாழ்வாதார மற்றும் மருத்துவ உதவிகள் கிட்டிட வழிவகைகளைச் செய்தார். பாரத நாட்டின் பற்பல இடங்களில் கிளை மடங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் ஸனாதன தர்ம பிரசாரம் நடந்திட வழிகோலினார். நாடெங்கும் விஜயம் செய்து ஸ்ரீ ஆதிசங்கரரின் உபதேசங்களைப் பரப்பினார். ஸ்ரீ ஆதிசங்கரரால் தோற்றுவிக்கப்பட்ட நான்கு ஆம்நாய பீடங்களின் அதிபதிகள் சந்திப்புக்கும் ஏற்பாடுகளைச் செய்தார் ஆசார்யாள். இதன் மூலம் ஸனாதனதர்ம பிரசாரத்தினை மேலும் வலுவாக்கிடும் வழிகளும் ஆராயப்பட்டன.

ஜனங்களுக்கு ஸனாதனதர்ம நெறிகளைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில், ஆசார்யாளால் கன்னடம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் ‘சங்கர கிருபா’ எனும் பத்திரிகையும், ஆங்கிலத்தில் ‘தத்த்வாலோகா’ எனும் பத்திரிகையும் துவக்கி-வைக்கப்பட்டன. ஆசார்யாள் அளித்த ஊக்கத்தின்பேரில் நாடெங்-கிலும் பற்பல இடங்களில் ஸம்ஸ்க்ருத வகுப்புக்களும், வேத, சாஸ்திர வகுப்புக்களும் துவக்கப்பட்டன.

மடத்துத் தேவைகளுக்கென சிருங்கேரியில் முதன்முறையாக தென்னந்தோப்புக்களை வெற்றிகரமாக ஏற்படுத்தினார் ஆசார்யாள். இது தவிர, பற்பல விவசாய உத்திகளையும் மடத்து விளை-நிலங்களில் புகுத்தினார். பக்தர்கள் தங்குவதற்காக பல விடுதிகள், சிருங்கேரி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிப்போரது தேவைக்காக ‘ஸ்ரீ சாரதா தன்வந்திரி மருத்துவமனை’, பள்ளிகள், கல்லூரி, எனப் பற்பல வசதிகளையும் ஆசார்யாள் ஏற்படுத்தி-யருளினார்.

மடத்து ஊழியர்கள் விஷயத்தில் ஒரு தாயின் அன்பையும், தந்தையின் கண்டிப்பையும் காட்டி அவர்களை அரவணைத்துச்

சென்றார் ஆசார்யாள். அவர்களது பிரச்சினைகளையும் தேவை-களையும் அவர்கள் கூறாமலே உணர்ந்து கொண்டு அவற்றை பரிவுடன் அணுகுவார் அவர். தரிசனத்திற்கென வரும் பக்த ஜனங்களுக்கு காலை, மாலை இரு வேளைகளிலும் தரிசனம் தந்து அவர்களது கேள்விகளுக்கு பதிலையும், குறைகளுக்குத் தீர்வையும், அவர்களால் செய்யப்படவிருக்கும் நற்காரியங்களுக்குத் தமது பூரணமான ஆசிகளையும் அருளுவார் ஆசார்யாள். தமது உடல் நிலையே குன்றியிருந்தாலும் சரி, தம்மை நாடி வரும் எவரும் ஏமாற்றம் அடைந்து திரும்புவதை விரும்பாத அவர் அவர்களைச் சந்தித்து அவர்களைத் திருப்தியுடன் அனுப்பிவைப்பார்! அவர் தமது உடலைத் துறந்த சமயம் நாடெங்கும் ஜாதி மதம் பாராது இலட்சக்கணக்கானோர் ஆசார்யாளது மறைவு ஓர் ஈடு செய்ய இயலாத இழப்பு என வருந்தியதே அவரது இணையற்ற பீடாதிபத்ய மகிமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

ஜஐ❀ஐஜ

## ॥ दाक्षिण्यनिलयस्वान्तः ॥

# 37. தாக்ஷிண்ய-நிலய-ஸ்வாந்த:

(இரக்கத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தவர்)

“எங்கள் குருநாதர் நிரம்ப தாக்ஷிண்யம் பார்ப்பார். அதனால்தானோ என்னவோ எனக்கும் அது நிரம்ப வந்துவிட்டது!” என ஒரு சமயம் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் தமது உபன்யாஸம் ஒன்றின்போது குறிப்பிட்டார். மற்றொரு உபன்யாசத்தின் போது, தமது குருநாதரின் தாக்ஷிண்யத்திற்கு எடுத்துக்காட்டாக, ஸ்ரீ ஞானானந்த பாரதி ஸ்வாமிகள் ஒரு சமயம் தம்மிடம் தெரிவித்த ஒரு விஷயத்தினையும் ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் குறிப்பிட்டார்: “ஹைதராபாத் நகரில் ஆசார்யாள் தங்கியிருந்த போது, சுமார் 50 கி.மீ. தொலைவிலிருக்கும் பகுதி ஒன்றிலிருந்து வந்த பக்தர் ஒருவர் தமது பகுதியில் கட்டப்பட்டுள்ள ஆலயம் ஒன்றின் கும்பா-

பிஷேகத்திற்கு ஆசார்யாள் வந்திட வேண்டும் என வேண்டிக்கொண்டார். ஆசார்யாளின் நிகழ்ச்சி நிரலோ ஏற்கெனவே நிறைந்திருந்தது. கிளம்பி அந்த இடத்திற்குச் சென்று, நிகழ்ச்சியில் கலந்துகொண்டுவிட்டு, திரும்ப நேரமும் ஆகும், பயணமும் சிரமம் நிறைந்த ஒன்றாக இருக்கும் என பலரும் அபிப்பிராயப்பட்டனர். ஆயினும், அம்மனிதரின் வேண்டுகோளை மறுத்து அவரது மனதினை வருத்தப்படச் செய்வதில் ஆசார்யாளுக்கு விருப்பமில்லை. ஆகவே, அவருக்கான நேரத்தினை ஒதுக்கி, சிரமத்தைப் பொருட்படுத்தாது குறிப்பிட்ட அந்த நாளில் அந்த பகுதிக்கு பயணம் செய்து, பக்தர்களுக்கு அருளிவிட்டு வந்துவிட்டார். அவரது தாக்ஷிண்யம் அப்பேற்பட்டதாக இருந்தது.''

கருணையே உருவான ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் பிறரது நன்மைக்காக செயல்படும் விஷயங்களில் தமது சிரமத்தை இலட்சியம் செய்யாதவராக வாழ்ந்து வந்த மஹானாவார். அவரது தாக்ஷிண்யத்திற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் சம்பவங்களைக் காணலாம்.

ஒரு சமயம், தங்களது ஆன்மிக சம்பந்தமான சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதற்காக ஆசார்யாளை நாடி வட இந்தியாவிலிருந்து மூன்று பிரம்மசாரிகள் சிருங்கேரிக்கு வந்தனர். அவர்கள் வந்த போது மாலை 06:40 மணி ஆகிவிட்டிருந்தது. தமது மாலை நேர ஆஹ்னீகத்திற்கு (ஸன்யாஸிகளுக்குரிய வழிபாட்டுக் கடமைகள்) நேரமாகிவிட்டிருந்த போதிலும் அவர்களது உண்மையான ஆர்வத்தினைக் கவனித்த ஆசார்யாள் அவர்களுடன் பேசத் துவங்கினார். நேரம் 07:15 ஆகியும் அவர்களது முதற்கேள்விக்கான விளக்கமே முடியவில்லை. நேரமாகின்றது என ஆசார்யாளின் உதவியாளர் வந்து நினைவூட்டிய போதிலும், ஆசார்யாள் பொருட்படுத்தவில்லை. சுமார் 9 மணிக்குத்தான் அவர்களுக்கான அனைத்து விளக்கங்களையும் ஆசார்யாள் கொடுத்து முடித்தார். மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தவர்களாக அவர்கள் மூவரும் விடை பெற்றார்கள். 'மிகுந்த சிரத்தையாக இருக்கின்ற இவர்களது ஆன்மிக முன்னேற்றத்திற்காக எனது ஆஹ்னீகம் தள்ளிப்போனாலும் பரவாயில்லையென்று நேரம்

ஒதுக்கியதில் எனக்கு மகிழ்ச்சியே!' என்பதே ஆசார்யாளின் எண்ணமாக இருந்தது.

தமது விஜய யாத்திரையின் போது நகரம் ஒன்றில் ஆசார்யாள் தங்கியிருந்தார். பக்தர் ஒருவரது தகப்பனார் மிக வயதாகி படுத்த படுக்கையாகவும் இருந்தார். அவருக்கு ஆசார்யாளைத் தரிசிக்க வேண்டும் என ஆசை இருந்தது. ஏற்கெனவே உள்ள கடமைகளுக்கே தமக்கு நேரம் சரியாக இருந்த போதிலும், அந்த முதியவருக்காக இரங்கிய ஆசார்யாள் அவரது இல்லத்திற்கு விஜயம் செய்தார். கண் பார்வை மங்கிய அந்த முதியவருக்கோ ஆசார்யாளின் திவ்விய உருவினைத் தரிசிக்க இயலவில்லையே என்று மிகவும் வருத்தம் ஏற்பட்டது. அவரது வருத்தத்தைப் புரிந்து கொண்ட ஜகத்குருநாதர் உடனே அருகே இருந்த முற்றத்திற்குச் சென்று, வெயில் தம் மேல் நன்கு படுமாறு நின்றுகொண்டு, அங்கிருந்தே அந்த முதியவரிடம், "இப்போது என்னைப் பார்க்க முடிகின்றதா" என உரத்த குரலில் கேட்டபடியே அப்பெரியவரின் பதிலுக்கு ஏற்ப, இங்கும் அங்குமாக நகர்ந்து அவ்வயோதிகரால் தம்மை நன்கு தரிசிக்கும்படியான ஒரு நிலையினில் தம்மை இருத்திக் கொண்டார். தரிசனம் செய்யத் துவங்கிய அம்முதியவருக்குத் திருப்தி ஏற்பட்ட பிறகே ஆசார்யாள் அங்கிருந்து திரும்பப் புறப்பட்டார். தமது சிரமத்தை ஒரு சிறிதும் பாராமல், தங்களது இல்லத்திற்கே வந்து, அவ்வயோதிகரின் அபிலாஷையைப் பூர்த்தி செய்து வைத்த ஆசார்யாளின் தாக்ஷிண்யத்தைக் கண்ணுற்ற அவ்வீட்டினருக்கு நன்றிப் பெருக்கால் அழுகையே வந்துவிட்டது!

"தமது உடல்நிலையைக் குறித்து ஆசார்யாள் கவனத்துடன் இருக்க வேண்டும்; தம்மை சிரமப்படுத்திக் கொள்ளக் கூடாது." எனப் பல தருணங்களில் மருத்துவர்கள் கூறுவர். சரியென்று கேட்டுக்கொள்வார் அவர். ஆனால், கஷ்டத்தில் இருக்கிறோம் என எவரேனும் அவரிடம் வந்துவிட்டால், மருத்துவர்களின் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாமல், தாம் சிரமப்பட்டேனும் தம்மை நாடி வந்தவர்களுக்கு உதவிட இறங்கிவிடுவார்!

இம்மாதிரியாக பற்பல சம்பவங்களைக் கூறிக்கொண்டே போகலாம். ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் தாக்ஷிண்யம் அந்த அளவிற்கு பிரஸித்தி பெற்றிருந்தது! அவரை தாக்ஷிண்யத்திற்கு உறைவிடம் என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் போற்றியிருப்பது மிகவும் பொருத்தமானதே!

## ॥ दान्त्यादिपरिशोभितः ॥

## 38. தாந்த்யாதி-பரிசோபித:

(புலனடக்கம் போன்ற ஆன்மிக குணங்களுடன் ஒளிர்பவர்)

‘தாந்த்ய’ எனும் பதம் புலனடக்கத்தைக் குறிக்கின்றது. புலனடக்கம் முதலான ஆன்மிக ஸாதனங்களைப் பெற்று ஒளிர்ந்தவர் தமது குருநாதர் என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் போற்றுகின்றார்.

மனத்திற்கு ஸேவகம் செய்வதே புலன்களுக்கு வேலை என்பதால், மனத்தையே தமக்கு அடிமையாக வைத்திருந்தவரிடத்தில் ஐம்புலன்களும் அடிபணிந்து நின்றன என்பதைக் கூறவும் வேண்டுமோ? புலன்கள் விஷயத்தில் ஒரு ஸன்யாஸிக்கென எவ்விதமான கட்டுப்பாடுகள் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டுள்ளனவோ, அவையனைத்தையும் பூரணமாகக் கடைப்பிடித்து வாழ்ந்தவர் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். பின்வரும் சம்பவங்கள் இதற்குச் சில எடுத்துக்காட்டுக்களாகும்.

தம்மைத் தரிசிக்க வருவோர் தம்மைப் பற்றிப் புகழ்ந்து கூறும் வார்த்தைகளை அவர் தமது செவிகளில் நுழைய விட்டதேயில்லை. அவ்வார்த்தைகளுக்கு அவரிடத்தில் எந்த விதத் தாக்கமும் இல்லாது போவதைக் கண்டு அந்நபர்கள் மிகுந்த ஆச்சரியத்துக்கு உள்ளாவார்கள்!

ஆசார்யாள் விஜயம் செய்யும் இடங்களில் அவருக்குப் பலரும் நறுமணம் கொண்ட மலர் மாலைகளையும் சந்தன மாலைகளையும் ஸமர்ப்பிப்பார்கள். ஆயினும், இவற்றையெல்லாம் கரங்களில் வாங்கிக் கொண்டு தமது உதவியாளரிடத்தில் அளித்து விடுவாரேயன்றி அவற்றையணிந்துகொண்டு அவற்றின் நறுமணத்தில் இன்புறுவது என்பதை ஆசார்யாள் ஒரு போதும் செய்ததேயில்லை!

ஒரு சமயம், வட இந்திய ஊர் ஒன்றில், உயர்தர திரவியங்களைப் பயன்படுத்தி மிகத் தூய்மையான முறையில் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்களை பக்தர்கள் அவருக்கு ஸமர்ப்பித்தனர். அவர்களது தூய்மையான பக்தியை அங்கீகரிக்கும் வகையில் அவை வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தைத் தமது கரத்தினால் தொட்டு ஆசீர்வதித்த ஆசார்யாள் அப்பண்டங்களை அங்கு கூடியிருந்த அனைவருக்கும் விநியோகிக்க உத்தரவிட்டார். அதன் ஒரு துளியைக்கூட அவர் சுவைத்திட விரும்பவில்லை என்பதைக் கண்ட பக்தர்கள் வியந்துபோனார்கள்!

மற்றொரு சமயம், ஆசார்யாளுக்கு மருத்துவ பரிசோதனை செய்வதற்காக வந்திருந்த மருத்துவர் ஒருவர், பரிசோதனையை வசதியாக நடத்துவதற்காக, வழக்கமாகத் தம்மிடம் வரும் நோயாளிகளிடம் கேட்டுக்கொள்ளும் விதத்தில், ஆசார்யாளைக் கட்டிலில் படுத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ள, ஆசார்யாளோ தாம் தரையில் படுத்துக் கொள்வதுதான் சாஸ்திர விதி என்றும், 'அவ்வகையில் தமது உடலைப் பரிசோதிக்க இயலும் என்றால் பரிசோதிக்கலாம்; இல்லையெனில் வேண்டாம்' என்றும் கூறிவிட்டார். வேறு வழியில்லாமல், அம்மருத்துவர் அதற்குச் சம்மதிக்கவே, தமது வஸ்திரத்தை மட்டும் தரையில் விரித்து அதன் மேல் ஆசார்யாள் படுத்துக் கொள்ள, மருத்துவரும் தரையில் அமர்ந்தவாறே ஆசார்யாளுக்கு மருத்துவப் பரிசோதனையைச் செய்தார்! கட்டிலில் படுத்துக் கொள்ளும் ஓர் அல்ப ஸுகத்தைக் கூடத் தமது உடலுக்குத் தர விரும்பாத அளவிற்குத் தமது புலனைக் கட்டுப்படுத்தியிருந்த ஆசார்யாளைக் கண்ணுற்ற அந்த மருத்துவர் வியப்பின் எல்லைக்கே சென்றுவிட்டார்!

விஷய சுகங்களைத் துச்சமாகக் கருதி வாழ்வது என்பதற்கு ஆசார்யாளின் புலனடக்கமானது இணையற்ற முன்னுதாரணத்தைக் காட்டித் திகழ்ந்தது.

ஐஐ❀ஐஐ

## ॥ धर्माधर्मविभागज्ञः ॥

## 39. தர்மாதர்ம-விபாகக்ஞ:

*(தர்மம் எது அதர்மம் எது என்பதைப் பகுத்தறிபவர்)*

“சாஸ்திரம் எந்த எந்த விஷயங்களை எவரெவருக்கென விதிக்கின்றதோ அந்த அந்த விஷயங்கள் அவரவர்களுக்குரிய தர்மமாகும்; எது தர்மம், எது அதர்மம் எனும் விஷயத்தில் சாஸ்திரம் என்ன கூறுகின்றதோ அதுவே இறுதியானது” எனும் கருத்தினில் அசைக்க முடியாததொரு தீர்மானம் உடையவராகத் திகழ்ந்தவர் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். தர்ம சாஸ்திர விஷயங்களில் அபாரமான பாண்டித்யம் பெற்று ஒளிர்ந்த ஆசார்யாள், தர்மம் மற்றும் அதர்ம விஷயங்களைப் பகுத்தறிவதில் நிகரற்றவராக விளங்கினார்.

சிறு வயது முதலே தர்மாதர்ம விஷயங்களில் அவருக்கிருந்த பரிச்சயம் அபாரமானது! தமது குடும்பம் மிகவும் வறுமையில் வாடியதைக் கண்ணுற்ற 12 வயதே ஆகியிருந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் (ஆசார்யாளின் பிரம்மசரிய ஆசிரமப் பெயர்) தமது தாயாரிடம், “எனக்கு உபநயனம் செய்வித்தால் நான் சென்று பிக்ஷை பெற்று வருவேன்; அதனால் உங்கள் கஷ்டமும் தீருமே” என்று கூறுவாராம். ‘ஆங்கிலக் கல்வி பயில்வதே உயர்வுக்கு வழி’; ‘பெரிய ஸ்தாபனங்களில் வேலைக்குப் போவதே புத்திசாலித்தனம்’; ‘மேல் நாட்டு கலாசாரத்தின்படி வாழ்வதே சிறந்த வாழ்க்கை’ எனும்படியான மன ஓட்டங்கள் நிறைந்த நகர்ப்புறவாசிகளின் நடுவில் அவர் வாழ்ந்து வந்த அந்த காலத்தில், ‘பிச்சையெடுப்பது கேவலம்’ எனும் எண்ணமும், ‘பிச்சையெடுத்தால் மற்றவர்கள் கேலி செய்வார்களே’

எனும் வெட்கமும் தயக்கமும் அவ்வயதுச் சிறுவர்களுக்கு இயற்கையாக இருக்கக் கூடியதே! ஆனால், ஆசார்யாளோ, 'உபநயனம் செய்விக்கப் பெற்ற பிரம்மசாரி பிக்ஷை எடுத்து உண்ண வேண்டும் என்பது சாஸ்திரத்தால் விதிக்கப்பட்டிருக்கும் தர்மம்; ஆகவே, ஸ்வதர்மத்தைச் (தமக்கு விதிக்கப்பட்டிருக்கும் தர்மத்தைச்) செய்வதில் வெட்கமோ, தயக்கமோ இருக்க வேண்டிய அவசியமே இல்லை' எனும் தீர்மானத்திலிருந்ததையே இந்நிகழ்ச்சி காட்டுகின்றது.

தமது 13ம் வயதில், தமது உபநயனம் முடிந்து தாம் தமது குருநாதரை முதன்முதலாகத் தரிசனம் செய்த சமயம், குருநாதர் இவரிடம், "மிக முக்கியமானது என நீ நினைக்கும் நீதி (வாசகம்) ஒன்றைக் கூறு" எனக் கேட்டார். மறுகணம், ஆசார்யாள் "நல்லவர்களுடன் நட்பு பூண்டு, தீயவர் தொடர்பினை விலக்க வேண்டும்" எனப் பதிலளித்தார்! தர்மம் எது, அதர்மம் எது என்பதை அறிவு பூர்வமாக ஆசார்யாள் அந்த வயதிலேயே தெரிந்து வைத்திருந்ததற்கு இதுவும் ஒரு சான்று!

ஸ்ரீ சாரதா பீடத்தை அலங்கரிக்கும் குருவானவர், சீடர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு ஸன்யாஸம் அளித்த அன்று, குரு தங்கப் பல்லக்கிலும் சீடர் வெள்ளிப் பல்லக்கிலுமாக அமர, இரு பல்லக்குகளும் சிருங்கேரியின் வீதிகளில் உலா வந்து திரும்புவது மடத்து ஸம்பிரதாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒன்று. இதன்படி, ஆசார்யாளுக்கு ஸன்யாஸம் அளிக்கப்பட்ட அன்றும் இரு பல்லக்குகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. தமது சீடர் பின் தொடர அங்கு வந்த ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள், தாம் வெள்ளிப் பல்லக்கில் அமர்ந்துகொண்டு-விட்டு, தமது சீடரை தங்கப் பல்லக்கில் சென்று அமர்ந்து-கொள்ளுமாறும் கூறிவிட்டார். கூடியிருந்த நூற்றுக்கணக்கான ஜனங்களும் மடத்து அதிகாரிகளும் திகைத்து விட்டனர். ஆனால், உண்மையில் மிகவும் குழம்பியிருந்திருக்க வேண்டிய நிலை 14 வயது கூட நிரம்பியிராத பாலகராகவிருந்த ஆசார்யாளுக்குத்தான். ஏனென்றால், 'குருநாதர் அமர்ந்திருந்த பல்லக்கில் தாம் அமருவதா; இது அதர்மம் அல்லவா?' எனும் குழப்பமும், 'முதல் நாளிலேயே ஸம்பிரதாயத்தை மீறிவிட்டாரே இந்த பால ஸன்யாஸி' எனும்

வகைகளில் ஜனங்கள் தம்மை நிந்திப்பார்களோ எனும் தடுமாற்றமும் அவருக்குள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருந்தன. ஆனால், அவரோ, தமது குருநாதர் கூறியதும், மறு பேச்செதுவும் பேசாது உடனடியாகச் சென்று தங்கப் பல்லக்கில் அமர்ந்துவிட்டார்! பிற்காலத்தில் சீடர் ஒருவர் ஆசார்யாளிடம் இந்நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டு, "இம்மாதிரியான கஷ்டமான உத்தரவை பரமாசார்யாளிடமிருந்து பெற்ற போது ஆசார்யாள் என்ன நினைத்தார்கள்?" எனக் கேட்டார். ஆசார்யாளும், "நினைப்பதற்கு இங்கு என்ன இருக்கிறது? என் குருவின் கட்டளையை நான் மீறக் கூடாது. சிஷ்யன் என்ற முறையில் என்னுடைய தர்மம் ஆசார்யாளின் உத்தரவை உடனடியாக நிறைவேற்றுவதுதான். அது ஒன்றுதான் எனக்கு அப்போது வந்த எண்ணம்" எனப் பதிலளித்தார்.

தமது குருநாதரின் விதேஹ முக்திக்குப் பின்பு, ஸ்ரீ சாரதா பீடத்தின் 35ம் பீடாதிபதியாக ஆசார்யாள் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், ஒரு சமயம், ஆசார்யாளின் பூர்வாசிரமத் தந்தையாரான ஸ்ரீ இராமா சாஸ்திரிகள் மறைந்து விட, அவருக்கு பதிநான்கு நாட்களுக்கான சடங்குகளைச் செய்வதற்குக்கூட வசதி இல்லாத நிலையில் அவரது குடும்பம் இருந்தது. அதைக் கண்டு வருந்திய மடத்து அதிகாரி ஒருவர், 'காலமடைந்தவர் ஆசார்யாளின் பூர்வாசிரமத் தந்தையாயிற்றே' என்பதால் அக்குடும்பத்திற்கு மடத்திலிருந்து பண உதவி செய்திட முற்பட்டார். ஆனால், ஆசார்யாளோ அதற்குச் சம்மதிக்கவில்லை. தமது பூர்வாசிரமத் தந்தை எனும் பாரபட்சத்தை அனுமதிப்பது ஒரு துறவியான தமக்குத் தர்மமல்ல என்பதையும், அது சரியான முன்மாதிரியாக இருக்காது என்பதையும் அந்த அதிகாரிக்குத் தெளிவாகச் சுட்டிக் காட்டினார் ஆசார்யாள்.

ை❀ெ

## ॥ ध्याननिर्धूतकल्मषः ॥

# 40. தியான-நிர்தூத-கல்மஷ:

(தியானத்தின் மூலமாக மனதைத் தூய்மைப்படுத்திக் கொண்டவர்)

ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள், தமது ஆத்ம தியானத்தின் மூலமாக (மனத்தின் அசுத்தமாக விளங்கிய) அக்ஞானத்தை முற்றிலும் ஒழித்து, ஜீவன்முக்தி அடைந்ததைக் குறிக்கும் வண்ணம் அவரை "தியான நிர்தூத கல்மஷ:" எனும் இந்நாமத்தினால் போற்றித் துதிக்கின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்.

"இடைவிடாத பயிற்சியால் (தத்துவம் குறித்துத் தவறாகப் புரிந்துகொண்டவை முதலியவற்றிலிருந்து) தூய்மை பெற்றபின் மனமானது பிரம்மத்தில் ஒன்றிவிடும் போது இரண்டற்ற ஆனந்த அனுபவத்தை முயற்சி ஏதுமின்றித் தரும் நிர்விகல்ப ஸமாதி ஏற்படுகின்றது. இந்த ஸமாதியில் (அக்ஞானத்தில் வேரூன்றி-யிருக்கும்) வாஸனைகளின் முடிவு ஏற்படுகின்றது. (மறுபிறவிக்கு வழிவகுக்கும்) அனைத்து கர்மாக்களுக்கும் நாசம் ஏற்படுகின்றது" என விவேகசூடாமணியும், "ஸமாதியின் மூலம் மலங்களிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்டதும் ஆத்மாவிலேயே உறைந்துவிடுவதுமான மனதினால் அடையப்படும் இன்பத்தை வார்த்தைகளால் வர்ணிக்க-முடியாது" என மைத்ராயணி உபநிஷத்தும் உரைக்கின்றன.

தமது குருநாதரின் அருகாமையில் இருந்து, முறையான யோகப் பயிற்சிகளை மேற்கொண்டு, அவற்றில் முன்னேறி, இறுதியாக, பரமேஸ்வரனின் தூண்டுதலால் நிர்குண (உருவமற்ற பரம்-பொருளைப் பற்றிய) தியானத்தை மேற்கொண்டார் ஆசார்யாள். "இடம், காலம் மற்றும் பொருட்களால் பரிச்சின்னப்படாத சுத்தமான சைதன்யமே நான்" எனத் தமது தியானத்தை துவக்கிய ஜகத்குருநாதர், சில நாட்களுக்குள்ளாகவே அக்ஞானமாம் அசுத்தத்தை அடியோடு அழித்து நிர்விகல்ப ஸமாதியில் ஆழ்ந்தார்.

பிற்காலத்தில், அவ்வனுபவத்தைப் பற்றித் தமது சீடர் ஒருவருக்கு நினைவு கூர்கையில் ஆசார்யாள் கூறியதாவது: “நான் எனது கண்களைத் திறந்த போது என் முன்னாலிருந்த காட்சி எனக்குத் தெரிந்த போதிலும் அது தெரியாதது போலிருந்தது. ஏனெனில், நாம ரூபங்களை ஆதாரமாகக் கொண்ட வேறுபாடுகளின் தோற்றங்களை நான் பொருட்படுத்தவில்லை. ‘நான் ஸத்ஸ்வரூபன்’ என்ற ஞானம் எந்த அளவிற்குத் தெளிவாக இருந்தது என்றால், நான் என்னைக் காட்டிலும் வேறு எதுவுமே இருப்பதாகப் பார்க்கவில்லை. எல்லாமே கடல் போன்ற என்னில் நீர்க் குமிழிகள் போலத் தோன்றின.”

ஆசார்யாளின் மனது எந்த அளவிற்கு பரிசுத்தமாக இருந்தது என்பதற்கு அவரது குருநாதரின் பின்வரும் வார்த்தைகளே சான்று: “சாந்தமும் சந்தோஷமும்தான் உங்கள் முகத்தில் தெரிகின்றன. என் மீது ஆழ்ந்த பக்தி வைத்திருக்கும் உங்களுக்கு, நான் என்னுடைய உடலை இந்த க்ஷணம் துறக்க நேரிட்டாலும், உங்கள் முகத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் காண முடியாது. அதே போல், உங்களை யாரும் எவ்வளவு தூண்டினாலும் உங்களிடம் சிறிதளவு கோபத்தையும் பார்க்க முடியாது. உலகின் எந்த விஷயமும் உங்களை இப்போது ஈர்க்காது.”

## ॥ धर्मप्रचारनिरतः ॥

# 41. தர்மபிரசார-நிரத:

(தர்ம பிரசாரத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டவர்)

ஜனங்களின் துயரங்களைப் போக்கி, பேரின்பத்திற்கு வழிவகுப்பதான தர்ம நெறிகளை ஜனங்களுக்குப் போதிப்பதில் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் பெரும் ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தார். வேதங்கள் மற்றும் உபநிஷத்துக்களில் கூறப்பட்டவை, சாஸ்திரங்களில் விளக்கப்பட்டவை, புராணங்கள் மற்றும் இதிஹாஸங்களில் காட்டப்பட்டவை, மஹான்களால் வாழ்ந்து

காட்டப்பட்ட வழிகள் எனப் பல்வேறு தர்ம நெறிகளை அனைவருக்கும் புரியும் வண்ணம் எளிதான உபன்யாஸங்களின் மூலமும், சுவையான சிறுகதைகளின் வடிவிலும் ஆசார்யாள் எடுத்துரைத்தார். ஜனங்களுக்கு நல்ல விஷயங்களை எடுத்துக் கூறும் சந்தர்ப்பம் மிகச் சில நிமிடங்களுக்கே கிட்டினும் கூட, ஆசார்யாள் அவற்றையும் பயன்படுத்திக் கொண்டு ஜனங்களுக்கு அருள் பாலித்தே வந்தார். ஆசார்யாள் செய்த தர்ம பிரசாரத்திலிருந்து சில பகுதிகளை கீழே காணலாம்:

- ‘‘நாம் பிரம்மசாரியாகவோ, க்ரஹஸ்தனாகவோ, ஸன்யாஸியாகவோ இருப்பினும், நமக்குரிய தர்மத்தைக் கடைப்பிடித்துக்கொண்டு வந்தால், அதுவே பரமசிவனுடைய ஆராதனையாகும்.’’

- ‘‘நெருப்பு நம்மைச் சுடும் என்று தெரிந்து கையை வைத்தாலும், தெரியாது கையை வைத்தாலும் அது சுட்டு விடும். அதே போல் பகவானின் பெயரை, நாம் தெரிந்து கொண்டோ அல்லது அறியாமலோ உச்சரித்துக் கொண்டு வந்தாலும் பகவான் நமக்கு நன்மையை அவசியம் தருவான். பகவான் விஷயத்தில் தீவிரமான பக்தியை வைத்துக் கொண்டு பகவானை நாம் ஸ்மரணை செய்தால் அதனால் வரக்கூடிய பலனோ மிகவும் அதிகம்.’’

- ‘‘யார் யாருக்கு எந்தெந்தச் சக்திகளுண்டோ அவற்றை வைத்துக்கொண்டு இறைவனை ஆராதித்தால் நாம் இந்த ஸம்ஸாரக் கடலைத் தாண்டி இறைவனுடனேயே சேர்ந்து மறுபிறவி இல்லாமல் ஆக்கிக்கொள்ள முடியும். இவ்வாறு இல்லாமல், ‘காலையில் எழுந்தவுடன் அப்படியே எதையோ சாப்பிட வேண்டும்; குளிக்க வேண்டும்; படிக்க வேண்டும்; ஊரைச் சுற்ற வேண்டும், வம்பு பேச வேண்டும்; ஆபீஸ் போக வேண்டும்; சம்பளம் வாங்க வேண்டும்; சினிமாவிற்குப் போக வேண்டும்; தூங்க வேண்டும்’ என்பவற்றை மட்டும் நாம் விரதமாக வைத்துக்கொண்டு இருந்தால் நமக்கு இந்த மனிதப் பிறவி வந்ததே வீண் என்ற நிலை ஏற்பட்டுவிடும்.’’

- நாம் நாஸ்திகர்களாக இருந்தாலும் யமன் நாஸ்திகனாக இருக்கப் போவதில்லை; தேவேந்திரனும் நாஸ்திகனாகப் போவதில்லை. உலகத்தில் உள்ள சட்டங்கள் தவறானவை என்று திருடன் சொன்னால் அதற்காக நீதிபதி விட்டுவிடப் போவதில்லை. அதேபோல், யார் யார் என்னென்ன புண்ணிய பாவங்களைச் செய்திருக்கிறார்களோ அதற்கு ஏற்றாற்போல் தான் அவரவர் அனுபவிக்க வேண்டும்.''
- "'இது வரைக்கும் எனது வாழ்வு எவ்வாறு நடந்துள்ளது? நான் மிருகத்தைப் போல் வாழ்ந்துள்ளேனா? நல்லோரைப் போல் வாழ்ந்துள்ளேனா? நான் என்ன செய்துள்ளேன்? பகவானின் நாமத்தை நினைவில் வைத்துக் கொண்டேனா? மஹான்களுக்கு உபசாரம் செய்தேனா? வீட்டில் பகவானின் நாமஸ்மரணம் நடந்ததா?' என்றெல்லாம் நாம் பிரதி தினமும் சிந்தித்துப் பார்த்தால் நாம் நம் வாழ்வை எவ்வாறு நடத்திக் கொண்டிருக்கிறோமென்று தெரியும். நாமெல்லாம் நம் வாழ்வு ஸத்புருஷர்களுடையதைப் போலிருக்க வேண்டும் என விரும்புகிறோம். நமது ஜீவனம் ஸத்புருஷர்களுடையதைப் போல் எப்போது ஆகும்? எப்போது நாம் ஓர் இலட்சியத்தை வைத்துக் கொண்டிருப்போமோ அப்போதுதான் நாம் ஸத்புருஷர்களைப் போல் வாழ முடியும். இலட்சியம் எது என்று நமக்கு எப்படித் தெரியும்? அதற்கெல்லாம் சாஸ்திரத்தைப் படித்து ஸத்புருஷர்களின் உபதேசத்தைப் பெற்றுக் கொண்டால்தான் தெரியும். இதை மனதில் வைத்துத்தான் நாம் கீதையைப் படிக்கிறோம்... உலகம் முழுவதிலும் சோகமும் மோஹமும் துக்கமும் இருந்து-கொண்டுதான் இருக்கின்றன. அதற்கு அப்பாற்பட்ட பரம்பொருளை அடைந்தால்தான் நமக்கு அளவற்ற இன்பம் கிடைக்கும். கீதையைப் படித்து அதன்படி நடந்துகொண்டு வந்தால் நம் வாழ்க்கையின் இலட்சியத்தைப் புரிந்துகொண்டு அதை அடைய முடியும்.''

## ॥ धिक्कृताखिलदुर्मतः ॥

# 42. திக்க்ருதாகில-துர்மத:

(அனைத்து விதமான தவறான கோட்பாடுகளையும் ஒழித்தவர்)

இறைவன் இருப்பதை ஒப்புக்கொண்டு, வேத சாஸ்திர விதிகளைப் பிரமாணமாக ஏற்றுக்கொண்டு, ஜனங்களை நல்வழிகளில் ஈடுபடுத்தி ஆத்ம தத்துவத்தை உள்ளது உள்ளபடியே அவர்கள் புரிந்துகொள்ள உதவும் கோட்பாடுகள் ஸன்மதங்கள் எனப்படுகின்றன. இதன்படி இல்லாது, ஜனங்களின் மனத்தினைக் குழப்பி அடிப்படையற்ற சந்தேகங்களை அவர்களுக்குள் ஏற்படுத்தி அவர்களை அறியாமையிலேயே உழலச் செய்யும் கோட்பாடுகள் துர்மதங்கள் எனப்படுகின்றன. தமது குருநாதரான ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தம்மை நாடிய ஜனங்களின் மனங்களைப் பீடித்திருந்த துர்மத விஷயங்களை, வேத சாஸ்திர விதிகளுக்குட்பட்ட, ஆணித்தரமான மற்றும் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய தமது விளக்கங்களின் மூலம் போக்கியருளினார் என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் இத்திருநாமத்தின் மூலமாக தெரிவிக்கின்றார். இதற்கு எடுத்துக்காட்டாக ஆசார்யாளிடம் பலரால் பல தருணங்களில் எழுப்பப்பட்ட வினாக்களிலிருந்து சிலவற்றையும், அவற்றிற்கு அவர் அளித்தருளிய விளக்கங்களையும் கீழே காணலாம்.

**கேள்வி:** பல இடங்களில் யாகங்கள் நடைபெறுகின்றன. இதற்காக அதிகமான அளவில் பணம் செலவிடப்படுகின்றது. இதே பணத்தை ஏழைகளுக்கு கொடுத்திருந்தால் அவர்கள் பெரும் நன்மை அடைந்திருப்பார்களே?

**ஆசார்யாளின் விளக்கம்:** யாகத்தில் நாம் செலவழிப்பது ஜனங்கள் லௌகீகப் பொருட்கள் மேல் செலவழிப்பதில் ஒரு சிறு பகுதிகூட ஆகாது. மேலும், அதனால் இறைவன் திருப்தியுற்று நாம் செலவிட்ட பொருட்களைக் காட்டிலும் அதிகமான பலன்களை அளிக்கிறான். உதாரணமாக, உரிய காலங்களில் தேவையான அளவு மழை என்பது போன்ற

பலன்களை அளிக்கிறான். விதைகளை மண்ணில் இடுவதை விடுத்து, “விதைகளை மண்ணிலிட்டு வீணாக்குகிறோமே; அதைச் சாப்பிடவாவது செய்யலாமே” என்று கருதினால் அது பொருத்த-மாகுமா? யாகத்திற்காக சிறிது கஷ்டப்பட்டாலும் பெரிதும் பலன் கிட்டுகின்றது.

********

**கேள்வி**: கங்கை ஒருவரது பாவங்களைப் போக்கிவிடுகின்றது எனக் கூறப்படுகின்றது. இது உண்மையாகவே அவ்வாறு ஆகிவிடுமா?

**ஆசார்யாள்**: ஆம். அதில் சந்தேகமென்ன?

**கேள்வி**: அப்படியானால் எந்த பாவத்தை வேண்டுமானாலும் செய்துவிட்டு கங்கையில் நீராடி பாவத்தைப் போக்கிக்கொண்டு விடலாமே!

**ஆசார்யாள்**: கங்கையில் செய்யப்பட்ட ஸ்நானம் அறியாமையால் செய்யப்பட்ட பாவங்களைப் போக்கிவிடும். மேலும், அறிந்தே எப்போதாவது செய்யப்பட்ட எந்த பாவங்களுக்காக பெரிதும் வருந்தி வருகிறோமோ அந்தப் பாவங்களையும் போக்கிவிடும். “கங்கையில் ஸ்நானம் செய்து போக்கிக் கொள்வேன்” என்ற எண்ணத்தோடு வேண்டுமென்றே செய்யப்பட்ட பாவங்களிலிருந்து கங்கை விடுதலை தருவாள் என எதிர்பார்ப்பது நியாயமில்லை. இவ்வாறு கூறப்பட்டதிலிருந்து கங்கையின் மஹிமையைப் பற்றிச் சற்றும் சந்தேகப்படவேண்டாம். கோடிக்கணக்கான ஜனங்கள் “கங்கை என்னைப் புனிதமாக்குவாள்” எனும் தீவிரமான நம்பிக்கையுடன் வெகுதூரம் பயணம் செய்து செல்கின்றார்கள். அவர்களுடைய நம்பிக்கையை வீணாக்குவதற்கு இறைவன் விரும்ப மாட்டான்.

********

**கேள்வி**: ஒருவனுக்கு இது தர்மம், மற்றவனுக்கு அது தர்மம் என்ற பாகுபாடு இன்றி அனைவருக்கும் சமமாக தர்மங்கள் இருந்தால் சௌகர்யமாக இருக்காதா?

**ஆசார்யாள்:** எல்லோருக்கும் ஒரே அளவிலான சட்டையைக் கொடுத்து அணிந்துகொள்ளுங்கள் என்று கூறினால் அணிந்துகொள்ள முடியுமா? அவரவருக்கேற்ற அளவு சட்டையைக் கொடுத்தால்தானே அது முடியும்? அது போல, அவரவர் தகுதிகளுக்கேற்ப அவரவர்க்குரிய தர்மங்களை சாஸ்திரங்கள் விதிக்கின்றன... ஆயினும், அனைவருக்கும் சமமான தர்மங்களாக ஸாமான்ய தர்மங்களை சாஸ்திரங்கள் விதித்திருக்கின்றனவே. "அஹிம்ஸை, உண்மை பேசுதல், திருடாமலிருத்தல், (புற மற்றும் அகத்) தூய்மை, புலனடக்கம்" ஆகிய ஐந்தும் மனிதராகப் பிறந்த அனைவருக்கும் விதிக்கப்பட்டுள்ள ஸாமான்ய தர்மங்களாகும்.

********

**கேள்வி:** இறைவனுக்குத்தான் 'தேவை' என்பது ஒன்றுமே இல்லையே? அப்படியிருக்க, எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதே. ஏன்?

**ஆசார்யாள்:** இறைவனுக்குத் தேவை என்பது ஒன்றுமே இல்லைதான். ஆயினும், அவனுக்கு நம் மனத்தைக் கொடுக்க வேண்டும் எனும் கடமை நமக்கு இருக்கிறது அல்லவா? எல்லாக் காலங்களிலும் இறைவனைச் சிந்தித்து நம் காரியங்கள் (மற்றும் அவற்றின் பலன்கள்) அனைத்தையும் அவனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்தோமானால் நாம் சுகமாக வாழலாம், சந்தோஷமாகவும் இருக்கலாம்!

********

**கேள்வி:** உபநயனமானால்தான் வேதங்களைக் கற்க முடியும். பலர் பிராமணர்களாக இல்லாததால் அவர்களுக்கு உபநயனமாகி, வேதங்களைக் கற்றிடும் வாய்ப்பில்லை. ஆதலால், அவர்கள் மோக்ஷமடைவதற்கான வாய்ப்புமில்லை எனப் பலரும் வாதங்களை எழுப்புகின்றார்களே?

**ஆசார்யாள்:** எவர்களுக்கு உபநயனம் ஆகியிருக்கிறதோ அவர்கள்தான் ஞானம் பெற முடியும் என்று யார் சொன்னார்கள்?

விதுரர் மஹாத்மாவாக இருந்தார். அவர் ஒன்றும் (உபநயனம் செய்து வேதம் கற்ற) பிராமணர் இல்லையே! வேத அத்யயனம் செய்யக் கூடாது என்பதற்கு மோக்ஷ வழியில் செல்லக் கூடாது என்று பொருளில்லை. உபநிஷத்துக்களில் உள்ள கருத்துக்களை நாம் யோக வாஸிஷ்டம், விசார ஸாகரம் போன்ற புத்தகங்களிலும் காணலாம். எல்லோரும் இம்மாதிரியான புத்தகங்களைப் படித்து ஞானத்தை அவசியம் பெறலாம். ஞானம் பெறும் தகுதி எல்லோருக்கும் உண்டு. சங்கர பகவத்பாதர் இவ்விஷயத்தைத் தீர்மானமாகக் கூறியிருக்கிறார்.

## ॥ नतलोकसमुद्धर्ता ॥

# 43. நதலோக-ஸமுத்தர்த்தா

(தம்மை வணங்கியவர்களை உயர்விப்பவர்)

தொழுதவர்களைக் காப்பதும் உயர்த்துவதும் இறைவனின் குணமாகும். இறைவனுக்கு ஒப்பானவர் தமது குருநாதர் என்பதால் அவரிடத்திலும் இதே குணம் நிறைந்து காணப்பட்டது என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் இந்நாமத்தின்மூலம் அறிவிக்கின்றார்.

பூவுலகில் மானுட உருவில் ஸ்ரீ சாரதா பீட ஜகத்குருவாக (1954 – 1989) ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் வாழ்ந்த போது அவரை தரிசித்து, வணங்கி வந்தவர்களுக்கு மட்டும் என்றில்லாது, இன்றளவும் ஆசார்யாளை சிந்தித்து வணங்கி வரும் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒரு விதத்தில் வாழ்க்கை நலமும் சிந்தனைத் தெளிவும் ஆன்மிக உயர்வும் உண்டாகிவருவது அவரவரது மறுக்க முடியாத அனுபவமாகும்.

ஆசார்யாளிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்த ஒருவர் ஒரு சமயம் தமது குடும்பத்துடன் ஆசார்யாளைத் தரிசிக்க சிருங்கேரிக்கு வந்திருந்தார். அனைவரும் தமது மரியாதைகளை ஆசார்யாளிடம்

ஸமர்ப்பித்த பின், குடும்பத் தலைவியானவர் தமது மகன் பற்றித் தமக்கு இருந்த (பின் வரும்) குறையை அவர் ஆசார்யாளிடம் தெரிவித்து குருநாதரின் அருளை வேண்டினார்: ‘‘இவன் எதற்கும் அடங்குவதேயில்லை; நாங்கள் சொல்வதைக் கேட்பதும் இல்லை. ஒரு ரவுடி போல் நடந்து கொள்கிறான். எங்களுக்கு மிக கவலையாக இருக்கிறது.’’ அவர் இதைக் கூறி முடித்ததும், ஆசார்யாள் அந்த பிள்ளையை தமதருகில் அழைத்து, அவனது கையைப் பிடித்தவாறே, அன்பு கலந்த வார்த்தைகளுடன், ‘‘இப்போதிலிருந்து ஒழுங்காக நடந்துகொள்ளுவாயா? உனது பெற்றோர் சொல்வதைக் கேட்டு நடப்பாயா?’’ என்று கேட்டார். ஆசார்யாளின் ஸ்பரிஸம் பட்ட உடனேயே அப்பாலகனுக்குத் தெளிவு வந்துவிட்டது. ‘‘சரி, அப்படியே நடந்துகொள்கிறேன்’’ எனக் கூறிவிட்டான் அவன். பெற்றோர் வார்த்தைகளை மதிக்கும் பிள்ளையாக மாறிய அவன், பிற்பாடு அவர்களது விருப்பப்படியே முறைப்படி உபநயனம் செய்து கொண்டு, ஆசார்யாளின் அருளையும் பெற்றுத் தனது நித்ய கர்மங்களையும் சிரத்தையாகச் செய்துவரத் துவங்கிவிட்டான்! பெற்றோருக்கும் பெரும் நிம்மதி ஏற்பட்டது!

தங்களது ஒரே மகனை விபத்து ஒன்றில் இழந்த, பக்தி சிரத்தை மிக்க தம்பதியினர் அதன்பின் ஆசார்யாளே கதி என இருந்தனர். ஓய்வு பெறும் வயதாகிய அவர்களை சிருங்கேரிக்கு வந்து ஆசிரமத்திலேயே தங்கிவிட அருளினார் ஆசார்யாள். ஸத்குருவின் அருகாமை, அவரது தேமதுர வார்த்தைகளை அடிக்கடிக் கேட்டிடுவது, அவர் விஜய யாத்திரைகளை மேற்கொள்ளும் சமயங்களில் அவருடன் செல்லுவது போன்ற அரிய வாய்ப்புக்கள் அவர்களுக்குக் கிட்டிடத் துவங்க, மகனை இழந்த அவர்களது பெரும் கவலை முற்றிலும் மறைந்து போய் இறைவனின் திருப்பாதங்களைப் பற்றிய சிந்தனை பெருமளவில் அவர்களுள் உண்டாகிவிட்டிருந்தது. படிப்படியாக ஆன்மிக உயர்வினை அவர்களுக்கு அருளிய ஆசார்யாள், நாளடைவில் அவர்களைத் தமது வேதாந்த வகுப்புக்களிலும் கலந்து கொள்ள அனுமதித்தார். தனக்கு ஸம்ஸ்க்ருதத்தில் பரிச்சயம் இல்லாத போதும் ஆசார்யாளின் அமுத மயமான வார்த்தைகளைக் கேட்டிடும் பாக்கியம் கிடைக்கின்றதேயெனும் விருப்பம் கொண்டு, மிக ஆர்வத்துடன் அந்த வகுப்புக்களில்

கலந்துகொள்ளத் துவங்கிய அந்த மூதாட்டிக்கோ ஆசார்யாள் நடத்திய விஷயங்கள் அவரருளால் மிகத் தெளிவாகவே புரியத் துவங்கி விட்டன என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்க விஷயம்!

ஐஐ❀ஐஐ

## ॥ नियमाचरणोत्सुकः ॥

## 44. நியமாசரணோத்ஸுக:

(விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் உற்சாகம் உடையவர்)

வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் ஒருவரால் கடைப்பிடிக்கப்பட-வேண்டியதென பற்பல விதிமுறைகள் தர்ம சாஸ்திரங்களாலும் சான்றோர்களாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் கடைப்பிடிக்கவே முயலாதோர் ஏராளம். இவற்றையெல்லாம் கடைப்-பிடிக்க வேண்டியிருக்கின்றதே எனும் சலிப்புடன் அவற்றைப் பின்-பற்றுவோர் சிலர். தமது குருநாதரோ இந்த இரண்டு கோஷ்டியிலும் சேராது, விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் பெரும் உற்சா-கத்தையே காட்டியவர் என ஜகத்குரு ஶ்ரீ பாரதீதீர்த்த மஹா-ஸ்வாமிகள் மிகப் பெருமையுடன் போற்றுகின்றார்.

பிரம்மசாரி, ஸன்யாஸி, சீடர், யோகி, பீடாதிபதி, குரு என அனைத்து நிலைகளிலும் அவையவைக்குரிய விதிமுறைகளை முழு ஈடுபாட்-டுடன் பின்பற்றி வாழ்ந்தவர் ஜகத்குரு ஶ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். இவற்றுள் ஏதேனும் ஒன்றிலும் ஒரு சிறு பிறழ்வு இருந்தது என்பதைக்கூடக் கண்டிட இயலாத வகையில் அனைத்திலும் பிறருக்கு ஒரு தலைசிறந்த முன்மாதிரியாகவே இருந்து காட்டியவர் அவர்.

ஒரு பிரம்மசாரியாக, தமது அநுஷ்டானங்களைக் காலம் தவறாது செய்தவர் ஆசார்யாள். காயத்ரி மந்திரத்தை ஜபிப்பதில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார் அவர். மடத்துப் பாடசாலையில் வித்யார்த்-தியாக இருந்துவந்த அவர் தமக்குரிய பாடங்களை மிகவும் சிரத்தையாகப் பயின்று வந்தார்.

பரமஹம்ஸ ஸன்யாஸத்தை ஏற்றுக்கொண்ட பின்பு ஸன்யாஸ நியமங்களைக் கவனத்துடன் கடைப்பிடித்து வந்தார் ஆசார்யாள். அவரது ஸன்யாஸ ஆசிரமச் சிறப்பு எப்படி இருந்து வந்தது என்பது முன்னரே 'கராப்ஜ விலஸத் தண்ட:', 'காஷாயாம்பர ஸம்வ்ருத:', 'தாந்த்யாதி பரிஸோபித:' முதலிய திருநாமங்களின் விளக்கங்களில் நாம் கண்டோம்.

ஜகத்குரு ஸ்ரீமத் சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் சீடராக விளங்கிய ஆசார்யாள், குருபக்திக்கு இலக்கணமாக இருந்து வந்தார். குருவின் விஷயத்தில் சீடரானவர் எங்ஙனம் நடந்துகொள்ள வேண்டும் எனும் விதிமுறைகளாக பரமசிவன் பார்வதிக்கு விளக்கியவற்றை 'குரு கீதை' எனும் நூல் வெளிப்படுத்துகின்றது. அவ்விதிகளுக்கு தக்கதொரு நடைமுறை விளக்கமாகவே ஆசார்யாளின் குருபக்தி விளங்கி வந்தது. குருநாதரின் சன்னிதியில் மிக பயபக்தியுடன் நடந்துகொள்வார் ஆசார்யாள். தமது குருநாதரைத் தொடர்ந்து செல்லும் சமயங்களில், அவரது நிழலைக் கூடத் தாம் மிதித்துவிடாத வண்ணமே நடந்து செல்வார் அவர். தமது குருநாதரைத் தரிசிக்க அவரது அறைக்குச் செல்லும் சமயங்களிலும் குருநாதர் எவருடனேனும் உரையாடிக் கொண்டிருந்தாலோ அல்லது நூல் எதையேனும் வாசித்துக் கொண்டிருந்தாலோ, ஆசார்யாள் அந்த அறைக்கு வெளியே ஓர் ஓரமாக நின்று காத்துக் கொண்டிருப்பார். தமது பணியினை முடித்து குருநாதரே இவரை அழைக்கும் சமயம் மட்டுமே உள்ளே செல்வார். தமது குருநாதரின் திருவுடை, பாதுகை, ஆஸனம் இவற்றின் விஷயத்திலும் அளவற்ற மரியாதையை வைத்து இவற்றினை வழிபடுவார் ஆசார்யாள். ஒரு சமயம், இரவு நேரத்தில், தமது குருநாதர் உறங்கிடும் சமயம், அவருக்கு ஏதேனும் உதவி தேவைப்படின் செய்வதற்காக அறை வாசலில் இருக்க வேண்டிய உதவியாளன் உடல்நிலைக் குறைவினால் பணிக்கு வராத போது, ஆசார்யாளே அங்கு சென்று அதைத் தமக்குக் கிட்டிய பெரும் பாக்கியமாக எண்ணி மிகவும் உற்சாகத்துடன் அப்பணியில் ஈடுபட்டதும் நடந்தது.

யோகத்தில் நிகரற்று விளங்கியவர் ஆசார்யாள். யோகத்தின் எட்டு அங்கங்களில், இரண்டாவது அங்கமாக 'நியமம்' என்பது

விளங்குகிறது. “சௌசம் (தூய்மை), ஸந்தோஷம் (திருப்தி), தபஸ் (தவம்), ஸ்வாத்யாயம் (படிப்பு) மற்றும் ஈச்வர ப்ரணிதானம் (இறை-யர்ப்பணம்)” ஆகியவையே யோகப்பயிற்சியில் ஈடுபடுவோருக்குரிய நியமங்களென பதஞ்சலி முனிவர் உரைக்கின்றார். இவை-யனைத்தையும் முறைப்படியும், உற்சாகத்துடனும் கடைப்பிடித்தவர் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்.

தூய்மை என்பது புறத்தூய்மை அகத்தூய்மை என இரு வகைப்படுகின்றது. “புறந்தூய்மை நீராலமையும்; அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்” என திருவள்ளுவர் கூறுவது போல் ஆசார்யாள் தினமும் மும்முறை நீராடி, திருநீறு பூசி, தூய்மையான காவியுடையை அணிந்து தமது பணிகளை மேற்கொள்ளுவார். எதற்கும் கலங்காது, மங்களமான வார்த்தைகளுடன், சத்தியத்தையே பேசிடும் அகத்தூய்மையும் இயற்கையாகவே ஆசார்யாளிடம் இருந்து வந்தது.

‘தமக்குக் கிட்டிடும் எதுவும் தமது குருநாதரின் அருட்பிரஸாதமே; அதில் குறை என்பது இருக்கவே இயலாது’ எனும் தீர்மானம் ஆசார்யாளிடம் இருந்து வந்ததால் ‘திருப்தி’ என்பது ஆசார்யாளிடம் நிரந்தரமாக உறைந்திருந்தது.

‘(சாஸ்திர விதிகளையொட்டிய உணவுக் கட்டுப்பாட்டினால் உண்டாகும்) உடலின் மெலிவே தவம்’ என ஸ்ரீ ஸதாசிவேந்திர ஸரஸ்வதி உரைக்கின்றார். ஸாத்விக உணவினையே உட்கொண்டு-வந்த ஆசார்யாள், தினமும் ஒரு முறை மட்டுமே (மதிய உணவை மட்டுமே) உண்ணும் வழக்கத்தை வைத்திருந்தார். நாக்கிற்கு சுவை தேடாமல், வியாதிக்கு மருந்து எடுத்துக் கொள்ளுவது போல் உட்கொள்ளப்பட்ட அந்த ஒரே ஒரு வேளைக்கான உணவும் அளவில் மிகக் குறைவாகவே இருந்துவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

‘காயத்ரி போன்ற மந்திரங்களை ஜபித்து வருவதே ஸ்வாத்யாயம்’ என ஸ்ரீ ஸதாசிவேந்திர ஸரஸ்வதிகளும், ‘மோக்ஷத்திற்கு வழி-வகுப்பதான சாஸ்திரங்களை வாசித்து வருவதே ஸ்வாத்யாயம்’ என பகவான் வேத வியாஸரும் விளக்குகின்றார்கள். தாம் பிரம்ம-சாரியாக இருந்த சமயம், காயத்ரி ஜபம் செய்வதில் மிக்க ஆர்வம்

உடையவராக இருந்தார் ஆசார்யாள். அது எந்த அளவிற்கு இருந்தது என்றால் அவர் உறங்கும் சமயங்களில் கனவிலும் அவரது காயத்ரி ஜபம் நடைபெற்றுவருமளவிற்கு இருந்து வந்தது! ஸன்யாஸம் பெற்றுக்கொண்ட பிறகு பிரணவ ஜபம், மஹாவாக்கிய ஜபம், தமது குருநாதரால் அருளப்பட்ட பல்வேறு மந்திர ஜபங்கள் ஆகியவற்றினை செய்துகொண்டுவந்த ஆசார்யாள், இவற்றுடன் ப்ரஹ்மானுசிந்தனம், ஆத்ம வித்யா விலாஸம் போன்ற ஆத்ம தத்துவ சுலோகங்களையும் பாராயணம் செய்துவந்தார்.

'இறையர்ப்பணம்' என்பது ஆசார்யாளிடம் விசேஷமாகக் காணப்பட்டது. தாம் செய்யும் எதையும் 'நான் செய்கின்றேன்' எனும் அஹங்காரம் இன்றி இறைவனுக்கு அர்ப்பணமாகவே உற்சாகத்துடன் செய்து வந்தவர் ஆசார்யாள். 'நமக்கு ஏற்படும் எதுவுமே இறைவனின் திருவுளப்படியே நடைபெறுகின்றது; அவற்றின் இன்ப துன்பங்களை நாம் இறைவனின் முடிவெனவே பார்க்க வேண்டும்'' என்பது அவரது தீர்மானமாகவே இருந்து வந்தது.

ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது பீடாதிபதியாகப் பொறுப்பேற்ற ஆசார்யாள் ஒரு பீடாதிபதிக்குரிய நியமங்களை கவனத்துடன் கடைப்பிடித்து வந்தார். தினமும் இரு முறை பொது தரிசனம் அளித்தல், பக்தர்கள் அளிக்கும் பிக்ஷாவந்தனத்தை ஏற்றுக்கொள்ளல், தமது ஆலோசனைகளை வேண்டி பக்தர்கள் எழுதிடும் கடிதங்களைப் படித்து அவற்றிற்கு பதிலளித்தல், மடத்து நிர்வாக விஷயங்களைக் கவனித்தல், இரவில் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜையைச் செய்தல், விஜய யாத்திரைகளை மேற்கொண்டு தர்ம பிரசாரம் செய்தல், மடத்து ஸம்பிரதாயங்களையொட்டி நடத்தப்படும் சிவராத்திரி பூஜை, நவராத்திரி விழா போன்ற பூஜைகளையும், பூர்வ குருநாதர்களது ஜெயந்தி மற்றும் ஆராதனைகளையும், வாக்யார்த்த சபை, வித்வத் ஸதஸ் போன்றவற்றையும் எவ்விதக் குறைவுமின்றி நிகழ்த்துதல் ஆகிய நியமங்களைச் செவ்வனே செய்து வந்தார் ஆசார்யாள்.

ஒரு ஸத்குருவிற்கான லக்ஷணங்களான "அதிகத தத்த்வ: சிஷ்ய ஹிதாய ச" (தத்துவத்தை உணர்ந்தவர்; சீடனின் நன்மைக்காக விழைபவர்) என்பனவற்றுடன் சிறந்துத் திகழ்ந்தவர் ஜகத்குரு ஸ்ரீமத்

அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். தம்மை நாடி வரும் சீடர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களது சந்தேகங்-களை மிகவும் உற்சாகத்துடன் தீர்த்துவைத்தருளி வந்தவர் அவர். தமது சீடர்கள் அனைவரும் நலமாக வாழ இறைவனைப் பிரார்த்தித்து வந்தவர் அவர்.

இங்ஙனம் பிரம்மசாரி, ஸன்யாஸி, சீடர், யோகி, பீடாதிபதி, குரு என அனைத்து நிலைகளிலும் அவையவைக்குரிய விதிமுறைகளை முழு ஈடுபாட்டுடன் பின்பற்றி வாழ்ந்து காட்டினார் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்.

## ॥ न्यायमार्गानुसारी ॥

# 45. ந்யாயமார்கானுஸாரீ

(தர்ம மார்க்கத்தை அனுஸரிப்பவர்)

எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும், தர்ம மார்க்கத்திலிருந்து ஒரு சிறிதும் பிறழாது வாழ்ந்து காட்டியவர் ஜகத்குரு அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். ஒரு சமயம், நிகழ்ச்சி ஒன்றினில் அருளுரையாற்றிய ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹா-ஸ்வாமிகள் 'ந்யாயமார்கானுஸாரீ' எனும் திருநாமம் எந்த காரணத்தினால் இயற்றப்பட்டது என்பதைக் குறிக்கும் வகையில் ஒரு விஷயத்தினைக் குறிப்பிட்டார்: "அவ்வப்போது மடத்தினில் எவ்வளவோ விவகாரங்கள் உருவாகும். ஆனால், எந்த விவகாரம் இருந்தாலும்கூட நியாயத்தைத் தவறிப் போகக் கூடாது என்பது எங்களது மஹாசன்னிதானத்தினுடைய தீர்மானமாக இருந்தது. அவர் கூறுவார்: 'ஏதேனும் ஒரு விஷயம் நியாயமானது இல்லையென்று தெரிந்தால், அதன் பக்கமே நாம் போகக் கூடாது.'" ஒரு சமயம், மடத்திற்குச் சொந்தமான இமாம் நிலங்களை மைசூர் அரசாங்கம் எடுத்துக்கொண்டுவிட்டது. மஹாசன்னிதானமும், 'சரி, எடுத்துக்-கொள்ளட்டும்' என்று விட்டுவிட்டார். அந்த தருணத்தில் மடத்து

பக்தர்கள் சிலர் அவரிடம், 'நாம் நீதிமன்றத்தில் வழக்கு போடலாம்; நிலங்களைத் திரும்ப மீட்டுவிடலாம்' என ஆலோசனை கூறினர். ஆசார்யாள், 'நான் வழக்குப் போட மாட்டேன்; அரசாங்கம் ஒரு காரியத்தைச் செய்கிறது என்றால், அது மக்களுக்கு நன்மை விளைவதற்காகத்தான் செய்யும். நான் என்னுடைய சுயநலத்திற்காக நிலங்களைத் திரும்பப் பெற வழக்கு போட்டால் அது மக்களுக்கு உண்டாகப்போகின்ற நன்மைகளுக்கு எதிராகத்தானே இருக்கும்? இது நியாயமாகாது அல்லவா? அதனால் நான் இந்த வழக்கினைப் போடமாட்டேன்' எனத் தீர்மானமாகக் கூறிவிட்டார்."

மற்றொரு சமயம், பக்தர் ஒருவர் தமது நிலத்தை மடத்திற்கென எழுதிக் கொடுத்துவிட்டார். காலப்போக்கில் அந்நிலத்தையொட்டிய மற்றொரு பகுதியையும், மடத்தைச் சேர்ந்ததென எண்ணி மடத்து அதிகாரிகள் கணக்கில் எடுத்துக்கொண்டுவிட்டனர். அப்பகுதிக்குச் சொந்தக்காரர் இதை எதிர்த்து கோர்ட்டுக்குச் செல்ல, மடத்து அதிகாரிகளும் ஒரு வக்கீலை ஏற்பாடு செய்து வாதாட, இதற்கு சில ஆயிரம் ரூபாய்களும் செலவாகியிருந்தது. இந்த வழக்கு மடத்திற்குச் சாதகமாகவே முடியும் எனும் ஒரு நிலையும் ஏற்பட்டு விட்டது. சம்பந்தப்பட்ட நபரோ உண்மையை விளக்கி ஒரு கடிதம் எழுதி ஆசார்யாளுக்கு அனுப்பி, ஆசார்யாள் இந்த விஷயத்தில் தலையிட்டு தனக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் எனக் கோரினார். அவர் அனுப்பியிருந்த விஷயங்களையும் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளையும் பரிசோதித்த ஆசார்யாள் அந்நபரின் பக்கமே நியாயம் இருப்பதைப் புரிந்துகொண்டு, "வழக்கை உடனடியாக வாபஸ் பெறுங்கள்" என மடத்து அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மடத்துத் தரப்பில் ஆயிரக்கணக்கில் செலவு ஆகியிருப்பதை அதிகாரிகள் சுட்டிக்காட்டிய போதும், ஆசார்யாள் தமது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. இதற்கிடையில், நீதிமன்றத்திற்கு வெளியே வழக்கை முடித்துக்கொள்ளும் பட்சத்தில், மடத்திற்கு ரூ12,000த்தை ஈடாகத் தருவதற்கு அந்த நபரே முன்வந்தார். ஆயினும், ஆசார்யாளோ அவரிடமிருந்து ஒரு பைசாவைக்கூடப் பெற்றுக் கொள்ளக்கூடாது என்றும், பிரச்சினைக்குரிய நிலப்பகுதி அவருடையதுதான் என்பதால் அதனைத் திரும்ப அவரிடமே உடனடியாக அளிக்க-

வேண்டும் என்றும் உத்தரவிட்டார். ஆசார்யாளின் நேர்மை அப்படிப்-பட்ட உயர்ந்த நிலையில் இருந்தது.

## ॥ न्यायादिनयकोविदः ॥

## 46. ந்யாயாதி-நயகோவித:

(ந்யாயம் முதலிய சாஸ்திரங்களில் உயர்ந்த தேர்ச்சி பெற்றவர்)

'ந்யாய' சாஸ்திரம் என்பது 'தர்க்க' சாஸ்திரத்தினைக் குறிக்கின்றது. தர்க்க சாஸ்திரம் முதலிய பல்வேறு சாஸ்திரங்களில் தமது குருநாதருக்கு அபாரமான ஞானம் இருந்தது என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் பெருமைபடத் தெரிவிக்கின்றார்.

ஆசார்யாளுக்கு இருந்த தர்க்க வல்லமை அவரது சிறு வயதிலேயே வெளிப்படத் துவங்கியது. ஒரு தருணத்தில் அவரது நண்பன் ஒருவன் ஆசார்யாளிடம், "கடவுள் இருக்கிறார் என்று உனக்கு எப்படித் தெரியும்? நீ பார்த்திருக்கிறாயா அல்லது கடவுளை நேரில் பார்த்த எவரையேனும் சந்தித்திருக்கிறாயா?" எனக் கேட்டான். அதற்கு ஆசார்யாள் சற்றும் தாமதியாமல் பதில் கூறினார்: "நீ பார்த்ததில்லை என்பதற்காக ஒரு விஷயத்தை அது கிடையவே கிடையாது என்று கூறிவிடுவாயா? உதாரணமாக, நீ பம்பாய்க்கு சென்றிருக்கிறாயா? இல்லை என்றால் பம்பாய் என்ற ஒன்று இல்லை என்றே ஆகிவிடுமா?" உடனே அவரது நண்பனும், "நான் பம்பாயைப் பார்த்ததில்லைதான். ஆயினும், பம்பாயைப் பார்த்தவர்களைப் பார்த்திருக்கிறேனே. அதனால்தான் பம்பாய் இருப்பதாக நான் நம்புகிறேன்" என பதிலளித்தான். மறு கணமே ஆசார்யாள் கூறினார்: "மிகச் சரியாகச் சொன்னாய். இதே போல்தான் கடவுளை நேரில் கண்ட நமது முன்னோர்கள் அது பற்றித் தெளிவாகக் கூறிவைத்-திருக்கின்றனர். நாம்தான் அவர்களது வார்த்தைகளை நம்ப மறுக்கிறோம். அவர்களுடைய அனுபவத்தை ஒதுக்கிவிட முடியாது. ஆகவே, கடவுள் இருக்கிறார் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான்

வேண்டும்.'' அவரது அறிவு சார்ந்த வாதங்களை செவிமடுத்த அவரது நண்பர்களுக்கும் கடவுள் நம்பிக்கைத் திடமாக வளர்ந்தது.

பிற்காலத்தில், ஆசார்யாள் ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது அதிபதியாகி, பீடத்து சம்பிரதாயங்களையொட்டி வித்வத் ஸதஸ், வாக்யார்த்த ஸபை போன்ற பண்டிதர்களின் சபைகளை நடத்திடும் சமயங்களில், அதில் பங்கேற்பதற்காக நாடெங்கிலுமிருந்து வேத பண்டிதர்களும் மற்றும் தர்க்கம், மீமாம்ஸை முதலிய பல்வேறு சாஸ்திரங்களில் மிகவும் தேர்ச்சி பெற்ற பண்டிதர்களும் வருகை புரிவதுண்டு. அச்சமயங்களில் அங்கு நிகழ்த்தப்படும் வாதங்கள் சிலவற்றில் தீர்வு எட்டப்படாது போகும்போது, ஆசார்யாளே தலையிட்டு அவற்றிற்குத் தீர்வினைக் கூறுவார். ஆசார்யாளுக்கு இருக்கும் அபாரமான வேத சாஸ்திர ஞானத்தினை வெளிப்படுத்தும் அத்தருணங்களைக் கண்டு அனுபவிப்பதற்கெனவே அங்கு கூடியிருக்கும் அனைத்து பண்டி-தர்கள் காத்திருப்பதும் வழக்கமாக நடைபெறும் ஒன்றே!

ஒரு சமயம், சாஸ்திர பண்டிதரான கொச்சி மஹாராஜாவிற்கு ந்யாய சாஸ்திர ஸித்தாந்தத்தில் சந்தேகமொன்று ஏற்பட்டிருந்தது. அவரது அந்த ஸந்தேகத்திற்கு உரிய விளக்கம் வெளிப்படையாக தர்க்க சாஸ்திர நூட்கள் எதனிலும் இல்லை! ஆகவே, தமது சந்தேகத்திற்கு உரிய தீர்வினை வேண்டி அதனை ஆசார்யாளுக்கு அனுப்பியிருந்தார் அவர். அதனை ஸபையில் அறிவித்திடச் செய்த ஆசார்யாள் அதற்குரிய தீர்வினைக் காணுமாறு அங்கு கூடியிருந்த பண்டிதர்களிடம் கேட்டுக் கொண்டார். ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளிடமே தர்க்கம் பயின்றவரும், பின்னர் மைஸூர் ஸர்வகலாசாலையில் பேராசிரியராக இருந்தவருமான மாத்தூர் வெங்கடேஸ்வர சாஸ்திரிகளும், கல்கத்தாவைச் சேர்ந்தவரும் மிகவும் பிரஸித்தி பெற்ற தார்க்கீகருமான மதுஸூதன பட்டாசார்யாவும் அந்த சபையில் இருந்தனர். அச்சந்தேகத்திற்கு அவர்களுமே தங்களது விளக்கங்களையும் அளித்தனர். ஆயினும், அவற்றையுமே இதர பண்டிதர்கள் தங்களது எதிர் வாதங்களினால் முறியடித்து விட்டனர். வாதங்கள்-எதிர்வாதங்கள் என அவ்விஷயத்தில் சர்ச்சை தொடர்ந்து கொண்டு இருந்ததே தவிர, உரிய தீர்வு எட்டப்படுவதாக இல்லை! அதற்கான தீர்வினை மீண்டும் நன்கு யோசித்துப் பார்த்து ஸபையின்

இறுதி நாளுக்குள் அவ்விஷயத்தில் ஒரு முடிவுக்கு வர முயலுமாறு ஆசார்யாள் அங்கு கூடியிருந்த பண்டிதர்களுக்கு அறிவுறுத்தினார். எவ்வளவோ முயன்றும் அவர்கள் ஒருவராலும் அதற்கான மிகச் சரியான விளக்கத்தைக் காண இயலவில்லை. ஸபையின் இறுதி நாளன்று, ஆசார்யாளே தலையிட்டு, அதற்கான விளக்கத்தைத் தமக்கே உரித்தான மிக எளிய மற்றும் தெளிவான நடையில் பண்டிதர்களுக்கு அளித்தருளினார். அவ்விளக்கம் எவ்வித எதிர்-வாதங்களுக்கும் இடம் கொடா வகையில், பூரண திருப்தியை அளிக்கும் வண்ணம் மிகச்சரியாக இருந்ததைக் கண்டு பண்டிதர்கள் வியந்துபோயினர். ப்ரௌட வித்வானாகிய மாத்தூர் வெங்கடேஸ்வர சாஸ்திரிகள், "ஸ்ரீ சாரதா பீடத்தின் அதிபதியாகிய நமது ஆசார்-யாளால் மட்டுமே எவ்விதமான சந்தேகத்திற்கும் தீர்வினைக் காண இயலும்; ஏனென்றால், (மனித உருவில்) இங்கு வீற்றிருப்பது ஸ்ரீ சாரதாம்பாளே அல்லவா!" எனப் போற்றி வணங்கினார். தமது சந்தேகத்திற்கான மிகச் சரியான விளக்கம் ஆசார்யாளிடமிருந்தே கிடைத்ததில் மஹாராஜா அகமகிழ்ந்து போனார் என்பதைக் கூறவும் வேண்டுமோ!

## ॥ निगमागमतत्त्वज्ञः ॥

## 47. நிகமாகம-தத்த்வக்ஞ:

(வேத வழிபாட்டு முறைகளின் உட்பொருளை அறிந்தவர்)

வேதங்களில் ஏராளமான இறைவழிபாட்டு முறைகள் கூறப்-பட்டிருக்கின்றன. எந்தெந்த யாகத்திற்கு, ஹோமத்திற்கு மற்றும் பூஜைக்கு எந்தெந்த மந்திரங்களை உச்சரித்து அவற்றை நடத்திட வேண்டும் என்னும் விவரங்கள் வேதங்களில் தரப்பட்டிருக்கின்றன. இவை விஷயத்தில் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் பரிபூரண அறிவுடன் விளங்கினார் என்பதை இந்தத் திருநாமம் தெரியப்படுத்துகின்றது.

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் வைதீக வழிபாட்டு முறைகளே பின்பற்றப்பட்டுவருகின்றன. வைதீக வழிபாட்டு முறைகளில் வேத மந்திரங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. பீடத்தினால் நிகழ்த்தப் பெறும், சத ருத்ர, மஹா ருத்ர மற்றும் அதிருத்ர யாகங்கள், சத சண்டி மற்றும் ஸஹஸ்ர சண்டி யாகங்கள் மற்றும் பற்பல தேவதா ஹோமங்கள் முதலியவை ஆசார்யாளின் மேற்பார்வையில் வேத விதிகளுக்குட்பட்ட வகையினில் நடத்தப்பெற்று வந்தன. உலக நன்மைக்கென நிகழ்த்தப்பெறும் இவற்றில் பங்கு கொள்ளும் வேத விற்பன்னர்கள் அதற்கான நியமங்களுடன் இருந்திட வேண்டும் என்பதில் ஆசார்யாள் உறுதியினைக் காட்டுவார். இதே போல், மடத்திலுள்ள பல்வேறு சன்னிதிகளில் நடைபெறும் பூஜைகள் வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள கிரமங்களை ஒட்டியே நடைபெற்றிட வேண்டும் என்பதிலும் முனைப்புடன் இருந்தார் ஆசார்யாள். ஒவ்வொரு நாள் இரவும் ஆசார்யாளே நேரடியாக செய்திடும் ஸ்ரீ சந்திரமௌலீசுவர பூஜை மற்றும் ஸ்ரீசக்ர பூஜை ஆகியவற்றில் கலந்து கொள்ளும் பாக்கியத்தினை அடைந்தோர்க்கு, வேத மந்திர கோஷம் ஒலிக்க ஆசார்யாள் அந்த பூஜைகளின் ஒவ்வொரு அங்கத்தினையும் அபாரமான சிரத்தை பக்தியுடன் செய்து வரும் பாங்கானது பெரும் பிரமிப்பையே தந்திட்டது என்றால் அது மிகையாகாது.

வேத மந்திரங்களினால் உண்டாகும் பயன் என்ன எனும் கேள்வி ஒருமுறை ஆசார்யாளிடம் வைக்கப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில்: ‘‘வேத மந்திரங்களை (முறைப்படி உச்சரிக்கத் தகுதி-யுள்ளவர்கள்) உச்சரித்தாலே புண்ணியம் ஏற்பட்டு அது பெரும் நன்மையளிக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக வேத மந்திரங்களுக்கு அபாரமான சக்தியிருக்கிறது. சில மந்திரங்கள் வியாதிகள் போன்றவற்றை நீக்கிடும் சக்தியுள்ளவை.’’

வியாதி மற்றும் இதர பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் கேட்டு தம்மை நாடி வருவோர்க்கு, உரிய வேத வழிபாட்டு முறைகளை ஆசார்யாள் அருளுவார். இதற்கு எடுத்துக்காட்டாக, சென்னை நங்கநல்லூரைச் சேர்ந்த ஸ்ரீமதி கற்பகம் சுந்தரேசன் எனும் பக்தை பகிர்ந்து கொண்ட விஷயத்தினைக் கூறலாம்: ‘‘ஒரு சமயம், என்னுடைய மூத்த மகன்

கவனக்குறைவாக தன்னுடைய இடது கை கட்டை விரலை வெட்டிக் கொண்டுவிட்டான். விரலின் மேல் பாதி அப்படியே வெட்டப்பட்டு தொங்கிவிட்டது. அவனுக்கு நீரிழிவு நோய் இருந்து வந்ததால், வெட்டப்பட்டுத் தொங்கிடும் அந்த விரல் பகுதியினை அறுவை சிகிச்சை மூலம் எடுத்து விடுவதா அல்லது மீண்டும் ஒன்று சேர்க்க முயற்சி செய்வதா என்று மருத்துவர்களுக்கும் புரியவில்லை. நான் உடனே இதனை ஆசார்யாளுக்குத் தெரியப்படுத்தி, அவனைக் காப்பாற்றியருளிட வேண்டும் என வேண்டிக் கொண்டேன். பெரும் கருணையுடன் எனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஆசார்யாள், சிருங்கேரியிலேயே மலஹானிகரேசுவரருக்கு 40 நாட்களுக்கு தினமும் ருத்ராபிஷேகம் நடைபெற ஏற்பாடு செய்து, அதன் பிரசாதமும் நாள் தவறாது எனக்கு அனுப்பப்பட வழி செய்தருளினார். வெட்டுப்பட்ட விரல் பகுதியை நீக்கிடும் முயற்சி கைவிடப்பட்டு, அவற்றை மீண்டும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் பலன் கிட்டியது.''

ஸ்ரீமதி கற்பகம் சுந்தரேசன் அவர்களே, தன்னுடைய கடைசி பிள்ளைக்கு ஏற்பட்ட ஒரு பிரச்சினையையும் ஆசார்யாள் எப்படி தீர்த்துவைத்தார் என்பதை விவரித்தார்: ''எனது கடைசி மகனின் மேல் யாரோ சூனியம் வைத்து விட, அவனுக்கு ஏகப்பட்ட கஷ்டங்கள் உண்டாகிவிட்டன. அவனையும் அழைத்துக்கொண்டு நான் சிருங்கேரிக்குப் போய் ஆசார்யாளிடம் விஷயத்தினை முறையிட்டு அவரது அருளை வேண்டினேன். எங்களை சில நாட்களுக்கு சிருங்கேரியிலேயே தங்கச் சொன்ன ஆசார்யாள், அதர்வண வேத பண்டிதர் ஒருவரை அழைத்து, இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவல்ல வழியினை அவரிடம் விவரித்து, அதன்படியே அவரை அதர்வ வேதத்தில் உள்ள பரிகார மந்திர பாராயணத்தினைச் செய்து வர உத்தரவிட்டார். அது முடிந்ததும் ஊருக்குத் திரும்பினோம். அவனுடைய பிரச்சினைகள் முழுவதுமாகத் தீர்ந்துவிட்டன.''

## ॥ नित्यसन्तुष्टमानसः ॥

# 48. நித்ய-ஸந்துஷ்ட-மானஸ:

(நித்ய திருப்தியினை உடையவர்)

*நித்யத்ருப்தி என்பது பிரம்மஞானிகளின் இலக்ஷணமாகும். பிரம்மத்தில் நிலைத்த ஒருவருக்கு அனைத்துமே கிட்டியதாகி-விடுவதால் தேவை என்ற ஒன்று அவர்களுக்கு இருப்பதற்கு வாய்ப்பேயில்லை. உலக நன்மைக்கென ஒரு தேஹத்தை சுமந்து-கொண்டு உலவிடும் அவர்கள் தேஹ தர்மத்தை அனுசரித்து கிடைக்கும் எதனையும் கொண்டு எளிதில் திருப்தியை அடைந்து-விடுவர். ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளிடத்தில் இந்த இலக்ஷணமானது பிறவியிலேயே ஏற்பட்டிருந்த ஒன்றாகவே விளங்கியது!*

*சிறு வயதிலேயே தமக்கு இது வேண்டும் என எதையும் அவர் விரும்பியதே இல்லை. எதிலும் குறை காணாது, இருப்பதைக் கொண்டு எளிதில் திருப்தி அடைந்து விடும் மனப்பாங்கு அவரிடத்தில் நிறைந்து காணப்பட்டது.*

*ஒரு சமயம், ஓர் இல்லத்தில் உணவருந்த தமது நண்பர்களுடன் இவரும் சென்றிருந்தார். பதார்த்தம் ஒன்றில் சிறிது மிளகாய் சத்து சற்று கூடிவிட்டபடியால் அனைத்து நண்பர்களும் 'காரம்', காரம்', 'வெல்லம் வேண்டும், தண்ணீர் வேண்டும்' என்றெல்லாம் கூக்குர-லெழுப்பினர். இவரோ அமைதியாக இருந்தது மட்டுமல்லாது மற்றவர்களைப் பார்த்து, "இச்சமயத்தில் இப்படி வெல்லம் வேண்டும் என்றெல்லாம் நினைப்பதெல்லாம் அவசியமேயில்லையே..." எனக் கூறவும் செய்ய, அவர்களுக்கு கோபம்தான் வந்தது. அவர்களுள் ஒரு நண்பன் இவரைப் பார்த்து, "அப்படியா கூறுகிறாய்? சரி, ஒரு கை நிறைய பச்சை மிளகாய்களை எடுத்து, அவையனைத்தையும் உன்னால் ஒரு சிறு முணுமுணுப்பும் இல்லாது சாப்பிட முடியுமா?" எனச் சவால் விட, ஆசார்யாள் உடனே அதை ஏற்றுக்-கொண்டுவிட்டார். மறு கணம், கை நிறைய மிளகாய்களை அவரிடம் அளித்தனர் அவர்கள். தம்மிடத்தே எவ்வித சலனமும் இல்லாது*

அவை அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக சாப்பிட்டு முடித்தார் ஆசார்யாள்! வெல்லம் வேண்டும் என்றோ தண்ணீர் வேண்டும் என்றோ அதன் பின் கூட அவர் கேட்கவில்லை! பிரமித்துப் போய் பார்த்துக் கொண்டிருந்த நண்பர்களைப் பார்த்து அவர் கூறினார்: "இந்த அளவிற்கு காரத்தைச் சாப்பிட வேண்டியது எவருக்கும் அவசியமில்லாத ஒன்றுதான். ஆயினும், நீங்கள் சவால் விட்டதை ஏற்று, 'கிடைக்கும் உணவுப் பதார்த்தம் எதையும் சாப்பிட்டு ஒருவர் திருப்தியடைய முடியும்' என்பதை எடுத்துக்காட்டும் வகையில் இதைச் செய்தேன்."

தமது உபநயனத்திற்குப் பின்பு தமது குருநாதரின் திருவடிச் சேவைக்கென அவர் சிருங்கேரியிலேயே தங்கிவிட்ட சமயத்திலும், "கிடைப்பதெல்லாம் குருநாதரின் அருட்பிரஸாதம். அதில் குறை காண என்ன இருக்க முடியும்?" எனும் திருப்தியுடன் அவர் இருந்துவந்தார். ஸன்யாஸம் ஏற்றுக் கொண்ட பிறகு தமக்கு எவ்வளவோ சிரமங்களை பற்பலர் ஏற்படுத்திய போதும் ஒரு சிறு முணுமுணுப்புக்கூட அவரிடமிருந்து வெளிப்பட்டதில்லை. இறை தரிசனமே கிட்டியபோதும் எனக்கு இன்ன வரம் வேண்டும் என அவர் யாசித்ததுமில்லை! தம்மைக் குறை கூறியோரிடத்தும் நிறையே கண்ட மஹாபுருஷராகவே இறுதி வரை வாழ்ந்தவர் அவர்.

## निष्कलङ्कसुचारित्रः ।

## 49. நிஷ்கலங்க ஸுசாரித்ர:

(மாசற்ற நடத்தையை உடையவர்)

தமது குருநாதர் அவருடைய எண்ணம் – சொல் – செயல் ஆகிய மூன்றிலும் நேர்மையையே கடைப்பிடித்தவர் என்பதை ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் "நிஷ்கலங்க ஸுசாரித்ர:" எனும் இத்திருநாமத்தின் மூலம் அறிவிக்கின்றார். ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தம்முடைய எண்ணம் –

சொல் – செயல் ஆகிய மூன்றிலும் மாசற்ற வகையிலேயே வாழ்ந்து காட்டியவர். எதை எண்ணினாரோ அதைத் தயங்காமல் சொன்னவர் அவர். எதைச் சொன்னாரோ அதன்படியே நடந்துகொண்டவர் அவர்.

ஒரு சமயம், ஒரு கிளை மடத்திற்குச் சொந்தமான சொத்துக்களை நிர்வகித்துக் கொண்டிருந்த ஒருவர் அவற்றைத் தம்முடைய சொத்துக்கள் என உரிமை கொண்டாடத் துவங்கிவிட, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில், ஒரு நாள் அந்த நபர் ஆசார்யாளைச் சந்தித்தார். ஆசார்யாள் அவரிடம், "எதற்காக தேவையில்லாமல் இந்த விஷயத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்? வெளியிலேயே பேசித் தீர்த்துக்கொள்வது சிறந்ததல்லவா? எனக் கேட்க, அவரும் அதை ஆமோதித்தார். ஆசார்யாளே அவரிடம், "நடுவர் ஒருவரிடம் நாம் இந்த விஷயத்தை விட்டு விடுவோம். அந்த நடுவர் ஒருவரை நீங்களே தேர்ந்தெடுங்கள். அவரிடம் இந்தப் பிரச்சினை பற்றிய அனைத்து விவரங்களையும் நாம் கொடுப்போம். உங்கள் தரப்பு சரி என அவர் தீர்ப்பளித்தால், அந்த சொத்துக்களை மடம் உங்களிடமே அளித்து விடும்" எனக் கூறினார். நடுவரை அவரே தேர்வு செய்தால் தீர்ப்பு தனக்கே சாதகமாகிவிடும்படி அவர் செய்து கொள்ளலாம் எனும் நிலையிலும் ஆசார்யாள் அப்பொறுப்பை அவருக்கே கொடுத்தது ஆசார்யாளுக்கு எந்த அளவிற்கு "ஸத்தியம்தான் ஜெயிக்கும்" என்பதிலிருந்த நம்பிக்கை நமக்குத் தெரிகிறது. ஆசார்யாள் கூறியதைக் கேட்ட அந்நபர், "இந்த முடிவு எனக்கு எந்த விதத்திலும் பயன் தராது. ஏனெனில், நீங்களோ ஒரு ஜகத்குரு. ஹிந்துக்கள் உங்களை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து மதிக்கின்றார்கள். ஆகவே, நடுவராக வரும் எந்த ஒரு ஹிந்துவும் உங்களுக்கு சாதகமாகத்தான் தீர்ப்பளிப்பார்" என பதிலளித்தார். உடனே ஆசார்யாளும், "அப்படியானால், நீங்கள் ஒரு கிறிஸ்துவரையோ அல்லது ஓர் இஸ்லாமியரையோ நடுவராகத் தேர்ந்தெடுங்கள். அவர்கள் என் விஷயத்தில் சாதகமாக நடந்துகொள்ள வாய்ப்பு இல்லைதானே" எனக் கூறினார். இதைக் கேட்ட அந்நபரும், "அதனாலும் பயனிருக்கப் போவதில்லை. உங்களுடைய நேர்மையும் நீதிநெறி தவறா நற்பண்பும் மிகப் பிரஸித்தி பெற்றவை. ஆகவே,

நான் யாரைத் தேர்வு செய்தாலும் அவர்கள் உங்களுக்குச் சாதகமாகத்தான் முடிவெடுப்பார்கள்" என்று பதிலளித்தார். இந்த சம்பவத்திலிருந்து ஆசார்யாளை எதிர்த்தவர்களும்கூட அவரது நேர்மையைப் பற்றி நன்கு உணர்ந்தவர்களாகவே இருந்தனர் என்பது தெளிவாகிறது.

## ॥ नीतितत्त्वसुबोधकः ॥

## 50. நீதி-தத்த்வ-ஸுபோதக:

(நீதி நெறிகளின் உட்கருத்தினை சிறந்த முறையில் உபதேஸித்தவர்)

தமது தர்ம பிரசாரங்களிலும் மற்றும் தமது ஆலோசனையை வேண்டித் தம்மை நாடி வருவோருக்குப் பெரிதும் உதவும் வகையிலும் சாஸ்திரங்களிலும், இராமாயணம், மஹாபாரதம் போன்ற இதிஹாஸங்களிலும், சான்றோர்களின் உரைகளிலும் கூறப்பட்டு இருக்கின்ற பற்பல நீதி நெறிகளை மேற்கோள் காட்டி, மிகச் சிறந்த முறையில் அவற்றை விளக்கியருளி வந்தவர் ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். அத்தருணங்களை நினைவுகூரும் வண்ணம் அவரை "நீதி தத்த்வ ஸுபோதக:" எனும் இத்திருநாமத்தினால் துதிக்கின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். ஆசார்யாளால் அருளப்பட்ட நீதி நெறி விளக்கங்களுக்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் விஷயங்களைக் குறிப்பிடலாம்.

ஒரு தருணத்தில் ஆசார்யாள்,

"ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யமப்ரியம் |
ப்ரியம் ச நாந்ருதம் ப்ரூயாத் ஏஷ தர்ம: ஸனாதன: ||"

{உண்மையையே பேச வேண்டும்; (உண்மையான) எது (கேட்பதற்கு) இனிமையானதோ அதை மட்டுமே பேச வேண்டும். (கேட்பவருக்கு வருத்தமளிக்கக்கூடிய) இனிமையற்ற உண்மையைப் பேசக் கூடாது;

(கேட்பவருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது என்பதற்காக) இனிமையான (வகையில்) பொய் பேசுவதும் கூடாது. இதுவே ஸனாதன தர்மமாகும்.}

எனும் மனு நீதி வாசகத்தினை எடுத்துக்கொண்டு அதற்கு விளக்கத்-தினை, ஒரு சிறு கதை வடிவில், மிகச் சுவையான முறையில் அருளினார். அது பின்வருமாறு:

"மாரடைப்பின் காரணமாக ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்-கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்து கொண்டிருந்தார். ஒரு நாள் அவரது புதல்வன் சாலை விபத்து ஒன்றில் சிக்கி இறந்துவிட்டான். இதைப் பார்த்த ஒரு நண்பர், மருத்துவமனைக்கு ஓடோடி வந்து, இதய நோயாளியான இம்மனிதரிடம், 'உங்களுக்குத் தெரியுமா? உங்கள் மகன் இறந்து விட்டான்' எனப் படபடத்த குரலில் கூற, தமது மகன் மீது அளவுகடந்த பாசத்தை வைத்திருந்த இந்த இதய நோயாளியோ அதைக் கேட்ட அதிர்ச்சியில் தமது உயிரையே விட்டுவிட்டார். உண்மையான விஷயம்தான் என்றாலும், அதை சந்தர்ப்ப சூழ்நிலை-களை அனுசரித்துப் பேசத் தவறிய இம்மனிதரின் செயற்பாடு தவறானதே!"

"குறும்புக்கார மனிதன் ஒருவன் ஒரு நாள் தனது நண்பனை (வேடிக்கையாக) ஏமாற்ற எண்ணி அவனிடம் சென்று, 'என்ன இது? லாட்டரியில் பத்து லக்ஷம் ரூபாய் உனக்குக் கிடைத்திருப்பது உனக்குத் தெரியாதா என்ன? என்னவோ மிகவும் அமைதியாக இங்கு உட்கார்ந்திருக்கிறாயே!" எனக் கூற, அதை உண்மையென்றே நம்பிவிட்ட அந்த அப்பாவி நண்பனுக்கோ மகிழ்ச்சியில் தலை கால் புரியவில்லை. அந்தப் பணத்தைக் கொண்டு என்னென்ன செய்யலாம் என்று மனக்கோட்டைகளைக் கட்டவும் துவங்கிவிட்டான். தன் வேலை முடிந்ததென மகிழ்ந்த அந்த குறும்புக்காரனும் அங்கிருந்து கிளம்பி-விட, சிறிது நேரத்திற்குப் பின்பு செய்தித் தாளை வாங்கி, தனது லாட்டரி சீட்டு எண் அங்கு வந்திருக்கின்றதா எனப் பார்த்த நண்பனுக்கு, விஷயம் பொய் என்று தெரிய வர, அவனது சந்தோஷமெல்லாம் மறைந்து அவனுக்குப் பெருத்த துக்கமே

ஏற்பட்டுவிட்டது. இனிமையற்ற பொய் எது என்பதற்கு எடுத்துக்காட்டு இது!''

''ஒரு சமயம், ஸ்வர்க்கம் செல்லும் புண்ணியத்தையடைந்த நண்பர்கள் மூன்று பேர் அதற்கான தேவலோக வாஹனத்தில் ஏறி, ஸ்வர்க்க லோகத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தனர். செல்லும் வழியில் ஓரிடத்தில், பாம்பு ஒன்று தன் வாயில் ஒரு தவளையை கவ்வி, அதனை விழுங்குவதற்குத் தயாராகிக் கொண்டிருந்ததை அவர்கள் கண்டனர். அவர்களில் ஒருவன் அந்த பாம்பினைப் பார்த்து, 'ஏ நாகமே, அந்தத் தவளையின் மீது உனக்குக் கருணையே கிடையாதா? அதை விட்டுவிடு' என்று கூறினான். அதைக் கேட்டு எரிச்சலடைந்த அப்பாம்பு அவனைப் பார்த்து, 'என்ன தைரியம் உனக்கு! இயற்கையிலேயே எனக்கென விதிக்கப்பட்டிருக்கின்ற என்னுடைய உணவை விட்டுவிடச் சொல்கிறாயே. நீ நரகத்திற்குப் போகக் கடவது' எனச் சாபமிட்டுவிட, அடுத்த கணம் அவன் அவ்வாஹனத்திலிருந்து விழுந்து நரகத்திற்குச் சென்றுவிட்டான். இதைக் கண்டு நடுநடுங்கிப் போன மற்றொரு நண்பனோ உடனே அந்தப் பாம்பினைப் பார்த்து, ''ஆமாம், ஆமாம், இயற்கையே தவளையை உனக்குரிய உணவாகத்தான் விதித்திருக்கிறது. அதனால் நீ தாராளமாக இந்தத் தவளையைச் சாப்பிடலாம்'' என்று கூறப் போக, இப்போது அந்தத் தவளைக்குக் கோபம் வந்துவிட்டது! அது அவனைப் பார்த்து, ''என்ன தைரியம் உனக்கு! என்னை இந்த பாம்பு சாப்பிடலாம் என்று சொல்கிறாயே. நீ நரகத்தில் வீழ்ந்து அதன் கொடுமைகளை அனுபவிப்பாயாக'' என்று சாபமிட்டுவிட்டது. அந்தோ பரிதாபம்! அவனும் அவ்வாஹனத்திலிருந்து விழுந்து நரகத்திற்குச் சென்றுவிட்டான். இறுதிவரைத் தன் நாவினையடக்கி அமைதி காத்த மூன்றாவது நண்பனோ எவ்விதப் பிரச்சினையுமின்றி ஸ்வர்க்கத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டான்! 'சில சமயங்களில் உண்மையைப் பேசுவதற்குப் பதிலாக அமைதியாக இருந்து விடுவதே சாலச் சிறந்தது' என்பதினையே இக்கதை விளக்குகின்றது!''

## ॥ पारावारातिगम्भीरः ॥

# 51. பாராவாராதி-கம்பீர:

(ஆழ்கடலைப் போன்றதொரு கம்பீரமானவர்)

பரந்து விரிந்த கடலினைக் காணும் எவரும் தமது மனதினில் விவரிக்க முடியாததொரு பரவசம் ஏற்படுவதை உணருவர். கடலின் கம்பீரம் அப்படிப்பட்டது. அதே போன்றதொரு பரவசம் எங்களது குருநாதரைத் தரிசிப்போருக்கும் ஏற்பட்டது என "பாராவாராதி கம்பீர:" எனும் இத்திருநாமத்தின் மூலமாக ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் பெருமையுடன் உரைக்கின்றார்.

ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களைத் தரிசித்த எவருக்குமே அவரது விஷயத்தில் பிரமிப்பும், அளவுகடந்த மரியாதையும், ஏற்பட்டுவிடுவது வழக்கமான ஒன்றாகவே இருந்து வந்தது! அவரது தெய்வீகத் தோற்றமும் சரி, அவர்தம் தேமதுர வார்த்தைகளும் சரி, அவருக்கிருந்த அளப்பரிய ஞானமும் சரி, இவையனைத்துமே அவரது கம்பீரத்திற்குக் கட்டியம் கூறுபவையாகவே விளங்கின!

தமது உபன்யாஸங்களின்போதும் மற்றும் தம்மைக் காண வருவோரிடம் பேசிடும் சமயங்களிலும், பல்வேறு நூட்களிலிருந்து மிகச் சரளமாக பற்பல சுலோகங்களை மேற்கோள் காட்டி ஆசார்யாள் பேசுவதைக் கண்ணுற்று வியப்படைந்தார் பக்தர் ஒருவர். பிற்பாடு, ஆசார்யாளிடம் அது பற்றிக் குறிப்பிட்ட அவர், "எவ்வித பிரயத்தனமுமின்றி, ஞாபகத்திலிருப்பதை வைத்தே உடனடியாகக் கூறுவது என வரும் பட்சத்தில், சுமார் எவ்வளவு சுலோகங்களை சரளமாக ஆசார்யாளால் கூற இயலும்?" எனக் கேட்டார். அவரைப் பார்த்துப் புன்னகைத்த ஆசார்யாள், "குறைந்த பட்சம் ஒரு லக்ஷம் சுலோகங்கள்" எனப் பதிலளிக்க, அதைக் கேட்ட அந்த பக்தருக்கு மேற்கொண்டு எதையும் பேசுவதற்கு நாவெழவில்லை!

பின்வரும் சம்பவமும் ஆசார்யாளின் பாண்டித்ய கம்பீரத்தினையே வெளிக்காட்டுகின்றது. ஒரு முறை, சீடர் ஒருவரது வேண்டுகோளை ஏற்று, ஆசார்யாள் அவருக்கு ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் முதல் சுலோகத்தினை விளக்கியருளினார். அச்சமயம் ஸன்யாஸி ஒருவரும் அங்கு இருந்தார். ஆசார்யாளின் விளக்கத்தைக் கேட்டுக்-கொண்டிருந்த அந்த ஸன்யாஸியோ அவ்விளக்கம் சம்பந்தப்பட்ட தர்க்க ரீதியான கேள்விகள் பலவற்றை ஆசார்யாளிடம் கேட்கத் துவங்கினார். அவரை நோக்கிய ஆசார்யாள், "இந்தப் பாடமானது இவருக்காக (சீடருக்கு) நடத்தப்படுகின்றது; ஆகவே, இவருக்கு எவ்விதமான விவரங்கள் பயனுள்ளதாகவிருக்குமோ, அவற்றை மட்டும் விளக்கிக் கொண்டிருக்கிறேன். தர்க்க ரீதியான விளக்கம் இவருக்கு அவசியமில்லை. இந்த விஷயத்தை தர்க்க ரீதியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என நீங்கள் விரும்பினால், இந்த ஒரே ஒரு (சுலோக) விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு மட்டுமே 14 வருடங்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையாக விளக்கத்தினைத் தர என்னால் இயலும்" என்று பதிலுரைத்தார். ஒரே ஒரு விஷயத்திற்கு மட்டும் தர்க்க ரீதியாக (14X365) 5110 நாட்களுக்கு 5110 வகையான விளக்கங்களைத் தர ஆசார்யாளால் இயலும் என்றால், அவரது சாஸ்திர ஞான சம்பத்தினை அளவிட எவரால்தான் முடியும்?

## ॥ प्राणायामपरायणः ॥

## 52. ப்ராணாயாம-பராயண:

(பிராணாயாமம் செய்வதில் நாட்டமுடையவர்)

யோகப் பயிற்சிகளில் ஈடுபடும் ஏனையோரைப் போன்றில்லாமல், ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் யோக மார்க்கமானது மிகவும் விசேஷமாகத் துவங்கியது. அவருக்கு ஸன்யாஸம் தரப்பட்ட அன்றைய இரவே அவரது கனவில்

சிவபெருமான் தோன்றி அவருக்கு பிராணாயாமத்தை உபதேசித்தார். இறைவனே காட்சியளித்துக் கற்றுக்கொடுத்த ஒன்றைச் செய்து வருவதில், இணையற்ற இறை பக்தராக விளங்கிய ஆசார்யாளுக்கு நாட்டமேற்படுவது இயற்கைதானே!

ஆசார்யாளின் கனவில் தோன்றிய சிவபெருமான் அவருக்கு பூரகம் (மூச்சை உள்வாங்குவது), கும்பகம் (மூச்சினை உள்ளிருத்திக் கொள்வது) மற்றும் ரேசகம் (மூச்சினை வெளிவிடுவது) ஆகியவற்றினை ‘ஜாலாந்திரம்’ மற்றும் ‘உட்டியானம்’ எனப்படும் பந்தங்களுடன் சேர்த்துக் கற்பித்தார். தவிரவும், ஸித்தாஸனத்தில் அமர்ந்தபடியும், பின்பு பத்மாஸனத்தில் அமர்ந்தபடியும் ப்ராணா-யாமத்தைச் செய்யும் முறைகளையும் பகவான் ஆசார்யாளுக்குக் கற்பித்தார். இவற்றுடன், ஸூர்யபேதனம், உஜ்ஜாயீ, ஸீத்காரீ, சீதலீ, பஸ்த்ரிகா முதலிய வெவ்வேறு வகையான பிராணக் கட்டுப்பாட்டு முறைகளையும் செய்துகாட்டியருளினார். அத்துடன் அன்றைய பாடம் முடிவடைய, மீண்டும் அடுத்த நாள் இரவில், தமது பாடத்தைத் தொடர்ந்த பரமேஸ்வரன் அன்றைய இரவில், மிகவும் உத்தமமானதான ‘கேவலகும்பக’ பிராணாயாம முறையை ஆசார்-யாளுக்குக் கற்பித்தார்.

இவ்வாறு ஏழு இரவுகளில் இறைவனிடமிருந்து யோக பாடங்களைக் கற்ற ஆசார்யாள் , அதன் பின்பு, தாம் கற்றுக்கொண்ட பிராணாயாம முறைகளையெல்லாம் மிக ஆர்வத்துடன் செய்து வந்தார். சில வருடங்களுக்குள்ளாகவே தினமும் பிராணாயாம பயிற்சிக்கு அரை மணி நேரம் ஒதுக்கிவிட முடிந்தது அவரால். சிறிது காலத்திற்-குள்ளாகவே, மூச்சினை நீண்ட நேரத்திற்கு ஸர்வ ஸாதாரணமாக அடக்கிவைக்கும் அளவிற்கு தேர்ச்சி ஆசார்யாளுக்கு உண்டாகியிருந்தது!

ஒரு தருணத்தில், ஆசார்யாளின் பிராணாயாம பயிற்சிகளைப் பற்றி ஆசார்யாளுக்கும் அவரது சீடருக்கும் நடைபெற்ற பின்வரும் சம்பாஷணையானது “யோகமும் ஞானமும் ஜீவன்முக்தியும்” எனும் புத்தகத்தின் பக்கங்கள் 86-88ல் இடம் பெற்றுள்ளது.

**ஆசார்யாள்:** சவாஸனத்திற்குப் பிறகு, பிராணாயாமத்தை மூன்றுவிதமான பந்தங்களுடன் செய்வேன். 16 சுற்றுக்களில் பூரகம், கும்பகம் மற்றும் ரேசகத்தை, ஒவ்வொரு சுற்றிலும் முறையே 16, 64 மற்றும் 32 விநாடிகளுக்குச் செய்வேன். அல்லது 8 சுற்றுக்களில் பூரகம், கும்பகம் மற்றும் ரேசகத்தை ஒவ்வொரு சுற்றிலும் முறையே 32, 128 மற்றும் 64 விநாடிகளுக்குச் செய்வேன். ஒவ்வொரு வாரமும், சீதலி போன்ற பிராணாயாம பயிற்சிகளையும் சற்று நேரம் செய்வதுண்டு. பிராணாயாமத்திற்குப் பிறகு, காலைக் குளியலுக்கு முன் 15 நிமிடங்கள் உடலுக்கு சக்தியையும் வலுவையும் தரக்கூடிய சில பயிற்சிகளைச் செய்வேன்.

**சீடர்:** ஆசார்யாள் எடுத்த எடுப்பிலேயே 2 நிமிடத்திற்கு மேல் கும்பகம் நீடிக்கும் பிராணாயாமத்தைச் செய்ய ஆரம்பித்தார்களா?

**ஆசார்யாள்:** இல்லை. இரு வார காலத்திற்குள் கும்பகத்தின் கால அளவை சுமார் ஒரு நிமிடத்திலிருந்து இந்த அளவிற்கு அதிகரித்தேன். ஒரு மாதப் பயிற்சிக்குப் பிறகு என்னால் ஐந்து நிமிட நேரத்திற்கு எளிதாக மூச்சை அடக்க முடிந்தது. ஆனால் இந்த அளவிற்கு நீண்ட கும்பகத்துடன் தினந்தோறும் பிராணாயாமம் செய்வது எனக்கு அவ்வளவு ஏற்புடையதாக இல்லை. ஏனெனில், இவ்வாறு செய்தால் எனக்கு இருந்த அரைமணி நேரத்தில் நான்கு சுற்றுப் பிராணாயாமம்கூட என்னால் செய்துவர முடியாதல்லவா? மூச்சை ஐந்து நிமிடங்களுக்கு மேல் சர்வசாதாரணமாக நான் அடக்கிப் பல வருடங்கள் ஆகிவிட்டன என்றாலும் உனக்காக அதை இப்போது நான் செய்து காண்பிக்கிறேன்.

{இப்போது சீடர் மனதில் ஓர் எண்ணம் ஏற்பட்டது. அதாவது ஆசார்யாள் கூறியதுபோல் அதிகநேரம் மூச்சை அடக்கினால் அது அவர்களின் உடலியக்கத்தையும், நாடித்துடிப்பையும் குறைவாக்கிவிடுமோ என்பதுதான் அது. உடனே, ஆசார்யாள் சிரித்துவிட்டு ''என்னுடைய நாடித்துடிப்பை இப்பொழுது பார்த்துக் குறித்துக்கொள். அதேபோல் கடைசி நிமிடத்திலும்

பார்த்துக்கொள்" என்றார்கள். சீடர் ஆசார்யாளுடைய நாடித்துடிப்பை அளந்தார். அப்போது நிமிடத்திற்கு 67 துடிப்பு என்ற வகையில் அது இருந்தது. பிறகு ஆசார்யாள் தமது நுரையீரலிலிருந்த காற்றை வெளியேற்றிவிட்டு, தமது நாசித்-துவாரங்களை மூடிக்கொண்டு, ஜாலந்தர பந்தத்தைச் செய்தார்கள். ஆசார்யாளது கண்கள் திறந்திருந்தன. முகத்தில் புன்னகை அரும்பிக் கொண்டிருந்தது. நாங்காவது நிமிடம் முடிந்தவுடன், சீடர் ஆசார்யாளது நாடித்துடிப்பை அளக்க ஆரம்பித்தார். ஐந்தாவது நிமிடம் முடியும்வரை அவ்வாறு அளந்து கொண்டிருந்தார். ஆசார்யாளது நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 29 ஆக இருந்தது. சீடர் நாடித்துடிப்பை அளப்பதற்காக ஆசார்யாள் காண்பித்துக் கொண்டிருந்த அவர்களது மணிக்கட்டிலிருந்து தனது கையை எடுத்தவுடன், ஆசார்யாள் தமது நாசித் துவாரங்களிலிருந்த தடையை நீக்கிவிட்டு நீண்டதாகவும், மெதுவாகவும் இரண்டு முறை நெடு மூச்சிழுத்துக் கொண்டார்கள்.}

**சீடர்:** எப்பொழுது ஆசார்யாள் பூரகம், கும்பகம் மற்றும் ரேசகத்திற்கு 1:4:2 என்ற தாம் வைத்துக்கொண்டிருந்த கால விகிதத்திலிருந்து 1:2:2 என்ற தற்போது ஆசார்யாள் உபதேசிக்கும் கால விகிதத்திற்குத் தம்மை மாற்றிக் கொண்டார்கள்?

**ஆசார்யாள்:** அது நடந்தது எனது ஆசார்யாள் காலடியிலிருந்து (1939ம் வருடம் முற்பகுதியில்) வந்த பிறகுதான். ஆசார்யாள் தான் இந்தப் புது விகிதத்தை எனக்குக் கூறினார்கள். இந்தக் குறிப்பை அவர்களது புனிதமான ஆக்ஞையாக நான் எடுத்துக் கொண்டு அதை நடைமுறைப்படுத்தினேன்.

நாளடைவில், யோகத்தின் சிகரமாம் நிர்விகல்ப ஸமாதியினையே அடைந்து, பிரம்ம ஞானமும் கைகூடப் பெற்று, யோகப் பயிற்சிகளெல்லாம் இனி அவசியமேயில்லை எனும் நிலை ஏற்பட்ட பின்புமே, ஆசார்யாள் தமது நித்திய ஆஹ்னீகத்தின் ஓர் அங்கமாக சிறிது நேரம் பிராணாயாமம் செய்வதில் உற்சாகத்துடன் ஈடுபட்டே வந்தார். தாம் செய்வதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல்

பிராணாயாம விஷயங்களில் பிறருக்கு ஏற்படும் சந்தேகங்களையும் நிவர்த்தி செய்தும் வந்தார் ஆசார்யாள்.

ஐஐ❀ஐஐ

## ॥ पुर्यादिक्षेत्रयात्राकृत् ॥

## 53. புர்யாதி-க்ஷேத்ர-யாத்ராக்ருத்

(புரி முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை மேற்கொண்டவர்)

தர்ம பிரச்சார நியமமாக தமது குருநாதர் மேற்கொண்ட விஜய யாத்திரை விஷயங்களை முன்னரே சில திருநாமங்களின் மூலம் குறிப்பிட்ட ஜகத்குரு பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அதையொட்டிய மேலும் சில விவரங்களை தற்பொழுது "புர்யாதி க்ஷேத்ர யாத்ராக்ருத்" எனும் இத்திருநாமத்தின் மூலம் நமக்குத் தந்தருளி-யிருக்கின்றார். 1976 – 77ம் வருடங்களில் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் மேற்கொண்ட இரண்டாவது அகில இந்திய யாத்திரையின் போது பகவான் ஸ்ரீ ஜகந்நாதரின் உறைவிடமாக விளங்குவதும் மற்றும் ஆதிசங்கரர் தோற்றுவித்த சதுராம்னாய பீடங்களில் ஒன்றானதுமான புரி உள்ளிட்ட பற்பல க்ஷேத்திரங்களுக்கு அவர் விஜயம் செய்த விஷயத்தை இந்நாமம் தெரிவிக்கின்றது.

ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் 1976ம் வருடம் நவம்பர் மாதம் முதல் தேதியன்று தமது பிரதம சீடரும், ஸ்ரீ சாரதா பீடத்து 36ம் ஆசார்யருமாகிய ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளும் உடன் வர, சிருங்கேரியிலிருந்து தமது யாத்திரையைத் துவங்கினார். பெங்களூர், ஸ்ரீசைலம், ஹைதராபாத், நாக்பூர், பரமஹம்ஸி கங்காஸ்ரமம், அலஹாபாத் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்த ஆசார்யாள், பின்பு வாரணாசிக்குச் சென்று அங்கு ஸ்ரீ அன்னபூரணேஸ்வரி விக்ரஹ பிரதிஷ்டை மற்றும் ஆலய கும்பாபிஷேகத்தையும் கோலாகலமாக நிகழ்த்தி வைத்தார். பின்னர், அங்கிருந்து புறப்பட்டு கயா, தாரகேஸ்வரம் வழியாக

கல்கத்தாவிற்கு விஜயம் செய்த ஆசார்யாள், அங்கிருந்து டில்லி சென்று அங்கு சிருங்கேரி மடத்து ஆலய கும்பாபிஷேகத்தைச் செய்து வைத்தார். பிறகு, வாரணாசிக்கு மீண்டும் விஜயம் செய்து பக்தர்களை அனுக்ரஹித்த ஜகத்குரு, அங்கிருந்து புறப்பட்டு, பற்பல இடங்களுக்கு விஜயம் செய்து விட்டு 24-06-1977 அன்று புரி க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தார். 27-06-1977 மதியம் வரை அங்கு தங்கி பக்தர்களுக்கு தர்மங்களை உபதேசித்த ஆசார்யாள் அங்கிருந்து கிளம்பி ஆந்திர மாநிலத்தின் பல இடங்களுக்கு விஜயம் செய்து விட்டு 25-10-1977 அன்று சென்னைக்கு வந்தடைந்தார். அங்கு ஆசார்யாளின் ஷஷ்டியப்தபூர்த்தி மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 25-12-1977 அன்று சென்னையிலிருந்து கிளம்பிய ஆசார்யாள் ராணிபேட்டை, பெங்களூர், ஹாசன், சிக்மகலூர், ஷிமோகா ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டு 07-01-1978 அன்று சிருங்கேரிக்குத் திரும்பினார்.

## ॥ पुराणागमतत्त्ववित् ॥

## 54. புராணாகம-தத்த்வ-வித்

(புராணங்களால் காட்டப்பட்டுள்ள வழிபாட்டு முறைகளின் உட்பொருளை அறிந்தவர்)

பகவானின் மூச்சுக் காற்றெனக் கொண்டாடப்படும் வேதங்களின் உட்கருத்தினை அறிந்துகொள்வதற்குத் தேவையான சாமர்த்தியமானது அனைவருக்கும் சாத்தியமில்லை. ஆகவே, ரிஷிகளும் மஹான்களும் வேதத்தின் சாரத்தினை சாஸ்திரங்களின் வடிவில் நமக்கு அளித்தனர். இவையுமே சாமானிய ஜனங்களின் அறிவிற்கு அப்பாற்பட்டதாக விளங்குவதால், மகரிஷி வேத வியாஸர், வேதங்களின் உட்கருத்தினை மிக எளிமைப்படுத்தி, புராணங்களின் வடிவில் உலகிற்கு அளித்தருளினார். மனிதகுலத்தின் மேன்மைக்கென இறைவனால் அருளப்பட்டிருக்கும் வேத தர்ம நெறிகள் மற்றும் இறை வழிபாட்டு முறைகள் ஆகியவை புராணங்களிலும் நன்கு

விளக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் உட்பொருளைத் தமது குருநாதர் பரிபூரணமாக அறிந்திருந்ததுடன், ஏனையோருக்கும் அதனை உபதேசித்தும் வந்தார் எனும் உண்மையை "புராணாகம தத்த்வ வித்" எனும் இத்திருநாமத்தின் மூலமாக ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் நமக்குத் தெரிவிக்கின்றார்.

வியாச மகரிஷி இயற்றிய 18 மஹா புராணங்கள் மற்றும் உப புராணங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கடவுளைப் பற்றி உயர்வாகக் கூறப்பட்டுள்ளது. தத்தம் மனத்திற்குப் பிடித்த இறை வடிவங்களை தத்தம் இஷ்ட தேவதையாக எடுத்துக் கொள்ளும் பக்தர்களுக்கு, அந்தந்த இறை வடிவத்தின் மஹிமையினையும், அதற்கான உபாஸனை, அபிஷேகம், அர்ச்சனை, ஸ்தோத்திரம் செய்வது மற்றும் தியானம் செய்வது போன்ற வழிபாட்டு முறைகளைப் புரிந்துகொள்ள உதவுவதே புராணங்களின் நோக்கமாகும். அந்த வழிபாட்டில் சிரத்தையுடன் ஈடுபட்டு, மனத்தூய்மையினை அடைந்து, அந்த தேவதையின் தியானத்தினை மேற்கொள்ளும் பக்தன், இறுதியில், அந்த தேவதையின் அருளாலே, 'பரமாத்மா ஒன்றே; ஆரம்பத்தில் தான் புராணங்களில் கண்டது போன்று பலவல்ல' என்பதனை அனுபவ பூர்வகமாகவே அறிந்து கொண்டுவிடுகிறான். இந்தப் புராண தத்துவ சூக்ஷ்மத்தினை நன்கு அறிந்துவைத்திருந்தார் ஆசார்யாள்.

சிவ மஹா புராணம் சிவனின் மகிமைகளையும், சிவனைக் குறித்து செய்யவல்ல பல்வேறு அபிஷேக, ஆராதனை, ஜபம் மற்றும் தியானம் போன்ற பல்வேறு வழிபாட்டு வகைகளையும் பற்றி விவரிக்கின்றது. இதே போல், விஷ்ணு புராணம், கணேச புராணம், ஸ்கந்த புராணம், தேவி பாகவத புராணம் போன்றவையும் அந்தந்த தேவதையின் மஹத்துவத்தினையும் பூஜை விதிமுறைகளையும் பற்றி விவரிக்கின்றன. இந்திய வழிபாட்டுக் கலாசாரத்தினில், பகவான் ஸ்ரீ ராமரின் சரிதத்தினையும் அவரது குணநலன்களையும் விளக்கிடும் இராமாயணமும், ஸ்ரீ கிருஷ்ண பகவானின் சரிதம் மற்றும் மகிமைகளை விளக்கிடும் மஹாபாரதமும் மற்றும் ஸ்ரீமத் பாகவதமும் புராணங்களுக்கு இணையாகவே போற்றப்படுகின்றன. இவை-யனைத்திலும் நன்கு பரிச்சயம் கொண்டவராகத் திகழ்ந்தார்

ஆசார்யாள். உதாரணமாக, தாம் பகவான் மஹாவிஷ்ணுவின் பாலமுகுந்த வடிவத்தினை ஒரு நாள் தியானம் செய்த சமயம் தமக்கு ஏற்பட்ட அனுபவமானது எப்படி விஷ்ணு புராணத்தில் விளக்கப்பட்டிருந்தபடியே உண்டாயிற்று என்பதை ஆசார்யாள் ஒரு சமயம் நினைவு கூர்ந்தார்:

“கராரவிந்தேன பதாரவிந்தம் முகாரவிந்தே விநிவேசயந்தம் |
வடஸ்யபத்ரஸ்ய புடே சயானம் பாலம் முகுந்தம் மனஸாஸ்மராமி ||

{ஆலிலையின் குழிலில் படுத்துக் கொண்டு, தாமரை போன்ற பாதத்தை தனது அற்புதமான வாயில் தனது அழகான கரத்தினால் நுழைத்துக் கொண்டு விளங்கும் குழந்தை முகுந்தனை மனதில் ஸ்மரிக்கிறேன்.}

மேற்கூறப்பட்ட சுலோகத்தில் வர்ணிக்கப்பட்ட உருவம், தானாகவே எனது புருவங்களுக்கிடையே தோன்றிய ஒளியிலிருந்து வெளிவந்து, எனது இதயத் தாமரையில் அமையக் கண்டேன். குழந்தை உருவம் கொண்டிருந்த இறைவன் என்னிடம் வாத்ஸல்யத்தை நிரப்பிவிட்டான். அன்று மதியம்கூட ஒரு தெய்வீக ரூபம் எனக்குள் தோன்றியது. அதற்கும் நான் முயற்சியொன்றும் மேற்கொள்ளவில்லை. அந்த வடிவம் விஷ்ணுவுடையது. நான்கு கைகளுடனல்லாமல், எட்டு கரங்களுடன் அவர் தோன்றினார். வலது நான்கு கரங்களில் சுதர்சன சக்கரம், மாலை, கௌமோதகி கதை மற்றும் அபய முத்திரை ஆகியவை இருந்தன. இடது நான்கு கரங்களில் பாஞ்சஜன்ய சங்கையும், சாரங்க வில்லையும், நந்தக வாளையும், வரத முத்திரையையும் நான் கண்டேன். கிரீடம், தோள்கள் மற்றும் கைகளில் காப்புகள் முதலிய பலவித ஆபரணங்களையும், ஒரு மாலையையும் அணிந்திருந்தார் பகவான்.

சிறிது நேரத்திற்குள், நான் தானாகவே நாராயண அஷ்டாக்ஷரீ மந்திரத்தை மானஸிகமாக ஜபம் செய்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். பிறகு எனது மனம் இறைவனின் வடிவத்திலேயே ஒன்றி விட்டது. உடல் பற்றிய உணர்வு சற்றே வந்த போது, ஏறக்குறைய ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டிருந்தது. தியானத்திலிருந்து எழுந்த பிறகும்கூட, எனது இதயத்தில் தியானம்

செய்யப்பட்ட வடிவத்தை நாம் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்று மாலையும் இந்த வடிவத்தையே தியானித்தேன். அடுத்த நாள் காலை தியானத்தைத் தொடங்கிய போது, முந்தின நாள் முதல் தெரிந்து கொண்டிருந்த ரூபத்திற்குப் பதிலாக ஜபமாலை மட்டும் வைத்துக் கொண்டவாறிருந்த பகவானின் ரூபம் தெரிந்தது. அவருடைய தோற்றம் மிகுந்த அமைதியாக இருந்தது. அவர் ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தார், இந்தப் புது ரூபத்தை எனது தியானம் முடிந்த பிறகும் கூட எனது இதயத்தில் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அன்று மதியத்தில் தியானத்தின் துவக்கத்தில் அந்த ரூபம் மாற்ற மடைந்தது. அப்போது பகவானுக்கு ஆயுதங்கள் இல்லாதது மட்டுமின்றி, கிரீடம் முதலான ஆபரணங்களும் இருக்கவில்லை. எனது மாலை நேர தியானம் இந்த ரூபத்தில் ஒருமுகப்படுத்துவதிலேயே ஆரம்பித்தது. திடீரென்று, என்னுடைய கவனம் பகவானுடைய சிரிக்கும் முகத்தை நோக்கித் திரும்பியது. ஒரு மணி நேரம் வரை நீடித்த அந்த அனுபவத்தில் மனம் அந்த வடிவத்திலேயே லயித்திருந்தது. அடுத்த நாள் காலை ஸ்நானம் முடியும் வரை, பகவான் எந்தவித ஆபரணமோ, ஆயுதமோ இல்லாமல் ஒரு ஜபமாலையை மட்டும் வைத்துக் கொண்டிருப்பதாக என் இதயத்தில் பார்க்க முடிந்தது. பிறகு அந்த ரூபம் மறைந்தது.”

பகவான் விஷ்ணுவின் ரூபங்களுடனான அவரது அனுபவங்களை அவருடைய குருநாதரிடம் ஆசார்யாள் தெரிவித்தார். அப்போது, அவருடைய குருநாதர் ஏதும் கூறவில்லை. ஆனால் சிறிது நேரம் கழிந்த பின், விஷ்ணு புராணத்தின் புத்தகப் பிரதியை ஆசார்யாளுக்கு அனுப்பி வைத்தார். அதனுள் அவர் ஒரு வெற்றுக் காகிதத்தை ஒரு பகுதியில் செருகி வைத்திருந்தார். குறிப்பிட்ட அந்தப் பகுதியை ஆசார்யாள் திறந்து பார்த்த போது, தாம் எந்த ரூபங்களை தமது தியானத்தில் பார்த்துக் கொண்டிருந்தாரோ அவற்றைப் பற்றிய விளக்கமும், அவற்றின் மீது தியானம் செய்யும் போது அவை எந்த வரிசையில் ஒரு ஸாதகனுக்குக் காட்சியினை வழங்கும் எனும் விவரங்களும் இருந்திடக் கண்டார். அவற்றைப் படித்த சமயம், தமக்கு ஏற்பட்ட தியான கிரமம் புராணத்தில் விதித்துள்ளபடி சரியாகத்தான் இருந்தது என்பதையறிந்து அவர்

திருப்தியடைந்தார். இவ்வாறு அந்த புராணாகம தத்துவத்தை தமது அனுபவமாகவே அவர் அடைந்தார்.

பீடத்தில் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் நரசிம்ம ஜெயந்தி, வாமன ஜெயந்தி, கிருஷ்ண ஜெயந்தி, ராம நவமி, நவராத்திரி, சிவராத்திரி போன்ற முக்கிய பூஜைகளை, சம்பந்தப்பட்ட புராணங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி நடத்துவார் ஆசார்யாள். இதற்கு உதாரணமாக, நரசிம்ம ஜெயந்தியின் போது இறுதியில் ஸ்ரீமத் பாகவதத்தில் விவரிக்கப்பட்டுள்ள நரசிம்ம அவதார ஸர்கத்தினைப் பாராயணம் செய்வது மற்றும் ராமநவமி பூஜையில் ஸ்ரீமத் வால்மீகி இராமாயணத்திலுள்ள ராமர் பட்டாபிஷேக ஸர்கத்தைப் பாராயணம் செய்வது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

புராணங்களால் நமக்கு உண்டாகிடும் பெரிய உபகாரம் என்ன என்பதை ஆசார்யாள் ஒரு சமயம் விளக்கினார்:

“இந்த ‘ச்ருதி ஸ்ம்ருதி’ என்பதின் தாத்பர்யத்தை நாம் தீர்மானமாகத் தெரிந்துகொண்டிருந்தாலும், புராணம் என்பது நமக்குத் தெரியாது என்றால் வேதங்களின் பொருளை சுலபமாகப் புரிந்து கொள்வது முடியாது. ‘ஸத்யம் வத (ஸத்யத்தைப் பேசு)’ என்று வேதம் சொல்கிறது.

சத்தியத்தையே பேசி யார் எதை எப்படி சாதித்தார்? இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல அரிச்சந்திரனுடைய கதையைப் பார்க்கலாம். அரிச்சந்திரன் என்று ஒருவன் இருந்தான். அவன் தன் வாழ்க்கையில் பலவிதமான பெரிய கஷ்டங்களை அனுபவித்தான். கடைசியில் அவனிடம் தர்மதேவதையே ப்ரத்யக்ஷமாகத் தோன்றி ‘உன்னைச் சோதிப்பதற்காகவே நான் இவ்வளவும் செய்தேன். நீ வாய்மையிலிருந்து சிறிதும் தவறவில்லை. அதனால் உன்னுடைய பெயர் என்றும் நிலைத்திருக்கட்டும். நீ அனைத்து இராஜ-போகங்களையும் அனுபவிக்கலாம்; நீண்ட காலம் வாழலாம். உன்னுடைய பெயர் உலகம் முழுவதும் சூர்ய, சந்திரர்கள் இருக்கும் வரை நிலைத்திருக்கட்டும்’ என்று அனுக்ரஹம் செய்ததாக நாம் படிக்கிறோம். அரிச்சந்திரனைப் பரீட்சை செய்ய வந்த இந்திரன், விச்வாமித்திரர் போன்றவர்கள் அவனுக்கு ஆசீர்வாதம் அளித்தார்கள்.

இந்தக் கதையைக் கேட்டால் 'ஆஹா! ஸத்யம்வத என்பதற்கு ஒரு விலை உண்டு' என்று நமக்கு விளங்கும். வெறுமனே 'ஸத்யம்வத' என்பதை மட்டும் ஒருவன் கேட்டுவிட்டு நிறுத்திவிட்டால் அவனுக்கு, 'பொய் சொன்னால் செல்வமெல்லாம் சேர்கின்றன. நான் ஸத்யம் சொல்லிக் கொண்டு ஒன்றும் இல்லாமல் இருக்க வேண்டுமா?' என்று தோன்றும். ஆனால் (அரிச்சந்திரனின்) புராணக் கதையைக் கேட்டால், தர்மத்தில் இருப்பவர்களுக்கு முதலில் துன்பம் அனுபவிக்க வேண்டியிருப்பது போல் தோன்றும். அவர்கள் துன்பத்தையும் அனுபவிப்பர். ஆனால், கடைசியில் அவர்களுக்கு ஏற்படுகிற சிரேயஸ் மற்ற யாருக்கும் ஏற்படுவது கிடையாது என்ற தீர்மானம் புராணத்தைப் படித்தால் ஏற்படும். அதனால் புராணங்கள், வேதமோ – ஸ்ம்ருதியோ கூறும் சித்தாந்தத்தை நமக்கு மிகத் தெளிவாக விளக்குகின்றன. அதனால் தான்,

விபேதல்பச்ருதாத் வேத: மாமயம் ப்ரதரிஷ்யதி |
இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரஹ்மயேத் ||

{வேதமானது, 'சிறிதளவே அறிவுள்ளவன் தன்னை அடித்துவிடுவான்' என்று பயங்கொள்கிறது. இதிஹாஸம் மற்றும் புராணங்களோடு வேதத்தை அறிந்துகொள்ள வேண்டும்.} என்று கூறப்பட்டுள்ளது. வேதத்தின் பொருள் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தால் மஹாபாரதம் போன்ற இதிஹாசத்தையோ, விஷ்ணு புராணம் போன்ற பதிணெண் புராணங்களையோ தெரிந்துகொண்டு பிறகு வேதத்திற்கு அர்த்தம் சொன்னால் அது நலம் பயக்கும். அப்படியில்லாமல் போனால், மனிதன் மந்திரங்களுக்கு விபரீதமான பொருளைப் புரிந்து கொண்டு, அதையே வேதம் சொல்வதாக மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுத்து, உலகத்தை அறியாமை என்னும் இருளில் மூழ்கடித்துவிடப் போகிறானே என்று வேதமே பயப்படுமளவிற்கு ஆகிவிடும்.''

## ॥ पालिताशेषभक्तौघः ॥

# 55. பாலிதாசேஷ-பக்தௌக:

(பாரபட்சமில்லாது அனைத்து பக்தர்களையும் காப்பவர்)

தமது குருநாதரின் அருளாம் அரவணைப்பில் ஒரு தாயின் களங்கமற்ற அன்பினையும் ஆதரவையுமே பக்தர்கள் உணர்ந்தனர் என்பதை இத்திருநாமத்தின் வாயிலாக ஜகத்குரு பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் நமக்கு எடுத்துரைக்கின்றார்.

“எனது குருநாதர் என்னைக் காத்து வருகின்றார். எனது பிரச்சினைகளை அவரிடத்தில் முறையிட்டுவிட்டால், அவற்றிற்கு நிச்சயம் தீர்வு கிடைத்துவிடும்” என்பதே ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் பக்தர்களது தீர்மானமாக இருந்தது. இதற்கு உதாரணமாகப் பின்வரும் சம்பவங்களைக் காணலாம்.

பக்தரொருவர் நினைவு கூர்ந்தது: “ஒரு சமயம், எனது கிராமத்தில் நடந்த பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற்ற ஒருவருக்கு என் மீது கோபம் வந்துவிட்டிருந்தது. நடந்து முடிந்த தேர்தலில் ‘நான் தோற்றவர்க்கு சாதகமாக இருந்துவிட்டேன்’ என இவர் என்னைத் தவறாக நினைத்துக்கொண்டு எனது கிராமத்தில் உள்ள ஒருசிலரை தூண்டிவிட்டு என் மீது வழக்கு தொடரச் செய்தார். இது ஒரு பெரிய பிரச்சினையாக வெடித்துவிடும் போலிருந்தது. நான் எப்போதுமே, எதற்குமே ஆசார்யாளிடம்தான் செல்வது வழக்கம். ஆகவே இதற்கும் நான் சிருங்கேரி சென்று மஹாசன்னிதானத்திடம் ‘எனது கிராமத்தில் ஒரு பிரச்சினை’ என்றேன். உடனே அவர், ‘பஞ்சாயத்து தேர்தலால் நடந்ததா?’ என்று கேட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர் என்னிடம் சில கேள்விகளைக் கேட்டார். அதற்கு நான் பதில் சொன்னவுடன், எனக்கு ஸ்ரீ நரசிம்ம யந்திரத்தைக் கொடுத்து அருள் பாலித்தார். அதற்கப்புறம் ஒன்றன்பின் ஒன்றாக எனக்கு வந்த தொந்தரவுகள் விலகத் துவங்கிவிட்டன.”

பின்வரும் சம்பவமானது எப்படி ஒரு தாயாரின் கவலையை ஆசார்யாள் தீர்த்துவைத்தார் என்பதை விளக்குகின்றது: “எனது மகன்

தவிர்க்க முடியாத சில காரணங்களால் தலைமறைவாகி விட்டான். எனக்கு மிகவும் கவலையாகி விட்டது. அச்சமயம் பெங்களூரில் முகாமிட்டிருந்த ஆசார்யாளைத் தரிசிக்கச் சென்ற நான், அவரிடம் இதுபற்றிக் கூறி அவரது அருளை வேண்டினேன். மந்திராட்சதையைக் கொடுத்து ஆசீர்வதித்த அவர், 'அடுத்த தரிசனத்திற்கு வரும் போது அவனையும் அழைத்துக்கொண்டு வா' என்று கூறினார். நானும் எதையும் யோசிக்காமல் 'சரி' என்று கூறிவிட்டேன். பிறகு காரில் ஏறி கிளம்பிய உடன் என் கணவர் என்னைக் கேட்டார்: 'அடுத்த தரிசனத்திற்கு உன் பையனை அழைத்துவாவென்று ஸ்வாமிகள் சொன்ன போது நீ மிகவும் தைரியமாக சரியென்று சொன்னாயே! எப்படி அவனை அழைத்துப் போவாய்?' நான் கூறினேன்: 'ஆசார்யாள் சொல்லிவிட்டார். நம் பிள்ளையை எப்படியாவது நம்முடன் அவரே சேர்ப்பார், பாருங்கள்!' பிறகு ஆசார்யாள் கோயம்புத்தூர் வந்த சமயம் எங்களது முதல் தரிசனத்திலேயே பாதபூஜை செய்ய ஏற்பாடு செய்து கொண்டோம். அன்றைய தினம் காலை எங்கள் மகன் திரும்ப வந்து சேர்ந்துவிட்டான். எல்லோருக்குமே அதிர்ச்சி, ஆச்சரியம்! ஆச்சார்யாள் வாக்கு பலித்தது! அன்றைய தினம் நாங்கள் செய்த ஆசார்ய தரிசனம் மற்றும் பாத பூஜையின் போது அவனும் எங்களுடன் கலந்துகொண்டான்."

புதுடில்லி மடத்தில் சேவை புரிந்து வந்த ஸ்ரீ வெங்கடசுப்பய்யர் என்பவரின் பேரன் அவனது பள்ளியில் ஏற்பட்ட ஓர் அதிர்ச்சிகரமான சம்பவத்தினால் தனது பேசும் சக்தியை இழந்துவிட்டான். சிறிது நாட்களில் புதுடில்லிக்கு விஜயம் செய்த ஆசார்யாளைத் தரிசிக்க பேரனையும் அழைத்துச் சென்ற அய்யர், ஆசார்யாளிடம் பேரனின் நிலையைப் பற்றிக் கூறி அருளை வேண்டினார். பேரனைத் தம்மருகே அழைத்த ஆசார்யாள், அவனிடம், "உன் பெயர் என்ன?" எனக் கேட்க, மறு கணம் தன்னுடைய பெயரை அவன் கூறினான்! பிறகு அவனிடம், "கணேசாய நம:" என்று சொல்லி, அதைத் திரும்பக் கூறும்படிச் சொன்னார் ஆசார்யாள். அவனும் அதனைத் திரும்பக் கூறினான். அவனை ஆசீர்வதித்தார் ஆசார்யாள். அந்த

கணத்திலிருந்து எவ்வித தடையும் இல்லாது அந்தச் சிறுவன் பழையபடியே சரளமாகப் பேசத்துவங்கிவிட்டான்.

ஐஐ❀ஐஐ

॥ पिङ्गलाब्दसमुद्भवः ॥

## 56. பிங்களாப்த-ஸமுத்பவ:

(பிங்கள வருடத்தில் அவதரித்தவர்)

பிங்கள வருடம், ஆஸ்வின மாதம் (ஐப்பசி), பஹுள சதுர்த்தசி திதியில், ஸ்வாதி நக்ஷத்திரத்தில் ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் பெங்களூர் நகரிலுள்ள பசவங்குடியில் அவதரித்தார். அன்று தீபாவளித் திருநாளும்கூட (13-11-1917). தீய சக்தியாம் இருளை அழிக்கும் தீபத் திருநாளில், குதூகலமும் கொண்டாட்டமும் நிறைந்த தீபாவளிப் பண்டிகையன்று ஆசார்யாளின் திருவவதாரம் நடைபெற்றது பொருத்தமாகவே இருந்தது. எண்ணற்றோரின் அக்ஞான இருளை அழிக்கவிருக்கும் இணையற்ற ஸத்குருவின் வரவை உலகம் கொண்டாடுவது இயற்கைதானே!

ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் திருவவதாரம் நிகழும் பாக்கியத்தை பிங்கள வருடமானது தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டது என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் இத்திருநாமத்தின் மூலம் கவிநயம்பட உரைக்கின்றார்.

வேத கலாசாரப்படி, வருடங்கள் 60 வகைப்படுகின்றன. அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. அவற்றுள் ஒன்றே ‘பிங்கள’ எனப்படும் வருடம். இந்த அறுபதிலும் யோக சாஸ்திரத்தை உடனே நினைவூட்டுவதாக அமையும் பெயர் ‘பிங்களா’ என்பது மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது! பிங்களா நாடியின் மஹத்துவத்தை அறியா யோக சாஸ்திர வல்லுநர்கள் இருக்க முடியாது. யோகத்தில் தன்னிகரற்று விளங்கப்போகும் மஹான் ஒருவரது அவதாரம் யோக சாஸ்திரத்தை நினைவூட்டும் தன்னிடத்தே

நிகழ வேண்டும் என 'பிங்கள' வருடம் விரும்பி பகவானிடம் வரம் பெற்றது போலும்! இதே போல் ஒரு வரத்தை முன்பும் (1858) பெற்று, ஸாக்ஷாத் ஆதிசங்கரரின் அம்சமெனப் போற்றப்பட்டவரும், சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 33ம் ஜகத்குருவாகப் பொறுப்பேற்றவரும், யோகத்தின் சிகரமென விளங்கியவருமான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளைத் தன்னகத்தே அவதரிக்குமாறு செய்துகொண்ட 'பிங்கள' வருடம் அவரது மறு அவதாரம் நிகழப் போவதைத் தெரிந்து கொண்டதோ என்னவோ, அவ்வைபவத்துப் பெருமையும் தனக்கேச் சேரவேண்டுமென விரும்பி பகவானை யாசித்து அதை மீண்டும் (1917ல்) சாதித்துக் கொண்டது போலும்!

॥ बहुशिष्यसमायुक्तः ॥

## 57. பஹுசிஷ்ய-ஸமாயுக்த:

(சீடர்கள் பலருடன் அன்னியோன்னியமாக பழகியவர்)

நறுமணம் வீசும் மலரைச் சூழ்ந்து எப்போதும் வண்டுகள் இருப்பது போல் அருள் மணம் கமழ்ந்த எங்களது குருநாதரைச் சூழ்ந்து சீடர்கள் நிறைந்திருந்திருந்தனர் என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் பெருமிதத்துடன் கூறுகிறார்.

ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் திவ்ய தரிசனத்திற்காகவும், அவர்தம் அமுத மொழிகளைக் கேட்டிடும் அவாவுடனும் சீடர்கள் அதிக அளவில் வருகை புரிவர். கூடியிருக்கும் அனைவரது கண்களும் ஆசார்யாளின் அருளொளி வீசும் அற்புத உருவின் மீதேதான் இருக்கும்! 'அவரைத் தரிசித்தாலே போதும்; அதுவே பிறவிப் பெரும்பயனைத் தந்துவிடும்' எனும் சிரத்தையுடன் வருபவர்கள் ஒரு புறம் இருக்க, 'அவரது கடைக்கண் பார்வை தன் மீது ஒரு முறையேனும் பட்டிடாதா மற்றும் அவருடன் ஒரு வார்த்தையாவது பேசிவிட முடியாதா' எனும் ஆவல் நிறைந்த உள்ளங்களும் அவரைச் சூழ்ந்து இருக்கும்! அனைவருடனுமே

ஆசார்யாள் மிக சஹஜமாகத்தான் பழகுவார். அனைவரது கேள்விகளுக்கும் பதிலளிப்பார். அனைவரது சுக துக்கங்களை விசாரிப்பார். நகைச்சுவை மிளிர பேசுவார்; மற்றவர்களது நகைச்சுவை உணர்வுகளையும் மிகவும் ரஸிப்பார்! இதற்கு ஓர் உதாரணமாக, பின்வரும் சம்பவத்தைக் கூறலாம். தம்மைத் தரிசிக்க வந்த சீடர் ஒருவரை ஆசார்யாளுக்கு நன்கு பரிச்சயம் இருந்தும், அச்சீடரது பெயர் ஆசார்யாளுக்கு நினைவில் இல்லை.

**ஆசார்யாள்**: உன் பெயர் மட்டும் ஏன் எனக்கு ஞாபகத்தில் இருக்கவே மாட்டேனென்கிறது?

**சீடர்**: ஆனால், தினமும் ஆசார்யாள் அந்தப் பெயரைச் சொல்லிக்கொண்டேதானே இருக்கின்றார்கள்!

**ஆசார்யாள்** (வியப்புடன்): ஓ, அப்படியா!!! என்ன அது?

**சீடர்**: ஆமாம், 'நாராயணா, நாராயணா' என்று ஆசார்யாள் தினமும் சொல்லிக்கொண்டேதானே இருக்கின்றார்கள்

**ஆசார்யாள்** (அவரது விளக்கத்தை மிகவும் ரஸித்து சிரித்தபடி): ஓஹோ, அதைச் சொல்கிறாயா!! சரி, சரி.

ஸத்குருநாதராகிய அவருடன் பேசுவதற்குக் கிடைக்கும் நேரம் சில விநாடிகளேயென்றாலும், அச்சிறிது நேரத்தினுள்கூட அவரிடமிருந்து கிடைக்கும் விஷயம் நெடுங்காலத்திற்குப் பயன் தரவல்லதாகவேயிருக்கும். அவரைத் தரிசிக்க வந்த சிஷ்யர்கள் அனைவருக்குமே இந்த அனுபவம் உண்டு. பின்வரும் சம்பவம் இதற்கு ஓர் உதாரணம்: ஒரு சமயம், சீடர் ஒருவரிடம் ஆசார்யாள் கூறியதாவது: "குருவின் சன்னிதியில் எந்த விதத்திலும் ஒரு சிறிதும் அஹங்காரம் இருக்கக் கூடாது. இங்கு தரிசனத்திற்கு வருபவர்களில் பல பிரபலமான நபர்களும் உண்டு. அவர்களும் வரிசையில் நின்று தரிசனம் செய்ய வந்தாலும், தங்களுக்குள், 'நான் ஒரு மிக முக்கியமான புள்ளி; ஆனாலும் நானும் வரிசையில் நின்றுதான் வருகின்றேன்' என்ற ஒரு பெருமை இருக்கும். இதுவும் அஹங்காரத்தின் அடையாளம்தான். இதையும் தவிர்க்க வேண்டும்.'"

## ॥ बहुभाषाविशारदः ॥

# 58. பஹு-பாஷா-விசாரத:

(பன்மொழி வித்தகர்)

ஸம்ஸ்க்ருதம், கன்னடம், தெலுங்கு, தமிழ், ஹிந்தி ஆகிய மொழிகளில் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் மிகச் சரளமாக பேசுவார். இவையனைத்திலும் அவரால் அம்மொழி-களில் உயர்ந்த தேர்ச்சி பெற்றப் பண்டிதர்களுக்குச் சமமாகவும் பேச முடிந்தது மற்றும் அம்மொழிவாரி பிரதேசங்களில் வசிக்கும் பாமரர்-களின் நிலைக்கு இறங்கி அவர்களுக்கும் புரியும் வகையில் வெகு சஹஜமாகவும் பேச முடிந்தது. ஒரு பிரதேசத்திற்குச் சம்பந்தப்பட்ட மொழியானது அதே பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் எம்மாதிரி-யெல்லாம் மாறுபாடுகளுடன் பேசப்படுகின்றது என்பது பற்றிய அறிவும் ஆசார்யாளுக்கு இருந்தது. உதாரணத்திற்கு, ஆசார்யாளு-டனேயே தங்கி, அவருக்கு சேவை செய்து வந்த ஸ்ரீ செல்லா அவர்கள் பேசிடும் ஹிந்தி சுத்தமான ஹிந்தியாகும் என்று ஆசார்யாள் குறிப்பிடுவதுண்டு. அவரது இந்தத் திறமையே அவரது அகில இந்திய விஜய யாத்திரைகளின் போது, அவரை நாடி ஆயிரக்கணக்கில் ஜனங்கள் வந்து, அவரிடம் தங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டு, அவரது வழிகாட்டுதலைப் பெற்றுச் செல்வதற்கு வழிகோலியது.

‘அந்தந்த மொழிகளில் பேசும் போது அவர் பிரயோகிக்கும் பதங்களை கவனித்தால், அந்த மொழிதான் ஆசார்யாளது தாய் மொழியோ என்றே எண்ண வைக்கும்’ எனப் பலரும் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். அந்த அளவிற்கு ஆசார்யாளின் பன்மொழிப் இருந்துவந்தது புலமை! உதாரணமாக, தமிழ் மொழியை எடுத்துக் கொள்ளலாம். இது ஆசார்யாளின் தாய் மொழியும் அல்ல; பள்ளிக்குச் சென்று அவர் பயின்ற மொழியும் அல்ல. தமிழ் பேசும் ஜனங்களிடையே வஸித்து, அவர்கள் பேசுவதை நீண்ட நாட்களுக்குச் செவிமடுத்த பழக்கத்தில் வந்த மொழியா என்றால் அதுவும் அல்ல!

ஆயினும், ஆசார்யாளின் தமிழறிவு அனைவரும் வியக்கும் வண்ணமே இருந்துவந்தது. பின்வரும் சம்பவங்களே இதற்குச் சான்று.

1965ம் வருடம் ஃபிப்ரவரி மாதம் ஆசார்யாள் மதுரை நகரில் முகாமிட்டிருந்த சமயம், புரி கோவர்த்தன பீடத்து சங்கராசார்ய ஸ்வாமிகளான ஸ்ரீ நிரஞ்சன தேவ தீர்த்தர் அங்கு விஜயம் செய்து ஆசார்யாளைச் சந்தித்தார். இரண்டு பீடத்து அதிபதிகளையும் ஒரு சேரத் தரிசிக்க ஜனங்கள் பெருமளவில் கூடினர். அச்சமயம் புரி பீடாதிபதி தமது அனுக்ரஹ பாஷணத்தை ஸம்ஸ்க்ருதத்திலேயே அருளவிருந்ததால், பண்டிதர் ஒருவர் அதனைத் தமிழில் மொழி-பெயர்த்துக் கூறுவதாக ஏற்பாடாயிற்று. ஸ்வாமிகள் தமது உரையை முடித்ததும், அந்த பண்டிதருக்கோ அந்த பாண்டித்யம் மிக்க ஸம்ஸ்க்ருத உரையை மிகத் துல்லியமாக மொழிபெயர்த்துக் கூறிட இயலாமல் தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது. அவரைக் கண்டு மனமிரங்கிய ஆசார்யாள் அவரை அமருமாறு கூறிவிட்டு, தாமே ஸ்வாமிகளது உரையின் முழு விஷயத்தையும் அக்ஷர சுத்தமாகத் தமிழில் மொழி பெயர்த்து அங்கு கூடியிருந்தோருக்குக் கூறியருளினார். மூல உரையை ஸம்ஸ்க்ருதத்திலும் புரிந்துகொண்டு பிறகு ஆசார்யாளின் தமிழ் மொழிபெயர்ப்பையும் கேட்டிட்ட பலர் அவ்வளவு நீண்ட உரையைச் சரியாக நினைவில் வைத்துக்கொண்டு, வாக்கியம் மாறாது துல்லியமாக ஆசார்யாள் மொழிபெயர்ப்பு செய்து அளித்திருப்பதைக் கண்டு வியந்து போயினர்!

ஸந்தியாவந்தன மந்திரங்களுக்கான அர்த்தத்தினைத் தமிழில் விளக்கி ஒரு புத்தகமாக வெளியிட எண்ணிய சீடர் ஒருவர், அதற்கான அனுமதியை ஆசார்யாளிடம் வேண்டினார். தமது அனுமதியையும், ஆசிகளையும் அளித்திட்ட ஆசார்யாள், அத்துடன் நிற்காது, அம்மந்திரங்களுக்கான அர்த்தங்களையும் தாமே எளிய தமிழில் விளக்கியருளிட, அந்த சீடர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

ஒரு சமயம், ஆசார்யாள் முன்னிலையில் நடைபெற்ற பொதுக்கூட்ட-மொன்றில் பேசிய ஒருவர், "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" எனும் திருக்குறளை

மேற்கோள் காட்டிப் பேசினார். பிறகு அருளுரையாற்றிய ஆசார்யாள், இக்குறளில் இடம் பெற்ற 'சான்றோன்' எனும் வார்த்தையை எடுத்துக்கொண்டு, அந்தத் தமிழ் வார்த்தையின் உண்மையான பொருளானது 'நிரம்பப் படித்தவன்' என்பதல்ல என்றும், 'மனிதனாகப் பிறவியெடுத்ததன் பயனான ஆத்ம ஞானத்தைச் சம்பாதித்தவன்' என்பதுதான் என்றும் அனைவருக்கும் விளக்கிக் கூறிய போது, அங்குக் கூடியிருந்தோர் மிக ஆச்சரியப்பட்டுப் போயினர்.

மற்றொரு சமயம், திருப்புகழ் வித்தகர் என அழைக்கப்படும் திரு இராகவன் அவர்கள் ஆசார்யாளைத் தரிசனம் செய்தபோது, ஆசார்யாள் அவரிடம் திருப்புகழிலிருந்து ஏதேனும் ஒரு செய்யுளைக் கூறுமாறு கேட்க, இவரும் உடனே தம் மனதிற்கு வந்த செய்யுளைக் கூறினார். அதன் அர்த்தமானது எவ்வாறு உபநிஷத்தின் கருத்துக்களையொத்து இருக்கின்றது என்பதையும், திருப்புகழை சிரத்தையுடன் பாடிவருவது எப்படி ஆத்ம அப்பியாஸத்திற்கு சமமானது என்பதையும் ஆசார்யாள் விளக்க, அதைக் கேட்டு திரு இராகவன் மெய்சிலிர்த்துப் போனார்.

॥ ब्रह्मतत्त्वानुसन्धाता ॥

## 59. ப்ரஹ்ம-தத்த்வாநுஸந்தாதா

(பிரம்ம தத்துவத்தின் அனுஸந்தானத்தினில் மனதொன்றியவர்)

ஸன்யாஸ ஆசிரமத்தினை மேற்கொள்ளும் ஒருவர் தமது குருவிடமிருந்து மஹாவாக்கிய உபதேசத்தினை பெற்றுக்கொண்டு, அதனை இடைவிடாது சிந்தித்து வரவேண்டியது நியமமாகும். இது தவிர, அவ்வப்போது குரு போதித்திடும் ஆத்மசிந்தனை சம்பந்தமான விஷயங்களையும் கடைப்பிடித்து வருவதும் அவசியமே. 1931ம் வருடம் மே மாதத்தில் கிரமப்படி ஸன்யாஸத்தினை ஏற்றுக்கொண்ட ஆசார்யாள் தமது குருநாதரிடமிருந்து "அஹம் ப்ரஹ்மாஸ்மி" (நான்

பிரம்மமாக இருக்கிறேன்) எனும் யஜுர்வேதிகளுக்குரிய மஹாவாக்கியத்தினை உபதேசமாகப் பெற்றார். அன்றிலிருந்தே அதனை அனுஸந்தானம் செய்துவரத் துவங்கினார்.

சில காலம் சென்று, ஒரு நாள் ஆசார்யாள் சாரதாம்பாள் ஆலயத்திற்குச் சென்றுவிட்டு திரும்பிய சமயம், அவரது குருநாதர் அவரை அழைத்து, "நீங்கள் நதியைக் கடந்து வந்திருக்கிறீர்கள். என்ன எண்ணம் உங்கள் மனதில் எழுந்தது?" என்று கேட்டார். என்ன எண்ணம் என்று வியப்புற்ற ஆசார்யாள், "நான் பார்த்த பொருட்கள் பல" என விடையளித்தார்.

"எது புதியதாக இருந்தது?" என மேலும் கேட்டார் குருநாதர்.

"ஒன்றுமில்லை. கண்ணுக்குத் தெரிந்தவற்றைப் பார்த்தேன்."

"எதெல்லாம் பார்வையில் தென்படுகின்றதோ, அதெல்லாவற்றையும் பார்க்க வேண்டுமா?"

"பொருட்களைப் பார்க்காமல் இருப்பதற்காக கண்களை மூடிக்கொண்டால் பிறகு நடக்கவே முடியாதே?"

"நீங்கள் பார்க்க வேண்டும். ஆனால், பார்க்காமலும் இருக்க வேண்டும்."

"அது எப்படி ஸாத்தியமாகும்?"

அதற்கு, "ஆத்மாம்போதேஸ்தரங்கோऽஸ்ம்யஹமிதிகமனே" {நடந்து செல்கையில், "ஆத்மா எனும் கடலில் நான் ஓர் அலை (போன்று இருக்கிறேன்)}" என்று குருநாதர் கூறி "இவ்வாறுதான் இருக்க வேண்டும்" என்று கூறினார். பிறகு, உட்கார்ந்திருக்கும் போது "நான் சைதன்யம் எனும் நூலில் கோர்க்கப்பட்டுள்ள மணியாக இருக்கிறேன்" என சிந்திக்க வேண்டும் என்று உபதேசித்தார். தொடர்ந்து, "எப்போதெல்லாம் ஒரு பொருள் பார்க்கப்படுகிறதோ அப்போதெல்லாம், இந்தப் பொருள் இப்போது பார்க்கப்படுகிறது என்று எண்ணாமல் சைதன்யமானது இப்போது இந்தப் பொருள் வடிவில் தோன்றுகிறது என எண்ண வேண்டும்" என்றும் மற்றும், "படுத்துக் கொண்டிருக்கையில், நான் இப்போது ஆனந்தமாம் பெருங்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிறேன் என்று சிந்தித்து பிறகு

தூங்க வேண்டும்'' என்றும் ஆசார்யாளுக்கு அவரது குருநாதர் உபதேசித்தார். இவற்றைக் கூறிவிட்டு பிறகு, "இத்தகைய ரீதியில் தனது வாழ்வைக் கழிப்பவன், மனிதர்களுள் திடமான, உள்திரும்பிய மனமுள்ள, மோக்ஷத்தில் விருப்பமுள்ளவன். ஆகவே, நடக்கையிலும், உட்கார்ந்து கொண்டிருக்கையிலும், படுத்துக் கொண்டிருக்கையிலும்கூட நாம் இவ்வாறுதான் நமது வாழ்க்கையை நடத்தவேண்டும்'' என்றும் உபதேசித்தார்.

மேற்கண்ட விஷயங்களை பிற்காலத்தில் சீடர் ஒருவரிடம் விவரித்த ஆசார்யாள், பிறகு, பின்வரும் விஷயத்தினையும் பகிர்ந்துகொண்டார். "ஆசார்யாள் (ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) இந்த விளக்கத்தைக் கொடுத்த போது, நான் ஆசார்யாளுக்கு முன் அமர்ந்திருந்தேன். உட்கார்ந்திருக்கும் போது எந்தவிதமான பாவனையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைப் பற்றிய உபதேசத்தை ஆசார்யாள் கூறி முடித்தவுடனேயே நான் அந்த உபதேசத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயற்சித்தேன். அவ்விஷயத்தில் சிறிதளவும் காலந்தாழ்த்துவது சரியில்லை என நான் எண்ணினேன். "ஆத்மா என்ற நூலில் கட்டப்பட்டுள்ள மணிதான் நான்'' என்ற எண்ணத்தை நான் உடனே வரவழைத்துக் கொண்ட போதிலும், அச்சிந்தனையின் தீவிரத்துவம் எனக்கு மிகவும் குறை-வாகவே இருந்தது. ஒரு காரணம் என்னவென்றால் நான் அப்போது முக்கியமாக, பார்வை மற்றும் உறக்கம் முதலியவை குறித்து என்ன பாவனைகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை ஆசார்யாள் உபதேசித்துக் கொண்டிருந்ததைக் கவனத்தோடு கேட்டுக்கொண்-டிருந்தேன். மேலும், கர்மயோகமும், ஜபமும் எனக்கு முயற்சி ஏதும் தேவைப்படாமல் அச்சமயத்தில் அமைந்துவிட்ட போதும், அந்த மாதிரியான சிந்தனை எனக்குப் புதிதாக இருந்தது. ஆசார்யாள் உபதேசத்தை முடித்தவுடன் நான் எனது அறைக்கு நடந்து செல்லும் போது 'ஆத்மா என்னும் ஆனந்தக் கடலில் நான் ஓர் அலை' என்று சிந்தித்தேன். இந்தச் சிந்தனையின் ஆழம் மிக நன்றாகவே இருந்தது.

ஆசார்யாள் உபதேசித்தவற்றை சிரத்தையோடு அனுஷ்டிக்க நான் முயற்சித்த போது இரு சிரமங்கள் எனக்கு ஏற்பட்டன. இந்தச் சிந்தனை அவ்வப்போது (செயல்களையும் அவற்றின் பலன்களையும்

கடவுளுக்கு அர்ப்பணிப்பதான) எனது கர்மயோகத்துடன் குறுக்கிட்டது. ஆசார்யாள் இரண்டு நாட்கள் கழித்து என்னிடம், "நீங்கள் நன்கு தேர்ச்சி பெற்று விட்டதான கர்மயோகத்திற்கு அப்பாற்பட்ட நிலைக்குச் செல்ல வேண்டிய சமயம் வந்து விட்டது. இப்போது, உங்களுடைய முயற்சிகளையெல்லாம் ஆத்மாவைச் சிந்திப்பதிலேயே ஈடுபடுத்துங்கள்" என்று கூறி எனது சிரமத்தைப் போக்கிவிட்டார்கள்.

இன்னொரு கஷ்டமும் இருந்தது. அது என்னவென்றால் இந்தச் சிந்தனையானது, கோயிலில் அம்பாளின் ஸாந்நித்யத்தை நான் ஆனந்தமாக அனுபவித்து வருதல், நரஸிம்ஹரை மானஸிகமாகப் பூஜித்து வருதல் போன்ற சமயங்களில் சற்றே குறுக்கிட்டுக் கொண்டிருந்தது, ஏனென்றால், இவற்றை நான் உட்கார்ந்தவாறு செய்து கொண்டிருந்தேன். இப்போதோ, உட்கார்ந்திருக்கும் போது 'நான் ஆத்மாவென்னும் நூலில் கட்டப்பட்டிருக்கும் ஒரு மணி' என்று சிந்திக்க வேண்டும் என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ஆசார்யாள் இவ்விஷயத்திலும் விளக்கம் கொடுத்தருளினார்கள் 'ஒரு ஜீவன்முக்தனுடைய ஆத்மஞானமானது எத்தகைய சிந்தனைகள் வந்தாலும், உடலைக்கொண்டு செயல்களைச் செய்யும் போதும், தடைப்படுவதேயில்லை. ஆனால் ஒரு ஸாதகனுடைய ஆத்ம சிந்தனையைப் பற்றிய நிலையே வேறு. ஆகவே, உங்களுடைய மானஸிக பூஜை முதலியவற்றை இப்போதைக்கு முன்பு போலவே செய்து வாருங்கள். அவை தவிர மற்ற சமயங்களில் ஆத்ம சிந்தனையை செய்யுங்கள்' என்பதே அது.

எனக்கு அடிப்படையில் எந்தப் பிரச்சினைகளும் மேற்கொண்டு இல்லாவிட்டாலும், ஆத்ம சிந்தனை எப்போதாவது தடைப்பட்டுக் கொண்டிருந்தது. முக்கியமாக, நான் பேசிக் கொண்டிருக்கும்போதும், நதி மற்றும் அந்தச் சூழலின் இயற்கை எழிலைப் பார்த்து என்னை மறந்த வேளைகளிலும் அவ்வாறு தடைப்பட்டது. ஒரு நாள் மாலை நான் ஆசார்யாளின் ஸன்னிதிக்குச் சென்ற போது ஆச்சார்யாள், 'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?' எனக் கேட்டார்கள். நான், 'அம்பாளின் ஆலயத்திலிருந்து வருகிறேன்' என்றேன். 'வரும் வழியில் என்ன பார்த்தீர்கள்?' என்று கேட்டார்கள். துங்கா நதியைக்

கடக்கும் பொழுது, எனது ஆத்ம சிந்தனையில் ஓர் இடைவெளி ஏற்பட்டிருந்தது. ஆசார்யாளின் கேள்வியின் கருத்தைப் புரிந்து கொண்ட நான், துங்கையில் விளையாடிக் கொண்டிருந்த மீன்களைப் பார்த்ததாகக் கூறினேன். 'அப்போது ஆத்ம சிந்தனத்தைச் சரிவரச் செய்தீர்களா?' என்பதே ஆசார்யாளின் அடுத்த கேள்வி. 'அதற்கு முன்பும், பின்பும் ஆத்ம சிந்தனை செய்தேன். ஆனால் ஒரு சில விநாடிகளுக்கு ஆத்ம சிந்தனம் தடைப்பட்டது' என்று ஒப்புக்-கொண்டேன். அதற்கு ஆசார்யாள், 'இந்த மாதிரி தடை ஏற்படுவதற்கு இடமே கொடுக்காதீர்கள்' என்றார்கள்.

நான் வெட்கித் தலை குனிந்தேன். இதுபோன்ற லாயக்கில்லாத சிஷ்யனாக இருக்க மாட்டேன் என்று உறுதி பூண்டேன். அதன் பிறகு, ஆசார்யாளின் அனுக்ரஹத்தினால், ஆத்ம சிந்தனையின் போது எந்தவிதத் தடையும் ஏற்படவில்லை. சில மாதங்களில் அந்த நான்கு முறையிலான சிந்தனைகளும் முயற்சி ஏதும் தேவைப்படாமல் தாமாகவே இருந்து வந்தன.''

இம்மாதிரியாக, மிக சிரத்தையுடன் பிரம்மசிந்தனத்தினைச் செய்து வந்த ஆசார்யாள் அச்சாதனையில் விரைவாக முன்னேறி, 1935ம் வருடம் டிசம்பர் மாதம் 12ம் தேதியன்று ஜீவன்முக்தி நிலையினை அடைந்தார்.

## ॥ ब्रह्मविद्योपदेशकः ॥

# 60. ப்ரஹ்மவித்யோபதேசக:

(பிரம்ம வித்யையை உபதேசிப்பவர்)

ஜகத்திற்கே ஸத்குருவாக விளங்கி வந்த ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள், ''தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' எனும் உயர்ந்த நோக்கில், தமது உபன்யாஸங்கள் மூலமாகவும் மற்றும் நேரடியாகத் தம்மை தரிசித்து உபதேசம் வேண்டிடுவோருக்கும் பயன்படும் வகையில், பக்த ஜனங்களின்

அறியாமையிருளினை அகற்றவல்லதும், அவர்களது முக்திக்கு வழிகோலுவதுமான பிரம்மஞான விஷயங்களை மிக ஆர்வத்துடன் போதித்து வந்தார். ஸ்ரீ சாரதா பீட ஸத்குருவாகத் தாம் வீற்றிருந்த 35 வருட காலங்களில் ஆசார்யாள் செய்துவந்த பிரம்மஞான உப-தேசங்களிலிருந்து ஒரு சிலவற்றினைக் கீழே காணலாம்.

“...(எவ்வளவோ சக்திகள் வாய்க்கப்பெற்றிருந்த) அகத்தியர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர் போன்ற மஹான்களே காலத்தின் வசத்திற்குப் பலியாகிவிட்டனர். ஆனால் நம் போன்றவர்களோ எப்போதும் வாழ வேண்டும், நீண்ட காலம் வாழ வேண்டும் என விரும்புகின்றோம். இது எப்படி சாத்தியமாகும்? உடலை நீண்ட காலம் வைத்துக்கொள்ள வேண்டும் எனும் ஆசை எதனால் இருக்கின்றது? சரீரத்தில் ‘நான்’ என்ற தவறான அறிவு இருப்பதினால்தான் உருவாகின்றது. ஆனால், “நாம் உண்மையில் ஆத்மாவே” என்று தெரிந்துகொண்டால், இந்த ஆசை விட்டுப்-போய்விடும். நாம் அந்த ஞானத்தைப் பெறுதலும் நம் ஆசைகளின் முடிவும் ஒரே சமயத்தில் ஏற்படுகின்றது. எதுவரையில் நாம் ஆசைகளை வைத்துக் கொண்டு உலக விஷயங்களையே தேடிக்கொண்டுப் போய்க்கொண்டிருப்போமோ அது வரையில் நமக்கு இன்பம் கிடைக்கப்போவதில்லை.”

********

“உண்மையில் ‘அறிவு’ (consciousness) என்பது எது இருக்கிறதோ, அதுதான் ‘நான்’. அதே அறிவு வெளிப்பொருட்களுடன் தொடர்பைப் பெற்றுக் கொண்டால் பலவிதமான பெயர்களைப் பெறுகிறது. வெளி விஷயங்களின் தொடர்பு எதுவும் இல்லாமல் தூய்மையாக அந்த அறிவு மட்டும் இருந்தால் அதற்கு எந்தப் பெயரும் எந்த வடிவமும் கிடையாது... அதைத்தான் பரம்பொருளின் வடிவம், சச்சிதானந்த ஸ்வரூபம் என்று கூறுவோம்.”

********

நம்முடைய உண்மையான ஸ்வரூபம் (பிறப்பு – வாழ்வு – இறப்பு வடிவாகிய) ஸம்ஸாரத்திற்கு அப்பாற்பட்டது. அதுவேதான் பிரமை-யினால் இந்தப் பிறவித் துன்பத்தில் மாட்டிக்கொண்டு உழன்று

கொண்டிருக்கிறது. உலகத்தில் ஜனங்கள் (குழந்தை, செல்வம், பதவி போன்ற) பலவிதமான பொருட்களை விரும்புகின்றனர். அவற்றை அடைவதற்காகக் கடவுளைப் பிரார்த்தனை செய்கின்றனர். ஆனால் இவையெல்லாம் அநித்யமானவை; சிறிது காலம் சென்றபின் அழிந்து-விடுபவை. ஆனால் (உண்மையில் ஆத்ம ஸ்வரூபமாகிய) நாமோ எப்பொழுதும் இருந்துகொண்டேயிருப்போம். நாம் என்றைக்கும் இறக்கப் போவதில்லை. ஆனால் நாம் பிறப்பதைப் போலவும் இறப்பதைப் போலவும் ஒரு தோற்றம் நடைமுறையில் இருக்கிறது. அவ்வளவுதான்.

********

"'என்னுடைய ஸ்வரூபத்தினைப் பற்றி ஆராய முனைந்தேனா' என்ற விசாரத்தினை நாம் செய்ய வேண்டும். ஆத்மா என்பதுதான் நிலையான வஸ்து. இது சாஸ்திரங்களில் சிறந்த யுக்திகளினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரபஞ்சம் நிலையற்ற ஒன்று. பிரபஞ்சத்தில் நாம் தற்போது பார்க்கும் ஓர் உருவம் இன்னும் சிறிது நேரத்தில் மறைந்து விடலாம். மேகம் எப்படித் தன் உருவத்தை மாற்றிக் கொண்டிருக்குமோ அதே போல் பிரபஞ்சமும் மாற்றிக்-கொண்டிருக்கும். என்றாவது ஒரு நாள் பிரபஞ்சம் முழுவதும் இல்லாமற் போய்விடலாம். ஒரு ஞானியின் பார்வையில் பிரபஞ்சம் இல்லையென்பதுதான் தீர்மானம். (ஆகவே, நாம்) உலகத்தில் இது வேண்டும், அது வேண்டாம் எனும்படியான விருப்பு வெறுப்புக்களை விட்டுவிட்டு, (நமது ஸ்வரூபமேயான ஆத்மாவெனும்) நிலையான வஸ்துவை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும்."

## ॥ भक्तहार्दतमोभेत्ता ॥

# 61. பக்தஹார்த-தமோபேத்தா

(பக்தர்களின் இதயத்தில் குடிகொண்டிருக்கும் தமோ குணத்தினை அழிப்பவர்)

பொதுவாக, 'இதயத்தில் உள்ள தமஸ்' என்பதற்கு இரு வேறு அர்த்தங்கள் பொருந்தி வருவதுண்டு. ஒன்று, முக்குணங்களில் ஒன்றான தமோ குணம் என்பது. மற்றொன்று அஞ்ஞானம் (அறியாமை) என்பது. 107வது திருநாமமான "அஞ்ஞானத்வாந்த மார்தண்ட:" (அஞ்ஞானம் எனும் இருளை அகற்றும் ஞான சூரியனைப் போன்றவர்) என்பதில் 'தமது குருநாதர் அஞ்ஞானத்தினைப் போக்குபவர்' என்று நேரடியாகவே குறிப்பிடப்பட்டிருப்பதினால், இந்த 61வது திருநாமத்தில் தம் குருநாதர் முக்குணங்களில் ஒன்றான தமோ குணத்தினை அழிப்பவர் என்பதை உணர்த்துவதாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.

பகவத்கீதையின் குணத்ரய விபாக யோகம் எனும் 14வது அத்தியாயத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் முக்குணங்களைப் பற்றி மிக விரிவாக மற்றும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். அவற்றுள் தமோ குணத்தினைப் பற்றி அவர் குறிப்பிடுவதன் சுருக்கமாவது: "தமோ குணமானது அஞ்ஞானத்தால் தோன்றுவது. ஞானத்தை மறைத்து அவிவேகம், முயற்சியின்மை, மோஹம் மற்றும் மதிமயக்கத்தை உண்டுபண்ணுவது. மயக்கம், சோம்பல், நித்திரை இவற்றால் கட்டுவது. மனத்தில் தமோகுணம் மேலோங்கி நிற்கையில் ஒருவனது மரணம் ஸம்பவித்தால், அவன் பகுத்தறிவில்லாத ஜன்மங்களை அடைகிறான்." மீண்டும் 17வது அத்தியாயத்தில், தமோ குணத்தினை பெருக்கும் உணவுகளாக யாமம் கழிந்த, சுவையற்ற, துர்நாற்றமெடுத்த, பழைய, எச்சிலான, தூய்மையற்ற உணவு தமோகுணத்தாருக்குப் பிரியமானது என்றும் பகவான் கூறுகின்றார். ஆகவே, ஞானம் அடைய வேண்டுமெனும் தீவிரம் உள்ளோர் தமோ குணத்தினை ஒழித்து, ஸத்வ குணத்தினைப் பெருக்கிட வேண்டும் என்பது தெளிவாகின்றது.

ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் தம்மிடம் சரணடைந்த ஜனங்களின் ஞான மேன்மையினை உத்தேசித்து அவர்களது தமோ குணத்தினை அகற்றுவதற்கான வழிமுறைகளை அருளி வந்தார். எடுத்துக்காட்டாக, தமோ குணத்தினை வளர்க்கும் உணவுகளைத் தவிர்க்க வேண்டியது பற்றி அவர் உபதேசித்ததாவது:

"யாதயாமம் கதரஸம் பூதி பர்யுஷிதம் ச யத் |
உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜனம் தாமஸப்ரியம் ||

{யாமம் கழிந்த, சுவையற்ற, துர்நாற்றமெடுத்த, பழைய, எச்சிலான, தூய்மையற்ற உணவு தமோ குணத்தாருக்குப் பிரியமானது என்று கூறப்பட்டிருக்கிறது}

இந்த காலத்தில் அநேகம் பேருக்கு பழைய சாதம் சாப்பிடும் பழக்கமுண்டு. பழைய சாதம் சாப்பிடுவது தவறு என்று சாஸ்திரம் கூறுகிறது. சாப்பிட்டால் பலம் வரும் என்று சொல்வர். ஆனால் எவ்வகையான பலம் வரும் என்றால் தாமஸமான பலம் வரும். பழையதைச் சாப்பிட்டுவிட்டு படிக்க உட்கார்ந்தால் நன்கு தூக்கம் வரும். நாம் எந்த உத்தேசத்தில் உட்கார்ந்தோமோ அது நடக்காது. தயாரித்துப் பல நாட்கள் ஆன, போதை தரும் பொருட்களைச் சாப்பிட்டுப் பழகி விட்டால் தூக்கம் மட்டுமில்லை, எதிரில் இருப்பதெல்லாம் சுவர்க்கமாகவோ, நரகமாகவோகூடத் தோன்றலாம். உடுத்திக்கொள்ள துணி வேண்டுமா, வேண்டாமா என்ற அறிவுகூடப் போய்விடும். அதனால் தான் பகவான், 'யாதயாமம் கதரஸம்' என்று சொல்லிவிட்டார்.

மனது மிகவும் தமோ குணத்தோடு இருந்துவிட்டால் அவனது ஸஹவாசமும் சுபாவமும் அதே போல் ஆகிவிடும். ஆனால் அவன் சந்தோஷமாக இருக்கிறானே என்றால் அந்த சந்தோஷத்தினால் என்ன அடைய முடியும்? பல அனர்த்தங்களைத்தான் அவன் அடைவான். அவனிடம் உள்ள செல்வம் முழுவதும் நாசமாகிவிடும். தெருவில் போகும் போது எங்காவது சாக்கடையில் விழுந்து விடுவான். மேலும், தெருவில் இவன் விழுந்து கிடந்தான் என்ற அவப் பெயரும் அவனுக்குக் கிடைக்கும். "க்ருத்தோஹன்யாத் குரூணபி" என்று கூறப்பட்டது போல் அப்பேற்பட்டவன், கோபம்

வந்தால் குருவையே அடித்துவிடுவானாம். புத்தி சரியில்லாதி-ருப்பவன் மனைவியை அடிப்பது ஸஹஜம்; குருவை அடிப்பதும் ஸஹஜம்; தன்னையும் அடித்துக்கொண்டு விடுவான். அப்புறம்தான் அவனுக்கே தன்னை அறிவில்லாமல் அடித்துக்கொண்டது புரியும். இது போன்ற புத்தியை உண்டாக்குவது தாமஸமான வஸ்துக்கள் என்று பகவான் கூறுகிறான். ஸாத்விகமான ஆஹாரத்தையே நாம் உட்கொள்ள வேண்டும். இராஜஸமான ஆஹாரம், ஏதோ ஒரு வேளை உலக விவகாரங்களில் ஈடுபட வேண்டியிருப்பதால், எடுத்துக்கொள்வதில் பாதகமில்லை. ஆனால் தாமஸமான ஆஹாரம் என்றைக்கானாலும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

பரமாத்மாவின் சாக்ஷாத்காரம் பெற்றுக்கொண்டு இந்தப் பிறப்பு இறப்புச் சக்கரத்திலிருந்து விடுபட வேண்டுமா என்று சிந்தித்துப் பார்த்தால், இந்தப் பிறப்பு-இறப்புச் சக்கரம் வேண்டாம் என்றுதான் அனைவரும் எண்ணுவர். மனதைப் பவித்ரமாக (ஸாத்விகமாக) வைத்துக்கொண்டு விசாரம் செய்தால்தான் அந்த விசாரம் பலனைத் தரும். மனது அபவித்ரமாக இருந்தால் ஒருவன் செய்யும் கர்மாக்களிலிருந்து சரியாகப் பலன் வராது. விசாரமும் சரியாக வராது. ஆகையால் நாமெல்லோரும் ஸத்ஸங்கத்திலிருந்து (அதாவது நல்லவர்களுடன் சேர்ந்திருந்து), ஸதாஹாரம் (அதாவது பவித்திரமான ஆஹாரத்தையே) சாப்பிட்டு வந்தால் நம் புத்தியும் மனதும் மிகவும் சுத்தமாக இருக்கும்.''

மற்றொரு தருணத்தில், தியானம் செய்யும் போது ஒருவன் ஸமாதியை அடையவிடாது தடுக்கும் தடையாக மனதானது தூக்கம் போல் ஒரு வித ஜடத் தன்மையை அடைந்து விடுகின்றதே, இதை எப்படித் தடுப்பது எனும் ஒரு கேள்விக்கு ஆசார்யாள் பதிலளித்தார்: ``கவனித்துப் பார்த்தால், மனம் தற்போது ஜடமாகிக் கொண்டி-ருக்கிறது, தூக்கத்தின் பக்கம் செல்கிறது என்று ஒருவன் தெரிந்து கொள்ளலாம். அப்படித் தெரியும் வேளையில், முயற்சி செய்து, மனம் தூக்கம் போல் இருப்பதைத் தவிர்க்கலாம். இதற்காக செய்கின்ற ஜபத்தை, இன்னும் தீவிரமாகச் செய்து கொண்டு வரலாம். அவ்வாறு செய்தால் மனம் மீண்டும் சாதாரண நிலைக்குத் திரும்பி விடும். என்ன செய்தாலும் மனம் ஜடத் தன்மையான

லயத்திலேயே சென்று கொண்டிருந்தால், சற்று நேரம் எழுந்து நடந்து விட்டு மீண்டும் தியானத்திற்கு அமரலாம். சில சமயங்களில் மனதிற்குச் சற்று நேரம் ஓய்வு தேவைப்படும். இது போன்ற சமயங்களில் வலுக்கட்டாயமாக மனதை தியானத்திற்கு ஈடுபடுத்தக் கூடாது. சற்று நேரத்திற்குப் பிறகே தியானத்திற்கு அமர வேண்டும். இல்லாவிடில், மனதிற்குக் கஷ்டமேற்படும். இதற்காக சோம்பேறித்தனம் காரணமாக மனம் முக்கால்வாசி நேரங்களிலும் தியானத்தில் ஈடுபடுவதில்லை என்றால், அப்போது அதை அவசியம் ஈடுபடச் செய்து பழகிக்கொள்ள வேண்டும்.

## ॥ भिक्षुकोत्तमरूपधृत् ॥

# 62. பிக்ஷுகோத்தம-ரூபத்ருத்

(துறவியருள் உத்தமமான ரூபத்தைத் தரித்தவர்)

குடீசக, பஹூதக, ஹம்ஸ, பரமஹம்ஸ எனத் துறவியர் நான்கு வகைப்படுவர். இந்நான்கில், உத்தமமானது எனப் ‘பரமஹம்ஸ ஸன்யாஸம்’ கூறப்படுகின்றது. உலக விஷயங்கள் அனைத்தையும் துச்சமென நிச்சயித்து, அதி தீவிர வைராக்கியம் நிரம்பப் பெற்றவராய், 13 வயதிலேயே முழு ஈடுபாட்டுடன் துறவறத்தை தழுவியவராகிய ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் பரமஹம்ஸ ஸன்யாஸியாவார். அவர் கரத்திலேந்திய தண்டம் மற்றும் அவரது உடலைத் தழுவிடும் காவியுடை ஆகியவற்றின் சிறப்புக்களை முன்னரே திருநாமங்கள் 25 மற்றும் 26க்கான விளக்கங்களில் கண்டோம்.

துறவியருக்கே இலக்கணமாக விளங்கிய நமது ஆசார்ய பெருமான் ஏனைய துறவியரால் பெரிதும் போற்றப்பட்டவராக விளங்கி வந்தார். துவாரகா பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ அபிநவ ஸச்சிதானந்த தீர்த்த ஸ்வாமிகளும், பத்ரி பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ ஸ்வரூபானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளும் மற்றும் புரி கோவர்த்தன பீடத்து

ஆசார்யராக இருந்த ஸ்ரீ நிரஞ்சனதேவ் தீர்த்தரும் ஆசார்யாள் விஷயத்தில் மிகுந்த மரியாதை வைத்திருந்தனர். ஆசார்யாளது ஆலோசனையின் பேரில் அவர்கள் மூவரும் 1979ம் வருடம் ஏப்ரல் மாத இறுதியில் சிருங்கேரிக்கு வருகை புரிந்தனர். 01-05-1979 (சங்கர ஜெயந்தி நாள்) அன்று வரலாற்றுச் சிறப்புமிக்க சதுராம்னாய ஸம்மேளனம் (நான்கு ஆம்னாய பீடாதிபதிகளும் ஒன்றுகூடிடும் வைபவம்) சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் நடைபெற்றது. 1982ம் வருடம் ஸ்ரீ அபிநவ ஸச்சிதானந்த தீர்த்த ஸ்வாமிகள் மஹா ஸமாதி-யடைந்தார். அவரது உயிலின்படி, ஸ்ரீ ஸ்வரூபானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளே துவாரகா பீடாதிபதியாகவும் பட்டமேற்றுக்கொள்ள-வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், தமது பட்டாபிஷேகத்தைத் தம்குருவின் ஸ்தானத்திலிருந்து ஆசார்யாள்தான் நடத்தித் தந்திட வேண்டுமென அவர் ஆசார்யாளிடம் வேண்டிட, ஆசார்யாளும் துவாரகாவிற்கு விஜயம் செய்து, 27-05-1982 அன்று அவரது பட்டாபிஷேகத்தை நிகழ்த்தி வைத்தருளினார். மேலும், பரமஹம்ஸி கங்காஸ்ரமம் எனும் இடத்தில் தம்மால் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டிருந்த ஸ்ரீ இராஜராஜேஸ்வரி ஆலயக் கும்பாபிஷேகத்தினையும் ஆசார்யாளே செய்துவைத்திட வேண்டு-மென ஸ்ரீ ஸ்வரூபானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் வேண்டிக் கொள்ள, அதையும் ஏற்றுக்கொண்ட ஆசார்யாள் அங்கும் விஜயம் செய்து ஆலய கும்பாபிஷேகத்தைத் தமது மலர்க்கரங்களால் செய்து-வைத்தார். 1965ம் வருடம் மதுரையிலும், பிறகு காலடியிலும் ஆசார்யாளைச் சந்தித்த புரி கோவர்த்தன பீட அதிபதி ஸ்ரீ நிரஞ்சனதேவ் தீர்த்தர், 1977 ஜனவரி மாதத்தில் ஆசார்யாளால் நிகழ்த்தப்பெற்ற காசி ஸ்ரீ அன்னபூரணேசுவரி ஆலய விக்ரஹ பிரதிஷ்டை மற்றும், ஆலய கும்பாபிஷேகம் ஆகியவற்றின் போதும் கலந்து கொண்டார்.

ஹரிஹரபுரா, சிவகங்கா, நிலமாவு போன்ற இடங்களில் இருந்த மடங்களின் அதிபதிகளும், ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் பரிபூரண ஆசிகளைப் பெற்றுப் பிறகு துறவினைத் தழுவிய பாஷ்ய ஸ்வாமிகள், ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் ஆகியோரும் தங்களது வழிகாட்டியாக ஆசார்யாளையே

ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆசார்யாள் விஜய யாத்திரை செய்த இடங்களில் ஸன்யாஸிகள் பெருமளவில் கூடி அவருக்குத் தங்களது வந்தனங்களைச் செலுத்தி வந்தனர். தவிரவும், சாதுர்மாஸ்ய காலங்களில் ஆசார்யாளிடம் வேதாந்த பாஷ்ய பாடங்களைப் படிப்பதற்கெனவே அநேக துறவியர்கள் ஆசார்யாள் இருக்குமிடத்திற்கு வந்து தங்கியிருப்பதும் வழக்கமான ஒன்றாகவே இருந்துவந்தது.

## ॥ भेदवादीभपञ्चास्यः ॥

## 63. பேதவாதீப-பஞ்சாஸ்ய:

(த்வைதிகளான யானைகளுக்கு ஸிம்மமாக விளங்குபவர்)

“பரமாத்மா ஜீவாத்மா என்ற பேதம் (பிரிவு) உண்டு” எனும் கொள்கையே ‘த்வைதம்’ (இருமை) எனப்படுகின்றது. இதனைப் பின்பற்றுபவர்கட்கு ‘த்வைதிகள்’ அல்லது ‘பேத வாதிகள்’ என்று பெயர்.

“இருப்பது ஒன்றே; அதுவே, அவித்யை (அறியாமை) காரணமாக பரமாத்மாஜீவாத்மா எனும் பேதத்துடன் இருப்பது போலத் தோற்றமளிக்கின்றது” எனும் கொள்கையே ‘அத்வைதம்’ (இரண்டற்றது) எனப்படுகின்றது. இதனைப் பின்பற்றுபவர்கள் ‘அத்வைதிகள்’ அல்லது ‘அபேத வாதிகள்’ எனப்படுகின்றனர்.

அவரவர் கொள்கையே ஆதாரபூர்வமானது எனும் வாதங்கள் இந்த இரு பிரிவினருக்குமிடையே காலம் காலமாக ஏற்பட்டுக்கொண்டுதான் வருகின்றன! ஸ்ரீ சங்கர பகவத்பாதர் காலத்திற்கு முன்னும் சரி, அவரது காலத்திலும் சரி, அவருக்குப் பின் வந்த அவரது குரு பரம்பரையில் இன்று வரை வந்திருக்கின்ற ஆசார்ய புருஷர்களது காலத்திலும் சரி, அத்வைதமே ஆதாரபூர்வமானது என்பதும் நிலை நிறுத்தப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது! இந்த வகையில், சங்கர பகவத்பாதரால் தோற்றுவிக்கப்பட்ட சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீட ஸத்குரு பரம்பரையில் 35வது ஆசார்ய சீலராக விளங்கிய எங்களது

குருநாதராகிய ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளும், பேத வாதிகளான யானைகளை தமது அபேத வாதத்தால் அடக்கிய சிங்கமாக விளங்கி வந்தார் எனப் பெருமையுடன் போற்றுகின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.

முறைப்படி அத்வைத வேதாந்த சாஸ்திரத்தைப் பயிலும் முன்னரே அத்வைத ஞானத்தினை தமது அனுபவமாகவே அடையப் பெற்றவர் ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். எதையறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகுமோ அதையே அறிந்த பின்னரும், ஸம்பிரதாயத்தை மீறாது முறைப்படி தர்க்கம், வேதாந்தம் முதலிய சாஸ்திர பாடங்களைக் கற்றுக் கொண்டவர் அவர். த்வைதத்தை அடிப்படையாகக் கொண்ட அனைத்து மதங்களின் கொள்கைகளையும் ஆசார்யாள் நன்கு அறிந்திருந்தார். அவை ஒவ்வொன்றிலும் காணப்பட்ட பலவீனங்களை, (வேத, சாஸ்-திரங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்களின் அடிப்படையில்) ஆதார பூர்வமாகச் சுட்டிக்காட்டி பேதவாதிகளின் வாதங்களைப் பொடிப்-பொடியாக்கி வந்தார் ஆசார்யாள். பேதவாதங்களுக்கு எதிர்-வாதங்களாக ஆசார்யாள் முன்வைத்த கருத்துக்களை நாம் முன்னரே, ‘‘அநேக தர்சன மர்மவித்’’ எனும் (6வது) திருநாமத்-திற்கான விளக்கத்தில் கண்டவற்றை இங்கு நினைவு கூறலாம்.

ஆயினும், இயல்பில் எவரிடத்திலும் வெறுப்பினைப் பாராட்டாது ஆழ்ந்ததொரு நட்புரிமையையே காண்பித்துப் பழகி வந்த ஆசார்-யாளிடத்தில் பேதவாதிகளுமே பெரு மதிப்பு வைத்து வாழ்ந்து-வந்தனர்! நாடெங்கிலும் பரவலாக இருந்து வந்த பற்பல சைவ, வைணவ, ஜைன, சாக்த, சாங்க்ய, தர்க்க பிரிவுகளைச் சார்ந்த ஸ்தாபனங்களின் தலைவர்களும், பண்டிதர்களும் ஆசார்யாளைத் தரிசிப்பதையும், அவரது கருத்துக்களுக்கு பெருமதிப்பளித்து வரவேற்பதையும் முழு மனதுடன் செய்து வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐஐ❀ஐஐ

## ॥ भुक्तिमुक्तिप्रदायकः ॥

# 64. புக்தி-முக்தி-ப்ரதாயக:

(புக்தி மற்றும் முக்தி ஆகியவற்றை அருளுபவர்)

'புக்தி' என்பது இவ்வுலக வாழ்க்கையில் நமக்கு கிட்டுகின்ற இன்பங்களைக் குறிக்கின்றது. 'முக்தி' என்பது, இந்த உடலில் நமக்கு விதிக்கப்பட்டிருக்கும் வாழ்க்கை முடிந்த பிறகு, (பிறப்பு-வாழ்வு-இறப்பு எனும் ஸம்ஸாரச் சக்கரத்தினின்று விடுபட்டு) பிரம்மத்தில் ஒன்றிவிடுவதைக் குறிக்கின்றது. ஒரு ஸத்குருவின் பரிபூரண அருள் கிட்டும் போது, ஒருவருக்கு புக்தி முக்தி இரண்டுமே ஸித்திக்கின்றன என்பது வேத வாக்கு. எங்களது குருநாதர் இப்படிப்பட்ட மஹிமை வாய்ந்த ஸத்குருவாகத் திகழ்ந்தார் எனப் போற்றுகின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.

இவ்வுலக வாழ்வில் இன்பத்தை அடைவதற்கான வழிகளாகப் பலவற்றினை தர்ம சாஸ்திரங்கள் வாயிலாக வேதங்கள் உரைக்கின்றன. தம்மை நாடி வரும் பக்த ஜனங்களுக்கு உலக இன்பங்களில் இச்சை இருக்குமானால், தர்ம சாஸ்திர விதிகளுக்குட்பட்ட வழிகளில் அவை அவர்களுக்குக் கிட்டிட ஆசார்யாள் அருள்புரிந்துவந்தார். "கல்வியறிவு நன்றாக வர வேண்டும்"; பிள்ளைகளுக்கு நல்ல இடங்களில் திருமணம் ஆக வேண்டும்"; "குழந்தை பேறு வேண்டும்"; "வியாதிகள் நீங்கப்பெற்று ஆரோக்கியம் ஏற்பட வேண்டும்"; "வேலை கிடைக்க வேண்டும்" என்றபடியெல்லாம் வேண்டிக் கொண்டு, நாள் தோறும் ஏராளமான கோரிக்கைகள் ஆசார்யாளிடம் வைக்கப்பட்டு வந்தன. அனைத்திற்கும் தமது ஆசீர்வாதங்களை முழுமனதுடன் வழங்கி வந்தார் அவர். தெய்வீக புருஷரான அவரது ஆசீர்வாதத்திற்குப் பலனை அனைவரும் கண்கூடாகக் கண்டுவந்தனர். முன்னரே கண்ட பற்பலத் திருநாம விளக்கங்களில், உலக வாழ்வில் ஈடுபாட்டுடன் இருக்கும் பக்த ஜனங்களின் அபிலாஷைகளை எங்ஙனம் ஆசார்யாள் பூர்த்தி செய்தருளியிருக்கின்றார் என்பதற்கு எடுத்துக்காட்டாக நாம் இதற்கு

முன்னர் உள்ள திருநாமங்கள் பலவற்றில் கண்ட சம்பவங்களை இங்கு நினைவுகூரலாம்.

ஆசார்யாளின் அருளாசி மஹிமையானது அவர்களை அவரிடத்தில் மீண்டும் ஈர்த்தது. ஒவ்வொரு முறையும் அவரை நாடி அவர்கள் வருகையில், அவரது தரிசனத்தின் பலனாகவும், அவர்தம் அமுதமயமான உபதேச வார்த்தைகளைக் கேட்டிடும் பலனாகவும் அனைவருள்ளும் "மனித வாழ்வின் குறிக்கோள் முக்தியடைவதே" எனும் எண்ணம் உண்டாகி, "இதற்கு உபாயமாக நமது ஸத்குருநாதர் என்ன வழிகளைக் கூறியருளியிருக்கின்றார்" எனத் தெரிந்துகொள்ள அவர்கள் முனைவதுடன், அம்மார்க்கத்தில் ஈடுபடத் துவங்குவதும் வெகுவாக நடந்துவந்த விஷயங்களே! ஆக, ஒவ்வொருவருக்கும் புக்தியை அருளிடும்போதே அவரவரது முக்தி மார்க்கத்திற்கும் மறை-முகமாக வித்திட்டு வந்தார் ஆசார்யாள்.

மேலும், இயல்பாகவோ, அல்லது விவேகம் முதலிய சாதனைகளின் விளைவாகவோ, புக்தியில் ஈடுபாடற்று, மனதில் வைராக்கியம் அதிகமாகி அவரை அணுகியோரை, முக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி, அவர்கள் மூலமாக உலகத்தோருக்கும் நன்மைகள் ஏற்படச் செய்து வந்தார் ஆசார்யாள். உதாரணமாக, ஆசார்யாளிடமிருந்து சாஸ்திர பாடங்களைக் கற்றுக்கொள்ளும் பாக்கியம் கிட்டுமா எனும் பெருவிருப்பத்துடன் 1966ம் ஆண்டில், உஜ்ஜயினியில் ஆசார்யாளின் திருவடியில் சரணடைந்த ஸ்ரீ சீதாராமாஞ்சனேயலுவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தருளியது மட்டுமின்றி, அவருக்கு இருந்த அதி தீவிர வைராக்கியத்தைக் கண்ணுற்ற ஆசார்யாள், அவருக்கு ஸன்யாஸ ஆசிரமத்தினையும் வழங்கி, ஸ்ரீ பாரதீதீர்த்தர் எனும் திருநாமத்தினையும் சூட்டி, அவரை ஸ்ரீ சாரதா பீடத்தின் 36வது பீடாதிபதியாகவே நியமித்து, ஆஸ்திக ஜனங்களுக்குப் பெரும் உபகாரம் செய்தருளினார்.

ஆசார்யாளின் அருள் எப்படி ஒருவரது முக்திக்கு காரணமாகின்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, அமரர் ஸ்ரீ வெங்கடசுப்பா ராவ் அவர்களது அனுபவத்தினைக் கூறலாம். ஸ்ரீ வெங்கடசுப்பா ராவ் அவர்கள் சிருங்கேரி மடத்துடன் பாரம்பர்யத் தொடர்பையுடைய ஒரு

குடும்பத்தில் பிறந்தவர். மைசூர் அமல்கமேடெட் எனும் நிறுவனத்தில் பணியாற்றி, பின்பு சிருங்கேரியிலுள்ள ஸ்ரீ சாரதா தன்வந்திரி மருத்துவ மனையின் நிர்வாகத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். இவரைப் பற்றி ஆசார்யாளே பல முறை, “வெங்கடசுப்பா ராவ் எப்போதும் ஆத்மாவிலேயே நிலைத்திருப்பவர்” எனக் குறிப்பிட்டுள்ளார். ஆசார்யாளிடம் மிகுந்த பக்தி கொண்ட ஸ்ரீ வெங்கடசுப்பா ராவ் அவர்கள், ஆசார்யாளின் அருள் தம்மை ஞான மார்க்கத்தில் எவ்வாறு ஈடுபடுத்தியது என்பதை ஒரு சமயம் விவரித்தார்: “ஒரு சமயம், என்னுடைய மாமனாரின் இளைய சகோதரர் தம்முடைய பூஜைக்கென லிங்கம் ஒன்று வேண்டுமென என்னிடம் தெரிவித்திருந்தார். பிறகு, சிருங்கேரிக்குச் சென்ற நான், ஆசார்யாளிடம் அதைத் தெரிவித்தேன். ஆசார்யாளோ ஸ்படிகலிங்கம் ஒன்றை என்னிடம் கொடுத்து, ‘இதற்கு நீ பூஜை செய்து வா. உனக்கு ஞானம் கிடைக்கும்’ என ஆசீர்வதித்தார். (நான் எனக்கென கேட்டிராத போதும்) லிங்கத்தை என்னுடைய பூஜைக்கென ஆசார்யாள் அளித்ததன் காரணத்தை நான் அறிய முடியவில்லை. ஆயினும், அந்த லிங்கத்திற்கு தினமும் பூஜை செய்து வரத் துவங்கினேன். சிருங்கேரி மடத்து விருந்தினர் விடுதியை நிர்வகித்து வந்து கொண்டிருந்த என்னுடைய உறவினர் ஒருவர் ஒரு நாள் என்னிடம் சிருங்கேரிக்கு வருகை புரிந்திருந்த ஒரு விசித்திரமான நபர் ஒருவரைப் பற்றிக் கூறினார். நானும் அந்நபரைச் சென்று பார்த்தேன். இதுதான் என்னை அவதூதரான பரப்ரஹ்மாவுடன் இணைத்த முதல் சந்தர்ப்பம். அந்த அவதூதர் தம்முடைய உடலைப் பற்றிய சிந்தனையே இல்லாது அமர்ந்திருந்தார். நீளமான நகங்களும், தாடியுமாக அவரது தோற்றம் அசாதாரணமாகக் காணப்பட்டது. என்னைப் பார்த்ததும் அவர் என்னிடம், ‘நீ போய் பிரசாதம் கொண்டு வா’ எனப் பணித்தார். நான் சென்று சில இட்லிகளை எடுத்து வந்து அவரிடம் கொடுத்துவிட்டு, அவரைப் பார்த்து, ‘நமஸ்தே’ என்றேன். உடனே அவர் என்னைப் பார்த்து, ‘ஆனந்தமானவனே’ எனக் கூறினார். பிறகு நான் அவரிடம் “ஞானமடைவது எப்படி?” என்று கேட்டேன். அவர், ‘உனக்கு கிடைக்கும்’ எனப் பதிலளித்தார். நான் விடவில்லை. மறுபடியும் கேட்டேன், ‘எப்படிக் கிடைக்கும்?’ ‘உன் மனதே அது பற்றி உனக்குச் சொல்லும்’ என்பதே அவரது பதிலாக

இருந்தது! அன்றைய அளவளாவல் அத்துடன் முடிந்தது. நான் கிளம்பி விட்டேன். பிற்பாடு, ஆசார்யாளைத் தரிசித்த நான் அவதூத ப்ரஹ்மாவுடன் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றிக் கூறினேன். சிறிது நேரம் அமைதியாக, என்னையே உற்று நோக்கியபடி இருந்த ஆசார்யாள் பிறகு ஓர் உறுதியான தொனியில் என்னிடம் கூறினார்: 'அவர் வேதாந்தஞான அனுபவத்தையடைந்த ஒரு ராஜ யோகி.' அதைக் கேட்டதும் என்னுடைய ஞான சம்பாத்யத்திற்கான வழி பிறந்துவிட்டதாகவே எனக்குத் தோன்றியது. எனக்கு லிங்கத்தைக் கொடுத்து அதற்கு பூஜை செய்துவந்தால் ஞானம் கிடைக்கும் என்று ஆசார்யாள் முன்பு சொன்னார் அல்லவா? அதன் பலனானது இப்போது செயல்படத் துவங்கிவிட்டது.

சில நாட்களில் ஆசார்யாள் தமது தென்னிந்திய விஜய யாத்திரையைத் துவங்கினார். பரப்ரஹ்மா சிருங்கேரியிலேயே தங்கியிருந்தார். மீண்டும் நான் அவரைச் சந்தித்தேன். அவருக்கு என்னுடைய வந்தனங்களை சமர்ப்பித்துக் கொண்ட பின், அவரிடம் கேட்டேன், 'ஆத்மானுஸந்தனம் என்றால் என்ன?' 'ஓம் என்பதே ஆத்மாவின் அனுஸந்தனம்' எனப் பதிலளித்த அவர், மேலும் என்னிடம், 'ஓம் என்பதை உச்சரித்து வரத் துவங்கு. நீ ஓம் என்று உச்சரிக்கையில் உன் தலையிலிருந்து கால் வரையிலும் உள்ள அனைத்து நரம்புகளும் அப்படியே அதிர்ந்திட வேண்டும்' எனவும் கூறினார். அன்றைய உரையாடல் அத்துடன் முடிந்தது. நான் அவரை வந்தனம் செய்துவிட்டுக் கிளம்பினேன். பிற்பாடு, அவர் எனக்கு மஹாவாக்கியங்களை உபதேசித்து என்னை ஆத்மாவில் நிலைபெறச் செய்தார். பிறகு, நான் ஆசார்யாளை குற்றாலத்தில் தரிசித்த சமயம், பரப்ரஹ்மாவுடன் கிடைத்த அனுபவங்களைப் பற்றிய விவரங்களை அவரிடம் சமர்ப்பித்தேன். அவற்றைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த ஜகத்குரு, 'பரப்ரஹ்மா ஒரு பிரம்ம ஞானி' என்பதையும் குறிப்பிட்டார்."

## ॥ भयशोकादिरहितः ॥

# 65. பய-சோகாதி-ரஹித:

(பயம், கவலை ஆகியன இல்லாதவர்)

ஜீவன்முக்தரான ஆசார்யாள் ஒரு சிறிதும் பயமோ, கவலையோ அற்றவராக எப்போதும் ஆனந்த ரூபராகவே இருந்துவந்தார். இவற்றிற்கு எடுத்துக்காட்டுக்களாக, பின்வரும் சம்பவங்களைக் கூறலாம்.

கேரள யாத்திரை ஒன்றின் போது, ஆசார்யாள் கோயில் ஒன்றிற்கு விஜயம் செய்திருந்தார். அச்சமயம் ஆசார்யாளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆக்ரோஷமான கோஷங்களை எழுப்பிக் கொண்டு, ஒரு பெரிய கூட்டம் அந்தக் கோயில் முன் கூடிவிட்டது. கைகளில் ஆயுதங்களை ஏந்தியபடி கூப்பாடு போட்டுக்கொண்டிருந்த அவர்களைக் கண்ட மடத்து ஊழியர்களும், உடனிருந்த பக்தர்களும் பயத்தில் செய்வதறியாது திகைத்து நிற்க, கோயிலை விட்டு வெளியில் வந்த ஆசார்யாளோ தமது முகத்தில் ஒளிரும் சாந்தம் மாறாதவராக, அந்த கூட்டத்தில் இருந்த ஒருவரைப் பார்த்து தம்மிடம் வருமாறு சமிக்ஞை செய்தார். இதைச் சற்றும் எதிர்பாராத அம்மனிதர் மறுகணம் எதையும் யோசிக்கக்கூடத் தலைப்படாமல் ஆசார்யாளிடம் வந்தார். உலர்ந்த திராட்சைகள் நிரம்பிய தட்டினை அவரிடம் கொடுத்த ஆசார்யாள், அவரிடம், “நீர்தான் இவர்களுக்குத் தலைவர். இந்தப் பிரசாதத்தை அனைவருக்கும் விநியோகம் செய்யுங்கள்” எனக் கூற, மறுபேச்சு பேசாத அவர் ஆசார்யாள் கூறியபடிச் செய்யத் துவங்கிவிட்டார்! அதன் பிறகு, மற்றொருவரை அழைத்த ஆசார்யாள் அவரிடம் பழங்கள் நிரம்பியத் தட்டு ஒன்றினைக் கொடுத்து, அனைவருக்கும் அப்பழங்களை விநியோகிக்கும்படிக் கூற, அவரும் அதைச் செய்யத் துவங்கிவிட்டார்! நடந்தவற்றினைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கூட்டத்தினரோ பெரும் குழப்பமடைந்து, தங்களது கோஷங்களை தாமாகவே நிறுத்திக் கொண்டு விட்டனர். பிறகு அவர்களை நோக்கிய ஆசார்யாள், “எங்கே, இப்போது எல்லோருமாகச் சொல்லுங்கள்” எனக் கூறி,

''ஹரே ராம, ஹரே ராம, ராம ராம ஹரே ஹரே; ஹரே க்ருஷ்ண, ஹரே க்ருஷ்ண, க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே'' என்று தாம் சொல்லத் துவங்கினார். முதலில் சிலர் மட்டும் அவரைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பிக்க, பிறகு கூட்டத்தினர் அனைவருமே சேர்ந்து ஆர்வத்துடன் அம்மஹாமந்திரத்தைச் சொல்லத் துவங்கிவிட்டனர்! பயங்கரமாகக் கோஷமிட்டுக்கொண்டு நின்ற கூட்டத்தினை பஜனை கோஷ்டியாக மாற்றி, அவர்களுக்குப் புண்ணியத்தைச் சேர்த்த ஆசார்யாள் பிறகு அங்கிருந்து கிளம்பினார்!

பிரம்மத்தை அறிந்தவன் சோகத்தைக் கடக்கிறான் என்பது வேத வாக்கு. ஜீவன்முக்தரான ஆசார்யாளை சோகம் என்பது ஒருபோதும் பீடித்ததேயில்லை. தாம் பெரிதும் மதித்த தமது தாயாரின் மரணம் பற்றிய செய்தி கிடைத்த போதும் அவரது மனம் சோகத்தில் ஆழவில்லை. 1966ல் உஜ்ஜயினியில் முகாமிட்டிருந்த சமயம், கேதார்நாத்திற்குச் சென்று இறைவனைத் தரிசிக்க வேண்டும் எனும் எண்ணம் தோன்றி, நாளுக்கு நாள் அது வலுப்படத் துவங்கியது. பிறகு, கேதார்நாத் பயணம் துவங்கி, கௌரிகுண்டத்திற்கும் போய் சேர்ந்து மலைப்பாதையில் நடந்து ஏறத் துவங்கிய போதுதான் அது எவ்வளவு கஷ்டமான ஒன்று என்பது ஆசார்யாளுக்கும், உடன் சென்றவர்களுக்கும் தெரிந்தது. ஒரு கட்டத்தில், மிக விரைவாக ஏறி சென்று கொண்டிருந்த ஆசார்யாள் உடன்வந்தவர்களை விட்டு மிகத் தொலைவிற்குச் சென்றுவிட்டார். இரவு 9 மணி, கும்மிருட்டு, வழியும் சரியாகத் தெரியவில்லை, பனிப்பொழிவும் அதிகரித்தவண்ணம் இருந்தது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் எவருக்கும் பயமும் சோகமும் வருவது எதிர்பார்த்திடக்கூடியதே. ஆயினும், ஆசார்யாள் ஒரு சிறிதும் பயமோ சோகமோ அற்றவராய் 'அனைத்தும் இறைவனின் சித்தம்' என்று நின்றிருந்தார். அச்சமயம், எதிர்த் திசையில் இருந்து கையில் ஒரு விளக்குடன் வந்த ஒருவர் ஆசார்யாளை அழைத்துச் சென்றார்.

இம்மாதிரியே, தமது முதன்முதல் வாரணாசி விஜயத்தினையும், அங்கு ஸ்ரீ விச்வநாதர் தரிசனத்தையும் ஆவலுடன் எதிர்பார்த்தவராய் அங்கு சென்று கொண்டிருந்த ஆசார்யாள், ஊருக்குச் சற்றுத் தொலைவில் இருந்த போது, ''வாரணாசியில் சாதிக் கலவரம்

அதிகமாகியிருப்பதால், இப்போது அங்கு தாங்கள் செல்வது உசிதமல்ல'' என்ற செய்தியினைப் பெற்றார். ஆகவே, வாரணாசிக்குச் செல்லாமல் பயணத்தை கொல்கொத்தாவை நோக்கித் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது. எதிர்பாராதவிதமாக இப்படி நேர்ந்துவிட்ட போதிலும், ஆசார்யாளின் மனது சோகத்தில் ஆழ்ந்து விடவில்லை. இந்த சமயத்தில், ''ஸ்ரீ விச்வநாதரை வேண்டிக்கொள்வதுதான் எனக்கிருக்கும் வழி, பலம் மற்றும் கடமை'' என எண்ணியது அவர் மனது. ''ஓ விச்வநாதா, என்ன இது, நீ அழைத்திடும் போது என்னால் வர இயலாது. ஆகையால், நான் வரும்போதாவது நீ தரிசனத்தைக் கொடுக்க வேண்டும் அல்லவா? என்னுடைய இந்த தீவிர விருப்பத்தினை நீ ஏன் நிறைவேற்றக் கூடாது?'' என எண்ணியவறே பயணித்தார் ஆசார்யாள். காசி நகரைத் தாண்டி சுமார் 40 மைல்கள் வந்ததும், காசி நகரைச் சேர்ந்த இரண்டு பிரமுகர்கள் அங்கு வந்து ஆசார்யாளை சந்தித்து, ''தாங்கள் காசிக்கு வந்தே ஆக வேண்டும்'' எனக் கூறி ஆசார்யாளை பாதுகாப்பாக அழைத்துச் சென்றுவிட்டனர்!

॥ भवभीतिनिवारणः ॥

## 66. பவபீதி-நிவாரண:

(பிறப்பு-இறப்பாகிய ஸம்ஸார பயத்திற்கு நிவாரணம் அளிப்பவர்)

ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் உயர்ந்ததொரு எண்ணம் கொண்டவராகத் திகழ்ந்தார். தாம் பிரம்ம ஸாக்ஷாத்காரம் பெற்றுக் கொண்டதுடன் உலகோரின் பவ பீதியை நீக்குவதிலும் ஆசார்யாள் முனைந்தார்.

'உண்மையில் நாம் அந்த இரண்டற்றதான பரபிரம்மமே என்பதை அறியாமலே இருப்பதுதான் நமக்கு பவபீதியை (பிறப்பு-வாழ்வு-இறப்பு குறித்த பயத்தை) உண்டாக்குகின்றது; வேதம் உரைக்கும்

வகைகளில் தர்மங்களை அனுசரித்து, இறைவனை வழிபட்டு, நாம் நமது மனத்தினை தூய்மை செய்து கொண்டோமானால், அறியாமையை அழிக்கவல்ல சக்தியானது நமக்கு இறைவனின் கருணையினால் ஸித்தித்துவிடும்' என்பதான உபதேசங்களை செய்து வரத் துவங்கினார் ஜகத்குருநாதர். எடுத்துக்காட்டாக, ''கலியுகத்தில் நற்கதிக்கு வழி'' எனும் தலைப்பில் வெளி வந்த ஆசார்யாளின் உபன்யாஸத்திலிருந்து தொகுக்கப்பட்ட பின்வரும் உபதேசத்தினைக் குறிப்பிடலாம்:

********

*ஜீவன் என்பவன் யார்? யாரால் ஆகாசம் முதலான பஞ்சபூதங்கள் ஏற்பட்டனவோ, யாரால் அந்த பஞ்ச பூதங்களுடைய காரியங்களும் ஏற்பட்டனவோ அப்பேற்பட்ட பரபிரம்மமே ஜீவனாகி விட்டான். எந்த ஒரு பொருளுக்கும், அது தனது ஸ்வரூபத்தைத் தெரிந்து கொண்டால்தான் அதற்கு முக்தி கிடைக்கும். அனாதி காலமாக பிறந்தவர்களெல்லாம் ஒரு நாள் இறக்கிறார்கள். இறந்தவர்களோ மீண்டும் பிறக்கிறார்கள். ஆகவே இம்மாதிரியான ஒரு பரம்பரையிலே நாமெல்லோரும் சிக்கிக் கொண்டு அவதிக்குள்ளாகிறோம். எவ்வளவு நாள் இது போல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதுகூட நமக்குத் தெரிவதில்லை. இந்தக் கஷ்டத்திலிருந்து முக்தி பெற என்ன வழி என்றால், ஸ்வஸ்வரூபத்தை அடைவதுதான் ஒரே வழி. அதற்கு என்ன ஸாதனைகள் இருக்கின்றன?*

*தர்மங்களில் அனேகவிதமுண்டு. உடலால் செய்யப்படக் கூடியவை. வாக்கால் செய்யப்படக் கூடியவை மற்றும் மனதால் செய்யப்படக் கூடியவை என்று அவற்றை நாம் பிரிக்கலாம். இது மட்டுமின்றி, ஒவ்வொரு யுகத்திற்கும் சிறந்த தர்மங்கள் எவை என்பதையும் நம் முன்னோர்கள் தெரிவித்துள்ளார்கள். கிருத யுகத்தில் தியான யோகம் என்பது மிகச் சிறந்த தர்மமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திரேதா யுகத்தில் தர்சபூர்ண மாஸம் போன்ற யாகங்களைச் செய்வது சிறந்ததாகக் கூறப்பட்டுள்ளது. துவாபர யுகத்தில் பகவானை அர்ச்சனம் செய்வது சிறந்ததாகக் காட்டப் பட்டுள்ளது.*

கிருத யுகத்தில் தியானம் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்து ஒரு மனிதனுக்குத் தானும் தியானம் செய்ய வேண்டும் என்று ஆசையோடு தியானம் செய்ய முற்படுகிறான். கோபால கிருஷ்ண மூர்த்தியை தியானிக்க நினைத்த அவனது மனக்கண் முன் சினிமாவில் வரும் கடவுள்தான் வருகிறார். கடைசியில் சினிமா நடிகனைப் போல் தானும் உடை அணிய வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதனால் அவன் தன் உடலையும் மனதையும் வீணாக்கிப் பின் வாழ்க்கையையே வீணாக்கிக் கொள்கிறான். ஆகவே த்யானம் செய்வது அவ்வளவு எளிதான விஷயமல்ல.

திரேதா யுகத்தில் சிறந்த தர்மம் என்று கூறப்பட்ட யக்ஞங்களின் விஷயத்திற்கு வருவோம். யக்ஞங்களையெல்லாம் நாம் செய்யலாம் என்றால் அதற்குப் பல தகுதிகள் தேவைப்படுகின்றன. இவ்வளவு யக்ஞங்களையும் நாம் செய்ய வேண்டுமென்றால் நாம் முதலில் வேத அத்யயனம் செய்திருக்க வேண்டும். ஆனால் நமக்கோ வேதம் என்றால் என்ன என்பதுகூடத் தெரியாது. அது எந்தக் கடையிலே கிடைக்கும்? ரூபாய்க்கு எவ்வளவு படி கிடைக்கும் என்று கேட்கும் கோஷ்டியிலே நாம் சேர்ந்திருக்கிறோம். (ஆகவே) நம்மால் யக்ஞங்களெல்லாம் செய்வது முடியாது. யக்ஞம் பண்ணாவிட்டாலும் யக்ஞம் செய்பவர்களுக்கு உதவி செய்யலாம். யக்ஞத்தைச் சிரத்தையுடன் உட்கார்ந்து பார்க்கலாம். நமக்கு முடிந்தால் ஏதாவது பண உதவியும் செய்யலாம்.

துவாபர யுகத்தில் பகவானை அர்ச்சனம் செய்வது சிறந்ததாகக் காட்டப் பட்டுள்ளது. பகவானை அர்ச்சனை செய்யும் விஷயத்திலும் பல விதங்களுண்டு. ருத்ரம் சொல்லி அபிஷேகம் செய்யலாம். முடியாவிட்டால் ‘ஸத்யோ ஜாதம்’ என்று தொடங்கும் மந்திரங்களை மட்டுமாவது சொல்லி அபிஷேகம் செய்யலாம். அதுவும் முடியாது என்றால். “நம: சிவாய” என்று கூறி அபிஷேகம் செய்யலாம். அதுவும் நம்மால் முடியாதென்றால் “சிவாய நம:” என்று புரோக்ஷணம் செய்து நான்கு புஷ்பங்களைப் போட்டால் அதுவே அர்ச்சனை ஆகிவிடும்.

இந்தக் கலி காலத்தில் இதுவும் கஷ்டமாயிருக்கிறது என்றால், பகவானை மனதுருக நினைத்தாலே போதும். "ஹரி ஹரி" என்று சொன்னாலே போதும். கிருதயுகத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களோ, திரேதா யுகத்திலும் துவாபர யுகத்திலும் எதைச் செய்ய வேண்டும் என்று சொல்லி-யிருக்கிறார்களோ அந்த அனைத்துப் பலனையும் கலியுகத்தில் இறைவனின் பெயரை உச்சரிப்பதாலேயே நாம் பெற்று விடலாம்.

இங்கு நாம் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இந்த மருந்து (பகவானின் நாமத்தை ஸ்மரிப்பது) இருக்கிறது என்பதனால் (தியானம் போன்ற) பெரிய மருந்தைப் புறக்கணிக்கக் கூடாது. நமக்கு எவ்வளவிற்குச் சக்தி இருக்கிறதோ அவ்வளவிற்கு இந்த எல்லா தர்மங்களையும் அனுஸரிக்க வேண்டும்.

ஒருவனுக்கு உடல்நலக் குறைவினால் ஜுரம் வந்திருக்கிறது. அச்சமயத்தில் குளிக்கக் கூடாது என்று மருத்துவர் கூறியுள்ளார். ஆனால் நோயாளி ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும். குளித்தால் உடலுக்கு ஆபத்து. இச்சமயத்தில் அவன் விபூதியினால் பஸ்ம ஸ்நானம் செய்து ஸந்தியாவந்தனத்தை மேற்கொள்ளலாம். விபூதியும் கிடைக்கவில்லை என்றால் மந்திர ஸ்நானம் செய்து கொள்ளலாம். இவையெல்லாம் உடம்பு சரியில்லாதவனுக்குத்தான் சொல்லப்-பட்டிருக்கிறது. அதேபோல் பகவானும் அந்தந்த யுகத்திற்கு ஏற்ற தர்மங்களைச் சொல்லியிருக்கிறான். நாம் நமக்கு சாமர்த்தியத்தை உண்டாக்கிக் கொண்டு எவற்றையெல்லாம் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் இந்த யுகத்திலேயே செய்ய வேண்டும். அப்படியில்லாவிட்டால், இந்த யுகத்தில் தியானம் செய்பவர்களே இருந்திருக்க மாட்டார்கள். மாறாக, இப்போதும் தியானம் செய்பவர்கள் பலரை நாம் பார்க்கிறோம்.

ஆகவே, நம்மால் தியானம் செய்ய முடியாவிட்டால் பகவத் ஆராதனைகளைச் செய்ய வேண்டும். அதுவும் செய்யாவிட்டால் பகவானுடைய கட்டளைகளின்படி வர்ணாச்ரம தர்மங்களை மட்டுமாவது கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு வாழ்க்கை நடத்தினால் அது நமக்கு சிரேயஸ்ஸை தரும்.

********

இங்ஙனம் தம்மை நாடி வந்த ஒவ்வொருவரது ஆர்வத்தினையும், சிரத்தையையும், இதர தகுதிகளையும் நன்கு கருத்தில் கொண்டவராய், அவரவர் மனத்தூய்மைக்கு வழிவகுப்பதான மந்திர உபதேசம், கர்ம யோகம், தியான யோகம், இறை வழிபாடு, குரு ஸேவை, ஜன சேவை என்பதான சாதனை மார்க்கங்களை ஒவ்வொருவருக்கும் பவபீதி நிவாரணியாக அருளி அவரவர்களது சிரேயஸ்ஸிற்கு வழிகாட்டி வந்தார் ஆசார்ய ஸ்வாமிகள்.

## ॥ महावाक्यविवेकज्ञः ॥

# *67. மஹாவாக்ய-விவேகக்ஞ:*

*(மஹா வாக்கியத்தின் உட்பொருளை விசாரித்து அறிந்தவர்)*

*உபநிஷத்தில் இடம் பெறுவதும், ஜீவ-பிரம்ம ஐக்கியத்தை உணர்த்தி நிற்பதுமான வாக்கியமே மஹாவாக்கியம் என்பதாகும். "அஹம் ப்ரஹ்மாஸ்மி" (நான் பிரம்மமாக இருக்கிறேன்) என்பதையே சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்திற்கான மஹாவாக்கியமாக ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரர் நிர்ணயித்தருளினார். அன்றிலிருந்து, இந்தப் பீடத்தை அலங்கரித்து வரும் ஒவ்வொரு ஆசார்யரும் தமக்குப் பின் இந்த பீடத்திற்கான அடுத்த அதிபதியாக நியமிக்கும் பொருட்டு ஒரு சீடரைத் தேர்ந்தெடுத்து, அவருக்கு ஸன்யாஸ ஆசிரமத்தையளித்து, அவருக்கு இந்த மஹாவாக்கிய உபதேசத்தினையும் அருளுவது நடைபெற்று வருகின்றது. 1931ம் வருடம் மே மாதத்தில் ஸத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் திருக்கரங்களினால் ஸன்யாஸ தீக்ஷையைப் பெற்ற ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தமது குருநாதரிடமிருந்து மஹாவாக்கிய உபதேசத்தையும் பெற்றுக்கொண்டார்.*

*அன்றிலிருந்து "அஹம் ப்ரஹ்மாஸ்மி" என்பதை அனுஸந்தானம் செய்துவரத் துவங்கிய ஆசார்யாள் படிப்படியாக முன்னேறி, ஹட*

யோகம், கர்ம யோகம், குண்டலினி யோகம், பரம்பொருளை குணமுள்ளதாய் பாவித்த தியானம் ஆகியவற்றினில் உயர்ந்த தேர்ச்சி பெற்றார். பிறகு, 1935ம் வருடம், டிசம்பர் மாதத்தில் பரமசிவனால் தூண்டப்பட்டவராக ஜீவ-பிரம்ம ஐக்கியத்தினை அனுபவத்தினில் கொண்டுவரும் விதமாக மஹாவாக்கிய விவேகத்தினை மேற்கொண்டார். அதி அற்புதமானதும், இணையற்றதுமான அந்த பிரம்ம விசாரமானது "யோகமும் ஞானமும் ஜீவன்முக்தியும்" எனும் நூலில் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதன் ஸாரத்தினைக் கீழே காணலாம்.

முதலில் "நான் யார்" என்பதை விசாரிக்கத் துவங்கினார் ஆசார்யாள். அறியப்படும் வஸ்துவானது அதை அறிபவனிலிருந்து வேறானது எனும் அடிப்படையில், என்னால் அறியப்படுவதான இந்த உடல், பிராணன், இந்திரியங்கள், மனம் மற்றும் 'நான்' எனும் கர்த்தா (புத்தி) ஆகியவை, இவற்றை அறிபவனான என்னிடமிருந்து வேறுபட்டவையே தவிர இவை எதுவும் நானாக இருக்க முடியாது என்பதை நன்கு விசாரித்துத் தீர்மானித்தார் அவர். பிறகு, தொடர்ந்து சிந்தித்தார்:

"பல்வேறு பொருட்கள் ஒரே சூரியனால் பிரகாசப்படுத்தப்படுகின்றன. அவையெல்லாம் சூரியனைக் காட்டிலும் வேறானவை. இதே போல், விழிப்பு நிலையில் எதிர்கொள்ளப்படும் பொருட்கள் பல்வேறாக இருக்கின்றன; மாற்றம் அடைந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால், அவற்றைப் பிரகாசிக்கும் சைதன்யமோ (அறிவோ) அவற்றினின்று வேறாகவும், ஒன்றே ஒன்றாகவும் இருக்கின்றது. இதே போல் கனவு நிலையில், மாறிக்கொண்டே இருக்கும் பல்வேறான பொருட்கள், மாறாமலும் ஒன்றாகவும் இருக்கும் சைதன்யத்தினால் பிரகாசிக்கப்படுகின்றன. ஆழ்ந்த உறக்க நிலையிலோ, சைதன்யமானது அறியாமையைப் பிரகாசிக்கின்றது. இந்த மூன்று நிலைகளிலும் பிரகாசிக்கும் சைதன்யத்தில் வேறுபாடு உண்டு என்றோ, அது மாற்றங்களுக்கு உட்படும் என்றோ நிரூபிப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பிரகாசிக்கப்படும் பொருட்கள் தங்களைப் பிரகாசப்படுத்தும் ஒன்றில் மாறுதல்களை நிரூபிக்க முடியாது. மேலும், சைதன்யமே தன்னிடத்தில் எந்த மாறுதல்களையும் பார்க்க

இயலாது. இத்தகைய மாறாத சைதன்யம் என்னைத் தவிர வேறாக இருக்க முடியாது. வேதத்தின் பிரமாணப்படி, நான் அந்த பரம்பொருளான பிரம்மமே.''

பிறகு அவர் தைத்திரீய உபநிஷத்தின் ''ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம'' (பிரம்மமானது ஸத்யம் ஞானம் மற்றும் எல்லையற்றது ஆகும்) எனும் மந்திரத்தினை நினைவுபடுத்திக்கொண்டு அதன் பொருளை பின்வருமாறு சிந்தித்தார்: ''எது கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலங்களிலும் ஒருபோதும் அழிவுபடாமல் இருக்கின்றதோ அதுதான் ஸத் அல்லது ஸத்யம். எது மாற்றங்களுக்கு உட்படுகிறதோ அதை ஸத்யம் என்று அழைக்க முடியாது. பிரம்மமானது முன்பும், இப்போதும், பின்பும் – எல்லா காலத்திலும் – மாறாமல் இருக்கிறது. அதுதான் பாரமார்த்திக ஸத்யம். இங்கு பிரம்மமானது, ஞானம் (அறிவு) என்றுதான் கூறப்பட்டிருக்கிறதே தவிர, ஞாத்ரு (அறிபவன்) என்று கூறப்-படவில்லை. ஆகவே, அது இயற்கையிலேயே சைதன்ய (அறிவு) வடிவாக இருக்கிறது. எது காலம், இடம் மற்றும் பொருட்களினால் வரையறுக்கப்படுகிறதோ, அதை அனந்தம் (எல்லையற்றது) என்று கூற முடியாது. வேதம் பரம்பொருளை அனந்தம் என்று கூறுவதால், அது காலம், இடம் மற்றும் பொருட்களினால் வரையறுக்கப்பட முடியாதது என்பது தெளிவாகின்றது. ஆகவே, பிரம்மம் இல்லாத காலமே இல்லை; பிரம்மம் இல்லாத இடமே இல்லை. பிரம்மத்தைத் தவிர வேறான பொருளும் எதுவுமில்லை.''

ஆசார்யாள் மேலும் சிந்தித்தார்: ''எல்லாமே பிரம்மத்திலேயே வேரூன்றியிருக்கின்றன என்பது வேதத்தின் (பின்வரும்) சொற்களிலிருந்து தெளிவாகிறது. 'ஆத்மாவான அந்தப் பரம்-பொருளிலிருந்துதான் ஆகாசம் உண்டானது. ஆகாசத்திலிருந்து காற்று தோன்றியது. காற்றிலிருந்து அக்னி பிறந்தது. அக்னியிலிருந்து நீர் உருவானது. நீரிலிருந்து நிலம் உண்டானது. (தைத்திரீய உபநிஷத் 2.1.1)'. 'எதிலிருந்து இந்த எல்லா உயிர்களும் பிறக்கின்றனவோ, பிறந்த பின் எதனால் அவை வாழ்கின்றனவோ, எதனிடம் அவை சென்று மேலும் கலக்கின்றனவோ அதை நன்கு அறிவாயாக. அதுதான் பிரம்மம். (தைத்திரீய உபநிஷத் 3.1.1).'

பிரம்மம் மாறுதலற்றதனால், பூதமான ஆகாசமாக அப்பரம்பொருள் மாற்றமடைவது அல்லது குயவன் பானையைத் தயாரிப்பது போல உண்மையிலேயே இடத்தை (வெளியை) உண்டாக்குவது என்ற கேள்விக்கே இடமில்லை. ஆகவே ஆகாசமும் மற்ற பூதங்களும் பாலைவனத்தில் தோன்றும் கானல் நீரைப் போல தோற்றங்களாகவே இருக்க வேண்டும். பிரம்மத்தைத் தவிர அவற்றிற்கு இருப்பு கிடையாது. 'இங்கு மனிதனில் இருப்பவனும் அங்கு சூரியனில் இருப்பவனும் ஒருவனே. (தைத்திரீய உபநிஷத் 2.8.5)'"

பிறகு, ஆசார்யாள் பகவத்கீதை 6வது அத்தியாத்தின் 29வது மற்றும் 30வது சுலோகங்களை நினைவுபடுத்திக்கொண்டவராய் தமது விசாரத்தினைத் தொடர்ந்தார்: "'எவனுடைய மனம் யோகத்திலேயே நிலைத்திருக்கிறதோ, மேலும் எவன் எங்கும் சமநோக்குடன் இருக்கிறானோ, அவன் ஆத்மாவை எல்லா உயிர்களிடத்தும் இருப்பதாகவும் எல்லா உயிர்களும் ஆத்மாவில் உறைந்திருப்பதாகவும் காண்கிறான். எவன் என்னை எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் என்னிடமும் காண்கிறானோ அப்படிப்பட்டவனின் பார்வையிலிருந்து நானும் என்னுடைய பார்வையிலிருந்து அவனும் மறைவதில்லை.' இவ்வாறாக, பரமார்த்திக ஸத்யமாகவும், தூய்மையான சைதன்யமாகவும், அனந்தமாகவும் உள்ள பிரம்மம் எல்லா உயிர்களின் ஆத்மாவாகத் திகழ்கிறது. உலகைப் போல் தோற்றம் அளித்தாலும், அது இரண்டற்றது. எந்த வகையிலும் பாதிக்கப்படாதது. சாஸ்திரங்களில் உபதேசிக்கப்படுவது போல், எல்லா உயிர்களின் ஆத்மாவான அந்தப் பரம்பொருள்தான் நான். நான் முன்பும், இப்போதும், பின்பும் ஆத்மாவைத் தவிர வேறல்ல."

அதன்பின் ஆசார்யாளின் மனதில், ஸ்ரீ சங்கரர் இயற்றிய ப்ரஹ்மானுசிந்தனத்தின் முதல் வரியான "அஹமேவ பரம்பிரம்ம வாஸுதேவாக்யமவ்யயம் {(எல்லோர் மனதிலும் உறைந்து பிரகாசிப்பவனாகிய) வாஸுதேவன் என்றழைக்கப்படும் அழிவில்லாத பரபிரம்மம் நான்}" என்பது தோன்றியது. இதன் பின்னர் ஆசார்யாள் இந்த வார்த்தைகளை மனதில் உச்சரித்தவராய், அதன் கருத்தினை மட்டும் மனத்தில் இருத்தி தியானித்தார். உடனே, விரிந்த ஆகாசத்தை போல தாம் பரவுவதாக உணர்ந்த அவரை இன்பப்

பேரலை ஒன்று எழுந்து மூழ்கடித்தது. தியானத்தில் இருந்த சமயத்தில், இருளோ ஒளியோ எதுவும் தெரியாத நிலையில், பொருட்கள் எதையும் பிரகாசிக்காத சைதன்ய (அறிவு) வடிவாகவும் ஆனந்த வடிவாகவும் மட்டும் அவர் இருந்தார்.

மறுநாள் அவர், ‘‘எண்ணங்களுக்கு சாக்ஷியாக விளங்குவது ஆத்மா எனச் சிந்தித்தால் அந்த எண்ணமானது மனதை அலைக்கழிப்பதற்குப் பதிலாக அதை ஆத்மாவின் பக்கம் திருப்புவதற்கு உதவுமே’’ என்று முடிவு செய்து, ‘‘காலம் தாழ்த்தாமல் தியானத்தில் மூழ்கிட வேண்டும்’’ என்ற தமது விருப்பத்தையே விஷயமாக எடுத்துக்கொண்டு, ‘‘இந்த விருப்பத்தின் சாக்ஷி’’ என்பதாக ஆத்மாவின் மீது தியானிக்க ஆரம்பித்து, ஸவிகல்ப ஸமாதியில் ஆழ்ந்துவிட்டார். அந்நிலையினின்று இறங்கிய பின், மீண்டும், ‘‘மனதை அலைபாயச் செய்யும் ஓர் எண்ணத்தைச் சாராமல், ‘நான் தேஹமல்ல, ஸச்சிதானந்த ஸ்வரூபமான பிரம்மம்தான்’ என்ற கருத்தை மனதில் வரவழைத்து, அதைத் தீவிரமாக்கி எனது தியானத்தைச் செய்யலாமே’’ எனக் கருதிய அவர், அதைச் செயல்படுத்தி உடனடியாக ஸவிகல்ப ஸமாதியில் ஆழ்ந்தார்.

மூன்றாம் நாள் காலையில், தியானத்தைத் துவக்கிய அவர், தம்முள் தோன்றிய பச்சை நிற ஒளியை எடுத்துக்கொண்டு, இந்த ஒளிக்கு ஸாக்ஷியானது ஆத்மா எனத் தியானித்த சமயம், ஒளியும் மறைந்து, நான் என்னும் எண்ணமும் மறைந்து, ஸவிகல்ப ஸமாதியில் நிலைத்துவிட்டார். அன்று மாலையில், ஸ்ரீ சங்கரர் இயற்றிய பஞ்சீகரணத்தின் வார்த்தைகளான, ‘‘எப்போதும் தூய்மை, ஞானம், முக்தி மற்றும் ஸத் ஸ்வபாவமுள்ளதாய் பரமானந்தமாய், இரண்டற்றதாய், உள்ளிருக்கும் சைதன்யமாய் விளங்கும் பிரம்மம்தான் நான்’’ என்பதை ஞாபகப்படுத்திக் கொண்ட உடனேயே ஸவிகல்ப ஸமாதியில் ஆழ்ந்துவிட்டார். ஸமாதியிலிருந்து இறங்கியதும், ‘‘மன நிலைகளுக்கு ஸாக்ஷியாக இருப்பதோடு மட்டுமின்றி, வெளியில் தெரிகின்ற பொருட்களுக்கும் ஆதாரமாக இருப்பதும் பரம்பொருள் (பிரம்மம்) தானே’’ என யோசித்து, மேலும், ‘‘எந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டாலும் அதனுடைய இருப்பிலிருந்து அதனுடைய நாமத்தையும் ரூபத்தையும் பிரித்துப் பார்த்து, பின் அவற்றை

விலக்கிவிட்டு, அந்தப் பொருள் உண்மையிலேயே அதனுடைய அடிப்படைக் காரணமான பாரமார்த்திக ஸத்வஸ்துதான்'' என்பதைத் தீர்மானித்தவராய், தம் முன் தெரிந்து கொண்டிருந்த சூரியனையே தமது விசாரணைக்காக எடுத்துக்கொண்டார். முயற்சி செய்து சூரியனைப் பற்றிய விஷயங்களான அதன் வடிவம், அளவு, ஒளி முதலிய எல்லாவற்றையும் படிப்படியாக மறந்துகொண்டே வந்த அவர், அதன் இருப்பில் மட்டும் தமது மனதை ஒருமைப்படுத்தினார். சற்று நேரத்திற்குள் அவருக்கு சூரியனின் இருப்பைத் தவிர வேறொன்றும் தோன்றவில்லை. திடீரென்று தம்மை ஏறக்குறைய முற்றிலும் மறந்த அவர், ஸவிகல்ப ஸமாதியில் மூழ்கிவிட்டார்.

நான்காம் நாள் காலையில், தம்மெதிரே இருந்த சுவற்றினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அவர், அதன் மற்ற அம்சங்களை நிராகரித்து, அதன் இருப்பில் மட்டும் மனதினை ஒருமைப்படுத்தி ஸவிகல்ப ஸமாதியில் ஆழ்ந்தார். அன்று மாலையில், தியானத்-திற்குரிய விஷயமாக வெளிப் பொருட்களைப் பயன்படுத்தாமல், (பிரம்ம) தத்துவத்தின் மீது மனத்தினைச் செலுத்தலாம் என்று தீர்மானித்தவராய், கண்களை மூடிக்கொள்ளாமல், ''ஸர்வாதிஷ்டான-பூத-ஸன்மாத்ர-ப்ரஹ்மாஸ்மி (ஸத்தாகவும், எல்லாவற்றின் ஆதாரமாகவும் உள்ள பிரம்மம் நான்)'' என்று தமக்குள் கூறிக்கொண்ட அவர், தம்மெதிரே தோன்றிய அனைத்தின் நாம ரூபங்களை நிராகரித்து, அவற்றின் இருப்பினில் மட்டும் மனத்தினை ஒருமைப்படுத்திட, அவரது மனது ஸவிகல்ப ஸமாதியில் ஆழ்ந்தது.

மறுநாள் காலையில், மீண்டும் இதே ரீதியில் ஸவிகல்ப ஸமாதியினை அடைந்த ஆசார்யாள், மேலும் சிந்தித்தார்: ''ஸமாதியில் ஏற்படும் சுகத்தில் நான் ஏறக்குறைய மூழ்கிவிட்டாலும், சற்றளவிற்காவது அதிலிருந்து விலகி அதை அனுபவிப்-பவனாகத்தான் இன்னும் இருக்கிறேன்... ஒரு பொருளைப் போல் என்னால் அனுபவிக்கப்படும் சுகமானது, அது எவ்வளவு மேன்மையானதாக இருந்தாலும், அவித்யையின் வரம்பிற்குள்தான் அடங்கும். சுகத்தை ருசிக்காமல், நான் அதற்கும் அப்பாற்பட்டுச் செல்ல வேண்டும்.'' அன்று மாலை தியானத்தினைத் துவக்கிய அவரது மனம் ஸவிகல்ப ஸமாதியில் நுழைந்தது. ஆனந்தம்

அதிகமாக இருந்தது. ஆயினும், அந்த ஆனந்தத்திலேயே மனம் மூழ்கிவிடாதபடி, பெரு முயற்சியுடன் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "நான் இந்த ஆனந்தத்தை அனுபவிப்பவன் அல்ல; நான் இந்த ஆனந்தமேதான்" என எண்ணினார். மறு கணம், ஒரு பெரும் மாற்றம் நிகழ்ந்தது. தியானிப்பவர், தியானிக்கப்படும் விஷயம், தியானம் எனும் வேறுபாடுகள் முற்றிலும் மறைந்துவிட்டன... இருமையின் சாயல் எதுவுமேயற்றதாய் ஸத்-சித்-ஆனந்த பரபிரம்மம் மட்டுமே பிரகாசித்துக் கொண்டிருந்தது. சுமார் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு மெதுவாக மனது ஸவிகல்ப ஸமாதிக்கு இறங்கியது. உலகத்து இன்பங்களுடன் ஒப்பிடுகையில் ஸவிகல்ப ஸமாதியில் கிட்டிடும் ஆனந்தம் மிகப் பெரியது என்றாலும், உத்தமமான, இருமையற்ற நிர்விகல்ப ஸமாதி ஆனந்தத்தின் முன் அது ஒன்றுமேயில்லை என்பதை ஆசார்யாள் உணர்ந்துகொண்டார்.

அவர் தமது கண்களைத் திறந்த போது தம் முன்னாலிருந்த காட்சி அவருக்குத் தெரிந்த போதிலும் அது தெரியாதது போலிருந்தது. ஏனெனில், நாமரூபங்களை ஆதாரமாகக் கொண்ட வேறுபாடுகளின் தோற்றங்களை அவர் பொருட்படுத்தவில்லை. தாம் ஸத் ஸ்வரூபரே என்ற ஞானம் எந்த அளவிற்குத் தெளிவாக இருந்தது என்றால் அவர் தம்மைக் காட்டிலும் வேறு எதுவுமே இருப்பதாகப் பார்க்கவில்லை. எல்லாமே, கடல் போன்ற அவரில், நீர்க் குமிழிகள் போல் தோன்றின. சிறிது நேரம் கழித்து எழுந்த போது, அவரது உடல் பஞ்சைப் போல் லேசாக இருப்பதாகத் தோன்றியது. மலையிலிருந்து கீழே இறங்கி நடந்து வருகையில் அவர் தம்மை, மிதந்து கொண்டிருக்கும் ஓர் ஓடத்திலிருப்பவர் போல உணர்ந்தார்.

மறுநாள் காலையில் நாதானுஸந்தான முறையினை மேற்கொண்டு நிர்விகல்ப ஸமாதியில் ஆழ்ந்தார் ஆசார்யாள். அன்று மதியம் குண்டலினியை மையமாகக் கொண்ட லயயோகம் மூலம் நிர்விகல்ப ஸமாதியினை அடைந்தார். வழிமுறைகள் வெவ்வேறாக இருந்த போதிலும் முன்பு அடைந்த ஸமாதி நிலைக்கும், முந்தைய நாள் மாலையில் மலையின் மீது அடைந்த ஸமாதி நிலைக்கும், காலையில் நாதானுஸந்தானத்தின் மூலம் அடைந்த ஸமாதி நிலைக்கும் எந்த ஒரு வித்யாசமும் இருக்கவில்லை. இந்த எல்லாச் சமயங்களிலும்

இருமையின் தோற்றம் ஏதுமின்றி அத்வைத தத்துவம் மட்டும்தான் விளங்கியது. எந்த ஒரு பொருளும் இன்றி சைதன்யம் சிறந்து திகழ்கிறது என்பதும் ஆத்மாவானது சைதன்ய வடிவாய் உள்ளது என்பதும் அவருக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. தாம் மதியம் அடைந்த ஸமாதிக்குப் பிறகு கீழ்கண்ட விசாரத்தினை ஆசார்யாள் மேற்கொண்டார்:

ஆத்மாவானது ஒருவனுடைய ஸ்வரூபமாகவும், சைதன்ய (அறிவு) வடிவாகவும் இருக்கிறது. சைதன்யம் (அறிவு) இதர பொருட்களைத் தெரியப்படுத்தும். அதைத் தெரியப்படுத்துவதற்கு வேறொன்று தேவையில்லை. மேலும் அது எப்போதும் ஸ்வதஸ்ஸித்தமாக (அதனுடைய இருப்பை நிலைநாட்ட வேறொன்று தேவையில்லாத வகையில்) இருக்கிறது. சைதன்யம் ஸ்வதஸ்ஸித்தமாக இருந்திடா-விட்டால், அறியும் செயல், அறியப்படும் பொருள் மற்றும் அறிபவன் என்ற வியவஹாரம் ஏற்படுவதற்கு சாத்தியமே இல்லை.... கர்த்ருத்வம், துன்பப்படுதல், இன்பம் அனுபவித்தல் முதலியவை மாறுதல் அடைந்து கொண்டிருக்கும் புத்திக்குத்தான் என்றாலும், அவித்யையின் காரணமாக, ஒருவன் புத்திக்குத் தொடர்புடைய-வற்றைத் தவறுதலாக ஆத்மாவின் மீது ஏற்றிக் கொள்கிறான். புத்தியானது ஜடம் என்ற போதிலும் ஆத்மாவின் சைதன்யத் தன்மை புத்திக்குத் தவறாக அளிக்கப்பட்டு, புத்தியை அடிப்படையாகக் கொண்ட ‘நான்’ என்னும் (அஹங்காரம்) சைதன்யமான ப்ரமாதாவாகவும் அனுபவிப்பவராகவும் ஏற்பட்டு விடுகிறது.

சாஸ்திரமானது பரம்பொருளைப் பற்றிய ஞானத்தை உபதேசிப்பது என்பது, ஏதோ ஒரு தெரியாத பொருளைத் தெரிய வைப்பது போல் அல்ல. மாறாக, பரம்பொருளின் மீது அக்ஞானத்தினால் ஏற்பட்ட ஆரோபத்தை நீக்கும் வண்ணமாகவே சாஸ்திரம் உபதேசிக்கிறது. ஆத்மாவிலேயே ஒருநிலைப்பட்டிருந்தாலும் வெளியே அலைந்து கொண்டிருந்தாலும் மனமானது ஆத்மாவினால் பிரகாசப்படுத்தப்படும் ஒரு ஜடப்பொருளே ஆகும். ஆனால், சாஸ்திரத்தில் கூறப்படும் ரீதியில், பரம்பொருளிலேயே இருந்து கொண்டு, அதை மறைத்து அதனை வேறாகத் தெரிவிப்பதான அவித்யையை, பரம்பொருளை வடிவாகக் கொண்ட மனோ விருத்தியானது அழித்து விடுகிறது.

யோகத்தில் திறமை பெற்ற ஒருவன், ஸமாதியில் அவன் உட்கார்ந்திருக்கும் காலத்தில் மட்டும் ஆத்மாவில் ஒன்றியிருப்பதாகவும், ஸமாதியிலிருந்து வெளிவந்த பிறகு காரியங்களில் ஈடுபடும் போது, தான் தத்துவத்திலிருந்து சிறிதே வழுவுவதாகவும் உணர்வதாக வைத்துக்கொள்வோம். இப்படியிருந்தால், அத்தகையவன் அவித்யையிலிருந்து விடுபடவில்லை என்று தான் ஆகும். ஸமாதி நிலையோ, மனக் கட்டுப்பாடற்ற நிலையோ, இரண்டுமே மனத்தின் நிலைகளே தவிர ஆத்மாவின் நிலைகள் அல்ல. ஆத்மாவானது மாறுதலற்ற, சைதன்ய ஸ்வரூபமானது; ஸமாதியோ, மனம் அலைவதோ, ஆத்மாவை எந்த விதத்திலும் பாதிக்காது. அந்த யோகியானவன் மனத்துடன் உள்ள அபிமானத்தை இன்னும் விடாமையால், மனத்தின் நிலைகளில் ஏற்படும் மாறுதல்களினால் தானே மாற்றமடைவதாகக் கருதிக் கொள்கிறான். எவன், 'தான் மாறாத தத்துவம்' என்பதை முற்றிலும் உணர்ந்துள்ளானோ அவன்தான் தத்துவத்திலேயே நிலைபெறுகிறான் அத்தகையவன் தனது மனம் ஒருமுகத்தோடிருந்தாலும் கலக்கமுற்றிருந்தாலும் அல்லாது ஜடம் போலிருந்தாலும், வேறு எப்படியிருந்தாலும் அதனால் பாதிப்படையாமல் இருப்பான். தனக்கு முன்னால் இருப்பது உலர்ந்த மண் என்று உறுதியாக அறிந்தவன், அந்த இடத்தில் கானல் நீர் தோன்றுவதாலேயோ அல்லது மறைவதனாலேயோ பாதிக்கப்படுவதில்லை. அதேபோல், பரம்பொருளைத் தவிர வேறொன்றுமேயில்லை என்று அறிந்தவன், கானல் நீர் போன்ற கற்பனையான நாமரூபங்களாகிய உலகின் தோற்றத்தினாலோ, ஸமாதி அல்லது ஆழ்ந்த உறக்கத்தின் பொழுது அது மறைவதினாலோ பாதிக்கப்படுவதேயில்லை.

அடுத்த நாளன்று, காலையிலும் மதியத்திலும் ஒரு மணி நேரம் நிர்விகல்ப ஸமாதியில் இருந்தார் ஆசார்யாள். அன்றைய அனுபவத்தினைப் பற்றி அவரே கூறியதாவது: "த்வைதத்தின் (இருமையின்) பொய்த் தன்மை மற்றும் 'நான் மாறுதலற்ற சைதன்ய ஸ்வரூபி' என்பதன் தீர்மானம் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்ததால், ஆத்மாவல்லாததைப் பற்றிய, அவித்யையினால் ஏற்படும் கருத்துக்கள் ஏறக்குறைய எழும்பவேயில்லை. எழும்பிய

*அப்படிப்பட்ட சில கருத்துக்கள்கூட உடனடியாக நீக்கப்பட்டு விட்டன. 'பரம்பொருள்தான் இது எல்லாமும்' என்ற ஞானம் ஏறக்குறைய முழுதும் பலனளித்துவிட்டது. இத்தகைய நிலைதான் நான் மாலையில் சூரிய அஸ்தமனத்திற்கு ஒன்றரை மணி நேரத்திற்கு முன் மலைக்குச் செல்லுகையில் எனக்கு இருந்தது. எனது பார்வையை புருவங்களுக்கு இடையில் செலுத்தினேன். பிறகு எவ்வித முன்யோசனையுமில்லாமல், பிரணவத்தை மட்டும் உச்சரிப்பதற்குப் பதில் 'ஓம் நம: சிவாய' என்று உச்சரித்தேன். சற்று நேரத்தில் சந்திரன் போன்ற ஒளிவட்டத்தைப் புருவங்களுக்கிடையே கண்டேன். மனம் மிக்க அமைதியடைந்தது. 'நான்' என்ற உணர்வு மங்கியது. முயற்சி ஏதுமில்லாமல் நிர்விகல்ப ஸமாதி ஏற்பட்டது. கண்களைத் திறந்த போது, பரம்பொருளே எல்லாமும் என்பது உள்ளங்கைக்கனி போலத் தெளிவாக இருந்தது. எனது மனம் சில நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் தானாகவே நிர்விகல்ப ஸமாதிக்குச் சென்று அந்நிலையில் சுமார் ஒரு மணி நேரம் இருந்தது. ஆசார்யாள் மற்றும் ஈச்வரனின் அனுக்ரஹத்தினால் விவேகசூடாமணி (சுலோகம்-2ல்) கூறப்பட்டிருக்கும் 'ஸ்வனுபவோ ப்ரஹ்மாத்மனா ஸம்ஸ்த்திதி: (பரம்பொருளை நேரடியாக அறிந்து பரம்பொருளிலேயே நிலைத்திருப்பது)' என்பது அன்று மாலை ஒரு கணத்தில் நிகழ்ந்தது. அக்கணத்திலிருந்து இன்றுவரை தத்துவத்திலிருந்து வழுவுதல் என்பது ஏற்படவேயில்லை."*

சிரத்தைக்கு இலக்கணமாக விளங்கிய ஆசார்யாள் தமது திடமான தீர்மானத்துடனும், ஒன்றிய மனதுடனும் செய்துவந்த இடைவிடா பயிற்சியின் விளைவாக பிரம்மத்தில் ஒன்றி, ஜீவன்முக்தராகிவிட்டார். 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற மஹாவாக்கியத்தின் தத்துவத்தை தமது அனுபவமாகவே அறிந்துவிட்டார்.

## ॥ महामहिमसंयुतः ॥

# 68. மஹா-மஹிம-ஸம்யுத:

(மிகப் பெரும் மகிமை பொருந்தியவர்)

தமது விஜய யாத்திரை ஒன்றின் போது தாம் ஓரிடத்தில் அருளிய உபன்யாஸம் ஒன்றில் ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் தமது குருநாதரின் மஹிமையைப் பற்றிக் குறிப்பிட்டதாவது: "புஷ்பதந்தன் எனும் கந்தர்வன் சிவ பெருமானைப் போற்றி எழுதிய சிவ மஹிம்ன ஸ்தோத்திரத்தின் முதல் சுலோத்தில் 'பகவானே, உனது அளவற்ற மஹிமையைப் பூரணமாக அறிந்தவர்தான் உன்னைப் பற்றி ஸ்தோத்திரம் செய்ய முடியும் என்றால், அந்த நான்முக பிரம்மாவிற்குக்கூட அது முடியாது. மாறாக, அவரவர் புத்தி சக்திக்கேற்ப எவரும் உன்னைப் போற்றுவது தவறில்லையெனில் உன்னைப் போற்றி நான் இப்போது இயற்றத் துணிந்திருக்கும் என்னுடைய இந்த ஸ்தோத்திரமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே". நமது மஹாஸன்னிதானத்தின் (ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின்) மஹிமையைப் பற்றி நாம் கூற முயல்வதும் இது போன்றதே. நமது ஆசார்யாளின் மஹிமையும் அளவிட முடியாத ஒன்றே. அவர்களது மஹிமைகளைப் பூரணமாக அறிந்தவர் எவருமிலர். ஏதோ நமக்கு இயன்ற அளவிற்கு அவர்களது மஹிமைகளைப் பற்றிக் கூற நாம் முயற்சிக்கலாம்..."

'மஹிமா' என்றாலே 'பெருமை' என்றுதான் பொருள். ஆயினும், தமது குருநாதரின் பெருமைகள் ஒன்றும் சாதாரணமானவையல்ல என்பதை விளக்கும் வண்ணமே ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் "மஹா மஹிம ஸம்யுத:" எனும் இந்த நாமத்தைப் புனைந்திருக்கின்றாரோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. இளம் வயதிலேயே துறவறத்தைத் தழுவிடும் அளவிற்கு வைராக்கியச் சிகரமாக விளங்கியவர் அவர்! பரமேஸ்வரனும் சாரதாம்பாளுமே அவருக்கு யோக பாடங்களைக் கற்றுக்கொடுக்க முனையும் அளவிற்கு மஹிமை வாய்ந்தவர் அவர்! குருநாதரால் ஸ்ரீ நரஸிம்ம மந்திர உபதேசம் அவருக்குச் செய்யப்பட்ட போது, ஸாக்ஷாத் அந்த நரஸிம்மராகவே

மாறிய மஹானுபாவர் அவர்! யோகத்தின் சிகரமாம் நிர்விகல்ப ஸமாதியையும், அதைத் தொடர்ந்து ஜீவன்முக்தியையும் எளிதில் அடைந்தவர் அவர்!

அறிவிலும், அடக்கத்திலும் இணையற்று விளங்கிய ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் மஹாமஹிமையினை பூரணமாக விவரிக்க எவரால்தான் இயலும்? தம்முடைய மனம்-வாக்கு-செயல் ஆகியவற்றில் பரிசுத்தராகத் திகழ்ந்து வந்த ஆசார்யாளின் மஹிமைகளைப் பல்வேறு தருணங்களில் பக்தர்கள் பலர் கண்ணுற்று அனுபவித்திருக்கின்றனர். அவற்றில் சிலவற்றைக் கீழே காணலாம்.

முதலில் அவரது மனோ மஹிமையினை வெளிக்காட்டும் ஒரு சம்பவம். ரிஷிகேஷத்தைச் சேர்ந்த இளம் பிரம்மசாரி ஒருவருக்கு ஒரு சமயம் யோகம் மற்றும் வேதாந்த விஷயங்களில் பல சந்தேகங்கள் எழுந்தன. பண்டிதர்கள், யோகிகள், ஸன்யாஸிகள் எனப் பலரையும் அணுகியும் அவரது சந்தேகங்களுக்கானத் திருப்தியான விளக்கங்கள் கிட்டவில்லை! காசியிலிருந்த பண்டிதர் ஒருவரோ இவரிடம், “நீங்கள் சிருங்கேரி ஜகத்குருவிடம் சென்று கேளுங்கள். அவராலும் உம் சந்தேகங்களைத் தீர்க்க இயலவில்லை என்றால், இந்த உலகத்தில் வேறு எவராலுமே அவற்றைத் தீர்த்துவைத்திட முடியாது” எனக் கூறிவிடவே, இந்த பிரம்மசாரியும் அங்கிருந்து கிளம்பி சிருங்கேரிக்கு வந்தார். அச்சமயம் ஜகத்-குருநாதர் காலடி க்ஷேத்ர விஜய யாத்திரையைத் துவக்குவதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்ததால் இந்த பிரம்மசாரியால் ஆசார்யாளைத் தரிசிக்க இயலவில்லை. ஆயினும், அவர் வந்திருக்கும் விஷயமும் வருகையின் நோக்கமும் ஆசார்யாளுக்குத் தெரிவிக்கப்பட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் ஆசார்யாள் கிளம்பி வெளியில் வந்த சமயம், அங்கு கூடியிருந்தவர்களிடையே நின்று கொண்டிருந்த இந்த பிரம்மசாரியும் ஆசார்யாளுக்குத் தனது வந்தனங்களைச் சமர்ப்பித்துக் கொண்டார். அந்த பிரம்மசாரியினைக் கண்டதும் அவனுடைய பக்திசிரத்தை ஆசார்யாளை கவர்ந்துவிட்டது. கருணையுடன் அவனை நோக்கிய ஆசார்யாள், தம்முடைய மனதிற்குள் ஸ்ரீ சாரதாம்பாளை தியானித்தவராய், அம்பாளிடம்,

“அம்பா, பக்தி சிரத்தை மிக்க இந்த இளைஞனது ஸந்தேகங்களுக்கான விளக்கங்களை இப்போதே இவனது மனத்தில் உதிக்கச் செய்து அருள்வாயாக” என்று வேண்டிக்கொண்டதுடன், தமது தாமரை மலர்க் கரத்தினை உயர்த்தி அந்த பிரம்மசாரியைப் பரிபூரணமாக ஆசீர்வதித்துவிட்டுக் கிளம்பினார். ஆசார்ய பெருமான் ஆசீர்வதித்த அக்கணமே தனது கேள்விகளனைத்திற்கும் மிகவும் பொருத்தமான மற்றும் திருப்திகரமானதுமான விளக்கங்கள் அனைத்தும் தாமாகவே தன்னுள்ளே தோன்றிவிட்ட அதிசயத்தைக் கண்ட அந்த சிரத்தை மிகுந்த பிரம்மசாரிக்கோ மெய்சிலிர்த்துவிட்டது!”

அடுத்து ஆசார்யாளின் வாக்கு மஹிமையினை பின்வரும் சம்பவம் உணர்த்துகின்றது. ஒருமுறை, சிருங்கேரியில் நரசிம்மவனத்தினுள் ஆசார்யாள் நடந்து சென்று கொண்டிருந்த சமயத்தில் அவரது காரியதரிசியையும் உடன் அழைத்துச் சென்று கொண்டிருந்தார். அனைவருடனும் வெகு ஸஹஜமாகப் பழகும் இயல்பினரான ஆசார்யாள் அச்சமயத்திலும் தமது காரியதரிசியிடம் தமது பள்ளிப்பருவக் காலத்தில் நடைபெற்ற விஷயங்களைப் பற்றி சுவைபடப் பேசிக்கொண்டு வந்தார். ஒரு கட்டத்தில், தாம் ஆரம்பப் பள்ளியில் படிக்கும் போது கற்றுக் கொண்ட கன்னட மொழியிலுள்ள மழலையர் பாட்டு (Nursery Rhyme) ஒன்றினை எனக்குப் பாடியும் காட்டினார். மழை வர வேண்டிடும் பாடலான அதன் பொருளானது, “மழையே நீ பெய்வாயாக. பூந்தோட்டத்திற்குத் தண்ணீர் இல்லை...” என்பதாகும். ஆசார்யாள் இதை எனக்குப் பாடிக் காண்பித்த மறுகணம் ‘சோ’ என்று உண்மையாகவே மழை பெய்யத் துவங்கிவிட்டது! மழை வரும் காலமும் அல்லாமல், மழை வரப் போவதற்கான அறிகுறி எதுவும் இல்லாத போதும் திடீரென்று வந்துவிட்ட அந்த மழையின் காரணத்தை அறியாது காரியதரிசி திகைத்துப் போய்விட்டார். ஆசார்யாளோ, “இது என்னடா தொல்லையாகப் போய்விட்டது; நான் இந்த வரிகளை எப்போது பாடினாலும் இந்த மழை வந்து விடுகிறது” என அலுத்துக் கொள்ளும் ஒரு தொணியில் கூறத் துவங்கியதைக் கேட்ட காரியதரிசிக்கு, ‘மழையின் காரணம் ஆசார்யாளின் ஸத்திய

வாக்கிற்கு உள்ள மஹத்துவமே' எனும் உண்மை விளங்கிவிட்டது! பிற்பாடு, ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளை தரிசித்த காரியதரிசி அவர்களிடம் இந்நிகழ்ச்சியைப் பற்றி விவரித்தார். இதைக் கேட்ட ஸ்வாமிகளும் சிரித்துக் கொண்டே, "ஆமாம், ஆமாம், நானும் பல முறை இதைப் பார்த்திருக்கிறேன்; ஆசார்யாள் எப்போதெல்லாம் (மழையே நீ வருவாயாக... எனும்) இந்த வரிகளை விளையாட்டாகவே கூறினாலும்கூட, உடனே உண்மையாகவே மழை பெய்யத்துவங்கிவிடும்" என்று கூறிட, காரியதரிசி வியப்பில் ஆழ்ந்துவிட்டார்.

ஆசார்யாளின் செயல் மஹிமைக்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தினைக் காண்போம். தீவிர நாத்திகர்களும் ஆசார்யாளின் விஷயத்தில் மிகுந்த மரியாதையும் பக்தியும் கொண்டிடும் அளவிற்கு மஹிமை வாய்ந்தவராக விளங்கினார் ஆசார்யாள். 1969ல் ஆசார்யாள் கோயம்புத்தூர் நகருக்கு விஜயம் செய்த சமயம் பிரபல விஞ்ஞானியான திரு G.D. நாயுடுவின் ஆய்வுக்கூடத்திற்கு விஜயம் செய்ய விருப்பம் தெரிவித்தார். திரு G.D. நாயுடுவோ தீவிரமான ஒரு நாத்திகவாதி. மேலும் நாத்திகவாதத் தலைவராக விளங்கிய திரு ஈ.வெ.ரா. பெரியாரின் தொண்டரும் ஆவார் என்பதால் ஆசார்யாள் அங்கு செல்வது சரியாகுமா என்று பலருக்கும் ஐயம் ஏற்பட்டது. ஆயினும், ஆசார்யாள் அதையெல்லாம் பொருட்படுத்தவேயில்லை. 'திரு நாயுடு அவர்கள் ஒரு விஞ்ஞானி. பல பொறியியல் கண்டுபிடிப்புக்களை அவர் நிகழ்த்தியிருக்கின்றார். ஆசார்யாளுக்கும் பொறியியல் விஷயங்களில் மிகுந்த ஆர்வமுண்டு; மடத்தின் மராமத்து மற்றும் வளர்ச்சிப் பணிகளில் நாயுடு அவர்களின் ஆய்வுகள் உதவக்கூடும். இம்மாதிரியான பொது நன்மைகளுக்கு இடம் இருக்கும் ஒரு விஷயத்தில் ஆத்திக-நாத்திக கொள்கைகளுக்கு என்ன வேலை' என்ற ரீதியில் இருந்த ஆசார்யாளின் நடவடிக்கைகள் ஆரம்பத்தில் எவருக்கும் புரியவில்லை. தன்னுடைய கூடத்திற்கு விஜயம் செய்ய ஒரு தலைசிறந்த ஆன்மீகத் தலைவர் விருப்பம் தெரிவித்தது திரு G.D. நாயுடு அவர்களுக்கே பெரும் வியப்பினைத் தந்தது. ஆயினும், அவர் தமது கூடத்திற்கு வருகை புரிந்த ஆசார்யாளை மரியாதைகளுடன் வரவேற்று தமது ஆய்வுக்கூடத்தினைச் சுற்றிக் காண்பித்தார். பொறியியல் விஷயங்களில்

ஆசார்யாளுக்கு இருந்த ஆர்வத்தினையும், ஆழ்ந்த அறிவினையும் கண்ட திரு நாயுடு பெரும் ஆச்சரியத்தில் மூழ்கினார். ஆசார்யாளின் மீது பெருமதிப்பு உண்டாகிவிட்டது அவருக்கு. அது எந்த அளவிற்கு என்றால், பிற்பாடு தாம் துவங்கிய பொறியியல் பயிற்சி நிறுவனத்திற்கு அவர் "Sringeri Jagadguru Sankaracharya Vidyatheertha Training Institute" என்றே பெயரிட்டதுடன், அதனை ஈ.வெ.ரா. பெரியாரே திறந்து வைக்குமாறு செய்யும் அளவிற்கு அவருக்கு ஆசார்யாள் விஷயத்தினில் ஈடுபாடு உண்டாகிவிட்டது. பின்பு, 1971ம் ஆண்டு ஆசார்யாள் கோயம்புத்தூர் சென்றிருந்த சமயம், திரு நாயுடு அவர்களால் கட்டப்பட்டிருந்த E.V.R.Periyar Hall எனும் கூடத்தைத் திறந்து வைத்தார். திரு நாயுடு அவர்கள் ஒரு சமயம் தமது உரை ஒன்றில் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டதாவது: "நான் பெரியாருக்கும் சிஷ்யன். அதே சமயத்தில் ஸ்வாமிஜிக்கும் சிஷ்யன்." இங்ஙனம், 'அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ (அனைத்து உயிர்களிடத்தும் வெறுப்பு இன்றி, நட்புடன் பழகி, கருணையையே காட்டி...)' என்னும்படியான செயல்பாட்டினை வைத்துக்கொண்டிருந்த ஆசார்யாள், 'இவர் என்னைச் சேர்ந்தவர்' என்று ஒவ்வொருவரும் எண்ணிடும் வகையில், அனைவருடனும் மிக அன்பாகப் பழகிவந்தார்.

## ॥ महाप्रज्ञासमायुक्तः ॥

## 69. மஹாப்ரக்ஞா-ஸமாயுக்த:

(பேரறிவாளராக திகழ்பவர்)

அறிவானது, சிற்றறிவு, பேரறிவு என இரு வகைகளாகக் கூறப்படுகின்றது. சிற்றறிவானது அறியாமைக்குட்பட்டு, உலக விஷயங்களைப் பற்றிச் சுழல்கின்றது. பேரறிவோ, ஸம்ஸாரச் சக்கரத்தினின்று நம்மை விடுவித்து மெய் ஞானத்தில் நாம் நிலைத்திட உதவுகின்றது. பிரம்ம ஞானத்தை அடைந்த ஒருவர்

பேரறிவாளராகிறார். பேரறிவை (Supreme Consciousness) அடையப் பெறும் ஒருவர், 'எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகுமோ, அதையறிந்தவராக' ஆகிவிடுகின்றார் என உபநிஷத்துக்கள் உரைக்கின்றன! இத்தகைய மஹிமைகளைப் பெற்றதொரு பேரறிவாளராகத் தமது குருநாதர் திகழ்ந்தார் என்று துதித்து வணங்குகின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.

"எவ்வுயிரிடத்தும் வெறுப்பினைக் காட்டாது, அனைவருடனும் நட்பினையே பாராட்டி, கருணைக் கடலாய், (நான் எனும்) அஹங்காரமும், (எனது எனும்) மமகாரமும் ஒரு சிறிதும் அற்று, சுகத்தையும் துக்கத்தையும் சமமாகப் பாவித்து, (தமக்கு இழைக்கப்பட்ட எப்படிப்பட்ட தவறுகளையும்) எளிதில் மன்னித்துவிடும் தன்மையே" மஹாப்ரக்ஞராக (பேரறிவாளராக) விளங்கும் ஒருவரது இலக்ஷணங்கள். ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளிடம் இவையனைத்தும் பூரணமாக காணப்பட்டன. கீழே விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்கள் இவற்றிற்குத் தகுந்த சில எடுத்துக்காட்டுக்களாகும்.

வேதங்களை எதிர்ப்பவர்கள், நாஸ்திகர்கள், அத்வைதக் கொள்கையினை எதிர்ப்பவர்கள் என, பற்பலரும் ஆசார்யாளை நிந்திப்பது என்பது அவ்வப்போது நடந்துகொண்டுதான் இருந்தது. ஆயினும், இவர்கள் எவரது விஷயத்திலும் ஆசார்யாள் எந்த ஒரு தருணத்திலும் வெறுப்பெதையும் காட்டியதில்லை. அனைவரையும் இன்முகத்துடனே எதிர்கொள்வார். (ஆசார்யாளின் விருப்பு-வெறுப்பு அற்ற தன்மையின் சிறப்பினை, பின்னால் வருகின்ற, 78வது திருநாமமாகிய "ராகத்வேஷ விவர்ஜித:" என்பதற்கான விளக்கத்தில் விரிவாகக் காணலாம்.)

ஒரு முறை, வட இந்திய பகுதி ஒன்றில் ஆசார்யாள் விஜய யாத்திரையை மேற்கொண்டிருந்த போது, சாலையின் ஓரிடத்தில் கார் ஒன்று நிற்பதையும், அதனருகில் இருவர் கவலையுடன் நின்றிருப்பதையும் கண்டார். உடனடியாகத் தமது காரை நிறுத்தச் செய்து, அவர்களிடம், "ஏதேனும் பிரச்சினையா? உதவி வேண்டுமா?" என்றும் மிக அக்கறையுடன் கேட்டிட்டார். அவர்களோ ஆசார்யாளின் தெய்வீகத் தோற்றத்தையும், பல வாஹனங்களில் அவரைத்

தொடர்ந்து வந்து கொண்டிருந்த மடத்து அலுவலர்களையும், பக்தர்களையும் கவனித்து, வந்திருப்பவர் மிக உயர்ந்த தெய்வீக ஸ்தானத்தை வகிக்கும் ஒருவர் என்பதைப் புரிந்துகொண்டவர்களாய், "எங்கள் காரில் சிறு பழுது ஒன்றுதான் ஏற்பட்டிருக்கின்றது. அதை எப்படியாவது நாங்களே சரி பண்ணிக்கொண்டுவிடுவோம். தாங்கள் எங்களால் தாமதப்பட வேண்டாம் ஸ்வாமிஜி. தயவு செய்து தாங்கள் செல்லுங்கள்" என்று பணிவுடன் வேண்டிக்கொண்டனர். ஆயினும், நிலவிய சூழ்நிலைகளைக் கவனித்த ஆசார்யாள், அவர்களுக்கு வேறு ஏதும் உதவி கிடைப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவு என்பதைப் புரிந்துகொண்டவராய், "இல்லை, உங்களுக்குத் தேவை-யானதைச் செய்துவிட்டே செல்கின்றேன்" என்று கூறி, அவர்களது காரில் பழுதாகிவிட்டிருந்த ஓர் எந்திரப் பகுதிக்குப் பொருத்தமான மாற்றானது மடத்துக் கார் ஒன்றில் உபரியாக இருந்ததையறிந்து, அதனை எடுத்து அவர்களது காரில் பொருத்துமாறுக் கூறினார். வேலையும் விரைந்து முடிக்கப்பட, அவர்களது காரும் தயாரானது. பிறகுதான் ஆசார்யாள் அங்கிருந்து பயணத்தைத் தொடர்ந்தார்! அவர்கள் யார் என்ன என்றெல்லாம் தெரிந்து கொண்டு உதவி செய்ய முனையாது, அவர்களையும் தம்மைச் சேர்ந்தவர்களாகவே பாவித்து, உடனடியாக உதவிய ஆசார்யாளின் குணம் அவர்களை மெய்சிலிர்க்க வைத்தது! 'வஸுதைவ குடும்பகம்' (இந்த பிரபஞ்சமே வாஸுதேவனாகிய எனது குடும்பம்) எனும் உயர்ந்த தத்துவத்தில் நிலைத்திட்ட பேரறிவாளர் அல்லவா நமது ஸத்குருநாதர்!

அஹங்காரமும் மமகாரமும் அற்றவராக ஆசார்யாள் திகழ்ந்ததைப் பற்றி முன்னரே 9வது திருநாமமாகிய "அஹந்தா மமதா ஹீனாய நம:" என்பதன் விளக்கத்தில் கண்டோம். இங்கும், பின்வரும் இரு சம்பவங்களைக் கண்டு இன்புறுவோம்.

தம்முடைய யாத்திரை ஒன்றின் போது தமது பக்தர் ஒருவரது வீட்டிற்கு விஜயம் செய்தார் ஆசார்யாள். வரவேற்புச் சம்பிரதாயங்-களைச் சரிவர அறியாத பக்தரும், அவரது குடும்பத்தினரும் தடுமாறி நிற்க, ஆசார்யாளோ அவர்களைப் பார்த்து புன்னகைத்தபடியே, "உங்க அப்பா உங்க வீட்டுக்கு வந்தா, இப்படித்தான் பூரண கும்பம் கொடுப்பது மாதிரியான சம்பிரதாயங்களைச் செய்வீர்களா? நான்

என்னோட இடத்திற்குத்தானே வந்திருக்கின்றேன். எதற்கு இந்த சம்பிரதாயங்களெல்லாம்?'' என்று கூறி வீட்டினுள் வந்தார்! ஆசார்யாளின் அந்த எளிமை அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

சுகத்தையும் துக்கத்தையும் சமமாகப் பாவித்தவர் ஆசார்யாள். சுகம் அவரை ஈர்த்ததுமில்லை; துக்கம் அவரைக் கலக்கியதுமில்லை. பின்வரும் சம்பவங்கள் இதை நிரூபிக்கின்றன.

எத்தனையோ தருணங்களில் எத்தனையோ இடங்களில், பண்டிதர்கள், மந்திரிகள், அரசு அதிகாரிகள், மடாதிபதிகள் எனப் பலரும் அவரை எதிர்நோக்கிக் காத்திருந்ததுண்டு. அவருக்குக் கோலாகலமான வரவேற்பினையும், புகழாரங்களையும் அளித்ததுண்டு; ஆயினும், இவையெதுவும் ஆசார்யாளை ஈர்த்ததில்லை. அவர் ஸன்யாஸம் பெற்றுக் கொண்டது முதலே, அவர்பால் அடிப்படையற்ற த்வேஷம் கொண்டிருந்த பலர் அவருக்குப் பற்பல வழிகளில் துன்பம் இழைத்தே வந்தனர். ஆயினும், ஆசார்யாள் இவற்றால் எவ்வித சோகத்திற்கும் ஆளாகவில்லை. தெய்வத்திற்குச் சமமாக தாம் மதித்து வந்த தமது தாயார் மறைந்த செய்தி கிடைத்தபோதுமேகூட, இறப்பு என்பது இறைவன் வகுத்த நியதி என்பதாலும், மேலும் ஒரு ஸன்யாஸிக்கு பந்தங்களும் இருக்கக்கூடாது என்பதாலும் ஆசார்யாள் துக்கத்திற்கு இடம் கொடுக்கவில்லை. பீடாதிபதியாகப் பட்டமேற்றுக்கொண்ட பின்னர், மடத்திற்கு வருவாயை அளித்துக்கொண்டிருந்த நிலங்களை அரசாங்கமே எடுத்துக்கொண்டுவிட்டது. இதனாலும் அவர் துக்கமடையவில்லை.

தமக்கு இழைக்கப்படும் எப்பேற்பட்ட தீங்குகளையும் உடனடியாக மன்னித்துவிடும் அற்புதமான குணம் ஆசார்யாளிடத்தில் குடிகொண்டிருந்தது. மேற்கண்டபடி, அவருக்குப் பலவழிகளில் பல காலமாகத் துன்பங்களைக் கொடுத்துவந்த பலர், பிற்காலத்தில் தங்களது தவறுகளை உணர்ந்து ஆசார்யாளிடம் வந்து தங்களை மன்னித்துவிடுமாறு வேண்டி நின்ற தருணங்களில், உடனடியாக அவர்களை மன்னித்துவிட்டார் அவர்! இந்த அபாரமான குணத்தைக் கண்ணுற்ற அவர்கள் அனைவரும் அவர்பால் ஆழ்ந்த பக்தியை வளர்த்துக் கொண்டு, அவரது வழிகாட்டுதலின்படி நடந்துகொண்டு, ஆன்மிக முன்னேற்றத்தினை அடைந்தனர்!

இங்ஙனம், பேரறிவாளராக விளங்கி வந்த ஆசார்யாள், சிற்றறிவின் தூண்டுதலால் அவதிப்பட்டுவந்த ஏனையோரது இன்னல்களைப் போக்கி, அவர்களது ஐயப்பாடுகளைத் தீர்த்து, ஆன்மிக நெறிகளை அவர்களுக்குப் போதித்து, அவர்களும் பேரறிவாளர்களாக ஆவதற்கு வழிகாட்டி வாழ்ந்து வந்தார்.

ஜஐ❀ஐஜ

## ॥ मात्सर्यादिविवर्जितः ॥

## 70. மாத்ஸர்யாதி-விவர்ஜித:

(பொறாமை போன்ற இழிகுணங்கள் அற்றவர்)

இயல்பாகவே சாந்தம், அஹிம்சை, கருணை போன்ற நற்குணங்களைப் பெற்றவராகவும், பொறாமை, தற்பெருமை, கர்வம் போன்ற இழிகுணங்கள் எதுவுமற்றவராகவும் திகழ்ந்தவர் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். இதற்கு எடுத்துக்காட்டாக எண்ணற்ற சம்பவங்களைக் கூறலாம். அவற்றுள் சிலவற்றை இங்கு காணலாம்:

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன்தான் (ஆசார்யாளின் பிரம்மசரிய ஆசிரமப் பெயர்) சாரதா பீடத்தின் 35ம் ஜகத்குரு என ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் தீர்மானித்துவிட்ட நிலையில், ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் பெங்களூருக்குச் சென்று அவரது பெற்றோரைப் பார்த்துவிட்டு வரலாம் என அவரது குருநாதர் அனுக்கிரஹித்தார். முதலில் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனை மைசூருக்கு அனுப்பி அங்கு மருத்துவர் ஒருவரைக் கொண்டு பாலகருக்குப் பரிசோதனை நடத்திவிட்டு, அங்கிருந்து பெங்களூருக்கு அனுப்புவது என முடிவெடுக்கப்பட்டது. இந்த பயணத்தின் போது, ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுடன் வந்த மடத்தின் அதிகாரியோ காரிலும், பிறகு இரயிலில் முதல் வகுப்பிலும் பயணிக்க, அடுத்த ஜகத்குருவாகப் போகின்றவரோ பேருந்திலும், பிறகு இரயிலில் மூன்றாம் வகுப்பிலும் பயணித்தார். ஆயினும், இந்த பாரபட்சத்தால் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் ஒரு சிறிதும் வயிற்றெரிச்சலோ, பொறாமையோ அடையவேயில்லை. ‘இப்பயணம் எனது குருநாதரின்

ஆணை; அதை நிறைவேற்றுவது மட்டுமே எனது குறிக்கோள்' என்பது மட்டுமே அவரது எண்ணமாக இருந்தது!

தற்பெருமைக்கும் மற்றும் கர்வத்திற்கும் ஆசார்யாள் ஒரு சிறிதும் இடம் கொடுத்ததில்லை. ஆசார்யாளின் குருநாதராகிய ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்கள் அவ்வப்போது ஆசார்யாளைப் புகழ்ந்து சுலோகங்களை இயற்றுவதுடன், அவற்றை ஆசார்யாளிடமே கொடுத்து விடுவதுமுண்டு. ஒரு தருணத்தில் அவர் ஆசார்யாளிடம், "இவற்றில் (அடிப்படையற்ற) புகழ்ச்சியாக எதுவும் இல்லை. உங்களைப் பற்றி நிச்சயமாக எனக்குத் தெரிந்தவற்றைத்தான் இவற்றில் எழுதியிருக்கிறேன்" என்று விளக்கவும் செய்தார்! பிற்பாடு இதனை நினைவு கூர நேர்ந்த தருணங்களில் "எனது குருநாதருக்கு என் மீது இருந்த அளவு கடந்த அன்புதான் அவர் என்னைப் பற்றி இவ்வாறு கருதியதன் காரணம்" என ஆசார்யாளே விளக்கம் அளிப்பதுண்டு! மேலும், "நான் அந்த சுலோகங்களையெல்லாம் என்னுடனேயே வைத்துக்கொண்டிருந்தால் என் மனது பெருமைக்கும், கர்வத்திற்கும் இடம் கொடுத்துவிடக்கூடும் என்பதால், அவற்றைத் துங்கா நதியில் இட்டுவிடுவேன்" என்றும் ஒரு தருணத்தில், சீடர் ஒருவரிடம் ஆசார்யாள் தெரிவித்தார்.

## ॥ मधुरालापचतुरः ॥

## *71. மதுராலாபசதுர:*

(மதுரமான பேச்சினில் வித்தகர்)

"ஸத்தியத்தையே பேச வேண்டும்; அதனைப் பிறருக்கு பிரியமானதாக இருக்கும்வகையிலும் பேச வேண்டும்" என்பது நீதி வாசகம். ஆசார்யாளிடம் இது இயல்பாகவே இருந்து வந்தது. ஆசார்யாளுடன் உரையாடும் பாக்கியமடைந்த அனைவருமே அவரது வார்த்தைகளுக்கு இருந்ததொரு தெய்வீகமான ஈர்ப்புச் சக்தியை அனுபவித்தனர். எவர் மனமும் கோணாது, அவரவர்க்குத் திருப்தியுண்டாகும் வகையில் அனைவரிடமும் பேசுவார் ஆசார்யாள்.

மிகவும் தர்மசங்கடமான விஷயங்களையும் இலாவகமாகக் கையாண்டு, சம்பந்தப்பட்டவர்களைப் பாதிக்காவண்ணம் அதே சமயம் அவர்களுக்கு உதவும் நோக்குடன் வெளிவரும் தமது வார்த்தைகளை அவர்கள் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் பேசுவதில் வித்தகம் உடையவராகத் திகழ்ந்தவர் ஆசார்யாள். பண்டிதருக்கும் சரி, பாமரர்க்கும் சரி, ஆசார்யாளின் மதுரமான வார்த்தைகளால் பெரும் பயனே உண்டாயிற்று.

ஒரு சமயம் ஆசார்யாள் தமது காரில் பயணித்துக் கொண்டிருந்தார். பின்னால் படுவேகத்தில் வந்து கொண்டிருந்த கார் ஒன்று இடைவிடாது ஒலியை எழுப்பியவாறே ஆசார்யாளின் காரை கடந்து செல்ல முற்பட, ஆசார்யாளின் காரை ஓட்டிக் கொண்டிருந்த இளைஞருக்கோ மிகவும் எரிச்சல் ஏற்பட்டு, பின்னால் வரும் கார் தமது காரை முந்திச் செல்ல விடக்கூடாது எனவும் தோன்றிவிட்டது. நிலைமையைக் கவனித்த ஆசார்யாள் தமது காரோட்டியிடம், "அவனுக்கு சீக்கிரம் மோக்ஷத்துக்குப் போகவேண்டுமோ என்னவோ. அவனை போகவிடப்பா!" எனச் சிரித்துக்கொண்டே சொல்ல, காரோட்டியும் சிரித்து விட்டார். அதனால் அவரது மனதும் அமைதியாகி, மற்ற காருக்கு வழி விட, அந்தக் காரும் விரைந்து கடந்து சென்றது. விடாமல் ஒலியெழுப்பி கடக்க முற்படும் அந்த காருக்கு வழிவிட்டுவிடுமாறு தமது காரோட்டியிடம் சாதாரணமாகவே ஆசார்யாள் கூறியிருக்கலாம். ஆயினும், கூறவேண்டியதை நகைச்சுவைபட அவர் கூறினார். ஏன்? ஏற்கெனவே அதிக எரிச்சலில் இருக்கிறார் தமது காரோட்டி என்பதை யூகித்துக்கொண்ட ஆசார்யாள் அவரையும் சாந்தப்படுத்தி அதே சமயத்தில் அவருக்கு எரிச்சலை உண்டாக்கி வரும் விஷயத்திற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக தமது காரோட்டிக்கு அவர் செய்ய வேண்டியதை ஹாஸ்யமான வகையில் கூறினார். எரிச்சலில் இருந்த காரோட்டி இதனால் மனதார சிரித்துவிட்டபடியால் அவரது எரிச்சலும் அறவே அகன்று விட்டது. இதையே சாதாரணமாக ஆசார்யாள் கூறியிருந்திருந்தால், ஆசார்யாளின் வார்த்தைகளுக்குக் கட்டுப்படுவதற்காக காரோட்டி மற்ற காருக்கு வழிவிட்டிருந்திருப்பார்தான். ஆனாலும், தமது மன எரிச்சலை அதிகமாக்கிக்

கொண்டிருப்பாரேயல்லாது அமைதியாகியிருந்திருக்க மாட்டார். இதனால் இன்னும்தான் விஷயம் விபரீதமாகியிருந்திருக்கும்! ஆகவேதான், சொல்லவேண்டிய விஷயத்தை ஹாஸ்யம் கலந்ததாகக் கூறினார் ஆசார்யாள்! சூழ்நிலையைச் சரிவர யூகித்து அதற்கேற்றார் போல் ஒருவருக்கு அருளும் பாங்கு ஆசார்யாளிடம் நிறைந்து காணப்பட்டது.

ஐ❀ஐ

## ॥ मतिनिर्जितगीष्पतिः ॥

## *72. மதிநிர்ஜித-கீஷ்பதி:*

*(அறிவில் பிருகஸ்பதியையும் விஞ்சியவர்)*

*கீஷ்பதி என்பது தேவர்களின் குருவான ப்ருஹஸ்பதியைக் குறிக்கின்றது. வாக் மற்றும் புத்தி ஆகிய கரணங்களுக்கு அதிபதி என்று ப்ருஹஸ்பதி அழைக்கப்படுகின்றார். மேதா சக்தியில் தலைசிறந்தவர் என்று ப்ருஹஸ்பதியையே கூறுவர். ஆயினும், இந்த "மதிநிர்ஜித கீஷ்பதி:" எனும் திருநாமத்தில் மேதா விலாஸத்தில் எங்களது குருநாதருக்கு பிருஹஸ்பதியுமே இணையாகவியலாது எனப் பெருமையுடன் உரைக்கின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.*

*ஸதா ஸர்வ காலமும் அத்வைத ஞானானந்தத்தில் திளைத்தவராய் இருந்து வந்தவர் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். பகவத்கீதை 3வது அத்தியாயம் 42வது சுலோகத்தில் பகவான் கூறுகிறார்: "இந்திரியங்கள் மேலானவை எனக் கூறுவர். இந்திரியங்களைக் காட்டிலும் மேலானது மனது. மனதினும் மேலானது புத்தி. புத்திக்கும் அப்பாற்பட்டு உள்ளது ஆத்மா." எனவே, இந்த ரீதியில் பார்க்கும் போது, புத்திக்கும் மேலான ஆத்மாவின் ஞானம் கைகூடப்பெற்ற ஆசார்யாள் புத்திக்கு அதிபதியான பிருஹஸ்பதியை விஞ்சியவர் ஆகிவிடுகிறார். மேலும், தைத்திரீய உபநிஷத்தின் ஆனந்தவல்லி 9வது மந்திரத்தில், "எதை*

(பிரம்மத்தை) எட்டிப் பிடிக்க (புரிந்துகொள்ள) இயலாது வாக்கும் மனமும் (புத்தியும்) திரும்பிவிடுகின்றனவோ...'' என பிரஹ்மானந்த நிலையின் மஹிமையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வாக்கிற்கும் புத்திக்கும் அப்பாற்பட்டு விளங்கும் அந்த பரபிரம்ம ஞானானந்தத்தினை அடைந்த ஆசார்யாள் நிச்சயமாக வாக்கிற்கும் புத்திக்கும் அதிபதியாக இருந்திடும் பிருஹஸ்பதியை விஞ்சியவரா-கத்தானே இருக்க முடியும்? ஆகவே, 'மதிநிர்ஜித கீஷ்பதி:' என அவர் அழைக்கப் பெறுவது மிகப் பொருத்தமே!

ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள், அறிவே மனித உருவெடுத்து வந்ததோ என எவரையும் எண்ண-வைக்கும் அளவிற்கு, அறிவில் தன்னிகரற்றவராக விளங்கினார். ஸ்வயமாகவே (பிறரது உதவியின்றித் தாமாகவே) எந்த ஒரு விஷயத்தையும், உரிய முறையில் ஆய்ந்து, உடனடியாக அதைப் பற்றி பூரணமாகத் தெரிந்துகொண்டுவிடும் அளவிற்கு அவருக்கு அபாரமானதொரு புத்தி கூர்மை இருந்துவந்தது. பின்வரும் சம்பவங்களை இதற்குச் சான்றாகக் காட்டலாம்:

மடத்து வேத பாடசாலையில் ஒரு வித்யார்த்தியாக இருந்து வந்த போது, தமது குருநாதருடன் இருக்கும் தருணங்களில் குருநாதர் கூறும் சுலோகங்களுக்கு, உடனடியாகவும் மிக அழகாகவும் ஸ்ரீ ஸ்ரீநிவாசன் (ஆசார்யாள்) விளக்கங்களைக் கூறுவார். இந்த சுலோகங்கள் ஆசார்யாளுக்கு பரிச்சயமானவையாக இல்லாத போதும், அவருடைய மேதாவிலாஸத்தினால் அவற்றிற்கான நேரடி அர்த்தத்தினை சரிவரப் புரிந்து கொள்வது மட்டுமல்லாது, அவற்றால் உணர்த்தப்படும் பொருளையும் ஆசார்யாள் மிகத் துல்லியமாக எடுத்துக்கூறுவதை அவரது குருநாதர் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மிகவும் பாராட்டுவார். உதாரணமாக, ஒரு முறை,

''ஸூதே ஸூகரயுவதி: ஸுதசதமத்யந்ததுர்பகம் ஜடிதி |
கரிணீ சிராய ஸூதே ஸகல மஹீபாலலாலிதம் கலபம் ||''

{ஒரு பன்றியானது, நூற்றுக்கணக்கில் விதி கெட்ட குட்டிகளை விரைவில் ஈன்றெடுக்கின்றது. ஒரு பெண் யானை, மன்னர்கள் கொஞ்சி மகிழும் ஒரு குட்டியை நீண்ட கர்பத்திற்குப் பின் பெற்றெடுக்கின்றது.}

என்ற சுலோகத்தை குருநாதர் கூறி, தம்மைச் சுற்றி நின்ற வித்யார்த்திகளிடம் தாம் எதற்காக இந்த சுலோகத்தைக் கூறினார் என்பதை விளக்கிடும்படிக் கேட்டார். மற்ற மாணவர்கள் திகைத்து நின்றபோது, ஸ்ரீ ஸ்ரீநிவாசன், “ஒரு பெரிய பள்ளியானது நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கல்வியைக் கற்றுத்தரலாம். ஆனால், கற்றுத்தரப்பட்ட பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ளவேயில்லை என்றால், அந்தப் பள்ளி எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் வீணாகப் போய்விடும். ஒரு சிறிய பள்ளிக்கூடத்தில் ஒரே ஒரு மாணவன் மட்டும் இருக்கலாம். ஆயினும், அந்த மாணவன் புத்திசாலியாக இருந்து, கற்றுத்தருபவைகளை நன்கு கற்று, தனக்குக் கிடைத்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக்கொள்வானாகில், அவன் அந்தப் பள்ளிக்கு பெயரையும் புகழையும் ஈட்டித் தருவான்” என்று பதில் அளித்தார். அந்த சுலோகத்திற்கு நேரடி அர்த்தமானது வேறாக இருப்பினும், அதன் மூலம் உணர்த்தப்படும் பொருள் என்ன என்பதே குருநாதரின் கேள்வி. அதற்கு ஸ்ரீ ஸ்ரீநிவாசன் கூறிய இந்தப் பதிலால் குருநாதருக்குப் பெரும் திருப்தி உண்டாயிற்று. இம்மாதிரியாக, எத்தனையோ சுலோகங்களுக்கு, இந்த பதின்மூன்று வயது பாலகர், பண்டிதர்களும் திகைக்கும்படியாக, ஸர்வ ஸாதாரணமாக விளக்கம் கூறிவந்தார்.

பிறகு, ஸன்யாஸ ஆசிரமத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு, தமது தியானப் பயிற்சிகளைத் துவங்கினார் ஆசார்யாள். அதன் ஒவ்வொரு கட்டத்திலும், தமக்குத் தடங்கலாக இருந்த பல விஷயங்களைத் தமது கூரிய அறிவின் உதவியுடன் சிந்தித்துப் பார்த்து, அவற்றிற்கான தீர்வுகளைக் கண்டுபிடித்து நடைமுறைப்படுத்தி வந்தார். இது விஷயமாக அவர் தமது குருநாதரை தொந்தரவு செய்ததேயில்லை. ‘தியானத்தின் கால அளவைக் கட்டுப்படுத்துவது எப்படி?’, ‘(தியானத்திற்கென) எடுத்துக்கொண்ட தெய்வீக உருவின் முழு உருவையும் தியானம் செய்ய வேண்டும் என்றால் என்ன செய்வது?’, ‘இறைவனின் வடிவைத் தியானம் செய்கையில் எவ்வித பாவனையைக் கைக்கொண்டால், தியானத்தின் வலு கூடுகின்றது?’, ‘உருவ தியானத்தினை, உட்கார்ந்துள்ள போது மட்டும்தான் ஒருவர் செய்ய இயலுமா அல்லது, நடக்கும்போதும், படுத்திருக்கும்-

போதும்கூட தடையின்றி அவ்வுருவைத் தியானிக்க இயலுமா?' என்பதான பல விஷயங்களை, தாமாகவே ஆழ்ந்து யோசித்துப் பார்த்தும், சோதித்துப் பார்த்தும் ஆசார்யாள் கண்டறிந்தார்.

ஒரு நாள் மாலை, தமது ஆழ்நிலை தியானத்திலிருந்து ஆசார்யாள் மீண்ட சமயம், ஆசார்யாளின் முன் பார்வதியின் ஈசனான பரமேஸ்வரனே தோன்றி, அவரை மறுநாள் முதல் நிர்குண பரம்பொருளில் மனதை இருத்திடச் செய்யுமாறு கூறி மறைந்தார். இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்ன என்றால், "நிர்குண பரம்பொருளில் மனதை இருத்துவது என்றால் என்ன; அதை எப்படித் துவங்கி, செய்து, முடிக்க வேண்டும்; மனது அந்த பரம்பொருளில் நிலைத்துவிட்டதா என்பதை எப்படித் தெரிந்துகொள்வது" போன்ற எதையும் ஆசார்யாளுக்கு பரமேஸ்வரன் உபதேசிக்கவில்லை என்பதுதான்! மறு நாள் துவங்கி, தமது கூர்மதியின் உதவி கொண்டு, சாஸ்திரங்களின் அடிப்படையில், தீவிரமான ஆத்ம விசாரத்தினை மேற்கொண்டவராய், தமது நிர்குண தியானத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் தாமாகவே தீர்மானித்து, அது ஒவ்வொன்றிலும் விரைவாக வெற்றியும் பெற்று, ஒரே வாரத்தினில் தமது அக்ஞான இருளை அறவே அகற்றி நிர்குண பரம்பொருளில் ஒன்றிவிட்டார்! ஆசார்யாள் மேற்கொண்ட ஆணித்தரமான ஆத்ம விசாரத்தின் ஒரு பகுதியை கீழே காணலாம்:

"(உபநிஷத்துக்களின் கூற்றுப்படி) பிரம்மம் மாறுதலற்றது என்பதால், அது ஆகாசம் முதலிய பஞ்ச பூதங்களாக மாற்றமடைவது என்ற பேச்சிற்கே இடமில்லை. ஆகவே, ஆகாசமும் மற்ற பூதங்களும், பாலைவனத்தில் தோன்றும் கானல் நீரைப் போல, வெறும் தோற்றங்களாகத்தான் இருக்க முடியும். பிரம்மத்தைத் தவிர்த்து அவற்றிற்கு இருப்பு கிடையாது... பாரமார்த்திக ஸத்யமாகவும், தூய்மையான சைதன்யமாகவும், அனந்தமாகவும் உள்ள பிரம்மமானது எல்லா உயிர்களின் ஆத்மாவாகத் திகழ்கின்றது. உலகைப் போல் அது தோற்றமளித்தாலும், அது (உண்மையில்) இரண்டற்றது. எந்த வகையிலும் (எதனாலும்) பாதிக்கப்படாதது. சாஸ்திரங்களில் உபதேசிக்கப்படுவது போல், எல்லா உயிர்களின்

ஆத்மாவான அந்த பரம்பொருள்தான் நான். நான் முன்பும், இப்போதும், பின்பும் ஆத்மாவைத் தவிர வேறல்ல...''

பிற்காலத்தில், தாம் ஸ்ரீ சாரதா பீடத்தின் 35ம் ஜகத்குருவாகப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்பு, ஆசார்யாளின் மேதா விலாஸம் எண்ணற்ற பண்டிதர்களுக்கும், மற்றவர்கட்கும் பல விதங்களில் பயனளித்து வந்தது. தம்மிடம் பிரஸ்தாபிக்கப்படும் விஷயங்களில் அடங்கியுள்ள தர்ம-அதர்ம சூட்சுமங்களை ஆராய்ந்து அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதிலும், சாஸ்திர ரீதியான சர்ச்சைகளில் அனைவருக்கும் ஒத்துப்போகக்-கூடியதான தீர்வினைத் தருவதிலும், ஆன்மிக வாழ்வில் ஈடுபட்டு-வருவோருக்கு அவ்வப்போது உண்டாகிவரும் ஐயங்களைத் தீர்த்து-வைப்பதிலும், மனித குலத்திற்கு நன்மை தரும் காரியங்களைத் தீர்மானித்து அவற்றை நிகழ்த்துவதிலும், ஆசார்யாளின் இணையற்ற மேதா சக்தி பெரும் பங்காற்றியது!

பிருஹஸ்பதியையே தங்களது குருவாகப் பெற்ற தேவர்களுக்கும் எளிதில் கிட்டிடவியலாத நிர்குணப் பரம்பொருளின் ஞானத்தை, தமது மேதா சக்தியின் உதவியுடன், தாமே முயன்று, அதனை எளிதில் அடைந்தும்விட்டு, அதன் பின்பு, தமது வாழ்நாள் முழுவதிலும், பிரதிபலன் எதையும் நாடாமல், தமது அறிவினைப் பிறரது நன்மைக்-காகவே பயன்படுத்தி, எண்ணற்றோரை மேன்மையடையச் செய்த ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களை 'மதி நிர்ஜித கீஷ்பதயே நம:' என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் போற்றி மகிழ்வது மிகப் பொருத்தமான ஒன்றாகவே விளங்குகின்றது என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கத்தானியலுமோ!

## ॥ मोदिताखिलभक्तालिः ॥

# 73. மோதிதாகில-பக்தாலி:

(அனைத்து பக்தர்களையும் ஆனந்தப்படுத்துபவர்)

ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தமது பக்தர்களை ஆனந்தப்படுத்தி வந்த விதமே மிக அலாதி-யானதாகும்! முன்னரும், இந்த 108 திருநாம விளக்க வரிசையில், ஆசார்யாள் தமது பக்தர்களை எவ்விதங்களில் எல்லாம் அரவணைத்துப் பாதுகாத்து வந்தார் என்பதைப் பற்றிய சுவையான பலத் தகவல்களைக் கண்டிருக்கின்றோம். அவ்வரிசையில் 73வதாக இடம் பெற்றிருக்கும் "மோதிதாகில பக்தாலி:" எனும் இந்தத் திருநாமத்தின் வாயிலாகவும், ஆசார்ய பெருமான் தமது பக்த ஜனங்களை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கச் செய்தது பற்றிய மேலும் பல விவரங்களைக் காணுவோம்.

கண் மருத்துவத்தில் தனது மேற்படிப்பினை முடித்திருந்திருந்த மருத்துவர் ஸ்ரீ. ஏ.ஜி.ரமேஷ் அவர்கள், அதைப் பற்றி ஆசார்யாளிடம் தெரிவித்து, அவரது ஆசீர்வாதத்தினைப் பெற்றுச் செல்லும் அவாவில், அச்சமயத்தில் சென்னையில் ஆசார்யாள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார். தாம் முடித்திருக்கும் மருத்துவப் படிப்பைப் பற்றி அவர் ஆசார்யாளிடம் சொல்லி முடித்தவுடனே, ஆசார்யாள், "எனது கண்களைப் பரிசோதித்து நான் உபயோகிக்கும் கண்ணாடியை மாற்ற வேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டும் என இங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். நீயும் கண்ணுக்கான வைத்தி-யர்தானே. எனது கண்களை நீயே பரிசோதித்து விடேன்" எனக் கூறியதுடன், அந்தச் சோதனைக்காகத் தம்மை ஆயத்தப்-படுத்திக்கொள்ளத் துவங்கிவிட, ஸ்ரீ ரமேஷுக்கு ஆனந்தம் கரைபுரண்டோடியது. ஏனென்றால், ஆசார்யாளைத் தரிசனம் செய்து, தன்னுடைய கண் மருத்துவ சேவை நல்ல முறையில் நடந்தேறு-வதற்காக அவரது பூரண ஆசீர்வாதங்களைப் பெற்றுத் திரும்பு-வதற்காக மட்டுமே வந்திருந்தவருக்கு, எதிர்பாராதவிதமாக ஆசார்யாளுக்கே சேவையைச் செய்யும் பாக்கியம் கிட்டியதையும்,

அதையும் ஆசார்யாளே முன்வந்து தமக்கு அருளியதையும் கண்டவுடன் சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போகாமல் வேறு என்ன செய்வார் அவர்! ஆசார்யாளின் கண்களைப் பரிசோதித்துப் பார்த்த அவர், பார்வைத் திறனில் மாற்றம் கொண்ட கண்ணாடியொன்று ஆசார்யாளுக்குத் தேவைப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்-கொண்டார். ஸத்குரு ஸேவையாம் திருவமுதத்தினை இந்த அளவு பருகித் திளைத்த பின்பும்கூட அந்த மருத்துவருக்குத் திருப்தி உண்டாகவில்லை போலும்! புதுக் கண்ணாடியினையும் தானே சென்று, தன் செலவிலேயே வாங்கிவந்து ஆசார்யாளிடம் ஸமர்ப்பணம் செய்திடுவதான பாக்கியத்தையும் தனக்கு அருளிட வேண்டும் என அவர் வேண்டிக்கொள்ள, அதைக் கேட்டுச் சிரித்த ஆசார்யாள் அதையும் அவருக்கு அருளிடவே, அந்த இளம் மருத்துவர் ஆனந்தமாம் பெரும் வெள்ளத்தில் அமிழ்ந்து போனார் என்பதைக் கூறவும் வேண்டுமோ?!!

பெங்களூரைச் சேர்ந்த ஶ்ரீ பரமேஸ்வரா அவர்கள் தாம் எண்ணி எண்ணி மகிழக்கூடிய சம்பவம் ஒன்றினைக் கூறினார். ஒரு முறை, நவராத்திரி சமயம் சிருங்கேரிக்குச் சென்று ஆசார்யாளை தரிசனம் செய்தார் இவர். அச்சமயம் நவராத்திரி நாட்களுள் ஒரு குறிப்பிட்ட நாளானது தனது பிறந்த நாள் என அவர் ஆசார்யாளிடம் தெரிவித்து ஆசிகளைக் கோரினார். ஆசார்யாளும் அவரை ஆசீர்வதித்தார். பிறந்த தினத்தன்று காலையில் சிருங்கேரி விருந்தினர் விடுதியில் அவர் தங்கியிருந்த அறைக் கதவு தட்டப்பட்டது. திறந்த ஶ்ரீ பரமேஸ்வரா அங்கு மடத்து ஊழியர் ஒருவர் தனது கைகளில் எண்ணெய் நிரம்பிய கிண்ணம் ஒன்றினை ஏந்தியபடி நிற்பதைக் கண்டார். “இதை ஆசார்யாள் உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள்” எனக் கூறி, அதனை இவரிடம் கொடுத்துவிட்டு அந்த ஊழியர் சென்றுவிட்டார். ஶ்ரீ பரமேஸ்வராவிற்கு எதற்காக ஆசார்யாள் அதனைத் தனக்குக் கொடுத்தனுப்பினார் என்று புரியவில்லை. பின்னர், ஆசார்யாளை தரிசனம் செய்த அவர், அது பற்றி ஆசார்யாளிடம் கேட்ட போது, ஆசார்யாள், “பிறந்த தினத்தன்று எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும் என்பது நியமம் அல்லவா, அதுதான் அனுப்பினேன்” என்று கூறிட, ஶ்ரீ பரமேஸ்வராவின்

நெஞ்சம் ஆசார்யாளின் கருணை நிரம்பிய கரிசனத்தினை எண்ணி நெகிழ்ந்து போய்விட்டது. அந்தப் பயணத்தின் போது மட்டுமல்லாது, அதற்குப் பிறகு எந்த நவராத்திரி சமயத்தில் அவர் சிருங்கேரிக்கு வந்து, தனது பிறந்த நாளன்று அங்கே தங்க வேண்டி வந்தாலும், ஆசார்யாள் மறக்காமல் இவருக்கு காலையில் எண்ணெய்யை அனுப்புவதும் நடந்துவிடும்!

“ஆசார்யாளைச் சுற்றிலும் ஏராளமானோர் இருப்பார்களே, அதிக நேரம் அவரது சன்னிதியில் இருந்து அவரைத் தரிசிக்க இயலுமா?” எனும் ஏக்கத்துடன் பற்பல பக்தர்கள் சிருங்கேரிக்கு வருவதுண்டு. தங்களது விருப்பத்தினை வெளியே தாங்கள் காட்டிக்கொண்டிடாத-போதும்கூட, அதனை ஆசார்யாளே பூர்த்திசெய்துவைப்பதைப் பார்த்து அவர்கள் வியந்துபோவார்கள். அவர்கள் பின் வரிசையில் நின்றுகொண்டிருந்தால், அவர்களை மட்டும் குறிப்பாக அழைத்து முன்னே வந்து அமரும்படிக் கூறுவார்; சில சமயங்களில், அவர்கள் வரிசையில் சேர்ந்து, நகர்ந்து, தமதருகினில் வரும் சமயத்தில் அவர்களுடன் பேசிடத் துவங்கி அவர்களைத் தமது அருகில் கூடுதல் நேரம் இருந்திடும்படிச் செய்வார். தரிசனத்தை முடித்துத் திரும்பும் அந்தப் பக்தர்களின் மனத்தில் உற்சாகத் துள்ளல் நிறைந்திருக்கும்!

“இவ்வளவு வருடங்களுக்குப் பிறகு வருகிறோமே; ஆசார்யாளுக்கு நம்மைத் தெரியுமோ இல்லையோ” என்ற எண்ணத்துடன் வருவோர் சிலர். ஆனால், அவர்களே திகைத்துப் போகும் வகையில், அவர்களைப் பற்றியும், அவர்களது குடும்பத்திலுள்ள பெரியோரைப் பற்றியும் வெகு ஸஹஜமாக விசாரித்து அவர்களை சந்தோஷத்தில் திக்குமுக்காடச் செய்வார் ஆசார்யாள்! 1962ம் ஆண்டில் ஆசார்யாள் குற்றாலத்தில் முகாமிட்டிருந்த சமயம் ஒரு நாள் பக்தை ஒருவரை பூஜை சமயத்தில் இறைவனைத் துதித்துப் பாடுவதற்கு அனுமதித்தார். அதற்குப் பிறகு, சுமார் இருபது வருடங்களுக்குப் பின்பே, ஆசார்யாளை அந்தப் பக்தை தரிசித்தார். அப்போது, அந்தப் பெண்மணியின் அருகில் இருந்த அவரது குடும்பத்துப் பெரியவர்களிடம், ஆசார்யாள், “இருபது வருடங்களுக்கு முன்னால் குற்றாலத்திற்கு நான் விஜயம் செய்திருந்த சமயம் ஒரு நாள் சந்திரமௌளீசுவர பூஜையின் போது இவளைப் பாடும்படிக்

கூறினேன். இவளும் வெகு நேரம் மெய் மறந்து பாடிக் கொண்டிருந்தாள்...” எனக் குறிப்பிட, அந்தப் பக்தைக்கோ, ‘அத்தனை வருடங்களாயினும் தன்னைப் பற்றிய ஒரு விஷயம் ஆசார்யாளின் நினைவில் இருப்பதை எண்ணி’ மகிழ்ச்சி பொங்கியது!

॥ मर्यादापरिपालकः ॥

## 74. மர்யாதா-பரிபாலக:

(ஸம்பிரதாய விதிகளைச் செவ்வனே கடைப்பிடித்து வந்தவர்)

மஹான்கள் நன்னெறிகளுக்குட்பட்டே தங்களது வாழ்க்கையினை நடத்திவருவார்கள். ஆசார்யாள் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களும் எந்தத் தருணங்களில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்னும் நன்னடத்தை நெறிகளை நன்கு அறிந்தவராகத் திகழ்ந்தார். இதற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் இரு சம்பவங்களை நாம் காணலாம்:

1946 ஆம் வருடம் பெங்களூரைச் சேர்ந்தவரும், பரமாசார்யாளின் மிக நெருங்கிய சீடருமான ஸ்ரீ சுப்பராமய்யா ஒரு நாள் சிருங்கேரிக்கு வந்திருந்தார். பரமாசார்யாளை தரிசிக்க விரும்பிய அவரை ஆசார்யாளே பரமாசார்யாளின் அறைக்கு அழைத்துச் சென்றார். பரமாசார்யாள் தங்கியிருந்த அறையினுடைய கதவு திறந்தேதான் இருந்தது. ஆயினும், ஆசார்யாள் அப்படியே உள்ளே நுழைந்துவிட-வில்லை. முதலில், வாயிலின் ஒரு புறமாக நின்றுகொண்டு, சற்றே உட்புறமாக கண்களைச் செலுத்திய ஆசார்யாள், தமது குருநாதர் புத்தகம் ஒன்றை படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். ஆசார்யாள் தொடர்ந்து கதவின் அப்பக்கத்திலேயே நின்றிருந்தாரேயானால் பரமாசார்யாளால் ஆசார்யாளைப் பார்த்திருக்க முடியும்தான். அது பரமாசார்யாளுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது எனக் கருதிய ஆசார்யாள் அறையின் உள்ளே செல்லாதது மட்டுமின்றி, பரமாசார்யாளின் பார்வை விழும் பக்கத்திலும் நிற்காமல், அப்படியே

அக்கட்டிடத்தைச் சுற்றி வந்து கதவின் மறுபக்கத்திற்கு வந்தார். பிறகு தமது காலை சிறிது முன்னே வைத்து உடலைச் சற்றே வளைத்து உள்ளே சற்றே எட்டிப் பார்த்தார். இன்னும் பரமாசார்யாள் படித்துக் கொண்டிருப்பதையுணர்ந்து ஆசார்யாள் உடனே பின்னோக்கி நகர்ந்து விட்டார். பிறகு எவ்வித அசைவுமின்றி அமைதியாக அப்படியே நின்று கொண்டிருந்தார். சில நிமிடங்கள் கழித்து, முன் செய்த மாதிரியே மீண்டும் உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு, பிறகு பின்னே நகர்ந்து விட்டார். இப்படியே சுமார் 15 நிமிடங்கள் வரை நடந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில், தாம் படித்துக் கொண்டிருந்த பக்கத்தை முடித்துவிட்டு அடுத்த பக்கத்தைத் திருப்பும் முன் யதேச்சையாக பரமாசார்யாள் வாசற்புறம் பார்த்த போது ஆசார்யாள் அங்கிருப்பதைக் கண்டு, அவரை உள்ளே அழைத்தார். ஆசார்யாளும் மிகுந்த மரியாதையுடன் உள்ளே நுழைந்து, ஸ்ரீ சுப்பராமய்யா அவர்கள் தரிசனத்திற்காக வந்திருப்பதை பரமாசார்யாளிடம் தெரிவித்தார். பரமாசார்யாள் எழுந்து அறையைவிட்டு வெளியே வந்து ஸ்ரீ சுப்பராமய்யாவுடன் பேச ஆரம்பித்தார். அவர்கள் தனிமையில் உரையாடிக் கொள்ளட்டும் என்று கருதி ஆசார்யாளும் சற்று தொலைவிற்குச் சென்று நின்றுகொண்டார். சிறிது நேரம் கழிந்தது. அன்றைய தினம், பரமாசார்யாள் தமக்கு நடத்தவிருக்கும் வேதாந்த பாடத்திற்கான நேரம் நெருங்கியதும் அது நிமித்தமாக ஆசார்யாள், பரமாசார்யாளை அணுகினார். ஆசார்யாள் தம்மை நோக்கி வருவதைப் பார்த்த பரமாசார்யாள், ஸ்ரீ சுப்பராமய்யாவிடம், “குருநாதர் வருகிறார். நமஸ்காரம் செய்துகொள்” என்று கூறினார். பரமாசார்யாளின் உத்தரவுப்படி ஸ்ரீ சுப்பராமய்யாவும் ஆசார்யாளை நமஸ்கரித்தார். பிறகு ஆசார்யாளும் பரமாசார்யாளும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு ஆசார்யாள் குருவின் பார்வையிலிருந்து அகலும்வரை பின்னோக்கியே நடந்து சென்றார்.

மேற்கண்ட சம்பவத்தில் ஆசார்யாள் நடந்துகொண்ட விதங்கள் அனைத்தும் எவ்வாறு நன்னடத்தை நெறிமுறைகளுக்குட்பட்டுத் திகழ்கின்றன என்பதைக் காண முடிகின்றது. முதலில், குருவின் அறை திறந்தேயிருந்தாலும் குருவின் அனுமதியின்றி அறையினுள்

பிரவேசிக்கக் கூடாது எனும் நெறியினை அவர் காட்டினார். அடுத்து, குருநாதர் புத்தகத்தினை வாசித்துக் கொண்டிருக்கின்றார் என்று தெரிந்ததும் அதற்கு எவ்விதத்திலும் இடையூறாக இருந்திடக் கூடாது என்பதற்காக அவரது கண்ணில் படுமாறுகூட ஆசார்யாள் நின்றுகொள்ளவில்லை. எதிர்புறம் நின்றுகொண்டால் குருநாதர் கண்ணில் படாது நின்றுகொள்ளலாம். ஆனால், அப்படியே இரண்டு அடி எடுத்துவைத்து எதிர்புறத்திற்குச் சென்றிருக்கலாம். ஆனால், அப்படி வாசலின் குறுக்கே நடக்கும் பட்சத்தில், உள்ளே இருப்பவரின் கவனத்தினை வாசல் வெளிச்சத்தினில் ஏற்படும் அசைவானது ஈர்த்துவிடும். ஆகவே, ஆசார்யாள் அப்படிச் செய்யவில்லை. பின் பக்கமாகத் திரும்பிச் சென்று, அந்தக் கட்டிடத்-தினையே சுற்றிக்கொண்டு எதிர்புறத்தில் வந்து நின்றுகொண்டார். பிறகு, இறுதியில், பரமாசார்யாளிடம் பேசிவிட்டுத் திரும்புகையிலோ, அப்படியே எல்லோரும் செய்வது போல திரும்பி நடந்துசென்றிட-வில்லை ஆசார்யாள். குருவிற்கு முதுகைக் காட்டியவாறு நடந்து-சென்றிடக் கூடாது எனும் நன்னடத்தை நெறியினைப் பேணிடும் வகையில் ஆசார்யாள் அவ்வாறு நடந்து கொண்டார்.

சிருங்கேரியில், ஒரு சமயம், விடிவதற்கு வெகு நேரத்திற்கு முன்னதாக, தமது குருவான ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹா-ஸ்வாமிகளின் அறைக்கு வெளியே ஆசார்யாள் உட்கார்ந்து கொண்டிருப்பதை, மடத்தில் தங்கியிருந்த ஸன்னியாஸி ஒருவர் கண்டார். ஆசார்யாளைப் பார்த்தவுடனேயே ஆசார்யாள் இரவு முழுவதும் தூங்காமல் கண் விழித்திருந்தார் என்பதனை அந்த ஸன்னியாஸி புரிந்துகொண்டார். அதைப் பற்றி அவர் ஆசார்யாளிடம் விசாரிக்கும் போது, ஆசார்யாள் கூறியதாவது: "நமது குருநாதரின் அறைக்கு வெளியே இரவு நேரத்தில் எப்போதும் இருந்திடும் உதவியாளர் நேற்று இரவு பணிக்கு வரவில்லை. ஆகவே, இரவில், குருநாதருக்கு ஏதாவது தேவைப்பட்டால் அதைச் செய்து கொடுப்பதற்காக நான் இங்கு அமர்ந்து கொள்ள முடிவு செய்தேன்" என்று கூறினார். பீடத்திற்கான அடுத்த அதிபதி எனும் உயர்ந்த அந்தஸ்தினைப் பெற்றிருந்த ஆசார்யாளுக்கு, இரவில் கண்விழித்து, அப்படி ஒரு பணியினைச் செய்திடும் அவசியம் எதுவுமில்லை.

ஆசார்யாள் விரும்பியிருந்தால், அவர் வேறு எவரையாவது கூப்பிட்டு அப்பணியை ஒப்படைத்திருக்கலாம். அல்லது, அப்படி அந்தப் பணியில் தாமே ஈடுபடுவது என வந்துவிட்டாலும், பரமகுருநாதரின் அறைவாசலில் தங்குகின்ற மற்ற சிப்பந்திகளைப் போல் ஆசார்யாளும் அங்கே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்து விட்டு, பரமகுரு கூப்பிடும் சமயத்தில் மட்டும் விழித்துக் கொண்டு, குருவிற்கு வேண்டியதை செய்து கொடுத்திருந்திருக்கலாம். ஆனால், குருபக்திக்கு இலக்கணமாகத் திகழ்ந்த ஆசார்யாள் இவை எதையும் எண்ணிக்கூட பார்க்கவில்லை. தமது அசௌகரியம் எதையும் பொருட்படுத்தாது, தூக்கத்திற்கும் இடம் கொடாது, தமது குருநாதரின் அறை வாசலில் அப்படியே இரவு முழதும் அமர்ந்திருந்தார். குருவின் சேவை என்று வந்துவிட்டால், எம்மாதிரியான நெறிமுறைகளை ஒரு சீடரானவர் கடைப்பிடித்திட வேண்டும் என்பதற்கு மேற்கண்ட விஷயமே ஒரு சான்று.

௵❀௸

## ॥ योगिवन्द्यपदाम्भोजः ॥

## *75. யோகிவந்த்ய-பதாம்போஜ:*

*(யோகிகள் வணங்கிடும் தாமரைப்பாதர்)*

யோகத்தின் சிகரமாகவும், பிரம்மஞான ஜோதியாகவும் விளங்கிய ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் யோக மார்க்கத்தில் உள்ளவர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட ஆசார்ய சீலராகத் திகழ்ந்துவந்தார். ராஜயோகியான அவதூத பரப்ரஹ்மா, யோகினி ஆனந்தமயீ மா, மஹேஷ் யோகி, பீஹார் ஸ்கூல் ஆஃப் யோகாவின் ஸ்வாமி ஸத்யானந்த ஸரஸ்வதி போன்ற யோக மார்க்கத்தில் பிரசித்தி பெற்ற பற்பலரும் ஆசார்யாளின் விஷயத்தில் பெரும் மதிப்பினைக் கொண்டவர்களாய் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

1956ம் வருடம் பரப்ரஹ்மா எனும் பெயருடன் அவதூதர் ஒருவர் ஆசார்யாளைத் தரிசித்துச் செல்வதற்காக வட தேசத்திலிருந்து சிருங்கேரிக்கு வருகை புரிந்தார். வெட்டப்படாத நீண்ட நகங்களுடனும் முடியுடனும் அழுக்கு படிந்த உடலுடனும் காணப்பட்ட அவரை மன நிலை பாதிக்கப்பட்டவர் என்றே அனைவரும் கருதினர். ஆனால் ஆசார்யாளோ அவரை பிரம்ம ஞானமடைந்த ராஜயோகியென புரிந்துகொண்டு, அவரைத் தமது இருப்பிடத்திற்கு வரவேற்று அவருடன் உரையாடினார். அந்த மஹானுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென மடத்து அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார்.

மஹேஷ் யோகி அவர்கள் கடிதங்கள் மூலமாக ஆசார்யாளுடன் தமது தொடர்பினை வைத்துக்கொண்டு வந்ததுடன், பலமுறை நேரிலும் விஜயம் செய்து ஆசார்யாளை தரிசித்தார்.

வட இந்தியாவில் மிகவும் பிரஸித்தி பெற்ற யோகினியான ஆனந்த மயீ மா அவர்கள் ஆசார்யாளிடம் மிகுந்த பக்தி கொண்டவர். தமது ஆசிரமத்தில், ஆசார்யாளின் புனிதப் பாதுகைகளை வைத்து பூஜித்து வந்தவர் அவர். தங்களது ஆசிரமத்திற்கு வருகை தந்தருளிட வேண்டும் என பலமுறை அவர் ஆசார்யாளிடம் பிரார்த்தித்துக்கொண்டார் அவர். 1982ல் ஆசார்யாள் ஹரித்வாருக்கு விஜயம் செய்தபோது, அவர்களது ஆசிரமத்திற்கு விஜயம் செய்து அங்கு சில நாட்கள் ஆசார்யாள் தங்கியருளினார். ஶ்ரீ H.C.விஸ்வேஸ்வரய்யா அவர்கள் விவரித்த பின்வரும் சம்பவமானது, ஆனந்தமயி மா அவர்களும் அவரது பக்தர்களும் ஆசார்யாளின் விஷயத்தில் எப்பேற்பட்டதோர் உயர்ந்த மரியாதையினை வைத்திருந்தார்கள் என்பதனை விளக்குகின்றது: "ஒருமுறை நான் ஆசார்யாளின் முன்னாள் காரியதரிசியான ஶ்ரீ C.V. கிரிதர சாஸ்திரி அவர்களை மா ஆனந்தமயி ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கு இருந்தவர்கள் எங்களிடம் மா ஆனந்தமயி அவர்கள் ஆசார்யாளின் புனிதப் பாதுகைகளை பிரத்தியேகமான அறை ஒன்றினில் வைத்து அவற்றை விசேஷமாக பூஜித்து, பற்பல விஷயங்களில் ஆசார்யாளின் அருளாசிகளைப் பிரார்த்தித்துப் பெற்றுக்கொண்ட சம்பவங்கள் பலவற்றினை விவரித்தனர். நாங்கள் இருவரும் அந்த

அறைக்குள் சென்றிட வேண்டும் எனும் எங்களது விருப்பத்தினை அவர்களிடம் தெரிவித்தோம். அதற்கு அவர்கள் எங்களை முதலில் கங்கையில் நீராடிவிட்டு, பிறகு திரும்ப வந்து மீண்டும் அந்த ஆசிரமத்திலும் நீராடிவிட்டு பிறகே அந்த புனிதமான அறைக்குள் செல்ல வேண்டும் என்று கூறினார்கள். மேலும், நாங்கள் இருவரும் சிருங்கேரி மடத்தினைச் சேர்ந்தவர்கள் என்பதாலேயே எங்களை பெரும் மரியாதைகளுடன் உபசரித்தார்கள். ஆசார்யாள் விஷயத்தில் வட இந்திய ஸாதுக்கள் வைத்திருந்த மரியாதை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதற்கு அதுவே சான்று.''

*1967ல் தமது பீஹார் மாநில யாத்திரையின் சமயம், ஆசார்யாள் ஸ்வாமி ஸத்யானந்த ஸரஸ்வதியின் அழைப்பினையேற்று மோங்கிரில் உள்ள அவரது பீஹார் ஸ்கூல் ஆஃப் யோகாவிற்கு விஜயம் செய்து, யோக ஸாதகர்களை ஆசீர்வதித்ததுடன், அவர்களுக்கு உபதேசமும் செய்தருளினார்.*

*ஸ்ரீ சாரதா பீடத்தின் 33வது பீடாதிபதியான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளிடம் 'கவியோகி' என்ற பட்டத்தினைப் பெற்றவரும், 34வது பீடாதிபதியாகிய அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளாலும் அனுக்ரஹிக்கப் பெற்று ஆன்மிக சாதனைகளில் சிறந்து விளங்கியவரும், துறவியுமான ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், தமது வாழ்நாளிலேயே 35வது பீடாதிபதியான ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளையும் தரிசிக்க முடிந்ததையும், அவரது முன்னிலையில் ஒரு சில வார்த்தைகள் பேசிடும் வாய்ப்புக் கிட்டியதையும் தமது பெரும் பாக்கியமாகக் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ சங்கர கிருபா/மலர்-4/இதழ்-4). நமது ஆசார்யாளைப் போற்றி அவர் இயற்றிய செய்யுள் ஒன்றினையும் கீழே காணலாம்:*

''அந்தண மரபினுக்கும் அருமறைப் பண்பினுக்கும்
சந்ததம் இன்ப மோங்கத் தருண மா மழைபோலிங்கே
வந்தனன் வித்யா தீர்த்த மாமுனிவரன் என் அண்ணல்
முந்தவன் சேவை செய்ய முந்துமின் உலகமெல்லாம்.''

## ॥ योगमार्गविशारदः ॥

# 76. யோகமார்க-விசாரத:

(யோக மார்க்கத்தில் தலைசிறந்தவர்)

மனதின் ஓட்டத்தை அறவே தடுத்து அதனை ஒருநிலைப்படுத்தி நிர்குண பிரம்மத்தில் கலந்திடச் செய்துவிடுவதே யோக மார்க்கத்த்தின் இலட்சியம். தமது சிற்றிளம் வயதிலேயே இதனைச் சாதித்துக் காட்டியவர் ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த சங்கராசார்ய மஹாஸ்வாமிகள் அவர்கள். பதஞ்சலி முனிவர் காட்டிடும் அஷ்டாங்க யோகத்தினை தமது பிரதான மார்க்கத்மாக கொண்டிருந்தாலும், கர்மயோகம், பக்தியோகம் மற்றும் ஞானயோகம் போன்ற பல்வேறு யோக மார்க்கத் நுணுக்கங்களிலும் அந்தந்த மார்க்கத்த்தின் விற்பன்னர்களே வியந்து, போற்றி, வணங்குமளவிற்கு அபாரமான தேர்ச்சியினைப் பெற்றிருந்தவர் ஆசார்யப் பெருமான். இவ்வனைத்து மார்க்கத்ங்களிலும் தமது ஆலோசனைகளை நாடி வந்த அனைவருக்கும் உரிய வழிகாட்டுதலைக் கருணையுடன் அருளிவந்தார் அவர்! இதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் சம்பவங்களைக் காணலாம்.

துறவறத்தில் மிகவும் முனைப்புடன் ஈடுபட்டுவந்தபோதிலும், காம வசப்படும் மனத்தினை அடக்கும் வழியறியாது வருந்திய வட இந்திய பைராகிகள் இருவர் சிருங்கேரிக்கு வந்து ஆசார்யாளைத் தரிசித்து அவரது வழிகாட்டுதலை வேண்டினர். அவர்கள்பால் கருணை கொண்ட ஆசார்யாள், “நீங்கள் இருவரும் சாரதாம்பாளின் சன்னிதிக்குச் சென்று அமர்ந்து பக்தி சிரத்தையுடன் அம்பாளைத் தரிசித்து, மனப்பூர்வமாக அம்பாளின் அருளைப் பிரார்த்தித்துக் கொண்டுவிட்டுப் புறப்படுங்கள். அதன் பிறகு, எந்த ஒரு பெண்ணைப் பார்த்தும் உங்கள் மனது காம வசப்பட்டால், ‘இந்தப் பெண் உண்மையில் அம்பாளின் உருவமே’ என்ற எண்ணத்தை உருவாக்கிக் கொண்டு, ‘எங்களது காம எண்ணங்களைப் போக்கியருள்வாயாக’ என்று அம்பாளிடம் உளமாரப் பிரார்த்திக்கத் துவங்குங்கள்” என அவர்களுக்கு உபதேசித்தருளினார். ஆசார்யாளின் உபதேசத்தினை

மிகுந்த சிரத்தையுடன் கடைப்பிடித்திடத் துவங்கிய இருவருக்கும் விரைவிலேயே பலன் கிட்டிவிட்டது!

பக்தி யோகத்தில் ஈடுபட்டு வந்த மற்றொரு சீடர், “காயத்ரி ஜபத்தில் நான் ஈடுபட்டிடும் போது காயத்ரி தேவியின் முழு உருவத்தினையும் மனத்தில் நிறுத்திடுவது கடினமானதாக உள்ளது” என ஆசார்யாளிடம் தெரிவித்து அவரது வழிகாட்டுதலை வேண்டிட, ஆசார்யாளும், “முழு உருவத்தினையும் தியானம் செய்வது உனக்குக் கடினம்தான்! மாறாக, காயத்ரி தேவியின் உருவப்படத்தை உன் முன்னால் வைத்துக் கொண்டு அதனைப் பார்த்தபடியே, அம்பாள் என் முன்னே வீற்றிருக்கின்றாள் எனும் பாவனையுடன் இனி ஜபம் செய்துவா” என உபதேசித்தருளினார். அதன்படியே முயற்சி செய்யத் துவங்கிய அச்சீடர் மிக விரைவிலேயே பக்தி யோகத்தில் பெரும் முன்னேற்றத்தினை அடைந்து விட்டார்!

‘ப்ருதிவியை (மண்ணை) நீரில் கரைத்து, (அம்மாதிரியே) நீரினை நெருப்பிலும், நெருப்பினை வாயுவிலும், வாயுவை ஆகாசத்திலும், ஆகாசத்தினை அவ்யக்தத்திலும், அவ்யக்தத்தை ஆத்மாவிலும் கரைத்திட வேண்டும்’ என்னும் ஞானயோக ஸாதனை ஒன்றின் பொருளை அறிய விரும்பிய சீடர் ஒருவருக்கு அதனை எளிமையான முறையில் ஆசார்யாள் ஒரு சமயம் விளக்கியருளினார்: “எப்படி ஒரு பானைக்கு அதனுடைய மூலப் பொருளான களிமண்ணிலிருந்து வேறுபட்டதாய் ஓர் இருப்பானது இல்லையோ, அப்படியே, இந்தப் பூமிக்கும் (ப்ருதிவி) அதனுடைய மூலப் பொருளாகிய நீரைத் தவிர்த்துத் தனித்த இருப்பு எதுவும் கிடையாது. இப்படி விசாரம் செய்வதே (எண்ணிப் பார்ப்பதே) ப்ருதிவியை நீரில் கரைப்பது என்பதன் பொருள். இதே ரீதியில் அவ்யக்தம் வரையிலான மற்றவற்றிலும் விசாரம் செய்துவர வேண்டும். இறுதியில், எப்படி ஒரு கயிற்றில் கற்பிக்கப்படும் பாம்பிற்குக் கயிற்றைத் தவிர வேறு இருப்புக் கிடையாதோ அப்படியே இந்த அவ்யக்தத்திற்குமே ஆத்மாவை விட்டுத் தனித்த இருப்பானதாக வேறு எதுவும் இருந்திட முடியாது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இறுதியில், ஆத்மா மட்டுமேதான் மிஞ்சும். இதை வேறு எதிலும் கரைத்திட முடியாது! ‘அந்த ஆத்மாதான் நான்’ என்று ஒருவன் தியானித்திடத் துவங்க

வேண்டும்.'' தமது மனதிலிருந்த சந்தேகத்தினைத் தீர்ப்பதான விளக்கத்தினைத் தாமாகவே ஆசார்யாள் அருளிவிட்டதைக் கண்ட அந்தச் சீடருக்கு மிகவும் ஆனந்தமாகிவிட்டது.

தியான யோகத்தைப் பயிற்சி செய்துவந்த ஸாதகர் ஒருவர் ஒரு நாள் ஆசார்யாளிடம் வந்து, தமக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினை ஒன்றிற்கு உரிய தீர்வினைத் தந்தருளுமாறு வேண்டிக் கொண்டார்: ``நான் தியானத்தைத் துவங்கிய சில நிமிடங்களுக்குள்ளாகவே தலை மிகவும் கனக்கத் துவங்கி, வலி ஆரம்பித்து, இறுதியில் மிகக் கடுமையான தலைவலியில் முடிந்து விடுகிறது.'' அதைக் கவனமாகக் கேட்டுக்கொண்ட ஆசார்யாள் அதற்கு அளித்த தீர்வானது அந்த ஸாதகரை ஆச்சரியப்படச் செய்தது! ஆசார்யாள் கூறியதாவது: ``இந்தப் பிரச்சினை ஒரு வாரத்திற்குள் தானாகவே மறைந்துவிடும். அது வரையில் தவறிக்கூட உன்னுடைய பார்வையை மூக்கின் நுனியை நோக்கியோ அல்லது புருவங்களின் நடுவிலோ செலுத்த வேண்டாம். மேலும், உன்னுடைய இஷ்ட தேவதையை உன்னுடைய இதயத்தில் இருப்பதாக பாவிக்க வேண்டாம்; வெளியே உனக்கு முன்னால் இருப்பதாக பாவனை செய்துகொள். ஒரு வாரம் கழித்து, நீ வழக்கமாகச் செய்து வந்த பயிற்சிக்கே திரும்பி விடலாம்.'' ஆசார்யாள் குறிப்பிட்ட அந்த காலக் கெடு முடிந்தது; அந்த ஸாதகருடைய பிரச்சினையும் தீர்ந்து விட்டது!

தத்தம் ஆன்மிக மார்க்கத்ங்களில் ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்காக ஆசார்யாளின் இருப்பிடம் நாடி ஸாதகர்கள் வருவதும், ஐயப்பாடுகளைத் தீர்த்துக்கொண்டு வெகுத் திருப்தியுடன் திரும்புவதும் வழக்கமாக நடைபெறும் நிகழ்ச்சிகளாகவே ஆகிவிட்-டிருந்தன!

## ॥ राजाधिराजसम्पूज्यः ॥

# 77. ராஜாதிராஜ-ஸம்பூஜ்ய:

(பேரரசர்களால் பூஜிக்கப்படுபவர்)

ஸ்ரீ சங்கரபகவத்பாதரில் துவங்கி ஸ்ரீ சாரதா பீடத்தின் குரு பரம்பரையில் இடம் பெற்றுவந்துள்ள ஆசார்ய மஹாஸ்வாமிகள் அனைவரும் அந்தந்த காலத்திய அரசர்களால் சிறப்பாகப் போற்றப்-பட்டு வந்திருப்பதை சரித்திரக் குறிப்புக்கள் நமக்கு எடுத்துரைக்-கின்றன. இந்த வகையினிலே, ஸத்குருவாம் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களும் மைசூர் மஹாராஜா, திருவாங்கூர் மஹாராஜா, நேபாள மஹாராஜா, காசி மஹாராஜா, இராமநாதபுர சேதுபதி, குவாலியர் மன்னர் போன்ற பற்பல மன்னர்களால் பூஜிக்கப் பெற்றவராகவே விளங்கிவந்தார். இந்த இராஜ குடும்பத்தினர் சிருங்கேரிக்கு விஜயம் செய்து ஆசார்யாளைத் தரிசித்தது மட்டுமல்லாது, ஆசார்யாள் தமது விஜய யாத்திரைகளை மேற்கொண்ட சமயங்களிலெல்லாம் ஸத்குருநாதரை ஸகலவிதமான மரியாதைகளுடன் தங்களது அரண்மனைக்கு அழைத்துச் சென்று பூஜித்து, அவரது அருளைப் பெற்றுவந்தனர்.

ஆசார்யாள் சம்பந்தப்பட்ட விஷயங்களில், மைசூர் மஹாராஜாவான ஸ்ரீ ஜெயசாம்ராஜ வாடியார் மிகுந்த ஆர்வத்துடனும் பக்தியுடனும் ஈடுபட்டு வந்தார். உதாரணமாக, ஆசார்யாளால் வடிவமைக்கப்பட்டு அவரது மேற்பார்வையில் சிருங்கேரியில், பீடத்தின் வளாகத்தினுள் கட்டப்பட்ட "ஸ்ரீ சங்கர கிருபா" விருந்தினர் விடுதி திறப்பு விழா, ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்துக் கும்பாபிஷேக வைபவம், கோடி குங்குமார்ச்சனை மற்றும் அதிருத்ர ஹோமம் போன்றவற்றில் அவர் கலந்துகொண்டமையைக் குறிப்பிடலாம்.

1966ம் வருடம் அக்டோபர் மாதத்தில் ஆசார்யாள் முதன்முதலில் குவாலியர் நகருக்கு விஜயம் செய்தபோது, அரச குடும்பத்தினரால் அவருக்கு அளிக்கப்பட்ட பிரம்மாண்டமான வரவேற்பும், உபசரிப்பும் இன்றளவும் பேசப்பட்டுவருகின்ற நிகழ்ச்சியாகும்! இராஜமாதாவின் நேரடிப் பார்வையில் 100 உறுப்பினர்களைக் கொண்ட "ஸ்வாகத

ஸமிதி" (வரவேற்புக் குழு) ஒன்று அமைக்கப்பட்டு, மஹாராஜாவே அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆசார்யாளைப் பல்லக்கில் இருத்தி, அதன் முன்னே மூன்று யானைகள் செல்ல, பல்லக்கின் பின்னே 12 குதிரைகளும் மற்றும் 12 பசுக்களும் அணிவகுத்திட, பெரும் வரிசையில் சேவகர்களும், வரவேற்புக் குழு உறுப்பினர்களும், அரச குடும்பத்தினரும் நடந்துவர, ஆசார்யாள் அரண்மனையை வந்தடைந்தார். ஆசார்யாளைத் தரிசித்து மகிழ்வதற்காக அங்கு சுமார் 40,000 பக்தர்கள் கூடியிருக்க, ஸ்வாகத-பத்திரிகையை (வரவேற்பு-உரை) மஹாராஜாவே வாசித்தார். முன்னதாக, குவாலியர் இராஜமாதாவின் வேண்டுகோளினை ஏற்று, உஜ்ஜயினித் திருநகரில் சிப்ரா நதிக்கரையில், அவர்களது பராமரிப்பில் இருந்துவந்த 'கலியாடெ' அரண்மனையில் முகாமிட்டுத் தமது 1966ம் வருடத்தைய சாதுர்மாஸ்ய விரதத்தினை ஆசார்யாள் மேற்கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விஷயமாகும்.

நேபாள மன்னரின் பக்தி பூர்வமான அழைப்பையேற்ற ஆசார்யாள் 1967ம் ஆண்டு மார்ச் மாதம் நேபாளத்திற்கு விஜயம் செய்தார். ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரருக்குப் பிறகு நேபாளத்திற்கு விஜயம் செய்யும் ஜகத்குரு என்பதால் ஆசார்யாளுக்கு கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. சிவராத்திரி பூஜையினை காத்மண்டுவில் ஆசார்யாள் நடத்திடுவதைக் காணும் மஹாபாக்கியம் நேபாள பக்த ஜனங்களுக்குக் கிட்டியது. நேபாள அரசரின் உத்தரவின்பேரில், ஆசார்யாளின் நேபாள விஜய விவரங்களைத் தாங்கிய பெரிய அளவிலான நினைவுத் தகடு ஒன்றும் பசுபதிநாத் ஆலய நுழைவு வாயிலில் பொறிக்கப்பட்டது!

இராமநாதபுர ஸமஸ்தானத்து மன்னர்களான ஸ்ரீ ஷண்முகராஜேஸ்வர சேதுபதி மற்றும் அவரது குமாரர் ஸ்ரீ இராமநாத சேதுபதி ஆகியோர் ஆசார்யாளின் பரம பக்தர்களாக இருந்துவந்தனர்! 1975ல் இராமேஸ்வர ஸ்ரீ இராமநாதஸ்வாமியின் ஆலயத்துக் கும்பாபிஷேகம் ஆசார்யாளின் திருக்கரங்களால்தான் நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானமாக இருந்த இராமநாத சேதுபதியின் பக்தியை அங்கீகரிக்கும் வகையில் ஆசார்யாள் அந்த ஆலயத்துக் கும்பா-பிஷேகத்தினைச் சிறப்பாக நடத்தியருளினார். பின்பு, ஆசார்யாளின்

ஷஷ்டியப்த பூர்த்தி விழா 1977ல் சென்னையில் நிகழ்ந்த போது, இராமநாத சேதுபதி அவர்களும் வந்து அவ்வைபவத்தில் கலந்து-கொண்டு ஆசார்யாளின் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

திருவாங்கூர் மஹாராஜா, காசி மஹாராஜா, செட்டிநாட்டு அரசர்கள், இராஜா லிம்பேகர் போன்ற எண்ணற்ற அரசப் பிரமுகர்களும் ஆசார்யாளின் ஸனாதன தர்மப் பணிகளில் பக்தி, சிரத்தைகளுடன் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுவந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது!

## ॥ रागद्वेषविवर्जितः ॥

## 78. ராகத்வேஷ-விவர்ஜித:

(விருப்பு-வெறுப்புக்களற்றவர்)

தனக்கு மகிழ்ச்சியைத் தரவல்ல விஷயங்களில் விருப்பமும், தனக்குத் துக்கத்தைத் தந்திடவல்ல விஷயங்களில் வெறுப்பும் இயற்கையாகவே அனைவரிடமும் காணப்படும் குணங்கள்தான். ஆயினும், சுய நலத்தைத் துறந்து, உலகத்தின் நலத்தை மட்டுமே மனதில் கொண்டு வாழ்ந்து வரும் மஹான்கள் இந்த இயற்கை நியதியில் ஆட்படுவதில்லை! தமக்கென்று பிரத்தியேகமான விருப்பு-வெறுப்பு என்றபடியான எதையும் அவர்கள் வைத்துக்கொள்-வதில்லை. இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகவே விளங்கி-வந்தார் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்.

ஆசார்யாளின் அருளினால் யோக ஸித்தி கைகூடப்பெற்று, இவ்வுலக வாழ்வு வீணே எனும் அனுபவ பூர்வமான தீர்மானத்திற்கு வந்துவிட்ட சீடர் ஒருவர் ஒரு சமயம் ஆசார்யாளிடம், "மரணம் சம்பவித்து உடல் பிரியும் காலம் வரை நிர்விகல்ப ஸமாதியிலேயே நான் அமர்ந்துவிட விரும்புகின்றேன். இது விஷயத்தில் எனக்கு அனுமதியளித்து அருளிட வேண்டும்" எனப் பிரார்த்தித்துக் கொண்டார். அச்சமயம் அவருக்கு ஆசார்யாள் அளித்தருளிய பதிலானது மனிதராய்ப் பிறந்த அனைவரும் தத்தம் மனத்திலிருத்திச் செயல்படவேண்டிய ஒன்றாகும்:

“வாழ்வோ, சாவோ, இந்த இரண்டிலுமே நமக்கு விருப்பம் இருத்தல் கூடாது. தனது எஜமானனின் கட்டளையை எதிர்நோக்கியவண்ணம் இருக்கின்ற ஒரு பணியாளனைப் போல் நாம் நம் வாழ்க்கையை நடத்தி வர வேண்டும்.” விருப்பு-வெறுப்பு எனும் இவ்விரண்டுமே பந்த காரணிகள் என்பதால், அவை இரண்டுமே இல்லாத நிலையில் வாழ்ந்து வருவதே உத்தமம் எனும் உயர்ந்ததொரு குறிக்கோளுடன் ஆசார்யாள் வாழ்ந்து வந்ததையே அவருடைய (மேற்கண்ட) பதில் காட்டுகின்றது அல்லவா!

ஆசார்யாள் எந்த விஷயத்திற்கும் ஆசைப்பட்டதில்லை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக பின்வரும் சம்பவத்தினைக் கூறலாம்.

ஒரு சமயம், ஸ்ரீ ராஜா வேங்கட ராவ் லிம்பேகர் அவர்கள் ஹைதராபாத் நகரத்தில் நல்லகுண்டா பகுதியில் தமக்குச் சொந்தமான நிலம் ஒன்றை ஆசார்யாளுக்குத் தக்ஷிணையாக அளிக்க விரும்பினார். அவர் ஆசார்யாளிடம், “இந்த நிலத்தை நான் ஆசார்யாளுக்கு அளிக்க விரும்புகிறேன். என்றைக்காவது சிருங்கேரி மடத்திற்கு கஷ்டம் ஏற்பட்டாலோ அல்லது ஆசார்யாளுக்கு சிருங்கேரியில் ஏதாவது தொல்லைகள் வந்தாலோ, ஆசார்யாள் கவலைப்பட வேண்டி இருக்காது. இந்த இடத்திற்கு வந்து விடலாம்” என்று கூறினார். ஆசார்யாள் அவரிடம், “நான் ஒரு ஸந்யாஸி; எனக்கென்று எதுவும் சொந்தமாக வைத்துக் கொள்ளக் கூடாது என்பது மட்டுமல்ல, எனக்கு அவ்வாறு வைத்துக் கொள்வதற்குச் சிறிதும் இஷ்டம் இல்லை. சாஸ்திரங்கள் பரமஹம்ஸ ஸந்யாஸி எப்படி இருக்க வேண்டும் என்று கூறுகின்றனவோ, அப்படி இருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரும். நீங்கள் என் மேல் வைத்திருக்கும் அன்பும், அக்கறையும் என்னை மகிழ்விக்கின்றன. ஆனால், எனக்கு நிலத்தை அன்பளிக்கும் எண்ணத்தை கைவிடுங்கள்...” என்று கூறினார்.

அத்வைதக் கொள்கையில் அசையாத நம்பிக்கை உடையவராயினும், அக்கொள்கையினைத் தூற்றுபவர்கள் விஷயத்தில் ஆசார்யாள் என்றுமே வெறுப்பினைக் கொண்டதில்லை! ஒருவர் பண்டிதர் என்பதால் அவர் விஷயத்தில் விருப்பினையும், ஒருவர் படிப்பறி-

வற்றவர் என்பதால் அவர் விஷயத்தில் வெறுப்பினையும் ஆசார்யாள் என்றும் பாராட்டியதில்லை. அனைவரிடத்திலும் ஒரே மாதிரியான அன்பினையே காட்டிவந்தவர் அவர். உடலைத் தீவிரமான நோய்கள் தாக்கிய சமயங்களிலும்கூட, எந்த மருத்துவ வசதிகளையும் மருந்துகளையும் விரும்பியதேயில்லை அவர். தம்மை வெறுக்கின்-றார்கள் என்பதால் எவரிடத்திலும் வெறுப்பினை உமிழ்ந்ததேயில்லை அவர். தமக்கு இன்னல் இழைத்தவர்கள் மீண்டும் தம்மிடம் வந்து தமது மன்னிப்பினைக் கோரிய சமயங்களிலெல்லாம் உடனடியாக அவர்களை மன்னித்து, மனமுவந்து மீண்டும் அவர்களை ஏற்றுக்-கொண்டவர் அவர்.

ராகத்வேஷங்கள் இல்லாதிருக்கப்பட்டபடி வாழ்வது என்றால் என்ன என்பதற்கு இலக்கணமாகவே ஜகத்குருவாம் ஶ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களது உலக வாழ்க்கை அமைந்திருந்தது என்றால் அதில் மிகையேதும் இருக்கவியலாது!

## ॥ रुद्राक्षभूषितग्रीवः ॥

# 79. ருத்ராக்ஷ-பூஷித-க்ரீவ:

*(ருத்ராக்ஷ மாலையணிந்த கழுத்தினர்)*

காலாக்னி ருத்ரனின் அக்ஷத்திலிருந்து (கண்ணிலிருந்து) வெளிவந்த நீர்த்துளிகள் பூமியில் வீழ்ந்தபொழுது அவற்றிலிருந்து தோன்றிய-வையே ருத்ராக்ஷ மரங்கள் என்று ருத்ராக்ஷ ஜாபால உபநிஷத்து விளக்குகின்றது. அந்தத் தெய்வீக மரங்களிலிருந்து உண்டாகிடும் ருத்ராக்ஷங்கள் சிவனின் அம்சமாகவே கருதப்படுகின்றன.

ஸத்குரு ஶ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் தமது அழகிய கழுத்தினிலே, அளவில் பெரியதும், மிகக் கம்பீரமாகக் காட்சியளிப்பதுமான ருத்ராக்ஷ மாலை ஒன்றினை அணிந்திருப்பார். ஏக (ஒரு) முக ருத்ராக்ஷ மணிகளைக் கொண்ட அம்மாலையானது நேபாள மன்னர்களால் தங்களது ராஜகுருக்களான ஶ்ரீ சாரதா பீட

குருநாதர்களுக்குத் தங்களது காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்படுவது எனவும் கூறப்படுவதுண்டு. அம்மாலையினை அணிந்தபடி, ஒளி-மயமாய் ஆசார்யாள் சிவபூஜையில் அமர்ந்திருப்பதைக் காணவும் கண் கோடி வேண்டும் என்றால் அது மிகையாகாது. ருத்ராக்ஷ பூஷிதக்ரீவராய் அவரைத் தியானிக்கும் பக்தர்கள் ஏராளம் பேர் உண்டு.

சிவஸ்வரூபியாம் ஆசார்யாளின் கரங்களிலிருந்து ருத்ராக்ஷ மாலையினைப் பெற்றுக்கொண்டால் அது அந்த சிவனிடமிருந்தே பெற்றுக் கொள்வதற்குச் சமமாகும் என்பதுதான் பக்தர்களின் தீர்மானமாகவிருந்தது. ஒரு சமயம், உபன்யாஸகர் ஒருவர் 'ஆசார்யாளினால் அருளித் தரப்பட்ட ருத்ராக்ஷ மாலைகள் பல-வற்றினைத் தமது கழுத்தில் அணிந்துகொண்டு உபன்யாசங்களைச் செய்திட வேண்டும்' எனும் ஆசையில் சிருங்கேரிக்கு வந்திருந்தார். குருநாதர் என்ன நினைத்துக்கொள்வாரோ எனும் ஐயத்தில் அவர் தன்னுடைய ஆவலை ஆசார்யாளிடம் வெளியிடவே இல்லை. ஆசார்யாளின் முன்னிலையில் உபன்யாசத்தினைச் செய்து முடித்தார் அவர். அச்சமயம் தமது உதவியாளரை அழைத்து ஆசார்யாள் அவரிடம் ஏதோ கூறிட, உள்ளே சென்ற உதவியாளர் ஒரு தட்டு நிறைய ருத்ராக்ஷ மாலைகளை எடுத்துவர, அவையனைத்தையும் குருநாதர் அந்த உபன்யாசகருக்கே ஆசீர்வதித்து அளித்திட, மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனார் அந்த உபன்யாசகர்!

பக்தர்களின் வேண்டுகோளையேற்று அவர்கள் கொண்டுவரும் ருத்ராக்ஷ ஜப மாலைகளை ஆசார்யாள் தமது திவ்விய கரங்களால் தொட்டு ஆசீர்வதித்து அவர்களுக்கு அளிப்பதுண்டு. ஒரு சமயம் சீடர் ஒருவர் ஆசார்யாளிடம், ''எனது ஜபத்திற்காக ருத்ராக்ஷ மாலை ஒன்றை ஆசார்யாளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்'' எனத் தமது விருப்பத்தைச் சமர்ப்பித்துக் கொண்டார். அது விஷயத்தில் அவர் தன்னுடன் ருத்ராக்ஷ மாலை எதையும் கொண்டு சென்று ஆசார்யாளிடம் சமர்ப்பிக்கவில்லை. ஆயினும், ஆசார்யாள் அதைச் சிறிதும் பொருட்படுத்தாது, ''அதற்கென்ன, நான் உனக்குத் தருகிறேன்'' எனக் கூறி, எழுந்து தமது அறைக்குள் சென்றார். பிறகு சிறிது நேரம் கழித்து வெளியில்

*வந்த அவரது கரங்களில் இரு ருத்ராக்ஷ மாலைகள் இருந்தன. சீடரிடம் அவர் கூறினார்: "ஒரு மாலையில் 30 மணிகளும், மற்றொன்றில் 24 மணிகளும் இருக்கின்றன. இவை தவிர மஹாமேரு மணியும் ஒன்றில் இருக்கின்றது. நான் இப்போதைக்கு இவை இரண்டையும் சேர்த்து ஒன்றாக்கிக் கட்டித்தரச் சொல்கிறேன். நீ உன்னுடைய ஊருக்குத் திரும்பியதும் நூலில் கட்டப்பட்ட இந்த மணிகளை கடையில் கொடுத்து வெள்ளியிலோ அல்லது தாமிரத்திலோ ஆன கம்பியைக் கொண்டு கட்டி உன்னுடைய ஜபத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்." பிறகு தமது உதவியாளரை அழைத்த ஆசார்யாள் அவரிடம் அம்மாலைகளை ஒன்றாக்கிக் கட்டித் தரப் பணித்தார். அவர் அதைச் செய்ததும், 54 மணிகளைக் கொண்ட அந்த அழகிய ருத்ராக்ஷ மாலையினை தமது கரத்தில் எடுத்து அதனை அந்த சீடருக்கு அளித்து ஆசீர்வதித்தார் ஆசார்யாள்! அந்த சீடர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை என்பதைக் கூறவும் வேண்டுமோ?*

## ॥ रुद्राराधनतत्परः ॥

## *80. ருத்ராராதன-தத்பர:*

*(ஸ்ரீ ருத்ரனை ஆராதிப்பதில் ஈடுபாடுடையவர்)*

*பகவான் பரமேச்வரனின் பற்பல வடிவங்களில் ஒன்றே 'ருத்ரன்' எனும் பெயரில் போற்றப்படுகின்ற இறைவடிவாகும். ஸ்ரீருத்ர மந்திரங்களுடன் கூடியதான அபிஷேக ஆராதனைகள், ஹோமங்கள் மற்றும் யாகங்களைச் செய்வது உலகத்திற்குப் பெரும் நன்மைகளைத் தந்திடும் என்றே வேதம் உரைக்கின்றது. வேத வாக்கியங்களின் ஸத்தியத் தன்மையைப் பற்றிப் பூரணமாக அறிந்தவரான ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள், அனைவரது நன்மைக்கெனவே பகவானாம் ஸ்ரீருத்ரனின் ஆராதனையில் தினமும் ஈடுபட்டு வந்தார். மேலும், பகவான்*

ஸ்ரீருத்ரனை ஆராதிப்பதன் மகத்துவத்தைப் பற்பலத் தருணங்களிலே ஜனங்களுக்கு உணர்த்திடவும் செய்தார். இதற்கு எடுத்துக்காட்டுக்களாகப் பின்வரும் சம்பவங்களைக் காணலாம்.

மைசூர் பிராந்தியத்தில், சாராவதி நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த லிங்கசனக்கி அணைக்கு நதிநீர்வரத்து இல்லாததால், அதை நம்பியிருந்த பற்பலக் கிராம ஜனங்கள் குடிநீர் இன்றிப் பரிதவிக்க நேர்ந்தது. இது விஷயத்தினில் விரைவில் நல்வழி பிறக்க பக்த ஜனங்கள் ஜகத்குருவின் ஆசீர்வாதத்தினை வேண்டிக்கொண்டனர். ஆசார்யாளும், "சாராவதி நதியின் உற்பத்தி ஸ்தானமாகிய அம்பு தீர்த்தத்தில் பகவான் ஸ்ரீருத்ரனுக்கு அபிஷேக ஆராதனைகளை நடத்தினால், மழை பெய்யும்; நதியிலும் நீர் பெருகிடும்; அணைக்கும் போதிய நீர்வரத்து ஏற்படும்" எனக் கூறியருளினார். அதன்படியே, குறிப்பிட்டதொரு தினத்தில் காலை துவங்கப்பெற்ற ஆராதனையானது அதன் இறுதிக் கட்டத்தை அடையும் சமயத்திலேயே பெய்யத் துவங்கிவிட்ட மழையானது பல நாட்களுக்குத் தொடர்ந்துப் பெய்து அணையை முழுதும் நிரப்பிவிட்டது! ஜனங்களின் துக்கமும் தீர்ந்தது!

மற்றொரு சமயம், ஆசார்யாளைத் தரிசிக்க வந்த பக்தரொருவர் தனது உறவினர் ஒருவருக்கு உடல்நிலை திடீரென மோசமாகி விட்டதையும், மருத்துவர்கள் கைவிரித்துவிட்டார்கள் என்பதையும் பற்றிக் குறிப்பிட்டு, மரணப்படுக்கையில் இருக்கும் அவரைக் காப்பாற்றிட ஆசார்யாள்தான் அருள வேண்டும் என்று உருக்கமாக வேண்டிக்கொண்டிட, ஆசார்யாளும் அவரிடம், "மஹாருத்ர ஹோமத்தைச் செய்து ஸ்ரீருத்ரனை வழிபடுவதாக நீங்கள் இப்போதே மனதில் ஸங்கல்பித்துக் கொள்ளுங்கள்; பகவான் அருள் புரிவான். நீங்கள் ஊருக்குத் திரும்பியதும், ஸங்கல்பித்த வண்ணம் ஹோமத்தைச் செய்துமுடித்து விடுங்கள்" என்று கூறியருளினார். அந்தப் பக்தரும், அக்கணமே ஸத்குருநாதரின் முன்னிலையிலேயே அவ்விதம் ஸங்கல்பித்துக் கொண்டார். அவ்வுறவினரின் உடல்நிலையில் அன்றைய தினமே முன்னேற்றம் தெரியத் துவங்கிவிட்டது!

'ஜகத்குரு' எனும் கன்னட புத்தகத்தில் ஸ்ரீ அ. கிருஷ்ணன் என்னும் பக்தர் பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார். "ஒரு நாள், கல்லூரிக்குச் சென்ற எனது மகன் வீடு திரும்பவேயில்லை. நாங்கள் எங்கெங்கோ தேடியும் அவனைப் பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவேயில்லை. ஆறு மாதங்களாகியும் அவன் வீடு திரும்ப-வில்லை. பின்னர் நாங்கள் பிரச்சினையை விளக்கி ஆசார்யாளுக்குக் கடிதம் எழுதினோம். 'தினமும் மஹான்யாசத்துடன் கூடிய ஏகாதச ருத்ராபிஷேகத்தினை 10 தினங்களுக்குச் செய்துவருவதுடன், பையனின் பிறந்த தினமன்றும் அதைச் செய்திட வேண்டும்' என எங்களுக்கு ஆசார்யாளின் வழிகாட்டுதல் கிடைத்தது. 1959ம் வருடம் செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதியன்று ருத்ராபிஷேகம் துவங்கியது. செப்டம்பர் 28ம் தேதியன்று, 'பையன் இங்கு வந்துவிட்டான்' எனும் தந்தி என்னுடைய மாமாவிடமிருந்து எங்களுக்கு வந்தது! ஆசார்யாளின் அனுக்கிரஹத்தினால் எங்களது கவலை முழுவதுமாக நீங்கிவிட்டது."

## ॥ वशीकृतेन्द्रियग्रामः ॥

# 81. வசீக்ருதேந்த்ரியக்ராம:

(புலன்களைத் தமது வசப்படுத்தியவர்)

இந்திரியங்களின் இழுப்பிற்கு நாம் ஓடுவது ஒரு வகை. இது நமது பலவீனத்தைக் காட்டுகின்றது. ஓடிடும் இந்திரியங்களைக் கட்டுப்-படுத்தி நிறுத்துவது இரண்டாவது வகை. இது நமது திறமையைக் காட்டுகிறது. இந்திரியங்களை நமக்கு அடிமையாக்கி, நம் இழுப்பிற்கு அவற்றை வர வைப்பது மூன்றாவது வகை. இது நமது மேன்மையைக் காட்டுகின்றது. 'இப்படிப்பட்ட மேன்மை பொருந்தி-யவராகத் திகழ்ந்தவர்தாம் எங்கள் குருநாதராகிய ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்' என்பதை இந்தத்

திருநாமத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.

ஆசார்யாளின் இந்திரியங்கள் எந்த அளவிற்கு அவரது வசம் இருந்தன என்பதை பக்தர்கள் பலரும் கண்கூடாகக் கண்டு வியந்திருக்கின்றனர். பின்வரும் சம்பவங்களே இதற்குச் சான்று! “சிவராத்திரி தினத்தின் போது இரவு முழுவதும் கண் விழித்திருந்து, ஸ்ரீ சந்திரமௌலீசுவரருக்குப் பூஜை செய்வதை ஆசார்யாள் தமது நியமமாக வைத்திருந்தார். பூஜையைத் துவங்கும் போது எந்த வகையில் கால்களை மடித்துவைத்துக் கொண்டு அமர்வாரோ, அதனைப் பூஜையின் இறுதிவரை மாற்றிக்கொள்ளவே மாட்டார்! கால்களை மாற்றிப் போட்டுக்கொள்வார் என எவரேனும் எதிர்பார்த்தால், அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும்! நூற்றுக்கணக்கில் அமர்ந்து பூஜையைப் பார்க்கும் பக்தர்களில் ஒருவரால்கூட அப்படி அமர இயலாது! பூஜை துவங்கும் சமயத்தில் உற்சாகமாக அமரும் பக்தர்களில் பலருக்கோ சிறிது நேரத்திலேயே கைகால்களில் உழைச்சல் ஆரம்பித்து உடல் நெளியத் துவங்கிவிடும்! நடு இரவு வரும் சமயத்தில் அவர்களில் பெரும்பாலானோரது கண்களும் அயரத் துவங்கிவிடும். பலரும் தூக்கத்தைத் தவிர்ப்பதற்காகப் பலமுறை எழுந்து வெளியே சென்றுவருவதும் நடைபெறும். ஆனால், ஆசார்யாளிடமோ எவ்விதத் தளர்ச்சியுமே காணப்படாது. முந்தைய மாலையில் துவங்கி, இரவு முழுவதும் நடைபெற்று, காலையில் சூரியன் உதித்த பிறகு முடியும் அந்தப் பூஜையிலிருந்து எழுந்துகொள்ளும் ஆசார்யாள், உள்ளே சென்றதும் ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகின்றாரா என்றால் அதுவும் இல்லை! காலையில் செய்யப்பட வேண்டிய தமது துறவற நியமங்களைச் செய்து முடித்து, பக்தர்களுக்கு தரிசனம் தருவதற்காக மீண்டும் வந்துவிடுவார்! அப்போதும்கூட அவரது தெய்வீகத் திருமுகத்தில் எவ்விதக் களைப்பும் தென்படாது!

பல சமயங்களில், சாஸ்திர விஷயங்களை வாசிப்பது, கேட்பது முதலான பல காரியங்களில் ஆசார்யாள் ஈடுபட்டிருக்கும் போது, அவரைச் சுற்றி எழும் ஓசைகளோ அல்லது காரியங்களோ அவருடைய கவனத்தைக் கலைப்பதேயில்லை என்பதனைப்

பற்பலரும் கண்ணுற்றுப் பெரிதும் அதிசயித்திருக்கின்றார்கள். இதற்கானதோர் உதாரணமாகப் பின்வரும் நிகழ்ச்சியைக் கூறலாம். ஒரு தருணத்தில், நரசிம்மவனத் தோப்பினுள் ஓரிடத்தில் ஸத்குருநாதர் அமர்ந்தபடியே, அருகேயிருந்த சீடர் ஒருவரை வேதாந்த சுலோகங்கள் சிலவற்றினைக் கூறும்படிப் பணித்து அதில் மனமொன்றியிருந்தார். அப்போது, பெரும் சத்தத்துடன் தென்னை ஓலை ஒன்றும் காய் ஒன்றும் அருகே இருந்த மரத்தினின்று தரையில் விழுந்தன. பெருத்த ஓசை எழுந்துமேகூட, ஆசார்யாளிடம் எந்தவிதச் சலனமும் ஏற்படவேயில்லை! செவிகளுக்கு அந்த சுலோகங்களைக் கேட்டிடும் பணியை அவர் கொடுத்திட்டதால், அவை வேறு எவ்வித ஓசையையும் கேட்காத அளவிற்கு அடங்கிப்போயிருந்ததே இதன் காரணம் என்பதை புரிந்துகொண்டார் அச்சீடர்! ஆசார்யாளின் செவியினைப் போன்றே நாவும் அவருக்கு அடங்கி நடந்தது! அவர் உட்கொள்ளுகின்ற உணவோ சொற்ப அளவுதான். அதுவுமே எந்தவிதமான ருசியும் இல்லாத ஒன்று. எனினும், அதனை அவர் பொருட்படுத்தியதேயில்லை என்பதனையும் கவனித்த பலரும் ஆச்சரியப்பட்டுப்போயிருக்கின்றனர்!

இவை தவிர, ஒரே சமயத்தில் ஒவ்வொரு இந்திரியத்தையும் ஒவ்வொரு வேலையில் ஆசார்யாள் ஈடுபடுத்திடுவதையும் பலர் கண்டிருக்கின்றனர். தம்முன் நிற்கும் பக்தருக்குத் தீர்த்தத்தினை வழங்குகின்ற வேலையினை ஆசார்யாளின் தாமரைத் திருக்கரமானது செய்துவரும் அதே சமயத்தில், ஆசார்யாளின் கண்கள் அங்கு கூடியிருக்கும் அனைவரையும் பார்த்து எவருக்கேனும் ஏதேனும் உதவி தேவைப்படுகின்றதா என்று நோக்கும். இந்த இரண்டு இந்திரியங்களும் இப்பணிகளில் ஈடுபடும் சமயத்தில், ஆசார்யாளின் செவியோ, சற்றுத் தொலைவில் பாதபூஜையினைச் செய்து வைத்துக்கொண்டிருக்கும் அர்ச்சகர் அதற்கான மந்திரங்களைச் சரியாகச் சொல்லுகின்றாரா என்பதை கவனிக்கும்! இவற்றிற்கு நடுவே தமது உதவியாளர் தம்மிடம் ஏதேனும் தெரிவித்தாலோ, அல்லது கேட்டாலோ, ஆசார்யாளின் திருநாவு அதற்குப் பதிலையும் தந்துகொண்டிருக்கும். இது அன்றாடம் நடந்துவந்த காட்சியே!

இந்திரியங்களைத் தம் வசப்படுத்த விரும்பிடுவோருக்கு ஆசார்யாளே தகுந்ததொரு முன்மாதிரி ஆவார்!

## ॥ वाग्देवीसमुपासकः ॥

# 82. வாக்தேவீ-ஸமுபாஸக:

(வாக் தேவியை நன்கு உபாஸிப்பவர்)

வாக்கிற்கு தேவதையாம் ஸரஸ்வதியே சிருங்கேரியில் 'ஸ்ரீ சாரதாம்பாள்' என்கின்ற திருநாமத்தினைத் தாங்கியவளாய் வசித்துவருகின்றாள். ஸ்ரீ சாரதையின்பால் அளவுகடந்த பக்தியினை உடையவராய்த் திகழ்ந்தவர் அருட்கடலாம் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். அவரது ஒப்பற்ற பக்திக்குப் பாத்திரமான ஸ்ரீ சாரதாம்பாளும், மங்களம் இழைவதாகவும், ஸத்தியம் நிறைந்ததாகவும், இணையற்ற பாண்டித்யம் பொருந்தியதாகவும் விளங்கிய அவரது திருவாக்கினிலேயே நிரந்தரமாக வாஸம் புரியத் துவங்கி, ஆசார்யப் பெருமானுடையத் திருநாவிலிருந்து வெளிப்படும் ஆசிச் சொற்களைப் பரிபூரணமாக நிறைவேற்றிவைக்கவும் துவங்கிவிட்டாள். இதற்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீ சங்கர க்ருபா தமிழ் மாத இதழில் (மலர்-4/இதழ்-6) வெளியாகியிருந்த பின்வரும் சம்பவம் பக்தர் ஒருவரது வாழ்க்கையில் ஆசார்யாளது ஆசி வார்த்தைகள் ஏற்படுத்திய அற்புத அனுபவத்தினை வெளிப்படுத்துகின்றது.

"1957-ல் திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகளின் விஜய யாத்திரை. வெகு காலமாக ஈசுவரரின் ஸகுண ஸ்வரூபத்தை அகக்கண்முன் நிறுத்தித் தியானம் செய்து வந்திருந்த எனக்குக் கொஞ்ச காலமாக அவ்விதம் செய்யும் சக்தி குறைந்துகொண்டே வந்தது. அப்பியாஸத்தின் பயனாக வருஷம் ஆக ஆக ஈசுவரரின் ஸ்வரூபத்தைச் சிந்தையில் வைக்கும் சக்தியானது அதிகரித்துவரும் என்று நம்பியிருந்த எனக்கோ இவ்வனுபவமானது மனக்கலக்கத்-

தையும் அச்சத்தினையும் கொடுத்தது. 10-05-1957 வெள்ளிக்கிழமையன்று திருநெல்வேலி டவுன் முகாமில் இருந்த மஹா ஸ்வாமிகளிடம் சென்று அவர்களது பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து இதை விக்ஞாபித்துக் கண்ணீர் வடித்தேன். தயாநிதியான மஹாஸ்வாமிகளும், 'இது உங்களது வயது முதிர்ச்சியால் (அப்பொழுது என் வயது 62) உண்டாகியிருக்கும் அசக்தி' என்று அன்பு மொழியினால் ஆறுதல் கூறி சிவமானஸ பூஜா மந்திரத்தை எனக்கு உபதேசித்து, அதைச் செய்துவரும்படி ஆக்ஞாபித்து, அத்தோடு, ஈசுவர தரிசனமும் அடியேனுக்குக் கிடைக்கும் என்றும் அனுக்ரஹித்தார்கள். 'ஈசுவர தரிசனமா! இந்தத் தீனனுக்கா! இது கிடைக்கக்கூடிய யோக்கியதை இப்பிறவியில் சிறிதும் இல்லையே', என்றெல்லாம் எண்ணினேன். என்னால் என் செவிகளையே நம்ப முடியவில்லை. ஆனால் மஹாஸந்நிதானத்தின் அருள் மொழியல்லவா, அது வீண் போகுமா?... 1960, ஜூன் மாதம் 30ஆம் தேதி காலை சோலிங்கபுர மலையில் உள்ள யோக நரசிம்ம ஸ்வாமியைத் தரிசனம், தியானம் செய்துவிட்டு, மத்தியான்னம் மூன்று மணியளவில் வாஸ ஸ்தலத்தில் இளைப்பாறப் படுத்துக்கொண்டேன். நித்திரை வரவில்லை. கண்களின் இமை மிகச் சிறிதளவே திறந்திருந்தது; அப்பொழுது திடீரென்று, உலகம் பூராவுமே, வெகு சலனத்தோடுகூடிய அதிகப் பிரகாசமான வெண்மை நிறமுள்ள ஜோதியாகத் தோற்றம் அளித்தது. அந்த ஜோதி எங்குமே வியாபகமாக இருந்த காரணத்தால், என் சரீரம் உள்பட உலகத்திலுள்ள வஸ்துக்கள் ஒன்றும் தென்படவில்லை. நான் என்ற ஓர் உள் உணர்ச்சி மட்டுந்தான் இருந்தது. சீக்கிரத்தில் அந்த வெண்மை நிறமுள்ள ஜோதியின் மத்தியில் சிவப்பு நிறமுள்ள மற்றொரு ஜோதியும் அதன் மத்தியில் ஒரு சிவலிங்கமும் காட்சியளித்தன. சில நிமிஷத்தில் சிவலிங்கத்துக்குள்ளிருந்து பிரகாசமான சிவப்பு வர்ணத்துடன்கூடிய தேஜோமயமான அம்பாள் தோன்றினாள். அம்பாள் திரு உருவம் வெளிவந்ததும் சிவலிங்கம் அங்கிருந்து மறைந்துவிட்டது. அம்பாளின் தேஜஸையும் முகாரவிந்தத்தின் சௌந்தரியத்தையும் அவளது அனேக ஆபரணங்-களினின்று வந்த ஒளி வீச்சுக்களையும் என்னால் வர்ணிக்க இயலாது. பரம ஆனந்தம் அடைந்தேன். இந்தக் காட்சி சுமார் 7 நிமிஷங்கள்-

வரை இருந்தது. பிறகு அவ்வருஷமே செப்டம்பர் மாதக் கடைசியில் காலை 6 மணிக்கு ஜாக்கிரத்திலேயே அதே மாதிரி தரிசனம். மூன்றாவது தரிசனம், 1961, மே மாதம், பிற்பகல் 2.30 மணிக்கு. இந்தத் தரிசனத்தில் ஒரு விசேஷம். இதில் சிவலிங்கம் தோற்றமளிக்கவில்லை. அம்பாளின் கிரீடத்திலிருந்து பளிச்பளிச்சென வீசும் கண்ணைப் பறிக்கும் அசாதாரணமான ஒளிகளையும், பரதேவதையினுடைய இரு கண் விழிகளின் லாவண்யத்தையும் மந்தஹாஸச் சிரிப்பில் சற்றே திறந்த உதடுகளின் இடையே தெரிந்திட்ட பல் வரிசையின் அழகினையும் பாண்டித்யம் இல்லாத நான் எங்ஙனம் வர்ணிப்பது! ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீட மஹாஸ்வாமிகளின் அனுக்கிரஹ மஹிமைகளை விளக்கிடவும் சான்று வேறு என்ன தேவை!"

✿

## ॥ विद्यारण्यसमप्रज्ञः ॥

# 83. வித்யாரண்ய-ஸமப்ரக்ஞ:

(வித்யாரண்யருக்கீடான அறிவுத்திறன் படைத்தவர்)

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் ஜகத்குரு பரம்பரையில் 12வது ஆசார்ய ஸ்வாமிகளாக விளங்கிய ஜகத்குரு ஸ்ரீ வித்யாரண்ய மஹாஸ்வாமிகள் (1380-1386) அவர்கள் சாஸ்திரங்களில் இணையற்ற-தோர் அறிவினைப் பெற்றவராவார். "எங்களது ஸத்குருநாதராம் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளது அறிவாற்றலும் ஸ்ரீ வித்யாரண்யரது அறிவாற்றலுக்கு நிகரானதாகும்" என இத்திருநாமத்-தின் மூலமாக ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் பெருமை-யுடன் எடுத்துரைக்கின்றார்.

இந்த இரண்டு மஹான்களின் திருநாமங்களிலேயே அவர்களது ஞான மேன்மை வெளிப்படுகின்றது. ஒருவர் வித்யையில் அரண்யம் (காடு) போன்றவர். மற்றவர் வித்யையின் இருப்பிடமானவர் ('தீர்த்த' என்றால் இடம் என்றும் பொருள்). தன்னிகரில்லாது திகழ்ந்த இரு

மஹான்களின் அறிவாற்றலை ஒப்பிடுவது என்பது இயலாத காரியமே. இருப்பினும், இந்த ஞான புருஷர்களின் அறிவுசார்ந்த செயற்பாடுகளையும், அவற்றால் ஏற்பட்ட நன்மைகளையும் காணும்போது, நம்மை வியக்கவைப்பதான ஓர் ஒற்றுமை அவற்றிற்கிடையே இருப்பது புலப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டுக்களாகப் பின்வரும் விஷயங்களைக் கூறலாம்.

தலைசிறந்த பண்டிதர்களாக ஒளிர்ந்த இந்த இரு ஆசார்ய புருஷர்களுமே தங்களது அறிவாற்றலை முழுவதும் வேத, சாஸ்திர மற்றும் ஸனாதன தர்ம பரிபாலனத்திற்கெனப் பயன்படுத்தினர். ஸ்ரீ வித்யாரண்ய மஹாஸ்வாமிகள் அருளிய உபதேசங்கள் 'பஞ்சதசீ', 'ஜீவன்முக்தி விவேக:', போன்ற பற்பல கிரந்தங்களாக வெளிவந்துள்ளன. இவை தவிர, அவர், ஜைமினீய ந்யாயமாலை, பராஸர ஸ்ம்ருதி வ்யாக்யானம், ஸ்ம்ருதி ஸங்க்ரஹம், அபரோக்ஷானுபூதி டீகை, உபநிஷத் தீபிகைகள் போன்ற நூட்களையும் அருளியிருக்கின்றார். பீடத்து 35ம் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களோ 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்களின் மனோபாவத்திற்கேற்ப, எளிய கட்டுரைகளின் வடிவிலும், உபன்யாஸ வடிவிலும், பக்தர்களின் சந்தேகங்களுக்கான விளக்கங்களை அளிப்பது மூலமாகவும் தர்மசாஸ்திர, பக்தி மற்றும் ஆத்மஞான விஷயங்களைக் கருணையுடன் தெளிவுபடுத்தியிருக்கின்றார். உலகளாவிய மொழியான ஆங்கில மொழியிலும் மற்றும் பல இந்திய மொழிகளிலும் ஆசார்யாளது உபதேசங்கள் புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 'Didactic Treatises', 'Exalting Elucidations', 'Enlightening Expositions', 'அறிவூட்டும் சிறுகதைகள்', 'முக்தி நெறி' போன்ற நூட்களைக் குறிப்பிடலாம். சூக்ஷ்மமானதும், புரிந்துகொண்டிடக் கடினமானதுமான வேதாந்தக் கருத்துக்களை, பாமரர்களுக்கும் புரிந்திடுகின்ற விதத்தினில், சுவாரசியமான உதாரணங்களின் மூலமாக விளக்குவதில் இந்த இரண்டு ஆசார்ய புருஷர்களும் சிறந்து விளங்கியதை மேற்கூறப்பட்ட நூட்களை வாசித்திடுவோரால் உணர்ந்துகொள்ளவியலும்.

இந்த இரண்டு மஹான்களுமே ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் புகழையும், அவரது ஸனாதனதர்ம கொள்கைகளையும் ஜனங்களி-டையே பரப்புவதில் முனைந்து ஈடுபட்டுவந்தார்கள். ஜகத்குரு ஸ்ரீ வித்யாரண்யர் 'ஸ்ரீமத் சங்கர திக்விஜயம்' எனும் பெயரில் அற்புதமானதொரு காவியத்தினை இயற்றி ஸ்ரீ சங்கரரைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தியருளினார். ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளோ பல விஜய யாத்திரைகளை மேற்கொண்டு ஸ்ரீ சங்கரரின் கீர்த்தியினைப் பிரச்சாரம் செய்ததுடன், ஸ்ரீ சங்கர கிருபா போன்ற பத்திரிகைகளையும் துவக்கி வைத்து, அவற்றின் மூலம், ஸ்ரீ சங்கரரால் புதுப் பொலிவு பெற்றதான ஸனாதன தர்ம நெறிகளைப் பரப்பிடவும் வழிவகைகளைச் செய்தருளினார்.

இந்த இரண்டு ஆசார்ய புருஷர்களின் அபாரமான ஞானசக்தியினாலும், கருணையினாலும் ஈர்க்கப்பட்டு பண்டிதர்களும் பாமரர்களும் மட்டும் இவர்களை நாடி வரவில்லை. இராஜாதிராஜர் பலரும் இவர்களை நாடி வந்து, இவர்களது சீடர்களாகி, இவர்களது ஆலோசனைகளைக் கேட்டுப் பயன்பெற்றனர். ஸ்ரீ வித்யாரண்ய முனிவரைச் சரணடைந்த ஹரிஹர, புக்கராயர்களே பின்பு சரித்திரப் புகழ் பெற்ற விஜயநகர ஸாம்ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பெற காரண-கர்த்தாக்களாயினர். ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்தரின் விஷயத்தில் அரசர்கள் வைத்திருந்த பக்தியைப் பற்றி முன்னரே, 77வது திருநாம (ராஜாதிராஜ ஸம்பூஜ்யாய நம:) விளக்கத்தில் நாம் கண்டோம் அல்லவா!

॥ विद्याविनयशोभितः ॥

## 84. வித்யா-விநய-சோபித:

(கல்வியும் பணிவும் ஒருசேர சோபிப்பவர்)

பகட்டுடன் கூடிய பாண்டித்யம் பரிகாஸத்தையே பரிசாகப் பெறுகிறது; பணிவுடன் கூடிய பாண்டித்யமோ பாரினையே

ஆள்கின்றது. படிப்பு உயர உயர, பணிவும் உயர்வது மஹான்-களுக்கே உரித்தான குணாதிசயம்! இதற்கு மிகப் பொருத்தமான-தோர் எடுத்துக்காட்டாக ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் திகழ்ந்து வந்தார்கள்.

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்து ஸம்பிரதாயங்களின்படிக் கொண்டாடப்பட வேண்டிய பற்பல பண்டிகைகளை ஆசார்யாள் முன்னின்று நடத்தி வைப்பது வழக்கம். அப்படிப்பட்ட ஒரு பண்டிகையின் போது, அதன் ஓர் அங்கமாக ஆசார்யாள் அம்பாளுக்கு பூஜையினைச் செய்துகொண்டு இருந்தார். தமது திருக்கரத்தில் அந்தப் பூஜைவிதிகள் ஸம்பந்தப்பட்ட புத்தகம் ஒன்றினை வைத்துக்கொண்டு, அதைப் பார்த்து படித்தபடியே அவர் பூஜையினை செய்துவந்ததைக் கண்ட பக்தர் ஒருவருக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை! ஏனென்றால், “ஆசார்யாள்தான் பூஜை கிரமங்கள் அனைத்தையும் பரிபூரணமாக அறிந்தவராயிற்றே; அந்த புத்தகத்தைப் படித்துப் பார்த்துத்தான் பூஜையைச் செய்ய வேண்டும் எனும் அவசியம் ஆசார்யாளுக்கு உள்ளதா என்ன?” என்பதே அவரது சந்தேகம். பிற்பாடு ஆசார்யாளைத் தரிசித்த அவர், ஆசார்யாளிடம் அது பற்றிக் கேட்டிட, ஆசார்யாளும், “பூஜையை முறைப்படியே செய்ய வேண்டும் என்பதே சாஸ்திர விதி. அதில் கவனக்குறைவு சிறிது ஏற்பட்டாலுமேகூட, அந்தப் பூஜைக்கானப் பலன் (உலக நன்மை) பூரணமாகக் கிட்டாது போய்விடும். ஆகவேதான், பூஜைவிதிமுறைகளடங்கிய அப்புத்தகத்தினை என்னிடம் வைத்துக்கொண்டு, அதைப் பார்த்தபடியே பூஜையைச் செய்துமுடித்தேன். கவனக்குறைவினால் ஏற்படக்கூடிய சிறியத் தவறுகளும் இப்பொழுது தவிர்க்கப்பட்டுவிடுமன்றோ!”என்று பதிலளித்தார். அதைக் கேட்டு அந்தப் பக்தருக்கு மெய்சிலிர்த்தது. தாம் கற்றுணர்ந்த விஷயங்களில் என்றுமே மறதியோ, கவனக்குறைவுகளோ ஏற்படுவது என்பது நம் ஆசார்யாளிடம் காணப்படாத ஒன்று என்பதும் நன்கு தெரிந்ததே. இருப்பினும், தம்மால் மேற்கொள்ளப்பட்ட அந்தப் பூஜை விஷயத்தில் எந்த ஓர் அகந்தைக்கும் சிறிதும் இடம் கொடுத்திடாது, சிரத்தையுடன் அவர் செயல்பட்டமை உண்மையில் ‘விநயத்துடன் கூடிய வித்யை’

என்றால் என்ன என்பதற்கு சிறந்ததொரு பாடமாக அமைகின்றது என்பதை அந்தப் பக்தர் உணர்ந்தார்.

ஸ்ரீ சாரதா பீடத்தினால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் வித்வத் ஸதஸ் மற்றும் கணபதி வாக்யார்த்த சபை சமயங்களில் நாடெங்கிலுமிருந்து வேத மற்றும் சாஸ்திர பண்டிதர்கள் ஸ்ரீ சாரதா பீட ஜகத்குரு இருக்கின்ற இடத்தில் ஒன்றுகூடி, சாஸ்திர விஷயங்களை விவாதிப்பர். அம்மாதிரி தருணங்களில் அவ்வனைத்து பண்டிதர்களும் வியந்து ரசித்திடுகின்ற இரு விஷயங்கள் என்னவென்றால் ஆசார்யாளின் எல்லையற்ற பாண்டித்யமும், அதற்கு மென்மேலும் மெருகூட்டிடும் விதமாக அவரிடத்தில் காணப்படும் விநயமும்தான்! ஏதேனும் ஒரு பண்டிதர் தான் வாசித்துத் தேறிய சாஸ்திரத்திலிருந்து வாதமொன்றினை முன்வைத்தால், அதற்கு உடனடியாக ஆசார்யாள் பதிலளிக்க மாட்டார். மாறாக, அங்குக் கூடியுள்ள இதர பண்டிதர்களையே ஊக்கப்படுத்துவார். ஒவ்வொருவருமே அளிக்கும் பிரதிவாதத்தினையும், கவனித்துக் கேட்டு, அதனை முழுமனதுடன் பாராட்டிடுவார் அவர். பொருத்தமான பதிலை எவரேனும் அளித்தால், உற்சாகத்துடன் ஏற்று அங்கீகரிப்பார் ஆசார்யாள். எவராலுமே உரிய பதிலை அளிக்கவியலாதுபோகும் ஒரு நிலையினில் அதற்குப் பொருத்தமானதொரு பதிலையும் தாமே அளித்தருள்வதுடன், அது விஷயத்திலும் அனைவரது கருத்துக்களையும் வரவேற்பார் அவர்! ஆக, அந்த சாஸ்திர விவாத நிகழ்ச்சியின் எந்த ஒரு தருணத்திலும், தமது அறிவாற்றலினையோ, அல்லது, ஸபையின் முன்னவர் என்பதால் தமது கருத்துக்களைத் திணிக்க முயல்வது போன்ற அதிகாரத் தொணியையோ காட்டிடவே மாட்டார் ஆசார்யாள்!

விஷய விவாதங்களின் போது விநயத்துடன்கூடிய ஒரு பண்டிதராகவும், அறிவை நாடுவோருக்கு விநயத்துடன்கூடிய நல்லதோர் ஆசானாகவும் திகழ்ந்து வந்தார் ஆசார்யாள்.

## ॥ वेदशास्त्रपरित्राता ॥

# 85. வேத-சாஸ்த்ர-பரித்ராதா

(வேதசாஸ்திரங்களைப் பேணிக் காப்பவர்)

உலக நன்மைக்கும், மனித வாழ்வின் குறிக்கோளான ஆத்ம ஞானத்தை அடைவதற்கும் வேதங்களும் சாஸ்திரங்களும் மிக இன்றியமையாதவை என்பதை நன்கு உணர்ந்தவரான ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள், தமது பீடாதிபத்திய காலத்தில் (1954 – 1989) வேத சாஸ்திரங்களைப் பேணிக் காத்திடத் தேவையான அனைத்து வகை முயற்சிகளையும் எடுத்துவந்தார்.

சிருங்கேரியிலும் மற்றும் காலடி முதலான பற்பல கிளை மடங்களிலும் இயங்கிவந்த வேத, சாஸ்திர பாடசாலைகள் பல மேம்படுத்தப்பட்டன; அதிக அளவில் அங்கு வித்யார்த்திகள் சேர்ந்து படிப்பதற்குப் போதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. தகுதி வாய்ந்த உபாத்தியாயர்களை அங்கு பணியிலமர்த்துவதில் ஆசார்யாள் தனிக் கவனம் செலுத்திவந்தார்.

வேத மற்றும் சாஸ்திர பண்டிதர்களைத் தகுந்த முறையில் கௌரவித்து வருதலே வேத சாஸ்திரங்களைப் பேணிக் காத்திடும் பணியில் முக்கிய பங்கை வகிக்கின்றது. இதனை ஆசார்யாள் செவ்வனே செய்துவந்தார். சிருங்கேரியிலும் சரி, விஜய யாத்திரை-யாகச் சென்று தாம் தங்குகின்ற ஊர்களிலும் சரி, பண்டிதர்களை அழைத் துவரச் செய்து, ஸதஸ் முதலிய நிகழ்ச்சிகளை நடத்தி, அவர்களனைவரையும் நன்கு கௌரவிப்பதனை ஆசார்யாள் மிக்க உற்சாகத்துடன் செய்துவந்தார். வேத மற்றும் சாஸ்திர விற்பன்னர்-களும், வேதம் காட்டிடும் நன்னெறிகளில் மிகுந்த சிரத்தை பக்தியுடன் ஈடுபட்டுவந்தவர்களுக்கும் ஆசார்யாள் தந்திட்ட ஊக்கமோ மிக அபாரமானதாகும். எடுத்துக்காட்டாக, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஸ்ரீ வேங்கடப்ப யக்ஞநாராயண கனபாடிகள் என்பவர் நினைவு கூர்ந்த சில சம்பவங்களை இங்கே காணுவோம்:

“ஆசார்யாள் ஆந்திர மாநிலத்திலுள்ள கொல்லூர் எனும் ஊருக்கு விஜயம் செய்திருந்த சமயத்தில், அங்கு நடைபெற்ற ஸதஸிற்கு, நானும் எனது 12 வயதான புத்திரனும் சென்று கலந்துகொண்டோம். 12 வயதிற்குள் எனது புத்திரன் யஜுர் வேத அத்யயனத்தை பூரணமாக முடித்துவிட்டான் என்ற விஷயத்தை ஆசார்யாளிடம் தெரிவித்துக்கொண்டேன். ஆச்சரியப்பட்ட ஜகத்குரு அவனை-யழைத்து, யஜுர்வேத பாடங்களில் சரமாரியாக பல கேள்விகளை அவனிடம் எழுப்பினார். அவனும் அவையனைத்திற்கும் மிகச் சரியான பதில்களையளித்துவிட்டான். மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளான ஆசார்யாள் தமது ஆஸனத்திலிருந்து எழுந்து, அவனருகே வந்து, தமது இருகரங்களாலும் அவனை அப்படியே உயரத் தூக்கி அங்கு கூடியிருந்த அனைவருக்கும் காண்பித்தபடியே, “இதோ இந்தக் குழந்தை யஜுர்வேத பாடத்தில் பரிபூரண ஞானத்தினைப் பெற்றுவிட்டான். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது” என உரக்க அறிவிக்கவும் செய்தார். பிறகு சாரதா பீடத்தின் சார்பாக அவனுக்குப் பற்பல மரியாதைகளைச் செய்து அவனை கௌரவித்தார் ஆசார்யாள். அவர் காட்டிய அந்த உற்சாகம் அங்கு கூடியிருந்த அனைவருக்குமே வேத ஸம்ரக்ஷணத்தில் (வேதங்களைப் பேணுவதில்) அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினை உணர்த்தியது.

*****

ஆசார்யாள் மேற்கொண்ட ஆந்திர பிரதேச விஜய யாத்திரையின் போது அவர் விஜயம் செய்யும் ஒவ்வொரு ஊரிலும், அவர் தவறாது கேட்கும் ஒரு கேள்வி, ‘இங்கு அக்னிஹோத்ரிகள் இருக்கின்றார்களா?’ என்பதே. வேதங்களில் மிகவும் விசேஷமாகக் காட்டப்படுகின்ற நித்திய கர்மமான அக்னிஹோத்திரத்தினைச் சிரத்தையுடன் செய்து வருவோர் விஷயத்தில் ஆசார்யாள் தனிக்கவனம் செலுத்திவந்தார். அவரது விஜயம் நடக்கின்ற ஊர்களில் எவரேனும் அக்னிஹோத்ரிகள் வசித்து வந்தால் அவர்களது இல்லங்களுக்குச் சென்று அவர்களை ஆசீர்வதித்துவிட்டு வருவார் அவர்! அப்படியொரு தருணத்தில், குறிப்பிட்டதொரு பண்டிதரின் இல்லத்தில் வறுமையின் காரணமாக, அவரது அக்னிஹோத்திர அறையே மிகவும் பாழடைந்த நிலையில் இருந்ததைக் கண்டு வருந்திய நமது ஆசார்யாள், மடத்துச் செலவில்

அவருக்குப் புதியதோர் அக்னிஹோத்திர அறையைக் கட்டித்தரவும் செய்தார்.

*****

பௌண்டரீகயக்ஞம் எனும் யாகத்தினைச் செய்ய நான் முற்பட்டேன். அச்சமயம் எனது ஊரில் முகாமிட்டிருந்த ஆசார்யாள் என்னுடைய யாக சாலைக்கு விஜயம் செய்ததுடன், ‘உலக நன்மைக்காக இப்படிப்பட்ட யாகங்கள் எவ்வளவு முக்கியமானவை’ என்பதைக் குறித்து உபன்யாஸம் ஒன்றினையும் நிகழ்த்தி, யாகத்தின் அன்றைய பகுதி முழுவதையும் பார்த்துவிட்டே கிளம்பினார்.”

இம்மாதிரியாக, வேத மற்றும் சாஸ்திர பண்டிதர்களை ஊக்குவிப்பதன் மூலம் வேதசாஸ்திர பரிபாலனம் நன்கு நடைபெற வழிகோலினார் ஆசார்யாள்.

## ॥ वादिमत्तेभकेसरी ॥

# 86. வாதிமத்தேப-கேசரீ

(வாதிகளாம் மதயானைக்கு சிங்கமாய்த் திகழ்ந்தவர்)

தர்க்கத்தில் ஆசார்யாளுக்கு இருந்த வல்லமை இணையற்றது. அவருடன் வாதிட முயல்வோர் அவர் தொடுத்திடும் கேள்விகளுக்குப் பதிலளிக்க இயலாமல் திணறிவிடுவர். இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகப் பின்வரும் சம்பவத்தினைக் குறிப்பிடலாம். குறிப்பிட்டதொரு மதத்தினைச் சேர்ந்த ஒருவன் ஒரு சமயம் சிருங்கேரிக்கு வந்து ஆசார்யாளைச் சந்தித்ததுடன். அவரிடமே, “ஸ்வாமிகளே! உங்களுடைய ஆசிரமத்தின் அருகே நானும் ஓர் ஆசிரமத்தினைக் கட்டி, அங்கு வருகின்ற ஜனங்களுக்கெல்லாம் மதத்தைப் பற்றி சொல்லித்தரப் போகிறேன்” என்றான்.

**ஆசார்யாள்:** நீ சொல்லிக் கொடுக்கப்போவதை முதலில் எனக்குச் சொல்லிக்கொடேன். நானும் அதனைத் தெரிந்து கொள்கிறேன்.

**அவன்:** நீங்கள் என்னிடம் கேள்வி கேட்கலாம். நான் அவற்றிற்கெல்லாம் பதில் கூறுகிறேன்.

**ஆசார்யாள்:** சரி. உன்னுடைய மதம் தோன்றி எவ்வளவு வருடங்கள் ஆகிவிட்டன?

**அவன்:** 1973 வருடங்கள் ஆகிவிட்டன.

**ஆசார்யாள்:** உங்களுடைய மதம் தோன்றியதற்கு முன்னர் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்களா, இல்லையா?

**அவன்:** மக்கள் இல்லாதிருந்திருந்தால் நாங்கள் வேறு யாருக்கு மதத்தைப் பற்றி சொல்லியிருந்திருக்க முடியும்? ஆகவே, நாங்கள் மதத்தை சொல்லித்தருவதற்கு முன்னும் மக்கள் இருக்கத்தான் இருந்தார்கள்.

**ஆசார்யாள்:** அப்படியானால், உமது மதம் தோன்றியதற்கு முன் இருந்த மக்கள் எல்லோரும் சொர்க்கத்திற்குப் போய்க் கொண்டு இருந்தார்களா அல்லது நரகத்திற்குப் போய்க் கொண்டு இருந்தார்களா?

**அவன்:** அவர்கள் நரகத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் சட்டங்களை பின்பற்றவில்லை.

**ஆசார்யாள்:** இது என்ன அநியாயமாக இருக்கிறது! இந்த காலத்து அரசாங்கத்திடம்கூட இந்த மாதிரி நடப்பதில்லையே! நாம் ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு முன், ‘சட்டப்படி யாரும் நடக்கவில்லை’ என்று எவ்வாறு கூற முடியும்? அவர்கள் சட்டப்படி நடக்காதது அவர்கள் தவறா அல்லது சட்டத்தை இயற்றாதது நம் தவறா? ஆகவே, நீங்கள் மதத்தையும் மதச் சம்பந்தமான சட்டங்களையும் போடுவதற்கு முன்னர் இருந்திருந்த மக்களெல்லாம் நரகத்திற்குத்தான் சென்றனர் என்று கூறுவது மிகவும் அநியாயம் அல்லவா?

**அவன்:** ஆமாம்... ஸ்வாமிகளே... அவர்கள் நரகத்திற்குப் போகவில்லை. சொர்க்கத்திற்குத்தான் போனார்கள்.

**ஆசார்யாள்:** இதுவும் அநியாயமாகத்தான் இருக்கிறது. ஏனென்றால், நீங்கள் சட்டம் போடுவதற்கு முன் எல்லோரும் சொர்க்கத்திற்கு போய்க் கொண்டிருந்தார்கள். நீங்கள் சட்டம் போட்ட பிறகு என்ன நடந்தது என்றால், சில பேர் சொர்க்கத்திற்கும், சில பேர் நரகத்திற்கும் போக வேண்டிய நிலைமை ஆகிவிட்டது. ஆகவே நீங்கள் சட்டம் போடாதிருந்த நிலைமையே மற்றவர்களுக்கு சொர்க்கத்தை அளிக்கும் போது, நீங்கள் சட்டம் போட்டிருக்கவே வேண்டாமே!

**அவன்:** அய்யய்யோ! ஸ்வாமிகளே, நீங்கள் இப்படியெல்லாம் கேள்வி கேட்டால் நான் என்ன செய்வது... என்னை விட்டு விடுங்கள்.

மேற்கண்ட ரீதியிலேயே மேலும் பற்பல கேள்விகளை அவனிடம் ஆசார்யாள் கேட்க, திருப்திகரமான பதில்களை அளிக்க முடியாமல் திணறிப்போன அம்மனிதன், 'தனக்கே ஒன்றும் தெரியாதிருக்கையில் பிறருக்கு உபதேசிக்கத் தான் துணிந்ததை' எண்ணி வெட்கியவனாய், சிருங்கேரியில் ஆசிரமம் அமைக்கும் சிறுபிள்ளைத்தனமான தனது எண்ணத்தை அறவே கைவிட்டு விட்டான்!

## ॥ विदिताखिलशास्त्रार्थः ॥

# *87. விதிதாகில-சாஸ்த்ரார்த்த:*

(ஸகல சாஸ்திரங்களிலும் பரிச்சயம் உள்ளவர்)

இதற்கு முன்னர் ஆசார்யாளின் வேத சாஸ்திர அறிவினையும், வேத சாஸ்திரங்களை அவர் பேணிக் காத்திடும் பாங்கினையும் பற்றி விளக்கிடும் "அநேக தர்சன மர்மவித்", ஆகமார்த்த பரிக்ஞாதா", "ந்யாயாதி நய கோவித:", நிகமாகம தத்த்வக்ஞ:", "வேத சாஸ்த்ர பரித்ராதா" ஆகிய திருநாமங்களைக் கண்டோம். அவற்றில் 'சாஸ்திரம்' என்பதன் பொருளாக 'புனித நூல்கள்' என்பது எடுத்துக்கொள்ளப்பட்டு விளக்கப்பட்டது. இது தவிர, சாஸ்திரம்

என்பது அறிவியல் போன்ற இதர பிற கலைகள் சம்பந்தப்பட்ட அறிவினையும் குறிக்கின்றது. இந்த ரீதியில் நாம் 'மருத்துவ சாஸ்திரம்', 'சிற்ப சாஸ்திரம்', ஸங்கீத சாஸ்திரம்', 'வான சாஸ்திரம்' என்ற விஷயங்களைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். "விதிதாகில சாஸ்த்ரார்த்த:" (ஸகல சாஸ்திரங்களிலும் பரிச்சயம் உள்ளவர்) என்பதன் மூலம் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தமது குருநாதரின் அறிவாற்றலானது வேதம், வேதாந்தம், தர்க்கம், யோகம் முதலான சாஸ்திரங்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் எனும் புனித நூல்களோடு மட்டும் நின்றுவிடாது, உலக ரீதியான மருத்துவம், கட்டிடக்கலை, பொறியியல், விவசாயம், தோட்டக்கலை, ஸங்கீதம், பௌதீகம், வான சாஸ்திரம் போன்ற பல்வேறு துறைகளிலும் விரிந்திருந்தது என்பதைக் குறிப்பிடுகின்றார்.

சிருங்கேரி சாரதா தன்வந்திரி மருத்துவமனையில் பணிபுரிந்துவந்த மருத்துவர் சுபலக்ஷ்மி மற்றும் தாவண்கெரே, மருத்துவ கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிய மருத்துவர் கோவிந்தராவ் முதலிய பற்பல மருத்துவ வல்லுனர்களும் ஆசார்யாளிடம் காணப்பட்டதான மருத்துவ ஞானத்தினைக் கண்டு தாங்கள் வியந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பிட்ட சில வியாதியஸ்தர்களுக்கு எவ்விதமான சிகிச்சை பயன் தரும் என்பதைப் பற்றித் தன்னிடம் ஆசார்யாள் விவாதித்திருப்பதை பக்தியுடன் நினைவு கூர்ந்தார் திருமதி சுபலக்ஷ்மி.

'வயிற்றுப் புண்ணிற்கான சிகிச்சை முறைகள்' பற்றிய தனது புத்தகத்தை முழுவதும் வாசித்ததுடன், அதில் கூறப்பட்டுள்ள சில சிகிச்சை முறைகள் பற்றி தமக்கு உபயோகமான தகவல்களையும் ஆசார்யாள் தந்தருளியது பற்றி திரு கோவிந்தராவ் நன்றியுடன் நினைவு கூர்ந்திருக்கின்றார். ஒரு சமயம், ஓரிடத்தில், தமது காரிலிருந்து வெளியில் இறங்கி நடந்த தமது உதவியாளர் ஒருவரின் நடையைக் கண்டே அவருக்கு தொடை அக்குள் பகுதியில் வந்திருக்கும் உபாதையை யூகித்த ஆசார்யாள், அந்த உபாதையிலிருந்து நிவாரணம் பெற உதவும் களிம்பு ஒன்றின் பெயரை அந்த உதவியாளரிடம் கூறிட, உதவியாளரும் அதனை வாங்கி உபயோகித்து தம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டார்.

ஆசார்யாளின் காரியதரிசியாக பணியாற்றிடும் பாக்கியத்தினைப் பெற்ற ஸ்ரீ கே.எம்.பாலசுப்ரமணியன் அவர்கள் ஒரு சமயம் கடுமையான வயிற்றுப்போக்கினால் அவதிப்பட்டதால், பணிக்கு வராது, தமது அறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். விஷயத்தைக் கேள்விப்பட்ட ஆசார்யாள், அவரைச் சென்று பார்த்து ஆசீர்வதித்ததுடன், அவருக்கு ஒரு குறிப்பிட்ட ஆயுர்வேத மருந்தினையும் அனுப்பிவைத்து, அதனை உட்கொள்ளும்படி அறிவுறுத்தினார். அதனை உட்கொண்டு பூரண குணம் அடைந்த ஸ்ரீ பாலசுப்ரமணியன், பிற்பாடு ஆசார்யாளை தரிசனம் செய்து, ஆசார்யாள் அருளிய மருந்து தமக்கு அமிர்தமாக இனித்தது என்றும் கூறித் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார். "வியாதி இருக்கையில் அது அமிர்தம் போல இனித்து பலன் கொடுக்கும்தான்; ஆனால் வியாதி குணமாகிய பின்னர் அதை உட்கொண்டால், அதுவே விஷமாகிவிடும்" என்று கூறிய ஆசார்யாள், அந்த மருந்தில் மீதமிருப்பதை குப்பையில் வீசிவிடும்படி அறிவுறுத்தினார்.

கட்டிடப் பொறியியலில் ஆசார்யாளுக்கிருந்த ஞானமோ அபாரமானது. சிருங்கேரி மடத்து வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 'ஸ்ரீ சங்கர க்ருபா', 'பைரவ க்ருபா', 'சங்கர் நிகேதன்', 'ஜெய்சங்கர் நிகேதன்', 'சாரதா நிகேதன்' போன்ற கட்டிடங்களின் கட்டுமானப் பணிகள் ஆசார்யாளால் திட்டமிடப்பட்டு, அவரது மேற்பார்வையிலே கட்டப்பட்டவையாகும். துங்கா நதியின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தைக் கட்டும் விஷயத்தில் அவர் மேற்கொண்ட முயற்சியானது அப்பணியில் ஈடுபட்ட கட்டிடப் பொறியியல் வல்லுனர்களால் இன்றளவும் வியந்து பேசப்படுகிறது! ஒரு கட்டிடத்தைக் கட்டிடத் திட்டமிடுகையில், ஆசார்யாள், அதனை பயன்படுத்தப்போவோரின் வசதி, நல்ல காற்றோட்டம், இடம் வீணாகாமை, பல்நோக்கப்-பயன்கள், பின்பு அக்கட்டிடத்தை விரிவாக்கிட வேண்டும் பட்சத்தில் அதற்கான வசதியினை ஏற்படுத்தி வைத்தல் மற்றும் குறைந்த செலவீனத்தில் கட்டுவது போன்ற விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுவார். இது தவிர, அந்த கட்டுமானப் பணிகள் துவங்கியதும், தாம் சிருங்கேரியில் இருக்கும் பட்சத்தில் தினமும் சென்று அப்பணிகளைப் பார்வையிடுவார்.

விவசாய இயலிலும் தமது முத்திரையைப் பதித்தவர் நமது ஆசார்யாள். சிருங்கேரி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள மண்ணின் தன்மையினையும், அங்கு நிலவும் தட்ப வெப்ப நிலைகளையும் பற்றி நன்கு தெரிந்துவைத்திருந்த ஆசார்யாள், அந்த மண்ணிற்கேற்ற பயிர்கள் எவை என்பதையும் தீர்மானித்தார். இயற்கை மற்றும் செயற்கை உரங்கள் பற்றிய விஷயங்களை நன்கு அறிந்திருந்த ஆசார்யாள், பயிர்கள் மற்றும் தோப்புக்கள் ஆகியவற்றினை எப்படிப் பராமரிப்பது என்பதிலும் நல்ல பரிச்சயம் உள்ளவராக இருந்தார். தென்னந்தோப்பு என்பது சிருங்கேரிக்கு ஒத்துவராத ஒரு விஷயம் எனும் பரவலான எண்ணத்தைத் தகர்ந்தெறிந்தவர் அவர்! அவரது முயற்சியால் செழித்தெழுந்த தென்னை மரங்கள் இன்றளவும் மடத்துத் தேவைக்கான தேங்காய்களைத் தந்துவருகின்றன. இது தவிர, பரவலான அளவில் வயல்களையும் மற்றும் பூந்தோட்டங்களையும் ஏற்படுத்திய ஆசார்யாள், அவற்றின் பராமரிப்பிற்கென தடையில்லா நீர்ப்பாசன உத்திகளையும் வடிவமைத்தார்!

“ஸ்வாமிகள் சாதாரணமான ஒரு ஸன்யாசிதானே, ஸங்கீதம் பற்றிய ஞானம் அவருக்கு எவ்வாறு இருந்திடும்?” என எண்ணிய வித்வான்கள் பலரும், ஆசார்யாள் வெளிப்படுத்திட்ட ஸங்கீத சாஸ்திர ஞானத்தினைக் கண்டு திகைத்துப்போயிருக்கின்றனர். அவரது முன்னிலையில் ஸங்கீத கச்சேரியினைச் செய்த வித்வான்கள் பலரிடம், குறிப்பிட்ட ராகங்களின் பெயர்களைக் கூறி, அவற்றில் பாடுமாறுக் கேட்டுக்கொள்ளுவதுடன், அவற்றை ஆழ்ந்து ரசிக்கவும் துவங்கிவிடும் ஆசார்யாளின் சன்னிதியில் தங்களது இசையறிவினை ஸமர்பிக்கின்ற பாக்கியத்தினை அடைந்த பற்பல வித்வான்களுள் செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யர், ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி, அனூப் ஜலோட்டா போன்றோரும் அடக்கம். வித்வான் மதுரை ஜி.எஸ். மணி அய்யர் அவர்கள் ஆசார்யாளின் பூஜையில் தாம் ஒரு சமயம் பாடிய ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகளில் ஆசார்யாள் லயித்திருந்த அழகினையும் பின்னர் தம்மிடம் ஆசார்யாள் ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகளில், உபநிஷத்துக்களில்

காட்டப்பட்டுள்ள பிரம்ம தத்துவ விஷயங்கள் ஒளிர்ந்து நிற்பதனை சுட்டிக்காட்டியதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

சிருங்கேரியிலும், இதர பல கிளைமடங்களிலும் ஆசார்யாளின் சீரிய திட்டமிடலின்பேரிலும், அவருடைய மேற்பார்வையிலும் கட்டப்பட்டு இன்றளவும் கம்பீரமாகக் காட்சி தரும் பற்பல ஆலயங்களும், ஆலய விமானங்களும் ஆசார்யாள் பெற்றிருந்த சிற்பக்கலை ஞானத்தினைப் பறைசாற்றுகின்றன! உதாரணமாக, சிருங்கேரி மடத்து வளாகத்-துள்ளே இருக்கின்ற ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் அதிஷ்டானம், ஸ்ரீ சுரேஸ்வரர் ஆலயம், ஸ்ரீ பாலஸுப்ரமணிய-ஸ்வாமியின் ஆலயம், ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்திற்கான இராஜகோபுரம், ஸ்ரீ மலஹானிகரேஸ்வரர் ஆலய புனர் நிர்மானப் பணிகள் ஆகியவற்றைக் கூறலாம். இவற்றை வடிவமைக்கும் விஷயத்தில், சிருங்கேரியின் தட்ப வெப்ப மாறுதல்கள், வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை முதலானப் பல நுணுக்கமான விஷயங்களைக் கருத்தில் கொண்டு ஆசார்யாள் செயல்பட்டதைக் கண்டு இப்பணிகளின் பொறியாளர்களும் ஸ்தபதிகளும் வியந்து நின்றது குறிப்பிடத்தக்கது!

நிர்வாகவியலில் ஆசார்யாளுக்கிருந்த திறமை தன்னிகரற்றது என்றால் அது மிகையாகாது. எவருக்கு எவ்வேலையினைத் தர வேண்டும் எனும் அடிப்படை நிர்வாக விஷயத்திலிருந்து துவங்கி, நிதி மற்றும் மனித வள மேலான்மை, வேத சாஸ்திர மற்றும் தர்ம பிரச்சார மேம்பாட்டுத் திட்டங்கள், சிருங்கேரிக்கு வரும் பக்தர்கள் மற்றும் யாத்ரீகர்களின் நலனைப் பேணிடும் திட்டங்கள், மனித குல நன்மைக்கான சமூக நலத் திட்டங்கள் எனப் பலவற்றினைத் தமது 35 ஆண்டு பீடாதிபத்திய காலத்தில் நிர்வாகவியல் வல்லுனர்களே வியக்குமளவிற்கு ஸாதித்துக் காட்டியவர் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்!

## ॥ वीतरागजनस्तुतः ॥

# 88. வீதராக-ஜனஸ்துத:

(பற்றற்றவர்களால் போற்றப்படுபவர்)

பற்றற்ற நிலைக்கு இலக்கணம் வகுத்தவராய் ஒளிர்ந்து, வைராக்கியச் செம்மலாகவும், யோகத்தில் சிகரமாகவும், பிரம்மஞான ஜோதி-யாகவும் விளங்கிய ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் பற்றற்றவர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட ஆசார்ய சீலராகத் திகழ்ந்துவந்தார். பேஜாவர் மடாதிபதி, கோவிலூர் மடாதிபதி, சிவானந்த மடத்தினைச் சேர்ந்த ஸன்யாசிகள், ஸ்வாமி சின்மயானந்தா, தாரகேஷ்வர் மடத்து மஹந்த், காசி அன்ன-பூரணேஸ்வரி ஆலய மஹந்த், கர்நாடக லிங்காயத், சமூக மடாதிபதிகள், தமிழ்நாட்டு ஆதீனகர்த்தர்கள் போன்ற ஆன்மிக நெறியாளர்களான பற்பலரும் ஆசார்யாள் விஷயத்தில் பெரும் மதிப்பினைக் கொண்டவர்களாய் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

தாரகேஸ்வர ஆலயத்திற்கு நம் ஆசார்யாள் இருமுறை விஜயம் செய்த சமயங்களிலும் ஆலய மஹந்த் அவர்கள் குருநாதருக்குக் கோலாகலமான வரவேற்பினையளித்து மகிழ்ந்தார். ஆசார்யாளுடைய தமிழ்நாட்டு விஜய யாத்திரை ஒன்றின் சமயம் (1980) கோவிலூர் மடாதிபதி அவரை ஸகல மரியாதைகளுடன் கோவிலூருக்கு அழைத்து வந்து, பாத பூஜையினைச் செய்துத் தமது மரியாதை-களைச் சமர்ப்பித்தார். ஆசார்யாள் செய்த உத்திராகண்ட் யாத்திரையின் சமயம் (1967) சிவானந்த ஆசிரமத்தின் அப்போதைய தலைவராக இருந்த ஸ்வாமி சிதானந்தா அவர்கள் ஆசார்யாளை சிவானந்த ஆசிரமத்திற்கு விஜயம் செய்யுமாறு வேண்டிக்கொண்டார். அவர் அழைப்பை ஏற்று ஆசார்யாளும் அங்கு விஜயம் செய்து பக்த ஜனங்களை ஆசீர்வதித்தார். ஹரித்வாரில் அவருக்கு அளிக்கப்பட்ட பிரம்மாண்டமானதொரு வரவேற்பு விழாக் கூட்டத்தில், ஏராளமான ஸன்யாஸிகளும், மஹாமண்டலேஸ்வரர்களும், பற்பல ஸாதுக்களும் கலந்துகொண்டு ஸத்குருமூர்த்தியாம் அவர் அருளிச் செய்த அற்புதமான அனுக்ரஹ பாஷணத்தை செவிமடுத்தனர்.

இங்ஙனம், உலகப் பற்றினை விட்டொழித்து, ஆன்மீகத்தின் எல்லையை எட்டுவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட அனைத்து பிரிவினரையும் மதித்து, அனைவரிடத்திலும் பாரபட்சமற்ற அன்புடன் பழகிவந்த ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் விஷயத்தில் அவர்கள் அனைவருக்குமே ஆழ்ந்த மதிப்பு இருந்து வந்தது.

॥ व्याख्यासिंहासनाधीशः ॥

## 89. வ்யாக்யா-ஸிம்மாஸனாதீச:

(வ்யாக்யான ஸிம்மாஸனத்து அதிபதியானவர்)

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்திற்கு "வ்யாக்யான ஸிம்மாஸனம்" என்றும் ஒரு பாரம்பரியப் பெயர் உண்டு. "வேதங்கள், உபநிஷத்துக்கள், பகவத் கீதை, வியாஸ மகரிஷி இயற்றிய ப்ரஹ்ம சூத்திரங்கள் மற்றும் இவற்றின் பாஷ்யங்கள் ஆகியவற்றில் எவரொருவருக்கும் ஏற்படக்கூடிய எவ்வித சந்தேகங்களையும் தமது பொருத்தமான விளக்கங்களால் பூரணமாக நிவர்த்தி செய்துவிடக் கூடிய வல்லமை வாய்ந்த ஒருவர் வீற்றிருக்கும் ஸிம்மாஸனம் (இடம்)" என்பதை இது குறிக்கின்றது.

1931ம் ஆண்டில் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளிடமிருந்து ஸன்யாச தீக்ஷையினைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் 1954ம் ஆண்டில் பட்டத்திற்கு வந்ததும் ஸ்ரீ சாரதா பீடத்து வ்யாக்யான ஸிம்மாஸன அதிபதியாகி, தம்மை அண்டி வந்த பண்டிதர்களனைவரின் சந்தேகங்களையும் அறவே தீர்த்துவைத்து அவர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி வந்ததைக் குறிக்கும் வகையில் அவரை "வ்யாக்யா ஸிம்மாஸனாதீச:" எனும் இத்திருநாமத்தால் போற்றித் துதிக்கின்றார் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்.

சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தில் தங்கத்தாலான, கம்பீரமான ஸிம்மாஸனம் ஒன்று வைக்கப்பட்டு, ஸம்பிரதாய ரீதியில் ''வ்யாக்யான ஸிம்மாஸனம்'' என்றும் அழைக்கப்பட்டுவருகின்றது. பீடாதிபதியாகப் பொறுப்பேற்பவரை இவ்வாஸனத்தில் அமரச் செய்து சாஸ்திர விதிப்படி அவருக்குப் பட்டாபிஷேகத்தினைச் செய்து வைத்து, பண்டிதர்களும் பீடத்து ஊழியர்களும் மற்றும் பக்தர்களுமாக பீடாதிபதிக்குத் தங்களது மரியாதைகளைச் சமர்ப்பித்துக்கொள்வது வழக்கம். மேலும், தற்போது பீடாதிபதியாக இருப்பவர் தமக்குப் பின் இப்பதவியை ஏற்றுக்கொள்ளத் தகுதிகளைப் பெற்ற சீடரொருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு ஸன்யாச தீக்ஷையினை அளித்த பின்னர், அவரை இவ்வாஸனத்தில் அமரச் செய்து, அவரிடம் இறைவடிவைக் கற்பித்து அவருக்கு குருவே பூஜையைச் செய்வதும் வழக்கத்தில் உள்ளது. பிறகு குருநாதர் அதில் அமர்ந்துகொள்ள, சீடர் அவருக்கு பூஜை செய்வார்!

பீடத்தில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய் பின்பற்றப்பட்டுவரும் வழக்கப்படி, நவராத்திரி சமயங்களில், அனைத்து இரவுகளின் முற்பகுதியிலும், பீடாதிபதியாக இருப்பவர் ராஜ உடைகளையணிந்து, ஜகன்மாதாவாம் ஸ்ரீ சாரதாம்பாளின் சன்னிதியைப் பார்த்தபடி, இந்த வ்யாக்யான ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்க, நவராத்திரி தர்பார் நடைபெறும். இந்த பாரம்பரிய விழாவினைக் காண நவராத்திரி சமயங்களில் பக்தர்கள் பெருமளவில் சிருங்கேரியில் கூடி, ஜகத்குருவின் ஆசிகளைப் பெற்றுக்கொள்வர். தமது பீடாதிபத்தியக் காலத்தில் ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளும் மேற்படி ஸம்பிரதாயக் கிரமத்தைச் செவ்வனே கடைப்பிடித்து வந்தார்.

॥ व्याससूत्रार्थतत्त्ववित् ॥

## 90. வ்யாஸ-ஸூத்ரார்த்த-தத்த்வவித்

(வ்யாஸசூத்திரங்களது உட்பொருளை அறிந்தவர்)

ஆத்ம ஞானத்திற்கு வழிகோலும் உபநிஷத்துக்களின் கருத்துக்களை மிகச் சுருக்கமானதும், ஆழ்ந்த உட்பொருளைக் கொண்டிருப்பதுமான சூத்திரங்களை மஹரிஷி வேத வியாஸர் இயற்றினார். அவரது இந்தப் படைப்பிற்கு “ப்ரஹ்ம ஸூத்திரங்கள்” என்று பெயர். இதற்கு விரிவானதொரு பாஷ்யத்தினை (விளக்கவுரையினை) ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர் செய்துள்ளார்.

நமது ஆசார்யாளுக்கு வியாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரங்களிலும் அவற்றிற்கான பாஷ்யத்திலும் இருந்துவந்த பரிச்சயமானது பெரும் பண்டிதர்களையும் பிரமிக்கச் செய்வதாக விளங்கியது. அதே சமயத்தில், சூட்சுமமான அந்த விஷயங்களை ஒரு பாமரனுக்கும் புரியும் விதமாக எளியதாக்கிக் கூறுவதிலும் ஆசார்யாளுக்கு நிகர் அவரே. இதற்கு ஒரு உதாரணமாக, பின்வரும் விஷயத்தினைக் கூறலாம். இது ப்ரஹ்மசூத்திரத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு சூத்திரங்களைப் பற்றியது. “ஆத்மா உடலினின்றும் வேறு” எனும் தலைப்பில் ‘மெய்ஞான விளக்கவுரைகள்’ எனும் புத்தகத்தில் வெளியாகியுள்ளது:

********

வேதாந்த தத்துவத்தைப் பாதராயணர் (வியாஸரின் மற்றொரு பெயர்) சூத்திர வடிவில் “ப்ரஹ்ம ஸூத்ரம்” என்ற நூலாகத் தொகுத்தார். இந்த நூல் நான்கு பகுதிகளைக் கொண்டது. அவை: (1) ஸமன்வயம்–உபநிஷத்துக்களின் வாக்கியங்களுக்குச் சரியான முறையில் பொருள் கூறி இரண்டற்ற பிரம்மம் மட்டுமே வேதாந்தத்தின் தாத்பர்யம் என்ற கூற்றை நிலைநாட்டுதல்; (2) அவிரோதம்–யுக்தி முதலான பிரமாணங்கள் வேதாந்த சித்தாந்தத்திற்கு முரணில்லை என்று நிரூபித்தல்; (3) ஸாதனை–ஞானம்

அடைவதற்கான வழியைக் கூறுதல்; (4) பலன்–மேற்கூறிய ஸாதனையின் பலனை விவரித்தல்.

இந்நூலின் மூன்றாவது அத்யாயத்தின் மூன்றாவது பாதத்திலுள்ள (பகுதியிலுள்ள) ஐம்பத்து மூன்றாவது ஸூத்திரத்தில், "உடலைக் காட்டிலும் வேறான ஆத்மா என்பது கிடையாது" என்ற (பூர்வபக்ஷியின்) ஆட்சேபத்தைத் தெரிவித்து, அதற்கு விடையாக ஐம்பத்து நான்காவது ஸூத்திரத்தில் "ஆத்மா உடலைக் காட்டிலும் வேறானது" என்ற சித்தாந்தத்தினைக் கூறி அந்த ஆட்சேபத்தை நிராகரிக்கின்றார் ஸ்ரீ பாதராயணர். இவ்விரு ஸூத்திரங்களையும் சற்று விவரமாகப் பார்ப்போம். பூர்வபக்ஷியின் (ஆட்சேபிக்கும் சார்வாகர்களின்) வாதம் ஸூத்திர வடிவில் இவ்வாறு கூறப்படுகிறது: "சிலர், உடல் இருக்கும் போது ஆத்மா இருப்பதால் (உடலின் இருப்பைச் சார்ந்தே ஆத்மா இருப்பதால், உடலைக் காட்டிலும் வேறான ஆத்மா என்பது இல்லை.)"

நூலின் இப்பகுதியில் பாதராயணர் ஆத்மா தேகத்தைவிட வேறானது என்பதை நிலைநிறுத்துகிறார். உடலும் ஆத்மாவும் ஒன்றாகவே இருந்தால், மற்ற உலகங்களில் துய்க்கப்படும் பலன்களைப் பற்றிய (வேதத்தில் கூறப்படும்) உபதேசங்களுக்கு அடிப்படையேதும் இருக்காது. மேலும், ஆத்மா உடலைக் காட்டிலும் வேறாக இல்லை என்றால், ஆத்மா உண்மையில் பிரம்மம்தான் என்று (வேதங்களால்) எவ்வாறு கற்பிக்கப்பட முடியும்? இவ்வாறு முதலில் ஆட்சேபத்தை எழுப்பிப் பின்னர் அதற்கு விடை கூறும் முறை, கூறப்படும் கருத்துக்களைச் சிந்திப்பவனின் மனதில் ஓர் உறுதிப்பாட்டை உண்டாக்குகிறது.

ஆட்சேபிப்பவர்களின் வாதம் பின்வருமாறு: "உலகில் காணப்படும் ப்ருதிவீ முதலான பெரும் பூதங்களைத் தனித்தனியாக எடுத்துக் கொண்டாலும் அல்லது சேர்த்து எடுத்துக்கொண்டாலும், அவற்றுள் சைதன்யம் தெரிவதில்லை. எனினும், இவை ஒன்று சேர்ந்து உடல் என்ற வடிவை அடைந்தபின்னர், அதில் சைதன்யம் தெரிகிறது. இவ்வாறு உடலே சைதன்ய வடிவான ஆத்மாவாக இருப்பதால், ஆத்மா என்று தனியானவொன்று இல்லை." இதற்கு இவர்கள்

கொடுக்கும் காரணமே ஸூத்திரத்தில், “உடல் இருக்கும் பொழுது ஆத்மாயிருப்பதால்” என்று கூறப்படுகிறது. இந்த வாதத்தின் அடிப்படையைச் சற்று விரிவாகக் கூறுவோம். ஒரு பொருளின் இருப்பு மற்றொன்றின் இருப்பைச் சார்ந்து இருக்கிறது, மேலும் அது இல்லாத பொழுது இது இல்லை என்ற நிலை இருக்குமாயின், இப்பொருள் தனக்கென்று ஒரு தனித்தன்மையற்று, மற்ற பொருளின் குணமாகத்தானிருக்க முடியும். உதாரணமாக, வெப்பமும் ஒளியும் தீயின் தர்மங்களாகவே, அதாவது தீயின் தன்மைகளாகவே கருதப் படுகின்றன. ஏனெனில், இவ்விரண்டு தன்மைகளும் தீயின் இருப்பைச் சார்ந்தே இருக்கின்றன. இதைப் போலவே சேதனமான ஆத்மாவும் உடலின் தன்மை தான். இதுவே ஆட்சேபம். “அப்படி இல்லை, ஆத்மாவிற்கு நினைவாற்றல் முதலிய குணங்கள் இருக்கின்றனவே” என்று (ஆத்மா உடலைக் காட்டிலும் வேறானது என்று சொல்பவர்களில் ஒரு சாரார்) வாதிட்டால், பூர்வபக்ஷி, “இவையும் உடலுக்கு உள்ளேயே தெரிகின்றன. உடலைக் காட்டிலும் வேறான மற்றொன்றின் இருப்பு நிரூபிக்கப்படும் வரையில், இவை யாவும் உடலின் தன்மைகளாகவே கருதப்பட வேண்டும். எனவே, ஆத்மா வேறு, உடல் வேறில்லை. இரண்டும் ஒன்றே” என்று பதில் கூறுகிறான்.

இதற்குப் பாதராயணர் பின்வருமாறு விடை தருகிறார்: “ஆனால், அது அவ்வாறில்லை. உடலும் ஆத்மாவும் வேறு. ஏனெனில், உடல் இருக்கும் பொழுதும் சைதன்யம் காணப்படுவதில்லை – அறியும் அனுபவத்தில் போல்.”

ஆத்மாவும் உடலும் வேறு. ஏனென்றால், சில சமயங்களில் உடல் இருக்கும் பொழுதும் சைதன்யம் காணப்படுவதில்லை. “உடலுள்ள பொழுது மட்டுமே சைதன்யம் அல்லது அறியும் தன்மை தெரிகிறது. எனவே, சைதன்யமும் உடலின் தன்மைகளில் ஒன்று”, என்று கூறினால் உடல் இருக்கும் சமயங்களிலும்கூட சைதன்யம் காணப் படுவதில்லையே! ஆதலால், சைதன்யம் உடலின் தன்மை ஆகாது என்று ஏன் கருதப்பட முடியாது? எடுத்துக்காட்டாக, உயிரற்ற உடல்களில் சைதன்யம் முதலான தன்மைகள் பார்க்கப் படுவதில்லையே. ஒருவன் உயிருடன் இருக்கும் போது

சைதன்யத்தின் இருப்பு பற்றி நிச்சயிக்க முடிகிறது. ஆனால் உயிர் போன பின், சைதன்யம் முதலானவை இல்லை என்று எவ்வாறு (பிரத்தியட்சப் பிரமாணத்தை மட்டுமே நம்பும் சார்வாகர்களால்) சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாக நிச்சயிக்கப்பட முடியும்? ஏனெனில், இவ்வுடல் வீழ்ந்த பின்னரும் சைதன்யம் முதலானவை வேறொரு உடலுடன் சம்பந்தப்பட்டு ஒளிரலாம் அல்லவா? ஆகவே இந்த விஷயத்தில் சந்ததேகம் இருப்பதனாலேயே, சைதன்யம் உடலின் தன்மை என்கிற (சார்வாகனான) பூர்வபக்ஷியின் வாதம் நிராகரிக்கப்பட முடியும்.

தவிரவும், பூர்வபக்ஷியோ ப்ருதிவீ (நிலம்) முதலிய நான்கு பூதங்களைத் தவிர வேறெந்த தத்துவத்தையும் ஒப்புக் கொள்வதில்லை. அவன் எதைச் சைதன்யமாகக் கருதுகிறான் என்று அவனை முதலில் கேட்க வேண்டும். “பூதங்களையும் அவற்றிலிருந்து உண்டானவற்றையும் அறிதலே சைதன்யம்” என்று விடையளித்தால், நாம், “அந்தக் காரணத்தினாலேயே சைதன்யம் பூதங்களின் தன்மை ஆகாது” என்று சொல்வோம். ஏனென்றால், ஒரு பொருளின் தன்மைக்கு அப்பொருளே அறியப்படும் விஷயம் ஆவதில்லை. தனக்கு தன்னிடத்திலேயே கிரியை என்பது எப்படி சாத்தியம்? (நெருப்பு தன்னையே எரிப்பதில்லை அல்லவா, அதுபோல்). எனவே, அறிவு என்பது பூதங்களின் தன்மையானால் அந்த அறிவினால் அப்பூதங்களை அறிய முடியாது. எவ்வாறு (உடலின் தன்மைகளான) ரூபம் முதலியவற்றால் தம்மையோ வேறொரு ரூபத்தையோ அறிய முடியாதோ அதுபோல். ஆதலால், பூதங்களும் அவற்றின் தன்மைகளும் பற்றிய அறிதல் ஒப்புக்கொள்ளப்படும் போது, அறிதலை இயல்பாகக் கொண்டுள்ள சைதன்யம் என்பதை அவற்றிலிருந்து வேறுபட்டதாகவே ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

நமது சித்தாந்தத்தின்படி ஆத்மா சைதன்ய வடிவானது மற்றும் உடலைக் காட்டிலும் வேறானது; ஒரு பொழுதும் மாறாமல் மிளிர்வதால் அது நித்யமானது. “நான்தான் முன்பு இதைப் பார்த்தேன்” என்று முன்பு பார்த்ததைப் பின்பு நினைவுப்படுத்திச் சொல்வது முதலான அனுபவங்களும் ஒரே சைதன்யமே எல்லா நிலைகளிலும் அறிபவனாக மிளிர்வதை கோடிட்டுக் காட்டுகின்றன.

விளக்கு முதலானவை உள்ள பொழுது ஒரு பொருளைப் பற்றிய அறிவு ஏற்படுகிறது. இவை (விளக்கு முதலியன) இல்லாத பொழுது அந்த அறிவு ஏற்படுவதில்லை. இதனால் அறிவு என்பது விளக்கின் தன்மை என்று கூற முடியுமோ? முடியாது. உடல் என்பது மேற்கூறிய உதாரணத்தில் உள்ள விளக்கை ஒத்துள்ளது. ஆகவே, உடல் இருக்கும் போது அறிவு உண்டாகின்றது என்பதால் மட்டுமே, சைதன்யத்தை உடலின் தன்மையாகக் கருத முடியாது. இது மட்டுமன்று. அறிவு ஏற்படுவதற்கு ஸ்தூல உடலின் செயல்பாடு தான் முக்கியமான காரணம் என்றும் கூற முடியாது. ஏனெனில், ஒருவன் உறங்கும் பொழுது அவனுடைய உடல் செயலற்று இருந்தாலும் அவனால் கனவு நிலையில் பல விஷயங்கள் அறியப்படுகின்றன அல்லாவா? எனவே, ஆத்மாவின் இருப்பு உடலினின்று வேறானதாக ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

********

வ்யாக்யான ஸிம்மாஸனாதீசராகத் திகழ்ந்த ஆசார்யாள் தமது உபன்யாஸங்களிலும் மற்றும் தாம் தம் பக்தர்களுடனும் பண்டிதர்களுடனும் அளவளாவிடும் சமயங்களிலும் உபநிஷத்துக்கள், பகவத்கீதை, ப்ரஹ்ம ஸூத்திரங்கள் மற்றும் இவையனைத்தின் பாஷ்யங்கள் என்று அனைத்திலிருந்தும் மிக ஸஹஜமாக மேற்கோள்-களைக் காட்டி, கேட்போர் ரஸிக்கும் வகையில் அவற்றை விளக்கிடவும் செய்தார்.

ஸத்குருநாதரது இத்தகைய அரிய விளக்கங்கள் தமிழில் “ஆசார்யாளின் அருளுரைகள் (தொகுப்பு 1-56)”, “முத்தி நெறி”, “மெய்ஞான விளக்கவுரைகள்” ஆகிய தலைப்புக்களில் ஸ்ரீ வித்யாதீர்த்தா ஃபவுண்டேஷனின் பிரசுரமாக வெளிவந்துள்ள புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ॥ शारदापूजनासक्तः ॥

# 91. சாரதா-பூஜனாசக்த:

(சாரதையைப் பூஜிப்பதில் ஆர்வம் கொண்டவர்)

ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களுக்கு ஸ்ரீ சாரதாம்பாளிடம் இருந்திட்ட பக்தி அபரிமிதமானது.

ஸன்யாஸ ஆசிரமத்தினைத் தழுவுவதற்கு முன் தினம் ஆசார்யாளுக்கு ஒரு கனவு வந்தது. அதில், பாலக பிரம்மசாரியான அவர் ஸ்ரீ சாரதையின் சன்னிதிக்குச் சென்று, அங்குக் கூடியிருந்த ஏராளமான பக்தர்களுள் ஒருவராக நின்று அம்பாளைத் தரிசிக்கத் தொடங்கினார். அச்சமயம் அவரது குருநாதர் இவரை சன்னிதியுள் வருமாறுப் பணிக்க, இவரும் உள்ளே சென்றார். பிறகு சன்னிதியின் கதவுகள் மூடப்பட்டன. அங்கே அவருக்குக் காட்சி கொடுத்தருளிய ஸ்ரீ சாரதை அவரைத் தூக்கித் தனது மடியில் வைத்துக்கொண்டு அவரிடம், "உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது. மன்னர்கள் மரியாதைகளைச் செலுத்தப்போகின்றார்கள். மனதில் அஹந்தைக்கு இடம் அளித்துவிடாதே. தொடர்ந்து என்னை பூஜித்து வருவாயாக. உனது குருநாதரைவிட்டு ஒரு கணம்கூட பிரியாது இருப்பாயாக. எனது நினைவாக இதோ இந்த ஸ்படிக மாலையைப் போட்டுக்கொள்வாயாக" என்று கூறி, அழகிய ஸ்படிக மாலை ஒன்றை அவரது கழுத்தில் அணிவித்து அதன் பிறகு, அவரை அனுப்பி வைத்தாள். கனவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி ஆசார்யாளுக்கு ஸ்ரீ சாரதாம்பாளின் அருள் பரிபூரணமாகக் கிட்டியிருந்ததைக் காட்டுகின்றது அல்லவா!

பிற்பாடு, துறவறமேற்று, அனைத்துச் சடங்குகளும் முடிந்து, தெய்வீகம் மிளிரும் பால ஸன்யாசியாக ஒளிர்ந்த ஆசார்யாள், பக்தர்கள் சூழ, தமது குருநாதருடன் சாரதாம்பாள் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆலயத்து வாயிலை அடைந்தவுடன், தாயின் அருகில் செல்லத் துடிக்கும் ஒரு குழந்தையின் ஆர்வத்தை ஆசார்யாளிடம் கண்ட அவரது குருநாதர், ஆசார்யாளிடம், "நாம் இப்போது எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்?" என்று கேட்டார்.

ஆசார்யாளும், ‘‘சாரதாம்பாளின் ஆலயத்திற்கு’’ எனப் பணிவுடன் பதிலளிக்க, ‘‘சாரதாம்பாள் ஆலயத்துள் மட்டும் நாம் போகவில்லை, அம்பாளின் கருவறைக்கு உள்ளேயே செல்ல இருக்கின்றோம். சாரதாம்பாள் சாதாரணமான தாயாரல்ல. அவள் பரபிரம்ம-ஸ்வரூபிணி. அனைத்து விருப்பங்களையும் அருள்பவளாவாள் அவள். நீங்கள் எதை விரும்புகின்றீர்களோ அதை அம்பாள் தந்தருள்வாள். ஆகவே, பூரண சிரத்தையுடனும், சாந்தமான மனத்துடனும் உள்ளே செல்லுங்கள்’’ என அறிவுறுத்தினார் குருநாதர். அவரது இந்த வார்த்தைகள் ஆசார்யாளுக்கு சாரதாம்பாளின் விஷயத்தில் இருந்துவந்த பக்தியை மென்மேலும் கூட்டி விட்டன! அதற்குப் பிறகு வந்த நாட்களில் ஆசார்யாளின் கனவிலே ஸ்ரீ சாரதாம்பாள் தோன்றி அவருக்கு குண்டலினி யோகத்தில் பாடங்களை அருளியதும் நடந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர், 12-12-1935 அன்று நிர்விகல்ப ஸமாதியினை அடைந்த பிறகு, மறுநாள் மதியம் குண்டலினியை மையமாக வைத்த லய யோகத்தின் மூலமாக நிர்விகல்ப ஸமாதியினை அடைந்தார் ஆசார்யாள். அதனைப் பற்றி பிற்பாடு தமது சீடர் ஒருவரிடம் குறிப்பிடுகையில், ‘‘நான் ஸன்யாஸம் பெற்றுக்கொண்ட சில மாதங்களுக்குள் குண்டலினியைப் பற்றி எனக்கு உபதேசித்த அம்பாள், அந்த அனுபவங்களை எனக்கு உடனடியாக வழங்கியதோடு, (பின்னர் 13-12-1935) அன்று மதியம் அவற்றின் பூரணத்துவத்தையும் அருளிவிட்டாள் என்றே நம்புகிறேன்’’ என்று கூறினார்.

அம்பாளின் சன்னிதிக்குச் சென்று தரிசிப்பதிலும், அம்பாளுக்கு பூஜையைச் செய்வதிலும், நவராத்திரி போன்ற தினங்களில் அம்பாளுக்கு விசேஷமான ஆராதனைகளை நிகழ்த்திடுவதிலும் நம் ஆசார்யாளுக்குப் பெரும் ஈடுபாடு இருந்துவந்தது. ஆசார்யாளுக்கு அம்பாளிடம் எந்த அளவிற்கு ஆழ்ந்த பக்தி இருந்துவந்தது என்றால் ஆன்மிக சாதனைகளின் சிகரமாம் ஜீவன்முக்தியினையே அடைந்து ‘பிரம்மமே ஸத்தியம்; நாம ரூபங்கள் அனைத்துமே பொய்யே’ எனும் பரமார்த்த தத்துவத்தினை அனுபவ பூர்வமாகவே அவர் உணர்ந்து கொண்ட பின்னும்கூட, அன்னை சாரதாம்பாளின் சன்னிதிக்குச்

*சென்று அவளை தரிசிக்கையில் பக்திப் பரவசமாகினார். தமது கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகிட, கூப்பியக் கரங்களுடன் அம்பாளின் அழகிய பாதாரவிந்தங்களில் தம்முடைய இதயம் ஒன்றியவராக நிற்குமளவிற்கு இருந்தது!*

ജ❀ഷ

## ॥ शारदेन्दुसमद्युतिः ॥

# *92. சாரதேந்து-ஸமத்யுதி:*

*(இலையுதிர்கால நிலவுக்கொப்ப காந்தியை உடையவர்)*

*இலையுதிர் காலத்து முழு நிலவின் பிரகாச அழகினைப் பற்பல இலக்கியப் படைப்புக்கள் விவரிக்கின்றன. எடுத்துக்காட்டாக, "சரதிந்து விகாஸி மந்தஹாஸாம்..." என்று ஸ்ரீ சாரதாம்பாளின் மந்தஹாசப் புன்னகையை இலையுதிர் காலத்து நிலவின் ஒளிக்கு ஒப்பிடும் சுலோகத்தினைக் கூறிடலாம். இலையுதிர் காலத்து நிலவின் மாசு மறு அற்ற, பரிபூரணமான ஒளியானது காண்போர் மனத்திற்கு பெரு மகிழ்ச்சியை அளித்திட வல்லது. அந்த வகையில், தமது குருநாதரது அருட்பிரகாசம் நிறைந்த உருவினைப் போற்றிடும் ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவரை இலையுதிர்-காலத்து நிலவுக்கொப்ப காந்தியையுடையவர் என வர்ணிக்கின்றார்.*

*அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளைத் தரிசித்திட்ட எவருமே அவரது ஒளி பொருந்திய தோற்றத்தினை வியந்து மெச்சாமல் இருந்ததில்லை. மனதில் சோர்வுடனும் துயரத்துடனும் வரும் எவரும் ஆசார்ய பெருமானின் ஒளி வீசிடும் தோற்றத்தினைக் கண்ட மாத்திரத்திலேயே மனக்குறையனைத்தும் நீங்கப்பெற்று மனதில் புத்துணர்ச்சியும் உற்சாகமும் நிரம்பப் பெறுவதென்பது வழக்கமாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகவே இருந்துவந்தது!*

*மைசூரைச் சேர்ந்த ஸ்ரீ H.L.சந்திரசேகர் எனும் பக்தருக்கு 1975ம் வருடத்தில் சிருங்கேரியில் ஏற்பட்ட அனுபவத்தினை இங்கு குறிப்பிடலாம்: "தமது ஸ்நானம் மற்றும் ஆஹ்னீகங்களை*

முடித்துவிட்டு பூஜைக்கென ஆசார்யாள் வந்துகொண்டிருந்த சமயம் அவரைப் பார்த்தேன். அவரது திருவுடலானது பொன்னிற ஒளியுடன் காணப்பட்டது. வேத மந்திரங்கள் ஒலிக்க அவர் பூஜையைத் துவங்கியதும் அவரது மேனியினின்று ஓர் ஒளி தோன்றி என்னுள் ஊடுருவதாகக் கண்டேன். என்னுடைய மனத்தில் விவரிக்கவியலாத ஓர் அமைதியும் ஆனந்தமும் ஏற்படுவதை உணர்ந்தேன்.''

பள்ளத்தூரைச் சேர்ந்த ஸ்ரீ பி.ஆர். நாராயண சர்மா அவர்கள் ஒரு தருணத்தில் தனக்கு கிட்டிய ஆசார்ய தரிசனம் எப்படியிருந்தது என்பதை சங்கர கிருபா பத்திரிகையில் தான் எழுதிய கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''அன்று தை வெள்ளிக்கிழமை. மடத்தில் கைங்கர்யம் செய்யும் பாக்கியம் பெற்ற ஓர் இளைஞர் என்னை உள்ளே செல்லும்படி சொன்னார். மிகவும் பக்தியுடன் உள்ளே சென்றேன். ஆஹா! அப்பொழுது நான் கண்ட காக்ஷியை என்னவென்று சொல்வேன்! 'பிராதக் கால ஆஹ்னீகம் முடித்து அருவமாய், உருவமாய், அனாதியாய், பலவாய், ஒன்றாய் பிரம்மமாய் நின்ற ஜோதிப்பிழம்பு, அடியேனுக்கு அருள் வழங்க வீற்றிருந்த காக்ஷியை என்னால் என்றும் மறக்க முடியாது. ஜகத்ரக்ஷகன் ஸ்ரீ விஷ்ணு பகவானின் தோற்றத்தைக் கண்டு பிரமித்து நின்ற துருவன் போல ஸ்ரீ ஸன்னிதானத்தின் (ஆசார்யாள்) திவ்ய தேஜோமய ரூபத்தைப் பார்த்தபடியே என்ன செய்வதென தோன்றாமல் திக்பிரமை பிடித்து நின்ற அடியேனை அன்புடன் ஆசுவாசப்படுத்தி அருகில் அழைத்து, எதிரில் அமரும்படி ஆக்ஞை பிறந்தது...''

॥ शास्त्रतात्पर्यसंवेदी ॥

## 93. சாஸ்த்ர-தாத்பர்ய-ஸம்வேதீ

(சாஸ்திரங்களது நோக்கத்தினை நன்குணர்ந்தவர்)

அனைத்து உயிர்களுக்கும் நன்மை பயப்பதற்கான வழிமுறைகளைக் காட்டுவதே சாஸ்திரங்களின் நோக்கமாகும் எனும் விஷயத்தினைத் தாம் உணர்ந்ததோடு, அதனைப் பிறருக்கும் உணர்த்திவந்தார்

ஸத்குருவாம் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். கன்னட மொழியில் தாம் இயற்றிய கட்டுரை ஒன்றில் ஆசார்யாள், "சாஸ்திரங்கள் என்பவை நமக்குத் தேவைதானா?" என்னும் கேள்வியினை எடுத்துக் கொண்டு, அவை நமக்கு அவசியம் தேவைதான் என்பதனை மிகவும் ஆணித்தரமாக விளக்கியிருக்கின்றார். அதன் சுருக்கம் பின்வருமாறு:

"தாபங்கள் (துன்பங்கள்) 'ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம்' என்று மூன்று வகைப்படுகின்றன. ஆத்யாத்மிகம் என்பதில் (வியாதிகள் போன்ற) சரீர சம்பந்தப்பட்டவை மற்றும் (காமம், கோபம், லோபம், மோஹம், மதம், மாச்சர்யம் போன்ற) மனம் சம்பந்தப்பட்டவை என இரண்டு உட்பிரிவுகளும் உள்ளன. விஷம், விரோதிகள், ஜந்துக்கள் போன்றவற்றால் ஏற்படும் துன்பங்கள் 'ஆதிபௌதிகம்' எனும் பிரிவில் அடங்குகின்றன. துர்சக்திகள், பூகம்பம் முதலியனவற்றால் ஏற்படும் துன்பங்கள் 'ஆதிதைவிகம்' என்பதன் கீழ் வருகின்றன. மாறி மாறி வந்து நம்மைத் துன்புறுத்தி வரும் இம்மூன்றிலிருந்தும் பூரணமாக விடுபட நாமெல்லாம் உலக ரீதியாக எவ்வளவோ முயற்சி செய்தும், இன்றுவரை அது நடப்பதாக இல்லை! ஆனால் நமது துன்பங்கள் அனைத்தையும் பரிபூரணமாக ஒழிக்கும் நிச்சயமான வழியை சாஸ்திரங்கள் நமக்குக் காட்டுகின்றன!

ஓர் ஆட்சேபணையை சிலர் எழுப்பலாம். 'சாஸ்திரங்கள் காட்டிடும் வழியோ மிகவும் கடினமானது. விவேகம்-வைராக்கியம்-சமம்-தமம்-உபரதி-திதிக்ஷா-சிரத்தை-சமாதானம்-முமுக்ஷுத்வம்-சிரவணம்-மனனம்-நிதித்யாஸனம்-தியானம் என்கின்ற அனைத்தும் ஸித்தியானால் மட்டுமே ஒருவனுக்கு ஆத்ம ஞானம் உண்டாகி, அனைத்துத் துன்பங்களிலிருந்து பூரண விடுதலையை அடைய இயலும். இவ்வளவு கஷ்டப்படுவதற்குப் பதிலாக, வைத்தியம், மருந்து, அளவான உணவுப் பழக்கங்கள் இவற்றின் மூலமாக சரீரம் சம்பந்தப்பட்ட துன்பங்களை விலக்கிக்கொள்ளலாம். மேலும், மனது எதற்கெல்லாம் ஆசைப்படுகின்றதோ அதனையெல்லாம் கொடுத்துவிடுவதன் மூலமே மனம் சம்பந்தப்பட்ட துன்பங்கள் நம்மை அணுகாமல் செய்யலாம்! உலக ரீதியான (மந்திர மற்றும் தந்திர)

சாஸ்திர விதிகளைப் பின்பற்றுதல் மூலமே நாம் ஆதிபௌதிகத் துன்பங்களைப் போக்கிக்கொள்ளலாம். இதே போல், பூஜைகள், யாகங்கள், மந்திர ஜபம் ஆகியவற்றால் ஆதிதைவிகத் துன்பங்களையும் அகற்றிக் கொள்ளலாம் அல்லவா?' என்பதுதான் அந்த ஆட்சேபணை.

மேற்கண்ட ஆட்சேபணைக்குரிய பதிலிது: "கவனமான வைத்தியமும், வீர்யமுள்ள மருந்துமே இருந்தாலும்கூட அனைத்து வியாதி-யஸ்தர்களும் பூரணமாய் குணமடைந்துவிடுவதில்லையே. இதை நாம் பார்க்கத்தானே செய்கிறோம்? மேலும், நமது மனது ஆசைப்படுகின்ற அனைத்தையுமே அதற்குத் தந்துவிடுவது என்பதும் இயலாத ஒன்று. தவிரவும், மனதின் ஆசைகளைப் பூர்த்தி செய்துவைத்து அதை நிரந்தரமாக அமைதியடையச் செய்துவிடலாம் என்பதும் ஸாத்தியமற்றச் செயல்தான். அடையப்பட்ட விஷயங்களின் விளைவாக மனதின் ஆசைகள் இன்னும்தான் வளருமே தவிர, ஒருபோதும் குறையப்போவதில்லை. ஆகவே, துன்பங்களிலிருந்து நிரந்தரமாக விடுபட இவ்வகை முயற்சிகள் எதுவும் பயன் தாரா!

சாஸ்திரங்களோ இவ்வனைத்து வகைத் துன்பங்களிலிருந்தும் நமக்கு நிரந்தரத் தீர்வானது கிடைத்திட வழிவகுக்கின்றன. அனைத்து வகைத் துன்பங்களையும் அனுபவிப்பதற்கு மூல காரணமே 'அழிவேயற்றதும் ஆனந்தமயமானதுமான தனது ஆத்ம ஸ்வரூபத்தினை மறந்து, 'காலம், நாமம், ரூபம்' ஆகியவற்றிற்கு உட்பட்டு, பிறப்பு-வளர்ச்சி-இறப்பு எனும் மாறுபாடுகளைக் கொண்டவனாகவே தன்னை ஒருவன் எண்ணுவதே என்று சாஸ்திரங்களே எடுத்துரைக்கின்றன. இந்த அக்ஞானத்தை அவன் விலக்கிக்கொண்டால், துன்பங்கள் அனைத்தையும் நிரந்தரமாகக் கடந்து, மோக்ஷ ஸாம்ராஜ்ஜியத்தையும் அவன் அடைந்துவிட முடியும்' எனவும் அவை உறுதி கூறுகின்றன. இதனைச் சாதித்திடும் வழிவகைகளை அவை கருணையுடன் நமக்குப் போதித்திருக்கின்றன. ஆகவே, துன்பங்களை அடியோடு ஒழித்து, நிரந்தர சுகம் பெற விரும்பும் ஒருவன் சாஸ்திரத்தின் உதவியையே நாட வேண்டும்."

சாஸ்திரங்களின் வழிகாட்டுதல் எவ்விதமோ அதன்படியேதான் தமது அனைத்து உபதேசங்களையும் செய்துவந்தார் ஸத்குருநாதர். அத்துடன், சாஸ்திரங்கள் காட்டிடும் வழிகளில் நடந்து, அனைவரும் சித்த சுத்தியை அடைந்து, ஆத்ம ஞானத்தினைப் பெற முயற்சி செய்யவேண்டு மெனவும் தொடர்ந்து உபதேசித்துவந்தார் அவர்.

## ॥ शारदापीठनायकः ॥

## 94. சாரதா-பீட-நாயக:

*(சாரதா பீடத்து நாயகர்)*

*ஸ்ரீ சாரதாம்பாளை பிரதான தேவதையாகப் பிரதிஷ்டை செய்து வைத்து சிருங்கேரியில் தக்ஷிணாம்னாய பீடத்தை ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர் ஸ்தாபிதம் செய்ததால் இந்தப் பீடத்திற்கு சாரதா பீடம் என்ற பெயரும் உண்டு. சாரதா பீடத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துவரும் ஜகத்குருநாதர்கள் சாரதா பீட நாயகர்கள் எனவே போற்றப்படுகின்றனர். இந்த வரிசையில், ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது நாயகராக ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா-ஸ்வாமிகள் அவர்கள் விளங்கி வந்தார்கள்.*

*1982ம் வருடம் தாம் மத்திய பிரதேசத்தில் உள்ள பரமஹம்ஸி கங்காஸ்ரமம் எனும் இடத்தில் அருளிய உபன்யாஸத்தினில் ஆசார்யாள் ஸ்ரீ சாரதா பீடத்தின் வரலாற்றுக் குறிப்பினை மிக அழகாக எடுத்துக் கூறினார்:*

********

யா சாரதாம்பேத்யபிதாம் வஹந்தீ க்ருதாம் ப்ரதிக்ஞாம் பரிபாலயந்தி|
அத்யாபி ச்ருங்கேரிபுரே வஸந்தி வித்யோததேடபீஷ்டவரான் திசந்தி ||
தாம் சாரதாம் நமாமி

{எவள் 'சாரதாம்பாள்' என்ற பெயரைப் பெற்றுள்ளாளோ, தான் செய்த பிரதிக்ஞையை (உறுதிமொழியை) காத்து வருகின்றாளோ,

இன்றும் சிருங்கேரியில் வாழ்ந்து வருகிறாளோ அவள், (அனைவரும்) விரும்புவனவற்றை எல்லாம் அளித்துக்கொண்டு ஒளியுடன் திகழ்கிறாள். இத்தகைய சாரதாம்பாளைப் போற்று-கின்றேன்.}

சங்கரர் எத்தகையவர்? அவர் தமது வாழ்க்கையை எவ்வாறு நடத்தினார்? அவருடைய வாழ்க்கையில் என்னென்ன லீலைகளைக் காட்டினார்? இத்தகைய விஷயங்களை நாம் தாமாகவே தெரிந்து கொள்ள முடியாது. இவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் நாம் ஏதாவது நம்பகமான (பிரமாணம் என்று கருதப்படக்கூடிய) புத்தகத்தைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது பலருக்கும் பிரசித்தமாயிருக்கப்பட்ட புத்தகம் 'மாதவீய சங்கர விஜயம்' ஆகும். அந்தப் புத்தகத்தில் தான் நான் மேற்கூறிய சுலோகம் உள்ளது. சுலோகம் எவ்வாறு உண்டாயிற்று என்பதைப் பற்றி ஆராய்வோம்.

ஒரு சமயம் மண்டனமிச்ரர் என்பவர் சங்கரரிடம் வாதத்தில் தோல்வியுற்றார். சாரதாம்பாளும் தோற்றுப் போக நேரிட்டது. பிறகு சாரதாம்பாள் பிரம்மலோகம் செல்வதற்குச் சித்தமாயிருந்தாள். ஆனால் அப்பொழுது பகவத்பாதாள் தன்னுடைய மந்திர சக்தியினால் அம்பாளைத் தடுத்துவிட்டார். பிறகு அவர் அம்பாளிடம், "நான் எங்கு ஆசிரமத்தை ஏற்படுத்துகின்றேனோ அங்கு நீ சாந்நித்யம் கொடுக்க (தங்கி இருந்து அருள்புரிய) வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார். அதை மனதில் வைத்துத்தான் இந்த சுலோகத்தில் சொல்லப்பட்ட வகையில் அம்பாளின் வர்ணனை உள்ளது. (சுலோகத்தின் அடிகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.)

அம்பாளின் பெயர் சாரதா. ஆதலால்தான் அவளைப் பற்றிச் சுலோகத்தில், "யா சாரதாம்பேத்யபிதாம் வஹந்தீ" என்று சொல்லப்-பட்டுள்ளது. அடுத்து, "க்ருதாம் ப்ரதிக்ஞாம் பரிபாலயந்தி" என்று ஓர் அடி வருகிறது. பகவத்பாதாள் செய்த பிரார்த்தனையில் அம்பாள் திருப்தியடைந்து, "உமது பிரார்த்தனையை நான் ஏற்றுக்-கொள்கிறேன். நீர் எங்கு ஆசிரமத்தை ஏற்படுத்துகின்றீரோ, அங்கு நான் சாந்நித்யம் தருகின்றேன்" என்கிற பிரதிக்ஞையைச்

செய்திருந்தாள். அந்தப் பிரதிக்ஞையை அவள் (இன்றும் சிருங்கேரியில் வசிப்பதன் மூலம்) காப்பாற்றிக்கொண்டு வருகிறாள். அதனால்தான் அவளைப் பற்றி, "க்ருதாம் ப்ரதிக்ஞாம் பரிபாலயந்தி | அத்யாபி ச்ருங்கேரிபுரே வஸந்தி" என்று சொல்லப்பட்டுள்ளது. அடுத்த வரியில், "வித்யோததேऽபீஷ்டவரான் திசந்தி" என்று வருகிறது. பக்தர்களுக்கு எந்த வரம் வேண்டியிருக்கின்றதோ அதை அம்பாள் தருகின்றாள்.

இந்த சுலோகத்திலிருந்து, எங்கெல்லாம் பகவத்பாதாள் பீடத்தை ஏற்படுத்தினாரோ அங்கெல்லாம் அம்பாள் தன் சாந்நித்யத்தை அளித்துக் கொண்டிருக்கிறாள் என்பது விளங்கும். சிருங்கேரியில் (சாரதா) அம்பாளுக்கு அழகான பெரிய கோயில் ஒன்று உள்ளது. ஆதலால்தான் அதற்கு "சாரதா பீடம்" என்ற பெயர் வந்திருக்கிறது. எனவே நாம் எல்லோரும் அம்பாளின் உபாஸகர்கள் (அம்பாளை வழிபடுபவர்கள்) ஆவோம்.

********

தக்ஷிணாம்னாய சிருங்கேரி பீடத்தின் பிரதான தேவதை எனும் அந்தஸ்து ஸ்ரீ சாரதாம்பாளுக்கு மட்டுமே என்பதில் தீர்மானமாக இருந்துவந்த ஆசார்யாள் பெருமான், தம்முடைய காலத்தில் மடத்தினுள் கட்டப்பட்ட எந்தவொரு ஆலயமும்கூட அன்னை ஸ்ரீ சாரதையின் ஆலயத்தினுடைய முக்கியத்துவத்தைக் குறைப்பது போன்றதாய் இருத்தல் கூடாது எனும் கருத்தையும் கொண்டிருந்தார். எடுத்துக்காட்டாக, துங்கைக் கரையோரம் ஸ்ரீ ஸுப்ரமணியருக்கு ஓர் ஆலயம் எழுப்பலாம் என ஆசார்யாள் முடிவு செய்த போது, கட்டிடத்திற்கான நிதியினை பக்தர்கள் பெரும் அளவில் சமர்ப்பிக்க, அதைக் கொண்டு ஆலயத்தினை மிகவும் பிரம்மாண்டமான வகையில் கட்டிவிடக்கூடிய வாய்ப்பும் உண்டாகியது என்றாலும்கூட, ஆசார்யாள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அளவில் ஸ்ரீ சாரதாம்பாளின் ஆலயத்தினைவிடச் சிறியதும், அமர்ந்து தரிசிக்க முன் மண்டபம் ஒன்று கூடிய அழகானதொரு ஆலயத்தை முருகப் பெருமானுக்குக் கட்டிடச் செய்தார் அவர்!

'சிருங்கேரி சாரதா பீடத்தின் சீடர்கள் அனைவருமே ஸ்ரீ சாரதாம்பாளின் குழந்தைகளே; அவர்கள் அனைவருடைய குறைகளையும் ஸ்ரீ சாரதை தீர்த்துவைத்து, என்றுமே அவர்களைக் கைவிடாது காத்துவருகின்றாள்' என்பதிலும் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது. ஆசார்யாளைத் தரிசித்து தங்களது மனக்குறையினை வெளியிடும் பக்தர்களிடம், "நீங்கள் சாரதாம்பாளின் இடத்திற்கு வந்தாயிற்று அல்லவா, உங்கள் குறைகளுக்கு நிச்சயம் நிவர்த்தி உண்டாகிவிடும்" என்று கூறி அவர்களை ஆசீர்வதித்தருள்வார் ஆசார்யாள். அதன்படியே தங்கள் அனைவரது குறைகளும் நீங்கிவிடுவதினைக் கண்டு மகிழ்ச்சியில் ஆழ்ந்துவிடுவர் அனைவரும்.

சேலத்தைச் சேர்ந்த பக்தையான ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி பகிர்ந்துகொண்ட விஷயம்: "ஒரு சமயம், என் வயிற்றில் புற்றுநோய் கட்டி ஒன்று வளர்ந்துள்ளது; அதனை அறுவை சிகிச்சை மூலமே நீக்க முடியும் என மருத்துவர்கள் கூறிவிட்டனர், இதைக் கேட்டதும் எனக்கு எனது தாயார் அவரது புற்றுநோய் சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சையின் சமயம் இறந்ததினையும், எனது தகப்பனார் அவரது வயிற்றில் நடைபெற்ற அறுவை சிகிச்சையின் பின்னர் உயிரிழந்ததையும் பற்றி நினைவு வர, எனக்கு மிகுந்த பயமும் துயரமும் உண்டாகிவிட்டது. இது போதாதென்று, ஒரு ஜோசியர்ரும் எனக்கு அறுவை சிகிச்சை நடக்கும் என்றும், அதில் நான் பிழைப்பது மிக அரிது என்றும் கணித்திருந்தார். என் முடிவு நெருங்கிவிட்டதென்றே தீர்மானித்துவிட்டேன். எப்பொழுதெல்லாம் என் மனம் துயரப்படுமோ, அப்போதெல்லாம் நான் ஆசார்யாளையும் அம்பாளையும் தியானித்து பிரார்த்தித்துக் கொள்வது வழக்கம். இந்த சமயத்திலும் அதையே செய்தேன். அறுவை சிகிச்சைக்கு இரு தினங்களுக்கு முன்னர், மருத்துவமனை அறையில் படுத்திருந்த எனக்கு இரவில் கனவு ஒன்று வந்தது. அதில் இறந்துபோன எனது பெற்றோர்களும், இதர சிலரும் என்னை ஒரு பஸ்ஸிற்கு அழைத்துச் சென்று உட்கார வைப்பதைக் கண்டேன். அதே சமயம், பக்தர்கள் சிலர் சூழ அங்கே வந்த ஆசார்யாள், என்னை உடனடியாக பஸ்ஸிலிருந்து

வெளியேறுமாறு கூறினதையும் கண்டேன். அதிர்ந்து போன நான், உடனே பஸ்ஸிலிருந்து வெளியே குதித்துவிட்டேன். எனக்கு பிரசாதத்தினை அருளினார் ஆசார்யாள். இத்துடன் கனவு முடிய, சிலிர்த்து எழுந்த நான், என்னுடைய வயிற்று வீக்கம் குறைந்திருப்பதைக் கண்டேன். மறு நாள், என்னைப் பரிசோதித்த மருத்துவர்கள் கட்டி மறைந்திருந்ததைக் கண்டு மிகவும் ஆச்சரியப்-பட்டுப்போயினர். பிறகு, சென்னையில் தரிசனம் செய்த போது, நடந்தவற்றை அவரிடம் என் கணவர் விளக்கிய போது, ஆசார்யாள் கூறினார்: "உனக்கு சாரதாம்பாளிடம் அதீத பக்தி உண்டு. அம்பாள் உன்னைக் கைவிடவில்லை."

## ॥ शङ्कराचार्यसंसेवी ॥

# 95. சங்கராசார்ய-ஸம்ஸேவீ

(ஶ்ரீ ஆதிசங்கராசார்யாரை நன்கு சேவிப்பவர்)

"ஶ்ரீ ஆதிசங்கரர் விஷயத்தில் எங்கள் குருநாதர் காட்டிவந்த பக்தியானது சங்கரரின் சன்னிதிக்குச் செல்வது, சங்கரரின் பிரதிமைக்கு பூஜை செய்து வைப்பது என்பதான சாதாரண பக்தி மட்டுமல்ல; ஶ்ரீ சங்கரரையே தமது ஆதர்ச புருஷராகக் கொள்வது, சங்கரரது உபதேசங்களின்படியே தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வது, ஶ்ரீ சங்கரர் எடுத்துரைத்த ஆத்ம தத்துவத்திலேயே மனத்தினை நிலைக்கச் செய்வது, ஜனங்களிடையே ஶ்ரீ சங்கரரின் கொள்கைகளைப் பரப்புவது, சங்கர ஜெயந்தியைச் சிறப்பாகக் கொண்டாடுவது போன்றதான அநேக விதங்களில் வெளிப்பட்டது" என்பதனையே 'சங்கராசார்ய ஸம்ஸேவீ' எனும் இந்த 95வது திருநாமத்தின் மூலம் அறிவிக்கின்றார் ஶ்ரீ பாரதீதீர்த்த மஹா-ஸ்வாமிகள்.

ஶ்ரீ பகவத்பாதரின் அவதாரம் நிகழ்ந்த பூமியான காலடி க்ஷேத்திரத்தின் அபிவிருத்திக்கெனப் பெரிதும் பாடுபட்டுவந்தவர்

ஆசார்யாள். தமது காலத்தில், (சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட) மற்ற மூன்று ஆம்னாய பீடத்து ஆசார்ய புருஷர்களையும் ஒன்றுகூட்டி ஆதிசங்கரரின் கொள்கைகளை ஜனங்களிடையே மேலும் முனைப்புடன் பரப்பிட உதவும் வழிகளை ஆராய்ந்தவர் ஆசார்யாள். சங்கரரின் பாஷ்யங்களிலும் கிரந்தங்களிலும் சுலோகங்களிலும் ஆழ்ந்த அறிவைப் பெற்றவரான ஆசார்ய பெருமான், அவற்றின் உட்கருத்தினைப் பாமரர்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிமையான உபதேசங்களாகச் செய்தருளிவந்தார். ஸ்ரீ பகவத்பாதரால் பயன்படுத்தப்பட்ட எந்த ஒரு வார்த்தையுமே வீணல்ல என்பதையும் பண்டிதர்களின் ஸபைகளில் தம்முடைய ஆணித்தரமான வாதங்களால் நிரூபித்தவர் ஆசார்யாள்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் கொள்கைகளைப் பரப்பிட முனைவோருக்கு மிகவும் ஊக்கமளித்து வந்தவர் ஆசார்யாள். 1987ம் ஆண்டில், இளம் பக்தர்கள் சிலர் ஒன்றுகூடி, ஸ்ரீ சங்கர பகவத்பாதரைப் பற்றியும் அவரது கொள்கைகளைப் பற்றியும் நாட்டு ஜனங்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும் என முடிவு செய்து, சங்கர ஜோதி ஒன்றினை ஏந்தி பாரத தேசமெங்கும் எடுத்துச் சென்றுவர எண்ணம் கொண்டு, அதனைக் காலடியிலிருந்து துவக்கினார்கள். இம்மாபெரும் திட்டமானது எவ்விதத் தடைகளுமில்லாமல் நடைபெற வேண்டுமே என்பதான கவலையோடு ஜோதியை அவர்கள் சிருங்கேரிக்கு எடுத்து வந்த சமயம், ஆசார்யாளின் ஆணையின்பேரில் பீடத்தின் சார்பில் தங்களுக்கு அளிக்கப்பட்ட மிகவும் விமரிசையான வரவேற்பினைக் கண்டு பெரிதும் உற்சாகமானார்கள். ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் பெருமைகளைப் பரப்பும் விஷயத்தில் அந்த இளைஞர்கள் மேற்கொண்டிருக்கும் புனிதப் பயணம் குறித்து மிகவும் ஆனந்தப்பட்ட ஆசார்ய ஸ்வாமிகள், “எல்லாம் நல்லபடியாக நடக்கும். கவலைப்படாமல் போய்வாருங்கள்” என்று அவர்களை ஆசீர்வதித்து வழியனுப்பிவைத்தார். அதன்பின் தாங்கள் சென்ற இடத்திலெல்லாம் சங்கர ஜோதிக்குத் தரப்பட்டுவந்த ஆதரவையும், டெல்லியில் இந்தியப் பிரதமரே முன்னின்று ஜோதியை வரவேற்றதையும், அலஹாபாத்தில் கும்பமேளா நடைபெற்றுக் கொண்டிருந்தபோதும் தங்களது குழுவிற்கு சகல வசதிகளுடன் தங்கி ஸ்ரீ

பகவத்பாத சங்கரரின் உபதேசங்களைப் பரப்பிடுவதற்கு ஸகல ஏற்பாடுகளும் செய்து தரப்பட்டதையும், ஜோதி வைக்கப்பட்டிருந்த முகாமிற்கு ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருகை புரிந்து ஜோதியைத் தரிசித்துச் சென்றதையும் கண்ணுற்ற அவர்கள், ஜகத்குருநாதரின் ஆசீர்வாதத்திற்கு இருந்த வல்லமையைப் பூரணமாகப் புரிந்து-கொண்டனர்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் விஷயத்தில் ஆசார்யாளுக்கு இருந்து வந்த பாவனை எப்படிப்பட்டது? இதனை அவரே கூறியருளிய (பின்வரும்) விஷயத்திலிருந்தே அறியலாம்: “சங்கர பகவத்பாதர் வாழ்ந்த காலத்தில் ஜனங்களிடம் பரமாத்மாவை அறிவதற்கு முயற்சி துளிக்கூட இல்லாமல் போனது. ஆதிசங்கரர் இமயம் முதல் குமரி வரை ஸஞ்சரித்து யார் யார் எந்தெந்த தேவதைகளை உபாஸித்து வந்தனரோ அதைத் தடுக்காமல், அவற்றிலிருந்த தவறான வழிகளை மட்டும் விலக்கி, சரியான வழியைக் காட்டிக் கொடுத்தார். மேலும் சங்கரர், ‘வெவ்வேறு உருவங்களில் ஒரே பிரம்மத்தைத்தான் நீங்கள் ஆராதிக்கின்றீர்கள். ஆதலால் வேற்றுமை உணர்வைத் துறந்து பிரம்மத்தை அவரவர் ருசிக்கேற்ப ஆராதனை செய்து, சித்த சுத்தியை அடைந்து, ஆத்ம ஞானத்தைப் பெற்று பரபிரம்ம ஸ்வரூபமாக விளங்குவீர்களாக’ என்றவாறு உபதேசித்து அருளினார். கிங்கரனாக (தாஸனாக) இருக்கின்ற இந்த ஜீவனைப் பரமேச்-வரனாக்கி வைத்தார் பகவத்பாத சங்கரர். இதைக் காட்டிலும் பெரிய காரியத்தை யார்தான் செய்யமுடியும்? ஆதலால் நாம் அவருடைய ஜெயந்தி நாளன்று அவரை நினைக்காமலும், அவரது பூஜையைச் செய்யாமலும், அவர் காட்டிய வழியினைக் கடைப்பிடிக்காமலும் இருந்திட்டால் செய்நன்றி காட்டாததாகிய தோஷம் நம்மிடத்திலே ஏற்படும்... ஸ்ரீ சங்கரர் காட்டிய பாதையில் சென்று நாம் ச்ரேயஸ்ஸை அடைய வேண்டும் என்பது நமது கடமையாகும்.”

ஸ்ரீ சங்கர பகவத்பாதரைப் போற்றி கீழ்க்கண்ட அழகியதொரு ஒரு சுலோகத்தினையும் ஆசார்யாள் இயற்றியுள்ளார்:

ஆக்ராந்தாம் ரத்னகர்பாம் தனுதனுஜ ஜுஷாம் ஸௌகதைரம்சபேதை
ஸ்தான்ஸர்வாந்த்ராவயித்வா பரமதபிதுரை: யுக்திவ்ருந்தைரபேத்யை:|

ஸ்வஸ்தாம் சக்ரேத யஸ்ஸ ச்ருதிகமலரவிர்தக்ஷிணாமூர்த்தி ரூபோ
நோऽத்வைதாசார்யவர்யோ பவஜனிதபியாம் சங்கர: சங்கரோது ||

{அசுரர்களுக்குப் பிரியமானவர்களும், பூமியைக் கைப்பற்றி-விட்டவர்களுமான பௌத்தர்களை, முரணான கோட்பாடுகளைத் தகர்க்கும் எண்ணற்ற மற்றும் வெல்ல முடியாத வாதங்களால் அவர்களது பிரிவுகளுடன் விரட்டியடித்து, பூமியை அதனுடைய பவித்ரமான நிலைக்கு மீட்டுத் தந்தவரும், வேதங்களாம் தாமரைகளுக்கு சூரியனானவரும், தக்ஷிணாமூர்த்தி வடிவானவரும், நமது ஸத்குருவும், அத்வைதத்தின் தலையாய குருவுமான சங்கரர், ஸம்ஸாரப் பயத்திலுள்ளோருக்கு ஆனந்தத்தை அருளட்டும்.}

௵❀௵

## ॥ शङ्काद्रिभिदुरोपमः ॥

## *96. சங்காத்ரி-பிதுரோபம:*

*(சந்தேகமாம் மலையை நொறுக்கும் வஜ்ராயுதமானவர்)*

ஸத்குருவாம் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த சங்கராசார்ய மஹாஸ்வாமிகள் அவர்கள், சந்தேக நிவர்த்திக்கெனத் தம்மிடம் வந்திடுகின்ற அனைத்து ஆஸ்திக ஜனங்களுக்கும் நேரம் ஒதுக்கி, தர்மம், கர்மா, பக்தி, யோகம், ஞானம் போன்ற பற்பல ஆன்மிக விஷயங்களில் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை முற்றிலும் நீக்கியருளி அவர்களது ஆன்மிக முன்னேற்றம் எவ்விதத் தங்கு தடையும் இல்லாது தொடர்ந்திட வழிசெய்துவந்தார். அவரது விளக்கங்கள் அனைத்தும் சாஸ்திரங்களின் விதிகளை மீறா-வண்ணமும், கேட்டவருக்குத் திருப்தியளிப்பனவாகவும் இருந்து வந்தன. பின்வருவன இதற்குச் சில எடுத்துக்காட்டுக்களாகும்.

“சில சமயங்களில் எது சரி எது தவறு என்று தெரிந்தும் மனதில் குழப்பம் இருக்கும். இது ஏனென்றால் எது தவறோ அது எளிதாக இருக்கும்; எது சரியோ அது நமக்குக் கடினமானதாக இருக்கும். இதனால்தான் குழப்பம் ஏற்படுகின்றது. அம்மாதிரியான சமயங்-

களிலும் சரியான வழியானது எதுவோ அதையேதான் கடைப்பிடிக்க வேண்டும். நமக்கு ஸௌகர்யம் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் நல்ல வழியே நமக்குச் சிறந்தது. எது சரி, எது தவறு என்பதனைப் பற்றி அறிந்துகொள்ள நாம் சாஸ்திரங்களின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். சாஸ்திரங்களின் விஷயத்தில் நமக்கு அறிவு அவ்வளவு இல்லாவிட்டாலும், மகான்கள் இது போன்ற சூழ்நிலையில் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்று கவனித்து நாமும் அதுபோலவே நடந்துகொள்ள வேண்டும். (செய்ய வேண்டியதான விஷயத்தில்) ஒருவனுக்குச் சந்தேகங்கள் ஏற்படும் போது குருவிடம் சென்று அவன் அதனை போக்கிக்கொள்ள வேண்டும். அது இயலவில்லையென்றால் புனிதமான சான்றோரிடம் சென்று கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். சில சூழ்நிலைகளில் அந்தச் சமயத்திலேயே முடிவெடுத்தாக வேண்டிய நிலையும் வந்துசேரலாம். அச்சமயங்களில் அவ்விஷயத்தில் மனதில் குழப்பம் இருக்கலாம். சென்று கேட்பதற்கும் தகுந்தவர்கள் இல்லாதிருக்கலாம். இது போன்ற சமயங்களில் ஒருவன் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு, எதைச் செய்ய வேண்டுமென்று அவனது மனதினில் தோன்றுகின்றதோ அதுபோல் செய்யலாம். ஆனால் குறிப்பாக இச்சமயங்களில் நமது மனம் ஆசையினால் தூண்டப்பட்டு நம்மைத் தவறான வழிக்கு அழைத்துச்செல்கிறதா என்பதைக் கவனித்துச் செயல்பட வேண்டும்.''

********

தற்காலத்தில் நிலவி வரும் சூழ்நிலைகளில் சாஸ்திரக் கட்டளைகளைச் சரிவரப் பின்பற்ற முடிவதில்லையாதலால் அந்தந்த காலங்களுக்கேற்ப சாஸ்திர விதிகளிலும் மாற்றங்களைச் செய்ய-வேண்டுமல்லவா எனும் சந்தேகத்திற்கு ஆசார்யாள் அளித்த பதில்: ``(சாஸ்திர) விஷயங்களில் நாம் குறுகிய கண்ணோட்டத்துடன் இருந்திடுவது கூடாது. லஞ்சம் என்பது தற்காலத்தில் பெருகி வருகின்றது. அதற்காக 'லஞ்சம் கொடுப்பதும் வாங்கிக்கொள்வதும் சரியே' என்று ஒரு சட்டம் இயற்றிவிட முடியுமா என்ன? அப்படி இயற்றினோமானால் அது லஞ்சம் வாங்கும் பழக்கத்தை மேலும் அதிகரிக்கத்தானே உதவும்? மேலும், நமது வாழ்க்கை முறையில்

ஏற்படுகின்ற மாற்றங்களுக்கேற்ப "எந்த அளவிற்கு இயலுமோ அந்த அளவிற்கு சாஸ்திர விதிகளைப் பின்பற்ற வேண்டும்" என்ற விஷயமும் சாஸ்திரத்திலேயே உள்ளதே. இதையொட்டியே கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் 'ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோபயாத்' (சிறிதளவே செய்யப்பட்ட தர்மமும் ஒருவனை பெரும் பயத்திலிருந்து காக்கின்றது) என்று உபதேசித்திருக்கின்றார். ஆகவே, சாஸ்திர விதிகளை மாற்ற வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது சரியல்ல! மேலும், சாஸ்திர விதிகளில் மாற்றத்தினைச் செய்ய முக்காலத்தினையும் அறிந்தவரான ஒருவரால்தான் முடியும். கர்மாவானது அதற்கான பலனை எவ்விதம் ஒருவருக்குக் கொடுக்கின்றது எனும் சூட்சுமம் நமக்குத் தெரியாதே. 'இந்த விஷயத்தைச் செய்து வா. இது இப்போது கடினமாக இருந்தாலும் இதனால் உனக்கு பிற்காலத்தில் பெரும் நன்மை உண்டாகும்' என்று நாமாக, தன்னிச்சையாக, எப்படி ஒருவருக்கு நிச்சயமாகக் கூற முடியும்? அடுத்த ஜென்மத்தில் நமக்கு என்ன ஏற்படப்போகின்றது என்பதும் நமக்குத் தெரியாது. அதேபோல் முந்தைய ஜென்மத்தில் என்ன நடந்தது என்பதும் நமக்கு ஒருபோதும் தெரிவதில்லை. சுருக்கமாகக் கூறினால், நாம் முக்காலத்தினையும் அறிந்தவர்களாக இல்லையாதலால் சாஸ்திர விதிகளை மாற்றிடும் தகுதியும் வல்லமையும் நமக்குக் கிடையாது."

********

ஆசார்யாளிடம் பக்தர்கள் எழுப்பிய சந்தேகங்களும், அவற்றிற்கு அவர் தந்தருளிய அரிய விளக்கங்களும் புத்தக வடிவில், "ஜகத்குரு பதிலளிக்கிறார்" மற்றும் "Exalting Elucidations" எனும் தலைப்புக்-களில் வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர, ஆசார்யாளின் உபன்யாஸங்கள் மற்றும் கட்டுரைகள் அடங்கிய வெளியீடுகளிலும் கர்மா, பக்தி, ஞானம் ஆகிய மார்க்கத்ங்களில் ஸாதகர்கட்கு ஏற்படக்-கூடிய சந்தேகங்களுக்கான தகுந்த விளக்கங்கள் ஜகத்குருநாதரால் அருளப்பட்டிருக்கின்றன.

ஐஐ❀ஐஐ

## ॥ शमिताखिलसन्तापः ॥

# 97. சமிதாகில–சந்தாப:

(அனைத்துத் தாபங்களையும் போக்கிவிடுபவர்)

"அத்யாத்மிகம் (உடல் மற்றும் மனம் சம்பந்தப்பட்ட உபாதைகள்)", "ஆதிபௌதிகம்" (விஷம், எதிரிகள் போன்ற வெளிவிஷயங்களினால் ஏற்படும் உபாதைகள்) மற்றும் "ஆதிதைவிகம்" (துர்சக்திகள், இயற்கை சீற்றங்கள் போன்றவற்றினால் உண்டாகிடும் உபாதைகள்) எனும் மூன்று வகைத் தாபங்களைப் பற்றி முன்பே நாம் 93வது திருநாம விவரங்களில் கண்டிருக்கின்றோம். தற்போது, இந்த (97ம்) திருநாமமானது, ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த சங்கராசார்ய மஹாஸ்வாமிகள் அவர்கள் தம்மை நாடி வந்தோரது தாபங்கள் அனைத்தையும் போக்கியருளிவந்த விவரத்தினைத் தெரிவிக்கின்றது.

பக்தர்கள் தம்மிடம் தெரிவிக்கும் தாபங்களைப் பற்றிய விவரங்களைக் கவனத்துடன் கேட்டிடும் ஆசார்யாள், அவற்றை சாஸ்திர மற்றும் உலக ரீதியாக நன்கு ஆராய்ந்து, அவற்றிற்கேற்ற தீர்வுகளைக் கூறியருள்வார். மருத்துவ வழிகள், மனோதத்துவ வழிகள், மந்திர உபதேசம், சுலோக ஜபங்கள், யந்திரங்களைப் பூஜித்து அருளல், பிராயச்சித்த கர்மாக்கள், பூஜை பிரசாதங்களைக் கொடுத்து ஆசீர்வதித்தருளல் போன்ற பற்பலத் தீர்வுகளையருளும் ஆசார்யாள், சில சமயங்களில் பக்த ஜனங்களின் தாப நிவர்த்திக்காகத் தாமே இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்வதும் உண்டு!

பக்தர் ஒருவரது மனைவிக்கு ஒரு சமயம் பெரிய அளவில் மனத் தளர்ச்சி ஏற்பட்டு அதன் காரணமாக அவருக்கு நிம்மதியும் உறக்கமும் இல்லாது போய்விட்டது. மனோதத்துவ மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்துத் தந்த மருந்துகளிலும்கூட அவருக்கு நம்பிக்கை இல்லாதுபோய்விட்டது. ஆசார்யாளைத் தரிசித்த அவர் தன்னுடைய இன்னலை குருநாதரிடம் விவரித்தார். அதைக் கவனமாகக் கேட்டுக்கொண்ட ஆசார்யாள், அந்தப் பெண்மணியிடம், "மருத்துவர்கள் கூறுவதை அலட்சியப்படுத்துதல் கூடாது. அவர்கள்

சொல்வதைச் செய்து, மாத்திரைகளையும் உட்கொள்ள வேண்டும். அத்துடன் சேர்த்து 'ஸ்ரீ அர்களா ஸ்தோத்திரத்தையும் தினமும் பாராயணம் செய்யத்துவங்கி, அம்பாளைப் பிரார்த்தித்து வந்திட்டால் குணம் உண்டாகிடும்'' எனக் கூறியருளினார். குருவின் வார்த்தை-களை சிரத்தையுடன் கடைப்பிடிக்கத் துவங்கிய அந்த பக்தைக்கும் சிறிது காலத்திற்குள் அந்தப் பிரச்சினை முழுவதுமாக நீங்கிவிட்டது.

ஆசார்யாளின் காரியதரிசியாக பணியாற்றிய ஸ்ரீ கே.எம். பாலசுப்ரமணியம் அவர்கள் பகிர்ந்துகொண்ட விஷயம் இது: ''சிருங்கேரியில் 01-05-1979 அன்று நடைபெறவிருந்த சதுராம்னாய ஸம்மேளனத்திற்கான (சங்கர பகவத்பாதர் ஸ்தாபித்த நான்கு பீடங்களின் பீடாதிபதிகளின் சந்திப்பு) விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த அரிய நிகழ்ச்சியினைக் காண்பதற்காக, உலகெங்கிலுமிருந்து பக்தர்கள் ஆயிரக்கணக்கில் வந்து சிருங்கேரியில் தங்கியிருந்தனர். ஆனால், வானத்தில் கருமேகங்கள் அடர்ந்து தோன்றவே, எந்த நேரத்திலும் மழை ஆரம்பித்துவிடலாம் எனும் நிலை இருந்தது. மழை வந்ததானால், நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்திருக்கும் பக்தர்கள் பெரும் அவதிக்குள்ளாவார்கள் என்பதால் கவலையடைந்த எங்களில் சிலர், அதனை, அச்சமயம் ஆற்றினைக் கடந்து வந்துகொண்டிருந்த ஆசார்யாளிடம் வெளிப்படுத்தினோம். முகத்தில் ஒரு சிறிதும் மாற்றத்தினைக் காட்டாத ஆசார்யாள், வானத்தைப் பார்த்தார். பிறகு, எங்களிடம் தமது குரலில் ஓர் உறுதி தொணிக்கக் கூறினார்: 'மங்களகரமான நிகழ்ச்சிகளுக்கு பகவான் எவ்விதமான இடையூறும் ஏற்பட விடமாட்டான்.' விளைவு? ஒரு சொட்டு மழைகூட வரவில்லை!''

ஸ்ரீமதி வைகுண்டம் அனந்தராமசேஷன் அவர்கள் பின்வரும் சம்பவத்தினைக் குறிப்பிட்டார்கள்: ''ஒருமுறை ஆசார்யாள் கிக்காவில் உள்ள நரசிம்ம பர்வதத்திற்கு விஜயம் செய்த சமயம், என் கணவரும் நானும் அங்கு போயிருந்தோம். மதியம் சுமார் 3 மணி அளவில் மலையிலிருந்து கீழே இறங்க அனைவரும் தயாரானோம். வானத்தில் மழை மேகங்கள் சூழ்ந்து எந்த நேரத்திலும் கனமழை ஆரம்பித்துவிடும் போல் இருந்தது. அனைவரிடமும் ஆசார்யாள் தமது தீர்மானமான குரலில், ''எல்லோரும் உடனே கிளம்பிவிடலாம்.

நாம் கீழே போய்ச்சேரும் வரை மழை நம்மை பாதிக்காது'' என்று கூறினார். நாங்கள் இறங்கிக் கொண்டிருக்கும் சமயம் துவங்கிய மழையானது எங்களது இரு புறமும் பெய்து கொண்டிருந்ததே தவிர நாங்கள் இறங்கிக்கொண்டிருந்த பாதையில் பெய்யவேயில்லை. இதில், மேலும் ஆச்சரியகரமான விஷயம் என்னவென்றால், எங்களைப் பின்தொடர்ந்தும் மழை வந்துகொண்டிருந்ததே தவிர, எங்களைக் கடந்து அது போகவேயில்லை! கீழே இருந்த வாஹனங்களை நாங்கள் அடைந்தவுடன், ஆசார்யாள் கூறினார்: "எல்லோரும் அவரவர் வாஹனங்களில் விரைந்து ஏறிக்-கொள்ளுங்கள். இயற்கையைச் சோதித்தது போதும்.'' நாங்கள் அனைவரும் எங்களது வாஹனங்களில் ஏறிக்கொண்டதுதான் தாமதம், கடுமையான மழை அங்கு பெய்யத் துவங்கிவிட்டது!''

பக்தர் ஒருவருக்கு விநோதமான பிரச்சினைகள் ஏற்படத் துவங்கின. இரவில் தமது வீட்டின் மேல் கற்கள் விழுவது, உடல் முழுவதும் கொப்புளங்கள் தோன்றி மறைவது, விதவிதமான உடல் உபாதைகள் ஏற்படுவது என அவர் இன்னல்கள் பலவற்றை அனுபவித்துவந்தார். விஷயம் ஆசார்யாளுக்குத் தெரிவிக்கப்பட்டது. விவரங்களை ஆராய்ந்த ஜகத்குருநாதருக்கு அவரைப் பிடிக்காத சிலர் அவரது மேல் துர்சக்திகளை ஏவி விட்டிருக்கின்றார்கள் என்பதை ஊகிக்க முடிந்தது. ஆசார்யாளின் வழிகாட்டுதலின்பேரில், அந்தப் பக்தரின் சார்பாக ஒருவர் திருவாங்கூர் பகுதியில் வசிக்கும் மந்திரதந்திர சாஸ்திர விற்பன்னர் ஒருவரை அணுகி, பரிகாரத்தைக் கேட்டிட, அவரும் அம்மாதிரி இன்னல்களுக்குக் காரணம் என்ன என்பதைத் துல்லியமாகக் கண்டுபிடித்துக் கூறியதுடன், அந்த துர்சக்தியையும் பலமிழக்கச் செய்யவல்ல, குறிப்பிட்ட ஒரு வேத மந்திர உச்சாடனத்தின் விவரங்களையும் உடனே அளித்துதவினார். அதன் பிறகு, வேதபண்டிதர் ஒருவரை அந்தப் பக்தரின் இல்லத்திற்கு அனுப்பிவைத்து, அந்த மந்திர உச்சாடனமும் உரிய முறையில் செய்யப்பட ஆசார்யாளே வழி செய்தருளினார். பக்தரின் பிரச்னையும் முடிவுக்கு வந்துவிட்டது!

'இந்த மூவகைத் தாபங்களிலிருந்தும் நாம் விடுபடத் தற்காலிகமான தீர்வுகளாக எத்தனையோ வழிகள் இருப்பினும், பூரணமாக விடுபடும்

வழியானது ஆத்ம ஞானத்தை அடைவது ஒன்றே' என்பதை ஆசார்யாளே பற்பல தருணங்களில் சுட்டிக்காட்டி வந்தார். தாம் பெற்ற அந்த நிரந்தர சுகத்தை இவ்வுலகோரும் பெற்றிட வேண்டும் என்று விரும்பிய அவர் அந்த நித்திய சுகத்தை அனைவரும் அடைந்திட, உரிய வழிகளையும் மிகுந்த கருணையுடனும் ஆர்வத்-துடனும் அனைவருக்கும் மிக விரிவாக எடுத்துரைத்து வந்தார். அனுகம்பா ஸரித்பதியல்லவா அவர்!

## ॥ शमादिसुगुणालयः ॥

## 98. சமாதி-ஸுகுணாலய:

(சமம் முதலிய நற்குணங்களது உறைவிடமானவர்)

சமம் முதலிய நற்குணங்கள் என்பது 'சமாதி ஷட்க ஸம்பத்து' எனப்படும் சமம், தமம், உபரதி, திதிக்ஷா, சிரத்தை, சமாதானம் ஆகிய ஆறினைக் குறிக்கின்றது. 'சமம்' என்றால் மனத்தை ஒருநிலைப்படுத்துவதாகும். 'தமம்' என்பது புலனடக்கத்தைக் குறிக்கின்றது. 'உபரதி' என்பது விஷய போகங்களிலிருந்தும், பந்தத்தை ஏற்படுத்தும் செயல்களிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்வதைக் குறிக்கின்றது. 'திதிக்ஷா' என்பது ஒரு கஷ்டம் வரும்போது அதிலிருந்து விடுபட வழியெதையும் தேடாமலும், அதைப் பற்றிக் குறைப்பட்டுக் கொள்ளாமலும் மற்றும் அது குறித்த கவலையும் கொள்ளாமலும், அமைதியாயிருந்து அதனைப் பொறுத்துக்கொள்ளும் குணமாகும். சாஸ்திரங்களின் வார்த்தைகளும் ஸத்குருவின் வார்த்தைகளும் ஸத்தியமே எனும் திடமான நம்பிக்கையே 'சிரத்தை' எனும் பதத்தினால் குறிக்கப்படுகின்றது. எவ்வித முயற்சியும் இன்றி தானாகவே மனது ஆன்மிக லக்ஷியத்தில் நிலைத்துவிடுவதே 'சமாதானம்' என்பதாகும். இக்குணங்கள் அனைத்தையும் பெற்று ஒளிர்ந்தவர் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த

மஹாஸ்வாமிகள் அவர்கள் என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் போற்றுகின்றார்.

சமத்தையடைந்த மனம் (ஒருநிலைப்பட்ட மனம்) என்பதற்கு நிகரற்ற உதாரணமாகத் திகழ்ந்ததொரு மனத்தினை உடையவராக ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் விளங்கினார். 'தமம்' எனப்படும் இந்திரிய நிக்ரஹம் (புலனடக்கம்) ஆசார்யாளிடம் விசேஷமாகக் காணப்பட்டமையை "தாந்த்யாதி பரிசோபித:" மற்றும் "வசீக்ருதேந்த்ரிய க்ராம:" எனும் திருநாம விளக்கங்களில் கண்டோம். இதே போல் ஸத்குருநாதரிடம் 'உபரதி, திதிக்ஷா, சிரத்தை' ஆகிய மற்ற நற்குணங்களும் நிறைந்து விளங்கியதையும் நாம் முன்னரே பற்பல திருநாம விளக்கங்களில் கண்டிருக்கின்றோம். ஆடாது அசையாது மனது தானாகவே ஆன்மிக லக்ஷியத்தில் நிலைத்து விடுவதான 'சமாதானம்' எனும் அரிய குணம் ஆசார்யாளிடம் இயற்கையாகவே இருந்துவந்தது. தமது சிறு வயதில் பகவான் ஸ்ரீ மஹாகணபதியின் விக்ரஹத்தினைப் பூஜித்து வந்த சமயத்திலும், தமது குருநாதரிடம் சரணடைந்து அவரது திருவடிகளே தமக்கு கதி என மனது தீர்மானித்த சமயத்திலும், தமது தீவிர தியானப் பயிற்சியின் இறுதிக் கட்டமாக பகவான் பரமேச்வரன் தம் முன் தோன்றி ஆத்ம விசாரத்தினைத் துவங்குமாறு தமக்கு அருளிய சமயத்திலும், பின்பு நிர்குண பிரம்மத்தில் மனதை லயிக்கச் செய்த சமயத்திலும், ஆசார்யாளின் மனது ஒரு சிறிதும் அலை பாயாமல், தனது லக்ஷியத்தில் நிலைத்து நின்றது. தம்மால் எடுத்துக் கொள்ளப்பட்ட விஷயங்களைத் துவக்கிடுவதற்கான ஆரம்பக்கட்ட முயற்சியைத்தான் ஆசார்யாள் எடுக்கவேண்டியிருந்ததே தவிர, தம்முடைய மனத்தைத் தொடர்ந்து அவற்றில் ஈடுபடச் செய்ய இடைவிடா முயற்சி என்று எதுவும் ஆசார்யாளுக்குத் தேவைப்பட்டதில்லை! துவக்கப்பட்ட எந்த ஓர் ஆன்மிக விஷயத்திலும் பசுமரத்தாணி போல் ஆசார்யாளின் மனது தானாகவே நிலைக்கத் துவங்கிவிடுமளவிற்குப் பக்குவப்பட்டிருந்தது!

॥ श्रीविद्याजपनिष्णातः ॥

## 99. ஶ்ரீவித்யாஜப-நிஷ்ணாத:

(ஶ்ரீவித்யா ஜபத்தில் ஈடுபாடுள்ளவர்)

சிருங்கேரி ஶ்ரீ சாரதா பீடத்து சிஷ்ய ஸ்வாமிகளுக்கு பீடத்தின் ஸம்பிரதாயங்களையொட்டி, அவரது குருநாதர் பற்பல மந்திரங்களை உபதேசிப்பார். அவற்றுள் ஶ்ரீவித்யா மந்திரமும் ஒன்று. தமது ஸன்யாஸ தீக்ஷைக்குப் பின்பு தமது குருநாதரிடமிருந்து ஶ்ரீவித்யா மந்திரத்தைக் கிரமமாகப் பெற்றுக்கொண்ட ஆசார்யாள் அதனை தமக்கே உரித்தான மிகுந்த சிரத்தையுடன் ஜபித்து வரத் துவங்கினார். அத்துடன் தமது தியான பயிற்சியையும் செய்து வந்த அவருக்கு விரைவிலேயே ஸவிகல்ப ஸமாதி ஸித்தித்தது. அம்பாளின் தரிசனமும் ஶ்ரீ பாலாம்பிகையின் தரிசனமும் கிட்டியது. அந்த அனுபவத்தைப் பற்றி அவர் கூறியதாவது: "அன்றைய தினம் வழக்கம் போல் பாலாம்பாளின் முழு உருவத்தையும் தியானம் செய்துகொண்டிருந்தேன். அச்சமயம் எனது மனம் திடீரென அம்பாளின் பாதங்களில் நிலைகொண்டுவிட்டது. அம்பாளின் பாதங்கள் உயிரோட்டத்துடன் தெரிவதைக் கண்டேன். முந்தைய தினங்களில் தியானத்திற்குரிய வடிவாகத் தெரிந்துவந்த அம்பிகையை இப்போது நேரடியாகவே தரிசனம் செய்தேன். அதுவே எனது முதல் ஸவிகல்ப ஸமாதி அனுபவமாகியது."

ஶ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களும் ஒரு சமயம் ஆசார்யாளிடம் தமக்கேற்பட்ட ஓர் அனுபவத்தைப் பற்றிக் கூறினார்: "எனக்கு ஸன்யாஸம் அளித்த பின்பு ஒரு நாள் ஆசார்யாள் எனக்கு ஶ்ரீவித்யா மந்திரத்தை உபதேசிக்கத் துவங்கினார். அச்சமயம் அம்மந்திரத்தின் தியான சுலோகத்தினை அவர் கூறத் துவங்கிய சமயம், திடீரென அவர் தமது உடலையும் மற்றும் சுற்றியுள்ள அனைத்தையும் மறந்தவராய் அசைவற்று அமர்ந்துவிட்டார். பிறகு, சிறிது நேரத்தில் தமது இயல்பான நிலைக்குத் திரும்பிய அவர், என்னிடம் கூறினார்: "ஸ்வாமிகளே, நீங்கள் பாக்கியசாலி. நான் தியான சுலோகத்தை உச்சரிக்கத் துவங்கிய போது, உள்ளத்தைக்

கொள்ளை கொள்ளுவதான வகையில் அம்பாளின் தரிசனம் எனக்குக் கிட்டியது. அப்படியே ஸமாதியில் ஆழ்ந்துவிட்டேன்.''

அம்பாளிடம் ஆசார்யாளுக்கு இருந்துவந்த மிக ஆழ்ந்ததான பக்தியின் காரணமாக, ஜகன்மாதாவான அம்பாளுக்கே உரித்ததான தனிப்பெரும் கருணையானது ஆசார்யாளிடமும் ஊற்றெடுத்து ஓடியது. ஒரு தாயார் எங்ஙனம் தன்னுடைய குழந்தைகளைக் கவனமாகக் காத்திடுவாளோ அங்ஙனமே காருண்ய மூர்த்தியாம் ஆசார்யாளும், தம்மை நாடிவந்தோர் அனைவரையும் அரவணைத்து, அவர்களுக்குப் பெரும் நன்மையைத் தரக்கூடியதான அம்பாளின் வழிபாட்டு விஷயங்களை அருளிவந்தார். பின்வரும் சம்பவங்கள் இதற்குச் சில உதாரணங்களாகும்.

தூத்துக்குடி நகரில் தாம் அருளிய உபன்யாஸம் ஒன்றினில் ஆசார்யாள், தேவி மஹாத்மியத்தில் 11ம் அத்தியாயத்தில் உள்ள தேவி ஸ்துதியை நித்தியமும் பாராயணம் செய்துவருவோருக்கு இன்னல்கள் நீங்கி, பெரும் நன்மைகள் உண்டாகிடும் என்பதைக் கூறி, அங்கு கூடியிருந்த அனைவரையும் அந்த சுலோகங்களைத் தினமும் பாராயணம் செய்யத் துவங்கிடும்படி உபதேசித்தார். மற்றொரு சமயம், மத்திய பிரதேசத்தில் உள்ள பரமஹம்ஸி கங்காசிரமத்தில் அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் ஆலயக் கும்பாபிஷேகத்தினைச் செய்துவைத்ததன் பிறகு தாம் செய்த உபன்யாஸத்தில், அம்பாளை உபாஸித்து வருவதினால் உண்டாகிடும் பலன்களை கருணையுடன் விவரித்தருளினார் ஆசார்யாள்: "கண்களை மூடிக்கொள்ளுங்கள். தலையில் ஸஹஸ்ராரச் சக்ரத்தைச் சிந்தியுங்கள். பிறகு அம்பாள் அங்கு அமர்ந்திருப்பதாகவும் அம்ருதத்தைப் பொழிந்து கொண்டிருப்பதாகவும் கற்பித்துக் கொள்ளுங்கள். அந்த அம்ருதம் கீழே இறங்குவதாகவும் வயிற்றை நிரப்புவதாகவும் உணர்ந்து கொள்ளுங்கள். இந்த மாதிரியாக உபாஸிப்பதால் நீங்கள் நீண்ட ஆயுளைப் பெறலாம். மேலும், செல்வத்தினை வேண்டுபவர்கள், தங்கமயமாக ஒளிர்பவளாக அம்பாளைத் தியானித்திட வேண்டும். மேலும், கல்வியும் நாவன்-மையும் வேண்டுவோர் அம்பாளை எட்டு வர்கங்களுடன் பொருந்திய-

வளாகவும், வசினீ முதலிய தேவதைகளால் சூழப்பட்டவளாகவும், வெண்மை ஒளிர வீற்றிருப்பவளாகவும் தியானிக்கவேண்டும்...''

இந்த அருளுபதேசங்கள் அங்கே கூடியிருந்தோருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தன.

## ॥ श्रीचक्रार्चनतत्परः ॥

# 100. ஸ்ரீசக்ரார்ச்சன-தத்பர:

(ஸ்ரீசக்ரத்தை அர்ச்சிப்பதில் ஈடுபாட்டினை உடையவர்)

ஸ்ரீ வித்யா என்பது ஸ்ரீ லலிதா பரமேச்வரியின் திருநாமங்களில் ஒன்று. ஸ்ரீ சக்ரம் என்பது தேவியின் யந்திரமாகும். ''ஸ்ரீசக்ரராஜநிலயா'' என்றன்றோ ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் தேவி பராசக்தி போற்றப்படுகின்றாள்! ஸ்ரீவித்யா மந்திர தீக்ஷையுடன் சேர்த்து ஸ்ரீசக்ர பூஜையினைச் செய்வதற்கான கிரமங்கள் அனைத்தும் புதிய பீடாதிபதிக்கு உபதேசிக்கப்படும். இந்த ரீதியில், பீடத்தின் 35வது ஜகத்குருநாதராகப் பொறுப்பேற்றுக்கொண்ட ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளும் ஸம்பிரதாய பூஜைக் கிரமங்களை சிரத்தையுடன் கற்றுக்கொண்டார்.

ஆசார்யாளின் குருவும், ஜீவன்முக்தருமான ஸ்ரீமத் சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களும், அரியதொரு பொக்கிஷமாகத் தமக்குக் கிடைத்திருக்கும் தமது சீடரை அனைத்து நிலைகளிலும் பராசக்தியின் அம்சங்கள் காத்து நின்றிட (அவரே இயற்றியருளிய பின்வரும் சுலோகத்தின் மூலம்) ஆசீர்வதித்ததும் நடைபெற்றது.

''வாணீ லக்ஷ்மீஸ்ததா கௌரீ திஷ்டந்தம் நித்ரயா யுதம் |
கச்சந்தமுபவிஷ்டஞ்ச பாந்து த்வாம் குருசேகரம் ||

{நீங்கள் துயிலும்போதும், அமர்ந்திருக்கும்போதும், நிற்கும்போதும், நடக்கும்போதும், வாணி, லக்ஷ்மி மற்றும் கௌரி ஆகியோர் குருநாதர்களில் தலைசிறந்தவரான உங்களைக் காப்பார்களாக.}

ஸ்ரீவித்யா மந்திர ஜபத்தினையும், ஸ்ரீசக்ரத்து பூஜையினையும் அவருக்கே உரித்தான அபார பக்தி சிரத்தையுடனும், மனமொன்றிய நிலையிலும் ஆசார்யாள் செய்துவந்தார். கண்ணைக் கவரும் விதவிதமான மலர்களால் ஸ்ரீ சக்ர அர்ச்சனையை ஆசார்யாள் செய்வதனைக் காண்போர் மனமானது ஆனந்தக் கடலில் ஆழ்ந்துவந்தது. அவருடைய புனிதக் கரத்தினால் செய்யப்பட்ட ஸ்ரீசக்ர பூஜைப் பிரஸாதத்தினைப் பெற்றுக்கொள்வதை ஆஸ்திக ஜனங்கள் தங்களுக்குக் கிட்டிடும் பெரும் பாக்கியமாகக் கருதி வந்தனர். ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் தமது அருளுரை ஒன்றின் போது குறிப்பிட்டதாவது: “எங்கள் ஆசார்யாளுக்கு ஸ்ரீசக்ர பூஜையில் மிகவும் ஈடுபாடு இருந்துவந்தது. ஸ்ரீசக்ர பூஜையைச் செய்வதிலிருந்து அவர் தவறியதே இல்லை. ஒரு முறை, அவருக்கு மிகவும் உடல்நலக் குறைவு ஏற்பட்டிருந்தது. ‘இன்று ஸ்ரீசக்ர பூஜையை நான் செய்துவிடட்டுமா?’ என நான் அவரிடம் கேட்டேன். அவரோ, ‘வேண்டாம் ஸ்வாமிகளே, நானே செய்துவிடுகிறேன்’ என்றார். ‘ஆசார்யாளுக்கு உடல்நலக் குறைவு இருக்கின்றதே. பூஜையைச் செய்திட ஆசார்யாளுக்கு சிரமமாக இருக்குமே’ என்றேன். ‘அது பரவாயில்லை, ஸ்வாமிகளே. நானே செய்து விடுகிறேன்’ என்று சொல்லிவிட்டார் அவர்.”

ஆஸ்திக ஜனங்களுக்கு, குறிப்பாக பராசக்தி வழிபாட்டில் ஆர்வம் உடையோருக்குப் பயனளிக்கும் வகையில், ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் செய்து காட்டிய சக்தி உபாஸனை விளங்கிவந்தது.

## ॥ श्रीशेशभेदरहितः ॥

# 101. ஸ்ரீசேச-பேத-ரஹித:

(திருமால்-சிவன் என்ற வேற்றுமை பாராட்டாதவர்)

அருள் கமழும் 108 திருநாம மலர்களைக் கொண்ட இந்த ஸ்தோத்திர மாலையின் முதலாம் அருள்நாம மலரிலேயே "அத்வைத வித்யையில் ஆனந்திப்பவருக்கு நமஸ்காரம்" என்று தமது குருநாதரை ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் போற்றித் துவங்கியதை நாம் அறிவோம். தமது குருநாதர் பேதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்பதையே இதன் மூலம் அவர் பதிவு செய்து துவக்கியிருப்பதை நாம் உணரலாம்.

ஜீவ-பிரம்ம ஐக்கியத்தை உணர்த்தும் அத்வைத ஞானானந்தத்தினில் என்றென்றும் திளைத்துவந்தவரான ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள், பரமாத்மாவில் விஷ்ணு-சிவன் என்றிடும் பேதத்தினை எள்ளளவும் அனுமதித்ததில்லை! மேலும், இம்மாதிரியான பிரிவினை வாதங்களை அவர் பெரிதும் கண்டித்தே வந்தார். தாம் சென்ற இடங்களிலெல்லாமே சிவ-விஷ்ணு ஐக்கியத்தைப் போதித்தும் வந்தவர் அவர்! உதாரணத்திற்கு, 1980ம் ஆண்டில் இராமேஸ்வரத்தில் அவர் முகாமிட்டிருந்த சமயம், ஜனங்களுக்கு அவர் அருளிய உபன்யாஸத்தில் இடம்பெற்ற கீழ்க்கண்ட கருத்துக்கள் இங்கே கவனிக்கத்தக்கவை: "இங்கே, இராமேஸ்வரத்தில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தால் எப்பேற்பட்ட மஹாபாபங்களும் போய்விடும் என்பதற்கு பகவானான ராமபிரான் இங்கு வந்து சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்ததே சான்றாகும். இங்கு வந்து இந்த கரையில் இறங்கிய உடனேயே ராமர் சிவலிங்கப் பிரதிஷ்டைதான் செய்தார்; லிங்கத்திற்கு இராமேஸ்வரன் என்ற பெயரையும் வைத்தார். இராமேஸ்வரன் என்றால் என்ன அர்த்தம்? ஒரு விதமாகப் பொருளை எடுத்துக்கொண்டால், இராமேஸ்வரத்தில் விளங்குகின்ற சிவன் ராமனுக்கு நாதன் என்று வரும். ஆனால், சிவனிடம், இராமேஸ்வரன் என்ற சப்தத்திற்கு என்ன பொருள் என்று கேட்டால், அவர், 'ராமோ

ஈச்வர: யஸ்ய ஸ:' (எவனுக்கு ராமன் ஈச்வரனாக இருக்கிறானோ அவன்...) என்பார். அதாவது, ராமனை ஈச்வரனாகக் கொண்ட நான் இங்கு இருக்கின்றேன் என்பார். பத்மபாதர் ஓரிடத்தில், ராமன், சிவன் இருவரும் ஒன்றுதான் என்பதைக் கூறும் வண்ணம் 'ராமச்ச அஸௌ ஈச்வர:' (ராமனாயும் ஈச்வரனாயும் உள்ளவன்) என்று கூறினார். நாமும், சில சம்பிரதாய வழக்கங்களில் "சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோச்ச ஹ்ருதயம் சிவ:" (சிவனின் ஹ்ருதயமாக விஷ்ணுவும், விஷ்ணுவின் ஹ்ருதயமாக சிவனும் விளங்குகின்றனர்) என்று கூறுகிறோமே... இவ்வாறு ராமனே சிவனாக விளங்கும் இடம்தான் இந்த இராமேஸ்வரம். "யதாந்தரம் ந பச்யாமி ததா மே ஸ்வஸ்திராயுசீ" (வேற்றுமை பாராட்டாமல் இருப்பதினால் எனக்கு நீடித்த ஆயுள் இருக்கட்டும்) என்றும் ஒரு மேற்கோள் வருகின்றது..."

"பரமாத்மாவானது ஒன்றுதான்; நம் மன விருப்பங்களுக்கேற்பப் பற்பல தெய்வீக ரூபங்களில் அது காட்சியளிக்கின்றது" எனும் உண்மையினை அனுபவ பூர்வமாக அறிந்தவரான ஆசார்யாள் தாம் நிகழ்த்திடும் நித்தியபூஜையிலும் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர லிங்கத்துடன் ஸ்ரீவிஷ்ணுவின் சாளக்ராமத்தினையும் வைத்து ஆராதித்துவந்தார். ஸ்ரீ நரசிம்மரைத் தமது இஷ்ட தெய்வமாகவும் கொண்டிருந்தார். அவரைப் பொறுத்தமட்டில் சிவனும் விஷ்ணுவும் ஒன்றே.

॥ श्रीनृसिंहपदार्चकः ॥

## 102. ஸ்ரீந்ருஸிம்ஹ-பதார்ச்சக:

(ஸ்ரீ நரஸிம்மரின் பாதங்களை வழிபடுபவர்)

மஹாவிஷ்ணுவின் அவதார ரூபமாகிய ஸ்ரீ நரஸிம்ம ரூபத்தினைத் தமது இஷ்ட தேவதா ரூபமாகக் கொண்டு, பகவானின் பாதாரவிந்தங்களைத் தமது இதயத்தில் நிலைநிறுத்தி என்றென்றும் ஆராதித்து வருவதில் பெரும் விருப்பமும் கொண்டிருந்தார் ஆசார்யாள். ஸ்ரீ நரஸிம்மரின் மேல் ஆசார்யாளுக்கு இருந்துவந்த

பக்தி மிகவும் ஆழமானது. ஈச்வர பக்தி என்பதற்கோர் இலக்கணத்தையே வகுத்திடுவதாகவும் அமைந்திருந்தது அது! ஒருமுறை, பால ஸன்யாசியாக விளங்கிய ஆசார்யாளுக்கு அவரது குருநாதரான ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ நரஸிம்ம கவச மந்திரத்தினை உபதேசிக்கையில் ஆசார்யாளின் உருவம் மறைந்து அங்கே ஸ்ரீ நரஸிம்மரின் உருவம் தோன்றியதைக் கண்டு அதிசயித்தார். சிறிது நேரத்தில் பகவானின் வடிவம் மறைந்து மீண்டும் ஆசார்யாளின் திருவுருவம் தோன்றியதும் தமது மந்திர உபதேசத்தினை மீண்டும் தொடர்ந்தார் அவர். அந்த கணத்திலிருந்தே தமது இதயத்தில் பகவான் ஸ்ரீ நரஸிம்மர் நிரந்தரமாகக் குடியேறிவிட்டதை ஆசார்யாள் உணர்ந்தார். அது முதல் தாம் செய்யும் அனைத்துக் காரியங்களையும் ஸ்ரீ நரஸிம்மருக்கே அர்ப்பணித்திடுவதான கர்ம யோகத்தினையும் ஆசார்யாள் கடைப்பிடித்துவரத் துவங்கினார். பின்வரும் விஷயங்கள் ஆசார்யாளின் நரஸிம்ம பக்தி சிறப்பினைக் காட்டுகின்றன:

ஸ்ரீ நரஸிம்ம ஜெயந்தி நன்னாளில் ஆசார்யாள் செய்திடுகின்ற விசேஷ பூஜையின் இறுதியில், ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள நரஸிம்மரின் அவதாரம் பற்றிய சுலோகங்களை அவர் பாராயணம் செய்திடும் சமயத்தில், பக்தி மேலீட்டால் அவரது தாமரைக் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியோடுவதனை அங்குக் கூடியிருக்கும் பக்தர்கள் காணுவதுண்டு. ஸ்ரீ நரஸிம்மரின் சன்னிதிக்கு ஆசார்யாள் செல்லும் சமயங்களில், அன்பு மேலிட ஒரு குழந்தை தனது தாயுடன் கொஞ்சி உரையாடுவதைப் போல் நரஸிம்மருடைய விக்ரஹத்தின் தாடையைத் தமது விரல்களால் ஏந்தியபடி ஸ்ரீ நரஸிம்மருடன் அவர் உரையாடத் துவங்கிவிடுவதையும், விக்ரஹத்தின் திருநாவருகே தமது செவியினை வைத்து நரஸிம்ம பகவான் தம்மிடம் கூறுவதைக் கேட்டுக்கொள்வதையும் கண்ணுற்று பக்தர்கள் மெய்சிலிர்த்திட்ட தருணங்கள் பற்பல! மேதா விலாஸத்தில் ப்ருஹஸ்பதியையும் விஞ்சியவரான ஆசார்யாள், ஸ்ரீ நரஸிம்மரின்பால் கொண்ட அபாரமான பக்தியின் காரணமாக உரைத்திடும் வார்த்தைகள் இவை: "அவர் (ஸ்ரீ நரஸிம்மர்) என்னை ஒரு குழந்தை போல் பார்த்துக் கொண்டு, விளக்கங்கள் கொடுத்து வழிநடத்தி, நான் என்னவெல்லாம்

அறியாத்தனமாக சொல்கின்றேனோ அல்லது செய்கின்றேனோ அவை அனைத்தையும் சரிப்படுத்தி வருகிறார்." பக்திக்கோர் அரிய இலக்கணம் வகுப்பதாக அவரது நரஸிம்ம பக்தி விளங்கியது என்பதற்கு இதற்கு மேலும் வேறு சான்றுதான் வேண்டுமோ?

## ॥ सञ्चारपूतधरणिः ॥

## *103. ஸஞ்சார-பூத-தரணி:*

*(தமது ஸஞ்சாரத்தினால் பூமியைப் புனிதப்படுத்தியவர்)*

*ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது ஆசார்யராகிய பின்பு, குறுகிய கால மற்றும் நீண்ட கால விஜய யாத்திரைகள் பலவற்றை ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் மேற்கொண்டமையைப் பற்றி முன்னரே கண்டோம். அந்த யாத்திரைகள் அனைத்திலும், தாம் சென்ற இடங்களிலெல்லாம் உலக வாழ்வின் இறுக்கங்களால் மிகவும் மனம் தளர்ந்திருந்த ஜனங்களுக்குப் புத்துணர்வினை ஏற்படுத்தியும், ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டோருக்கு மேலும் உற்சாகத்தினை அளித்தும், கர்ம யோகம், அஷ்டாங்க-யோகம், பக்தி யோகம் போன்றதான சாதனைகளை மேற்கொண்டோருக்கு அவற்றில் மேலும் உயர்வினை அடைவதற்கான உத்திகளையும் ஆசிகளையும் வழங்கியும், ஆலயங்கள், பாடசாலைகள் பலவற்றைத் தோற்றுவித்தும் மற்றும் உலக நன்மைக்கென வழிகோலும் யாகங்கள் பலவற்றினை நிகழ்த்தச் செய்தும் ஆசார்யாள் தாம் சென்ற இடங்களைப் புனிதப்படுத்தினார்.*

*காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை உள்ள பல்வேறு பகுதிகளுக்கு ஆசார்யாள் விஜயம் செய்திருக்கின்றார். ஆயிரக்கணக்கில் உபன்யாசங்களை ஆற்றியிருக்கின்றார். எண்ணற்ற பக்தர்களின் வேண்டுகோளையேற்று அவரவர் இல்லங்களுக்கு விஜயம் செய்திருக்கின்றார். வறண்ட பகுதிகளில் மழை வரும் பொருட்டு விசேஷ பிரார்த்தனைகளை நடத்தி மழை பொழியச் செய்திருக்கின்றார்.*

வேண்டியவர், வேண்டாதவர், ஹிந்து மதத்தினர், பிற மதத்தினர், ஆத்திகர், நாத்திகர் என்றெல்லாம் பேதம் பாராது அனைவரையும் சந்தித்தவர் அவர். ஆசார்யாளைத் தரிசித்த அனைவருமே அவரது எளிமையாலும் அன்பினாலும் பெரிதும் கவரப்பட்டனர். இதற்கு எடுத்துக்காட்டாக, சில சம்பவங்களை இங்கே குறிப்பிடலாம்.

கயை நகருக்கு அவர் விஜயம் செய்த சமயம், அவர் புத்தர் ஞானமடைந்த இடமான போதி மரத்தினைக் கொண்ட புத்த கயா என்ற பகுதிக்குச் சென்றார். அங்கு இருந்த புத்த மடத்தின் தலைவரும் மற்றும் இதர துறவியரும் மிக மகிழ்ச்சியுடன் ஆசார்யாளை வரவேற்று அப்பகுதியினைச் சுற்றிக் காண்பித்தனர். புனா நகரில் ஆசார்யாள் முகாமிட்டிருந்த சமயம், அங்கிருந்த ஜெயின் சமய ஆசிரமத்திற்கு வருகை தரும்படி அவர்கள் வேண்டிக்கொள்ள, அங்கு விஜயம் செய்து, உபன்யாஸத்தினையும் அருளி அவர்களை ஆசீர்வதித்துவிட்டுத் திரும்பினார். தமது விஜய யாத்திரையின் போது, அநேக சைவ ஆதீனங்களுக்கும் மற்றும் வைணவ மடங்களுக்கும் விஜயம் செய்திருக்கின்றார் ஆசார்யாள்.

இம்மாதிரியாக, ஆசார்யாள் தாம் சென்றவிடங்களிலெல்லாம் அனைத்துத் தரப்பினரையும் தமது அன்பாலும் பண்பாலும் கவர்ந்து நின்றார்.

ജ❁ൽ

## ॥ संसारार्णवनाविकः ॥

## 104. ஸம்ஸாரார்ணவ-நாவிக:

(ஸம்ஸாரக் கடலைக் கடந்திட உதவும் ஓடக்காரர்)

கருணாமூர்த்தியான ஸத்குருநாதர் தாம் விஜயம் செய்த இடங்களிலெல்லாம் செய்த தமது உபன்யாஸங்கள் அனைத்திலும், கிடைத்தற்கரிய இம்மனிதப் பிறவியை அடைந்திருக்கின்ற அனைவரும், அதனை வீணாக்கிடாது, ஆத்ம விசாரத்தினைச் செய்து ஆத்ம ஞானத்தை அடைந்திட வேண்டியதன் அவசியத்தினையும் சுட்டிக் காட்டிடத் தவறியதேயில்லை.

தமது உபன்யாஸங்களின் மூலம் ஜகத்குரு செய்து வந்த ஞானோபதேச ஸாரமாவது: “இந்த ஸம்ஸார பந்தம் என்பது உண்மையாகவே இருக்குமானால் அதனை ஏதேனும் கர்மாக்களைச் செய்துகூட நாம் போக்கிக் கொண்டுவிடலாம். ஆனால் உண்மையில் பவபந்தம் என்ற ஒன்று இல்லவேயில்லை என்பதைத்தான் வேதாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன. பவபந்தம் இருப்பதைப் போன்ற தவறான அறிவுதான் இருக்கிறது. இந்தத் தவறான அறிவினைப் போக்கிக்கொள்ள தத்துவத்தைப் பற்றிய சரியான அறிவுதான் நமக்குத் தேவையே தவிர, கர்மாக்கள் இல்லை. ஸம்ஸார பந்தத்தினை நீக்கும் சரியான அறிவானது சாஸ்திரங்களும் குருவும் காட்டிடும் வழியில், தனது ஆத்மாவைப் பற்றி விசாரம் செய்வதன் மூலமே நமக்குக் கிடைக்கின்றது. தான் உண்மையில் ஸத்-சித்-ஆனந்த வடிவான அந்த பரபிரம்மமே என்ற பிரம்ம ஞானம் ஒருவனுக்கு அனுபவ பூர்வமாக உண்டாகிடும்போதுதான், இந்த பிறப்பு-இறப்பு என்பதான ஸம்ஸாரப் பெருங்கடலிலிருந்து ஒருவன் பூரணமாக விடுதலையடைகின்றான். அந்த நிலையை அடைந்ததுமே ஒருவனது அனைத்து சந்தேகங்களும் மறைந்துவிடுகின்றன. அனைத்து கர்மங்களும் நசித்துவிடுகின்றன. அனைத்து துன்பங்களுமே நீங்கிவிடுகின்றன. இந்த நிலையை அடைவதே மனிதபிறவியின் நோக்கமாகும்.”

ஆசார்ய பெருமான் அவர்கள் தமது சீடர்கள் அனைவரையும் அவரவரது மனப்பக்குவத்திற்கு ஏற்ப ஆத்மஞான மார்க்கத்தில் கிரமமாக ஈடுபடச் செய்துவந்தார். வைராக்கியம் நிறைந்தவர்கட்கு ஆத்மோபதேசத்தைச் செய்த அவர், மனக்கட்டுப்பாட்டை ஸாதிக்க இயலாதோர்க்கு அவரவர் ருசிக்கேற்ப எளியதான பற்பல ஸாதனைகளை அருளி, அவர்களும் ஆத்மஞான மார்க்கத்தில் ஈடுபடத் தேவையான தகுதியைப் பெற்றிட உதவினார். உதாரணமாக, மனம் அலைபாய்வதைத் தடுக்கச் சிரமப்பட்ட பக்தர்களுக்கு ஒரு ஸாதனையாக அவர்களை கடற்கரைக்குச் சென்று, கரையை வந்தடைகின்ற அலைகளைப் பார்த்துக்கொண்டேயிருப்பதைச் செய்துவரும்படிக் கூறுவார். அதற்கான வாய்ப்பும் இல்லாதோருக்கோ மேகங்கள் இல்லாது நிர்மலமாக விளங்கிடும் வானத்தினைப்

பார்த்துக் கொண்டிருப்பதைச் செய்யும்படி உபதேஸிப்பார். இவற்றினைச் செய்து வருவோரது மனமும் நாளடைவில் தானாக அமைதியடைந்து விடும்!

சில சமயம், சிலருக்கு குறிப்பிட்டதொரு சுலோகத்தினைச் சொல்லி அதனைப் பாராயணம் செய்வதுடன் அதன் அர்த்தத்தினையும் சிந்தித்து வரும்படி கூறுவார். அதுவே அவர்கட்குப் போதுமான ஸாதனையாக இருக்கும். இவை தவிரவும், வாக்யார்த்தஸபை, வித்வத்ஸதஸ், வேத பாராயணங்கள் போன்ற பல நற்காரியங்கள் நடைபெறும் சமயங்களில், அவற்றிலெல்லாம் அவசியம் கலந்து-கொள்ளும்படி அனைவருக்கும் ஆசார்யாள் உபதேசித்து வந்தார். ஏனெனில், வேதாந்த, சாஸ்திர மற்றும் வேத விஷயங்கள் செவியில் விழுவதே மனத்தூய்மைக்கு உதவும் என்று அவர் கூறுவார்.

இப்படி, அனைத்து வழிகளிலும் தமது சீடர்கள் மனத்தூய்மை பெற்று, ஆத்மஞானமடைந்து, பிறவிப் பெருங்கடலைக் கடந்திட உதவிடும் ஒரு தெய்வீக ஓடக்காரராகவே ஆசார்ய பெருமான் விளங்கி வந்தார்.

## ॥ सत्यादिधर्मनिरतः ॥

# 105. ஸத்யாதி-தர்ம-நிரத:

(ஸத்தியம் முதலிய நற்பண்புகளைக் கடைப்பிடிப்பவர்)

ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களை "கீர்த்தனீய குணோஜ்ஜ்வல:", "கணனீய குணோஜ்ஜ்வல:", "ந்யாய மார்கானுஸாரி:" என்றெல்லாம் போற்றிய ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள், தற்போது "ஸத்யாதி தர்ம நிரத:" எனும் இத்திருநாமத்தின் மூலம் தமது குருநாதரின் அபார குண விசேஷங்களை மீண்டும் நினைவு கூருகின்றார். 'ஸத்தியம் தவறாமை' முதலான அரிய பல நற்பண்புகளை ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் கடைப்பிடித்து

வந்தமையைப் பற்றிக் குறிப்பிடுகிறார் அவர். இந்த அரும் பண்புகளைப் பிரதிபலிப்பவையாக, ஆசார்யாளின் திருவாழ்வில் நிகழ்ந்த எண்ணற்ற சம்பவங்களில் சிலவற்றினைக் கீழே காணலாம்:

ஸ்ரீ மலஹானிகரேச்வரர் ஆலயத்தில் நடைபெற இருந்த சிறப்பு பூஜை ஒன்றில் நைவேத்ய பிரஸாதத்தைச் செய்வதற்காகத் தனது கைங்கர்யமாக பக்தர் ஒருவர் மூட்டைக் கணக்கில் அரிசியை ஸமர்ப்பித்திருந்தார். பெரிய பாத்திரம் ஒன்று நிறைய பிரஸாதமும் செய்யப்பட்டிருந்தது. ஆசார்யாள் பூஜையைச் செய்து முடித்ததும், பகவானுக்கு நைவேத்யம் அளிப்பதன் பொருட்டு திரையும் போடப்பட்டது. பூஜை உதவியாளர் ஒரு சிறிய பாத்திரத்தில் பிரஸாதத்தை இட்டு எடுத்துவந்து, ஆசார்யாளின் அருகில் வைத்தபோது, ஆசார்யாள் அவரிடம், “என்ன இது, இவ்வளவு சிறிய பாத்திரத்தில் கொண்டுவந்து வைத்திருக்கிறாய்? பூஜைக்காக மூட்டை மூட்டையாய் அரிசியைக் கொடுத்திருக்கின்ற அவர் இதைப் பார்த்தால் என்ன நினைப்பார்? பகவானுக்குச் சிறிதளவைக் கொடுத்துவிட்டு, மீதம் அனைத்தையும் மடத்திற்காகவென திருடிவிட்டார்களோ என்றுதானே நினைப்பார்? போ! போய் பிரஸாதம் முழுவதையும் எடுத்துக் கொண்டு வா” எனக் கூறி உதவியாளரை அனுப்பிவிட்டார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயமாவது: திரையோ போடப்பட்டுவிட்டது. அதனால், உள்ளே என்ன நடக்கின்றது என்று அந்த உபயதாரரினால் பார்க்கவும் இயலாது. இதுமட்டுமல்லாது, நைவேத்யம் முடிந்து திரை விலக்கப்படும் போது எந்த ஒரு பிரஸாத பாத்திரமும் அங்கு இருக்கப் போவதுமில்லை. ஆயினும், ஸத்தியமூர்த்தியாம் ஆசார்ய ஸ்வாமிகளோ இவ்விஷயங்களையெல்லாம் அலட்சியம் செய்து, தமது மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் நடந்துகொண்ட விதம், அவர் கடைப்பிடித்து வந்த உயர்ந்த பண்பிற்கு கட்டியம் கூறுகின்றதல்லவா!

தாம் கொடுத்த வார்த்தையைக் காப்பாற்றிடுவதில் மிகவும் கவனமாக இருப்பார் ஆசார்யாள். 1974ம் வருடம் நவம்பர் மாதம் தமக்குப் பின் இப்பீடத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஒரு சீடரைத் தேர்ந்தெடுத்து, சிஷ்ய ஸ்வீகார நிகழ்ச்சிகள் தயாராகிக்கொண்டிருந்த

சமயம். இத்தாலி நாட்டிலிருந்து வேதாந்த விஷயங்களில் தனது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஒருவர் ஆசார்யாளை நாடிவந்து சிருங்கேரியில் தங்கியிருந்தார். அவருடைய சிரத்தையைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த ஆசார்யாள், பாட விஷயமாகத் தம்மை எப்போது வேண்டுமானாலும் அணுகலாம் என அவருக்கு அனுமதியளித்திருந்தார். சிஷ்ய ஸ்வீகார வைபவம் என்பது பீடத்தைப் பொறுத்தவரை மிக மிக முக்கியமான விஷயமென்பதால், பீடாதிபதியாக இருந்த ஆசார்யாளுக்கு பணிப் பளுவும் அதிகமிருந்தது. ஆயினும், அந்த இத்தாலி தேச பக்தர் பாட சம்பந்தமாக குருவைத் தரிசித்திட வேண்டின போதெல்லாம் நேரத்தை ஒதுக்கி, அவரது சந்தேகங்களைத் தீர்த்து வந்தார் ஆசார்யாள்.

எவரையும் எவ்விதத்திலும் தர்ம சங்கடத்திற்கு உள்ளாக்காது கவனமாக நடந்துகொள்ளும் பண்பில் ஆசார்யாளுக்கு நிகர் அவரேதான்! அவரிடம் தங்களது பிரச்சினைகளைக் கூறி, அவரது வழிகாட்டுதலை வேண்டிடும் பலர், விஷயங்கள் சிலவற்றினை வெட்கத்தின் காரணமாக அவரிடம் கூறாமல் இருப்பர். விஷயங்கள் மறைக்கப்படுவதை ஆசார்யாள் புரிந்து கொண்டாலும், அவற்றைப் பெரிதுபடுத்தமாட்டார். எந்தவிதக் குறுக்குக் கேள்விகளையும் கேட்டு அவர்களைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்திடும் காரியத்தினைச் செய்யவே மாட்டார்.

வேறு சில சமயங்களில், பெரும் ஆன்மிக சாதகர்கள் போல் தங்களைப் பற்றிப் பேசிக்கொண்டுத் தங்களுக்குரிய அடுத்தக் கட்ட ஸாதனைகளை உபதேசித்திட வேண்டும் எனக் கேட்டு ஆசார்யாளை அணுகுவர் சிலர்! படர்ந்து விரிந்த காமமோ மனத்தினை நிறைக்க, வெறும் வார்த்தைகளில் மட்டும்தான் இவர்களது ஆன்மிகம் என்பதை நன்கு அறிந்திருந்தபோதிலும், இவர்களிடத்தும்கூட எவ்விதத்திலும் அவர்களை தர்மசங்கடப் படுத்தாது ஆசார்யாள் நடந்துகொள்வார். இவர்களுக்கு, “மனக் கட்டுப்பாட்டினை வளர்த்துக் கொள்ளுங்கள்”, “ஈச்வர பக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள்” என்பது போன்ற பொதுவானதான, ஆனால், வலுவான உபதேசங்களையளித்து அனுப்பிவைப்பார்!

மேற்கண்டவை ஆசார்ய பெருமானிடத்தில் காணப்பட்ட எண்ணற்ற நற்பண்புகளுள் சிலவே. அள்ள அள்ளக் குறையாத குணநிதியல்லவா அவர்! அவரைப் போற்றி வணங்குவோமாயின் நம் பண்புகளும் உயரும். இதில் ஐயமேதுமில்லை!

## ॥ सर्वभूतदयापरः ॥

## 106. ஸர்வபூத-தயாபர:

(அனைத்து உயிர்களிடத்தும் தயை காட்டுபவர்)

''அபயம் ஸர்வ பூதேப்யோ மத்த ஸ்வாஹா''

{என்னிடமிருந்து உண்டாகக்கூடிய பயத்தினிலிருந்து அனைத்து உயிர்களுக்கும் விடுதலையளிக்கின்றேன்.}

மேற்கண்ட வாக்கியத்தினை உரைத்து துறவறத்தைத் தழுவியவர் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள். தமது வாழ்நாள் முழுவதும் மனிதன், விலங்கு, தாவரம் என்பதான எந்த உயிருக்கும் எவ்விதமான பயத்தையும் ஏற்படுத்தாது, அவை விஷயத்தில் அபாரமான தயையினையே காட்டி வாழ்ந்து வந்தவர் ஆசார்யாள்.

ஒரு முறை, அமெரிக்காவிலுள்ள ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பீடத்தைச் சேர்ந்த ஸ்ரீ மஹாமண்டலேஸ்வரி என்பவரின் பிரார்த்தனைக்கு இணங்கி ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை ஒன்றை வழங்கினார். அச்சமயம் அவர் கூறிய கருத்து இது: ''ஒவ்வொரு மனிதனுக்கும், பிராணிக்குமே தனது வாழ்க்கையை, தான் செய்திருந்த கர்மாக்களுக்கேற்ற வகையில் நடத்திக்கொள்ளும் அதிகாரம் உண்டு. ஒரு நாயாக இருந்தாலும் சரி, பூனையாக இருந்தாலும் சரி, இதே போல்தான் அதிகாரமுண்டு. ஆனால் மனிதர்கள் பிராணிகளுக்கு மிகுந்த துன்பத்தைத் தந்துக்கொண்டு இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, வயலை

உழுவதற்காக காளை மாட்டினை உபயோகிக்கின்ற போது அந்த மாட்டின் சிரமத்தைச் சற்றும் நாம் சிந்திப்பதேயில்லை. அவற்றினுடைய திருப்தி, சந்தோஷம் இவற்றைப் பற்றி நாம் யோசிப்பதுமில்லை. நம் வாழ்க்கைக்கு உதவும் பிராணிகளுக்குத் துன்பத்தையே நாம் கொடுத்துக்கொண்டு உள்ளோம். ஒவ்வொரு பிராணியின் விஷயத்திலும்கூட கருணையைக் காட்டிட வேண்டியது நம்முடைய முதற்கடமையாகும்.'' தமது இந்த கருத்தினைத் தமது வாழ்க்கையிலேயே செயல்படுத்திக் காட்டியவர் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த சங்கராசார்ய மஹாஸ்வாமிகள் அவர்கள். அவரது ஸர்வபூத தயையை வெளிப்படுத்தி நின்ற எண்ணற்ற நிகழ்ச்சிகளுள் சில பின்வருமாறு.

ஒரு சமயம், ஆசார்யாள் அமர்ந்திருந்த கார் குறுகலான பாதை ஒன்றில் சென்றுகொண்டிருந்த சமயம், ஓரிடத்தில், முன்புறத்தில் மாட்டு வண்டி ஒன்றினையும், பாதைச் சற்றே மேடாக இருந்தபடியால் மாடுகள் அந்த வண்டியை இழுத்திட முடியாது திணறுவதையும் கண்ணுற்றார் அவர். மாட்டுவண்டியை ஓட்டிக்-கொண்டிருந்த நபரும் கீழே இறங்கி, தமது காரிற்கு வழியேற்-படுத்துவதற்காக வண்டியை ஓர் ஓரமாகத் தள்ளிவிட முயற்சிப்-பதையும் அந்த கருணாமூர்த்தி கவனித்தார். அந்த மனிதனும், வாயில்லா ஜீவன்களான மாடுகளும் அப்படி இன்னல்படுவதைக் கண்டு வருந்திய ஜகத்குருநாதர், உடனடியாக தமது காரை நிறுத்தச் செய்து, தமது உதவியாளரையும் காரோட்டியையும் உடனே இறங்கிச் சென்று அம்மனிதனுக்கு உதவும்படிக் கூறினார். அவர்களும் அப்படியே செய்ய, மாடுகளும் சிரமமில்லாது வண்டியை இழுத்துக்கொண்டு மேட்டினைக் கடந்துவிட்டன. காரும் கிளம்பியது. தமது காரோட்டியிடம், ஆசார்யாள்: ''அவன் அவ்வளவு கஷ்டத்தில் இருக்கையில், அவனுக்கென்று எவ்வித உதவியையுமே செய்யாமல் நான் எப்படிச் செல்வது? அப்படிச் செல்வது என்பதும் நியாயமேயில்லாத செயலாகும். எனக்கு மட்டும் உடல்நிலை சரியாயிருந்திருந்தால் நானும்கூட இறங்கி உங்களுடன் சேர்ந்து அந்த வண்டியைத் தள்ளியிருந்திருப்பேன்'' என்று கூறினார்.

வேறொரு தருணத்தில், பள்ளி மாணவர்களால் நிரம்பிய கூடத்தினில் ஆசார்யாள் தம் உபன்யாஸத்தினைச் செய்துகொண்டிருந்தார். அப்போது, வெளியே, நாய் ஒன்று பரிதாபமாக ஓலமிடும் சப்தம் கேட்டது. தமது உபன்யாஸத்தைச் சற்றே நிறுத்திய ஜகத்குரு, மாணவர்களைப் பார்த்துக் கூறினார்: “பாவம், அந்த நாயை யாரோ கல்லால் அடித்திருக்கிறார்கள். இது சரியேயல்ல. பாவச் செயலும் கூட.” பிற உயிரொன்றிற்கு துன்பம் நேர்ந்தால் ஆசார்யாளின் மனது துடி துடித்துவிடும் என்பதற்கு இதுவே சான்று. பின்வரும் சம்பவமும் இதனை உறுதி செய்கின்றது.

அபூர்வ மூலிகைகளால் ஆனதும், காயத்தை மிக விரைவில் ஆற்றிவிடக்கூடியதுமான ஒரு களிம்பினை ஆசார்யாளின் பிரத்தியேக உபயோகத்திற்கென சமர்ப்பித்திருந்தார் ஒரு மருத்துவர். ஒரு நாள், உடலில் பெரும் காயங்களுடன் ஓலமிட்டபடியே கிடந்த ஒரு நாயைக் கண்டு மனமுருகிய ஆசார்யாள், தம் உதவியாளரை அழைத்து அந்த களிம்பினை உடனடியாக அந்த வாயில்லா ஜீவனின் காயங்களின் மேல் பூசிவிட ஏற்பாடு செய்து அதன் துன்பத்தைப் போக்கிட வழி செய்தார். பிராணியோ, மனிதனோ, துன்பம் என வந்துவிட்டால் வேற்றுமை பாராது உடனடியாக உதவிடும் தயாசாகரமாகத் திகழ்ந்தார் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்.

மற்றொரு சமயம், தமது இருப்பிடத்தின் மாடியில் நின்று கொண்டிருந்த ஆசார்யாள், கீழே சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருந்த ஒருவன் செடி ஒன்றின் இலையைக் கிள்ளி எறிந்ததனைக் கண்டு மனம் வருந்தினார். உடனே தமது உதவியாளரை அழைத்து, அவரிடம் அந்த மனிதனைக் காட்டி, “போ, போய் அவனிடம் அந்தச் செடி அவனை என்ன செய்தது என்று கேள். எதற்காக ஒரு காரணமுமில்லாமல் அந்த இலையைக் கிள்ளி அந்த செடிக்கு வலியைக் கொடுக்கிறான்?” என்று கூறி, உதவியாளரை அவ்விடத்திற்கு அனுப்பி வைத்தார்.

மடத்தில் தமது இருப்பிடத்திற்கு அருகில் தாமே உருவாக்கி வைத்திருந்த, மலர்ச் செடிகளைக் கொண்ட தோட்டத்தில், இரண்டு ரோஜா செடிகளை பதியம் செய்வதற்காக ஆசார்யாள் முனைந்ததை

சீடர் ஒருவர் கண்டார். அவரைத் தமதருகினில் அழைத்த ஆசார்யாள், அவரிடம் தாம் செய்யப்போகும் ரோஜா பதிய முறையினைப் பற்றி விவரித்தார். தாம் செய்யப்போகும் பணிக்காக பெரிய கத்தரிக்கோல் மற்றும் கத்தி ஆகியவற்றினையும் வைத்திருந்த ஆசார்யாள், அந்த சீடரிடம், "இவற்றைக் கொண்டு செடிகளை வெட்டும் போது செடிகளுக்கு கிருமிகள் எதுவும் பரவிடாமல் இருப்பதற்காக இவற்றை சுத்தம் (ஸ்டெரிலைஸ்) செய்து வைத்திருக்கிறேன்" என்றும் தெரிவித்தார். பிறகு, செடிகளை வெட்டப்போகும் சமயத்தில், அந்த செடிகளுடன் பேசத் துவங்கினார்: "உங்களுக்கு வலிக்கும்; ஆகையால் என்னை மன்னித்துவிடுங்கள். உங்களை நான் நல்ல முறையில் பராமரித்துவருவேன். இந்த காயத்திலிருந்து நீங்கள் விரைவில் குணமடைந்து, இப்போது இருப்பதைவிட மிகவும் அழகாகிவிடுவீர்கள்." இந்த வார்த்தைகளை பேசும் போது ஆசார்யாளின் கண்களில் கண்ணீர் தளும்பியதை அந்த சீடர் கண்டார். அதன்பின் விரைவாகவும் மற்றும் மிக லாவகமாகவும் செயல்பட்டு அந்தப் பணியினை ஆசார்யாள் முடித்தார்.

"இறைவனின் படைப்பான இயற்கையில் நாம் காண்கின்ற ஒவ்வொரு விஷயமுமே பிரமிக்கத்தக்கது; ரஸிக்கும்படியானது" என்ற கருத்தைக் கொண்டவரான ஆசார்ய ஸ்வாமிகள், ஒவ்வொரு உயிரிடத்தும் உள்ள தனித்துவத்தை ரசித்துவந்தார். பசுக்களின் வாஞ்சை, குரங்கின் சேஷ்டை என அனைத்திலுமே ஆனந்தம் கண்டவர் அவர். இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்த அவரிடத்தில் ஸர்வ பூத தயையானது ஒரு பிறவிக் குணமாகவே நிரம்பிக் காணப்பட்டது!

## ॥ अज्ञानध्वान्तमार्तण्डः ॥

# 107. அக்ஞான-த்வாந்த-மார்த்தண்ட:

(அறியாமையாம் இருள் நீக்கும் ஆதவனானவர்)

ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் அக்ஞானமாம் இருளை அழிக்கவல்ல ஸத்குருவாகத் திகழ்ந்து-

வந்தார். மனித வாழ்வின் குறிக்கோள் ஆத்ம ஞானத்தினை அடைவதே என்பதை வலியுறுத்திவந்த மஹாஸ்வாமிகள் அவர்கள், ஆத்மஞான தத்துவத்தை சுவாரஸ்யமான விதங்களில் பிறருக்கு எடுத்துரைத்துவந்தார். எடுத்துக்காட்டாக, தம்மைச் சந்திப்பதற்காக வந்திருந்த மத போதகர் ஒருவருக்கு அத்வைத கோட்பாட்டினைப் புரியவைப்பதன் பொருட்டு, ஆசார்யாள் மேற்கொண்ட (பின்வரும்) ஸம்பாஷணையைக் குறிப்பிடலாம்.

**ஆசார்யாள்**: நீங்கள் யார்?

**போதகர்**: (தமது பெயரைக் குறிப்பிட்டு) நான் ................

**ஆசார்யாள்**: அது உங்களது பெயர். உங்கள் பெயரை நான் கேட்கவில்லை. ‘நீங்கள்’ யார் என்று கேட்டேன்.

**போதகர்**: (தமது தந்தையின் பெயரைக் குறிப்பிட்டு) நான் இன்னாருடைய புதல்வன்.

**ஆசார்யாள்**: அது உங்களது உறவினைக் குறிக்கின்றது. நான் அதைக் கேட்கவில்லை. ‘நீங்கள்’ யார் என்று கேட்டேன்.

**போதகர்**: (தான் பணிபுரியும் தேவாலயத்தின் பெயரைக் கூறி) நான் இந்த தேவாலயத்தில் ஊழியம் செய்யும் போதகர்.

**ஆசார்யாள்**: நான் உங்களது பணியினைப் பற்றிக் கேட்கவில்லை. ‘நீங்கள்’ யார் என்று கேட்டேன்.

**போதகர்**: (திகைப்புடன்) நான் யாரென்று எனக்குத் தெரியவில்லையே!

**ஆசார்யாள்**: பார்த்தீர்களா, இதுதான் பிரச்னையே! உண்மையில் நாம் யார் என்று நாம் தெரிந்துகொள்வதே இல்லை! பெயர், உறவு, தொழில் ஆகிய இவை அனைத்தும் உங்களது இந்த உடலைக் குறித்து நிற்பவையே அன்றி உங்களைக் குறிப்பதல்ல! சரி, இப்போது இந்த கேள்விகளுக்குப் பதில் தாருங்கள். நீங்கள் பசியுடன் இருக்கும் போது உங்களது நிலைக்குப் பெயர் என்ன?

**போதகர்**: வயிறு காய்பவன்!

**ஆசார்யாள்**: மிகவும் சரி. அளவுக்கு அதிகமாக உண்பவராக இருந்தால்?

**போதகர்**: பெருந்தீனிக்காரன்?

**ஆசார்யாள்**: சரி! பயணம் மேற்கொள்ளும்போது?

**போதகர்**: பயணி?

**ஆசார்யாள்**: சரியான பதில்! இப்போது கூறுங்கள். இப்படி ஒவ்வொரு பெயரால் நீங்கள் அழைக்கப்படும் சமயங்களில், நீங்கள் வெவ்வேறு நபராக மாறிவிடுகின்றீர்களா?

**போதகர்**: இல்லையில்லை! எனக்கு இருந்துவரும் பெயர்தான் மாறுகின்றதே தவிர, நான் உண்மையில் எந்த மாற்றத்தையும் அடைவதில்லை.

**ஆசார்யாள்**: சரியாகச் சொன்னீர்கள்! வெளியில் தெரியும் மாற்றங்களுக்குப் பின்னால் எவ்வித மாற்றத்தினையும் அடையாது விளங்கும் அந்த ஆசாமியே உண்மையான ‘நீங்கள்’. இதைத்தான் அத்வைத சாஸ்திரம் நமக்கு போதிக்கின்றது!

பிறகு, எண்ணற்ற பெயர்கள் மற்றும் உருவங்களைக் கொண்டதாகவும், பிரம்மாண்டமாகவும் தெரியும் இந்த உலகம் உண்மையில் எப்படி ஒரு மாயத் தோற்றமே என்பதைப் பற்றியும், அதற்கு அடிப்படையாக என்றும் மாறாமல் விளங்கிவருவதான பிரம்மஞான தத்துவத்தினைப் பற்றியும் அந்த போதகருக்கு ஆசார்யாள் விரிவாக விளக்கியருளினார். அந்த விளக்கத்தைத் தனக்குக் கிட்டிய பெரும் பாக்கியமாக எண்ணி அந்தப் போதகர் அகமகிழ்ந்துவிட்டார்!

அறியாமையாம் இருளினை அறவே நீக்கிடும் விஷயத்தில் ஆசார்யாள் போதித்துவந்த எல்லா வழிமுறைகளும் மேற்கண்ட ஸம்பாஷணையில் கண்டதைப் போலவே மிக எளிதானவை; சிந்திக்க வைப்பவை! ஆசார்ய பெருமானின் அருளுரைகளில் தம் கவனத்தினைச் செலுத்துவோருக்கு இவ்வுண்மை நன்கு புலப்படும்.

## ॥ विद्यातीर्थजगद्गुरुः ॥

# 108. வித்யாதீர்த்த-ஜகத்குரு:

(ஸ்ரீ வித்யாதீர்த்த ஜகத்குரு)

'வித்யை' என்றால் 'ஞானம்'. 'தீர்த்த' என்றால் 'புனிதமான இடம்'. ஆக, 'வித்யாதீர்த்த' என்பதன் பொருள் "ஞானம் உறைந்திடும் புனிதமான இடம்" என்பதே. இணையற்ற ஸத்குருவாம் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் பிரம்மஞானத்தின் உறைவிடமானவர் என ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் பெருமைபடத் தெரிவிக்கின்றார். இந்த 108 அருள்நாம மலர்களாலான ஸ்துதி மாலையின் முதலாம் மலராகத் தமது குருநாதரை "அத்வைத வித்யா ரஸிக:" (அத்வைத ஞானத்தில் ஆனந்தமடைபவர்) என்று போற்றித் துவங்கிய அவர், இறுதி திருநாம மலரில் தமது குருவை "ஞானத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தவர்" எனப் போற்றி நிறைவு செய்திருக்கின்றார். முதலும் ஞானம், முடிவும் ஞானம் என, குருபக்தியாம் மணம் கமழும் இந்தப் புகழ்மாலை நம்மைப் பூரிக்கச் செய்கின்றது.

ஞானத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்ததும், 'ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்தர்' எனும் பெயரைத் தரித்து உலவி வந்ததுமான அந்த மானிட தேஹத்தின் மஹிமை என்னவாம்? இதற்குரிய பதிலை (ஆசார்யாளின் குருநாதராகிய) ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளே தம்முடைய தெய்வீகச் சீடரைக் குறித்து இயற்றிய (பின்வரும்) சுலோகத்தில் அளிக்கின்றார்:

சரீரேந்த்ரியசித்தானாம் சுத்தயே கல்பிதா மஹா: |
பஹவோ குரு தேவானாம் தத்பலம் பவதாம் தனு: ||

{உடல், இந்திரியங்கள் மற்றும் உள்ளத்தைப் புனிதப்படுத்துவதற்காக, குரு மற்றும் தெய்வங்களுக்கெனப் பற்பல வழிபாடுகளும் உத்ஸவங்களும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் பலனே உமது சரீரம்.}

மேற்கண்ட சுலோகத்திலிருந்து நமக்கு தெரியப்படுத்தப்படுவதாவது: "மானுட வடிவில், ஸத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த

மஹாஸ்வாமிகள் எனும் திருநாமமேற்று உலவி வந்த தேஹமானது ஏதோ பூர்வஜன்ம கர்ம பலன்களின் விளைவாக ஏற்பட்டுவிட்ட வழக்கமான ஒன்றல்ல. மாறாக, குரு மற்றும் தெய்வங்களைத் திருப்தி செய்கின்ற வகையினில் சாஸ்திர ரீதியாகச் செய்யப்பட்ட பல்வேறு வழிபாடுகள் மற்றும் உத்ஸவங்களின் பலனை இந்த உலகிற்கு அருளும் வகையினில் ஸாக்ஷாத் பரமேச்வரனே அவதரித்து தரித்துக் கொண்ட வடிவமே அது.'' அனைவரையும் போல இவரும் ஒரு மனிதர்தானே என்று தமது சீடரை யாரும் எண்ணிவிடக் கூடாது என்றும் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்கள் அனைவரிடமும் உபதேசித்து வந்தார். அதற்கு என்ன காரணம் என்பதனையும் ஒரு சுலோகத்தின் மூலமே அவர் வெளிப்படுத்தி அருளினார்.

தயாஸாந்த்ரம் பாலம் நிகிலஜகதீரக்ஷணசணம்
ஹரந்தம் விக்னாத்ரிம் விமலவிமலைர்வீக்ஷணசயை: |
பரப்ரஹ்மாகாரம் ப்ரணவவிதிதம் சாந்தமனஸம்
குரும் வித்யாதீர்த்தம் கலயத புதாச்சித்தகமலே ||

{புத்திமான்களே! சாந்த மனதுடைய பாலகரும், அபரிமிதமான கருணை கொண்டவரும், மிகப் புனிதமான தமது பார்வையினால் மலை போன்ற தடைகளையும் அழிப்பவரும், அகில உலகத்தையும் காத்திடும் திறன் பெற்றவரும், 'ஓம்' என்பதான பிரணவத்தினால் அறியப்படுகின்றவரும், பரம்பொருளின் வடிவானவருமான குரு வித்யாதீர்த்தரை உங்கள் இதயத் தாமரையில் இருத்திக் கொள்ளுங்கள்.}

ஒரு ஸன்யாசியின் ரூபத்திலே காட்சியளிக்கும் தமது சீடர் உண்மையில் இறைவனே என்பதே குருநாதரின் தீர்மானமாக இருந்தது.

"தெளிவு குருவின் திருநாமம் செப்பல்'' என்கின்றார் திருமூல மகரிஷி. 'வித்யாதீர்த்த' என்னும் திருநாமத்தை பக்தியுடன் உச்சரிப்பதினால் நமக்குக் கிடைக்கக்கூடிய பலன்களையும் ஸ்ரீ சாரதா பீடத்தின் 33வது ஜகத்குருவாக விளங்கிவந்த ஸ்ரீமத் ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்கள் (பீடத்தின்

*10வது ஜகத்குருவாம் ஸ்ரீ வித்யாதீர்த்தரைப் போற்றித் தாம் இயற்றிய) பின்வரும் சுலோகத்தில் குறிப்பிடுகின்றார்:*

வர்ணசதுஷ்டயமேதத் வித்யாதீர்த்தேதி யஸ்ய ஜிஹ்வாக்ரே |
விலஸதி ஸதா ஸ யோகீ போகீ ச ஸ்யான்ன தத்ர ஸந்தேஹ: ||

*('வி', 'த்யா', 'தீ', 'ர்த்த' என்னும் இந்த நான்கு எழுத்துக்களும் எவனுடைய நாவில் துலங்குகின்றனவோ, அவன் யோகியும் போகியும் ஆவான். இங்கு ஐயத்திற்கிடமில்லை.)*

*நமது இதய குஹையினுள் ஒளிரும் பிரம்மஞான ஜோதியானவரும், மஹாமஹிமை வாய்ந்தரும், நமது ஸத்குருநாதருமாகிய ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளைப் போற்றி வணங்கிடுவோம்.*

ஒப்பற்ற ஜீவன்முக்தரும், கருணையே
வடிவானவரும், தம்மை நாடிவந்த அனைவருக்கும் அருள்
புரிந்தவருமான ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்
13-11-1917 அன்று பெங்களூரில் அவதரித்து, தக்ஷிணாம்னாய
சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தை 35வது ஜகத்குருவாக 35 ஆண்டுகள்
அலங்கரித்து, 21-09-1989 அன்று தமது மானுட தேஹத்தினை
விடுத்து, பரம்பொருளுடன் ஐக்கியமானார்கள்.

தற்போது ஸ்ரீ சாரதா பீடத்தை 36வது ஜகத்குருவாக
அலங்கரித்துவரும் ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் தமது
குருநாதரைப் போற்றி 108 பொருள்செறிந்த திருநாமங்களை
**ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த அஷ்டோத்தர சத நாமாவளி**
எனும் தலைப்பினில் மிக அழகாக இயற்றியுள்ளார்கள்.

ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின்
அளவற்ற கருணை, அபார வைராக்யம், ஒப்பற்ற பாண்டித்யம்,
ஆழ்ந்த பக்தி, சீரிய யோக நிலை, ஜீவன்முக்தி, அவர் ஆற்றிய அரும்
பணிகள் போன்ற பற்பல அற்புதமான அம்சங்கள் அவர் குறித்த இந்த
108 தெய்வீகத் திருநாமங்களில் எவ்வாறு வெளிப்படுகின்றன
என்பது இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு
நாமத்திற்கும் பொருத்தமாக ஆசார்யாளின் வாழ்க்கையில்
நடைபெற்ற சம்பவங்கள், அவர் அருளிய உபதேசங்கள் மற்றும்
ஆசார்யாளுடன் பக்தர்களின் அனுபவங்கள் ஆகியவை
இந்நூலில் தொகுத்தளிக்கப்பட்டிருக்கின்றன.

ISBN : 978-81-944382-3-6
9788194438236